திரு. நா. வீராசாமி : மாதம் ஒரு முறை கலந்துகொள்ள இயலவில்லை என்றாலும், விவசாயப் போராட்டங்கள் போன்ற போராட்டங்கள் நடை பெறுகின்ற நேரங்களில் அரசாங்கத்தின் கொள்கைகளை எடுத்துச் சொல்லவும் வன்முறையாளர்களைப்பற்றி நாட்டுக்குச் சொல்லவும் முதல மைச்சரவர்கள் வானொலியில் பேச முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவசியப்படுகிற நேரங்களில் அவைகளை நிச்சயமாகப் புறக்கணிக்கமாட்டேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அரசாங்கத்தின் சாதனைகளை ரேடியோ மூலம் விளம்பரம் செய்வதுபோல அரசாங்கத்தின் குறைகளை எடுத்துரைப்பதற்கும் எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்குப் பதில் சொல்கிற இடத்தில் நான் இல்லை.

திரு. சொ. காவேரிமணியம் : துணைத் தலைவர் அவர்களே, பொது வாக மத்திய அரசாங்கத்தினுடைய விளம்பர இலாக்கா வானொலியானா லும் சரி, அது தயாரிக்கக் கூடிய செய்திப் படங்களானாலும் சரி, தமிழக அரசு செய்திருக்கக் கூடிய சாதனைகளையும், நம்முடைய அமைச்சர்கள் கலந்துகொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளையும் அதிகமாக விளம்பரப்படுத்துவ தில்லை மற்ற மாநிலங்களில் செய்வது போல, என்பது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி ஏதாவது குறைபாடு இருக்குமானால் இந்தக் கேள்விகள் எழுந்ததன் மூலம் வானொலி நிலை யத்தார் திருத்திக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அதிகக் குறைபாடு இருப்பதாக எனது கவனத்திற்கு எதும் வரவில்லை.

திரு. த. சோணையா : தமிழக முதல்வர் இந்த நாட்டுக்கேற்ற நல்ல சட்ட திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் பயனடைகிற மக்கள் வானொலி யின் மூலமாகப் பேச்சைக் கேட்பது மட்டுமல்லாமல் அவர்களை நேரடியாகப் பார்க்கும் அளவுக்கு டெலிவிஷன் அமைத்து, அதற்கு ஆவன செய்யப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விரைவில் டெலிவிஷன் நிலைய மொன்று நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டு விழா சென்னையில் நடைபெற இருக்கிறது.

### மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

*239 வினா—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களில் தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூவர்.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தி லுள்ளவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவ ரின் விகிதாச்சாரம் அடங்கியுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமிப்பதில் அது போன்ற விகிதாச்சாரம் எதுவும் கிடையாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, முன்பெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் பதவிதான் கொடுத்து வந்தார்கள். இந்த அரசாங்கம் வந்த பிறகுதான் மூன்றாக ஆக்கினார்கள் என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எத்தனை பேர் இருக்கவேண்டு மென்ற நிர்ணயம் இல்லை. அவ்வப்போது தேவைப்படுகிற நேரத்தில் யார் யார் எந்தெந்த மாவட்டத்தில் பணியாற்ற வேண்டுமென்பதை அரசு நிர்ணயிக்கும்.

### வெளி நாடுகளுக்கு தூதர்கள்.

*240 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1963, 1969, 1970–ம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு, தமிழர்களை தமிழர்கள் வாழும் வெளி நாடுகளில் தூதர்களாக நியமிக்க வேண்டும் என மத்திய அரசிடம் வேண்டுகோள் ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

### பொது நூலகங்கள்.

*241 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொது நூலகங்களின் பணிகளை மட்டும் முழுக்க முழுக்க கவனிக்க தனி இயக்குநர் நியமிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இப் பதவிக்கு அண்மையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

*242 வினா—திரு கா. காளிமுத்து : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தற்போது முகவை மாவட்டத்திலுள்ள நூலகங்கள் எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இருநூற்றி ஏழு.

*243 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 28-4-1969-ல் நடந்த வடார்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், அம் மாவட்டத்தில் நடமாடும் நூல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.





(இ) ஆனால் இதுகுறித்து நூலக ஆணைக் குழுவில் தீர்மானம் எதும் நிறைவேற்றப்படவில்லை. வட ஆர்க்காடு மாவட்டத்தில் நடமாடும் நூல் நிலையம் ஏற்படுத்த நூலக ஆணைக் குழுவின் நிதி நிலைமை சரியில்லாததால் இத் தீர்மானத்தைச் செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே இப்போது நகரங்களில் இல்லாதவர்கள், மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் இருப்பவர்களும் பொது ரீதியான நூல்களைப் படிப்பதற்குச் சிரமப்படுகிறார்கள். அது கிடைப்பது இல்லை. ஆகவே, அந்த ஆலோசனையைக் கனிவோடு கவனித்து, அப்படிப்பட்ட நூலக நிலையங்களை வடார்க்காடு மாவட்டத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாவட்ட மக்கள் நலன் கருதி நடமாடும் நூலகங்கள் ஏற்பாடு செய்வது மிக இன்றியமையாதது. ஆனால் அந்த மாவட்டத்திலிருந்து அந்தக் கோரிக்கை வந்தபோது, வடார்க்காடு மாவட்ட நூலக ஆணைக் குழுவிடத்தில் போதுமான நிதி வசதியில்லை. நூலகக் குழுக்களின் நிதி வசதியைச் சரிக்கட்டத்தான் அண்மையில் மூன்று பைசாவிலிருந்து செஸ்ஸை ஐந்து பைசா என்று ஆக்கியிருக்கிறோம். அதன்மூலம் அரசாங்கம் தருகிற ஈட்டுத் தொகையும் அதிகமாக இருக்கும். இதனால் நிதி நிலைமைகள் சரிப்படும். ஆகவே, வடார்க்காடு நூலக ஆணைக் குழுவால் இந்தத் திட்டம் எளிதில் நிறைவேற்றி வைக்கப்படலாம். அதற்கான முயற்சி எடுக்கப்படும்.

*244 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:—

(*a*) whether there is any proposal to sanction adequate amounts to all high school libraries in Hosur and Denkanikota taluks to purchase Telugu books; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) & (இ) இல்லை. இக் கோரிக்கை தனியாகப் பரிசீலிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there is a large demand for Telugu books in the libraries under the Local Library Authorities in Hosur and Denkanikota taluks. We have represented the matter to the District Educational Officer and the Collector there but they have been repeatedly saying that they have no funds for the last so many years. So, may I know whether the Government will be kind enough to make separate arrangements to provide books ?

[1972 ஆகஸ்ட் 22

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தெலுங்கு மாணவர்கள் பயிலுகிற பள்ளியில் தெலுங்கு நூல்கள் வாங்கி வைக்கப்பட வேண்டியது இன்றியமையாததுதான். அந்தக் கோரிக்கை இப்போது பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றிக் கல்வித் துறை தனியாக நடவடிக்கை எடுக்கும்.

## குழந்தைகளுக்கான நூல்கள்.

*245 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குழந்தைகளுக்கான சிறந்த நூல்களை எழுதுவோருக்குப் பரிசு வழங்க மத்திய அரசு ஏதேனும் உதவித் தொகை வழங்குகிறதா ?

(இ) ஆம் எனில், ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் வழங்கி வருகிறது ?

(உ) இப் பரிசுகள் 1971–72-ல் யார் யாருக்கு வழங்கப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) ஆம். மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் இலக்கியப் பரிசுப் போட்டி நடத்தி வருகிறது.

(இ) பரிசுத் தொகை ரூ. 1,000 வழங்கப்படுகிறது.

(உ) 1971–72-ம் ஆண்டு நடைபெற்ற 16-வது தேசீயக் குழந்தைகள் இலக்கியப் பரிசுப் போட்டியில் திரு. கல்வி கோபாலகிருட்டிணன் அவர்கள் எழுதிய "கானகக் கன்னி" என்னும் நூல் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதற்கான பரிசுத் தொகை ரூ. 1,000 தேசீயக் கல்வி ஆய்வு பயிற்சிக் கழகத்தினால் அளிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, குழந்தை நூல் எழுத்தாளர்களுக்கு நம்முடைய மாநில அரசு எந்தெந்த வகையில் ஊக்கம் அளித்து வருகிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆண்டுதோறும் மாநில அரசாங்கத்தின் சார்பாகவும், பரிசுப் போட்டிகள் மூலமாகவும் புத்தகங்கள் எழுதுகிறவர்களுக்கு பரிசுகள் நல்கி வருகிறோம். அதிலே குழந்தைகள் எழுதும் புத்தகங்களுக்கும் பரிசுகள் இருக்கின்றன. 20—25 பரிசுகள் பல்வேறு தலைப்புகளின் வாயிலாக அளிக்கப்படுகின்றன. முன்பு ரூ. 1,000 தான் பரிசு வழங்கப்பட்டது. சென்ற ஆண்டு முதல் பரிசு ரூ. 2,000 என்றும், இரண்டாம் பரிசு ரூ. 1,000 என்றும் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருகிறது.



1972 ஆகஸ்ட் 22]

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, இந்த இந்தப் பொருள்களைப் பற்றித்தான் எழுத வேண்டுமென்று அரசு பொதுவாகக் குழந்தைகளுக்கு என்று புத்தகம் எழுதுபவர்களுக்கு ஏதாவது உத்தரவு பிறப்பித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. அது ஒரு இலக்கியப் பரிசு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இலக்கிய சம்பந்தம் உடையதாக இருக்க வேண்டும். மாணவர்கள் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். பாட நூல்களாக இருக்கக் கூடாது. பாட நூல்களாக இருந்தால் பரிசுகள் வழங்கப்பட மாட்டா. பாட நூல்கள் இல்லாத வகையில் பொது நூலாகவும், நல்லறிவு கொடுப்பவைகளாகவும் அந்த நூல்கள் இருக்க வேண்டுமென்றும்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, குழந்தைகளுக்கான நூல்கள் ஆங்கில மொழியில் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அந்த அளவுக்கு அல்லது தேவைப்படுகிற அளவுக்கு நூல்கள் தமிழ் மொழியில் கிடைப்பதில்லை. ஆகவே, அந்த நிலையில் தமிழ் மொழியில் குழந்தைகளுக்கான நூல்களை எழுதுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், அரசு ஏதேனும் திட்டம் உருவாக்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது ஓரளவிற்குக் குழந்தைகள் நூல்கள் அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. நேரு பிறந்த நாளை ஒட்டிக் குழந்தைகள் நூல் கண்காட்சி சென்ற ஆண்டு வைக்கப்பட்டது. அதிலே பல பதிப்பாளர்கள் குழந்தைகள் நூல்களை ஏராளமாகக் கொண்டுவந்து வைத்தார்கள். அவைகளில் கவர்ச்சியாகவும் பல நூல்கள் வந்திருக்கின்றன. ஆங்கிலத்தில் வந்திருக்கிற அளவுக்கு இல்லையென்றாலும், ஓரளவிற்கு இப்போது வந்துகொண்டு இருக்கின்றன. ஓரளவிற்கு அவை மதிப்பும் பெருமையும் பெற்று வருகின்றன.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, இப்போது குழந்தைகளுக்காக வெளியாகின்ற நூல்களை பாடப் புத்தகங்களாக வைக்க இயலாது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிக் குழந்தைகளுக்காக வெளியிடப்படுகிற நூல்கள் வெளி மார்க்கெட்டில் விற்பது இல்லை. ஆகவே, அந்தப் புத்தகங்களை 1—2 வகுப்புகளுக்காவது வைப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் அப்படிக் கூறவில்லை. பரிசு பெறுகிற நூல்கள் பாடப் புத்தகமாக வைக்கப்பட மாட்டா என்று சொல்லவில்லை. பாட நூல்களாக வைக்கப்பட்டிருக்கும் நூல்கள் பரிசு நூல்களாகக் கருதப்பட மாட்டா. இலக்கிய நூல்கள் தான் பரிசுக்கு உரியவை. அந்த நூல்கள் பாட நூல்களாகவும் பள்ளிக்கூடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன.

[1972 ஆகஸ்ட் 22

சென்னை பொது மருத்துவ மனை.

*246 வினா.—திரு. கே.எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை சென்ட்ரல் ஜெயிலை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு அந்த இடத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) தற்சமயம் சென்னை மத்திய சிறைச்சாலையை வேறிடத்திற்கு மாற்றுவதில்லையென முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அங்கேயில்லாவிட்டாலும் கூட, கூவம் நதிக்குத் தெற்கே உள்ள இடத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான இடம்—அதை மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்கி—ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும் முயற்சியை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்னைப் பொது மருத்துவ மனை அமைந்திருக்கும் அதே இடத்தில்தான் அதன் வளர்ச்சிப் பணியை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதைக் கடந்து வேறு இடத்திற்குச் சென்றால், அது தனி மருத்துவ மனையாகத்தான் அமைய வேண்டும். அப்படித் தனியாக மருத்துவ மனை அமைக்க வேண்டுமென்று சொன்னால், 2 மைல் 4 மைல் தள்ளி இன்னொரு மருத்துவ மனை அமைத்தால் அது சென்னை நகர மக்களுக்கு மிகவும் பயன்படும். அதே நேரத்தில் சென்னை பொது மருத்துவ மனையின் பணிகளை முன்னேற்றுவதற்காக, அங்கே இருக்கிற மருத்துவ சிகிச்சையை உயர்த்துவதற்காக, போஸ்ட்-கிராஜுவேட், மேற்பட்டப் படிப்புக்கு அதை உயர்த்துவதற்கு, அதை ஒரு மேற்படிப்பு மருத்துவக் கல்லூரியாக உயர்த்துவதற்குப் படிப்படியாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தேர்வு.

*247 வினா. திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1971-72-ஆம் ஆண்டிற்கு மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுள் பெண்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 288 பெண்கள்.



1972 ஆகஸ்ட் 22]

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 288 மாணவிகள் சேர்ந்து இருப்பதாகச் சொன்னார்கள். இந்த விகிதாச்சாரம் அதிகமாக இருக்கிறது. இதனால் ஆண்களுக்குக் கிடைக்க வேண்டிய இடம் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. எனவே இந்த விகிதாச்சாரத்தைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த விகிதாச்சாரம் 25 விழுக்காட்டிற்குக் குறையாமல் அதற்கும் மேலாகத் தரவேண்டுமென்று 1971-72- வரை இருந்தது. 1971-72-ல் அந்த விகிதாச்சாரம் ஏறத்தாழ 28—29 விழுக்காட்டிற்கு வந்திருக்கிறது. அதிகமாக மருத்துவர்கள் குடும்ப நலப் பணிகளை நிறைவேற்றுவதற்கும், தாய்மார்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்கும் தேவைப்பட்டதால் அந்த விகிதத்தை உயர்த்த விரும்பி இந்த ஆண்டு 35 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டில் அதுபற்றி மறு பரிசீலனை செய்யக் கூடும்.

திரு. ந. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் அளிப்பது எந்த விகிதாச்சாரத்தில் ? தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட, முற்பட்ட வகுப்பு என்ற முறையில் மாணவிகளுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பெரும்பாலும் இந்த விகிதாச்சாரம் இயன்ற அளவுக்குப் பின்பற்றப்படும்.

*248 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

நடப்பு ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கான இடங்களை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடங்கள் அதிகப்படுத்தப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. இனிமேலாவது அடுத்த ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடம் அதிகப்படுத்துவதுபற்றி அரசு யோசிக்க முன்வருமா ? மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை அமுலுக்குக் கொண்டுவந்து அதன் மூலம் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுபற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உறுப்பினர் அவர்கள் கேட்ட இரண்டு, மூன்று கேள்விகளுக்கு நான் விளக்கமாகப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்று, மருத்துவ நிபுணர் குழுவும், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பயிற்சி பெறும் முறையின் விளைவை ஆராய்ந்த

குழுவும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தகுந்த தேர்ச்சியும், பயிற்சியும் பெறவேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு எந்த அளவுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறோமோ அந்த அளவுக்குச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள்.' அதன் விளைவுதான் மிக அதிகமான மாணவர்கள் தகுந்த பயிற்சி பெற முடியாது போகும் நிலை. மாணவர்கள் சேருவதைக் கட்டுப்படுத்துவதுபற்றி ஆராய்ந்து ஓரளவுக்கு மட்டும் கடந்த ஆண்டு குறைத்தோம். மருத்துவக் கல்லூரியில் தேர்ச்சியும், திறமையும் அதிகமாக மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டுமென்றால், இன்னும்கூட எண்ணிக்கையைச் குறைக்க வேண்டும்.

இரண்டாவதாக, இன்று ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 1,000 மாணவர்கள் தேர்ச்சி பெற்று வெளிவரக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு இப்பொழுது 600, 700 பேர் வருகிறார்கள். அடுத்த சில ஆண்டுகளில் 800, 1,000 பேர்கள் வரக்கூடும். அப்படி ஐந்து ஆறு ஆண்டுக் காலம் தொடர்ந்து வருகிறபொழுது ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ 100 அல்லது 150 பேர்களுக்குத்தான் அரசுப் பணிகள் புதிதாக கிடைக்கக்கூடிய வாய்ப்பு உண்டு. அதுவும் நாம் புதியதாக உருவாக்குகின்ற அளவைப் பொறுத்தது. ஆகவே, மாணவர்கள் பட்டம் பெற்று அதிகமான பேர்கள் வேலை பெறமுடியாத அளவுக்கு நிலைமை உண்டாகி, இவ்வளவு செலவழித்துப் பட்டப் பயிற்சி பெற்ற மாணவர்கள் வேலை பெறாமல் இருப்பது அவ்வளவு நல்லது அல்ல என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக, எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு கல்லூரிகளுக்கு இன்னும் வசதி பெருகவேண்டும். அதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கவேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி : நமக்கு இருக்கிற மக்கள் தொகை விகிதாச்சார கணக்குப் பிரகாரம் டாக்டர்கள் இருந்தால்தான் சுகாதாரத்தைப் பாதுகாக்க முடியும் என்ற அடிப்படையில், கிராம மக்களுக்கு சுகாதார வசதி கிடைப்பதற்கு நகரங்களை நோக்கித்தான் செல்லவேண்டியிருக்கிறது என்பதனாலும் கிராமங்களுக்கு டாக்டர்களைப் பயிற்சி அளித்துக் கொடுப்பதற்கான திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்பொழுதே தமிழ்நாட்டில் எல்லா மருத்துவ நிலையங்களிலும் டாக்டர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் கிராமங்களுக்குச் சென்று ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுகிறார்கள். ஏறத்தாழ 700 பேர்கள் பணியாற்றுகிறார்கள். இன்னும் அந்த எண்ணிக்கையை வளர்ப்பதற்கான முயற்சியும் அரசாங்கத்தினிடம் இருக்கிறது. பஞ்சாயத்து டிஸ்பென்சரிகளில் அல்லது நிரந்தரமான அலோபதிக் டிஸ்பென்சரிகளில் இப்படிப்பட்ட பட்டம் பெற்ற டாக்டர்கள் இருக்கிறார்கள். அதற்கு அடுத்து எல்.ஐ.எம். படித்தவர்கள் இருக்கிறார்கள். ஜி.சி.ஐ.எம். படித்தவர்கள் இருக்கிறார்கள். அதற்கு அடுத்து நாட்டில் ஏறத்தாழ 15,000, 20,000 கிராம வைத்தியத் தகுதி பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஹோமியோபதி வைத்தியத்தில் தகுதி பெற்றவர்கள்



இருக்கிறார்கள். பாரா மெடிகல் வொர்கர்ஸ் என்ற முறையில் ஆயிரக் கணக்கானவர்கள் பணியாற்று வருகிறார்கள். ஆக, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இன்றையதினம் கிராமங்களில் உள்ள மக்களுக்கு வைத்திய வசதி தரமானதாக, உயர்ந்ததாகக் கிடைப்பதில்லை என்று சொல்லலாமே தவிர, கிடைக்கவேயில்லை என்று சொல்ல முடியாது. படிப்படியாக முன்னேற்றத்திற்கு வழி வகுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : மருத்துவக் கல்லூரியில் சேரவேண்டும் என்ற ஆர்வத்தில் மாணவர்கள் தமிழகத்தில் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகவே, இருக்கிற இடங்களில் வேறு மாநில மாணவர்களுக்கு ஒதுக்கப்படுகிற இடங்களையும், பட்டதாரிகளுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்களையும் ரத்து செய்யுமா அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாணவர்களுக்கு ஆர்வம் இருக்கிறது சேருகின்றவரையில். சேர்ந்ததற்குப் பிறகு படிப்பதிலே அவர்களுக்கு ஆர்வம் உண்டாக்கப்பட வேண்டியிருக்கிறது. அந்த ஆர்வத்தை உண்டாக்கும் முறையில் ஆசிரியர் தருகின்ற தேர்ச்சி இருக்கவேண்டும். எனவே, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே அதிகத் தொடர்பு இருக்கவேண்டும். அதனால் மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகமாக உயர்த்த இயலாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து டாக்டர் ஆவதற்கு எம்.பி.பி.எஸ். பட்டம் கொடுப்பதற்கு ஒரு மாணவருக்கு எவ்வளவு அரசு செலவழிக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதற்கு இரண்டு கணக்கு இருக்கிறது. இரண்டும் உத்தேசக் கணக்குத்தான். ஒன்று, மாணவர்களுக்குக் கல்விக்காக மட்டும் ஏறத்தாழ ரூ. 35,000 செலவழிக்கப்படுகிறது. ஆனால், அவர்கள் பயிற்சிக்காக மருத்துவமனையில் சேர்ந்து பணியாற்றுகிறார்கள். அங்கே தேர்ச்சி பெறுகிறார்கள். மருத்துவக் கூடத்தில் ஆகும் செலவையும் சேர்த்து ஒரு மாணவருக்கு ரூ. 80,000 முதல் லட்ச ரூபாய் வரையில் செலவு ஆகிறது.

திரு. ப. முத்துசாமி : வைத்தியக் கல்லூரியில் சேருவதற்கு அதிகமான மாணவர்கள் ஆண்டுதோறும் விண்ணப்பித்துக்கொள்கிறார்கள். ஆகவே, மூன்று ஆண்டு பட்டப் படிப்பு எல். எம். பி. போன்று ஒரு புதிய முறையை ஏற்படுத்துவதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நவீன மருத்துவம் நாளும் வளர்ந்து வருகிறது. வளர்ந்துவருகிற மருத்துவத்தில் முழுப் பயிற்சி பெற்றிருந்தால்தான் தகுந்த சிகிச்சை செய்ய முடியும். தாங்கள் ஆற்றுகின்ற பணியைக் குறையில்லாமல் செய்ய முடியும். எனவேதான் 5½ ஆண்டு பட்டப் படிப்பைக் குறைப்பது தமிழ் நாட்டின் நிலைக்குத் தேவைப்பட்டதாக இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மாணவர்கள் எண்ணிக்கையைக் கூட்ட வசதியில்லை என்று சொல்லக்கூடிய நிலைமையில் இப்பொழுது சில மாவட்டங்களில், கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி இல்லாமல் இருக்கிறது. அந்த மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரியை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கடந்த காலத்தில் தொடங்கிய வைத்தியக் கல்லூரிகளுக்கு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிகளுக்கு ஏறத்தாழ இன்னும் ரூ. 75 லட்சம் தேவைப்படுகிறது ஒவ்வொரு கல்லூரிக்கும். கல்லூரிகளுக்கு மருத்துவத் துறையிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு விட்டால், கிராம வைத்திய மருத்துவ மனைகளுக்கு, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் செலவழிக்கப்படுகின்ற பணம் இதில் முடங்கிவிடுகிறது. ஆகவே, மக்கள் பிரதிநிதிகள் எது மக்களுக்கு நல்லது என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. த. சோணையா : மருத்துவக் கல்லூரிக்கு வருகின்றவர்கள் அரசாங்கத்தினுடைய ஆதரவில் வேலை வேண்டும் என்று வற்புறுத்தாமல், தாங்களே தனித்துத் தொழில் நடத்துகிறோம், தங்களுக்குச் பயிற்சி அளிக்கவேண்டும், அதற்குத்தான் கல்லூரிகளில் இடம் கேட்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படிக் கேட்பவர்களுக்கு அரசு அனுமதி கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எல்லாவற்றிற்கும் ஒரு முறை வேண்டும். யார் எதைக் கேட்டாலும் செய்ய அரசாங்கத்திற்குச் சக்தி கிடையாது.

திரு. கே. ஏ. வகாப் : மருத்துவக் கல்லூரிகளில் இடங்கள் குறைக்கப்படுவதற்கு அவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகமாக இல்லை என்று ஒரு காரணம் கூறப்பட்டது. அதுமட்டுமல்லாமல், அப்படிச் சேருகின்ற டாக்டர்களுக்கு, நம்முடைய டாக்டர்களுக்கு மலேஷியா போன்ற வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்களிடம் எக்ரிமெண்டு வாங்கிக்கொண்டு அவர்கள் வேறு மாநிலங்களிலோ அல்லது வெளிநாடுகளிலோ சேருவதாக வாக்களித்தால், அவர்களுக்கு இடத்தை அளித்து, அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான இடங்களை மருத்துவக் கல்லூரிகளில் ஏற்படுத்திச் சேர்ப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எந்த வெளிநாடு போவதுபற்றித் தீர்மானிப்பதாயிருந்தாலும், அந்த வெளிநாடு தீர்மானிக்கவேண்டும், மத்திய அரசு வெளிநாட்டுடன் கொள்ளும் உறவு அடிப்படையில்தான் தீர்மானிக்க வேண்டும். மாநில அரசு இவற்றைத் தீர்மானிக்க முடியாது. மற்ற மாநிலங்களில் நம்முடைய டாக்டர்களை வரவேற்கிற அளவுக்கு அவர்கள் இருக்கிறார்களா என்பது இன்னும் கேள்விக்குரியது.





**THIRU K. S. KOTHANDARAMIAH:** Ramanathapuram district and Dharmapuri have been declared to be very backward areas. There is a lot of demand for doctors there. May I know from the Hon. Minister whether some seats may be set apart for these districts in medical colleges ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் கைவிடப்படவில்லை. அந்த மாவட்டங்களில் பணியாற்றத் தேவைப்படுகின்ற டாக்டர்கள் அங்கே அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அதில் குறைபாடு இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர் கா 9-
கள் நல்ல முறையில் பயிற்சி பெற வேண்டுமானால் அவர்களுக்கு அதற்குப் போதுமான வசதிகள் இருக்க வேண்டும். செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் போதுமான வசதிகள் இல்லை என்றும், பல்வேறு வகைப்பட்ட நோயாளிகள் அங்கே வருவதில்லை என்றும், அதனால் எல்லா நோய்களின் தன்மையைப்பற்றியும் தாங்கள் தெரிந்துகொள்ள வழியில்லை என்றும், ஆகவே, இந்த மருத்துவக் கல்லூரியை சென்னைக்கு மாற்ற வேண்டும் என்றும் கோரி, இரண்டாண்டுகளுக்கு முன்னால் ஸ்டிரைக் செய்தார்கள். எனவே, அந்தக் கல்லூரியை சென்னைக்குக் கொண்டுவரும் எண்ணம் அரசிக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இரண்டாண்டுகளுக்கு முன்னால் மாணவர்கள் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை எழுப்பினார்கள். அரசியல் நோக்கத்தோடு இந்தப் பிரச்னையை அணுகாமல் எதிர்க் கட்சித் தலைவர்கள் மனதார ஏற்றுக்கொள்வதாக இருந்தால், அரசு அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளலாம்.

**Dr. H. V. HANDE:** Sir, may I know whether the Hon. Minister is aware of the fact that the students of Palayamcottai College expressed some grievances and difficulties and whether he has gone into those grievances and whether it is possible to redress their grievances ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த மாணவர்களுக்கு மூன்று குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவித்தார்கள். முதல் குறைபாடு அகில இந்திய மருத்துவக் குழு அவர்கள் கல்லூரிக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்பது. கல்லூரி தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் அகில இந்திய மருத்துவக் குழு அங்கீகாரம் அளிக்கும் என்றிருப்பதால் ஐந்து ஆண்டு கழிந்ததும் அதற்கு முடிவு காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்டார்கள். இரண்டாவது குறைபாடு அவர்கள் விடுதிக்கு அரசாங்கத்தின் செலவிலேயே டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பது. எந்த விடுதிக்

கும் அரசாங்கச் செலவில் அந்த வசதி செய்து கொடுக்கப்படுவதில்லை. விடுதியினரே செய்துகொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அதையும் ஏற்றுக்கொண்டார்கள். மூன்றாவது குறைபாடு தண்ணீர் வசதி இல்லை என்பது. தண்ணீர் வசதியின்மைக்குக் காரணம் அங்கிருந்த மோட்டார் பம்பு பழுதடைந்துவிட்டதுதான். அங்கு மேயர் பம்பு தேவைப்படுகிறது. அது கல்கத்தாவிலிருந்து வர வேண்டியிருக்கிறது. அண்மையில் சில மாநிலங்களில் ஏற்பட்ட 'ட்ரவுட்' கண்டிஷனால் உடனடியாகக் கிடைக்கவில்லை. பம்பு வேண்டுமென்று கேட்டு நான்கு வாரங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் 10 அல்லது 12 நாட்களுக்குள் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது அந்தக் குறையும் தீர்ந்துவிடும்.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, முன் கேள்விக்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபோது, அரசியல் பிரச்னைகள் குறுக்கிடாமல் இருந்தால் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியை சென்னைக்குக் கொண்டுவருவதில் அரசாங்கம் முயற்சி செய்யலாம் என்பதாகச் சொன்னார்கள். மாணவர்களுடைய கோரிக்கை ஒரு பக்கம் இருந்தாலும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்பதாலும், அங்கே ஹெட்குவாட்டர்ஸ் ஆஸ்பிட்டல் இருப்பதாலும் அங்கிருந்து மருத்துவக் கல்லூரியை மாற்றாமலிருப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். இதிலே இரண்டு வழக்குகள் இருக்கின்றன. ஒன்று செங்கற்பட்டுக்கு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்பது. மற்றொன்று கல்லூரி மாணவர்கள் பயிற்சி பெறுவதற்குப் போதுமான நோயாளிகள் வராததால் அதைச் சென்னைக்கு மாற்ற வேண்டும் என்பது. எனவே, அங்கத்தினர் அவர்கள் போதுமான நோயாளிகளை அங்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். (சிரிப்பு).

## அருப்புக்கோட்டை மருத்துவ மனை.

*249 வினா.—திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அருப்புக்கோட்டையில் உள்ள அரசாங்க மருத்துவ மனையில் தொத்து நோய் பிரிவு ( Ward ) உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) தற்போது இந்தத் தொத்து நோய்ப் பிரிவு அரசாங்க மருத்துவ மனையின் ஒரு மூலையில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது.



திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, அந்தத் தொத்து நோய்ப் பிரிவு சாதாரணமான ஒரு கூரை ஷெட்டில் இருக்கிறது. எனவே, அதை ஒரு நல்ல கட்டடம் கட்டி அதில் மாற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இம்மாதிரியான காரியங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்டு, ஆங்காங்கே ஒரு நிதிக் குழு தொடங்கி மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டிருக்கிறோம். அப்படித் தொடங்கப்படும்போது கனம் அங்கத்தினர் அவர்கள் அதற்குத் தலைமை தாங்கி நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## ஓட்டல்களில் சுகாதாரம்

*250 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா : —

ஓட்டல்களில் சுகாதாரமற்ற உணவுகள் வழங்குவதைத் தடுப்பதற்கென நடவடிக்கைகள் எடுக்கச் சொல்லி சுகாதார அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்திரவு ஏதேனும் அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஓட்டல்களில் சுகாதார நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்ளும்படி அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, ஓட்டல்களில் அரசாங்க அதிகாரிகள் போய் சுகாதார வசதிகள் சரியாக இருக்கின்றனவா என்று பார்ப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. அதனால் பண்டங்களின் தரம் மோசமானதாக இருக்கின்றன. சுகாதாரத்திற்குக் கேடு விளைவிப்பதாக இருக்கின்றன. அதிலும் எண்ணெய்ப் பண்டங்களின் தரம் மிகவும் மோசமானதாக இருக்கிறது. ஈக்கள் மொய்த்துக்கொண்டே இருக்கின்றன. இவைகளை எல்லாம் உடனுக்குடன் அதிகாரிகள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 1954-ம் ஆண்டிலிருந்தே 'ஃபுட் அடல்ட்ரேஷன் ஆக்ட்' உருவாகியிருக்கிறது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் எல்லாச் சிற்றுண்டி விடுதிகளிலும், ஓட்டல்களிலும் மாநகராட்சி சுகாதார அதிகாரிகளும், நகரமன்ற சுகாதார அதிகாரிகளும் அவ்வப்போது 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க அதிகாரம் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தவிர, குறிப்பிட்ட பகுதிகளில் தொத்து நோய்கள் இருப்பதாகத் தெரிந்தால், அடிக்கடி பார்வையிட்டு, ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க அந்த அதிகாரிகளுக்கு உரிமை இருக்கிறது. அண்மைக் காலத்தில் நம்முடைய நலத்துறை செயலாளரும், மாநகராட்சி ஆணையாளரும் சுகாதார இலாகா இயக்குநரும், கலந்து பேசி எல்லா அதிகாரிகளும்

உடனடியாக எல்லா விதச் சிற்றுண்டி விடுதிகளுக்கும், பெரிய ஓட்டல்களுக்கும் சென்று பரிசோதனை செய்து பார்த்து, அவ்வப்போது குறிப்பு அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், இவையெல்லாவற்றையும் அரசாங்க அதிகாரிகளே மேற்பார்வையிட்டு வர வேண்டும் என்று சொல்லுவது அவ்வளவு எளிய காரியம் அல்ல. எனவே, ஆங்காங்கே 'கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில்கள்' நுகர்வோர் கழகங்களை ஏற்படுத்தி, பொதுமக்கள் பிரதிநிதிகள் அதிலே அங்கம் வகித்து, சுகாதாரப் பணிகளைக் கவனித்து வந்தால், அதிகாரிகளுக்கு உதவிகரமாக இருக்கும். அந்த முயற்சியில், மாண்புமிகு அங்கத்தினர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கி இருக்கின்ற விடுதியின்கீழ் இருக்கின்ற ஓட்டலின் சுகாதார நிலை எப்படி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, அந்த ஓட்டலை சுகாதார முறையில் நடத்த வேண்டுமென்று உடனடியாக அரசு உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, எந்த இடத்தில் உணவு விடுதி இருந்தாலும், சுகாதார முறையில்தான் இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியின்கீழ் இருக்கும் ஓட்டலில் சுகாதாரக் குறைபாடுகள் இருக்குமானால் அதை அந்த விடுதி ( House committee ) குழுவுக்குத் தெரிவித்தால் அவர்கள் தக்க நடவடிக்கையை எடுப்பார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கிராமப்புறங்களில் முன் அனுமதி பெறாமல் சிறிய ஓட்டல்கள், கடைகள் உருவாவதால்தான் அதிகமான சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. எனவே, முன் அனுமதி இல்லாமல் சிற்றுண்டிக் கடைகள் நடத்தக் கூடாது, அதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று அரசாங்கம் உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொதுமக்கள் பிரதிநிதிகள் அதற்கு சிபாரிசு செய்யாமல் இருந்தால் அதில் தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த கன்ஸ்யூமர்ஸ் கமிட்டி எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கிறதா ? இல்லாவிட்டால் எல்லா இடங்களிலும் அமைக்கப்படுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்போது ஒன்றிரண்டு இடங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. சில நகரங்களில் அது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, in some other States Ministers used to go to hotels on surprise visits to find out how the preparations are being made. May I know from the Hon. Minister whether our Minister has likewise visited any hotels in



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பெரும்பாலும் நான் அப்படிச் சென்றதில்லை. அப்படிச் செல்வதாக இருந்தாலும் அமைச்சர் வருகிறார் என்று தெரிந்ததும், அந்த நேரங்களில் மட்டும் சுத்தமாக வைத்துக்கொள்ளும் நிலை ஏற்படுகிறது. எனவே, இதில் பொதுமக்கள் பிரதிநிதிகள் பொது நோக்கத்தோடு அவ்வப்போது, நான் ஏற்கனவே சொன்னதுபோல் நுகர்வோர் கழகங்களை அமைத்து அதன் மூலமாகப் பார்வையிடலாம். அப்போது ஓட்டல்களை நடத்துகிறவர்கள் ஒரு கடமை உணர்ச்சி பெற்றுச் சுத்தமாக வைத்துக்கொள்வார்கள்.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நேரடியாகச் செல்லும்போது செய்தி தெரிந்து, ஓட்டல்களைச் சுத்தமாக வைத்து விடுகிறார்கள். அதனால் மாறு வேடத்தில் சென்று பார்வையிடுவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே வேடம் போட்டுத் தோல்வியடைந்துவிட்டவன். (சிரிப்பு).

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in spite of the Prevention of Food Adulteration Act of 1954 and the serious steps said to have been taken by the Government and the Corporation of Madras, there is a lot of adulteration in hotels, particularly in the City of Madras, as if nothing has been done to prevent it. I hope the Government are aware that hotels are springing up like anything and there is heavy adulteration, particularly in the hawking of butter where there is 80 per cent of adulteration and only 20 per cent is genuine stuff. May I know what serious steps the Government propose to take in this matter ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I shall take the information of the hon. Member as authoritative and I shall pass on the same to the Commissioner of the Corporation of Madras.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஓட்டல்களில் எப்போதுமே உணவருந்தக் கூடிய இடமும், முன் புறமும் சுத்தமாகத்தான் வைத்திருக்கிறார்கள். ஆனால், பின் புறம், தொழிலாளர்கள் வேலை செய்யும் இடம்தான் அசுத்தமாக இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம், தொழிலாளர்கள் வேலை செய்வதற்கும் தங்கி இருப்பதற்கும் போதிய இட வசதி இல்லாததால்தான். ஆகவே, இனிமேல் ஓட்டல் தொழிலாளர்களுக்குத் தங்கி இருப்பதற்குப் போதிய இட வசதியைப் பக்கத்தில் கட்டிக் கொடுத்த பின்புதான் ஓட்டல் நடத்த அனுமதி அளிக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி பரிசீலனைக்குரியது.

திருமதி த. ந. அனந்தநாயகி : உதவி சபாநாயகர் அவர்களே, சில ஓட்டல்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதும், அவர்கள் வேலை செய்யும் இடம் சுகாதாரத்திற்குக் கேடு விளைவிப்பதாகவும், இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்தக் குறைகளைப் போக்க அரசாங்கம் முன்வருமா? அமைச்சரவர்கள் மாறுவேடம் போட்டுச் சென்று பார்வையிட்டதில் தோல்வி ஏற்பட்டது என்று சொன்னார்கள். என்ன மாறுவேடம் போட்டுச் சென்றார் என்பதைத் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, என்ன மாறுவேடம் போட்டேன் என்று கேட்டார்கள். வேடம் வெற்றி பெறவில்லை என்றுதான் சொன்னேன். அதைப்பற்றி அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை என்று கருதுகிறேன். ஆகவே, மாறுவேடம் போட்டுச் செல்ல நான் விரும்பவில்லை. கேள்வியின் மற்ற பகுதி—இடம் தெரியாமல் என்னிடம் கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்—தொழிலாளர் நலத் துறையைச் சேர்ந்தது அது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, ஓட்டல்களில் சுகாதாரக் கேடு ஏற்படுவதற்குப் பொருள் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள் ஆகவே, ஓட்டல்களுக்குத் தாராளமாகத் தேவைப்படும் பொருள்கள் கிடைக்க வழி வகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பொருள்கள் பற்றாக்குறையினால்தான் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது என்பது சரியல்ல. பொருள் பற்றாக்குறை இருந்தால் பண்டங்களின் அளவுதான் குறையுமே தவிர, சுகாதாரக் கேடு ஏற்படாது. அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும், சுலபமான வழிகளில் வருமானம் தேட வேண்டும், பணம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஓட்டல்களை நடத்துபவர் சிலர் இருப்பதால்தான் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : சென்னையிலுள்ள ஹோட்டல்கள் சுகாதாரமற்ற முறையில் நடத்தப்படுவது 1971-72-லே கண்டுபிடிக்கப்பட்டதா ? அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டு, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. எந்தெந்த ஹோட்டல்கள்மீது அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்பொழுதே கூட மாநகராட்சி அதிகாரிகள் அப்படிப்பட்ட ஹோட்டல்கள்மீது நடவடிக்கை எடுக்கத்தான் செய்கிறார்கள். அது போதுமானதில்லை என்றால், தீவிரமான நடவடிக்கை எடுப்பதுபற்றி மாநகராட்சி ஆலோசிக்கும் வகையில் அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. நா. வீராசாமி : சுகாதார முறைப்படி ஹோட்டல்களை நடத்துமாறு ஊக்குவிப்பதில், பெரிய ஹோட்டல்கள், சின்ன ஹோட்டல்கள் என்று பிரிப்பது அவசியம். அப்படிப் பிரித்தெடுத்து நன்றாக நடத்தப்படும் ஹோட்டல்களுக்கு சர்டிபிகேட் கொடுப்பது, பரிசு கொடுப்பது போன்ற நிலைமையை உண்டாக்கினால், அவைகளும் மற்ற ஹோட்டல்களும் நன்றாக நடக்க ஒரு தூண்டுகோலாக இருக்கும். அப்படிச் செய்வதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா ?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாநகராட்சி மன்றத்தார் மிகச் சிறந்த முறையில் நடத்தப்படுகின்ற ஹோட்டல்களை இங்கே தேர்ந்தெடுத்து அப்படிப் பரிசு வழங்குகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் அப்படித் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்குவது என்றால், அது அவ்வளவு சரியானதல்ல. காரணம், அந்தந்த இடங்களிலே இருக்கிற ஹோட்டல்களுக்கிடையேதான் ஒரு போட்டி மனப்பான்மையை உருவாக்க வேண்டும். அதுதான் நல்லதும் கூட. அதை விடுத்து, எல்லாவற்றையும் ஒன்றாக்கித் தமிழ்நாடு முழுவதும் என்று எடுத்துக் காரியங்களைச் செய்வோமானால், அது கல்லூரி மாணவர்களிலே இருந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் வரையில் ஒரே தேர்வை வைப்பதற்குச் சமமாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சில ஹோட்டல்களிலே உணவுப் பண்டங்களைக் கூட கண்ணாடி கேசிக்குள்ளே வைக்காமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஹோட்டல்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பெரும்பாலும் சுகாதாரம் என்பது அமைச்சருடைய ஆலோசனைக்கும், உள்ளாட்சித் துறையினரின் நடவடிக்கைக்கும் உரியதாகத்தான் அமைந்திருக்கிறது. நகரங்களில்தான் பொதுவாக ஹோட்டல்களிலே காணப்படும் பிரச்சினைகள் கவனத்திற்கு வர முடியுமே தவிர, கிராமப் புறங்களிலே அவ்விதம் வருவதில்லை. ஆகவே, நகராட்சி மன்றங்களுக்கும் அப்படிப்பட்ட ஆலோசனைகள் அனுப்பப்படும்.

திரு. கே. ஏ. வகாப் : கலப்படம் என்பது கண்ணுக்குத் தெரியாமல் கலக்கப்படுகிறது. அதோடு சில சுற்றுலா இடங்களில் உள்ள நான்–வெஜிடேரியன் ஹோட்டல்களிலே கோழிக்குப் பதிலாக காக்காயைக் கூட வைத்து விடுவதாகச் சொல்லுகிறார்கள். இவற்றை எல்லாம் தடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இதிலே இருக்கும் பிரச்னை மனிதத் தன்மை இல்லாத குறையினாலே ஏற்படுவதாகும். ஏனென்றால் இப்படிப்பட்ட உணவு விடுதிகளில் அங்கே செல்லுகின்ற பரிசோதகர்கள் கூட அவர்களுக்கு அளிக்கின்ற உணவைப் பரிசோதிக்கத் தெரியாமல் உண்டுவிட்டு வந்துவிடலாம். ஆகவே, இன்றைக்குச் சமுதாயத்திலே இருக்கிற மொத்தப் பிரச்னைகளையும் கருத்தில் கொண்டு, சமுதாயத்தின் மனச்சாட்சியைத் தூண்டத்தான் நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கோழி பிடிப்பதை விட காக்காய் பிடிப்பது அவ்வளவு சுலபமானதா என்பதை அரசாங்கம் தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அம்மையார் அவர்களுடைய அனுபவத்தையே அரசாங்கம் ஆதாரமாக எடுத்துக்கொள்ளும். (சிரிப்பு).

*Chittar-Pattanamkal Scheme*

*251. *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken to maintain continuous supply of water for irrigation at Karungal distributory of Chittar-Pattanamkal Scheme?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1971-72-ம் ஆண்டில் கருங்கல் கால்வாயின் கீழ் பாசனம் செய்யப்படும் நிலங்கள் (ஆயக்கட்டு) முழுவதற்கும் முறைப் பங்கீட்டின் மூலம் உரிய நேரத்தில் தேவையான அளவு தண்ணீர் வழங்கப்பட்டது.

திரு. என். டென்னிஸ்: கருங்கல் டிஸ்ட்ரிப்யூட்டரில் ஒழுங்கான முறையில் தண்ணீர் விநியோகம் செய்யாததனால், தேவைக்கு ஏற்ற சுலுயிசஸ் அமைக்கப்படாததால் பயிர்கள் மோசமாக ஆகிவிடுகிறது. பல நிலங்களைப் பயிர் செய்யும் முயற்சியை விசவாயிகள் கைவிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் குறையைத் தீர்க்க தீவிரமான நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கருங்கல், பட்டணங்காலின் ஓர் பிரிவு வாய்க்கால் ஆகும். 4,542 ஏக்கர் பயிரிடுவதற்குத் தேவையான 72 கன அடி—விநாடி அளவு 72 க்யூசக்ஸ் தண்ணீர் செல்வதற்கு ஏற்ற வகையில் இக்கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. பட்டணங்கால் 1971-72-ல் முதன் முறையாகப் பாசனத்திற்குத் திறந்துவிடப்பட்டு கரிக்கால் வாய்க்காலுக்கும் தண்ணீர் அளிக்கப்பட்டது. இந்த ஆண்டில்தான் முதன் முறையாகத் தண்ணீர் அளிக்கப்பட்டதால் ஆயக்கட்டின் முன்னேற்றம் தாமதமாகியது. 1971-72-ஆம் ஆண்டில் 2,114 ஏக்கருக்குத் தான் பாசன வசதிகள் கொடுக்கப்பட்டன. தேவையான அளவிற்கும் அதிகமான அளவு தண்ணீர் கருங்கல் பிரி வாய்க்காலுக்கு (டிஸ்ட்டிரிபூட்டரி) அளிக்கப்பட்ட போதிலும் கடைப் பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு இருந்து வந்தது. இதற்கான காரணங்கள்:—

புதிய ஆயக்கட்டின் வரண்ட நிலங்கள் சரியான பகுதிகளில் இருப்பதாலும் மற்றும் மண்ணின் தன்மை, அதிகமான அளவு நீர் உறிஞ்சக் கூடியதாயிருப்பதாலும். இப்பகுதிகளில் தண்ணீரின் தேவை அதிகமாக இருந்தது. இரண்டு அல்லது மூன்று பருவங்களுக்குத் தகுந்த முறையில் மண்ணைப் பண்படுத்திப் பாசனம் செய்துவந்தால் இக்குறை தீர்ந்து தண்ணீர் வீணாகுதல் குறைந்து, நிலைமை சீர்படும்.

1971-72-ல் கரிங்கால் கால்வாயின் கீழ் பாசனம் செய்யப்பட்ட ஆயக்கட்டு முழுவதற்கும் முறைப் பங்கீட்டின் (டர்ன் சிஸ்டம்) மூலம் இரவிலும் பகலிலும் உரிய நேரத்தில் தேவையான அளவு நீர் வழங்கப்பட்டது.





திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சாதாரணமாக இந்தக் கால்வாயிலே விளம்பரத்திற்காகத் தண்ணீர் ஒழுங்காக வருகிறது என்று அதிகாரிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அந்த திட்டப் பகுதியிலே இருந்து வருகின்ற ஒரு நபர் என்ற அளவிலேயும், நாங்கள் எல்லாம் விவசாயிகளாக இருக்கின்றோம் என்ற அளவிலேயும் எங்களுக்குத் தண்ணீர் காலா காலத்தில் கிடைப்பதில்லை. நினைத்தவாறு தண்ணீர் விடுகிறார்கள் என்பது ஒரு குறை. இன்னொரு குறை இந்த வாய்க்கால் ஒழுங்காக அமைக்கப்படவில்லை. எனவே (Field bothies) 25 ஏக்கராவுக்கு உடையதாக அமைக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தொடர்ந்து குறை சொல்லப்படுவதால், தலைமைப் பொறியாளரை நேரிலேயே போய்ப் பார்த்து, அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க அரசாங்கம் உத்திரவிடும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

*252. *Q.*—Thiru J. JAMES: Will the Hon. the Minister for Public Works be pleased to state:—

(*a*) whether there was a proposal for the excavation of Thirparappu Right Bank Channel to irrigate the areas up to Chitharal in Kanyakumari district; and

(*b*) if so, why the said schemes was not implemented so far?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இத்திட்டம் சித்தாறு-பட்டணம்கால் பாசனத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. எனினும் விரிவான பரிசீலனை செய்த பிறகு இது முற்றிலும் சிக்கனமற்ற பெருஞ் செலவாகக் கூடிய ஒரு திட்டமென்று தெரியவந்ததால் இது கைவிடப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தத் திட்டத்தினால் பயன்படக்கூடிய சில பஞ்சாயத்து ஏரியாக்களில் குடி தண்ணீர்கூட கிடைக்காமல் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆக, இந்தத் திட்டத்தைக் கைவிடுவதற்கு காரணம் ஒரு சிலருடைய—தனி நபர்களுடைய இண்ட்ரஸ்ட் என்று கூறப்படுகிறது. ஆகவே, மக்களின் நலனைக் கருதி, இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தை அமுல் நடத்த அரசாங்கம் முன்வருமா?

The Hon. Thiru S. J. SADIQ PASHA: The Collector of Kanyakumari had reported that the field verification by the localisation staff of the lands likely to be benefited by the extension proposal indicated that the ayacut localised by the Public Works

Department consists of dense coconut topes, rubber plantations, house-sites and poramboke land, etc., which are not likely to be converted for cultivation and that in all, only about 492·45 acres are likely to be benefited by the scheme. He had also stated that the extension of Thirupparappu right bank canal runs through densely populated areas, besides high level lands and low valleys. He was of the view that the cost of execution of the scheme would be higher and the return likely to be derived would be meagre. He had therefore suggested that the extension proposal might be deferred. The Chief Engineer (Irrigation) had also stated that as the canal had to pass through densely populated area, necessitating the provision of foot bridges, the execution of the scheme would approximately cost Rs. 16·35 lakhs. He had also suggested that the scheme might be dropped altogether. அரசாங்கம் 'டெபர்' செய்து உத்தரவு போட்டிருக்கிறது. உறுப்பினர் கருத்துப்படி மறு பரிசீலனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும்.

*Bridges in Dharmapuri district*

* 253. *Q.*—Thiru K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

(*a*) whether there is any proposal under consideration of Government to prepare schemes for constructing bridges and causeways over the jungle streams in important places in the Hilly areas of Dharmapuri district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை. ஆனால், கிராமப் பணிகள் சிறப்புத் திட்டத்தின் கீழ், அரசுச் சாலைகளில் ரூ. 11,89,600 செலவில் 137 குறுக்கு வடிகால் பணிகளும், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த சாலைகளில் ரூ. 8,01,000 செலவில் 60 பணிகளும் மேற்கொள்ள ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. அப்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, Dharmapuri district in general and Hosur and Denkanikottah taluks in particular are hilly areas. There are a number of jungle streams running throughout the area. In the rainy season the villages become islands and people find it difficult to move about. During the last 20 years before this Government came to power, not even a bridge or cause-



way has been built. When this matter has been brought to the notice of the District Development Council, an official of the Highways Department has stated that the construction of bridges or causeways does not come under their purview and that the matter should be referred to the Government for orders. So may I know whether the Government would take early steps to see that important bridges or causeways are constructed in Hosur and Denkanikottah taluks?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : The Chief Conservator of Forests has stated that there are no proposals or schemes for constructing bridge or causeways over jungle streams in important places in hilly areas in Dharmapuri district. The Chief Conservator of Forests has also stated that under the 'Special Rural Works Programme' there is a proposal for formation and improvement of roads in Chitteri Hills in Dharmapuri district. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல ரூ. 11,89,600 செலவில் 137 பணிகளும், ரூ. 8,01,000 செலவில் 60 பணிகளும் நடைபெற இருக்கின்றது.

Thiru B. VENKATASWAMI : According to the reply of the Hon. Minister about Rs. 8 lakhs has been allotted under 'Rural Works Programme', in Panchayat Unions. May I know from the Hon. Minister the schemes which have been included under the scheme?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : That would be a very long list. If the Hon. Member puts a separate question I will give the particulars.

**பட்டம்பாளையத்தில் குட்டை அமைப்பு**

*254 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் S.F. No. 92 பட்டம்பாளையத்தில் ஒரு குட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : ஆம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது எடுத்துக்கொள்ளப்படும், இதை முடிப்பதற்கு எத்தனை காலம் ஆகும்? இதனால் ஏற்படக்கூடிய பயன் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டத்தின் மதிப்பீடு 40 ஆயிரம் என்று போடப்பட்டிருக்கிறது. தலைமைப் பொறியாளரின் அனுமதியைப் பெற்றவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

### சேக்கனூர் ஏரி

*255 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடார்க்காடு மாவட்டத்தில், வேலூர் தாலுக்காவைச் சார்ந்த சேக்கனூர் ஏரி எப்பொழுது பழுது பார்க்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சேக்கனூர் ஏரி 1961-62ம் ஆண்டில் பழுது பார்க்கப்பட்டது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : 1961–62-ஆம் ஆண்டிற்குப் பிறகு பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் என் அந்த ஏரி பழுதுபார்க்கப் படவில்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப் பழுது பார்க்கும் திட்டத்திற்கு 20 ஆயிரம் மதிப்பீட்டில் ஒரு செயற் குறிப்பு ஆட்சித் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்தினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

### குறளகத்தில் உள்ள அங்காடி

*256 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை குறளகத்தில் இயங்கும் கதர்-கிராமக் கைத்தொழில் அங்காடி இலாபத்தில் நடைபெறுகிறதா ?

(இ) ஆம் எனில், 1971-72-ம் ஆண்டில் அங்கு விற்பனையான பொருள்களின் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம். 1969-70-லும் லாபம் வந்திருக்கிறது. 1970-71–லும்லாபம் வந்திருக்கிறது.

(இ) 1971-72–இல் விற்பனையான பொருள்களின் மதிப்பு ரூ. 44 லட்சம்.

திரு. என். கிட்டப்பா : 1971-72-ஆம் ஆண்டில் அங்கு விற்பனையான பொருள்களின் மதிப்புக்கு ஏற்ப நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய மொத்த லாப வருமானம் எவ்வளவு? இப்படி வருமானம் வரக்கூடிய இந்தத் துறையை விஸ்தரிக்க செயற் குறிப்பு இருக்கிறதா ?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1969-70-ல் லாபம் வந்திருக்கிறது. 1970-71-க்கும் ரூ. 25 ஆயிரம் லாபம் வந்திருக்கிறது. 1971-72 ஆம் ஆண்டு வருமானம் என்ன என்று தணிக்கை செய்யப்படவில்லை. சென்ற ஆண்டைவிட லாபம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திலாவது மாண்புமிகு உறுப்பினர்கள் இடம் மாறி உட்காரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். பெயர் கூப்பிடும்போது அவரவர்கள் இடத்தில் இருந்தால் நல்லது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கதர் கிராமக் கைத்தொழில் அங்காடி குறளகத்தில்தான் இயங்குகிறது. அது அவர்களது சொந்தக் கட்டடம். அந்தக் கட்டடத்தில் இதர காரியாலயங்களும் இருப்பதால் அவற்றின் மூலம் வரக்கூடிய வாடகையையும் சேர்த்து இந்த லாபம் கணக்கிடப்பட்டிருக்கிறதா? அல்லது கதர் கிராமக் கைத்தொழில் அங்காடியில் விற்பனையான பொருள்களினால் மட்டும் கிடைத்திருக்கக்கூடிய லாபமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த வினா அங்காடியைப் பற்றியது. அங்கே விற்பனையாகிற பொருளைப் பற்றியது, கட்டடத்தைப் பற்றியது அல்ல.

**Thiru K. M. SUBRAMANIAM** : Is the rent included in the assessment of profit ?

**Mr. DEPUTY SPEAKER** : The Hon. Minister has already given the answer.

**The Hon. Thiru Si. Pa. ADITANAR** : I do not have the details as to how this profit is worked out, but I believe according to the proper method of accounting, the rent would have been accounted for, separately.

திரு. கா. வேழவேந்தன் : இப்படி பல்வேறு மாவட்டங்களில் உற்பத்தியாகிற பொருள்களைக் குறளகத்திற்குக் கொண்டுவந்துதான் விற்பனை செய்வதன் மூலமே லாபம் கிடைக்கிறது என்று அமைச்சர் சொன்னார்கள். இதுபோன்ற அமைப்புகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இருநூறுக்கும் மேற்பட்ட எம்போரியங்கள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன.

கதர் துணி கொள்முதல்

*257. வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1969-70, 1970-71 ஆம் ஆண்டுகளில் மட்டும் கதர் வாரியம், சென்னை கிராமோத்யோக் பவனிலிருந்து வாங்கிய கதரின் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1969-70-இல் ரூ. 3,13,691-க்கும், 1970-71-இல் ரூ. 9,01,766-க்கும் வாங்கியிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியம் வாங்கக்கூடிய பொருள்களை நமது மாநிலத்திலேயே வாங்கிக்கொள்ளாது, பம்பாயில் உள்ள கிராமோத்யோக் பவனில் இருந்து வாங்கவேண்டிய அவசியம் என்ன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அங்கிருந்து வாங்குவது நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படாத மட்டரக நூல்களினால் செய்யப்படும் விரிப்புகள், பட்டுச் சேலைகள், கம்பளிகள் போன்றவைதான். கிராமோத்யோக் பவன் என்பது மத்திய அரசாங்கத்தினால் நடத்தப்படுகிற ஒன்று. பம்பாயில் தலைமையகம் இருக்கிறது. அதன் உதவியைக்கொண்டே தான் நமது மாநிலத்திலும் கதர் கிராமத் தொழில் வாரியமே நடை பெறுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம தொழில் கூட்டுறவு பயிற்சிப்பள்ளி

*258. வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள தொழில் கூட்டுறவு பயிற்சி பள்ளியை மூடிவிட கதர் வாரியம் முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன? பம்பாய் கதர் கமிஷன் இதற்காக எவ்வளவு பணம் தருகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை. 1971-72-க்கு மானியமாக இப் பயிற்சிப் பள்ளிக்கு ரூ. 65,600 வழங்கியுள்ளது.

திரு. கே. எ. வகாப் : இந்தத் தொழில் நிறுவனம் நடைபெற இன்னும் அதிகமான மானியத்தைப் பெற முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது தொழில் நிலையம் அல்ல, பயிற்சி நிலையம். இப்போது கொடுக்கப்படுகிற மானியம் போதுமானதாக இருக்கிறது. கூட்டுறவுத்துறையில் இன்னொரு பயிற்சி நிலையம் நடை பெறுகிறது. இதையும் இணைப்பதன் மூலம் சிக்கனமாக நடைபெற முடியும்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினா—விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது. முற்ப. 10-0

படித்து வேலைவாய்ப்பில்லார்க்கு விவசாயப் பயிற்சி

*259. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கட்கு விவசாயத்துறையில் பயிற்சி அளித்து அத்தொழிலில் ஈடுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : படித்து வேலை யில்லாமலிருப்பவர்களுக்கு விவசாயத்தில் பயிற்சி அளித்து அவர்களை அத்தொழிலில் ஈடுபடுத்தும் திட்டங்கள் ஒன்றும் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் 18 முதல் 30 வரை வயதுள்ள எட்டாம் வகுப்பு வரை படித்து தேர்ச்சிபெற்ற விவசாயிகளின் பிள்ளை களுக்கு விவசாயத்தில் ஓராண்டுக்காலம் பயிற்சி அளித்து அவர்களை சிறந்த விவசாயிகளாக ஆக்குவதற்குத் திட்டம் ஒன்று ஏற்கனவே அமலில் இருந்துவருகிறது. உயர்நிலைப்பள்ளியில் இறுதி ஆண்டு தேர்ச்சியுற்ற நபர்களுக்கு விவசாயத்தில் (டிப்ளமா) அத்தாட்சி பத்திரவகுப்பு ஆரம் பிப்பதுபற்றி விவசாய இயக்குநர் கடந்த நவம்பரில் செயற்குறிப்பு ஒன்றை அரசின் பரிசீலனைக்குச் சமர்ப்பித்தார். அதன்மீது அரசு இத்திட்டத்தை தற்பொழுது 1972-73-ம் ஆண்டிற்கான இரண்டாவது பாகத்திட்டமாகச் சேர்த்துக்கொள்வதற்கு காலதாமதம் ஆகிவிட்டபடியால், அடுத்த ஆண்டிற் கான, அதாவது 1973-74-க்கான இரண்டாவது பாகத்திட்டத்தில் சேர்த்துப் பரிசீலனை செய்வதற்கு தன் செயற்குறிப்பை அனுப்புமாறு கடந்த ஜனவரித் திங்களில் வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட் டுள்ளார்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இளைஞர் அணியில் சேர்த்துக்கொள்ளப்படும் இளைஞர்களை இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்தி, அவர்களுக்கு விவசாயத் துறையில் பயிற்சி அளித்து, இத்தொழிலில் ஈடுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்படி அவர் சொல்லுகின்ற முறையில் திட்டம் பரிசீலனையில் இல்லை. ஆனால் டிப்ளமா கொடுப்பது பற்றிய திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலிருந்து டிப்ளமா கோர்ஸ் துவங்க ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஆரம்பிக்க இருக்கும் கோர்ஸில் எத்தனை மாணவர்களைச் சேர்க்க இருக்கிறார்கள். சேரக்கூடிய மாணவர்களுக்கு ஏதாவது கல்வித்தரம் வைக்கப்பட்டிருக்கிறதா? அதுபற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : யோசனையில் இருக் கிறது என்று சொன்னேன். ஆய்வு முடிந்த பிறகு புள்ளி விவரங்கள் சொல்லப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஏற்கெனவே ஒரு வருஷம் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பயிற்சி பெறுகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டா? அல்லது சொந்த நிலங்களில் பயிரிடுவதற்குத்தான் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சில பேர் சொந்த நிலங்களையும் பார்த்துக்கொள்கிறார்கள். சில பேருக்கு வேலையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**Pesticides for tobacco and turmeric.**

* 260. Thiru N. K. Palanisamy. Will the Hon. the Minister for Agriculture be pleased to State whether any specific Pesticides have been invented for tobacco and turmeric?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கனவே டையாதீன் என்ற ஒரு மருந்து இருந்தது. ஆனால் இப்பொழுது சப்ளை இல்லை. அதாவது, புகையிலை புழுக்கள் அழித்துவிடுவதால் ஏராளமான விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு எந்தவிதமான மருந்தும் இல்லை. ஆகவே, ரிசர்ச் டிபார்ட்மெண்ட் மூலமாக, இதைத் தடுக்க தனியாக மருந்து கண்டுபிடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : புகையிலை, மஞ்சளுக்கென்று தனியாக பூச்சி மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இரண்டொரு மருந்துகளை வைத்து பயிர்களை பாதுகாக்கிறார்கள். எங்கெங்கு பூச்சி விழுந்திருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த மருந்துகளை உபயோகித்து பயிர் செய்கிறார்கள் என்று உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பெஸ்டிசைட்ஸ், வீடிசைட்ஸ் சம்பந்தமான ஆராய்ச்சிகள் மிகவும் மந்தமாகிக்கொண்டிருக்கின்றன. அதை நல்ல முறையிலே ஏன் செய்யவில்லையென்று அரசாங்க அதிகாரிகளைக் கேட்டால் வெளிநாட்டிலிருந்துதான் மருந்துகளை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்கம் அனுமதி தரவேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு மத்திய இதற்காக மத்திய அரசாங்கத்தோடு நம்முடைய அரசாங்கம் போரிடுமா? மந்தமாக இருக்கும் பெஸ்டிசைட்ஸ், வீடிசைட்ஸ் ஆராய்ச்சிகளை தீவிரப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மத்திய அரசோடு போராடுவது பற்றிய நீண்ட பலவிவாதங்கள் எல்லாம் அங்கத்தினருக்குத் தெரியும். ஆகவே இது பற்றிக் கேட்டிருந்தால்கூட நான் சொல்லத் தேவையில்லையென்று கருதுகிறேன். பயிர்கள் அழியாத வண்ணம் இருக்கிற பூச்சி மருந்துகளை வைத்து, தடுப்பு நடவடிக்கைகளை எங்கெங்கு



எடுக்கவேண்டுமோ அங்கெல்லாம் விவசாய இலாகா அதிகாரிகள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். என்றாலும் சில ரா மெடீயல்ஸ் வரவேண்டியிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறோம்.

Thiru B. VENKATASWAMY : Sir, 'powdery mildew' is a dangerous disease affecting tobacco and powdery sulpher is most essential for controlling it. May I know from the Hon. Minister if sulpher will be supplied to all the depots wherever necessary for use on tobacco in our State?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : என்டோசைபின் போன்ற பூச்சிகொல்லி மருந்தை ஏக்கருக்கு 250 மில்லிகிராம் அளவுக்குப் பயன்படுத்தினால் இந்தக் கம்பளிப் பூச்சிகளும் மற்ற செடிப்பேன் பூச்சிகளும் அடியோடு ஒழிக்கப்படும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மற்ற மருந்துகளைச் சேர்த்தால் புகையிலை வீணாகிறது என்ற காரணத்தால் மற்றவைகள் எல்லாம் தெளிக்கப்படுவதில்லை.

**சலவைத் துறைகள்.**

*261. வினா.—திரு. தி. ஒ. பெரியசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சலவையாளர்களுக்கு ஒவ்வொரு நகரத்திலும் சலவைத் துறைகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை எத்தனை சலவைத்துறைகள் எந்தெந்த நகரங்களில் கட்டப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் சலவைத்துறை கட்ட பொருளாதார உதவியளிக்கும் திட்டத்தின் கீழ் நகராட்சி இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுப்பிய செயற்குறிப்புகளை ஆய்ந்து திருப்பூர், சேலம், பரமகுடி நகராட்சிகளுக்கும், சின்னாளம்பட்டி (மதுரை மாவட்டம்) தேவதானபட்டி (மதுரை மாவட்டம்), ஸ்ரீவைகுண்டம் (திருநெல்வேலி மாவட்டம்) திருத்தங்கல் (இராமநாதபுரம் மாவட்டம்) அரியலூர் (திருச்சி மாவட்டம்) அன்னவாசல் (திருச்சி மாவட்டம்), பேராவூரணி (தஞ்சாவூர் மாவட்டம்) ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்) சித்தியங் கோட்டை (மதுரை மாவட்டம்), இராமேஸ்வரம் (இராமநாதபுரம் மாவட்டம்) பேரூராட்சிகளுக்கும் உதவி அளித்துள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சென்னை நகரிலேயே இருக்கின்றவற்றைப் பற்றி நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அடையாறிலே ஒரு டோபிகானா கட்டிக்கொண்டிருக்கிறார்கள். சைதாப்பேட்டையிலே இருக்கிற டோபிகானா சரியாக இயங்கவில்லை. அமைச்சரவர்கள் சென்னையிலேயுள்ள டோபிகானாக்களைப் பார்வையிடுவதற்கு புரோகிராம் போடுவார்களா? அப்படிப் போகும்போது தொகுதி எம்.எல்.ஏ.-வை அழைத்துச் சென்றால் கஷ்டங்களைச் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைக் கவனிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த இரண்டு சலவைத் துறை களைத் தவிர மற்ற எல்லா சலவைத் துறைகளையும் நான் மாநகராட்சிமன்ற கமிஷனரோடு சென்று பார்த்திருக்கிறேன். இந்த இரண்டும்கூட கட்டி முடிக்கப்படவேண்டிய தறுவாயில் இருக்கின்றன. கட்டி முடித்தபிறகு —குறைபாடுகள் இல்லாவண்ணம் கட்டச்சொல்கிறேன். கட்டிமுடித்தபிறகு— அதை கனம் உறுப்பினரோடு பார்வையிடத் தயாராக இருக்கிறேன்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலில் வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு இடம்கூட இல்லை. ஆகவே, வட ஆற்காடு மாவட்டத்திலும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே வட ஆற்காடு மாவட்டத்தில் ஆம்பூரிலே ஒரு சலவைத் துறை கட்டப் பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, in the long list read by the Hon. Minister there is no Dhobikhana constructed in Dharma-puri district. May I know whether it will be extended to Dharmapuri district especially to Hosur taluk.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்த சலவைத் துறைகள் கட்டப்படுவதற்கு 50 சத விகிதத்தை நகராட்சி மன்றமாவது, பேரூராட்சி மன்றமாவது தரவேண்டும். 50 சத விகிதத்தை அதற்கு அளித்து அரசு உதவி செய்கிறது. அந்த வகையிலே வருகின்ற விண்ணப் பங்கள் கவனிக்கப்படுகின்றன. எந்த மாவட்டத்திலேயிருந்து விண்ணப் பம் வந்தாலும் கவனிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். தர்மபுரிக்கு என்று தனியாக சலுகைகள் கிடையாது. அங்கிருந்தும் விண்ணப்பங்கள் வந்தால் கவனிக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஸ்ரீரங்கம் நகராட்சியிடமிருந்து சலவைத்துறை கட்டித் தரவேண்டுமென்று ஒரு விண்ணப்பம் வந்திருக் கிறதே, அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்தில் தகவல் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல் வேன்.

திரு. எம். செல்வராஜ் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற பொழுது, குறிப்பிட்ட தொகையை நகராட்சி கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். உயர்ந்தபட்ச தொகையாக சர்க்காரால் எவ்வளவு கொடுக்கப் படுகிறது, அதில் கடன் எவ்வளவு? மானியம் எவ்வளவு? என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, உயர்ந்தபட்ச மாக ரூ. 30,000 கூடத் தரப்படுகிறது. ரூ. 30,000-லே கட்டுவார்களானால் நாங்கள் ரூ. 15,000 தருகிறோம், அவர்கள் ரூ. 15,000 தரவேண்டும். கடன் தொகையாகத் தரப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த 1972-73-ம் ஆண்டில் எந்த எந்த நகராட்சிப் பட்டணங்களில் இம்மாதிரி சலவைத்துறைகள் கட்டப்பட இருக்கின்றன என்பதையும் 5,6 ஆண்டுகளாக மாயூரம் நகராட்சியில் சலவைத்துறை கட்டும் திட்டம் இருப்பதாகக் கூறிக்கொண்டு இதுவரை நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கான காரணத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தற்போது அதுபற்றிய எல்லாத் தகவலும் என்னிடத்திலே இல்லை. நகராட்சிகளைப் பொறுத்தமட்டில், திருப்பூர், சேலம், பரமக்குடி ஆகிய நகராட்சிகள் இப்பொழுது இந்தத் திட்டத்தின்கீழ் சலவைத்துறைகள் கட்டிக்கொண்டிருக் கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, the Hon. Minister said that as soon as the Saidapet Dhobikhana is completed, he would take action. May I inform the Hon. Minister that it was completed in 1965 and it is still not open. May I know what is the reason for the delay ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, சைதாப் பேட்டை சலவைத்துறையைப் பொறுத்தவரையில் அது இன்னமும் எங்க ளிடத்திலே அளிக்கப்படவில்லை. அரசாங்கத்தினிடம் அளிக்கப்பட்டபிறகு தான் பிரச்னை வருகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் மாநகராட்சியில் அதுபற்றிய தகவல்களை மிகச் சிறப்பாகப் பெறமுடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அடையாறிலே கட்டி முடித்தவுடன் பார்வையிடலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு இன்னும் அடிக்கல்லே போடவில்லை. அப்படி இருக்கும்பொழுது எப் பொழுது கட்டப்போகிறார்கள். அதைக் கட்ட எங்கே இடம் தேடி யிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி, கட்டிய பிறகுதான் பார்வையிடலாம் என்று சொன்னேன். கட்டுகிறபொழுது பாதி முடிந்தபிறகுகூட அடிக்கல் போடுவது உண்டு. முக்கால்பாகம் முடிந்தபிறகுகூட அடிக்கல் போடுவது உண்டு. சலவைத்துறையைக் கட்டி முடிக்க வேண்டும். அடிக்கல் போடுவது முக்கியம் அல்ல.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களுக்கு ரூ. 30,000 அளிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பேரூராட்சி மன்றங்களிலே அவற்றின் வருவாய் ரூ. 10,000, ரூ. 15,000 என்ற அளவிலே இருக்கிறது. ஆகவே, பேரூராட்சி மன்றங்களுக்கு அதிக மானியம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, உதாரணத்திற்காகத்தான் ரூ. 30,000 என்று குறிப்பிட்டேன். ஒவ்வொரு நகராட்சியும் அவரவர்களுடைய வசதிக்கேற்ப சலவைத்துறை கட்டலாம். சேலத்திலே ரூ. 35,000-லும், பரமக்குடியிலே ரூ. 45,000-லும் சலவைத்துறை கட்டுகிறார்கள். அவரவர்களுடைய பொருளாதார வசதியைப் பொறுத்ததே தவிர எங்களுடைய எண்ணத்தைப் பொறுத்தது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, துணிகளைத் துவைப்பதற்கு அடிக்கல்தான் முக்கியமாக இருக்க வேண்டும். ஆகவே, டோபிகானாவில் அடிக்கல்தான் முக்கியமாகப் போட வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணிகள் துவைப்பதற்கு அடிக்கல் மட்டும் முக்கியமல்ல. தண்ணீரும் இருக்க வேண்டும். எனவேதான் இரண்டும் இருக்கின்ற இடங்களிலே நாம் அமைத்துக்கொண்டிருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அடையாறிலே இன்னும் அந்த வேலை தொடங்கப்படவில்லை. எப்பொழுது அது துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது என்னிடத்திலே அந்தத் தகவல் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, டோபிகானா கட்டுவதற்கு ஆன ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நகரப் புறங்களிலேதான் கட்டப்படுகின்றனவே தவிர, கிராமப் பஞ்சாயத்துக்களில், பஞ்சாயத்து யூனியன் ஏரியாக்களில் அந்தத் திட்டங்கள் அமலாக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, சலவைத் துறை கட்டுவதைப் பொறுத்தவரையில், பேரூராட்சி மன்றங்களுக்குத் தான் இப்பொழுது விஸ்தரிக்கப்படுகின்றது. ஊராட்சி ஒன்றியங்களில் இல்லை. அப்படி விஸ்தரிக்கப்பட வேண்டுமானால், பெரிய அளவுக்கு நிதி தேவைப்படும். மேலும் அந்த இடங்களில் அந்த அளவுக்குத் துணிகளும் சேருவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.





THIRU K. M. SUBRAMANIAM : Sir, the Hon. Minister has stated in reply to my supplementary, that that is the duty of the Corporation. May I point out that 50 per cent of the grant is given by the Government. Now I am not able to get a proper reply and so is it not the duty of the Government to find out why there is a delay of 6 to 7 years in declaring this dhobikhana in Saidapet open after being completed ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதிலே மூன்று பேர்கள் பங்கேற்றுக் கொள்கிறார்கள். நகராட்சி இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்குநர், பின்தங்கிய வகுப்பினர் நல இயக்குநர் ஆகியவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. மாநகராட்சி மன்ற இயக்குநர்தான் பொறுப்பு வகிக்கிறார் சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில். அவர்கள் தகவல் தந்த பிறகுதான் நாம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு க. நாகராசன் : தலைவர் அவர்களே, பாதித் தொகையைக் கொடுக்க முடியாத நகராட்சிகளாக இருந்தால், அரசாங்கமே அவற்றிற்கான முழுத் தொகையையும் கொடுத்துவிட்டு பின்னர் அவற்றிடமிருந்து வாங்கிக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து ஒரு நல்ல ஆலோசனை. அப்படி அரசாங்கம் செய்யலாம், ஆனால், இது நிதி சம்பந்தப்பட்ட பிரச்னையாக இருப்பதால், நிதி கிடைப்பதைப் பொறுத்துத்தான் நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

## பாதிரிவேடு கிராமத்தில் மாணவரில்லம்

*262 வினா.—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கும்முடிப்பூண்டியின் துணை வட்டம், பாதிரிவேடு கிராமத்தில் விரைவில் பிற்பட்ட மாணவரில்லம் ஒன்று அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : அரசு ஆணை பலவகை 422, நாள் 6–5–1972-ல் பின்தங்கிய வகுப்பினருக்காக 1972–73-ம் ஆண்டில் திறக்க உத்திரவிடப்பட்டுள்ள 35 உணவு விடுதிகளின் பாதிரிவேடு என்னுமிடத்தில் உணவு விடுதி திறப்பதும் சேர்க்கப்பட்டுள்ளது. அந்த உணவு விடுதி 1–6–1972-ல் திறக்கப்பட்டுள்ளது.

திரு கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சட்டமன்றத்தில் வருவதற்கு முன்பு அமைச்சர் அவர்கள் அதைத் திறந்து வைத்ததற்காக நான் அவர்களுக்கு நன்றியைத் தெரி

வித்துக்கொள்கிறேன். ஆனால், இது இப்பொழுது சொந்தக் கட்டடத்தில் இல்லாமல் இருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டாவது இதற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அவர்கள் ஆணையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவர் அவர்களே, உணவு விடுதிகளுக்குச் சொந்தமான கட்டடங்களைக் கட்ட வேண்டுமென்று நான் மத்திய அமைச்சர் கலந்து கொண்ட கூட்டத்திலே யோசனை தெரிவித்திருக்கிறேன். மத்திய அரசு நிதியுதவி செய்யுமானால், அது பற்றி பின்னர் கவனிக்கலாம்.

## மாப்படுகை கிருஷ்ணன் கோயில்

*263 வினா.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாயூரம் தாலுக்கா, மாப்படுகையில் காவிரிக்கரை ஓரமுள்ள கிருஷ்ணன் கோயில் அண்மையில் அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் சொத்து விவரம் என்ன?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் :

(அ) ஆம்.

(இ) இவ்வாலயத்திற்குச் சொந்தமான, பண்டாரவாடை, மாப்படுகை கிராமத்தில் ஆர்.எஸ். 28/1–ல் ஒரு ஏக்கர் 8 செண்ட் நஞ்சை நிலம், திரு ஆர். இராமலிங்கம் பிள்ளை என்பவர் அனுபவத்திலும், மாயவரம் நகரம், முனிசிபல் வார்டு 7, பிளாக் 53, நகர சர்வே 1562/2, நந்தவனம் புறம்போக்கு 88 செண்ட் நிலம் திரு கே. இராமய்யா நயினார் என்பவர் அனுபவத்திலும் உள்ளது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் தாலுகாவிலே மாப்படுகையில் காவிரிக்கரை ஓரமுள்ள கிருஷ்ணன் கோயிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ராமையா நாயுடு என்பவர் இடித்துத் தள்ளிவிட்டு, தரைமட்டமாக்கிவிட்ட பிறகு—அதை அறநிலையத் துறையின் மூலம் எடுத்துக் கொண்ட பிறகும்—அந்தச் சொத்துக்களை அறநிலையத் துறையினரிடம் ஒப்படைக்காத காரணத்தைக் கண்டறிந்து அதை விரைவிலே அறநிலையத் துறையினிடத்திலே ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு இந்தக் கோயில் அறநிலையத் துறையினரால் எடுத்துக் கொள்ளப்பட்டு சம்பந்தம் என்பவரை அறங்காவலராக நியமித்து இருக்கிறோம். அதற்குப் பிறகு அந்த ஆலயத்திற்குச் சொந்தமான நிலங்களை சுவா



தீனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென்றும், அறங்காவலர்க்கு ஆணையிடப்பட்டுள்ளது. இடிந்து கிடக்கிற கோயிலையும், கட்ட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

திருமதி த. நீ. அனந்தநாயகி : கோயில் சொத்துக்களையெல்லாம் சரிவரக் கவனிக்காததற்குக் காரணம் அறநிலைய இலாகாதான், யாராவது மனுப் போட்டால்தான் அதற்குப் பிறகு கவனிக்கிறார்கள். (You br ng it under the control of the H. R. E. Board) என்ற நிலைமை தான் இருக்கிறது. இந்த இலாகா தானாகவே இதைப் பற்றி யெல்லாம் ஆராய்வதற்கு என தனிப் பிரிவு ஒன்றை வைத்திருக்கிறதா ? எந்த அடிப்படையிலே கோயில் சொத்துக்கள் எல்லாம் கண்ட்ரோல் செய்யப்படுகின்றன ; கண்காணிக்கப்படுகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இதற்காக ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தி கவனிப்பார்களா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : கோயில் சொத்துக்களைக் கண்டறிவதற்காக ஒரு அலுவலாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கிராமம் கிராமமாகச் சென்று ஆயிரக்கணக்கான ஏக்கர் கோயில் நிலங்களை இந்தத் துறையினுடைய பொறுப்பிலே கொண்டு வந்திருக்கிறார்கள். மேற்கொண்டு தொடர்ந்து அவர்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அறநிலையத் துறையினர் திரு ராமையா நாயுடு அவர்களிடத்திலே அந்தச் சொத்துக்களைக் கேட்கச் சென்றபோது அவர் அவர்களை அடித்துத் துரத்தி இம்சித்து அனுப்பியிருக்கிறார் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

## பெரியபாளையத்தில் அனுதை விடுதி

*264 வினா.—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையத்தில் உள்ள பவானி அம்மன் கோவில் நிர்வாகத்தின் கீழ் அனுதை விடுதி ஒன்று அமைப்பதில் கால தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பெரியபாளையம், பவானி அம்மன் கோயில் நிர்வாகத்தின்கீழ் அனுதை விடுதி ஒன்று அமைக்க இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர், சென்னை 4—4—1972 அன்று ஒப்புதல் அளித்தார். அதற்கான மதிப்பீட்டுக்கு ஆணையர் 21—7—1972 அன்று ஒப்புதல் அளித்துள்ளார். ஒப்பந்த அறிவிப்புகள் கிடைக்கப் பெற்றதும் கட்டிட வேலை துவக்கப்படும்.

[1972 ஆகஸ்ட் 22

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் எவ்வளவு தீவிரமாகவும் அக்கறையோடும் இருந்தாலும் பரம்பரை டிரஸ்டிகள்—ஹெரிடிட்டரி டிரஸ்டிஸ்—நிர்வாகத்திலே இருப்பதாலே அந்தக் கோயிலுக்குப் பல ஆயிரக்கணக்காக ரூபாய் வருமானம் வந்தும்கூட அனாதை விடுதி கட்டுவதற்குத் தாமதம் காட்டுகிறார்கள். எனவே பரம்பரை டிரஸ்டி முறையை ஒழித்து பொது டிரஸ்டிகள் ஏற்படுத்தும் முறையைக் கொண்டுவரக்கூடிய முறையில் சட்டத்தை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இத்தகைய யோசனை அந்தக் கோயிலின் அறங்காவலர்க்கு எடுத்துக் கூறப்பட்டது, அவர்களும் ஒப்புக் கொண்டு 21—7—1972-ஆம் நாளன்று ஆணையர் உத்திரவு போட்டுள்ளார்கள். ஆனால் அதற்குத் தேவையான சரியான இடம் கிடைக்கவில்லை என்பதுதான் தாமதத்திற்கும் காரணம். அங்கேயுள்ள திருமண மண்டபத்திலோ அல்லது தற்காலிகக் கொட்டகையிலோ கொண்டு வரவேண்டுமென்று அறநிலையத்துறையினர் சொல்லியிருக்கிறார்கள். விரைவிலே நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பெரியபாளையக் கோயிலில் ஆண்களும், பெண்களும் அம்மணத்தோடு கோயிலைச் சுற்றிச் சுற்றி வருகிறார்களே, அரசாங்கம் அதைத் தடை செய்யுமா? சில நேரங்களிலே வேப்பந்தழையை எடுத்துக்கொண்டும் சுற்றிக்கொண்டு வருகிறார்களே அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : வேப்பந்தழையை வைத்துக் கொண்டு சுற்றிவருவது எங்களுக்குத் தெரியும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இருப்பதாகத் தெரியாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த பவானி அம்மன் கோயில் மூலமாக அனாதை இல்லம் கட்டப்படுவது ஆண் குழந்தைகளுக்காகவா அல்லது பெண் குழந்தைகளுக்காகவா? ஆண் குழந்தைகளுக்காக என்றால் பெண் குழந்தைகளுக்காக அமைப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பவானி அம்மன் கோயில் மூலமாகக் கட்டப்படுவது ஆண் குழந்தைகளுக்காகத்தான். பெண் குழந்தைகளுக்காக வேறு கோயில்களில் ஆரம்பிக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்த அனாதை இல்லங்களை ஆரம்பிக்கும் வேலைகள் முடிந்ததும் அவர்களுக்குத் தொழில் கற்றுக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகள் அதோடு சேர்ந்து வருகிறதா? அல்லது வெறும் இல்லங்களை மட்டும் கட்டிப் பராமரிக்கப் போகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த அனாதை இல்லத்தில் குழந்தைகளைத்தான் சேர்த்துக்கொள்கிறோம். ஆகவே தொழில் கற்றுக்கொடுக்கும் பிரச்னை அங்கு வரவில்லை.

அறநிலையங்களில் உபரி நிதி.

*265. வினா.—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலையங்களின் உபரி பணத்தில் தொழிற் பேட்டைகள் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனுமுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்தெந்த ஊர்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:

(அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. வி. சம்பத் : தலைவரவர்களே, அறநிலையங்களின் உபரி நிதியிலிருந்து தொழில்பேட்டை அமைக்கவும், கண் இழந்தவர்களுக்கும், கை கால் ஊனமுற்றவர்களுக்கும் அந்தத் தொகையிலிருந்து நல்வாழ்வு அளிக்க அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, விழி இழந்தவர்களுக்கு விழி கொடுக்கவும், கை கால் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்யவும் நம்முடைய கோயில்களின் உபரி நிதியிலிருந்து அந்த நிதிகளை ஏற்கெனவே பயன்படுத்தி வருகிறோம். சட்டத்திலே அதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கோயில் நிதியிலிருந்து தொழில்பேட்டை அமைக்க வேண்டுமென்ற நிலை இல்லை. ஏற்கெனவே கோயில்களுக்கு இருக்கின்ற ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களிலிருந்து வரக்கூடிய வருமானத்தை ஒழுங்குபடுத்தினாலே பெரிய அளவில் உதவி செய்ததாக முடியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்பத் அவர்களும் தஞ்சை மாவட்டத்தில் சுவேதாரண்யேஸ்வர சுவாமி ஆலயத்தில் அறங்காவலராகப் பணியாற்றுகிறார். அந்தக் கோயிலுக்கு சுமார் 2,000 ஏக்கர் வரையில் நிலங்கள் இருப்பதால் அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தை ஒழுங்குபடுத்தினாலே ஏராளமான காரியங்களைச் செய்ய முடியும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : From the surplus, what is the percentage allotted for renovation of other temples? Will priority be given for renovation of other temples out of the surplus funds?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோயில் நிதியிலிருந்து திருப்பணிக்குத்தான் நாம் முதலிடம் தருகிறோம்,

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இந்தக் கோயில்களிலே ஏழைக் கோயில்களும் இருக்கின்றன, பணக்காரக் கோயில்களும் இருக்கின்றன. அமைச்சரவர்கள் கூறியதுபோல பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் உள்ள கோயில்கள் பல இருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் 3 வேளை பூஜை முதலியவைகள் கூடச் செய்ய முடியாமல் பல கோயில்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. ஆகவே பணக்காரக் கோயில்களிலிருந்து ஏழைக் கோயில்களுக்கு உதவி செய்து அங்கு நடைபெற வேண்டிய சம்பிரதாயங்களை ஒழுங்காக நடைபெறச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வசதியற்ற கோயில்களுக்கு ஏற்கனவே நாம் உதவிகளைச் செய்து வருகிறோம். அதிகமான வருமானம் வரக்கூடிய கோயில்களின் நிதியிலிருந்து வசதியற்ற கோயில்களைத் திருப்பணி செய்யவும், வேறு பல நல்ல காரியங்களுக்காக எடுத்துச் செலவு செய்து வருகிறோம்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, தமிழகத்திலேயே பழனி முருகன் கோயிலுக்குத்தான் அதிக வருமானம் என்று அறிகிறோம். ஆகவே அந்த அதிக வருமானத்திலிருந்து பழனி நகரில் ஏதாவது தொழிற்சாலை அமைக்க செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது மாதிரி பல கடவுள்கள் அனாதையாக இருக்கிறது, இன்னும் சில கடவுள் கையிழந்தும், காலிழந்தும் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய நிலையில் இருக்கின்றது. அம்மாதிரியான கோயில்களுக்கு அரசாங்கம் அறநிலையப் பாதுகாப்பு நிதியிலிருந்து பணம் எடுத்து அந்தச் சிலைகளைப் புதுப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஆஸ்திகர்களின் உள்ளத்தைப் புண்படுத்தாமல் தயவு செய்து பண்பட்ட கேள்வியாகக் கேட்க வேண்டுமென்று பணிவன்புடன் உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல கோயில்களில் இருக்கும் தெய்வச் சிலைகள் எங்கும் பழுதுபட்டதாகத் தகவல் இல்லை. பழுதுபட்ட கோயில்களைப் புதுப்பிக்க ஏற்கனவே பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கிறோம். அந்தத் தூய்மையான பணி தொடர்ந்து சிறப்பாக நடைபெறும்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : சார், இப்படிக் கோயில்கள் பழுதுபட்டிருப்பதற்கும், இம்மாதிரி அனாதைக் கோயில்களாக இருப்பதற்கும் காரணம் அங்கிருக்கும் கோயில்களில் பூசைகள் சரிவர நடத்தப்படாமல்





இருப்பதும், மக்களை அங்கே அழைத்துச் செல்ல, மக்களுக்கு மனம் வராமல் இருப்பதும்தானா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வேப்ப மரத்தின் அடியிலிருக்கும் கோயிலிலும் 6 கால பூசை நடைபெற்று வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சில கோயில்களுக்கு 2,000 ஏக்கர் வரையில் நிலங்கள் சொந்தமாக இருக்கிறது. சில கோயில்களுக்கு ஒரு ஏக்கர் நிலம்கூடக் கிடையாது. எனவே ஏதாவதொரு வருமான அடிப்படையிலே சீலிங் ஆக்ட் வைத்து பூமியில்லாத கோயில்களுக்கு வருமானம் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அத்தகைய காரியங்களைத்தான் ஏற்கனவே செய்து வருகிறோம்.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, பகுத்தறிவு வளர்ந்து வரும் இந்தக் காலத்தில்கூட இந்தக் கோயில்களைக் கட்டிக் கொண்டு நாம் இதுபற்றி சர்ச்சை செய்து கொண்டிருக்க வேண்டுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சர்ச்சையை மாண்புமிகு உறுப்பினரவர்கள்தான் கிளப்பியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கோயில்களில் நம்பிக்கை வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள், சமாதியில் நம்பிக்கை வைத்தவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அது அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது. அந்த நிலையில் பணக்காரக் கோயில்களுக்கும் ஏழைக் கோயில்களுக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்து சமதர்மத் திட்டத்தை அறநிலைய இலாக்கா புகுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சில கோயில்களுக்குச் சொத்துக்களை ஏற்கனவே ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். சில கோயில்களுக்கு இயற்கையாகவே சொத்துக்கள் இல்லாமல் பக்தர்களின் காணிக்கையை வைத்துச் செய்கிறோம். இன்னும் சில கோயில்களுக்கு அதிகமான வருமானம் வரும் கோயில்களின் நிதியிலிருந்து வருமானம் இல்லாத கோயில்களுக்குப் பயன்படுத்துகிறோம். இப்படிப்பட்ட காரியங்களைத்தான் செய்து வருகிறோமே தவிர, கோவில்களிலே எப்படிப்பட்ட சமதர்மத்தை ஏற்படுத்த முடியுமென்று உறுப்பினர் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், பல கோயில்கள் சேதமடைந்தும், சிலைகள் சேதமடைந்தும், ஜனங்கள் வராமலிருப்பதாகக் கூறினார்கள், அப்படி என்றால் அங்குள்ள தெய்வத்திற்கு, மற்ற மக்களை ஆகர்ஷிக்கச் சக்தியற்றுப் போன அந்தத் தெய்வங்களை எல்லாம் நாம் ஏன் செயற்கை

யாக உயிர் ஊட்ட வேண்டு மென்று புரியவில்லே. இங்கு இருக்கும் இந்த அமைச்சு எந்தெந்தக் கோயில்களேச் சக்தியுள்ள கடவுள் என்று ஒப்புக் கொள்கிறது, எந்தெந்தக் கோயில்களேச் சக்தியில்லாத கோயில் என்று ஒப்புக்கொள்கிறது என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலேவரவர்களே, இந்த அரசைப் பொறுத்த வரையில், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. எந்தக் கடவுளுக்குச் சக்தியில்லே என்பது அவரவர்களின் . மனேநிலேயைப் பொறுத்தது. உறுப்பினர் எந்தக் கடவுளுக்குச் சக்தியிருக்கிறது என்று கருதுகிருரோ அதைத் தாராளமாகக் கும்பிடலாம்.

திரு நா. வீராசாமி : சார், மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது அறநிலேயங்களின் உபரிப் பணத்தில் தொழிற்பேட்டைகள் அமைக்க உத்தேசமில்லே என்று கூறிஞர்கள். நம் நாட்டிலிருந்து பல சிலேகள் வெளி நாடுகளுக்குத் திருட்டுப் போகிறது. அப்படிக் கிராக்கி இருக்கும் தொழிலில் இந்தச் சிலேகள் வடிப்பது போன்ற இந்தத் தொழில்களே நம்முடைய அரசாங்கம் உருவாக்கி அன்னியச் செலாவணி திரட்ட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலேவரவர்களே, அப்படிப்பட்ட சிலே வடிக்கும் தொழிலேத் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் சிறப்பாக கலேஞர்கள் செய்கிருர்கள். ஆனுல் வெளிநாடுகளுக்குத் திருட்டுப் போகும் சிலேகளேப் பொறுத்த வரையில் அவர்கள் இப்பொழுது வடிக்கும் சிலேகளேப் பற்றிக் கவலேப்படுவதில்லே. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்ஞல் வடித்த சிலேகளேத்தான் கடத்த வேண்டுமென்று நினேக்கிருர்கள்.

திரு எம். முத்தையா : சார், நமது எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்குப் பக்கத்தில் ஆலமரத்தில் பிள்ளேயார் சிலே வைத்துப் பூஜிக்கிருர்கள். அது அறநிலேயத்தால் பாதுகாக்கப்படுமா அல்லது அப்புறப்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலேவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குப் பக்கத்தில் இருப்பதால் மாண்பு மிகு உறுப்பினர் அவர்களே பொறுப்பேற்று அதற்கான காரியங்களேச் செய்யலாம்.

திரு ரா. ரா. முனுசாமி : தலேவரவர்களே, நம்முடைய தமிழக சர்க்கார் 100 ஏக்கர், 200 ஏக்கர் என்று வைத்திருக்கும் விவசாயிகளுக்கு உச்சவரம்பை 30 ஏக்காராக இருந்ததை 15 ஏக்கராவாகக் கொண்டுவரப் போகிருர்கள். விவசாயிகள் போராட்டம் நடத்திஞர்கள். ஏன் என்ருல், 1,000, 2,000 ஏக்கர்கள் இருக்கின்றன, அதை யெல்லாம் இவர்கள் உச்ச வரம்பிற்குள் கொண்டு வரவில்லே என்று கோபப்படுகிருர்கள். எனவே 1,000 ஏக்கர், 2,000 ஏக்கர் உள்ள நிலங்களே உச்சவரம்பு வழியில் அரசாங்கம் கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலேவரவர்களே, தற்போதைக்கு அப்படிப்பட்ட உத்தேசம் இல்லே.

திரு கோவை செழியன் : பேரவைத் துணேத் தலேவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சிறபக் கலேயை விரிவு செய்ய முயற்சியெடுப்பதாகக் கூறிஞர்கள். சமீபத்தில் மாடர்ன் ஆர்ட் என்று சிறபக் கலேக் கண்காட்சி ஒன்றைப் பார்த்தேன். அதில் ஆட்டாங்கல்லேயும், குழவிக் கல்லேயும் வைத்து இதுதான் சிற்பம் என்று சொல்கிருர்கள். இதஞல் சிற்பக் கலே வாழ்கிறதா? இம் மாதிரி மாடர்ன் ஆர்ட்டைத் தடை செய்யுமா †

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலேவரவர்களே, மாடர்ன் ஆர்ட்டுக்கும் சிற்பக் கலேக்கும் சம்பந்தமில்லே.

மாண்புமிகு பேரவைத் துணேத் தலேவர் : விஞக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்).

## (2) கவன ஈர்ப்பு.

### செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலேயிலிருந்து வெளிவரும் புகையிஞல் ஏற்படும் விளேவுகள் குறித்து.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : துணேத் தலேவர் அவர்களே ப 1
திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், புலியூரில் உள்ள செட்டிநாடு சிமெண்ட் தொழிற்சாலேயிலிருந்து வெளியேறும் புகையிஞல் அப் பகுதியில் ஐந்து மைல் சுற்றளவில் உள்ள விவசாயப் பயிர்கள், குடிநீர்க் கிணறுகள், பலன் தரும் மரங்கள் ஆகியவைகளில் சிமெண்ட் தூசி படிந்து சுகாதாரக் கேடு பயக்கும் வகையிலும், வருவாய் பாதிக்கப்படும் அளவிலும் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படும் நிலேயில் உள்ளதால் சிமெண்ட் தொழிற் சாலேயிலிருந்து வெளியேறும் புகை அதிகமாக மேல் நோக்கி வெளியில் பரவாத அளவுக்கு மாற்று ஏற்பாடு செய்து அப் பகுதி பொது மக்களின் நலனேப் பாதுகாக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச் சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : துணேத் தலேவர் அவர்களே, இத்தகைய சிமெண்ட் தொழிற்சாலேகளில் வெளி வருகிற புகை, தூசி ஆகியவற்றைப் பெருமளவு குறைப்பதற்கு அந்த சிமெண்ட் தொழிற்சாலே களில் மின்சாரச் சல்லடைகள் ( Electrostatic Precipitators ) பொருத்தப்பட வேண்டுமென்னும் கருத்து அரசாங்கத்தால் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆஞல், அப்படிப்பட்ட மின்சாரச் சல்லடைகள் இந்தியா வில் தயாராகவில்லே. வெளி நாட்டிலிருந்து அவற்றை வரவழைப்பதற்கு பெருமளவுக்கு வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படுகிறது. அதை

மத்திய அரசு ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைச் சுகாதாரத் துறையின் துணை இயக்குநர் பார்வையிட்டு வேறு மாற்று முறைகள் மூலமாகப் பெருமளவுக்குப் புகையையும், தூசி யையும் குறைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அப்படி எடுக் கப்பட்ட மாற்று நடவடிக்கைகளின் மூலமாக அதாவது, ஈரமாக அரைப்பது, சாக்குப் பைகளின் மூலமாக தூசிகளின் அளவைக் குறைப்பது (Other alternative methods like wet grinding, use of sack dust catchers, wet scrubbing, etc.) என்ற முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஈரமாகச் சலித்தல் அல்லது பக்குவப்படுத்துதல், முறைகள் மூலமாக பெருமளவுக்குப் புகை, தூசி குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த முறைகள் புலியூரில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலையில் கையாளப்பட்டு வருகிறது. ஆனாலும், அவர்கள் Electrostatic Precipitator எந்த அளவுக்கு விரைவாகப் பெற வேண்டுமோ அந்த அளவுக்கு விரைவாகப் பெற்று பொருத்த வேண்டுமென்று அரசாங்கத்தின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது அந்தப் பகுதியில் உள்ள எல்லா மரங்களின் இலைகளும் சிமெண்ட் கலராகிவிட்டன. உடனடி யாக இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை யென்றால், அங்குள்ள ஆடு, மாடு கள் மனிதர்கள் சிமெண்ட் கலர் ஆகிவிடக் கூடிய நிலை ஏற்பட்டு விடும். ஆகவே, உடனடியாக உத்திரவிட்டு மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : முன்னால் பதில் சொல்லுகிற போதே சொன்னேன். The company has adopted other alternative methods like wet grinding, use of sack dust catchers, wet scrubbing, etc. These methods provided by the company reduced the cement dust nuisance to a large extent. பெரும் அளவு புகையும் தூசியும் குறைக்கப்பட்டிருக்கிறது. மாற்று முறைகள் மூலம் சிமெண்ட் தூசிகள், புகை வருவது ஓரளவு தடுக்கப்பட்டிருக்கிறது.

The company will however be requested to provide Electrostatic Precipitator when it becomes available.

இந்திய அரசினுடைய வெளிநாட்டுச் செலாவணி இடம் தருகிறபோது எவ்வளவு விரைவாக இந்த மின்சாரச் சல்லடை பொருத்தப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு விரைவாகப் பொருத்தப்பட வேண்டுமென்று தெரிவித்திருக்கிறோம்,



## (3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட. முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு க. இராசாராம் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஐந்தாம் திருத்த சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) ஐந்தாம் திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு, திரு ப. உ. சண்முகம் : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (4) 1972-73-ம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை மீது பொது விவாதம்.

* திரு எ. பாலையா : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் துணை மானி யக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த துணை மானியக் கோரிக்கையில் 8 கோடி 97 லட்சம் ரூபாய்க்குத் துணை மதிப்பீடுகள் மானியக் கோரிக்கைகளாக வருகின்ற நேரத்தில் எங்களுக்கெல்லாம் ஒரு ஐயப்பாடு ஏற்படுகிறது. காரணம்,

[திரு. எ. பாலையா] [1972 ஆகஸ்ட் 22

புதிய பணித் திட்டங்கள் பல இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்
பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும் எங்களுடைய மாவட்டத்தில் பல்
வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு திட்டங்களைப் பற்றி இந்த மாமன்றத்
தின் மூலம் எடுத்துச் சொல்லியும் எந்த விதமான திட்டங்களையும் இந்தப்
புதுப் பணித் திட்டங்களில் சேர்க்காதது எங்களுக்குக் குறையாக இருந்து
கொண்டிருக்கிறது.

நான் இந்த மன்றத்தில் இதற்கு முன்னால் சொன்ன திட்டங்கள் பல.
அவைகளில் மிக முக்கியமான நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றி முன்பே
சொல்லியுள்ளேன். பசுமைப் புரட்சியைப் பற்றி மிகத் தெளிவாக இந்த
நாட்டு மக்களிடையே சிறப்பாகப் பிரச்சாரம் செய்கிற இந்த அரசு
எங்கள் மாவட்டத்தில் வீணாக ஓடிக் கொண்டிருக்கின்ற வள்ளியாற்றுத்
தண்ணீரை, லிப்டின் மூலம் விவசாயத்திற்குப் பயன்படுத்துகிற திட்டத்தை
இந்த அவையின் முன் சமர்ப்பித்திருந்தேன். அந்தத் திட்டத்
தைச் செயல்படுத்துவதற்குக் கூட இந்த அரசு முன்வரவில்லை.
பாசனத் திட்டங்களைப் பரிசீலனை செய்ய துணை மானியக் கோரிக்கையில்
34,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கி இருந்தும் கூட
வள்ளியாற்றுத் தண்ணீரை லிப்ட் வைத்து இரணியல்—முட்டம்
சானலில் விட்டு நீர்ப் பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கவில்லை.
அப்படிச் செய்து கொடுத்தால் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட நிலங்கள்
பாசன வசதி பெறுவதோடு ஏழை விவசாயிகள் பயன் பெறுகிற திட்டமாக
அமையும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்
படுகிறேன்.

பல்லாண்டு காலமாக குளச்சல் மருத்துவ மனை பற்றிப் பேசப்பட்டிருக்
கிறது. அந்த மருத்துவ மனை மிகவும் மோசமான முறையில் செயல்
பட்டு வருகிறது. அங்கு தேவையான மருந்துகள் இல்லாமல் மக்கள்
மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த மருத்துவ மனையை அபிவிருத்தி
செய்து பல படுக்கைகள் கொண்ட பெரிய மருத்துவ மனையாக மாற்றித்
தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு நா. வீராசாமி தலைமை)

பல பழுதடைந்த பாலங்கள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. குறிப்
பாகச் சொல்லப் போனால் இரணியல்-முட்டம் ரோட்டில் வள்ளியாற்றின்
குறுக்கே அமைந்த பாலம் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில்
இருக்கின்றது. வாகனப் போக்குவரத்து செய்ய முடியாத நிலையில்
இருக்கின்ற வள்ளியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பள்ளப்பாலம்
என்ற பாலத்தை மாற்றி புதிய பாலமாக அமைத்துத் தர வேண்டுமென்று
பல தடவை சொல்லியிருக்கிறேன். அதைக் கூட இந்த அரசு பரி
சீலித்து முடிவு எடுக்க முன்வரவில்லை. அரசுப் பொறியாளர்கள் பல
தடவை அந்தப் பாலத்தை அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீடுகள்
அனுப்பியும் அரசு அதை ஏற்று அனுமதி அளிக்காமல் இருப்பது வருந்
தத் தக்க ஒன்றாகும். இதைப் போல பல பாலங்கள் மோசமான நிலைமை
யில் இருந்து கொண்டிருக்கின்றன. குளச்சல் நகரமன்ற எல்லையில் உள்ள
பாம்பூரி வாய்க்காலின் குறுக்கே உள்ள பாலம்



1972 ஆகஸ்ட் 22] [திரு. எ. பாலையா]

வரத்தால் இடிந்துவிடுமோ என்ற அச்சத்தை நகர மக்களுக்கு உண்
டாக்கி இருக்கிறது. அந்தப் பாலத்தையும் உடனடியாகக் கட்டித் தர அரசு
முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு, உணவுக் கட்டுப்பாடு சட்டத்தை மிகவும்
திறமையாகச் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் எங்க
ளுடைய மாவட்டத்தில் பெல்ட் ஏரியா என்று சொல்லக் கூடிய இடங்களில்
அரிசி கொண்டு போகக் கூடாது என்ற தடை இருந்து கொண்டிருக்கிறது.
அங்கு காவல் சாவடிகளை ஏராளமாக அமைத்து காவலைப் பலப்
படுத்தி உணவுப் பண்டங்களைக் கடத்தாமல் இருப்பதற்கு எல்லா விதமான
ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமை.)

ஆனால், குமரி மாவட்டத்தில் இருக்கிற ஏனைய தாலுக்காக்களில் தங்கு
தடையின்றி உணவுப் பண்டங்களைக் கொண்டு செல்லலாம் என்று இருந்
தும் உணவு இலாகா அதிகாரிகளும், பறக்கும் படை என்று சொல்லக்
கூடிய போலீஸ் படையும் சாதாரண ஏழை எளிய மக்கள்
கொண்டு செல்கிற உணவுப் பண்டங்களைப் பறித்துச் செல்கிற காட்சி
இன்றைய தினம் அங்கு நடந்துகொண்டிருக்கிறது. சட்டத்திற்கு விரோத
மாக செயல்படுகிற உணவு இலாகா அதிகாரிகளையும் போலீஸ் படையையும்
அரசாங்கம் கண்காணிப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று இந்த
நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கார் சமீபத்தில் ஒரு உத்தரவு இட்டிருந்தது. பெல்ட் ஏரியா
அல்லாத இடங்களில் 10 படி அரிசி வரை தலைச் சுமட்டில் கொண்டு
செல்லலாம் என்று சொல்லியிருந்தார்கள். அதன்படி நாகர்கோவிலி
லிருந்து அரிசி வாங்கி வருகிற ஏழை எளிய மக்களை ஜீப் கார்களில்
போலீஸை ஏற்றி வழியில் நிறுத்திக் கொண்டு சின்னஞ்சிறுவர்கள் முதல்
பெரியவர்கள் வரையில் தலைச் சுமட்டில் கொண்டு செல்கிற அரிசியை
பறித்து வருகிற நிலை இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது. இப்படி
பறித்துச் செல்கிற அரிசி அரசுக்காவது வந்து சேருகிறதா என்றால் அது
நிச்சயமாக இல்லை என்று நான் சொல்வேன். காரணம், நான்
கண்கூடாகக் கண்ட காட்சி. உணவுக் கட்டுப்பாடு அதிகாரிகள் அந்த
அரிசியை மார்க்கெட்டில் கொண்டு வந்து விற்கிற காட்சி இன்றையதினம்
நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஆகவே அரசாங்கம் இதில் தனிக்
கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்
கொள்கிறேன். மேலும் எங்கள் மாவட்டத்தில் 1,200-க்கும் அதிகமான
ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற நபர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்
கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இன்றையதினம் இருந்து கொண்டி
ருக்கிறது. தக்கலை மாவட்ட கல்வி அதிகாரியின் அலுவலகத்திற்கு
முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்,
வேலை வேண்டுமென்று. அவர்கள் தங்களுடைய போராட்டத்தை அமைதி
யான முறையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசு இதுவரையிலும்

எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. பயிற்சி பெற்று காலா காலத்தில் வேலை கிடைக்காமையால் 30 வயதைக் தாண்டியவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர் ஆசிரியர் வேலை கிடைப்பது முடியாத காரியமாக இருந்து கொண்டி ருக்கிறது. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்று அவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயத்திலிருந்து விலக்களித்து உடனடி யாக வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு படித்துப் பட்டம் பெற்று வேலை இல்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு இளைஞர் அணி என்ற பெயரால் அவர்களை நியமனம் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ. 175 சம்பளம் கொடுப்பதைப்போல் படித்து ஆசிரியர் பயிற்சி பெற்ற வர்களுக்கு, ஆசிரியர் தொழிலை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயாவது சம்பளமாகக் கொடுக்க அரசாங்கம் முன் வருமானால் அவர்களுடைய வாழ்க்கையில் உள்ள ஏழ்மை அகற்றப்படும், துன்பங்கள் துரத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அவர்களுக்கு 100 ரூபாயாவது கொடுப்பதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல் 1971 ஜூலை மாதம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 92 கண்டக்டர்கள் தேர்வு நடைபெற்றது. இதுவரை ஒரு ஆண்டு காலம் கடந்துவிட்டிருந்தபோதிலும் அவர்களுக்கு இதுவரையிலும் நியமன உத்தரவு கொடுக்கப்படவில்லை. அப்படி நியாயமான உத்தரவு என் கொடுக்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுகிறது. மாவட்ட ஜாயின் டைரக்டர் அவர்களைக் கண்டு கேட்டால், தற்போது வேலைவாய்ப்பு இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். பின் எதற்காக அவர்களைத் தேர்வு செய்தீர்கள், பயிற்சி கொடுத்தீர்கள், ஏன் வேலை கிடைக்காமல் இருக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்று கேட்டபோது இப்படித்தான் நடக்கும் என்று சொல்கிறார்கள். இந்த 92 பேர்களில் 30 வயதைத் தாண்டியவர்கள் காலாகாலத்தில் நியமன உத்தரவு கிடைக்காமல் ஏராளமான பேர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான நேரத்தில் வேலை கிடைக்காத காரணத்தினால் வயது வரம்பைத் தாண்டி விட்ட நிலையில் அவர்கள் இன்று இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு இந்த விவகாரத்தை மிக முக்கியமாகக் கவனித்து தேர்வு செய்யப்பட்ட கண்டக்டர் களுக்கு உடனடியாக வேலை கொடுப்பதற்குத் தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாய இலாகாவி லிருந்து திருப்பதிசாரத்தில் விவசாயப் பயிற்சிப் பள்ளிக்கு 20 மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததில் பெரிய ஊழல் நடந்திருக்கிறது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். விவசாயப் பள்ளிக்குத் தேர்வு செய்கிற மாவட்ட விவசாய அதிகாரி அவர்கள் மாணவர்களிடமிருந்து 500 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரையில் லஞ்சம் பெற்றுக் கொண்டு அந்த 20 பேர்களை நியமித்திருக்கிற ஒரு செய்தி எங்கள் மாவட்டத்தில் இன்றையதினம் ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்தச் சபைமுன்பு தெரிவித்துக்கொள்கிறேன்.



அதேபோல் மாவட்ட விவசாய அதிகாரி அவர்களுடைய ஆதரவுடன் புழுப் பூச்சி மருந்துகள், பொறுக்குவிதைகள் இவைகள் எல்லாம் ப்ளாக் மார்க்கட்டில் விற்கப்படுகின்றன. ஏழை விவசாயிகள் தங்களுடைய தேவைக்காகப் புழுப்பூச்சி மருந்துகள், பொறுக்குவிதைகள் இவைகளை விவசாய டிப்போக்களில் வாங்கச் சென்றால் டிப்போக்களில் அவை கிடைப்பதில்லை. ஆனால் பக்கத்திலுள்ள கடைகளில் அதிக விலைக்கு அந்த மருந்துகளும், பொறுக்கு விதைகளும் வாங்கக் கூடிய ஒரு நிலை இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the Hon. Member is making an allegation of a certain crime that a certain officer has received illegal gratification. He has knowledge of the crime. Having knowledge of the crime, it is his duty to report it to the police and take action. If he does not do so, he should say what the reason for it is. It means he is hiding or sheltering somebody. It becomes his crime.

திரு. எ. பாலையா : அரசாங்கம் விசாரணை செய்வதற்குத் தயாரா யிருந்தால் நான் சொன்ன குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்குத் தயாரா யிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the point raised by me is not whether the Government are prepared to enquire into it or not. The Hon. Member is aware of a crime, he has knowledge of a crime. He knows who is the criminal. Knowing the crime and the criminal, it is his duty to report it to the police and take action. Otherwise, he is himself sheltering the criminal.

THIRU R. PONNAPPA NADAR : Sir, the Hon. Minister is raising a point of law. So far as the matter is concerned, I think it is not incumbent on any person to set the law in motion or to give information to the police. Failure to give information is not at all affected. I am sure that many things are brought to our knowledge and through this House that information is passed on to the Government. If Government wants to take appropriate action, they may please take action, instead of saying the Hon. Member will take responsibility for furnishing the information in the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுப்பிய பிரச்னை ஒழுங்குப் பிரச்னை அளவில் வருமா வராதா என்றாலும் இன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு பெரிய பொறுப்பு இருக்கிறது. உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்ததைச் சொல்ல

வேண்டுமா வேண்டாமா என்பதில் இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக் கலாம். அந்த அபிப்பிராயங்கள் மீது தீர்ப்புக் கூறுவது இங்கு அவசிய மில்லை என்றாலும் இங்கு ஒரு அதிகாரி தவறுதல் செய்திருக்கிறார் அல்லது லஞ்ச ஊழல் நடந்திருக்கிறது என்று பொதுப்படையாகச் சொல்லக் கூடாது. அவர்கள் போலீஸில் சொல்லியிருக்க வேண்டும். தனக்குத் தெரியும் என்று சொல்லியிருக்கும்போது, சட்டமன்றத்தின் கவனத் திற்குக் கொண்டுவரும்போது, சட்டமன்றத்தின் மூலம் பொது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரும்போது, அவற்றைப் பற்றிக் குறிப்பிடும் போது ஆதாரத்தோடு விளக்குவது எல்லோருக்கும் நல்லது. தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத அதிகாரிகள் மீது அபாண்டமாகச் சொல்லி விடக் கூடாது. அதற்கு ஆதாரம் இருந்தால் சொல்லட்டும். இல்லா விட்டால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எ. பாலையா : அரசாங்கம் விசாரணைக்கு ஏற்பாடு செய்வதாக இருந்தால் நிச்சயமாக.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசாங்கமும் நீங்களும் போட்டி போடுகிற இடமல்ல, இது சட்டமன்றம். சட்டமன்றத்தில் யார்மீது குற்றம் சாட்டினாலும் அந்தப் பொறுப்புகளை அவர்கள் ஏற்கவேண்டும் என்ற மரபும் உரிமைகளும் இருக்கின்றன. நீங்கள், தெரியும் என்று சொல்கிறீர்கள், அப்படித் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சொல்கிறீர்கள். ஆகவே, அதைப் பற்றிச் சொல்வதில் சிரமம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த மன்றத்தில் உறுப்பினர்களின் உரிமைகள் காப்பாற்றப்படும் நிலை இருக்கிறது என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே அதைப் பற்றி நீங்கள் சொல்லாமல் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒன்று, சொல்லவேண்டும், அப்படிச் சொல்வதற்கு உங்களுக்கு இஷ்ட மில்லை என்று சொன்னால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அதிகாரி அப்படிப்பட்ட ஒரு தவறு செய்தா என்று கருதுவார்களானால், விசாரணை செய்துதான் தண்டிக்க வேண்டு மென்று இல்லை. இப்போதே சொல்வார்களானால் உடனடியாக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயங்காது. ஆனால் அந்த அதிகாரி அப்படிச் செய்யவில்லை என்று நிரூபிக்கப்படுமானால், அதற்கான பொறுப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதிகாரிகள் தவறு செய்தால் அரசாங்கம்தான் பொறுப்பு என்று சொல் கிறார்கள். அதிகாரிகள் தவறு செய்தால் கண்டிப்பதற்கும், தண்டிப்பதற்கும் அரசாங்கத்திற்கு பொறுப்பு இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் அந்த அதிகாரியைப் பற்றித் தைரியமாகச் சொல்லலாம்.

திரு. எ. பாலையா : நான் பேசுகிறபோது தெளிவாக மாவட்ட விவசாய அதிகாரி என்று சொன்னேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாவட்ட அதிகாரி என்ன குற்றம் செய்தார் என்று சொல்ல வேண்டும். எனக்கு இருக்கும் கவலையெல்லாம் அந்த அதிகாரி தண்டிக்கப்பட வேண்டுமென்பதில்லை. அபாண்டமாக அதி காரிகள் மீது சட்டமன்றத்தில் குற்றங்களைச் சுமத்தினால், அவற்றை நிரூபிப் பதற்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். யார் வேண்டுமானாலும் இந்த மன்றத்தில் அதிகாரிகள் மீது குற்றங்கள் சுமத்தி விடலாம். அதைப் பற்றி ஆதாரம் கொடுத்தால், அதைப்பற்றி விசாரிப்பதற்கு முடியும். ஆதாரம் இல்லாமல் கூறுவார்களானால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வது நல்லது. மாவட்ட விவசாய அதிகாரி அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்று சொல்வதுதான் பொறுப்பான வாதமாகும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறும்போது தெள்ளத்தெளிவாக அந்த அதி காரியின் பெயரையும் தந்து, அவர் என்ன செய்தார் என்ற விளக்கத் தையும் கூறினார்கள். அதற்கு மேல் அவர் என்ன செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எழவில்லை. அந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்வதாகக் கூறியபடியால் அதைப் பற்றி விவாதிப்பது நல்லதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் ஃபேக்டை வித் ஹோல்ட் பண்ணுகிறார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியதுதான் சரி. அவருக்கு விஷயம் தெரிந்திருக்கிறது. குற்றம் நடந்து இருக்கிறது என்று சொன்னார்கள். என்ன குற்றம் செய்தார்கள் என்ற உண்மையை அவர்கள் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய உரிமைகளைக் கூட பாதிக்கும்படி அவர்கள் அதை மறைக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவர்கள் சொல் கிறார்கள், சொல்லவில்லை என்பது அல்ல பிரச்னை. அரசாங்க அதிகாரி களுக்கும் பொறுப்பு இருக்கிறது.

இந்த மாமன்றத்தில் வந்து அதிகாரிகளின் மேல் குற்றங்கள் சொல்லி விடலாம். பொதுவாக யார் பெயரை வேண்டுமானாலும் சொல்லிவிடலாம். கலெக்டர் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லி அவர் பெயரைக் கூடச் சொல்லிவிடலாம். ஐ.ஜி., டி.ஐ.ஜி. இப்படிச் செய்தார் என்று சொல்லி விடுவது அவர்கள் பேரில் குற்றங்கள் சாட்டுவது என்பதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அப்படிக் குற்றச்சாட்டுகள் சொல்கிறபோது அவற்றிற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். உறுப்பினர்கள் தங்களுடைய உரிமைகளை நிலை நாட்டிக் கொள்வதற்காக அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொல்ல வேண்டும். ஒரு அதிகாரியின் விலாசத்தைக் கொடுப்பது, அவர்மீது குற்றச் சாட்டுகள் கூறுவது என்பது வெளியில் இருக்கும் அந்த அதிகாரி தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முடியாது. அந்த அதிகாரி தவறு செய்தார்கள் என்று சொன்னால், அவைகளை விளக்கமாகவும், தெளிவாகவும் அவைகளுக்கான ஆதாரங்களுடனும் சொல்ல வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேண்டுமா வேண்டாமா என்பதில் இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக
கலாம். அந்த அபிப்பிராயங்கள் மீது தீர்ப்புக் கூறுவது இங்கு அவசிய
மில்லை என்றாலும் இங்கு ஒரு அதிகாரி கையூறுதல் செய்திருக்கிறார்
அல்லது லஞ்சு ஊழல் நடந்திருக்கிறது என்று பொதுப்படையாகச் சொல்லக்
கூடாது. அவர்கள் போலீஸில் சொல்லியிருக்க வேண்டும். தனக்குத்
தெரியும் என்று சொல்லியிருக்கும்போது, சட்டமன்றத்தின் கவனத்
திற்குக் கொண்டுவரும்போது, சட்டமன்றத்தின் மூலம் பொது மக்களின்
கவனத்திற்குக் கொண்டு வரும்போது, அவற்றைப் பற்றிக் குறிப்பிடும்
போது ஆதாரத்தோடு விளக்குவது எல்லோருக்கும் நல்லது. தங்களைப்
பாதுகாத்துக் கொள்ள முடியாத அதிகாரிகள் மீது அபாண்டமாகச் சொல்லி
விடக் கூடாது. அதற்கு ஆதாரம் இருந்தால் சொல்லட்டும். இல்லா
விட்டால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எ. பாலையா : அரசாங்கம் விசாரணைக்கு ஏற்பாடு செய்வதாக
இருந்தால் நிச்சயமாக........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசாங்கமும் நீங்களும்
போட்டி போடுகிற இடமல்ல, இது சட்டமன்றம். சட்டமன்றத்தில் யார்மீது
குற்றம் சாட்டினாலும் அந்தப் பொறுப்புகளை அவர்கள் ஏற்கவேண்டும்
என்ற மரபும் உரிமைகளும் இருக்கின்றன. நீங்கள், தெரியும் என்று
சொல்கிறீர்கள், அப்படித் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சொல்கிறீர்கள்.
ஆகவே, அதைப் பற்றிச் சொல்வதில் சிரமம் இருப்பதாகத் தெரியவில்லை.
இந்த மன்றத்தில் உறுப்பினர்களின் உரிமைகள் காப்பாற்றப்படும் நிலை
இருக்கிறது என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே
அதைப் பற்றி நீங்கள் சொல்லாமல் இருக்க வேண்டிய அவசியமில்லை.
ஒன்று, சொல்லவேண்டும், அப்படிச் சொல்வதற்கு உங்களுக்கு இஷ்ட
மில்லை என்று சொன்னால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்
என்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் அந்த அதிகாரி அப்படிப்பட்ட ஒரு தவறு செய்தார்
என்று கருதுவார்களானால், விசாரணை செய்துதான் தண்டிக்க வேண்டு
மென்று இல்லை. இப்போதே சொல்வார்களானால் உடனடியாக
அரசாங்கம் நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயங்காது. ஆனால் அந்த
அதிகாரி அப்படிச் செய்யவில்லை என்று நிரூபிக்கப்படுமானால், அதற்கான
பொறுப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.
அதிகாரிகள் தவறு செய்தால் அரசாங்கம்தான் பொறுப்பு என்று சொல்
கிறார்கள். அதிகாரிகள் தவறு செய்தால் கண்டிப்பதற்கும், தண்டிப்பதற்கும்
அரசாங்கத்திற்கு பொறுப்பு இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் அந்த
அதிகாரியைப் பற்றித் தைரியமாகச் சொல்லலாம்.

திரு. எ. பாலையா : நான் பேசுகிறபோது தெளிவாக மாவட்ட
விவசாய அதிகாரி என்று சொன்னேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாவட்ட அதிகாரி என்ன குற்றம் செய்தார் என்று சொல்ல வேண்டும். எனக்கு இருக்கும் கவலையெல்லாம் அந்த அதிகாரி தண்டிக்கப்பட வேண்டுமென்பதில்லை. அபாண்டமாக அதிகாரிகள் மீது சட்டமன்றத்தில் குற்றங்களைச் சுமத்தினால், அவற்றை நிரூபிப்பதற்கு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். யார் வேண்டுமானாலும் இந்த மன்றத்தில் அதிகாரிகள் மீது குற்றங்கள் சுமத்தி விடலாம். அதைப் பற்றி ஆதாரம் கொடுத்தால், அதைப்பற்றி விசாரிப்பதற்கு முடியும். ஆதாரம் இல்லாமல் கூறுவார்களானால் அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வது நல்லது. மாவட்ட விவசாய அதிகாரி அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்று சொல்வதுதான் பொறுப்பான வாதமாகும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறும்போது தெள்ளத்தெளிவாக அந்த அதிகாரியின் பெயரையும் தந்து, அவர் என்ன செய்தார் என்ற விளக்கத்தையும் கூறினார்கள். அதற்கு மேல் அவர் என்ன செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எழவில்லை. அந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக் கொள்வதாகக் கூறியபடியால் அதைப் பற்றி விவாதிப்பது நல்லதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் ஃபேக்டை வித் ஹோல்ட் பண்ணுகிறார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியதுதான் சரி. அவருக்கு விஷயம் தெரிந்திருக்கிறது. குற்றம் நடந்து இருக்கிறது என்று சொன்னார்கள். என்ன குற்றம் செய்தார்கள் என்ற உண்மையை அவர்கள் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உரிமைகளைக் கூட பாதிக்கும்படி அவர்கள் அதை மறைக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? அவர்கள் சொல்கிறார்கள், சொல்லவில்லை என்பது அல்ல பிரச்னை. அரசாங்க அதிகாரிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது.

இந்த மாமன்றத்தில் வந்து அதிகாரிகளின் மேல் குற்றங்கள் சொல்லி விடலாம். பொதுவாக யார் பெயரை வேண்டுமானாலும் சொல்லிவிடலாம். கலெக்டர் அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்லி அவர் பெயரைக் கூடச் சொல்லிவிடலாம். ஐ.ஜி., டி.ஐ.ஜி. இப்படிச் செய்தார் என்று சொல்லி விடுவது அவர்கள் பேரில் குற்றங்கள் சாட்டுவது என்பதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அப்படிக் குற்றச்சாட்டுகள் சொல்கிறபோது அவற்றிற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். உறுப்பினர்கள் தங்களுடைய உரிமைகளை நிலை நாட்டிக் கொள்வதற்காக அவர்கள் என்ன செய்தார்கள் என்று சொல்ல வேண்டும். ஒரு அதிகாரியின் விலாசத்தைக் கொடுப்பது, அவர்மீது குற்றச் சாட்டுகள் கூறுவது என்பது வெளியில் இருக்கும் அந்த அதிகாரி தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முடியாது. அந்த அதிகாரி தவறு செய்தார்கள் என்று சொன்னால், அவைகளை விளக்கமாகவும், தெளிவாகவும் அவைகளுக்கான ஆதாரங்களுடனும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மதிப்பிற்குரிய பாலையா அவர்கள் பேசுகிறபோது அங்கே 12 பேர் தேர்ந்து எடுத்ததாகவும், அது சம்பந்தமாக ஊழல் இருக்கிறது என்ற புகாரையும் கூறியிருக்கிறார்கள். அந்தத் தேர்வு ஒழுங்காக இல்லை என்ற காரணத்தை அவர்கள் கூறி இருக்கிறார்கள். அது அல்லாமல், அதைவிடக் கூடுதலான விவரங்கள் இருந்தால் அவர்கள் கொடுப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் காங்கிரஸ் கட்சித் தலைவரின் அந்த வாதத்தை ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் சொன்ன அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் பாலையா அவர்கள் அந்த விவரங்களை எழுதி என்னிடத்தில் கொடுத்து விடுவார்களானால், நான் அவற்றை விசாரிக்கிறேன். அப்படி விசாரிக்கப்படுகிறபோது அந்த விவரங்கள் சரியல்ல, தவறான தகவலை உறுப்பினர் கொடுத்து இருக்கிறார்கள் என்றால், அதற்கான பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்தினை ஏற்றுக்கொண்டு மேற்கொண்டு பேசுங்கள்.

திரு. ஏ. பாலையா: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நில வள வங்கியின் மூலம் விவசாயிகளுக்குக் கிணறுகள் வெட்டுவதற்கும், பம்பு செட்டுகள் வைப்பதற்கும் ஏராளமாகக் கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கடன் வாங்கியவர்கள் கிணறு வெட்டி, பம்ப் செட்டுகள் எல்லாம் வைத்து விட்ட பிறகு, மின்சார இணைப்புக் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சுமார் 3 ஆண்டுகள் நான்கு ஆண்டுகள் வரை காத்திருந்தும் கூட இது வரையில் அவர்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. மேலும், விவசாய வங்கியிலிருந்து கடன் வாங்கியவர்கள் 2 தவணைகள், 3 தவணைகள் வரை பணம் கட்டிய பிறகும் மின்சார இணைப்பு கிடைக்காத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி இருந்தால் கடன் வாங்கிய ஏழை விவசாயி எந்த வகையில் அந்தப் பணத்தை திருப்பிக் கட்ட முடியும் என்பதை அரசு கவனத்தில்கொள்ள வேண்டும். ஆகவே, நில வள வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்காகக் கடன் கொடுக்கப்பட்டு, அதன் மூலம் கிணறு வெட்டி பம்பு செட் வைத்தவர்களுக்காவது உடனடியாக மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு 16 பேர்கள் இந்த விவாதத்தில் பங்குகொள்ள இருக்கிறார்கள். அதிலே தலைவர்கள் இருக்கிறார்கள். அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டும். அதற்குப் பிறகு வாக்கெடுப்பு எடுத்தாக வேண்டும்.



இவ்வளவு பேர் விவாதத்தில் பங்குகொள்ள இருக்கிற காரணத்தால் 5 நிமிடங்கள் உறுப்பினர்கள் பேசி, மாண்புமிகு கட்சித் தலைவர்கள் 10—12 நிமிடங்கள் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் கூட குறைவான நேரத்தை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள், 1 மணிக்கு வாக்கெடுப்பு நடக்க வேண்டும். எனவே 5 நிமிடங்களில் ஒவ்வொரு உறுப்பினரும் பேசி முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. தோப்பூர் திருவேங்கடம்: சட்டப் பேரவைத் தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு நான் முற்படுகிறேன்.

இந்தத் துணைமானியக் கோரிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நல்ல அம்சங்களை யெல்லாம் நமக்கு அறிவித்து இருக்கிறார்கள். அரசு ஊழியர்களின் அக விலைப் படியை உயர்த்திக் கொடுத்து, அதன் மூலம் அரசாங்க ஊழியர்களை உற்சாகப் படுத்தும் திட்டத்தை இந்தத் துணை மானியக் கோரிக்கையில் அறிமுகப்படுத்தி யிருப்பது வரவேற்கத்தக்கது. இது வரையில் 300-க்குக் குறைவான ஊதியம் பெற்று வந்தவர்கள் 15 ரூபாய் அகவிலைப் படி என்று பெற்று வந்ததை ரூ. 25 என்று உயர்த்திக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அதே போல் ரூ. 300-க்கு மேல் சம்பளம் வாங்குபவர்கள் 30 ரூபாய் அகவிலைப் படி என்று பெற்று வந்ததை ரூ. 40 என்று உயர்த்தியிருக்கிறார்கள். இதை அரசாங்க ஊழியர்கள் அனைவரும் வரவேற்று, பாராட்டுவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஓய்வூதியம் பெற்று வரும் ஆசிரியர்கள், அரசாங்கத் துறையைச் சாராத ஆசிரியர்கள் ஆகியோரின் ஓய்வூதியத்தை ரூ. 40 ஆக உயர்த்தியிருப்பதை அனைவரும் நிச்சயமாக வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

1,500-க்கு மேற்கொண்டுள்ள மக்கள் தொகையுள்ள கிராமச் சாலைகளை— இணைப்புச் சாலைகளைப் பராமரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்தத் துணை மானியக் கோரிக்கையில் வழிவகை செய்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. இதன் மூலம் வேலை வாய்ப்பு அதிகரிக்கும்.

இன்றைக்கு இளைஞர் அணியை ஏற்படுத்தி பல பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். இதன் மூலம் இளைஞர் அணியில் இதுவரையில் வேலை வாய்ப்பு கிடைக்காதவர்களுக்கு இனிமேல் வேலை கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இளைஞர் அணியில் சேர்ந்துள்ளவர்கள் சிலர் அரசுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்கள் கிராமப்புறங்களில் இருக்கும் மக்களுக்கு நல்ல வழியில் அறிவுரைகள், முதியோர் கல்வி ஆகியவற்றைப் புகட்ட வேண்டும். பணிகள் புரிய வேண்டும். அரசோடு துணை நின்று பணிபுரிய வேண்டும். தவறான பிரசாரம் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு எங்களைப் போன்றவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அப்படிப்பட்ட சிலர் தாங்களாகவே விலகிச் சென்றிருக்கிறார்கள். இளைஞர் அணியில்

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மதிப்பிற்குரிய பாலேயா அவர்கள்
பேசுகிறபோது அங்கே 12 பேர் தேர்ந்து எடுத்ததாகவும், அது சம்பந்தமாக
ஊழல் இருக்கிறது என்ற புகாரையும் கூறியிருக்கிறார்கள். அந்தத் தேர்வு
ஒழுங்காக இல்லை என்ற காரணத்தைத் அவர்கள் கூறி இருக்கிறார்கள். அது
அல்லாமல், அதைவிடக் கூடுதலான விவரங்கள் இருந்தால் அவர்கள்
கொடுப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் காங்கிரஸ் கட்சித்
தலைவரின் அந்த வாதத்தை ஏற்றுக்கொள்கிறேன். அவர்கள் சொன்ன
அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் பாலேயா அவர்கள் அந்த
விவரங்களை எழுதி என்னிடத்தில் கொடுத்து விடுவார்களானால், நான்
அவற்றை விசாரிக்கிறேன். அப்படி விசாரிக்கப்படுகிறபோது அந்த
விவரங்கள் சரியல்ல, தவறான தகவலை உறுப்பினர் கொடுத்து இருக்
கிறார்கள் என்றால், அதற்கான பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள
வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
கூறிய கருத்தினை ஏற்றுக்கொண்டு மேற்கொண்டு பேசுங்கள்.

திரு. ஏ. பாலேயா : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை
நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நில வள வங்கியின் மூலம் விவசாயிகளுக்குக் கிணறுகள்
வெட்டுவதற்கும், பம்பு செட்டுகள் வைப்பதற்கும் ஏராளமாகக் கடன்கள்
கொடுக்கப்பட்டிருக்கின்றன. கடன் வாங்கியவர்கள் கிணறு வெட்டி, பம்ப்
செட்டுகள் எல்லாம் வைத்து விட்ட பிறகு, மின்சார இணைப்புக் கிடைக்காமல்
கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சுமார் 3 ஆண்டுகள் நான்கு
ஆண்டுகள் வரை காத்திருந்தும் கூட இது வரையில் அவர்களுக்கு
மின்சார இணைப்பு கொடுக்கப்படவில்லை. மேலும், விவசாய வங்கியிட
மிருந்து கடன் வாங்கியவர்கள் 2 தவணைகள், 3 தவணைகள் வரை பணம்
கட்டிய பிறகும் மின்சார இணைப்பு கிடைக்காத நிலையில் இருந்து கொண்
டிருக்கிறார்கள். இப்படி இருந்தால் கடன் வாங்கிய ஏழை விவசாயி
எந்த வகையில் அந்தப் பணத்தை திருப்பிக் கட்ட முடியும் என்பதை
அரசு கவனத்தில்கொள்ள வேண்டும். ஆகவே, நில வள வங்கியின்
மூலம் விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்காகக் கடன் கொடுக்கப்பட்டு,
அதன் மூலம் கிணறு வெட்டி பம்பு செட் வைத்தவர்களுக்காவது
உடனடியாக மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 16 பேர்கள் இந்த
விவாதத்தில் பங்குகொள்ள இருக்கிறார்கள். அதிலே தலைவர்கள்
இருக்கிறார்கள். அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்க
வேண்டும். அதற்குப் பிறகு வாக்கெடுப்பு எடுத்தாக வேண்டும்.



இவ்வளவு பேர் விவாதத்தில் பங்குகொள்ள இருக்கிற காரணத்தால்
5 நிமிடங்கள் உறுப்பினர்கள் பேசி, மாண்புமிகு கட்சித் தலைவர்கள்
10—12 நிமிடங்கள் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் கூட குறைவான
நேரத்தை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள், 1
மணிக்கு வாக்கெடுப்பு நடக்க வேண்டும். எனவே 5 நிமிடங்களில்
ஒவ்வொரு உறுப்பினரும் பேசி முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

*திரு. தோப்பூர் திருவேங்கடம் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே,
1972-73-ம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கைகள் மீது என்
னுடைய சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு நான் முற்படுகிறேன்.

இந்தத் துணைமானியக் கோரிக்கையில் தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்கள் பல்வேறு நல்ல அம்சங்களை யெல்லாம் நமக்கு அறிவித்து
இருக்கிறார்கள். அரசு ஊழியர்களின் அக விலைப் படியை உயர்த்திக்
கொடுத்து, அதன் மூலம் அரசாங்க ஊழியர்களை உற்சாகப் படுத்தும்
திட்டத்தை இந்தத் துணை மானியக் கோரிக்கையில் அறிமுகப்படுத்தி
யிருப்பது வரவேற்கத்தக்கது. இது வரையில் 300-க்குக் குறைவான
ஊதியம் பெற்று வந்தவர்கள் 15 ரூபாய் அகவிலைப் படி என்று பெற்று
வந்ததை ரூ. 25 என்று உயர்த்திக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள்.
அதே போல் ரூ. 300-க்கு மேல் சம்பளம் வாங்குபவர்கள் 30 ரூபாய்
அகவிலைப் படி என்று பெற்று வந்ததை ரூ. 40 என்று உயர்த்தியிருக்
கிறார்கள். இதை அரசாங்க ஊழியர்கள் அனைவரும் வரவேற்று,
பாராட்டுவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஓய்வூதியம்
பெற்று வரும் ஆசிரியர்கள், அரசாங்கத் துறையைச் சாராத ஆசிரியர்
கள் ஆகியோரின் ஓய்வூதியத்தை ரூ. 40 ஆக உயர்த்தியிருப்பதை அனை
வரும் நிச்சயமாக வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

1,500-க்கு மேற்கொண்டுள்ள மக்கள் தொகையுள்ள கிராமச் சாலை
களை—இணைப்புச் சாலைகளைப் பராமரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளும் வகையில்
இந்தத் துணை மானியக் கோரிக்கையில் வழிவகை செய்திருப்பது
உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. இதன் மூலம் வேலை வாய்ப்பு
அதிகரிக்கும்.

இன்றைக்கு இளைஞர் அணியை ஏற்படுத்தி பல பேருக்கு வேலை வாய்ப்பு
அளிக்கும் திட்டத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். இதன் மூலம் இளைஞர்
அணியில் இதுவரையில் வேலை வாய்ப்பு கிடைக்காதவர்களுக்கு இனிமேல்
வேலை கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இளைஞர் அணியில்
சேர்ந்துள்ளவர்கள் சிலர் அரசுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டு
வருகிறார்கள். அவர்கள் கிராமப்புறங்களில் இருக்கும் மக்களுக்கு நல்ல
வழியில் அறிவுரைகள், முதியோர் கல்வி ஆகியவற்றைப் புகட்ட
வேண்டும். பணிகள் புரிய வேண்டும். அரசோடு துணை நின்று பணிபுரிய
வேண்டும். தவறான பிரசாரம் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு என்
களைப் போன்றவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அப்படிப்
பட்ட சிலர் தாங்களாகவே விலகிச் சென்றிருக்கிறார்கள். இளைஞர் அணியில்

இருப்பவர்கள் அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அரசாங்
கத்திற்கு உதவியாக இருக்க வேண்டும், தவருன பிரசாரத்தில் ஈடு
படக் கூடாது என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கூறிக் கொள்ள
விரும்புகிறேன். அப்படிப்பட்டவர்களை அரசு கண்காணிக்க வேண்டும்.

பகல் 1.00 நம்முடைய தமிழகத்தில்தான் தனியாக ஒரு திட்டக் குழு அமைக்கப்
பட்டு, இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்கள் எல்லாம் நம்முடைய
மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டக் குழுவின் அமைப்பைப் பின்
பற்றக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அது தமிழகத்தின் தனிச்
சாதனை என்று குறிப்பிடப்பட வேண்டும். அந்த முறையில் நம்முடைய
தமிழகத்தில் மேலும் அந்தத் திட்டக் குழுவை விருத்தி செய்து ஒவ்
வொரு மாவட்ட அளவிலே ஒரு திட்டக் குழு அமைக்க திட்டம் தீட்டுவதற்
கான ஒரு நிலையை உருவாக்கியிருப்பது தமிழகத்திற்கு இருக்கிற தனியான
ஒரு சிறப்பு என்று நான் நிச்சயமாகக் கூற விரும்புகிறேன்.

தமிழக முதல்வர் அவர்களின் சென்ற பிறந்த நாள் பிச்சைக்காரர்
களுக்கு மறு வாழ்வு இல்லங்கள் அமைப்பதற்கான ஒரு நல்ல நாளாக
உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டு அவர்களுடைய பிறந்த நாளைக்
கொண்டாட கண் ஒளி இழந்தவர்களுக்கு ஒளி வழங்குகின்ற நாளாக
உருவாக்கப்பட்டது.

வள்ளுவர் குறிப்பிட்டார் :

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்று. ஒருவன் தோன்றினால் புகழோடு தோன்ற வேண்டும். இல்லை
யென்றால், தோன்றாமல் இருக்க வேண்டும் என்று பொருள் சொல்வார்
கள். இன்னொரு பொருள் யார் எந்தத் துறையில் தோன்றினாலும்,
புகழோடு சிறந்து விளங்குகின்ற துறையைத் தேர்ந்தெடுத்துத் தோன்ற
வேண்டும் என்றும், இந்தப் பொருள்தான் சிறந்த பொருள் என்று
எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். அந்த முறையில் தனிப்பட்டவர்க
ளாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்
சரி, எந்தத் துறையில் சிறந்து விளங்க வேண்டுமோ அந்தத் துறையில்
திட்டம் தீட்டி செயல்படுத்த வேண்டும். அந்த முறையில் தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் சிறந்து விளங்குகின்றார். சென்ற ஆண்டு பிறந்த
நாளன்று பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு இல்லங்களை அமைத்தார்.
இந்த ஆண்டு கண் ஒளி இழந்தவர்களுக்கு ஒளி வழங்குகின்ற அரிய
திட்டத்தைத் தீட்டி, அந்தத் திட்டம் தமிழகத்தில் எல்லோராலும் வர
வேற்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இந்தத்
திட்டத்தை உருவாக்கியவுடன் மாற்றுக் கட்சியினர்கள் சிலர் ஏதோ
மூக்குக் கண்ணாடி வியாபாரிகளுக்கு ஒரு வாய்ப்பை அமைத்துக் கொடுப்ப
தற்கான திட்டம் என்று கூடக் கேலி பேசினார்கள். அதை யெல்லாம்
பொருட்படுத்தாமல் தமிழக அரசு அந்தத் திட்டத்தைச் சீரோடும், சிறப்
போடும் இன்றைக்கு எல்லா மாவட்டங்களிலும் நிறைவேற்றுவதை அவர்
களே பார்த்து பாராட்டக்கூடிய நிலை நிச்சயம் வரும் என்பதை நான்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன்,



தொழிலாளர்களுக்கு குடியிருப்பு
அதைப் போலவே வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு ... ரூ. 15 லட்சம் இந்தத்
நிலங்களை உடைமையாக்கத் திட்டம் தீட்டி அதற்கான ரூ. 15 லட்சம் இந்தத்
துணை மானியத்தில் இடம் பெற்றிருக்கிறது என்பது வரவேற்கத் தக்கது
ஒன்றாகும். மத்திய நிலவள வங்கி ஏற்கனவே கடன் வழங்கி வருகிறது.
மேலும் அரசு ஒரு கோடி ரூபாய்க்கு கடன் பத்திரத்தின் மூலம் கொடுத்து,
துரிதமாக மத்திய நிலவள வங்கி விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்
கான ஒரு திட்டம் நல்ல முறையில் செயல்படுவதற்கு அரசாங்கம் வழி
வகை செய்திருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது உள்ளபடியே நாம்
பாராட்ட வேண்டும். இதைப் போல் மற்றும் பல்வேறு நல்ல திட்டங்களை
யெல்லாம் இந்தத் துணை மானியக் கோரிக்கை மூலம் நம்முடைய
தமிழகத்தில் தமிழக அரசு நிறைவேற்றியிருக்கிறது. அதைப் போலவே
உணவுப் பொருள் வழங்கும் கழகம் என்பதை உருவாக்கி ஏற்கனவே
திட்டம் அறிவித்திருக்கிறது. அதற்காக இன்றைக்கு ரூ. 25 லட்சத்திற்கு
அந்த உணவுப் பொருள் வழங்கும் கழகத்திற்கு தமிழக அரசு
வழங்கியிருக்கிறது. இப்படிப் பல்வேறு நல்ல திட்டங்களை யெல்லாம்
துணை மானியக் கோரிக்கையின் மூலம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்
அவர்கள் அறிவித்ததை எல்லோரும் நிச்சயம் பாராட்டுவார்கள் என்பதில்
எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அதைப் போலவே இன்றைக்கு வேலை
யில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு சிறப்பு வேலை வாய்ப்புத்
திட்டங்கள் மூலம் ரூ. 438 லட்சம் ஒதுக்கி, அதன் மூலம் கிராமப் பொறி
யாளர்களுக்கும், மேற்பார்வைப் பணியாளர்களுக்கும் வேலை வாய்ப்பு
அளிக்கக் கூடிய அரிய திட்டம் இதிலே இணைக்கப்பட்டிருப்பதை நான்
வரவேற்றுப் பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை
மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விழை
கிறேன்.

பொதுவாக இந்த மானியத்தில் நாம் பார்க்கிறபோது நம்முடைய
முதல் அமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்களைச் சுமார் ரூ. 8 அல்லது
9 கோடி அளவுக்குத் தீட்டி அவைகளைச் செயல்படுத்துவதற்கு வழி வகுத்
திருப்பதை நான் மனமார வரவேற்கிறேன். நம்முடைய நாட்டில் வேலை
வாய்ப்புக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை
இந்த மானியத்தில் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக நாம் பார்க்கும்
பொழுது, இன்றைக்கு இருக்கிற முக்கியமான பிரச்னை வேலையில்லாத
வர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதை எல்லோரும் அறிந்திருக்
கிறார்கள். சாதாரணமாக ஒன்றை நாம் பார்க்கிறோம். இந்த மானியத்
தில் சுமார் 15,000 புதிய ஆட்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கிறது. இந்த வேலை வாய்ப்பு எந்தத் துறையில் ஏற்
படுத்தப்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்தால், கிராமங்களுக்கு லிங்க்
ரோடுகள், தொடர்பு சாலைகள் அமைக்க வேண்டும், அதற்கு முக்கியமான
இடம் கொடுக்கக் கூடிய அளவிலே 15,000 பேர்களையும் அந்தத் துறை
யில் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேறு
துறைகளிலே, அதாவது எகனாமிக் எஃபெக்ட்ஸ் என்று சொல்வார்கள்,

Any public expenditure must bring about its economic effects. So far as this is concerned, no doubt it will provide employment to additional persons who have hitherto been unemployed. But how this public expenditure is going to have its other effects? For example, this additional income will entail additional demand on the consumer goods. So far as consumer goods are concerned, we are already having strains and there has been a great crisis in the field of consumer goods. Therefore, I would very much like that the fiscal policy should be so contrived as to bring about an overall effect on the production level. Then only we will solve the problem of unemployment in the country. Particularly at this juncture, I would make a fervent appeal to the people who are guiding the destinies of the labour community in the State, to see that their guidance and stewardship do not affect more opportunities to provide employment to the people who had hitherto been unemployed. The demand for labour is derived demand. The more and more you claim or clamour for more benefits, you will certainly close the doors to employ people who have not been employed so far. For example, if you just go on giving more benefits to the people who have already been employed, the additional resources or finances would be utilised only to provide more benefits to those people and not for starting new avenues of production which will in return provide employment to the people who have not been hitherto employed. Therefore, I submit that you should see that more employment is given to the people who have not been employed so far.

So far as the Supplementary Budget is concerned, I find that a substantial amount hasbeen allocated for laying link-roads,increasing pensions and increasing dearness allowance and this will have its effect on the price level. I think that will not have any favourable effect on the economy of our State. That is my humble suggestion.

Then, Sir, I would request the Government to collect some statistical data about what is called 'overtime work' in factories. Find out in which of the factories and fields, the labour is working over time. Instead of giving overtime work to the people already working, you just compel the management or entrepreneurs that they could employ people who have not been employed so far. That will lessen the present unemployment crisis to some exten



I would submit that to that extent if the rules or law could be amended, it would help the economy.

With regard to provision made for 'Houses for Destitutes' that is intended to be provided in North Arcot I want to say this. Any public expenditure or public provision should not be concentrated in a particular locality. There should be a decentralised activity. Then only the effects of public expenditure would be felt in all localities equitably. There should be justice and equality in public expenditure. Therefore when you have 'houses for destitutes' it is usual that you provide it in an area which has hitherto been neglected, North Arcot for instance. After all Government is not a business concern. It cannot operate on profit and loss and motive. It should keep the welfare of the people at heart.

The Hon. Chief Minister has rightly given the priorities to the items which have been visualised in his budgetary speech. In that light I welcome the measure of Government providing employment to 15,000 youths who have not been employed before. Providing employment to 15,000 people is not an ordinary task. It is a Herculian task. (Mr. Speaker sounded the gong). The Chief Minister has done it and I welcome it. I also welcome the measure of giving more dearness allowance to various classes of people who are not able to have their avocations in the normal way. That is the concept of Welfare State and I wholeheartedly support this measure.

I congratulate the Hon. Chief Minister for having devoted his attention towards the disabled persons in the community thereby upholding the concept of Welfare State. Thank you, very much.

*திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1972–73-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீட்டு அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இங்கே சமர்ப்பிக்கப்பட்டு அதன்மீது நானும் பேசுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்த தலைவருக்கு எனது நன்றியைக் கூறி, என்னுடைய கருத்துக்களை மிகச் சுருக்கமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த முதல் துணை மதிப்பீட்டில் எட்டு கோடியே தொண்ணூற்றேழு இலட்சம் ரூபாயில் மிகச் சிறப்பாக இந்த மதிப்பீட்டை அமைத்திருக்கிறார்கள். 300-க்கு குறைவாக சம்பளம் பெறுகிறவர்களுக்கு 15 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக பஞ்சப்படியை உயர்த்தி இருப்பதும், 300-க்கு

அதிகமாக பெறுகிறவர்களுக்கு 30 ரூபாயிலிருந்து 40 ரூபாயாக உயர்த்தி இருப்பதும் உள்ளபடியே பாராட்டத் தக்க ஒன்றாகும். இந்தக் கூடுதல் செலவு செய்வதற்காக ஆண்டுதோறும் ஆறு கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். இங்கே நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வந்தபொழுது கூட இந்த அரசு எதுவுமே செய்ய வில்லை என்று இங்கே குறை சொன்னார்கள். அவர்கள் எல்லாம் இந்த துணை மதிப்பீட்டை அதன்கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓய்வூதியம் 40 ரூபாயாக உயர்த்தி இருப்பதை இதுவரை ஆசிரியர்கள் மட்டும் பெற்றுவந்ததை ஆசிரியர்கள் அல்லாதவர்களும், நகராட்சி மன்றங்களில் பணி புரிபவர்களும்கூட பெறுவதை இந்த துணை மதிப்பீடு ஏற்படுத்தி தந்திருக்கிறது. 1960-ம் ஆண்டு ஜூலை முதல் நாளுக்கு முன்னால் ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் கூட, இதிலிருந்து ஓய்வூதியம் 5 ரூபாய் பெறுகிறார்கள் என்றால், இது பாராட்டத்தக்க ஒன்றாகும். வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 438 இலட்சம் ரூபாயை ஒதுக்கி இருப்பது மிக பாராட்டத்தக்க ஒன்றாகும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே கிராமப்புறங்களிலே சாலைகள் எல்லாம் சீராக இல்லாததால், கிராமப்புறங்களிலே இருந்து நகர்ப்புறங்களுக்குச் செல்லும் சாலைகளை த்தார் சாலைகளாக அமைக்க 3 கோடி ரூபாய் செலவில் கிராம சீரமைப்புசாலைத் திட்டமும் இந்த மதிப்பீட்டில் அறிமுகம் செய்திருப்பது பாராட்டத்தக்கது. அதைப்போல் 1,500 மக்களுக்கு மேலேயுள்ள கிராமப் பகுதிகளுக்கெல்லாம் தார் சாலைகளை அமைக்கும் ஒரு சிறப்பான திட்டத்தையும் இதில் அறிமுகம் செய்து வைத்திருக்கிறார்கள். 15,000 சாதாரணமானவர்கள், பொறியாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள் போன்றவர்களுக்கும் இந்த வேலை வாய்ப்புத் திட்டத்தில் வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

இளைஞர் அணிக்கு கூடுதலாக 1,450 ஆண்களையும் 150 பெண்களையும் இதிலே சேர்த்திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதைப் போலவே மத்திய அரசு போடும் திட்டத்திற்காக 4½ கோடி ரூபாயை நம்முடைய அரசு ஒதுக்கி இருந்தது என்றாலும்கூட, அவர்களிடமிருந்து நாம் பெறுவது 2 கோடி ரூபாய்தான் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய தானைத் தலைவரும், முதல்வருமான கலைஞர் அவர்கள் பிறந்த நாள் அன்று ஆரம்பிக்கப்பட்ட விழி இழந்தவர்களுக் கெல்லாம் பார்வை தருகிற வகையில் அதற்காக 5 பிரிவுகளை தமிழகத்தில் ஏற்படுத்தி 71.5 இலட்சம் ரூபாயை அதற்காக ஒதுக்கி இருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

இதுவரை மத்திய அரசின் உதவியோடு 3 வயது சிறுவர்களுக்கு மட்டுமே சத்துணவு தருகிற நிலைமை இருந்தது. ஆனால் இப்பொழுது



6 வயது வரை அந்த சத்துணவுத் திட்டத்தின் வரம்பு உயர்த்தப்பட்டி ருக்கிறது. மேலும் கர்ப்பவதிகளுக்கும் இந்த உதவியைச் செய்வதற்கு அரசு முன்வந்திருப்பது உள்ளபடியே பாராட்டத்தக்கதாகும். அதைப் போலவே 83 இலட்சம் ரூபாய் செலவில் 2,10,000 சிறுவர்களுக்கும், 40,000 தாய்மார்களுக்கும் இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்தி இருப்பது உள்ளபடியே பாராட்டத்தக்க ஒன்றாகும்.

திருநெல்வேலி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மீனள மேம்பாட்டுத் திட்டத்தை 78·7 இலட்சம் ரூபாயில் இப்பொழுது அறிமுகம் செய்திருப்பது மாற்று கட்சிக்காரர்களும் பாராட்டுவார்கள் என்று எண்ணுகிறேன்.

அங்கங்கே இருக்கிற விவசாயிகள் அந்தந்த இடத்திலேயே இருந்து விவசாயப் பணிகளைச் செய்ய உதவிகரமாகவும், அவர்களைக் குடியிருப்பு மனைகளிலே இருந்து வெளியேற்றக் கூடாது என்பதற்காக குடி யிருப்பு மனைகளை அவர்களுக்கு பெற்று தருவதற்காக 15.1 இலட்சம் ரூபாயை நம்முடைய அரசு இதிலே ஒதுக்கி இருப்பது முக்கியமான ஒன்றாகும்.

நில வளத்தை பெருக்குகின்ற வகையில் நம்முடைய நிலவள வங்கிகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு கொண்டிருக்கின்றன என்பதை அகில உலகத்திலே இருந்து வருகின்ற அறிவாளிகள் அடிக்கடி பாராட்டு கிறார்கள். அதற்காக ஒரு கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறது என்றால், இந்தத் துணை மதிப்பீடு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போலவே, உணவு தானியங்களை பதுக்குவதை தடுப்பதற்கும், இங்கே வாழ்கின்ற 4½ கோடி மக்களின் அன்றாட உணவுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கும் கழகத்தை ஏற்படுத்தி, அதற்காக 25 இலட்சம் ரூபாயை அதன் பங்கு மூலதனத்திற் கென ஒதுக்கி இருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அதைப்போல் தமிழ்நாடு திரைப்பட அரங்குக் கழகத்திற்குப் பங்கு மூலதனமாக 10 இலட்சம் ரூபாயை வழங்கி இருப்பது, சிறு தொழில்களை மேம்பாடு செய்வதற்கும், கலைத் துறையிலே இந்த அரசுக்குள்ள அக்கறையையும் காட்டுகிறது என்று சொல்லி, இந்த துணை மதிப்பீட்டின் மீது பேச வாய்ப்பளித்ததற்காக என் நன்றியை தெரிவித்து அமர்வதற்கு முன்பு என்னுடைய தொகுதியின் குறைகளையும் சிறிது எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நன்னிலத்தை பொருத்தவரை அது எவ்வளவு பின்தங்கிய பகுதி என்பதை நான் அடிக்கடி இந்தச் சபையிலே சுட்டிக் காட்டியிருக்கிறேன். பேர்தான் பெத்த பேரே தவிர,—அதைத் தாலுக்கா தலைநகரம் என்று சொல்லுகிறார்கள்—அங்கே முன்னேற்றம் என்பதே கிடையாது. அங்கே

இருக்கிற மருத்துவ மனை விரிவாக பலவற்றை கொண்டதாக இருக்கிறதா என்றால், இல்லை என்று தான் சொல்லுவேன். அது தாலுக்காவின் அந்தஸ்துக்கு ஏற்ற வகையிலே இல்லை என்று தான் சொல்லுவேன்.

அதுமட்டுமல்ல. நான் இங்கே பலதடவைகள் பல குறைகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அண்மையில்கூட அங்கே பெரியதம்பி என்பவரின் ஒரு பெரிய வைக்கோல் போர்—2,000 கட்டு இருக்கும் என்று சொல்லப் பட்டது, எரிந்து சாம்பலாகிவிட்டது. அங்கே ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன் இல்லை. திருவாரூரில் இருந்துதான் வர வேண்டும். வைக்கோல் போரில் தீப்பிடிக்கத் தொடங்கியதும் திருவாரூர் ஃபயர் ஸ்டேஷனுக்குத் தெரிவிக்கப் பட்டது. அங்கிருந்து அவர்கள் வந்து சேருவதற்குள் மொத்தமும் எரிந்து சாம்பலாகிவிட்டது. எனவே, உடனடியாக, அங்கே ஒரு ஃபயர் சர்வீஸ் ஸ்டேஷன் அமைக்க வேண்டும்.

அடுத்து, தாலுகா தலைநகரான நன்னிலத்தில் ஒரு நீதிமன்றமும் கிடையாது. கிரிமினல் கோர்ட்டும் இல்லை; சிவில் கோர்ட்டும் இல்லை. பலமுறை இந்த மன்றத்தில் இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். இப்படிப் பட்டக் குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்காக அந்தப் பகுதி மக்கள் "தாயில்லாப் பிள்ளை" போல் உள்ள இடத்தில் இருந்து என்னைச் சட்ட மன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். நம்முடைய ஓராண்டுத் திட்டத்தைப்பற்றி கலைஞர் அவர்கள் பேசுகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு ஆவன செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆகவே, என்னையும் கொஞ்சம் கவனத்தில் வைத்து, அந்தத் திட்டத்தை கலைஞர் அவர்கள் செயல் படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மேலும் நான் அடிக்கடி குறிப்பிட்டிருக்கின்ற கருத்துக்கள் எல்லாம் செயல்வடிவம் பெறும் என்ற நம்பிக்கையுடன், கலைஞரவர்கள் கொடுத் திருக்கின்ற துணை மானியத்தை ஆதரித்து, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

*THIRU B. VENKATASWAMY : Sir, I thank the Hon. Speaker for giving me this opportunity to speak a few words at the time of discussion on Supplementary Statement of Expenditure for 1972–73 presented by the Hon. Chief Minister.

Regarding Milk Supply Scheme, there are no extensive schemes in the State so as to extend the schemes for areas where milk schemes could be extended easily. For example, there is Dairy Development Board in our State recently constituted. I request the Hon. Minister to extend this to the Dharmapuri district, especially to Hosur taluk where the Exotic cattle could grow easily.



Regarding Animal Husbandry, there is one progeny scheme sanctioned. I have given a cut motion and I request the Hon Minister and theGovernment to include some other progeny schemes also. My Cut Motion is 'to discuss about the need to introduce Red Danes and Freisan Bulls in the progeny testing units at the district Livestock Farm, Hosur under the Coordinate Cattle Breeding Programme for production of bulls in addition to Red Sindhi breed'. These breeds come up very well and give good milk yield. I therefore request that Red Danes and Freisan bulls be introduced at Hosur Cattle Farm. They give 10 to 15 litres per day. I request that these may be introduced and the 'White Revolution' may be created in our State.

Coming to irrigation, our district is being neglected. Even in the recently conducted Techno-Economic Survey by the Indian Institute of Public Opinion, it has been stated that Dharmapuri should grow twice to fill up the gap. It shows that the Survey itself shows that it is a backward area and special attention should be given to that district.

There is the Kalavaripalli Anicut. It has not been constructed for a very long time. There are so many other small anicuts like Kallay, Lugguhalla, Mukkattu Madurou and Doddahalla. If we construct them definitely we can bring up this area like anything.

Regarding Nutrition Programme, it is being implemented in areas like Madras and other Cities. It should be extended to rural areas where the economic deficiency is noted.

Regarding Education, apprentice teachers have been appointed and Government have ordered to stop this. We are not in a position to do much in the matter. We must be allowed to have so many new posts.

Regarding Community Development Programme, I have given a Cut Motion 'to discuss about the need to introduce pilot intensive rural employment project in Dharmapuri district, especially at Thally and Hosur Blocks.' This kind of Pilot Projects should be opened in backward areas like Dharmapuri and Ramanathapuram.

[Thiru B. Venkataswamy] [1972 ஆகஸ்ட் 22

I have given a cut Motion ' to discuss about the necessity to lay roads in Hosur and Denkanikota taluks especially from Anchetty to Pennagaram via Natrapalayam, Anchetty to Kottaiyur via Thaggatty ; Javalagiri to Anchetty via Shoolakunta '.Balathotanpall to padi ganalay in Dharmapuri district. According to the supplementary estimate, if there are 1,500 people, every such village will have a road. So I request the Hon. Minister concerned to take the roads mentioned in my Cut Motion and give them priority.

A Cigarette Factory should be opened in Dharmapuri. It is a long pending, demand. I do not know what has happened to it. I request that the Cigarette Factory may be opened in Hosur. There are so many possibilities for building up so many industries in our district.

Regarding drought conditions, recently the Hon. Revenue Minister went round our district. There is scarcity for drinking water also. I have also made a representation to the Hon. Chief Minister. We have to implement drought relief measurs immediately. The entire district is being affected by drought. So I request the Hon. Minister and the Government to take immediate action to give relief to these areas.

Finally I request that the Techno-Economic Survey conducted by the Indian Institute of Public Opinion may be given serious consideration and action taken on it. Thank you Sir.

*திரு. த. சோணையா : கனம் சட்டப்பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற 1972-73-ம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீட்டை என் உளப்பூர்வமாக வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில் சொல்லப்பட்டிருப்பதில், குறிப்பாகத் தமிழகத்திலே இருக்கின்ற கிராமப்புறங்களுக்கு மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக நம்முடைய கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மூன்று கோடி ரூபாயை வைத்து,இதன் மூலம் 1,500 மக்களுக்குக் குறையாமல் இருக்கின்ற கிராமங்களுக்கு தார் சாலை போடுவது என்ற நல்ல திட்டத்தை கிராம மக்கள் முழுமனதோடு வரவேற்பார்கள். இப்படிப்பட்ட 1,500 மக்கள் உள்ள கிராமங்களுக்குத் தார் சாலை போடுகின்றபோது, இன்னொன்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அதாவது, பஞ்சாயத்துக்கள், அல்லது பஞ்சாயத்து யூனியன்களில் ஹைவேஸ் இணைப்புச் சாலைகள் போடப்பட்டிருந்தாலும், இடையிலே கிராமங்களுக்குச்



1972 ஆகஸ்ட் 22] [திரு த. சோணையா]

செல்கின்ற பாதையில் சிறிது தூரம் தார் போடாமல் விடப்பட்டிருக்கும். அப்படி சில இடங்களில் விடப்பட்டிருக்கிறது. ஆகவே நாம் கிராம இணைப்புச் சாலைகள் போடும்போது தார் ரோட்டில் இருந்து இணைந்து செல்கிற அந்த சிறிது தூர சாலைக்கும் தார் போடப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படிச் செய்தால் அது மிகவும் சிறந்ததாக இருக்கும். அதை கிராமப்புறத்து மக்கள் வரவேற்பார்கள்.

அடுத்தபடியாக இளைஞர் அணிக்கு 1,450 ஆண்களும், 150 பெண்களும் இடம்பெறும் திட்டம் இருக்கிறது. இந்த சிறந்த திட்டத்தை தமிழக மக்கள் முழு மனதோடு, ஆவலோடு வரவேற்கிறார்கள்.

அடுத்தபடியாக, இங்கே தமிழகத்தில்தான் சிறப்பான ஒரு திட்டக்குழு அமைக்கப்பட்டு, அதன் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு திட்டக் குழுவினை அமைத்து, மாவட்டங்களின் தேவைகளை அறிந்து திட்டமிட்டு செயல்படுத்துகின்ற சீரிய திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டக் குழுவில் தனி நபர்கள் நடத்துகின்ற தொழில் முற்பகல் 11-30
கூடங்களில், அங்கே ஆட்கள் தேவைப்படுகிறபோது, தேவையான ஆட்களைப் பொறுக்கி எடுக்கிற நேரத்தில் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேஞ் மூலம் எடுத்தால் நாட்டுக்கு நல்லதாகும். தனி நபர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கும், சில பல சலுகைகளை எதிர்பார்த்தும் நியமிக்கிற நிலை ஏற்பட்டு விடக்கூடாது. ஆகவேதான் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேஞ் மூலமே ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழுநோய் பிச்சைக்காரர்களது மறுவாழ்வுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தமிழக மக்களால் ஆவலோடு வரவேற்று பாராட்டப்பெறுகின்ற திட்டமாகும். மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு தம்முடைய பிறந்தநாள் அன்றைக்கு பிச்சைக்காரர்களது மறுவாழ்வுத் திட்டத்தைத் துவக்கினார்கள் என்றால் இந்த ஆண்டு பிறந்தநாள் விழாவின்போது கண்ணொளி வழங்குகின்ற திட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள். இதை தமிழகத்தில் இருக்கிற மக்கள் மிகமிகப் பாராட்டுகிறார்கள். இந்தத் திட்டத்தை மாற்றுக்கட்சியில் உள்ளவர்களும் வரவேற்று இருக்கிறார்கள். அவற்றை நானும் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியைப்பற்றி ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பது நாடறிந்த உண்மை. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பிறகுதான் சில விசேஷ சலுகைகள் மூலம் நல்ல பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. தென்பாண்டி நாட்டில்—தேவர் பிறந்த மண்ணில்—அன்றிருந்த அரசு பலப்பல காரியங்களையும் செய்யவில்லை. அந்த மக்கள் வஞ்சிக்கப்பட்டார்கள். அதனை இந்த நாடு அறியும். கலைஞரின் அரசு வந்த பிறகுதான் அந்தக் குறைபாடுகள் நீக்கப்பட்டு நல்ல பல காரியங்கள் நடைபெறுகின்றன. அதன் காரணமாக தென்பாண்டி நாட்டு மக்கள் கலைஞர் அரசை வரவேற்கிறார்கள்.

அங்கே எனது தொகுதியான மானாமதுரைத் தொகுதியில் திருபுவனம் கால்வாய் இருக்கிறது. அந்தக் கால்வாய்க்கு அடுத்த கடையில் கழுகர்கடை என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊருக்குச் செல்கிறவர்கள் அந்தக் கால்வாயில் கழுத்தளவு தண்ணீரைக் கடந்து, நடந்தே செல்ல வேண்டிய நிலையில் உள்ளது. அதற்கு ஒரு பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று பொதுப்பணித்துறையைக் கேட்டால் அவர்கள் ஸ்தல ஸ்தாபனத்துறையைக் கேட்கச் சொல்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனத்துறையைக் கேட்டால் பொதுப்பணித்துறைதான் செய்யவேண்டும் என்கிறார்கள். வெள்ளைக்காரன் காலத்திலும் அந்த ஊருக்குப் போகிறவர்கள் நீந்தி நீந்தியே சென்றார்கள். காங்கிரஸ்காரர்கள் காலத்திலும் நீந்தி நீந்தியே சென்றார்கள். கழக அரசின் ஆட்சிக் காலத்திலும் நீந்தி நீந்தியே சென்று கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி நான் பலதடவை சொல்லியிருக்கிறேன். இன்றைக்குத்தான் மாண்புமிகு கலைஞர் அவர்கள் அவையில் இருக்கும்போது சொல்கிற வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. தீராத அந்த ஒரு பிரச்சினையை மாண்புமிகு கலைஞர் அவர்கள் தீர்த்து வைக்கவேண்டுமென்று விரும்பிக் கேட்டு இதோடு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதலாவது துணை மானியக் கோரிக்கைப்பற்றிப் பேசும்போது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

முதலாவதாக எனது மாவட்டத்தின் சில பிரச்சினைகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்த உரையில் அதுபற்றி ஏதேனும் சொல்லப்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தேன். இல்லை. முதலில் கோவை மாவட்டம் பாசன வசதியும், குடிதண்ணீர் வசதியும் குறைந்த மாவட்டம். கோவை, பல்லடம், அவிநாசி தாலுக்காக்களில் தண்ணீர்பஞ்சம் நீங்க வேண்டுமென்றால் பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற யோசனையை அரசு ஏற்றுக்கொண்டது. கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்துகிறபோது ஏற்பட்ட சிக்கலை—இரு ராஜ்ய முதல் மந்திரிகளும் கலந்து பேசி தீர்த்துக்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அதுபோல இதுவரை முதல் மந்திரிகள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரியவில்லை. அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாத காரணத்தினால் இந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் பாசன வசதியின்றி அல்லல்படுகிறார்கள். பருவ மழை தவறி கிணறுகளில் நீர் இடையாது. சாகுபடியை விட்டுவிட்டு வேறு ஏதேனும் தொழிலுக்குப் போகவேண்டிய நிலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால் கனேடிய நிபுணர் ஒருவர் அந்தப் பகுதியை ஆராய்ந்த பிறகு—சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பகுதியில் சாகுபடியே செய்ய முடியாது போகும் என்கிற கருத்தினைச் சொன்னார். அந்த நிலை வந்து விடாது இருக்கவேண்டுமென்றால் இரு ராஜ்ய முதல் அமைச்சர்களும் சந்தித்துப்பேசி—உடனடியாக நடைமுறைக்கு பாண்டியாறு புன்னம்புழா திட்டம் வருவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து குடிநீர்த் திட்டத்திற்கு நெல்லித்துறை திட்டத்தைக் கொண்டு வர அரசு ஒப்புக்கொண்டது. அதற்கு உலக வங்கியில் இருந்து கடனைக் கேட்ட பணம் வரவில்லை என்று அந்த திட்டம் அப்படியே இருக்கிறது. மற்ற திட்டங்களுக்கு எல்லாம் அரசே அடையாளபூர்வமாக கொஞ்சம் பணம் ஒதுக்கி பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்திருப்பதுபோல இந்தத் திட்டத்திற்கும் அதுபோல மாநில அரசே ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி ஆரம்ப வேலைகளைத் துவக்கியிருக்கலாம். அந்தப் பகுதி மக்களிடத்திலும் தங்களுக்குக் குடிநீர் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். ஆனால் அந்த நெல்லித்துறை திட்டம் பற்றி பட்ஜெட்டிலும் காணப்படவில்லை. இந்தத் துணை மானிய மதிப்பீட்டிலும் வரவில்லை. அடுத்த ஆண்டிற்குள்ளாகவாவது இந்தத் திட்டத்தை அரசு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பஞ்சாலைகளில் ஒரு மாதம் நடந்த வேலை நிறுத்தத்தினால் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி பங்கஜா, சாரதா, காளீஸ்வரா இன்னும் மூடப்பட்ட மில்கள் 3 மாத காலத்திற்குள் திறக்கப்படும் என்ற உறுதியினைத் தந்தார்கள். அதன்படி திறக்கப்படவில்லை. உடனடியாக அந்த ஆலைகள் திறக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். அதோடு மூடப்பட்டிருப்பதனால் பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு அரசு உடனடியாக நிவாரணத் தொகை அளிக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு அந்த ஒப்பந்தத்தில் கன்சிலியேஷன் கமிட்டி போடுவதாக இருந்தது. தொழிலாளர்கள் தங்களுடைய பிரதிநிதிகளின் பெயர்களைக் கொடுத்து பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் இதுவரை கன்சிலியேஷன் கமிட்டி போடப்படவில்லை. உடனடியாக அதை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, துணை மானியக் கோரிக்கையில் ஒரு திட்டம் 3 கோடி செலவில் பிரதான சாலைகளுடன் இணைப்புச் சாலைகள் போடுவதாகும். கிராமப்புறங்களில் ரோடுகள் போடுவது, வீடுகள் கட்டுவது மிகமிக அவசிய மாகும். கிராமங்களில் வேலையில்லாது இருக்கிற வாலிபர்களும் அதிகம். ஆகவே கிராம வாலிபர்களுக்கு வேலை கொடுக்கிற வகையிலும், கிராமப் புற மக்களில் இரு முக்கியத் தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையிலும், சாலைகள் போடுவது, வீடுகள் கட்டுவது ஆகியவற்றை ஒரு காம்ப்ரிஹென்சிவ் ஸ்கீமாக அமைத்து கிராமப்பணிப்படை என்பதாக கிராம வாலிபர்களையே கொண்டு அமைத்து செயல்படச் செய்யலாம்.

அடுத்ததாக, மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இருபத்தைந்து ஆண்டுகளாக ஹரிஜன மக்கள், பிற்பட்ட, பின்தங்கிய சமூகத்து மக்கள் அடைந்துள்ள வளர்ச்சியை எல்லாம் கடந்த ஒரு ஆண்டிற்குள் இது வெகுவாக பாதிக்கச் செய்துவிட்டது. மதுவிலக்கு ரத்தானது ரத்தானது தான். இந்த ஆண்டு 40 கோடிக்கு கடைகள் ஏலம் போயிருக்கின்றன. இதில் பெரும்பகுதி பணத்தை கிராம ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கு ஒதுக்கினால் மதுவிலக்கினால் பெரிதும் பாதிக்கப்

பட்டிருக்கிற ஹரிஜன, பின்தங்கிய மக்களுக்கு கிராமங்களிலும், நகராட்சிகளிலும் சில பல வசதிகளையாவது செய்துகொடுக்க முடியும். அவர்களுடைய காலனிகளை நல்லமுறையில் அமைத்து கவனித்துக்கொள்ள முடியும். ஆகவே மதுவிலக்கினால் வருகிற வருமானத்தில் பெரும் பகுதியை ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கு ஒதுக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, போலீசைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். இதைப் பற்றி ஏற்கனவே நான் இங்கு குறிப்பிட்டிருக்கிறேன். போலீசாருடைய நடவடிக்கைகள் வரவர ஆளுகின்ற கட்சியினுடைய சொல்லுக்கு ஏற்ப நடப்பது என்கின்ற முறையில் இருப்பதை நான் பார்க்கிறேன். ஆளும் கட்சியினர் சொன்னால் வழக்குத் தொடுப்பது, அவர்கள் சொன்னால் வழக்குகளைக் கைவிட்டு விடுவது என்ற காரியங்கள் படிப்படியாக வளர்ந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் பார்க்கிறேன்.

அண்மையிலே, கோவை நகரசபைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்து, நேற்றையதினம் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் ஓட்டுக்கு வருவதற்கு முன்னாலே அங்கேயிருக்கிற நகரமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத் தொல்லை கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக, ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு நகரசபை உறுப்பினர், என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர். அவருடைய தகப்பனாரை நான்கு நாட்களுக்கு முன்னாலே சர்க்யூட் ஹவுசுக்கு அழைத்து ஏதோ சொல்லி ஆசை காட்டினார்கள். அதற்கு அவர் இணங்கவில்லை. நேற்றைய முன் தினம் போலீசார் அவருடைய வீட்டிற்குச் சென்று அந்த உறுப்பினரைத் தேடியிருக்கிறார்கள். அதே போல இன்னொரு உறுப்பினரைத் தேடியிருக்கிறார்கள். நான் போலீஸ் அதிகாரிகளைச் சந்தித்து தகவல் கேட்க எண்ணினேன். ஆனால் அவர்கள் கிடைக்கவில்லை. விவரம் கொடுக்கவில்லை. நல்ல வேளையாக, அந்த உறுப்பினர் வீட்டிலே இருக்கவில்லை. இந்த மாதிரி தொல்லைகள் வரும் என்று முன்னமே தெரிந்திருந்த காரணத்தாலே வேறிடம் சென்று மறைந்துவிட்டார். அப்படியில்லையென்றால், அவர் என்ன ஆகியிருப்பார் என்று நாம் யோசிக்க வேண்டும். ஆகவே, போலீசார் ஆளுகின்ற கட்சிக்குத் துணையாக இருப்பதை அனுமதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அண்மையில் கோவையில் நடந்த இந்தச் சம்பவத்தைப் பற்றித் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்.

இந்தத் தமிழ் நாட்டிலே இருக்கிற $4\frac{1}{4}$ கோடி மக்களையும் போலீசார் ஒரே மாதிரி நடத்துவார்கள். சட்டத்தின் முன்னாலே எல்லா மக்களும் ஒரே மாதிரி நடத்தப்படுவார்கள். அரசின் கண்ணிலே எல்லோரும் ஒன்றாகத் தென்படுவார்கள், நடத்தப்படுவார்கள். குற்றம் யார் புரிந்தாலும் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுவார்கள். குற்றம் புரியாதவர்கள் குற்றமற்றவர்களாகக் கருதப்படுவார்கள் என்ற நிலை ஏற்பட வேண்டும்.



மேட்டூரிலுள்ள மதராஸ் அலுமினியம் தொழிற்சாலையிலே பல நாட்களாக ஒரு விவகாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பல தொழிலாளர்கள் வேலைக்கு அனுமதிக்கப்படாமல் வெளியே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அங்கு ஸ்தலத்திலே இருக்கிற போலீஸார் நிர்வாகத்திற்குத் துணையாகப் பல காரியங்களைச் செய்கிறார்கள். உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்வேன். ஜூலை மாதம் விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாக, பந்த் நடந்தபொழுது, பலரைப் போலீசார் கைது செய்தார்கள். மற்ற இடங்களில் மற்றவர்கள் 4-ந் தேதி கைது செய்யப்பட்டார்கள். ஆனால் மேட்டூரில் இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே கைது செய்தார்கள். இரண்டு பெண்களை வீட்டிற்கு வந்து நள்ளிரவில் கைது செய்து அழைத்துப் போனார்கள். ஏனெனில், 3-ம் தேதி அவ்வாலையிலே வேலை நிறுத்தம் நடைபெறும் என்று நிர்வாகம் சொன்னது. அதனால் பந்தினைச் சாக்கிட்டு, தொழிற்சங்க ஊழியர்களையும், பெண்கள் உட்பட கைது செய்கின்ற காரியத்தினை நான் பார்த்தேன். அதே போல், மே மாதம் 25-ம் தேதி என்று நினைக்கிறேன், சாதாரணமாகத் தொழிற்சாலையிலே வேலை நிறுத்தம் செய்தால், சஸ்பெண்ட் செய்யப்பட்டு, வெளியே போக மறுத்தால், போலீசார் அவர்களைக் கைது செய்வார்கள். ஆனால் இங்கே என்ன நடந்திருக்கிறது ? தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யவில்லை, சஸ்பெண்ட் செய்யப்படவில்லை. ஆனால், அவர்களைப் போலீசார் தொழிற்சாலைக்கு உள்ளே சென்று கைது செய்த பிறகு, அடுத்த நாள் காலை 4 மணிக்கு அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக போலீஸ் வானில் வைத்து ஆர்டர் கொடுக்கப்படுகிறது. ஆகவே, வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்னாலே, சஸ்பெண்ட் செய்யப்படுவதற்கு முன்னாலே கைது செய்வதென்பது ஸ்தலத்திலே இருக்கிற போலீசார் நிர்வாகத்திற்கு எல்லை மீறி துணை புரிகிறார்கள் என்பதைத் தான் காட்டுகிறது. ஆகவே, இம்மாதிரி காரியங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீடு கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, இந்த மதிப்பீட்டுத் தொகையான ரூ. 8 கோடியே 97 லட்சத்தில் கிட்டத்தட்ட பாதிக்கு மேல் இன்றைக்கு நாட்டிலே முக்கியமான பிரச்னையாக இருந்துவருகிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக ஒதுக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டத் தகுந்த ஒன்றாகும்.

அது மட்டுமல்ல, இந்தச் சபையிலே இருக்கிற எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள் கூட, அதிலே குறைபாடுகளைக் காணவில்லை. இந்த இனத்தின் கீழ் செலவிடப்பட்டிருக்கிற தொகை தவறாகச் செலவிடப்பட்டிருக்கிறது இது தேவையில்லையென்று சுட்டிக்காட்டுகின்ற அளவுக்கு எந்தக் குறையும் இல்லாத அளவுக்கு மிகத் தெளிவாக மிக நிதானமாக, நல்ல முறையிலே இதைத் தயாரித்திருக்கிறார்கள்.

குறிப்பாக, இதிலே செலவிடுகிற தொகைகள் அத்தனையும் ஏழைகள், குடிசையிலே இருக்கிறவர்கள், விவசாயிகள், சாதாரணமாக வேலை

யில்லாத மக்கள், இப்படிப்பட்ட மக்களுக்கு உதவி செய்கின்ற வகையிலே தான் இந்தத் தொகை அத்தனையும் செலவிடப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும்.

குறிப்பாக, வேலைத் துயரைப் போக்குவதற்கு 1,500-ம் அதற்கு மேலும் மக்கள் தொகை இருக்கக்கூடிய கிராமங்களில் சாலை அமைப்ப தற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, பல இடங்களில் நீண்ட நாட்களுக்கு முன்னால் தயாரித்த சென்ஸஸையே, எஸ்டிமேட் தயா ரிக்க பேசிஸ்ஸாக வைத்திருக்கிறார்கள். இப்பொழுது ரெகுலர் டி. இ. ஆக இருப்பவர்களிடத்திலே இந்தக் கணக்குகள் கொடுக்கப்பட்டால், சரியான கணக்குகளைப் பெறமுடியும். ஏ.இ. ஸ்பெஷல் போன்றவர்களைக் கேட்டால் சில கிராமங்கள் விடுபடக் கூடும். ஆகவே, அதையும் கவனிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வேலைகளுக்காக மேஸ்திரிகளாக பலபேரை நியமிக்கிறார் கள். அவர்களை நியமிக்கும் அதிகாரத்தை, அந்த யூனியனிலே இருக்கிற கமிஷனர், அந்த யூனியனிலே இருக்கிற தலைவர், இவர்களிடம் கொடுத் தால், அந்தப் பகுதியிலே இருக்கிற எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்கள் பலருக்கு அந்த வேலைகளைக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அதை இன்ஜினியரிங் டிபார்ட்மெண்ட் பொறுப்பிலே விடுவதை விட, பஞ்சாயத்து யூனியன் அமைப்பின் மூலம், மேஸ்திரிகளை நியமிக்கின்ற முறையைக் கொண்டுவர வேண்டும்.

அதேபோல், கிராஷ் புரோகிராமிலே இப்படிப்பட்ட காரியங்களுக்கு மேஸ்திரிகளை நியமிக்கும், ஆட்களை எடுக்கும், உரிமையைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், மாவட்டத் திட்டப் பிரிவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். குறிப்பாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் பல வட்டங்களுக்கு திட்டம் தயா ரிப்பதாக இருந்தாலும், தஞ்சாவூரிலும், திருச்சியிலும் பல பகுதிகள் வறண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வறண்ட பகுதிகளுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதை அந்தந்த மாவட்டத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினரைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அதன் மூலமாக, அப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும்.

அதேபோல், சிறு குட்டை திட்டம், பாண்ட் ஸ்கீம் அமைப்பதன் மூலம், இந்த வறட்சிப் பகுதிகளுக்கு வழி காண முடியும் என்று இந்த நேரத் திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், ஏழைகளுக்கு, கண் இழந்தோர் களுக்கு விழி கொடுக்கின்ற திட்டம் இவை இரண்டும் இன்றைக்கு நாட்டு மக்களால், ஏழைகளால், சமுதாயத்திலே யாரும் காப்பற்ற முடியாது என்ற நிலையிலே இருக்கக் கூடிய மக்களால் மிகவும் வரவேற்கப்படு



கிறது. அவர்களுக்குக் கடவுள் போல், நல்ல புது வாழ்வு ஏற் படுத்துகின்ற முறையை நமது முதல்வர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார் கள்.

தொழு நோயைப் பொறுத்த மட்டில், இரண்டொரு மாவட்டங்களிலே மட்டும் இந்த ஆஸ்பத்திரிகள் இருக்கின்ற காரணத்தாலே, மற்ற மாவட்டங் களிலே இருந்து வருகிற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லுகின்ற நேரத்தில், அவர்களையும் அந்த ஆஸ்பத்திரி களில் சேர்ப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

கண் சிகிச்சை செய்கிற நேரத்தில், அதற்குப் பின்னர் அவர்கள் தொடர்ந்து மருந்து பெறுவதற்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே அவர் களுக்குத் தேவையான மருந்துகள் கொடுக்க ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், இந்த சத்துணவு திட்டத்தை சிற்றூர்களிலே, கிராமங் களிலே பரப்ப வேண்டும். என்னுடைய தொகுதியிலே பல வறண்ட பகுதிகள் இருக்கின்றன. வேடசந்தூர், பாளையம் போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு, அப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்கள் இருக்கிற கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை அமைத்துத் தருகிற வகையிலே அரசு உதவி செய்ய வேண்டும். அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாக அறிவிக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, 1972–73-ஆம் ஆண்டுக்கான துணை மதிப்பீட்டுக் கோரிக்கையிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே அநேகமாக நிலச் சீர்திருத்தம், நில உச்ச வரம்பு, வாட்டர் ரேட், தண்டத் தீர்வை போன்ற மசோதாக்கள் எல்லாம் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. குறிப்பாக உணவு உற்பத்தியைப் பெருக்கக் கூடிய அளவிலே விவசாயிகள் பயன் பெறக்கூடிய அளவிலே இதிலே சொல்லப் பட்டிருந்தாலும் கூட எங்கள் பகுதியைப் பொறுத்த வரையிலும் இப்படிப் பட்ட உதவிகள் எல்லாம் அடைவதில் பலவிதமான கஷ்டங்கள் இருக் கின்றன என்பதை நான் பல தடவைகளில் இந்த சட்டமன்றத்திலே தெரிவித்து இருக்கிறேன்.

கோவாபரேடிவ் சொஸைடிகள் மூலமாக விவசாயிகளுக்கு அரசாங்கக் கடன்கள் வழங்கினாலும் கூட, இனாம் கிராமங்களில் உள்ள விவசாயிகள் அதனைப் பெற்று பயன் அடைய முடியவில்லை. எங்களுடைய பகுதியிலே உள்ள இனாம் கிராமங்களிலே எந்த விதமான அபிவிருத்தி வேலைகளும் பஞ்சாயத்துக்களால் செய்ய முடியவில்லை. இனாம் கிராமத்திலே யூனி யன் மூலமாக ஒரு ரோடு போட்டார்கள். இனாம் கிராமத்திலே ரோடு போடப்பட்டதால் இனாம்தாரர்கள் கோர்ட்டிற்குச் சென்று கேஸ் போட்டதன் காரணத்தினால் இதர வேலைகள் தடைபட்டுப் போய்விட்டன. இதுமட்டுமல்ல, பல அபிவிருத்தி திட்டங்கள், குடிநீர்த் திட்டம்

போன்ற திட்டங்கள் அங்கே செய்ய முடியவில்லை. கோவாப்ரேடிவ் சொஸைடிகள் விவசாயிகளுக்குக் கடன்கள் அளிப்பதாகத் தெரிவித்தா கள். ஆனால், அந்தக் கடன்களை அவர்கள் வாங்குவதிலே அநேகக் கஷ்டங்கள் இருக்கின்றன. இதனால் இனும் கிராமத்திலுள்ளவர்கள் மிக வும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவ சாயிகளைப் பொறுத்த வரையிலே கூட்டுறவுத் துறை மூலமாக லோன் கொடுக்கப்படுகிறது என்றாலும் கூட லோன் இன்றுவரை சரியாக அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

என்னுடைய பகுதியிலே ஜூன் மாதம் முதல் தேதிக்குள் கால்வாயில் தண்ணீர் விட வேண்டும். ஆகவே, ஜூன் மாதத்திற்கு முன்னாலே லோன் அவர்களுக்குக் கொடுத்தால்தான் விவசாயிகள் பயன்பெற முடியும். ஆனால், நிலைமை எப்படி இருக்கிறது என்றால், இரண்டு மாதங்கள் ஆகியும் கூட லோன் கொடுக்கப்படவில்லை. இம்மாதிரியான பல கஷ்டங்கள் இருக்கின்றன. லோன் வாங்கிய பிறகு விவசாயத் திற்குத் தண்ணீர் விடுவதில்லை. இந்த நிலைமையில் அவர்கள் பயிர் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. தாமிரவருணி ஆரம்ப முதல் வடக்கு கோடைமேல் கால்வாய் அழகியன் வாகைக்குளம் மன்னார் கோவில் கடைசிப் பகுதி வரையிலும் சரியாகத் தண்ணீர்விடாத நிலைமையில் நடுகைபோட முடியவில்லை. அதனால் விவசாயிகள் பெரும் கஷ்டப்படுகிறார் கள். கடன் கொடுக்கிறோம், ஆகவே, வாங்கிய கடனை மீண்டும் கட்டு வதற்கு முடியாமல் தவிக்கிறார்கள். நான் அடிக்கடி இங்கே தெரிவித்து வருகிறேன். அப்படியிருந்தும் அந்தக் கால்வாயில் தண்ணீர் சரியாக விடவில்லை என்பதால் விவசாயிகள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். அந்தக் கால்வாயில் லைனிங் வேலை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்,

வாட்டர் ரேட், தண்டத் தீர்வை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தாமிர வருணி பகுதியைப் பொறுத்த வரையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங் கள் 10 வருஷங்களுக்கு மேலாக 20 வருடங்களுக்கு மேலாக பயிர் செய்யக்கூடிய நிலங்கள் நல்ல நிலங்கள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் தன் தீர்வைக்குக் கொண்டுவந்து நஞ்சைக்குரிய பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் செய்வதற்கு ஏற்ற வகையில் கிணறுகள் வெட்டுவதற்கு லோன் கொடுக்கிறோம். நாம் கொடுக்கக் கூடிய பணத்தைக் கொண்டு சரியாகக் கிணறுகள் வெட்டுவதிலும் அவர்கள் படக்கூடிய கஷ்டத்தைப் பார்க்கிறோம். என்னுடைய பகுதியிலே கிணறுகள் வெட்டி விவசாயம் செய் யக் கூடியவர்கள் முதல் தவணை, இரண்டாம் தவணை, மூன்றும் தவணை களில் பணம் வாங்கவேண்டி இருக்கிறது. இப்படிப் பல கஷ்டங்கள் இருக் கின்றன. காலதாமதமாக பணம் கொடுக்கப்படுவதால் கிணறுகள் வெட்டி முடிப்பதற்குள் கையிலிருந்து பணம் எல்லாம் காலியாகி





விடும். இந்த நிலையில் மேற்கொண்டு கையிலிருந்து பணம் போட்டு செலவழித்தால்தான் அவர்கள் அதற்கு மேலே கடைசித் தவணைப் பணத்தை வாங்க முடிகிறது. ஒரு சில நேரங்களிலே பணம் அவர்களிடத் திலே இல்லாத காரணத்தினால் எதற்காக அவர்கள் கடன் வாங்கினார் களோ, அந்த நிலத்தையே அவர்கள் விற்கவேண்டிய நிலைமையில் போய்விடுகிறது. எனவே, கிணறுகள் வெட்டுகின்ற வேலைகளையெல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்வதுதான் நல்லது என்ற கருத்தைத் தெரி வித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

*திரு வி. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கை விவாதத்திலே பங்கு கொள்வதன் மூலம் கல்வி சம்பந்தமாக தமிழகத்திலே இருக்கக்கூடிய குறைபாடுகளை, கல்லூரி களில் மாணவர்களைச் சேர்ப்பதிலே இருக்கின்ற குறைபாடுகளை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

அரசாங்கக் கல்லூரிகளில் அரசாங்கத்தினுடைய உத்திரவுப் பிர காரம் ஆங்காங்கே உள்ள முதல்வர்கள் மாணவர்களைச் சேர்க்கும் பொழுது மாணவர்கள் பெற்று இருக்கின்ற மார்க்குகளின் அடிப்படையிலே சேர்ப்பதற்கு விதி செய்திருக்கிறார்கள். புத்திசாலியாக இருக்கக்கூடிய மாணவன் பல கல்லூரிகளுக்கு பல மனுக்களைப் போடுகிறான், ஏதாவது ஒரு கல்லூரியிலே இடத்தை வாங்கிவிடுகிறான்; ஆனால், ஒன்றும் தெரியாதவன், 350 மார்க், 400 மார்க் என்று எஸ்.எஸ்.எல்.சி.யில் வாங்கி னாலும் கூட குறிப்பிட்ட வகுப்புக்கு மட்டும் மனுப் போட்டுவிட்டு இருப்ப தால், அதிலே சீனியாரிடி அவனுக்குக் கிடைக்காத நிலைமையில் அவ னுக்கு 'பி' குரூப்பும் கிடைக்கவில்லை, 'சி' குரூப்பும் கிடைக்கவில்லை, தமிழ் நாடியமும் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இதைத் திருத்தியமைக்கின்ற முறையிலே அடுத்த கல்வி ஆண்டிலிருந்தாவது மாணவர்களைச் சேர்க்கும்பொழுது ஆங்காங்கு உள்ள முதல்வர்களிடம் மட்டும் பூரணப் பொறுப்பையும் ஒப்படைத்துவிடாமல் அந்தந்தப் பகுதி யிலே உள்ள தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மாணவர்களைச் சேர்க்கும் முறை சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகள் இப்பொழுது நிறைய வருகின்றன, மஷரூம் காலேஜஸ் என்பதைப் போல். அவைகளுக்கு நம்முடைய அரசாங்கத்தி லிருந்து கோடிக்கணக்கான ரூபாய் மானியமாகக் கொடுக்கிறோம். ஸ்காலர் ஷிப் என்ற முறையிலே கொடுக்கிறோம், சம்பளத்திற்கு ஈடுகட்டுவதற்காகக் கொடுக்கிறோம். இவ்வளவு கொடுத்தும் மாணவர்களை முறையாகச் சேர்க்கிறார்களா? எனக்குத் தெரியும். சென்னையிலே பல கல்லூரிகள் அப்படி இருக்கின்றன. தியாகராயர் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, எஸ்.ஐ.இ.டி. கல்லூரி, வன்னியர் கல்லூரி—இன்னும் இப்படி நான் அடுக்கிக்கொண்டே போவேன்—ஒவ்வொரு கல்லூரியிலும் பி.யூ.சி-க்கு

300 ரூபாய், டிகிரி என்றால் 500 ரூபாய் என்று வைத்திருக்கிறார்களே,
இது நியாயமா? இதனைத் தொடர்ந்து அனுமதிக்க வேண்டுமா என்ப
தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் இதற்காக வெட்கப்படுகிறோம்.
நாங்கள் படிக்கிற போது இந்த நிலைமை இல்லை. அண்மையில்தான்
கல்லூரிகளிலே இப்படி 500 ரூபாய், 400 ரூபாய் என்று வாங்குகிறார்கள்.
இப்படி மாணவர்களிடம் வாங்கினால் அவர்கள் சமுதாயத்திற்கு நாளைக்கு
என்ன சேவை செய்யப் போகிறார்கள்? முளையிலேயே 500 ரூபாய்,
400 ரூபாய் கொடுத்து செலவு செய்து, கல்லூரியில் சேர்ந்து படிக்கவேண்டு
மென்ற நிலை ஏற்பட்டால் எதிர்காலத்தில் அந்த மாணவன் எப்படி
நல்ல ஒரு குடிமகனாக இருக்க முடியும்? நான் நம்முடைய முதலமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இந்த ஆண்டு கழிந்துவிட்டது, அடுத்த
ஆண்டிலிருந்தாவது இப்படி நிகழாமல் பார்த்துக்கொள்ள ஏற்பாடுகள்
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ணப்கல்
2-00
அடுத்தபடியாக, நான் இதே சட்டமன்றத்தில் 1963–64-ஆம் ஆண்டில்
ஒரு குற்றச் சாட்டைச் சுமத்தினேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப்
பொறுத்தவரையில் என்ஜினியரிங் கல்லூரி அட்மிஷனுக்கு 2,000 ரூபாய்
வாங்குகிறார்கள், அரசாங்கக் கல்லூரிகளில் சேர்க்கும்பொழுது கமிட்டி
இருக்கிறது, ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் என்ஜினியரிங்
கல்லூரியில் சேர்வதற்கு 2,000 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று
நான் அந்தச் சமயத்திலே குற்றம் சாட்டினேன். ஆனால் பத்தாண்டுக்
காலமாகியும் நிலைமை திருந்தியிருக்கிறதா என்றால், நிச்சயமாகத் திருந்த
வில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பெயர்பெற்ற பல்கலைக் கழகம்.
நம்முடைய சபாநாயகரவர்களும், கல்வி அமைச்சரவர்களும், இன்னும்
அமைச்சரவையிலே இருக்கின்ற நல்லவர்களெல்லாம் பயின்ற ஒரு
மாபெரும் ஸ்தாபனம். ஆனால் இன்று அந்த ஸ்தாபனத்திலிருக்கின்ற
நிர்வாகிகள், அதை நடத்திச் செல்லக் கூடியவர்கள் அதை ஒரு லாபம்
சம்பாதிக்க நடத்தக்கூடிய ஒரு கம்பெனியை நடத்துவதைப்
போல இன்றைக்கு நடத்தி வருகிறார்கள் என்பதை என்னால் சொல்லாமல்
இருக்க முடியவில்லை. ஆண்டு ஒன்றுக்கு 40–45 இலட்சம் ரூபாய்
பெறுகிறார்கள். மத்திய சர்க்காரிலிருந்து பெறுகிறார்கள், யூனிவர்சிட்டி
கிராண்ட்ஸ் கமிஷனிலிருந்து பெறுகிறார்கள். அதையெல்லாம் வாங்கிக்
கொண்டு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று புரியவில்லை. அவர்கள்
என்ன செய்கிறார்கள் என்பதை அறிய சட்டமன்ற கமிட்டி ஒன்று
போட்டு புனராலோசனை நடத்த வேண்டும். பத்தாண்டுக் காலமாக என்ன
செய்கிறார்கள்? யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷனிலிருந்து எத்தனை
லட்சம் பெற்றிருக்கிறார்கள் கட்டிடம் கட்டவென்று? கட்டிடம் கட்டி
னார்களா? அல்லது 5, 6 வருஷங்கள் இந்தியன் பேங்கிலே போட்டு
பயன்படுத்தி மீண்டும் செலுத்தினார்களா? எஸ்டிமேட் ஒழுங்காகத்
தயாரித்தார்களா என்று பார்க்க வேண்டும்.

நான் வேதனையோடு சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.
அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் அடிக்கடி தகராறுகள்
செய்கிறார்கள் என்றால் என்ன காரணம்? அங்கு நிர்வாகம் சரியில்லை.
ஹாஸ்டலிலே ஆடுமாடுகளை அடைத்து வைப்பதைப்போல் மாணவர்களை



அடைத்து வைத்திருக்கிறார்கள். ஹோட்டல்களில் வாங்குவதைப்போல்
ரூம் வாடகை வாங்குகிறார்கள். 3, 4, 5 மாணவர்களுக்கு ரூம்களில்
கட்டில் போடக்கூட இடமில்லை. ஒழுங்காகச் சாப்பிட வசதியில்லை, கக்கூஸ்
வசதி இல்லை. எதற்காக அவர்கள் நம்முடைய மாநில அரசின்
பணத்தைப் பெற வேண்டும்? மத்திய சர்க்காரின் பணத்தைப் பெற
வேண்டும் அங்கு என்ன செய்கிறார்கள்? 40, 45 இலட்சம் ரூபாய்
வருஷம் ஒன்றுக்கு வாங்குகிறார்களே, என்ன ரிசர்ச் செய்கிறார்கள்?
விஞ்ஞானத்துறையில் எதைக் கண்டுபிடித்துவிட்டார்கள்? வடக்கே
யிருக்கும் பல பல்கலைக் கழகங்களை உதாரணம் காட்ட முடியும். நான்
வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், அண்ணாமலைப்
பல்கலைக் கழகத்தில் இப்படி நடைபெறுவதால் மக்களின் வரிப்பணம்தான்
வீணாகப் போகிறது, அதைச் சீர்திருத்த வேண்டிய பொறுப்பு இந்த
மாநில அரசுக்கு, இந்த மன்றத்திற்கு இருக்கிறது என்பதைத் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அங்கேயிருக்கின்ற வைஸ் சான்சலர் யார்? அவர் அப்பாவி மனிதர்.
அட்மிஷனுக்கான அதிகாரம் அவருக்கில்லை. ஹெட்ஸ் ஆஃப் டிபார்ட்
மெண்ட்ஸ்களும் சொல்லிக் கொடுப்பதற்கான ஆசிரியர்களாக
இருக்கிறார்களே தவிர மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமை
அவர்களுக்கு இல்லை. சென்னையில் வெங்கடகிருஷ்ண ஐயர் ரோட்டில்
உள்ளவர்தான் தேர்ந்தெடுக்கிறார். இப்பொழுது வேண்டுமானாலும்
யாராவது போலீசார் சென்று பார்க்கட்டும். அந்த வீட்டின் முன்னால்,
தாமோதரன் வீட்டில் எத்தனைபேர் நிற்கிறார்கள் என்று தெரியும்.
அதற்குக் காரணம் என்ன? பி.யூ.சி.க்கு 300 ரூபாய், டிகிரியில் சேர்
வதற்கு 500 ரூபாய், எம்.எஸ்.ஸிக்கு 1,000 ரூபாய், பி.ஈ.டி. சேர
1,500 ரூபாய் என்று மாணவர்கள் கொடுத்துச் சேரக்கூடிய நிலை இந்தத்
தமிழகத்தில் இருக்கிறது என்று சொன்னால் அதைத் தயவு செய்து,
அந்தப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற நம்முடைய முதல்வர்
கலைஞர் அவர்கள் அனுமதிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

இப்பொழுது என்னால் நிரூபிக்க முடியும். காரணம், அண்ணாதுரை
என்ற மாணவர் சிதம்பரம் தாலுக்காவிலேயே பிறந்து, அங்கேயே படித்து,
பி.யூ.சி. படித்த மாணவர். அவருக்கு அங்கே இடமில்லை. காரணம்
அவர் பணம் கொடுக்க முடியாமல் இருக்கிறார் என்பதுதான். இந்த
நிலை நீடிக்க வேண்டுமா? ஆகவே அந்த யூனிவர்சிட்டியைப் பொறுத்த
வரையில் நடக்கும் ஊழல்களையும், சென்னையிலும், தமிழகத்திலும்
உள்ள சில தனிப்பட்டவர்களின் கல்லூரிகளில் லஞ்சம் கொடுத்தால்
இடம் கிடைக்கும் என்ற நிலையும் அடுத்த ஆண்டிலாவது இல்லாமல்
இருக்க வேண்டும். அதற்காக என்ன முயற்சிகள் எடுத்தாலும்
அத்தகைய முயற்சிகளுக்கு நம்முடைய முதல்வரவர்களுக்கு பரிபூரண
ஆதரவைக் கொடுக்க என்றைக்கும் தயாராக இருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். எதிலும் நியாயத்தைக் கடைப்பிடித்து,
நேர்மையாக நடத்திச் செல்பவர்கள் அடுத்த ஆண்டிலேயிருந்தாவது
மாணவர்களைச் சேர்க்கும்பொழுது லஞ்சம் கொடுத்து இடம் கிடைக்கக்

கூடிய நிலைமை எங்கேயுமே இருக்கக்கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

திரு. இ. எஸ். தியாகராசன் : பேரவைத் தலைவரவர்களே, நம் முடைய முதல்வர் டாக்டர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற துணை மானியக் கோரிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன்.

இன்றைக்கு இந்தத் துணை மானியத்திலே அரசுப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு தரப்பட்டிருக்கிறது. அதை உண்மையிலேயே நான் வர வேற்கிறேன். அரசுப் பணியாளர்களுக்கு மட்டுமல்லாமல் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் மாத ஊதியத்திலே 5 ரூபாய் அதிகப்படுத்தித் தந்திருக் கிறார்கள். இதனால் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் உண்மையிலேயே நம் முடைய அரசைப் பாராட்டுவார்கள் என்றே கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, வேலையில்லாமல் இருக்கும் துயரத்தைப் போக்கு வதற்காக 4 கோடியே 38 இலட்சம் ரூபாயை இந்தத் துணை மானியத்திலே ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், கிராமப்புற பாதைகளைச் செப்பனிடுவதற்காக 4 ஆண்டுக்காலத்திற்கு 19 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டம் ஒன்றை நம்முடைய அரசு இப்பொழுது தயார் செய்திருக்கிறது. அப்படி கிராமப் புறப் பாதைகளைச் செப்பனிடுவதில் நம்முடைய தமிழகம்தான் முன் னேக்கி ஒரு பெரிய பணியைச் செய்து வருகிறது என்றால் அது உண்மை யிலேயே பாராட்டத் தகுந்த ஒன்றாகும். வேறு எந்த மாநிலமும் செய்யாத இது போன்ற ஒரு நல்ல திட்டத்தைத் தயார் செய்து, கிராமப் புறங்களில் தார்ப் பாதைகளை அமைக்கும் திட்டப் பணிகளை டாக்டர் கலைஞர் அவர்களது அரசவையிலே தான் செய்ய முடியுமே தவிர வேறு எந்த மாநிலத்திலும் துவக்காத நிலையில் அந்தப் பெரும்பணியை நம்முடைய அரசு ஏற்றியிருக்கிறது என்பதை இங்கே நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் இந்த ஆண்டு மட்டும் 3 கோடி ரூபாய் கிராமப்புற பாதைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற் காக 1 கோடியே 38 லட்சம் ரூபாய் அளவில் கிராஷ் ப்ரோக்கிராம் போன்ற ஒரு திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதையும் இதனால் வேலை யில்லாமல் இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புறப் பாதைகளைச் செப்பனிடப்போவதால் பல இன்ஜினியர்களுக்கும், அவர்களைச் சேர்ந்திருக்கிற பணியாளர்களுக்கும் வேலை கிடைக்க வாய்ப்பு கிடைத் திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்,





அதுமட்டுமல்லாமல் தமிழகத்திலேயிருக்கின்ற பஸ்களையெல்லாம் தேசியமயமாக்குவதாக மதிப்புமிக்க முதல்வரவர்கள் சுதந்திரநாள் வெள்ளி விழாவின்போது வெளியிட்டிருக்கிறார்கள். இன்னும் ஐந்தாண்டுக்காலத்திலே நாட்டிலேயுள்ள அத்தனை பஸ்களும் தேசிய உடைமையாக வேண்டுமென்று சொன்ன கருத்து இந்த நாட்டிலே உள்ள அத்தனை பேர்களாலும் பாராட்டத் தக்கதும், மிகவும் தேவையானது மாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

அதுமட்டுமல்ல, நம்முடைய முதல்வரவர்களின் பிறந்த நாளின் பொழுது நாட்டிற்கு நல்ல திட்டத்தை அளித்து வருகிறார்கள். கடந்த ஆண்டு தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்காக ஒரு திட்டம், இந்த ஆண்டு கண் ஒளி வளர்ச்சிக்கு ஒரு திட்டம் என்று ஒவ்வொரு ஆண்டும் அவர்களுடைய பிறந்த நாளிலே நாட்டுமக்களுக்கு நல்லது செய்வதையே தன்னுடைய தொண்டாகக் கருதி அவர்கள் திட்டங்களை அளிக்கிறார்கள். அவர்கள் அளித்த அந்தத் திட்டங்களினால் கோடானுகோடி மக்கள் பயனடைவதற்கான வாய்ப்பாக இருக்கிறது என்று சொல்லி அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்திலே நில வள வங்கிகளில் சரியாகக் கடன் கொடுக்கப் படுவதில்லை என்ற நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு வெளி நாட்டிலே யிருந்து வரும் கடன்கள் முன்போல் வருவதில்லை, அதனால் நிறையக் கடன்களைக் கொடுப்பதில் தாமதமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. அவைகளை நிவர்த்திக்க வேண்டும்.

இன்றைக்குத் தமிழகத்திலே உணவுப் பொருள் கார்ப்பரேஷன் ஒன்றை அமைத்து அதனால் நாட்டிலிருக்கும் உணவுப் பஞ்சத்தைப் போக்க நல்லதொரு வாய்ப்பை உண்டாக்கித் தந்திருக்கிறது தமிழக அரசு. அந்த முயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கார்ப்ப ரேஷனை அமைப்பதன் விளைவாக தமிழகத்தில் இருக்கும் பற்றாக்குறை நீங்கி இன்றைக்கு ஒரு லட்சம் டன் உணவு தானியம் நம்முடைய கையிலிருக்கிற வாய்ப்பு இருக்கிறது என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் கிராமப்புறங்களில் வீடு கட்டித் தருவதற்காக, கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளியவர்கள், பிற்பட்ட வகுப்பினருக்கு நல்லதொரு வாய்ப்பைச் செய்வதற்காக நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்க ளெல்லாம் வெற்றி பெறுவதற்கு முழுமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு இந்த பட்ஜட்டை நான் வர வேற்று அமர்கிறேன். வணக்கம்.

* திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, நமது முதல் வரவர்கள் சமர்ப்பித்திருக்கும் துணை மானியத்தின்மீது ஒரு சில கருத்துக் கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். நமது முதல்வரவர்கள்,

வாழ்க்கையிலே பரிதாபத்திற்கும், இரக்கத்திற்கும் உரியவர்களான பிச்சைக் காரர்கள், தொழுநோய்க்காரர்கள், கண் இழந்தவர்கள், பார்வையிழந்த வர்கள் ஆகியவர்களுக்காக நல்ல திட்டங்களையெல்லாம் முதன்முதலாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் இத்தகைய ரீதியிலே, வாழ்க்கை யிலே தன் நிலையிலே நிற்க முடியாமல் இருப்பவர்களுக்குச் செய்யக் கூடிய தொண்டு மிகவும் வரவேற்கத் தகுந்த ஒரு தொண்டாகும்.

இந்த நேரத்தில் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விட ஆசைப் படுகிறேன். வாழ்க்கையிலே எதுவும் செய்யச் சக்தியற்றவர்களான வய தான முதியோர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தால் முதியோர் யாவரும் பயன்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்வதற்காகத் தான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்த ஆசைப்படுகிறேன்.

ஒரு வட்டம் அல்லது மாவட்டத்தில் எவ்வளவு ஜனத்தொகை என்று கணக்கெடுத்து அந்தக் குறிப்பிட்ட வட்டத்திலோ, மாவட்டத்திலோ 100 அல்லது 150 பேருக்குத் தான் முதியோர் உதவித் தொகை கொடுக்கப் படும் திட்டம் தற்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முதியோர் உதவித் தொகையைப் பெற லாயக்கானவர்கள் அதே வட்டத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இது கிடைப் பதில்லை. ஒரு வட்டத்தில் 150 பேருக்குக் கொடுக்கிறார்கள் என்றால் அதற்கு மேலும் அந்தப் பகுதியில் 100 பேர் உதவித் தொகை கோரு கிறார்கள் என்ற நிலையில் எற்கனவே 150 பேருக்குக் கொடுக்கப்பட்டவர் களில் யாராவது இறந்து விட்டால் அதற்குப் பதிலாக இந்த 100 பேரி லிருந்து படிப்படியாக உதவித் தொகை கொடுக்கக் கூடிய நிலைதான் தற்போது இருக்கிறது. இதனால் உடனடியாக எல்லோருக்கும் உதவித் தொகை கிடைப்பதில்லை. **இவ்வாறு உதவித் தொகை** பெற முடியாத நிலையில் பலர் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறார்கள்.

குறிப்பாக, அருப்புக்கோட்டை வட்டத்தை எடுத்துக் கொண்டால் 150 பேருககு கொடுத்திருக்கிறார்கள் என்றால் மேற்கொண்டு எத்தனை பேர் தகுதியானவர்கள் என்று கணக்குப் பார்த்தால் 100 பேர் தான் இருக்கக் கூடும். ஆகவே, தகுதியுள்ளவர்கள் எல்லோருக்குமே உதவித் தொகை கொடுக்க அரசு முன்வரவேண்டும். இதனால் அரசுக்குப் பெரிய தொகை செலவாகி விடாது. முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளம் படைத்தவர். உடனடியாகக் கூட இதிலே அவர்கள் முடிவு கட்ட முடியும். தகுதி பெற்றவர்களாக இருந்தால் ஏழைகளாக இருந்தால் அவர்களுக்கு யாருமே உதவி செய்யக்கூடியவர்கள் இல்லாது இருந்தால் இந்த வரம்பைத் தளர்த்தி எல்லோருக்கும் உதவி கிடைக்கும் முறையில் அமல் செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u>: துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கைகளில் சில முக்கியமான கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





மார்ச் 31-ம் தேதி தான் வரவு செலவுத் திட்டத்தை முடித்தோம். நான்கு மாதத்திற்குள்ளாக துணை மானியக் கோரிக்கை வந்திருக்கிறது. வரவு-செலவுத் திட்டத்தில் எல்லாவற்றையும் திட்ட வட்டமாக விவாதித்து முடிவுக்கு வருவதில் இருந்து தப்பித்து கொள்ளுவதற்காக இப்படித் துணை மானியக் கோரிக்கை கொண்டுவரப்படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல ஆசைப்படுகிறேன். துணை மானியக் கோரிக்கை புதிய சர்வீஸ் களுக்காக, மக்களின் நன்மைக்காக நிறைவேற்றப்படக்கூடிய நல்ல பணி களுக்குக் காலதாமதம் ஆகக்கூடாது என்ற நிலையில் கொண்டு வர வேண்டுமே தவிர, ஸ்டாஃப் அதிகரிப்பதற்காக எல்லாம் கொண்டு வரக் கூடிய அளவில் அமையக்கூடாது. இப்போது ஸ்டாஃபை அதிகரிப்பதற்காக இந்த துணை மானியக் கோரிக்கை கேட்டிருப்பது வருந்தத்தக்கதாகும். இனிமேலாவது இப்படிப்பட்ட நிலைமை வராமல் இருக்க அரசாங்கம் வழி காணவேண்டும்.

முதலில் ஆரம்பிக்கும் போதே எக்ஸைஸ் டிபார்ட்மென்டில் 40 கோடி ரூபாய் கள், சாராயத்தால் வருமானம் வருகிறது என்ற காரணத் தால் ஆள் தேவை என்று கோரியிருக்கிறார்கள். இதை வரவு செலவுத் திட்டத்தின்போதே செய்திருக்கலாம். நான் ஒரு ஆலோசனை கூற விரும்பு புகிறேன்.—எக்ஸைஸ் என்பதற்குத் தனியாக மந்திரி கூட போடலாம். அப்படி ஒரு அமைச்சரைப் போட்டால் வருங்காலத்தில் அதைக் கட்டுப் பாடாக நடத்த சிறப்பாக அமையும்.

இணைப்புச் சாலைகளுக்கு நல்லெண்ணத்தில்தான் பணம் ஒதுக்கி இருக் கிறார்கள். இன்றைக்கு நிலைமை என்ன? நான் சொல்லுவதால் கோபப் படக் கூடாது. உங்கள் கட்சியைச் சார்ந்தவர்களே ஆணித்தரமாக பணம் பாழடிக்கப்படுகிறது என்று கூறினார்கள். இன்று லோகல் பாடீஸ் பஞ்சா யத்து யூனியன் ரோடுகளைப் போடுவதைப் பார்க்கும்போது மக்கள் சாமர்த் தியமாக ஏமாற்றப்படுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். டெண்டர்கள் சரியான முறையில் கோரப்படுவதே இல்லை. தாங்கள் விரும்பு கிறவர்களுக்குக் காண்டிராக்ட் கொடுக்கிறார்கள். இதிலே தவறான வழி கள் கடைபிடிக்கப்படுகின்றன என்பது நாடறிந்த உண்மை. இப்படிப் பட்ட நிலைமை நீடிக்குமானால் எவ்வளவுதான் பணம் ஒதுக்கினாலும் அந்தப் பணி நிறைவேறுமா என்பது சந்தேகத்திற்குரியதாகவே இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்விக்காக பல லட்சம் ரூபாயை யூனிவர்சிடிக்குக் கொடுக்கிறார்கள். யூனிவர்சிடியில் என்ன நடக்கிறது? எம். ஏ. ஹிஸ்டரி, பாலிடிக்ஸ் ஆகி யவற்றுக்குக் கூட இடம் கிடைக்காமல் மாணவர்கள் திண்டாடிக் கொண் டிருக்கிறார்கள். எம். எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி, பாடனி, போஸ்ட் கிராஜுவேட் ஸ்டடீஸ் ஆகியவற்றுக்கு லேபராடரி வேண்டும். ஹிஸ்டரி, பாலிடிக்ஸ், எகனாமிக்ஸ், படிக்கக்கூட இடம் கிடைக்காத நிலை இருப்பது சரியல்ல. இதற்குக்கூட பி. ஏ. பஸ்ட் கிளாஸ் பாஸ் செய்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எகனாமிக்ஸ், ஹிஸ்டரி ஆகியவற்றில் பஸ்ட் கிளாஸ் வாங்க முடியுமா? மேதமாடிக்ஸில் வேண்டுமானால் வாங்கலாம். ஆர்ட்ஸ்

எம். ஏ. படிக்கக் கூட மாணவர்கள் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அறிவுக்கு தடை போடும் நிலைமையில் இந்த அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது.

எந்தக் காலத்தில் சட்டக் கல்லூரிக்கு செலக்ஷன் கமிட்டி போட்டார்கள். சத்திரம் பலகையைப் போல வருகிறவர்களுக்கெல்லாம் இடம்கொடுத்து வந்தார்கள். அங்கு இடம் இல்லை என்று சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? லைப்ரரி வைக்கப்போகிறீர்களா? ஏதோ புதிய கட்டடத்தை கட்டி விட்டால் வருகிறவர்களை எல்லாம் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால் கமிட்டி போட்டு பஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸை எல்லாம் தேர்ந்தெடுக்காமல் தேர்டு கிளாஸில் பாஸ் செய்தவர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இது நியாயம்தானா? இவர்கள் எல்லாம் தேர்டு கிளாஸ் வக்கீல்களாகத் தான் இருக்க முடியும். இனி தேர்ட் கிளாஸ் நியாயந்தான் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது தேர்டு கிளாசில் பாஸ் பண்ணியவர்களை இன்ஸல்ட் செய்வதாக இருக்கிறதே.

திருமதி த. ந. அனந்தநாயகி: கமிட்டியில் பஸ்ட் கிளாஸில் பாஸ் பண்ணியவர்களை இன்ஸல்ட் பண்ணியிருக்கிறார்களே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் எல்லாம் பஸ்ட் கிளாசில் பாஸ் பண்ணியிருக்கலாம். நாங்கள் தேர்டு கிளாசில்தான் பாஸ் பண்ணியிருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பஸ்ட் கிளாஸ், செகண்டு கிளாசுக்கு மரியாதை இருக்க வேண்டும். திறமையைப் பயன்படுத்திக் கொள்ளும் நிலை இருக்க வேண்டும். இப்போதுள்ள நிலைமை அதிகமாக நீடிக்கக் கூடாது.

பிரைவேட் காலேஜ்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது பாக்வார்ட் கிளாசைச் சேர்ந்தவர்கள் இவ்வளவு பேரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும், அரிசனங்களில் இவ்வளவு பேர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசினர் வரையறுத்திருக்கிறார்கள். எத்தனை கல்லூரிகள் இதனைக் கடைபிடித்திருக்கிறார்கள்? எதிலும் ஃபாலோ அப் ஆக்ஷன் இருக்க வேண்டும். இதை எந்த அளவுக்கு நல்ல முறையில் அமல் நடத்தியிருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அப்படி அமல் நடத்தாதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பிச்சைக்காரர் விடுதிகளில் எவ்வளவோ குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவை சரிவர நிர்வகிக்கப்படவில்லை, நல்ல உணவு கிடைக்க வில்லை என்று கூறுகிறார்கள்.



ஆகவே பிச்சைக்காரர்கள் விடுதிகள் அதிகமாகக் கட்ட வேண்டும். தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு ஹோம்ஸ் கட்டித் தர முயற்சிக்கவில்லை. ராமகிருஷ்ண மிஷன், கிரிஸ்டியன் மிஷன்ஸ், இன்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் இவர்களிடம் ஒப்படைத்து நீங்கள் இவற்றை மெய்ன்டெயின் செய்யுங்கள், நாங்கள் சூப்பர்வைஸர் கண்ட்ரோலை வைத்துக்கொள்கிறோம் என்று சொன்னால் உங்களுக்கும் பணம் மிச்சம், அவைகளை அவர்களும் நன்றாகப் பார்த்துக் கொள்வார்கள். எல்லாவற்றையும் தேசியமயமாக்குவதுபோல் இந்தப் பிச்சைக்காரர்கள் விடுதிகளையும் தேசியமயமாக்கவேண்டிய அவசியமில்லை.

அடுத்து, நுட்ரீஷன் ப்ரோக்ராம். அதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரொட்டித் துண்டுகள் எம். ஜி. ஆர். மன்றம், எஸ். எஸ். ஆர். மன்றம் என்று இவைகள் வழியாகக் கொடுக்கப்படுகிறது. அது நல்லதல்ல. ரொட்டித் துண்டுகள் சரியாகப் போய்ச் சேருவதில்லை. ரொட்டித் துண்டுகள் சரியாக போய் சேரவேண்டியவர்களுக்கு போய் சேர வழிவகை செய்ய வேண்டும். கார்ப்பரேஷன் கவுன்சிலர்கள் பொறுப்பில் இவற்றைக் கொடுத்தால்—அவர்கள் வோட்டுக்குச் செல்லும்போது ரொட்டித் துண்டுகள் சரியாகக் கிடைக்கவில்லையே என்று சொல்வார்கள்—ஆகவே மக்களிடம் சென்று வோட்டு வாங்கும் ஸ்தாபனங்கள் மூலம், அல்லது நபர்கள் மூலம் ரொட்டித் துண்டுகள், தாய்மார்களுக்கு பால்வழங்கும் திட்டம் இவைகளை எடுத்துக் கொண்டால் நல்லது. சங்கங்கள் வழியாகக் கொடுத்தால் பாதி மக்களுக்கு சென்று விடுவதில்லை, எங்கே போகிறதோ எனக்குத் தெரியாது, ஆகவே அதை மனதில் கொண்டு அதில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக லாண்ட் ரிபார்ம்ஸ் அட் கோயம்புத்தூர்; கோவை மாவட்டத்திற்கு மட்டும் அவ்வளவு அவசரமாக துணை மானியக் கோரிக்கையில் சேர்த்து கொண்டு வருகிறீர்கள். ஒரு வேளை கோவை விவசாயிகளுக்கு மதிப்பு கொடுக்கச் செய்கிறீர்களா, அவர்கள் வீரத்தை எடுத்துக் காட்டும் விவசாயிகளாக இருக்கிறார்கள் என்று லான்ட் ரிபார்ம்ஸை இம்ப்ளிமெண்ட் செய்ய கோவை மாவட்டத்தில் உடனடியாக இதைச் செய்ய ஒத்துக்கொண்டிருக்கிறீர்களா, காரணம் எனக்குப் புரியவில்லை.

அடுத்து, அஸைன்மெண்ட் ஆஃப் பாரஸ்ட் லாண்ட்ஸ். காட்டு இலாகா நிலத்தை சிலோனிலிருந்து வந்திருக்கிற அகதிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் தக்க முயற்சி எடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டினை நான் கூற விரும்புகிறேன். ஐந்து அல்லது பத்து பேர்கள் உள்ள ஒரு குடும்பத்தில் குடும்பத்திற்கு இரண்டு பேர்களுக்குத் தான் வேலை தருகிறார்கள் எஸ்டேட்களில். நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு மூன்று நான்கு ரூபாய்களுக்கு மேல் சம்பாதிக்க முடியவில்லை. அகதிகள் பல்லாயிரக் கணக்கானவர்களைக் கொண்டு வந்து விட்டு அவர்களில் குடும்பத்திற்கு இரண்டு பேர்களுக்குத் தான் வேலை கொடுப்பது என்றால், அவர்கள் இருக்க இடமில்லை, உழுது பயிரிட நிலம் இல்லை என்ற நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மேலும் அதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, சில நல்ல திட்டங்களுக்குக் கூட இடங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பள்ளி மாணவர்களுக்கு கண்களைப் பரிசோதித்துப் பார்ப்பது நல்லதொரு திட்டம். Examinatian of eye af chilaren in Madurai city alone. மதுரை மாவட்டத்தில் மட்டும்தான். குழந்தைகள் கண்களைப் பார்ப்பது என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். கொண்டு வந்திருக்கிற நல்ல திட்டத்தை தமிழகம் முழுவதற்கும் கொண்டு வாருங்கள், மதுரைக்கு மட்டும் ஏன் தனிச் சலுகை என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. பள்ளிக்கூட மாணவர்களுக்கு மெடிகல் எக்ஸாமினேஷன், ஐ டெஸ்ட் இவைகளை வைத்தால் நல்ல நிலையில் அவர்கள் வளருவதற்கு வழிபிறக்கும்.

அடுத்த படியாக, டி.யூ.ஸி.எஸ். ஏற்கனவே கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அது சரியாக நடக்கவில்லை என்று. என்னிடம் கூட கணக்கை காட்டமாட்டேன் என்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கும் அதற்கு ஏன் பணம் ஒதுக்குகிறீர்கள் என்று கேட்கிறேன் ? (குறுக்கிடு) மத்திய அரசின் பணம் என்றால் எங்குவேண்டுமானாலும் கொடுத்து விடலாமா ?

**The Hon. Thiru Si. Pa. ADITANAR :** The Central Government sent a Committee to inspect and see the various consumer Co-operatives. That Committee selected the T.U.C.S. for this grant. The money has come from the Centre and we have to pass it on.

**Thirumathi T. N. ANANDANAYAKI :** That means you have not briefed the Committee properly.

**The Hon. Thiru Si. Pa. ADITANAR :** We have briefed them. They said it is worse in other States, and so this is better.

**Thirumathi T. N. ANANDANAYAKI :** I feel really sorry for them.

**Thiru R. PONNAPPA NADAR:** May I take it that it is the best of bad ones ?

**Thirumathi T. N. ANANDANAYAKI :** It goes without saying.



அவர்கள் சொல்கிறார்கள். இப்போது தப்பித்துக்கொள்ள அமைச்சர் அவர்கள் சொன்னாலும் சொல்லலாம். அமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாதபோது பணம் கொடுக்கலாமா என்பது தான் கேள்வி.

**The Hon. Thiru Si. Pa. ADITANAR :** Don't go to that extent. I said accounts are not properly kept and properly audited. It does not necessarily mean it is bad. It is better than many other stores in other States.

**Thirumathi T. N. ANANDANAYAKI :** You yourself said that accounts of T.U.C.S. are not properly kept. There cannot be a more serious objection.

இப்போது "நாட் ஸோ பாட்" என்கிறீர்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் சொல்வது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. கணக்கு காட்டவில்லை என்று சொல்கிறார்கள். இப்போது "நாட் ஸோ பாட்" என்கிறார்கள்.

இப்படிச்சொன்னால் மற்ற சொஸைட்டிகளும் கணக்குவைக்கமாட்டார்கள். அடுத்தபடியாக, கோல்ட்ஸ்மித்துக்கு கொடுத்த கடன்களை திருப்பி வாங்க ஒரு ஸ்டாஃப் போடுகிறீர்கள். பாவம் அவர்கள்! தொழில் நசித்துப்போய் கொடுக்கப்பட்ட கடனை திருப்பிக் கொடுக்க பரிதவிக்கும் நிலையில் அவர்களிடமிருந்து கடன் பணத்தைத் திரும்பப்பெற ஒரு ஸ்டாஃப் போடுவது நல்லதல்ல. பாவம் அவர்கள்! ஆகவே அதை ரைட் ஆஃப் செய்து விடலாம். இதற்கு என்று ஒரு ஸ்டாஃப் போட்டு மேலும் பணத்தைச் செலவழிக்க வேண்டாம்.

இளைஞர் அணிக்காக பல கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். கூடுதலாக 1,450 ஆண் தொண்டர்களையும் 150 பெண் தொண்டர்களையும் சேர்ப்பதும் அடங்கும் என்றிருக்கிறது. அவர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் ரிக்ரூட் செய்யப்படவேண்டும். உங்கள் விருப்பப்படி கட்சிக் கண்ணோட்டத்தோடு இளைஞர் அணியில் வேலை கொடுப்பது என்பது நியாயம் அல்ல. மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் விதத்தில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆகவே அவர்களை சர்வீஸ் கமிஷன் மூலம் ரிக்ரூட் செய்வது தான் நியாயம்.

அடுத்தபடியாக, பே கமிஷன் அப்பாயின்ட் செய்யப்பட்டது. அதில் எல்லாவிதமான தொல்லைகளும் வந்தன. பிறகு ஒரு நபர் கமிஷன் போடப்பட்டது. சீப் செகரடரியை ஒன் மான் கமிஷனாகப் போட்டார்கள். அரசாங்கத்திற்கு சாதகமாக நிலைமை இருக்க வேண்டும் என்பதற்காவென்றும் சரியாக வரவில்லை. என்ஜினியர்களுக்கு திருப்தியில்லை, வெட்டரினரி டாக்டர்களுக்கு திருப்தி இல்லை, பார்மஸிஸ்ட்களுக்கு திருப்தி இல்லை, பட்டதாரி ஆசிரியர்களுக்கு திருப்தி இல்லை, யாருக்கும் திருப்தியில்லை

மெம்பராக 2-3 வருஷம் இருந்து இருக்கிறேன். அது ஒரு பண்ணை மாதிரி நடந்து வருகிறது. அதற்குப் பணம் கொடுப்பது சரியல்ல. தனியார் கல்லூரிகளுக்கு அரசாங்கம் தரும் மானியங்களை எப்படிச் செலவழிக்கின்றன என்பது நமக்குத் தெரியும். அப்படி நிலைமைகள் எல்லாம் நமக்குத் தெரிந்திருந்து, அதைப் பற்றி நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அதை அதிகப்படுத்துவது சரியல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் உள்ள வங்கிகள் கிட்டத்தட்ட ஆளும் கட்சியின் சொந்த இலாகாவாக செயல்படுகின்றன. அண்மையில் பேசிய திரு.சி. சுப்பிரமணியம் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களுக்காக நடத்தப்படுகிறது என்று பேசியிருக்கிறார்கள். அவர் அப்படிப் பேசுகின்ற கொள்கையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த விஷயத்தை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். [சீசர்ஸ் ஒய்ப் ஷுட் பி அபொவ் சஸ்பிஷன்] சீசருடைய மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும். உங்களுடைய கட்சி பல நல்ல காரியங்களைச் செய்து இருந்த போதிலும், இப்படிப்பட்ட புகார்கள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவுத் துறையில் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களையும், அதனுடைய அக்கறையிலே நாட்டம் கொண்டவர்களையும் நல்ல முறையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒன்றைக் கூற விரும்புகிறேன். பக்கத்தில் நண்பர் அழகர்சாமி அவர்கள் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். இப்போது வெளியே போய் இருக்கிறார்கள். அவர் நெல்லை மாவட்ட மத்திய வங்கியின் இயக்குநர்.

திரு. மணலி சி. கந்தசாமி : என்னுடைய கட்சியைச் சார்ந்தவர் மத்திய வங்கியில் இயக்குனராக இருக்கிறார் என்பது வேறு. அப்படி ஒரு பேச்சு இருக்கிறது. அது வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று பொறுப்பாகவே நான் சொல்கிறேன். நானும் பல புள்ளி விவரங்களைத் தர முடியும். நான் நல்லெண்ணத்தோடுதான் அந்தக் கருத்தைக் கூறினேன். அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகளுக்கு மனைக்கட்டு கொடுக்கும் விஷயத்தில் கலைஞர் அவர்கள் மிக மிக நல்ல சாதனையைச் செய்து இருக்கிறார்கள். வருங்காலம் நிச்சயமாக அவர்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும். அது மாநிலம் பூராவும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உழவனுக்கு நிலம் கொடுப்பதில் மாண்புமிகு ரெவின்யூ மந்திரி அவர்கள் மிகவும் தயக்கம் காட்டுகிறார்கள் என்பது என் குற்றச்சாட்டு. அதிலே நீங்கள் உஷாராக நடந்துகொள்ள வேண்டும். பாவத்தைக் கட்டிக்கொண்டு போக வேண்டாம். இந்த நேரத்தில் ஒரு நல்ல காரியத்தைச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.



தஞ்சை ஜில்லாவில் இந்த வடிகால் வசதி சம்பந்தமாக ரொம்பத் தயக்கம் இருக்கிறது. மார்டனைசேஷன் என்று சொல்லும் நவீனப் படுத்தும் முறையானது ஏன் இவ்வளவு தாமதமாகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. போதிய பணம் இருக்கிறது. கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம் வருகிறது என்று சொல்கிறபோது டிரைனேஜ் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து—பஞ்சாப் மாநிலத்தில் எடுத்ததைப் போன்று—விஞ்ஞான ரீதியில் நடவடிக்கை எடுத்து, தஞ்சாவூர் பகுதியில் வசதி செய்து கொடுத்தால் தஞ்சையில் நிச்சயமாக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அரசு அதை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற் துறையில் இருக்கும் அமைதியின்மையைப் பற்றி பல பேர் எடுத்துச் சொன்னார்கள். கலைஞர் அவர்கள் பல நடவடிக்கைகளை எடுத்து ஒவ்வொன்றாகத் தீர்த்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இவ்வளவுக்கும் பிறகு ஆரவாரம் இருக்கிறது, கொந்தளிப்பு இருக்கிறது. அதிலே சில அடிப்படை அம்சங்கள் இருக்கின்றன. அந்த அடிப்படை அம்சங்களை யெல்லாம் நீக்கி, சில அடிப்படை ஏற்பாட்டை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் பற்றி திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூட பேசியிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு காலையில் எழுந்திருந்தால் ஒரு தொழிற்சாலை மூடப்படுகிறது என்று பேசியிருக்கிறார்.

பஞ்சப்படி, சம்பள உயர்வு சம்பந்தமாக இன்றைய தினம் மறுபடியும் அனுமலீஸ் கமிஷன் போட வேண்டுமென்று சொல்லும் அளவுக்கு பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. இன்று கருப்புத் துணியை மாட்டிக் கொண்டு பல உத்தியோகஸ்தர்கள் இருப்பதைப் பார்க்கிறோம். அதற்கு சரியான பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தத் துணை மதிப்பீடு ஒன்றும் அதிகப்படியானதல்ல. 400 கோடி ரூபாய் வருமானம் வருகிற நிலையில் 8 கோடி ரூபாய்க்கு துணை மதிப்பீடு வருவது என்பது பெரிதல்ல. தவறு என்பதும் இல்லை. ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு நிலைமையை உண்டுபண்ணியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஏற்படுத்திய பணிகளைத் தொடருவதற்கும், மீதியுள்ள பணிகளை நல்ல முறையில் செய்வதற்கும், பொதுவாக நல்ல முறையில் காரியங்களைச் செய்வதற்கும் நல்ல முறையில் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : கனம் அமைச்சர் அவர்கள் நான் நெல்லை மாவட்ட மத்திய வங்கியில் இயக்குனராக இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார். நான் தேர்தலிலே நின்று ஜெயித்து இயக்குனர் பதவிக்கு வந்தவன். எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது அரசாங்கம் நியமிக்கும் விஷயம் குறித்துதான். அதிலேதான் பல கட்சியைச் சார்ந்தவர்களையும் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு என் பாராட்டுதல்கள்.

என்ற நிலை தான். உங்கள் தலைமைச் செயலகச் சிப்பந்திகளையே திருப்திப் படுத்த முடியவில்லை என்பதை காட்டுவதுபோல் அவர்கள் கருப்புத் துணி அணிந்து இன்று சென்று கொண்டிருக்கிறார்கள். ஆக, யாரையும் திருப்தி படுத்த முடியவில்லை. ஒரு கமிஷன் என்று போட்டு பத்து, பதினைந்து ரூபாய் என்று கொடுத்திருக்கிறார்கள், யாருக்கும் திருப்தி ஏற்படவில்லை. ஆகவே மீண்டும் ஒரு பே கமிஷன் போட்டு—உங்கள் செக்ரடரிகள் யாரையும் போடாது ஹைகோர்ட் ஜட்ஜ் அளவில் ஒரு கமிஷன் அப்பாயின்ட் செய்யப்பட வேண்டும். டாக்டருக்கு அடிப்படைச் சம்பளம் 525 ரூபாய். அதே படிப்பு படித்து விட்டு வந்திருக்கிற வெட்டரினரி அஸிஸ்டெண்ட் சர்ஜனுக்கு ரூ. 425 என்பதில் நியாயம் கிடையாது. வேண்டுமானால் டாக்டர்களுக்கு லாஸ் ஆப் ப்ரைவட் ப்ராக்டீஸ்க்காக ஒரு அலவன்ஸ் கொடுங்கள். ஏறக்குறைய ஒரேயளவில் படித்திருக்கிறவர்களுக்கு ரூ. 100 அடிப்படைச் சம்பளத்தில் வித்தியாசம் என்றால் அது சரியல்ல. ஆகவே எல்லோருக்கும் திருப்தி அளிக்கும் விதத்தில் மீண்டும் ஒரு பே கமிஷன் போட்டு எல்லாவற்றையும் நல்ல முறையில் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். இராஜாங்கம்: தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான துணை மதிப்பீடுகளின் மீதான விவாதத்தில் நான் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இத் துணை மதிப்பீட்டில் புதிதாக வழிவகை செய்யப்பட்டிருக்கிற பல அம்சங்கள் பாராட்டுக்குரியனவாகும். முதலில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் திட்டத்தின் அடிப்படையில் மேலும் ரூ. 4 கோடி 38 லட்சத்திற்கு நிதி ஒதுக்கி, மேலும் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க இதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்து, ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு மேலும் ஐந்து ரூபாய் அதிகப் படுத்திக் கொடுப்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது.

1,500 மக்கள் தொகைக்கு மேற்பட்ட கிராமங்களுக்கு தார் சாலைகள் வடிவில் எல்லாப் பருவ நிலைக்கும் ஏற்ற சாலைகள் அமைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் திட்டத்தின் அடிப்படையில் மேலும் அவர்கள் சிகிச்சை பெறக்கூடிய விதத்தில் அதற்காகவும் இந்தத் துணை மதிப்பீட்டில் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

பல திட்டங்களுக்கு இதில் வழிவகை செய்யப்பட்டிருந்தாலும் கண் இல்லாதவர்களுக்கு கண் வழங்கும் திட்டத்தின் கீழ் மேலும் ஐந்து இடங்களில் கண் சிகிச்சை முகாம்களை ஏற்படுத்த இதில் வழி செய்யப் பட்டுள்ளது. அது யாருக்கும் எக்காலத்திலும் புலப்படாத ஒரு நல்ல கருத்தாகும். அதற்காக நம் முதல் அமைச்சர் அவர்கள் இதில் வழிவகை செய்திருக்கிறார்கள். ஆக, நல்ல நல்ல புதிய புதிய திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள் நம் அரசு.



மேலும் அரசு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்திருப்பதும் பாராட்டுக்குரியது. குறைபாடுகள் ஏதாவது இருந்தால், அது முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தால் எந்தக் குறைபாடும் இல்லாமல் வழிவகை செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு இதை வரவேற்று முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பிற்ட 12-

*திரு. மணலி சி. கந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையில் என்னுடைய கட்சியின் சார்பில் என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

அதிலும் முக்கியமாகக் கல்வியைப் பற்றி நான் ஏற்கனவே கூறிய கருத்துக்கள் சிலவற்றை மீண்டும் கூற வேண்டுமென்று விரும்பு கிறேன். முதல் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை—அதாவது எலிமென்டரி எடுகேஷன், மிடில் எடுகேஷன்—எந்த அளவுக்கு நாம் கவனம் செலுத்திப் பாடம் சொல்லிக் கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு அந்த மாணவர்களுடைய அறிவு மிகவும் நல்ல முறையில் அமையும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன். இந்த அடிப்படைக் கல்வி கற்றுத் தருவதில் நாம் அதிக அக்கறையும் கவனமும் செலுத்தினால்தான் பிற்காலத்தில் அவர்கள் கல்லூரியில், கலாசாலையில் படிக்கிறபோது நல்ல முறையில் பரிமளிக்க முடியும். அப்படி அவர்களுக்கு நன்கு பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு வழி வகுக் கும் வகையில் அந்த மிடில் ஸ்கூல், எலிமென்டரி ஸ்கூல் உபாத்தியாயர் களுக்கு கோடைக்கால விடுமுறை நேரங்களில் பயிற்சி கொடுக்க வேண்டும். இப்போது கல்லூரி ஆசிரியர்கள் கோடைக்காலங்களில் பயிற்சி பெறுவ தற்காக அதிகப் பணத்தை ஒதுக்கியிருப்பதை பார்க்கிறோம். இதே போல் எலிமென்டரி ஸ்கூல், மிடில் ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கும் பயிற்சி கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சொந்த அனுபவத்தை வைத்துக்கொண்டுதான் சொல் கிறேன். 8-வது வகுப்பு வரை ஒரு பையன் பலகீனமாக இருந்தால் அவன் மேலே வருவதற்கு முடிவதில்லை. ஆகவேதான் இந்த 8-வது வகுப்பு வரையில் உள்ள மாணவர்களுக்கு நல்ல வகையில் பாடம் புகட்டுவதற்காக, அந்த மிடில் ஸ்கூல் உபாத்தியாயர்களுக்குச் சிறப்பு பயிற்சி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாமலை சர்வகலாசாலைக்கு ரூ. 4 லட்சம் கொடுத்ததைப் பற்றி மாண்புமிகு அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அதை நான் முழுமையாக வரவேற்கிறேன். தனியார் கல்லூரி வளர்ந்து வருவது நல்லதல்ல. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். மட்டுப்படுத்த வேண்டும். அதனுடைய லகானை எப்படிப் பிடிக்கலாமென்று நாம் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, அவைகள் வளர்வதற்கு ஒத் தாசை செய்வது சரியல்ல. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எப்படிச் செயல்படுகிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் சென்ட்

மெம்பராக 2–3 வருஷம் இருந்து இருக்கிறேன். அது ஒரு பண்ணை மாதிரி நடந்து வருகிறது. அதற்குப் பணம் கொடுப்பது சரியல்ல. தனியார் கல்லூரிகளுக்கு அரசாங்கம் தரும் மானியங்களை எப்படிச் செலவழிக்கின்றன என்பது நமக்குத் தெரியும். அப்படி நிலைமைகள் எல்லாம் நமக்குத் தெரிந்திருந்து, அதைப் பற்றி நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அதை அதிகப்படுத்துவது சரியல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் உள்ள வங்கிகள் கிட்டத்தட்ட ஆளும் கட்சியின் சொந்த இலாகாவாக செயல்படுகின்றன. அண்மையில் பேசிய திரு.சி. சுப்பிரமணியம் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களுக்காக நடத்தப்படுகிறது என்று பேசியிருக்கிறார்கள். அவர் அப்படிப் பேசுகின்ற கொள்கையை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த விஷயத்தை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். [சீசர்ஸ் ஒய்ப் ஷுட் பி அபொவ் சஸ்பிஷன்] சீசருடைய மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும். உங்களுடைய கட்சி பல நல்ல காரியங்களைச் செய்து இருந்த போதிலும், இப்படிப்பட்ட புகார்கள் வாராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவுத் துறையில் மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களையும், அதனுடைய அக்கறையிலே நாட்டம் கொண்டவர்களையும் நல்ல முறையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்</u> : ஒன்றைக் கூற விரும்புகிறேன். பக்கத்தில் நண்பர் அழகர்சாமி அவர்கள் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். இப்போது வெளியே போய் இருக்கிறார்கள். அவர் நெல்லை மாவட்ட மத்திய வங்கியின் இயக்குநர்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி</u> : என்னுடைய கட்சியைச் சார்ந்தவர் மத்திய வங்கியில் இயக்குனராக இருக்கிறார் என்பது வேறு. அப்படி ஒரு பேச்சு இருக்கிறது. அது வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று பொதுப்படையாக நான் சொல்கிறேன். நானும் பல புள்ளி விவரங்களைத் தர முடியும். நான் நல்லெண்ணத்தோடுதான் அந்தக் கருத்தைக் கூறினேன். அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகளுக்கு மனைக்கட்டு கொடுக்கும் விஷயத்தில் கலைஞர் அவர்கள் மிக மிக நல்ல சாதனையைச் செய்து இருக்கிறார்கள். வருங்காலம் நிச்சயமாக அவர்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும். அது மாநிலம் பூராவும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உழவனுக்கு நிலம் கொடுப்பதில் மாண்புமிகு ரெவின்யூ மந்திரி அவர்கள் மிகவும் தயக்கம் காட்டுகிறார்கள் என்பது என் குற்றச்சாட்டு. அதிலே நீங்கள் உஷாராக நடந்துகொள்ள வேண்டும். பாவத்தைக் கட்டிக்கொண்டு போக வேண்டாம். இந்த நேரத்தில் ஒரு நல்ல காரியத்தைச் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.



தஞ்சை ஜில்லாவில் இந்த வடிகால் வசதி சம்பந்தமாக ரொம்பத் தயக்கம் இருக்கிறது. மார்டனைசேஷன் என்று சொல்லும் நவீனப் படுத்தும் முறையானது ஏன் இவ்வளவு தாமதமாகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. போதிய பணம் இருக்கிறது. கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டம் வருகிறது என்று சொல்கிறபோது டிரைனேஜ் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து—பஞ்சாப் மாநிலத்தில் எடுத்ததைப் போன்று—விஞ்ஞான ரீதியில் நடவடிக்கை எடுத்து, தஞ்சாவூர் பகுதியில் வசதி செய்து கொடுத்தால் தஞ்சையில் நிச்சயமாக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அரசு அதை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற் துறையில் இருக்கும் அமைதியின்மையைப் பற்றி பல பேர் எடுத்துச் சொன்னார்கள். கலைஞர் அவர்கள் பல நடவடிக்கைகளை எடுத்து ஒவ்வொன்றாகத் தீர்த்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இவ்வளவுக்கும் பிறகு ஆரவாரம் இருக்கிறது, கொந்தளிப்பு இருக்கிறது. அதிலே சில அடிப்படை அம்சங்கள் இருக்கின்றன. அந்த அடிப்படை அம்சங்களை யெல்லாம் நீக்கி, சில அடிப்படை ஏற்பாட்டை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் பற்றி திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கூட பேசியிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு காலையில் எழுந்திருந்தால் ஒரு தொழிற்சாலை மூடப்படுகிறது என்று பேசியிருக்கிறார்.

பஞ்சப்படி, சம்பள உயர்வு சம்பந்தமாக இன்றைய தினம் மறுபடியும் அனோமலீஸ் கமிஷன் போட வேண்டுமென்று சொல்லும் அளவுக்கு பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. இன்று கருப்புத் துணியை மாட்டிக் கொண்டு பல உத்தியோகஸ்தர்கள் இருப்பதைப் பார்க்கிறோம். அதற்கு சரியான பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தத் துணை மதிப்பீடு ஒன்றும் அதிகப்படியானதல்ல. 400 கோடி ரூபாய் வருமானம் வருகிற நிலையில் 8 கோடி ரூபாய்க்கு துணை மதிப்பீடு வருவது என்பது பெரிதல்ல. தவறு என்பதும் இல்லை. ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு நிலைமையை உண்டுபண்ணியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஏற்படுத்திய பணிகளைத் தொடருவதற்கும், மீதியுள்ள பணிகளை நல்ல முறையில் செய்வதற்கும், பொதுவாக நல்ல முறையில் காரியங்களைச் செய்வதற்கும் நல்ல முறையில் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி</u> : கனம் அமைச்சர் அவர்கள் நான் நெல்லை மாவட்ட மத்திய வங்கியில் இயக்குனராக இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார். நான் தேர்தலிலே நின்று ஜெயித்து இயக்குனர் பதவிக்கு வந்தவன். எங்கள் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது அரசாங்கம் நியமிக்கும் விஷயம் குறித்துதான். அதிலேதான் பல கட்சியைச் சார்ந்தவர்களையும் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : உங்களுக்கு என் பாராட்டுதல்கள்.

Dr. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir I shall very briefly touch one or two points and finish off.

With regard to Education, I fully endorse the views expressed by the hon. Member, Mr. Krishnamoorthy. But I want to know from him or from the Ruling Party whether it is not a fact that when he makes that statement about the Pachiappa's Colleges, the Trustees of the College belong to the Ruling Party? That fact has to be borne in mind. I shall not waste the time of the House, and, endorse the views of the hon. Member.

I would also request the Hon. Minister for Education and the Hon. Chief Minister to take necessary action to prevent such irregularities. In fact many of those things were gone into by the Administrative Staff College and a report has been given. They have come and investigated the entire Education system in Tamil Nadu and they have come to so many conclusions. They have stated that what is being carried out in the State could be termed as maintenance administration. 'There is no conscious or deliberate attempt to develop a dynamic and purposive management of education, consisting of meaningful planning, organisation, co-ordination and control. We are unable to find out any efficient mechanism by which effective control of management of education is carried out. The Government is spending nearly Rs. 90 crores per annum. Whether this amount has been utilised properly and produced expected results. No.' This is what they have said in their report. " The organisational structure of education is very diffuse and there is a highly centralised form of administration." They have also passed several strictures on the State Government. They say: " Unless the entire department is streamlined, the structure is re-organised and the pattern of education is re oriented, the 90 crores of rupees spent on education will be a waste.

" The Madras University has lost its leading position in the intellectual life of the country and fewer candidates from the State than before prove successful in the I.A.S. and other All India Examinations." In other words, they have a passed scathing remark. No statement has been given either by the Education Minister or the Education Department to rebut these very serious charges levelled against the Education system and the University



Then, Sir, another important matter is in regard to Police. In spite of the Chief Minister's assurance that all cases would be withdrawn, in Kaveripatnam, 66 persons are still in lock-up. This is in spite of the orders of the Hon. Chief Minister. The D.M.K. people there say that these persons would not be let out unless some money was paid either to the Police Department or other agencies. This is a very serious matter and I request the Hon. Chief Minister to immediately enquire into the matter and render justice.

Then I come to another point which certainly should be discussed for hours together. Even though the Tamil Nadu Government has been in season and out of season, talking about the State autonomy, whatever money that has been placed into the hands of the Government, is not being properly utilised. For instance, the World Bank has given loans for Farm Schemes for the whole country to the tune of about Rs. 236 crores and out of that, Tamil Nadu has been given some amount. But we are told that not a single pie has been spent. In other words the amount which has been handed over by such an important organisation like the World Bank has not been spent. Sir, I will talk on this matter for hours together......

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, the hon. Member, Dr. Hande has referred to the state of affairs which existed in June 1971. But the scheme was started only in November 1971. So, let not the hon. Member please go by the statistics relating to 1971.

DR. H. V. HANDE: In June 1971 it is cipher........

THE HON. THIRU Si. Pa. ADITANAR: In June 1971 this scheme was not in existence. The scheme was started only on 2nd November 1971.

DR. H. V. HANDE: What is the figure now? The hon. Minister has not given the figure.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The hon. Member can elicit information by giving notice of a question.

DR. H. V. HANDE: If I give notice of a question, you will answer it after ten months.

Then I come to T.U.C.S. and its affairs are in a deplorable state. The Hon. Minister himself has admitted that its accounts are not properly kept. This is a serious thing and he must be taken to task for that. The loss from July 1970 to June 1972 is estimated at Rs. 20 lakhs. There is heavy pilferage of goods. There is also heavy misappropriation of sales tax collected. There are no funds to make payments to merchants for goods supplied. There are also no stocks even to the value of loan received from Bank. There are also heavy stocks of unsold items lying at Kamadhenu for the last so many years. No dividend has been given to members after 1970. No action has been taken against defaulters. The National Consumers' Co-operative Federation Officer, Mr. Mani, is afraid of closure in a year if things are not checked and set right immediately. These are some of the defects noticed in the working of the society and I am sure the Hon. Minister will set them right. With these words, I conclude my speech.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார்: துணைத் தலைவர் அவர்களே, இந்தத்
துணை மானியக் கோரிக்கையை விவாதிக்கும்பொழுது என்னுடைய
கட்சியின் சார்பாக பல கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறினார்கள்.
இறுதியாக நான் ஓரிரு காரியங்களைச் சுட்டிக்காட்டி முடிக்க விரும்புகிறேன்.

முதலில் நம்முடைய மாநிலத்தில் இன்னும் உயர்நீதி மன்றத்தில்
தலைமை நீதிபதியை நியமனம் செய்வதற்கு அரசாங்கம் வேண்டிய
நடவடிக்கை காலாகாலத்தில் எடுக்கவில்லை என்ற ஒரு கருத்து பத்திரிகை
களின் மத்தியிலும் பொது மக்கள் மத்தியிலும் இருந்துகொண்டே
இருக்கிறது. இப்பொழுது இருக்கும் தலைமை நீதிபதி சில வேலைகள்
காரணமாக வெளி நாட்டிற்குச் சென்றிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கு இருக்கக்கூடிய வேலைகளெல்லாம் ஒழுங்காக நடத்துவதற்கு ஒரு
துணை சீஃப் ஜஸ்டிஸ் நியமனம் செய்யவில்லை என்ற ஒரு கருத்து நிலவி
வருகிறது. அதனால் பல வேலைகள் நின்றிருக்கின்றன. உதாரணத்
திற்குச் சொல்லப்போனால் பெஞ்ச் கான்ஸ்டிடியூட் பண்ணமுடியாத
நிலைமை இருக்கிறது. ஒருவரும் சீஃப் ஜஸ்டிஸ் சார்ஜில் இல்லாததினால்
அந்த வேலை நடக்க முடியாத சூழ்நிலை. சட்டச்சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.
அதே மாதிரிதான் டாக்ஸ் பெஞ்ச் ஏற்படுத்தப்படவில்லை; பல ஆண்டு
காலமாகிவிட்டது. டாக்ஸ் பெஞ்ச் ஏற்படுத்தப்படாததினால் டாக்சேஷன்
கேஸ்கள் அதிகமாக குவிந்தவண்ணம் இருக்கின்றன. ஆதலால் அவை
களைப் பைசல் செய்வதற்கு உடனடியாக டாக்ஸ் பெஞ்ச் நியமனம் செய்
வதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, உயர்நீதி மன்றத்திலே பல வழக்குமன்றங்கள் பல
இடங்களுக்கு மாற்ற வேண்டும், புதியதாக வழக்கு மன்றங்கள் அமைக்கப்
படவேண்டும் என்ற பல சிபார்சுகளும் இன்னும் தூங்கிக்கொண்டிருக்
கின்றன. துணை மான்யத் கோரிக்கையைப் பார்க்கப்போனால், "ஷிப்டிங்
ஆஃப் ஸப் கோர்ட் அட் உடுமல்பேட்" என்ற தலைப்பின் கீழ், அதற்குக்
கொஞ்சம் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். மாநிலத்திலுள்ள பல பகுதி
களிலும் ஸப் கோர்ட்டுகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று பல இடங்
களிலிருந்து பல கோரிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். ஆனால், அதற்
கெல்லாம் காலாகாலத்தில் வேண்டிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை.
உதாரணமாக, என்னுடைய தொகுதியில் குழித்துறைப் பகுதியிலே ஒரு
ஸப் கோர்ட்டு வேண்டும் என்று பார் அசோஸியேஷனில் தீர்மானம்
நிறைவேற்றி சட்ட அமைச்சர் அவர்களை அணுகி, அவர்களும் அந்தத்
தீர்மானத்தைப்பற்றி பரிந்துரை செய்து, அதெல்லாம் இப்பொழுது
ஹைகோர்ட்டில் தூங்கிக்கொண்டிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன்.
அதன்பேரில் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒன்று உடனே உண்டு
என்று சொல்லவேண்டும் அல்லது இல்லை என்று மறுத்துவிட்டாலும்
பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்பிகிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசி அதிகரித்துக்கொண்டே போகிறது.
15 என்பது 25 ஆகக்கூடியிருக்கிறது. 30 என்பதாக இருந்தது 40 ஆகக்
கூடியிருக்கிறது. இப்பொழுது ரூ. 6 கோடி மொத்த அளவில் செலவு
செய்திருப்பதாக அரசாங்கத் தரப்பில் கூறிவருகிறார்கள். ஆனால்,
பொதுவாக, ஊழியர்கள் மத்தியில் இது போதாது என்ற ஒரு கருத்து
நிலவி வருகிறது. எக்சைஸ் வருமானம் அபரிமிதமாக வந்துக்கொண்டி
ருக்கிறது. ரூ. 40 கோடிக்கு மேல் எக்சைஸ் வருமானம் வருகிறது.
அதற்கும் கூடுதலாக வருகிற சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு
அரசு சற்று தாராளமாக இவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பைசல்
செய்வதற்கு முனைந்திருக்கலாம் என்ற கருத்தினை நான் இங்கே
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

I would like to say. Sir, that the Anomalies Commission has created further anomalies.

என்ற ஒரு குற்றச்சாட்டு பொதுவாக இருந்துக்கொண்டிருக்கிறது.
ஆதலால் சில ஊழியர்கள் செகரேடேரியட் ஊழியர்கள் மட்டுமல்ல,
இன்னும் வெடரினரி டாக்டர்கள், B.T. அசிஸ்டெண்ட்ஸ் போன்றவர்கள்
எல்லாம் தங்கள் குறைகள் தீர்க்கப்படவில்லை என்று சொல்லிகொண்டி
ருக்கிறார்கள். வெடரினரி டாக்டர்கள் சம்பந்தமாக அவர்கள் ஊதியம்
மிகவும் குறைவாக இருக்கிறது. ரூ. 100-க்கு மேல் குறைவாக இருக்
கிறது. அதே வேலை செய்கின்ற எம்.பி.பி.பிஸ். டாக்டர்களை விட அவர்
களுக்கு ஊதியம் குறைவாக இருக்கிறது. இந்தக் கமிட்டியானது நிருவப்
பட்ட உடனே பி.டி. அசிஸ்டெண்டுகளுக்கெல்லாம் மகிழ்ச்சியான செய்தி
வரும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால்
அவர்கள் இப்பொழுது திருப்திபட்ட நிலைமையைக் காணோம். பல
ஊழியர்களின் மத்தியில் இம்மாதிரியான அதிருப்தியான நிலைமை நிலவி

வருகிறது. அகவிலைப்படி உயர்த்தப்பட்டிருந்த போதிலும், வாழ்க்கைக்கு
அத்தியாவசியமாக இருக்கின்ற பண்டங்களின் விலை விஷம் போல் ஏறிக்
கொண்டிருக்கிற நிலைமை இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு
எவ்வளவு ஊதிய உயர்வு கொடுத்தாலும் கட்டுபடியான நிலைமையில்
இருக்கவில்லை என்ற கருத்து அவர்களிடையே நிலவி வருகிறது. அவர்
களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கப்பட்ட போதிலும், அத்தியாவசியமான
பண்டங்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்
வதற்கு அரசு முன்வரவேண்டும். சர்க்கார் ஊழியர்களுக்கு மட்டுமல்ல.
பொதுவாக கன்ஸ்யூமர் கோவபரேடிவ்ஸ் மூலம் இந்த ஆலோசனையை
அமுல் நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்
ஆதலால், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, வெடரினரி கல்லூரியில் ஒரு ஹாஸ்டல் இருக்கிறது.
அதை நான் ஒரு சமயம் பார்ப்பதற்கு நேர்ந்தது. அங்கு இருக்கிற வசதி
களெல்லாம் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஒரு ரூமில் மூன்று
நான்கு பேர்கள் என்ற முறையில் இருக்கவேண்டியதாக இருக்கிறது.
எக்குவிப்மெண்டு போதாத நிலை இருக்கிறது. ஆதலால் அந்த
நிலைமையை சீர்திருத்துவதற்கு அரசாங்கம் வேண்டிய முயற்சிகளை மேற்
கொள்ளவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இரண்டு பணிகளுக்கு தொகை ஒதுக்கியிருப்பது பற்றிக் கூறுவதற்
குக் கடமைப்பட்டிருக்கிறேன். பக்கம் 34-ல் தஞ்சாவூர் மார்கெடிங்
பெடரேஷனுக்கு ரூ. 27,28,000 ஒதுக்கியிருக்கிறார்கள்.

**“ Government have sanctioned the contribution of Rs. 27,28,000 to wards the accepted capital overrun of the Modern Rice Mills to by the Thanjavur Co-operative Marketing Federation, Limited, Tiruvarur.”**

என்ற ஒரு தலைப்பு இருக்கிறது. அதே மாதிரி தஞ்சாவூர் கோவாபரேடிவ்
மார்கெடிங் பெடரேஷன் லிமிடெட்டுக்கு பக்கம் 44-ல் “**Ways and Means**
**Advance**” என்ற தலைப்பில் ரூ. 72,72,000 ஒதுக்கப்பட்டிருப்
பதையும் பார்க்கிறோம். இந்த மார்க்கடிங் பெடரேஷனைப் பொருத்த
மட்டில் பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி அது காலா காலத்தில்
கணக்கு சரியாக தரவில்லை என்றும், அதிலே பல ஊழல்கள் இருக்கிறது
என்றும் சொல்லிவந்தது. அக்கவுண்டிங் கேட்ட பொழுதும் அவர்கள்
கொடுக்கவில்லை என்று எல்லாம் சொல்லப்பட்டது. இதற்கு முன்னதாக
இந்த மன்றத்திலே சமர்ப்பித்த அந்த பப்ளிக் அகவுண்ட்ஸ் கமிட்டி
ரிபோர்ட்டிலே எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதைப் பற்றியும் சற்று
ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தக் கூட்டுறவு
சங்கங்களிலே இருக்கிற ஊழல்களைப் பற்றி நல்ல முறையிலே கண்காணிக்க
அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளு
கிறேன்.



அடுத்தபடியாக, இந்த ரெவின்யூ இலாக்காவை பொறுத்தவரையில் வில்லேஜ்கர்ணங்களுக்கு “ ஸ்பெஷல் அலவன்ஸ் ” கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இன்று இருக்கிற நிலைமையில் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிற வில்லேஜ் ஆபீசர்ஸ் எல்லாம் திருவிதாங்கூர்–கொச்சி பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை. அதாவது பென்ஷன் கிடைக்கவில்லை. அவர்கள் இது குறித்து பல மனுக்களை அரசாங்கத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். இன்னமும் பலர் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். 10, 15 வருஷம் சர்வீஸ் ஆனவர்கள் எல்லாம் கூட அப்படி இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பென்ஷனுக்கு இலாயக்கு உடையவர்கள் அல்ல என்று ஏ.ஜி.’ஸ். ஆபீசிலே இருந்தும், மற்ற அலுவலகங்களில் இருந்தும் பதில் வந்தவண்ணமாக இருக்கிறது. அவைகளை எல்லாம் நீக்கும் நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, மோட்டார் வெகிகிள் சர்டிபிகேட் சம்பந்தமாக. இன்று ஆம்னி பஸ்கள் அதிகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அதனால் அதை சரியான முறையில் கண்காணிக்க வேண்டும். அப்பொழுதுதான் தேசீய உடமை ஆக்கப்பட்டிருக்கும் இந்த டிரான்ஸ்போர்ட் சிஸ்டம் ஒழுங்கான முறையிலே இயங்க ஏதுவாகும். இல்லை என்றால், அது பெருத்த நஷ்டத்திலே நடக்க ஏதுவாகும் என்று சொல்லிக்கொள்வேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தையும் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். “ டிஸ்ட்ரிக்ட் பிளானிங் செல் ”. அவர்கள் என்ன வேலை செய்திருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்திலே ஏதோ சில வேலைகள் செய்திருக்கிறார்கள்? அவர்கள் எல்லா ஜில்லாக்களிலேயும் என்னென்ன பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே அரசாங்கம் வைக்குமானால், அதன் மீது விவாதம் செய்ய உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, “ லிங்க் ரோடுகளுக்கு ” 3 கோடி ரூபாய் என்ற அளவிலே இந்த துணை மானியக் கோரிக்கையிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1,500 ஜனத் தொகை இருக்கிற கிராமங்களுக்கு எல்லாம் இந்த லிங்க் ரோடுகள் வரும் என்ற கருத்திருக்கிறது, அதிலேயும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு பாடமாக இருக்கிறது. குறிப்பாக எங்கள் ஜில்லாவிலே இந்த கிராம அமைப்பு சரியாக இல்லை. பஞ்சாயத்து பிரிவினை என்ற பெயரால் “ பால்கனேசேஷன் ” நடந்துவிட்டது. ஆகவே, இந்த விதியை அப்படியே அமுல் நடத்தினால் அங்கே எல்லாம் ஒரு அங்குலம் கூட ரோடு போடமுடியாது. இதை அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, நேஷனல் ஹைவேஸ் ; அதிலே 5 டிவிஷன்ஸ் அமைக்கப் போகிறார்களாம் ; 20 சப்-டிவிஷன்ஸ் அமைக்கப் போகிறார்களாம். இன்று பல இடங்களிலே பாலங்களை வெட்டி வைத்திருக்கிறார்கள். அதை துரிதமாக வேலை நடத்த அரசாங்கம் தாக்கீது செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பென்ஷன் பற்றி ஒரு வார்த்தை. பல ஆசிரியர்கள் பென்ஷன் பெற்றிருக்கிறார்கள். 1960-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாளுக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களிலே சிலருக்கு எந்தவிதமான பென்ஷனும் கிடைக்கவில்லை. அவர்களுக்கும் எல்லா உதவியையும் செய்ய வேண்டும். கடைசியாக, எங்களுடைய ஜில்லாவிலே ஒரு ஆர்.டி.ஓ. என்கொயரிநடந்தது. வேலப்பன் என்ற நபர் லாக்கப்பிலே கைதுசெய்யப்பட்டு வைத்து, அவர் ஏதோ மர்மமாகக் கொல்லப்பட்டார் என்ற நிலைமை வந்து அதன் மீது என்கொயரி நடந்ததாக நான் அறிகிறேன். அது சம்பந்தமாக எந்த ஆணையும் இதுவரை பிறப்பிக்கப்படவில்லை. அது கவனிக்கப்படவேண்டும்.

பல புதிய பணித் திட்டங்களுக்காக அதிக பணத்தை செலவிடும் பொழுது எங்களுடைய ஜில்லாவையும் சற்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய பேச்சை முடிப்பதற்கு முன்னால் ஒன்றை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களை இரண்டாம் தர குடிமக்களாக நோக்கக்கூடாது என்று இந்த சந்தர்ப்பத்திலே கூறி, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவையின் முன்னால் வைக்கப்பட்ட இந்த முதல் துணை மதிப்பீடுகள் பற்றி ஆளும் தரப்பிலேயும் மாற்று கட்சிகளின் தரப்பிலேயும் உள்ளவர்கள் இந்தக் கோரிக்கையைப்பயன்படுத்திக்கொண்டு தங்கள் தங்கள் தொகுதிகளிலே நடைபெறவேண்டிய பணிகளைப் பற்றியும், அவைகளுக்கு அரசு எடுக்க வேண்டிய முயற்சிகளைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் கவனித்து ஏற்ற வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மார்ச் மாதம் 1-ஆம் தேதிதான் வரவு-செலவுத் திட்டத்தை இந்த அவை முன்னால் வைத்துவிட்டு, மறுபடியும் ஒரு துணை மானியக் கோரிக்கையை இவ்வளவு விரைவிலேயே கொண்டுவருவது சரிதானா என்று ஆளும் தேசிய காங்கிரஸைச் சேர்ந்த துணைத் தலைவர் அவர்கள் இங்கே கேட்டார்கள். அவர்கள் இங்கே எதிர்கட்சி வரிசையிலே இருக்கின்ற காரணத்தினால், ஆளும் கட்சிக்கு இப்படிப்பட்ட நிலைமைகள் அடிக்கடி ஏற்படும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்திருந்தாலும், ஆளும் கட்சியான டெல்லியிலே இருக்கிற காங்கிரஸ் கட்சி இப்படிப்பட்ட துணை மானியக் கோரிக்கைகள் வரவேண்டிய நிலையில்தான் இருக்கிறது என்பதை நன்றாக அறிவார்கள். 1961-62-ஆம் ஆண்டிலே கூட இப்படிப்பட்ட முதல் துணை மதிப்பீடுகள் 19.73 கோடி ரூபாய்க்கு கொண்டு வரப்பட்டன. 1966-67-லே முதல் துணை மானியக் கோரிக்கை 20.72 கோடி ரூபாய்க்கு கொண்டுவரப்பட்டது. இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையின் மொத்த மதிப்பீடு 8 கோடியே 97 இலட்சம் ரூபாயாகும்.

இதிலே "புதிய பணிகள் என்று ஏற்கனவே திட்டமிட்டபடி பழைய பணிகளுக்கு நீங்கள் மீண்டும் பணத்தை ஒதுக்கி இருக்கிறீர்கள்" என்கின்ற ஒரு குற்றச்சாட்டை திருமதி அனந்தநாயகி அம்மையார்





அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அது சரி இல்லை. புதிய பணிகள் பலவற்றை நாம் முதல் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த பிறகு ஏற்றுக்கொள்ளவேண்டிய சூழ்நிலைக்கு ஆளானோம். பொதுவாக வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி அதை மாநிலங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கோரினார்கள். முதல் வரவு-செலவுத் திட்டத்திலே வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கும், இணைப்புச் சாலை அமைப்பதற்கான திட்டங்களையும் முன்பே இந்த அவையிலே அறிவித்திருந்தாலும்கூட மத்திய அரசு மே மாதத்திற்குப் பிறகு அந்தத் திட்டத்தை அறிவித்ததன் அடிப்படையில் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக $4\frac{1}{2}$ கோடி ரூபாய் நாம் ஒதுக்கவேண்டிய சூழ்நிலைக்கு ஆளானோம். அந்த $4\frac{1}{2}$ கோடி ரூபாயில் மத்திய அரசாங்கமே சரிபாதி தருவார்கள் என்றாலும் அவர்கள் தருவதை எதிர்பார்த்து முன்கூட்டி நாம் செலவிட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, இந்தத் துணை மதிப்பீட்டு கோரிக்கையின் மொத்தத் தொகையான 9 கோடி ரூபாயில் $4\frac{1}{2}$ கோடி ரூபாய் இந்த வகையிலே இங்கே கேட்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கமே வெளியிட்டுள்ள திட்டங்களை மத்திய அரசாங்கமே நிறைவேற்றாமல், அதிலே மாநில அரசும் தன்னுடைய பங்கைச் செலுத்துமாறு இந்த துணை மதிப்பீட்டில் கோரப்பட்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு பிரச்சினைகள் இங்கே சொல்லப்பட்டன. எனக்களிக்கப்பட்ட நேரத்திலே 5 நிமிட நேரம்தான் மிச்சம் இருக்கிறது. வரையறுக்கப்பட்டிருக்கின்ற நேரத்திற்குள் நான் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லுவது என்றால், இயலாத காரியம் ஆகும். பொதுவாக இப்பொழுது சூடாக இருக்கிற பிரச்சினை, இரண்டாவது சம்பளக் குழுவுக்கு பிறகு ஏற்பட்டுள்ள சில முரண்பாடுகளை நீக்க "ஒன் மேன்" கமிஷன் வெளியிட்டுள்ள பரிந்துரையும், அதையொட்டி அரசு எடுத்த முடிவுகளும் எல்லோருக்கும் அதிருப்தி அளிக்கக்கூடிய வகையிலே இருக்கிறது என்று இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். இரண்டாவது சம்பளக் குழு தனது சிபாரிசுகளை அறிவித்த நேரத்தில், இந்த அரசு 22 கோடி ரூபாய் வழங்கி இருக்கிறது; அதற்குப் பிறகு அண்மையிலே 3 அல்லது 4 திங்களுக்கு முன்பு மேலும் 10 ரூபாயை அகவிலைப் படிக்காக உயர்த்திய நேரத்திலே 6 கோடி ரூபாய் வழங்கி இருப்பதும், இப்பொழுது சட்ட சபையிலே அறிவித்த வகையிலே 5 கோடி ரூபாய், ஆக கிட்டதட்ட 33 கோடி ரூபாயை அரசு அலுவலர்களுக்காக வழங்குகின்ற அந்த நிலையை நாம் உருவாக்கி இருக்கிறோம். இப்பொழுது அதிருப்தி என்று தெரிவிக்கின்றவர்களுக்கு ஒரு சில புள்ளி விவரங்களை அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

செக்ரட்டேரியேட் அஸிஸ்டெண்ட் இன்றைக்கு இந்த அறிவிப்பிற்குப் பிறகு பெறுவது "பே பிளஸ் டி.ஏ. 340-லிருந்து மேக்சிமம் பே பிளஸ் டி.ஏ. 540 ரூபாய் தமிழ் நாட்டில். ஆந்திரப் பிரதேசத்தில் அவர்களுக்கு பே பிளஸ் டி.ஏ. 286 ரூபாய், மினிமம்; மேக்சிமம் 462 ரூபாய். மைசூரில் 312 ரூபாய் மினிமம்; மேக்சிமம் 461 ரூபாய். கேரளாவில் 259 ரூபாய் மினிமம்; மேக்சிமம் 463 ரூபாய். ஆக இந்த நான்கு மாநிலங்களில் அதிகமாக செக்ரட்டேரியேட் அஸிஸ்டெண்ட் பெறுவது நம்முடைய மாநிலத்தில்தான் என்பதை நான் சுட்டிக்

காட்ட விரும்புகிறேன். அதைப் போலவே செக்ரட்டேரியேட் சூப்பிரன்டென்டென்ட் ஆந்திரப் பிரதேசத்திலே 462 ரூபாய் மினிமம், மேக்சிமம் 735 ரூபாய்; மைசூரில் அவர்களுக்கு 436 ரூபாய் மினிமம், மேக்சிமம் 685 ரூபாய். கேரளாவில் 456 ரூபாய் மினிமம், மேக்சிமம் 720 ரூபாய்; தமிழ் நாட்டில் செக்ரட்டேரியேட் சூப்பிரன்டென்டென்ட்டுகளுக்கு 465 ரூபாய் மினிமம், மேக்சிமம் 790 ரூபாய். அதைப் போலவே அக்ரிகல்சரல் டெமான்ஸ்ட்ரேட்டர்களுக்கு தமிழ் நாட்டில் 415 ரூபாய் மினிமம், மேக்சிமம் 690 ரூபாய். ஆந்திரப் பிரதேசத்தில் 336 ரூபாய் மினிமம், மேக்சிமம் 576 ரூபாய். மைசூரில் 411 ரூபாய் மினிமம், மேக்சிமம் 679 ரூபாய். கேரளாவில் 423 ரூபாய் மினிமம், மேக்சிமம் 694 ரூபாய். இந்த செகண்டரி கிரேடு டீச்சர்களுக்கு தமிழ் நாட்டில், ஆர்டினரி கிரேடு 235 ரூபாய் மினிமம், மேக்சிமம் 365 ரூபாய், செலக்ஷன் கிரேடு 275 ரூபாய் மினிமம், மேக்சிமம் 440 ரூபாய். ஆந்திரப்பிரதேசத்திலே அவர்களுக்கு 208 ரூபாய் மினிமம், மேக்சிமம் 336 ரூபாய். மைசூரில் 205 ரூபாய் மினிமம், மேக்சிமம் 362 ரூபாய். கேரளாவில் 214 ரூபாய் மினிமம், மேக்சிமம் 333 ரூபாய். இன்னும் பட்டியல் இப்படி இருக்கிறது.

எல்லா மாநிலங்களையும் விட—தென் பகுதியிலே இருக்கிற எல்லா மாநிலங்களையும் விட அரசாங்க ஊழியர்களுக்கு அதிகப் பயன் பெறுகின்ற வகையிலே சம்பளம் தருகின்ற மாநிலம் தமிழ் நாடு ஒன்றுதான் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், குட்டக் குட்டக் குனிகிறார்கள் என்கின்ற காரணத்தாலோ என்னவோ அல்லது கேட்டால் தருகின்ற அளவிலே இருக்கின்றார்கள் என்ற நிலையிலோ அல்லது எந்த ஒரு சிறு பிரச்சினையானாலும் பிரதமர் இந்திரா காந்தி சொன்னது போல் எதிர்க் கட்சிக்காரர்களெல்லாம்இங்கே அணிவகுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையின் காரணமோ என்னவோ, தமிழ் நாட்டிலே இருக்கிற அரசு அலுவலர்கள் திருப்தி இல்லை, திருப்தி இல்லை என்று தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லா மாநிலங்களையும் மிஞ்சக்கூடிய அளவில்தான் நாம் நம்முடைய சம்பளக் கமிஷன் மூலமாகவும், அதற்குப் பிறகு அளித்திருக்கக் கூடிய அறிவிப்பு
பகல் 00. கள் மூலமாகவும், ஊதிய உயர்வுகளை அரசாங்க அலுவலர்களுக்கு செய்து கொண்டு வருகிறோம் என்பதை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இதற்கு மேலும் போராட்டங்கள், கறுப்புத் துணி அணிவது என்றால் நாங்களும் கறுப்புத் துணி அணிய வேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம். இதற்கெல்லாம் பணம் கேட்டு, மத்திய சர்க்கார் பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, நாங்களும் கறுப்புத் துணி அணிவதைத் தவிர வேறு வழியில்லை. இந்த அளவுக்குத்தான் இப்போது செய்ய முடியும். இதற்கு மேல் செய்ய முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

400 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள் 500 ரூபாய் வேண்டுமென்று கேட்டால், அதிலே இருக்கின்ற வித்தியாசம் 100 ரூபாய். இந்த 100 ரூபாய் கூட வருமானம் பெறாத ஏழை எளிய மக்கள் ஏராளமானவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள் என்பதையும் அரசு அலுவலர்கள் மன்றிலே கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இங்கு கூறப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கும் நான் பதில் சொல்ல வேண்டுமென்று இருந்தாலும், நேரம் இல்லாததால் பிறிதொரு சமயத்தில் பதில் சொல்லிக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்களும் எதிர்க் கட்சித் தலைவர்களும் இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் விவாதம் முடிவுற்றது. இப்பொழுது மானியக் கோரிக்கை மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

(5) 1972-73-ம் ஆண்டிற்கான கூடுதல் செலவு குறித்த முதல் துணை நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

## A. Expenditure on Revenue Account

### *Demand No. 1—Land Revenue Department.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand 1—Land Revenue Department. "

The Demand was put and carried and the Grant was made.

### *Demand No. 2—Motor Vehicles Act—Administration.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand 2—Motor Vehicles Act Administration ."

The Demand was put and carried and the Grant was made.

### *Demand No. 3—General Sales Tax and Other Taxes and Duties —Administration.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 400 under Demand 3—General Sales Tax and Other Taxes and Duties Administration. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 95,64,900 under Demand 8—Head of State, Ministers and Head quarters Staff. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 8-A—Milk Supply Schemes.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand 8-A—Milk Supply Schemes. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 9—District Administration and Miscellaneous.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 1,200 under Demand 9—District Administration and Miscellaneous. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand 9-A. Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. "

The Demand was put and carried and the Grant was made.



*Demand No. 10—Administration of Justice.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand 10—Administration of Justice. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 12—Police.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 700 under Demand 12—Police. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 13—Education.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 10,00,500 under Demand 13—Education. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 14—Medical.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 62,19,500 under Demand 14—Medical. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 15—Public Health.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 56,300 under Demand 15—Public Health. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 16—Agriculture.*

MR. SPEAKER : The question is —

" That the Government be granted a further sum not exceeding Rs. 300 under Demand 16—Agriculture. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 17—Fisheries.*

MR. SPEAKER : The question is —

" That the Government be granted a further sum not exceeding Rs. 50,000 under Demand 17—Fisheries. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 18—Animal Husbandry.*

MR. SPEAKER : The question is —

" That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand 18—Animal Husbandry. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 19—Co-operation.*

MR. SPEAKER : The question is —

"That the Government be granted a further sum not exceeding Rs. 88,000 under Demand 19—Co-operation. "

The Demand was put and carried and the Grant was made.



*Demand No. 20—Industries.*

MR. SPEAKER : The question is —

" That the Government be granted a further sum not exceeding Rs. 6,12,300 under Demand 20—Industries. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 23—Community Development Projects etc.*

MR. SPEAKER : The question is —

"That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand 23—Community Development Projects, etc. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 25—Welfare of the Scheduled Tribes and Castes, etc.*

MR. SPEAKER : The question is —

" That the Government be granted a further sum not exceeding Rs. 55,100 under Demand 25—Welfare of the Scheduled Tribes and Castes, etc. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 26—Irrigation.*

MR. SPEAKER : The question is —

" That the Government be granteda further sum not exceeding Rs. 13,88,700 under Demand 26—Irrigation. "

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 27—Public Works—Works.*

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 3,00,00,000 under Demand 27—Public Works—Works."

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 46,04,600 under Demand 28—Public Works-Establishment and Tools and Plant."

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 32—Pensions.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 62,03,700 under Demand 32—Pensions."

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 33—Miscellaneous.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 16,20,800 under Demand 33—Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.



*Demand No. 34—Stationery and Printing.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 3,28,300 under Demand 34—Stationery and Printing."

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 35—Forest Department.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 200 under Demand 35—Forest Department."

The Demand was put and carried and the Grant was made.

61575

*Demand No. 36—Other Miscellaneous Compensations and Assignments.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 15,10,000 under Demand 36—Other Miscellaneous Compensations and Assignments."

The Demand was put and carried and the Grant was made.

B. Capital Expenditure outside the Revenue Account.

*Demand No. 40—Capital Outlay on Industrial Development.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,71,75,500 under Demand 40—Capital Outlay on Industrial Development."

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 41—Capital Outlay on Irrigation.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 900 under Demand 41—Capital Outlay on Irrigation."

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 42—Capital Outlay on Public Works.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 1,700 under Demand 42—Capital Outlay on Public Works."

The Demand was put and carried and the Grant was made.

*Demand No. 44—Capital Outlay on Forests.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 100 under Demand 44—Capital Outlay on Forests."

The Demand was put and carried and the Grant was made.

C. Disbursements of Loans and Advances and Repayment of Debt.

*Demand No. 47—Loans and Advances by the State Government.*

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 87,26,400 under Demand 47—Loans and Advances by the State Government."

The Demand was put and carried and the Grant was made.



(6) அறிவிப்பு

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1972-ஆம் ஆண் நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவை சட்டப் பேரவையில் அ முகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆ நர் அவர்கள் தம்முடைய பரிந்துரையை அளித்துள்ளார்கள் என் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) (கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு)—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தொழிலாளர் நல நிதி எந்த எந்த வகைகளில் செலவு செய்யப்படவேண்டுமென்று இந்த மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது. அதில் இந்த நிதியைச் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் அரசாங்கத்தின் செலவிலேயே இதுவரை செய்யப்பட்டு வருகின்றன. முதலாளிகளும் செய்கிறார்கள். அப்படி இருக்கிறபோது சமுதாயத் திட்டங்களை தொழிலாளர் நல நிதியில் இருந்து செலவிடவேண்டும் என்பதை நான் ஏற்கவில்லை. இதற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். மாறாக இந்த நிதியைக்கொண்டு தொழிலாளர்களுக்கே நேரிடையாகப் பயன்படுகிற வகையில் அவர்களுக்கு லோன் வழங்குவது, பாடப்புத்தகம், பீஸ் முதலியவை கட்டுவதற்கு உதவுவது ஆகிய காரியங்களுக்குச் செலவிட வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பல பெரிய நிறுவனங்கள் தங்கள் வருவாயை இன்கம் டாக்சில் இருந்து தப்பித்துக்கொள்ள ஒளிப்பதற்காக தொழிலாளர் நலத்திட்டங்களுக்குச் செலவிடுவதாக பொய்யாகக் கணக்குக் காட்டிவிடு

இறார்கள். இனி அவர்களும் கூட தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்படுகிற நிதியை இந்த தொழிலாளர் நிதியில் சேர்த்து இதன் மூலமாகவே அந்தப் பணிகள் நடைபெறும்படியாகச் செய்யவேண்டும். அதற்கான வழி வகைகளை இந்த மசோதாவில் சேர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சேர்த்திருந்தால் அது பாராட்டக் கூடியதாக இருக்கும் என்ற கருத்தினைக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் நலன்களுக்காகப் பல சட்டங்கள் இருக்கின்றன. முதலாளிகள் அந்தச் சட்டங்களை மீறுகிற நிலைதான் காணப்படுகிறது. தொழிலாளர்களுக்கு முதலாளிகள் வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று இருக்கிறது. அதற்காக முதலாளிகள் அரசாங்கத்திடம் இருந்து நிறையக் கடன் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணத்தை வேறு காரியங்களுக்குத்தான் பயன்படுத்தியிருக்கிறார்கள். இது போலவே பிராவிடெண்ட் பண்டு நிதியைக் கூட முதலாளிகள் தவறான வழியில் பயன்படுத்துகிறார்கள் என்கிற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். அது போல தவறான முறையில் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாதென்பதை மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்கள் 1 ரூபாய் கொடுக்கவேண்டும், பங்குத்தொகையாக முதலாளிகள் 2 ரூபாய் தர வேண்டும், அரசாங்கம் ஒரு பங்கை இந்த நிதிக்காக அளிக்க வேண்டும் என்று இருக்கிறது. என்னுடைய அபிப்பிராயம் தொழிலாளர்கள் இந்த நிதிக்கு எதுவும் தர வேண்டியதில்லை. முதலாளிகளும், அரசாங்கமுமே இந்த நிதியை நிரப்பினால் அவர்கள் முதலாளிகளிடமும், அரசாங்கத்தினிடமும் விசுவாசமாகக் கூட இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: விவசாயிகள் போராட்டத்திற்குப் பிறகு கட்சித் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து தொழிலாளர் நல நிதி என்பதாக தொழிலாளர்களிடம் இருந்தும் ஒரு பங்கு, முதலாளிகளிடம் இருந்தும் ஒரு பங்கு வசூலித்து, அரசாங்கமும் தன் பங்கைப்போட்டு இந்த நிதியை ஏற்படுத்தவேண்டும் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்குப் புறம்பாக உறுப்பினர் பேசுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: விவசாய சங்கத் தலைவர்கள் செய்துகொண்ட முடிவுபற்றி எனக்குத் தெரியாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விவசாயத் தொழிலாளர்கள் இன்று தோண்டும்போது செத்துவிடுகிறார்கள். அவர்களுக்கு நிதி உதவி அளிக்க மாவட்ட அளவில் தொழிலாளர் நல நிதி என்று இருந்தால், அதற்கு தொழிலாளர்களும் ஒரு பங்கு, வேலை வாங்குகிற முதலாளிகளும் ஒரு பங்கு, அரசாங்கமும் ஒரு பங்கு என்று போட்டு நிதியைச் சேர்த்தால் காம்பென்சேஷன் மற்ற வேறு உதவிகள் அளிக்க வசதியாக இருக்கும் என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்துதான் முடிவு செய்திருக்கிறார்கள்.



திரு. ஜே. ஜேம்ஸ்: அதைத்தான் நான் சொல்கிறேன். அதுபோல விபத்துக்குள்ளாகிற தொழிலாளர்களுக்கு முன்பே காம்பென்சேஷன் கொடுக்கிற முறை இருக்கிறது. சட்டங்களும் இருக்கின்றன. இந்தத் தொழிலாளர் நல நிதியை அதற்குச் செலவிடக்கூடாது என்பது என் கருத்து.

அடுத்து, இந்த மசோதாவில் மத்திய அரசாங்க தொழில் நிறுவனங்களுக்கும், மாநில அரசாங்க தொழில் நிறுவனங்களுக்கும் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் நோக்கம் புரியவில்லை. தனியார் நிறுவனங்கள் ஒரு சட்டத்தை மதித்து நடக்கவேண்டுமென்றால் அவர்களுக்கு முன்மாதிரியாக அரசாங்கத் தொழில் நிறுவனங்களும் அந்தச் சட்டத்தை மதித்து நடக்கக்கூடிய நிலைதான் இருக்கவேண்டும். அரசு நிறுவனங்களுக்கு விலக்கு அளித்திருப்பது சரியல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போனஸ் ஆக்ட் சம்பந்தமாகவும் அரசு நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பதைப்பற்றிக் கேட்டபோது, அது மத்திய அரசாங்கச் சட்டம் என்று சொன்னார்கள். இது நமது மாநில அரசாங்கச் சட்டம் தானே. இதில் அரசு நிறுவனங்களுக்கு விலக்கு அளிக்கவேண்டிய அவசியம் என்ன என்று கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது செலக்ட் கமிட்டிக்குச் சென்றிருந்தபோது திரு ராஜாராம் நாயுடு அவர்கள் எல்லாம் சம்மதித்திருக்கிறார்கள். அவரது ஒப்புதலுக்கு விரோதமாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்துக்கள் இருக்கின்றன.

திரு ஜே. ஜேம்ஸ்: செலக்ட் கமிட்டிக்குப் போய்வந்தது என்கிற காரணத்தினால் எனது கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடாது என்பது அர்த்தமில்லை. செலக்ட் கமிட்டியில் திரு ராஜாராம் சொன்ன கருத்துக்களை எல்லாம் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுவிட்டது என்றும் நான் கருத முடியாது.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, இந்த செலக்ட் கமிட்டியில் திரு. ராஜாராம் நாயுடு அவர்களுடைய யோசனைகள் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதை கனம் அங்கத்தினர் ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் ராஜாராம் நாயுடு அவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால் நிச்சயமாக நான் வரவேற்கிறேன். ஆனால் அந்தக் கருத்துக்கு முரண்பட்ட கருத்தாக இது இருக்கும் என்று கருதவில்லை. அது எவ்வாறு இருந்தாலும் நேரம் ஆகிவிட்டது, ஆகவே, சுருக்கமாக முடித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்க நிறுவனங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமா என்பதைச் சிந்திக்கவேண்டும். தனியார்களுக்கு முன்மாதிரியாக, எடுத்துக்காட்டாக செயலாற்ற வேண்டிய அரசு நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குக் காட்டுகின்ற சலுகைகளுக்குக் கூட அதிகமாகக்

இந்தத் திருத்தத்தைக் கொடுத்ததற்கான காரணத்தை நான் ஏற்கனவே கூறிவிட்டேன். எந்தச் சட்டமானாலும் பொதுவாக, அரசாங்கத்திற்கும் தனியாருக்கும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்து வதற்காக இந்த திருத்தத்தைக் கொடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் பேரில் இந்த திருத்தத்தை வலி யுறுத்தவில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : Mr. Thangamani is not in his seat. His amendment is deemed to have been not moved.

The amendment of Thiru James was, by leave, withdrawn.

Clause 2 was put and carried.

Clauses 3 to 14 were put and carried.

*Clause* 15.

Mr. SPEAKER : The question is—

" That clause 15 do sand form part of the Bill. "

Thiru J. JAMES : Sir, I move—

" In sub-clauses (1) of clause 15, delete the words ' Every employee shall contribute one rupee per year to the Fund and' ".

தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் இந்தத் திருத்தத்தை எதற்காக கொடுத்திருக்கிறேன் என்ற காரணத்தைக் கூறிவிட்டேன். இந்த தொழி லாளி பங்குத் தொகை செலுத்த வேண்டாமென்று நான் கொடுத்ததன் நோக்கம் என்னவென்றால், முதலாளி அவனது லாபத்திலிருந்து தனது பங்கு தொகையான ரூ. 2 ஆனாலும், ரூ. 5-ஆனாலும் கொடுக்கிறான். ஆனால், தொழிலாளி கொடுக்கின்ற பங்குத் தொகை, அவன் உழைத்துப் பெற்ற ஊதியத்திலிருந்து நான் கொடுக்க வேண்டியிருக்கிறதேயொழிய லாபத்திலிருந்து அல்ல. அவன் பெறுகின்ற ஊதியம் அவன் வாழ் வதற்குப் போதுமானதாக இருக்கின்றதா? தொழிலாளி நல்ல நிலையில் இருந்து பங்குத் தொகை கொடுத்தால் வரவேற்கலாம். ஆனால், அவன் நல்ல நிலையில் இல்லை. ஒருவேளை, டி. ஆண்டு சி., சிம்சன் போன்ற நகரங்களில் உள்ள கம்பெனிகளில் வேலை செய்கின்ற தொழிலாளி கொடுக்கக் கூடிய நிலையில் இருந்தாலும் கூட, கிராமங்களில் இருக்கிற தொழிலாளி பங்குத் தொகை செலுத்தக் கூடிய நிலை இல்லை. ஆகவே, தொழிலாளி பங்குத் தொகை செலுத்த வேண்டுமென்ற கருத்தை வலி யுறுத்த இந்தத் திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். ஆனால், அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு இணங்க இந்த திருத்தத்தை வலி யுறுத்தவில்லையென்று கூறுகிறேன்.



Mr. SPEAKER : Mr. Thangamani is not in his seat and his amendment is deemed to have been not moved.

The amendment of Thiru James was, by leave, withdrawn.

Clause 15 was put and carried.

Clauses 16 to 43 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு, தொழிலாளர் நல நிதிச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/72) (கூட்டாய்வுக்குழு திருத்தி யமைத்தவாறு) நிறைவேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு சட்ட மாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையினுடைய இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணியளவில் கூடும். பிற்பகல் 1·29

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

260. Notification issued with G.O. Ms. No. 1679, Agricu ure, dated the 15th June 1972, in regard to authorisation of the Secre ary, State Agricultural Marketing Board, Madras also to perform the unctions of the 'Director' under the Tamil Nadu Agricultural roduce Markets Act, 1959. *Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959.)]*

லா

சர்க்கா Notification issued with G.O. Ms. No. 166, Excise and
விவரம் ion, dated the 24th June 1972, in regard to an amendment mil Nadu Foreign Liquor and Indian made Foreign Liquor n-bond) Rules, 1971. [*Laid on the Table of the House*
மாண்
பரிந்துரை *ion 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil*
செய்வதற்கு *34 of 1971).]*

262. Notification issued with G.O. Ms. No. 1139, Home, dated the 24th April 1972, in regard to certain amendments to the Madras Juvenile Court Rules, 1930. [*Laid on the Table of the House under section* 44 (4) *of the Tamil Nadu Children Act,* 1920 (*Tamil Nadu Act IV of* 1920.)]

263. Notification issued with G.O. Ms. No. 2, Agriculture, dated the 3rd January 1972, in regard to establishment of regulated market at Thirumangalam in Madurai district for the purpose of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 in respect of paddy, cotton, groundnut and chillies. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act,* 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959.)]

*B. Reports, Notifications and other papers.*

86. Notification issued with G.O. Ms. No. 749, Labour, dated the 16th May 1972, in regard to an amendment to rule 10 of the Workmen's Compensation Rules, 1924.

*87. The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 35 of 1972) with Annexure.

*88. The Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Amendment Bill, 1972 (L.A. Bill No. 36 of 1972).

89. The Report on Dr. Paul's Committee on the service conditions of Teachers in Aided Schools.

†90. Annexure to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Fourth Amendment Bill, 1972 (L.A. Bill No. 33 of 1972).

‡91. Annexure to the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Amendment Bill, 1972 (L.A. Bill No. 36 of 1972).

---

*Despatched to Members on 19th August 1972.

†Laid on the Table of the House on 19th August 1972.

‡Despatched to Members on 20th August 1972.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### புதன்கிழமை, 1972 ஆகஸ்ட் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*State Police*

* 266 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to reconstitute the Police force in this State?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இம்மாநிலத்திலுள்ள காவல் படையை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு எதும் இல்லை. எனினும் அரசால் நியமிக்கப்பட்ட தமிழ் நாடு காவல் துறை ஆணைக்குழு, காவற் படையைச் சீரமைப்பதற்காகப் பல பரிவுரைகளைச் செய்துள்ளது. அவை அரசின் பரிசீலனையிலுள்ளன.

**திரு. என். கே. பழனிசாமி :** எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களை சமீபத்தில் ஹெட் கான்ஸ்டபிள் வேலைக்கு எடுத்து, அவர்களை ஹெட் கான்ஸ்டபிளாகவும், ஸ்டேஷன் ரைட்டர்களாகவும் மாற்றியும், சென்னை நகரத்தில் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனும் சப்-இன்ஸ்பெக்டர் சார்ஜில் இருந்ததற்குப் பதிலாக சர்க்கிள் இன்ஸ்பெக்டரை மாற்றுவதும் இப்படி மாற்றங்கள் செய்வது லா அண்டு ஆர்டரை சரியான முறையில் மாற்றியமைப்பதற்கு சர்க்கார் ஏதாவது யோசனை செய்திருக்கிறதா ? அப்படியானால் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகளுக்கு ஏற்ப காவல் துறையில் சில சீரமைப்புகளைச் செய்வதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது என்று சொன்னேன்.

[1972 ஆகஸ்ட் 23

சமீபத்தில் ஆயிரம் பேர் ஃபர்ஸ்ட் கிரேட் காவலர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தப் போலீஸ் கமிஷன் பல இடங்களிலும் போலீஸ் ஸ்டேஷன்களை அவுட்-போஸ்ட் நிலையில் இருப்பதை 'அப்-கிரேட்' செய்ய வேண்டும் என்ற கருத்தைத் கூறியிருந்ததே அதைப் பற்றி ஏதாவது பரிசீலனை நடத்தி முடிவு எடுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பொதுவாக, போலீஸ் ஆணைக் குழுவின் பரிந்துரைகளையெல்லாம் அலுவலர்கள் அடங்கிய குழுவொன்று ஆராய்ந்தது. அந்தக் குழு ஆராய்ந்து எடுத்த முடிவுகளை, அமைச்சரவையின் ஒரு துணைக் குழுவொன்று அமைக்கப்பட்டு, அந்தத் துணைக் குழு இப்பொழுது ஆராய்ந்து வருகிறது. இறுதி முடிவு விரைவில் எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** போலீஸ் இலாக்காவில் சப்-இன்ஸ்பெக்டர் லெவல் வரையிலும் அதிகாரிகளை நியமிப்பதற்கு பப்ளிக் சர்விஸ் கமிஷன் போன்ற ஒரு 'அட்டானமஸ் பாடி'யை நியமிப்பதற்கு இந்த அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** இப்பொழுது அதிகமாக ஐ.பி.எஸ். அதிகாரிகளை மத்திய அரசாங்கத்தினர் மாநிலங்களிலே அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். அதைக் குறைத்து, ஸ்டேட் சர்விலை இன்க்ரீஸ் செய்து, நம்முடைய மாநிலத்திலே இருக்கிறவர்களை டி.எஸ்.பி. பதவிக்கு நேரடியாகத் தெரிந்தெடுக்க அதிகமான வாய்ப்புகளை உண்டாக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுபற்றி அரசு யோசிக்கும்.

**திரு பெ. சௌந்தரபாண்டியன் :** காவல் துறையை எந்தெந்த வகையில் சீரமைப்பதற்கு அரசு ஆலோசனை செய்து வருகிறது என்பதை முதலமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?



1972 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சீரமைப்பதற்கான பரிவுரைகளைப் போலீஸ் கமிஷன் அறிவித்தது. அவற்றிலே முக்கியமான பரிவுரைகளைக் குறிப்பிடுகின்றேன். கணக்கிடும் பொறி போன்ற நவீன சாதனங்களைப் பயனுக்குக் கொணர்தல் ; காவல் துறை வானொலித் தொடர்பு வசதிகளை விரிவுபடுத்துதல் ; உருவ நேர்படி அனுப்புவதற்கான சாதனங்களைப் பொருத்துதல் ஆகியவற்றுடன் காவல் படையைத் தற்காலத்திற்கேற்ற வகையில் சீரமைத்தல் ; 16 காவல் துறை மாவட்டங்களில் இயல் ஊர்தி சட்டஞ்சார்ந்த குற்ற அறிவியல் ஆய்வுக்கூடங்களை நிறுவுதல் ; காவலர் வண்டிகளின் எண்ணிக்கையை 823 இலிருந்து 3,160 ஆக உயர்த்துதல் ; மாவட்டப் போலீஸ் ஆய்வுக் கழகம், சிறப்புப் பிரிவு, மாவட்ட குற்றப் பிரிவுகள் முதலியவற்றைச் சீரமைத்தல் ; படைக்கலம் தாங்கிய சேமக் காவல் படையினர் பிரிவுகளை 134½ இலிருந்து 150½ ஆக உயர்த்துதல் ; காவல் துறை மாவட்டங்களை இரண்டாகப் பிரித்தல் ; 71 உட்கோட்டங்களை 81 உட்கோட்டங்களாகவும், 182 சர்க்கிள்களை சுமார் 306 சர்க்கிள்களாகவும் அதிகப் படுத்துதல் ; தேவைப்படும் இடங்களில் காவல் நிலையங்கள், புறக் காவல் நிலையங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை உயர்த்துவது. இவை போன்ற பல சிபாரிசுகள் செய்யப் பட்டிருக்கின்றன. அவை ஆய்விலே இருக்கின்றன.

**திரு. கா. வேழவேந்தன் :** முதலமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது ஆயிரம் தலைமைக் காவலர்கள் தெரிந்தெடுக்கப் பட்ட மகிழ்ச்சியான செய்தியை முன்பே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எந்த அடிப்படையில் மாநிலம் முழுவதும் சீராக நியமிக்கப்படப் போகிறார்கள் என்ற விவரத்தை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 'ஃபர்ஸ்ட் க்ரேட்' காவலர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். பயிற்சி முடிந்த பிறகு அது பற்றி விரிவான முடிவு எடுக்கப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** காவல் துறையினருக்கு உதவியாக இருக்கும் பொருட்டு டெலிவிஷன் வசதிகள் அவர்களுடைய வண்டிகளில் பொருத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** காவல் துறைக்குப் பல்வேறு வசதிகள் தேவை என்று குழு அறிவித்திருக்கிறது. நிதி நிலைக்கு ஏற்றவாறு அவைகளையெல்லாம் அவ்வப்போது பரிசீலிக்கப்படும்.

* 267 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the Union Government have set up a Committee on Police Training on 10th November 1971?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அந்தக் குழுவானது ஒரு கேள்வித்தாளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அம்மாதிரியாக நமது அரசுக்கும் அனுப்பியிருக்கிறார்களா ? அப்படி அனுப்பியிருந்தால் நாம் ஏற்கெனவே கமிஷனுடைய சிபாரிசுகளையோ அல்லது நம்முடைய ஆலோசனைகளையோ மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறோமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்கள் தமிழகத்திற்கே வந்து இங்குள்ள அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாசிரியர்கள், மாணவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், வழக்கறிஞர்கள், மேலவை சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோரையெல்லாம் சந்தித்து இது பற்றிப் பல்வேறு விவரங்களை அறிந்து சென்றிருக்கிறார்கள். மாநில அரசைப் பொறுத்த வரையிலும் அவர்கள் நம்மிடம் தொடர்பு கொண்டு, பல்வேறு விஷயங்களைத் தெரிந்து கொண்டு சென்றிருக்கிறார்கள். கேள்வித்தாளுக்குரிய பதிலை மாநில அரசு விரைவில் அனுப்பி வைக்கும்.

## வானொலி

*268 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வானொலியில் தமிழ் செய்தி அறிக்கைகளின் நேரம் குறைக்கப்பட்டது குறித்தும், பிற்பகல் இரண்டு மணிக்கு ஒலிபரப்பப்



படும் தமிழ் செய்தி அறிக்கை ரத்து செய்யப்பட்டது குறித்தும், மத்திய அரசுக்கு மாநில அரசு அண்மையில் ஆட்சேபணை தெரிவித்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வானொலியில் நிகழ்ச்சிகளுக்கிடையே 2 நிமிட நேரம் ஆங்கிலத்திலும் இந்தியிலும் முக்கிய செய்திகளை காலதாமதமின்றி அவ்வப்போது ஒலிபரப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவற்றில் ஆங்கிலச் செய்தி மட்டுமே சென்னை A, B நிலையங்களின் மூலம் அஞ்சல் செய்யப்படுகிறது. இந்த நேரத்தைச் சரிகட்டவே காலை, மாலை ஆகிய இரண்டு நேரங்களிலும் ஐந்து நிமிடங்கள் விதம் தமிழ்ச் செய்திகள் ஒலிபரப்பப்படும் நேரத்தில் மொத்தம் பத்து நிமிடங்கள் குறைத்திருக்கிறார்கள். நாடு முழுவதுமே இந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. பிற்பகல் ஒலிபரப்பு நிறுத்தப்படவில்லை. முன்பு பிற்பகல் 2.00 மணிக்கு ஒலிபரப்பு செய்யப்பட்டது. இப்போது இதனை பிற்பகல் 12.40 மணிக்கு ஒலி பரப்புகிறார்கள். எனவே மாநில அரசு ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தமிழில் செய்தி அறிக்கைக்கு ஏற்கெனவே இருந்த 15 நிமிடங்களே போதாது என்று தமிழ் மக்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அதிலே ஐந்து நிமிடங்களைக் குறைத்திருப்பது தமிழ் மக்களுக்கு மத்திய அரசு அநீதி இழைத்திருக்கிறது என்ற உணர்வு தமிழ் மக்களிடையே இருக்கிறது. அந்த அநீதியைப் போக்க நமது அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது 'தமிழ் மக்களுக்கு' என்று குறிப்பாகச் சொல்வதைவிட "ஒவ்வொரு மாநில மக்களுக்கும் செய்யப்பட்டிருக்கிற அநீதி ஆகாதா ?" என்று கேட்டால் கேள்வி பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இது தமிழ் நாட்டில் மட்டுமல்ல ; ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில மொழிகளில் ஒவ்வொரு நாளும் சொல்லப்பட்ட செய்திகளில் பத்து நிமிஷம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனெவே காலையில் 7.15 இலிருந்து 7.30 வரை என்று இருந்தது ; பிற்பகல் 2 முதல் 2-10 வரை என்று இருந்தது ; மாலை 7-15 இலிருந்து 7-30 வரை என்று இருந்தது.

அதிலே பத்து நிமிஷங்கள் குறைக்கப்பட்டு விட்டன. முக்கியமான செய்திகளைச் சொல்வதற்கு இரண்டு நிமிடங்கள் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் முக்கியமான செய்திகள் இருப்பதில்லை என்பதை நான் நன்றாக அறிவேன். தமிழ்நாட்டில் மாத்திரமல்ல; எல்லா மாநிலங்களுக்குமே இந்த நேரத்தைக் கொஞ்சம் மீண்டும் அதிகமாக ஆக்கித் தருவதற்கு வானொலி நிறுவனத்தினர் முயற்சிப்பது நல்லது. இந்தக் கேள்வி இதற்குப் பயன்படும் என்று நம்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இப்பொழுது தென் மாவட்டங்களில் ஒலிபரப்பு மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, வலிமையான நிலையத்தைத் தென் மாவட்டத்தில் அமைப்பதற்காக வேண்டிய ஆலோசனையைக் கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுபற்றி அடுத்த கேள்வியில் விவரம் அளிக்க விரும்புகிறேன்.

**திரு. செ. கந்தப்பன் :** துணைத் தலைவரவர்களே, வானொலியிலே இப்பொழுதும் தமிழில் செய்திகளை வாசிக்கும்பொழுது 'ஸ்ரீ' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த சொல்லுக்குப் பதிலாக, அந்த எழுத்திற்குப் பதிலாக 'திரு' என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று நமது அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆகாஷ்வாணி என்பதை வானொலி என்று மாற்றுவதற்கு இந்த அரசு விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். அதைப் போலவே பிராந்தியச் செய்தி என்பதை மாநிலச் செய்தி என்று மாற்ற வேண்டுமென்று இந்த அரசு விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினரவர்களின் கேள்வியின் வாயிலாக 'ஸ்ரீ' என்பதை 'திரு' என்று மாற்றிக்கொள்வார்கள் என்று நம்புவோமாக.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** துணைத் தலைவரவர்களே, இந்த மாநில மொழியில் இருக்கும் செய்திகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற இந்தக் கருத்தை இங்கு தெரிவிப்பதன் மூலம்



அது திருந்திவிடும் என்று முதலமைச்சரவர்கள் கூறினார்கள். அதை வேண்டுகோளாக மத்திய அரசுக்கு விடுத்து அதனை நிறைவேற்றச் செய்ய அரசு முயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் கேள்விகளை பங்கேற்றுள்ள மத்திய அரசு இப்படிப்பட்ட பணியாற்றவல்லது உன்னிப்பாகக் கவனித்து சுறுசுறுப்போடு வேண்டுகோளும் என்ற கருத்தில் அப்படிச் சொன்னேன். விடுக்க வேண்டுமென்றால் அதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், ஏதாவதொரு நேரத்தி 15 நிமிஷங்கள் லாவது தமிழ்ச் செய்தியை முன்போல சிபாரிசு செய்யுமா ? இருக்கும்படி செய்ய மத்திய சர்க்காருக்கு

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒரு நேரம் அல்ல, எல்லா மாநிலங் பொதுவாகவே குறைக்கப்பட்ட நேரத்தை வேண்டுமென்ற களுக்கும் மீண்டும் நிறைவு செய்து கொடுக்க அரசு மாநில கோரிக்கையை மத்திய அரசுக்கு வற்புறுத்தும்.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவரவர்களே, தமிழ்ச் செய்தி நேரத்தைக் குறைத்திருக்கும் சமயத்தில், இரவு 8 மணிக்கு நல்ல இசையை நிறுத்திவிட்டு 2 நிமிஷங்கள் இந்தியில் செய்திகளைச் சொல்கிறார்கள். அந்த நேரத்தில் தமிழக மக்கள் ரேடியோவை மூடிவிடுகிறார்கள். அதைத் தமிழிலேயே சொல்லக்கூடிய நிலையை மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தியா முழுமைக்கும் முக்கியமான செய்திகளை ஆங்கிலத்திலும், இந்தியிலும் சொல்ல இரண்டு நிமிஷங்கள் என்பதாக நிர்ணயித்திருக்கிறார்கள். அதை மாற்றிக்கொள்வதைப்பற்றி மத்திய அரசுதான் முடிவு எடுக்க முடியும்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, முக்கியமான செய்திகளைச் சொல்வதற்காக நம்முடைய தமிழ்ச் செய்தியின் நேரத்தைக் குறைத்திருப்பதாக முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் குறைத்த நேரத்தை நம்முடைய

தமிழ்ச் செய்திக்கு ஒதுக்கும் நேரத்தில் குறைக்காமல், பலர் விரும்பாத பாட்டுக்களை ஒலிபரப்புகின்ற அப்படிப்பட்ட நேரத்தில் அந்தச் செய்தியை ஒலிபரப்புவதற்கு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நல்ல யோசனை. வானொலி செய்திக் குறிப்பாளர் இதை வானொலி நிலையத்திற்கு அறிவிப்பார் என்று நினைக்கிறேன்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாலை 6 மணிக்கு தேசியப் பாடல் என்ற பெயரில் ஒலிபரப்பப் படும் பாடல்கள் இந்தியில் இருக்கின்றன. பாரதியார் போன்ற நல்ல தேசியக் கவிஞர்களின் பாடல்களைத் தமிழில் ஒலிபரப்ப அரசாங்கம் முயற்சி எடுக்குமா? அதுபற்றி மத்திய அரசுக்குத் தெரிவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதுபோன்ற பல்வேறு கேள்விகளைக் கேட்டு ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மாற்றி யமைக்க அரசு முயற்சிக்குமா, அரசு முயற்சிக்குமா என்று கேட்டால் பதில் சொல்வதற்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது. பொதுவாக அந்தந்த மாநிலத்திற்கு ஏற்ற வகையில், மாநில மக்கள் விரும்பும் வகையில் நிகழ்ச்சிகளை அமைப்பதில் வானொலி நிலையம் முனைப்பாக இருக்க வேண்டும் என்ற கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, சென்னையிலிருந்து ஒலிபரப்பாகும் விவித் பாரதி வர்த்தக ஒலிபரப்பில் அறிவிக்கப் படும் விளம்பரங்களை இந்தியிலேயே செய்கிறார்கள். அதைத் தமிழிலே செய்ய வேண்டும் என்று மத்திய அரசை நமது அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** வர்த்தக ஒலிபரப்பே ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது என்று பலர் அதை மூடி விடுவதாகக் கேள்வி. எனவே, எதில் இருந்தால் என்ன?

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, எவ்வளவோ முக்கியமான செய்திகளை ஒலிபரப்ப வேண்டிய அந்த நேரத்தில், சில நேரங்களில் கடிகாரம் எப்படி வேலை செய்கிறது, அந்தக்





கடிகாரம் எந்தக் கடிகாரம் என்பது போன்று 3, 4 நிமிஷங்கள் சொல்கிறார்கள். அப்படி நேரத்தை வீணாக்காமல் மக்களுக்குப் பயன்படக் கூடிய முக்கியமான செய்திகளை அந்தச் செய்தி நேரத்தில் ஒலிபரப்ப வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கடிகாரம்பற்றி விளம்பரத்திற்காகச் செய்யப்பட்டால் அந்த நேரத்தைக் குறைக்கலாம். ஆனால் கடிகாரம் எப்படிச் செய்வது என்று அறிவியலுக்காகச் சொல்லிக் கொடுக்கப்பட்டால் அந்த நேரத்தைக் குறைப்பது முறையல்ல.

* **269 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை—திருச்சிராப்பள்ளி வானொலி நிலையங்களின் ஒலி பரப்பும் சக்தியை அதிகப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு வற்புறுத்தியுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, நெல்லை, கோவை போன்ற வானொலி அஞ்சல் நிலையங்கள் இருந்தாலும், சென்னை, திருச்சி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைத் தொலை தூரங்களில் இருப்பவர்கள் முழுதும் கேட்க முடியவில்லை. மேலும் கடல் கடந்து வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டில் ஒலிபரப்பப்படும் செய்திகளை நன்கு கேட்க வாய்ப்பளிக்கக் கூடிய முறையில் தமிழகத்திலுள்ள வானொலி நிலையங்களின் சக்தியை அதிகப்படுத்தக் கோரி மத்திய சர்க்காருக்கு நமது அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சென்னை நிலையத்தில் இப்பொழுது 20 கிலோ வாட்ஸ் மீடியம் வேவ் டிரான்ஸ்மிட்டரும், 10 கிலோ வாட்ஸ் ஷார்ட் வேவ் டிரான்ஸ்மிட்டரும் இருக்கின்றன. திருச்சியில் 20 கிலோ வாட்ஸ் மீடியம் வேவ் டிரான்ஸ்மிட்டர் மட்டும் இருக்கின்றது. இதனால் குறைந்தது 100 மைல்களுக்கு அப்பால் அந்தச் செய்திகளைக் கேட்பதாக இருந்தால் தெளிவாகக் கேட்க முடியாமல் சங்கடமான நிலை இருக்கிறது. கல்கத்தா,

[1972 ஆகஸ்ட் 23

பம்பாய் வானொலி நிலையங்களில் இப்பொழுது 50 கிலோ வாட்ஸ் மீடியம் வேவ் டிரான்ஸ்மிட்டர்கள் இயங்கி வருகின்றன. அவைகளைப் போலவே சென்னையிலும் அப்படிப்பட்ட டிரான்ஸ்மிட்டர்களை அமைக்க வேண்டுமென்ற நிலையை வானொலி நிலையத்திற்கு நாம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். வானொலி நிலையப் பொறியியல் அதிகாரிகள் அதைப்பற்றி மத்திய அரசுக்கு அறிவித்ததாகத் தகவல் எதுவும் இல்லை. பொறியியல் அதிகாரிகளின்மூலம் மத்திய அரசுக்குத் தமிழக அரசு அறிவிக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, தென் கோடியிலே இருக்கின்ற கன்னியாகுமரி போன்ற பகுதிகளில் இது போன்ற ஒலிபரப்புச் செய்திகளைக் கேட்பது மிகவும் சங்கடமான நிலையில் இருக்கிறது. ஆகவே மிகவும் வலிமையான டிரான்ஸ்மிட்டிங் ஸ்டேஷனை தென் மாவட்டங்களில், குறிப்பாக திருநெல்வேலியிலோ அல்லது அதன் அருகிலோ நிறுவுவதற்கு வற்புறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முதலிலே திருநெல்வேலி நிலையத்தை முழு நேர நிலையமாக ஆக்க வேண்டுமென்ற கருத்திருக்கிறது. அதுபற்றி மத்திய அரசுக்கு எழுதுவோம். அதைப்போல கோவையிலும் முழு நேர நிலையமாக ஆக்க வேண்டுமென்று கருத்து இருக்கிறது. அதற்கும் எழுதுகிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துக் கூறியதைப்போல சக்தியை அதிகப்படுத்த வேண்டுமென்பதிலும் இந்த அரசு கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், திருச்சியிலே ஒரு பவர்ஃபுல் டிரான்ஸ்மிட்டர் போட வேண்டுமென்பது மிகமிக அவசியமாகிக் கொண்டு இருக்கிறது. அதற்குக் காரணம் டிரான்சிஸ்டர் வைத்திருப்பவர்கள் மதுரை போன்ற இடங்களில் இருப்பவர்கள் திருச்சியிலிருந்து ஒலிபரப்பாவதைச் சரியாகக் கேட்க முடிவதில்லை. எனவே ஒரு பவர்ஃபுல் டிரான்ஸ்மிட்டரைத் திருச்சியில் சீக்கிரமாக வைப்பதற்கு அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் அப்பொழுதே சொன்னேன். கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில்



1972 ஆகஸ்ட் 23]

சக்திவாய்ந்த டிரான்ஸ்மிட்டர்கள் இருக்கின்றன. அதைப் போல் செய்ய மத்திய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாநில அரசு தெரிவிக்கும்.

**திரு. கே. வகாப் :** தலைவரவர்களே, சென்னை, திருச்சி போன்ற வானொலி நிலையங்களில் ஒலிபரப்பு செய்யப்படும் தமிழ் நிகழ்ச்சிகளில் இஸ்லாமிய நிகழ்ச்சிகள் மிகவும் குறைந்த அளவில் ஒலிபரப்பப்படுகிறது. அதைப்பற்றி மைனாரிட்டி மக்கள்மீது அக்கறை கொண்டுள்ள இந்த அரசு மத்திய அரசுக்குக் கூறி அந்த நேரத்தை அதிகப்படுத்த ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது பற்றிய விபரங்களை வானொலி நிலையத்தினிடத்தில் கேட்டுத் தக்கது செய்ய அரசு முன்வரும்.

### ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம்

* 270 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னை நகரில் பொது மைதானங்களில் ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்தின் (R.S.S.S.) பயிற்சி வகுப்புகள் நடத்தப் படுவது அரசு அறியுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம் சென்னை மாநகரில் தனிப்பட்ட நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சொந்தமான இடங்களில் உடற்பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது; பொது இடங்களில் அல்ல.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவரவர்களே, காந்தியைச் சுட்டது இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் என்று சொல்லப்பட்டது. அதைப் போலவே அண்மையில் டெல்லியில் காமராஜரைத் தாக்கியதும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினர்தான் என்று சொல்லப்பட்டது. ஆகவே, அந்த மாதிரிக் கலவரங்கள், பிற்போக்கு எண்ணங்களைக் கொண்ட கோஷ்டி என்பதை வற்புறுத்தி மத்திய அரசோடு தொடர்புகொண்டு அதைத் தடை செய்வதற்கு நம்முடைய அரசு சிபார்சு செய்யுமா?

[1972 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது அந்த இயக்கம் தமிழகக் காவல் துறையினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் அவர்களின் நடவடிக்கைகளைப் பொறுத்து மத்திய அரசோடு தொடர்புகொள்ளும்.

**திரு. சொ. காவேரிமணியம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இயக்கம் நம்முடைய நாட்டிலே ஒரு அரசியல் கட்சியோடு தொடர்பு கொண்டுள்ளது என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இம்மாதிரியான பயிற்சி பெறும் நேரத்தில் மத வெறி அல்லது வகுப்புவாதம் போன்றவைகளிலே இது ஈடுபடுகிறதா என்பதைக் கண்காணித்து அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தச் சங்கத்தின் நடவடிக்கைகள் 'கல்சுரல்' பண்பாட்டுத் தன்மைகள் வாய்ந்தவை என்றும் அரசியல் தன்மைகள் வாய்ந்தவை அல்ல என்றும் சொல்லப்படுகிறது. அது உண்மையா என்பதைக் காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

## *Kannagi Temple*

*271 Q.—Thiru N. K. Palanisamy : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that the Kannagi temple, mentioned in Silapathikaram written by Ilango Adigal is in ruins in a place between the Kerala and Tamil Nadu border; and

(*b*) if so, whether this Government have requested the Kerala Government to locate the place?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) தமிழ் நாட்டின் எல்லைக்கருகில் கேரள மாநிலத்தில் சுருளிமலைத் தொடரில் காணப்படும் பாழடைந்த கோயில் சரித்திரப் புகழ் பெற்ற கண்ணகியின் கோயிலாக இருக்கலாமென நம்ப இடமுள்ளது என்று கூறப்படுகிறது.

(ஆ) இக் கோயிலைப் புதுப்பித்துச் சீரமைக்க இதைத் தமிழக அரசிடம் ஒப்படைக்கக் கோரி கேரள மாநில அரசுடன் இவ்வரசு தொடர்பு கொண்டது. கேரள அரசின் இறுதியான பதில் கிட்டவில்லை.



1972 ஆகஸ்ட் 23]

**திரு. என். கே. பழனிசாமி :** சார், கண்ணகிக்குக் கோயில் மலபாரிலே கட்டியிருந்தால் கண்ணகி ஒரு மலையாளப் பெண் என்று சரித்திரத்தினுடைய மாற்றம் ஏற்படும். ஆகையால் இதைப் பற்றி விரிவாக ஆலோசனைசெய்து சரித்திரத்தை நல்ல முறையிலே ரீரைட் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** காந்தையைச் சேர்ந்த தமிழ்ப் புலவர் கோவிந்தராஜன் என்பவர் கேரள மாநிலத்தின் எல்லையில் தாம் கண்டுபிடித்ததாகச் சொல்கிற அளவுக்கு அங்கே ஒரு கண்ணகி கோயில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த முறையிலேயே பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுதி வருகிறார்கள். அண்மையில் நடத்திய ஆராய்ச்சியின் மூலமாக பெரியாறு மேல் மூகட்டிலிருந்து தென் கிழக்கில் சுமார் 7 மைல்கள் தூரத்தில் உள்ள கோயில் ஒன்று கண்ணகிக்காகச் சமைக்கப்பட்ட நினைவுக் கோயில் எனக் கருதப்படுகிறது. இந்த இடம் வேங்கைக் கானல் என்று கூறப்பட்ட பழங்காலக் கிராமத்தில் மங்களாதேவிக் கோட்டம் எனவும் கேரள மாநிலத்தில் சுருளிமலையின் மேற்குத் தொடரில் தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது எனவும் தெரிய வருகிறது. பாழடைந்த நிலைமையிலுள்ள இந்நினைவுக் கோயிலில் 400 அடி நீளமும் 3 அடி அகலமும் 10 அடி உயரமும்கொண்ட ஒரு மண்டபம் இருக்கிறது. இக்கோயிலில் சொல்லப்படும் கல்வெட்டுக்களில் சங்க வட்ட எழுத்து என்று காலத் தலைவி கண்ணகியைப்பற்றிய விலைமதிக்க முடியாத செய்திகள் உள என்று நம்பப்படுகிறது. இதுபற்றியெல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரும், வரலாற்று அறிஞர் களும் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதற்காக நாம் கேரள அரசினருடைய அனுமதியைக் கேட்டிருக்கிறோம். கேரள அரசோடு தொடர்புகொண்டு இதைப்பற்றி மேலும் ஆராய் வதற்கும் அது கண்ணகி கோயிலாக இருக்கும் என்று நிச்சயிக்கப் படுகிற சூழ்நிலையில் அதைத் தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நாம் கேட்டு இருக்கிறோம்.

[1972 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது அந்த இயக்கம் தமிழகக் காவல் துறையினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் அவர்களின் நடவடிக்கைகளைப் பொறுத்து மத்திய அரசோடு தொடர்புகொள்ளும்.

**திரு. சொ. காவேரிமணியம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இயக்கம் நம்முடைய நாட்டிலே ஒரு அரசியல் கட்சியோடு தொடர்பு கொண்டுள்ளது என்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இம்மாதிரியான பயிற்சி பெறும் நேரத்தில் மத வெறி அல்லது வகுப்புவாதம் போன்றவைகளிலே இது ஈடுபடுகிறதா என்பதைக் கண்காணித்து அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தச் சங்கத்தின் நடவடிக்கைகள் 'கல்சுரல்' பண்பாட்டுத் தன்மைகள் வாய்ந்தவை என்றும் அரசியல் தன்மைகள் வாய்ந்தவை அல்ல என்றும் சொல்லப்படுகிறது. அது உண்மையா என்பதைக் காவல் துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

### *Kannagi Temple*

*271 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that the Kannagi temple, mentioned in **Silapathikaram written by Ilango Adigal is in ruins in a place between the Kerala and Tamil Nadu border; and**

(*b*) if so, whether this Government have requested the Kerala Government to locate the place?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) தமிழ் நாட்டின் எல்லைக்கருகில் கேரள மாநிலத்தில் சுருளிமலைத் தொடரில் காணப்படும் பாழடைந்த கோயில் சரித்திரப் புகழ் பெற்ற கண்ணகியின் கோயிலாக இருக்கலாமென நம்ப இடமுள்ளது என்று கூறப்படுகிறது.

(ஆ) இக் கோயிலைப் புதுப்பித்துச் சிறப்பிக்க இதைத் தமிழக அரசிடம் ஒப்படைக்கக் கோரி கேரள மாநில அரசுடன் இவ்வரசு தொடர்பு கொண்டது. கேரள அரசின் இறுதியான பதில் கிட்டவில்லை.



1972 ஆகஸ்ட் 23]

**திரு. என். கே. பழனிசாமி :** சார், கண்ணகிக்குக் கோயில் மலபாரிலே கட்டியிருந்தால் கண்ணகி ஒரு மலையாளப் பெண் என்று சரித்திரத்தினுடைய மாற்றம் ஏற்படும். ஆகையால் இதைப் பற்றி விரிவாக ஆலோசனைசெய்து சரித்திரத்தை நல்ல முறையிலே ரீரைட் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கரந்தையைச் சேர்ந்த தமிழ்ப் புலவர் கோவிந்தராஜன் என்பவர் கேரள மாநிலத்தின் எல்லையில் தாம் கண்டுபிடித்ததாகச் சொல்கிற அளவுக்கு அங்கே ஒரு கண்ணகி கோயில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த முறையிலேயே பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுதி வருகிறார்கள். அண்மையில் நடத்திய ஆராய்ச்சியின் மூலமாக பெரியாறு மேல் முகட்டிலிருந்து தென் கிழக்கில் சுமார் 7 மைல்கள் தூரத்தில் உள்ள கோயில் ஒன்று கண்ணகிக்காகச் சமைக்கப்பட்ட நினைவுக் கோயில் எனக் கருதப்படுகிறது. இந்த இடம் வேங்கைக் கானல் என்று கூறப்பட்ட பழங்காலக் கிராமத்தில் மங்களாதேவிக் கோட்டம் எனவும் கேரள மாநிலத்தில் சுருளிமலையின் மேற்குத் தொடரில் தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்தில் உள்ளது எனவும் தெரிய வருகிறது. பாழடைந்த நிலைமையிலுள்ள இந்நினைவுக் கோயிலில் 400 அடி நீளமும் 3 அடி அகலமும் 10 அடி உயரமும்கொண்ட ஒரு மண்டபம் இருக்கிறது. இக்கோயிலில் வட்ட எழுத்து என்று சொல்லப்படும் கல்வெட்டுக்களில் சங்க காலத் தலைவி கண்ணகியைப்பற்றிய விலைமதிக்க முடியாத செய்திகள் உள என்று நம்பப்படுகிறது. இதுபற்றியெல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரும், வரலாற்று அறிஞர்களும் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதற்காக நாம் கேரள அரசினருடைய அனுமதியைக் கேட்டிருக்கிறோம். கேரள அரசோடு தொடர்புகொண்டு இதைப்பற்றி மேலும் ஆராய்வதற்கும் அது கண்ணகி கோயிலாக இருக்கும் என்று நிச்சயிக்கப்படுகிற சூழ்நிலையில் அதைத் தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்று நாம் கேட்டு இருக்கிறோம்.

[1972 ஆகஸ்ட் 23

*Inscriptions of Pallava period*

* 272 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that stone inscriptions of the Pallava age have been traced in Chengam region in the State recently; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட நடுகற்கள் இது காறும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையால் செங்கம் வட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பல்லவா, கங்கா, சோழர்கால நடுகற்கள் ஆகும். பெரும்பாலானவை பல்லவர் காலத்தவை ஆகும். இவற்றில் கண்டுள்ள விவரங்கள் நூல் வடிவில் அச்சிடப்பட்டுள்ளன. இவை தவிர வரலாற்றுச் சிறப்புடைய வேறு சில கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் பல்லவர்களுடைய வாழ்க்கையை ஆராய வழிவகுப்பதாக இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைக் குறிக்கிற ஒரு சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. சிம்மவிஷ்ணு பற்றிய கல்வெட்டுகள் அங்கே கிடைத்திருக்கின்றன. வேறு எங்கும் கிடைக்காதது அங்கே கிடைத்திருக்கின்றது. அது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுதான். நரசிம்ம பல்லவன், மகேந்திர வர்மன் ஆகியவர்களைப்பற்றிய கல்வெட்டுக்களும் அங்கே கிடைத்திருக்கின்றன. அவையெல்லாம் சில அரிய தன்மைகளை நமக்குக் காட்டுவதாக அமைந்திருக்கின்றன. மகேந்திரவர்மன் 30 ஆண்டுக்காலம் ஆண்டதாகத்தான் நமக்கு இதுவரையிலே வரலாறு கூறுகிறது. ஆனால் அவனைப்பற்றிய கல்வெட்டிலே 59-ம் ஆண்டு என்ற குறிப்போடு ஒரு கல்வெட்டு இருப்பதாலே அவன் அறுபது ஆண்டுக் காலம் ஆண்டிருக்கவேண்டுமென்ற வரலாற்றுக் குறிப்பு நமக்குக் கிடைத்ததின் காரணமாக நமக்குச் சரித்திரக் குறிப் பொன்று நமக்குக் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். இப்படிச் சரித்திரக் குறிப்புகளைக் கூறக்கூடிய வகையிலே கல் வெட்டுக்கள் சில இருக்கின்றன, மற்றவையெல்லாம் படைகளின் வெற்றி, மரணம் அடைந்தவர்களுடைய குறிப்புகளைக் கொண்டவைகளாக இருக்கின்றன.



1972 ஆகஸ்ட் 23]

**திரு. எம். இராதாகிருட்டிணன்:** தலைவர் அவர்களே. செங்கம் வட்டத்தில் எந்தக் கிராமத்தில், எந்த ஊரில் அது இருக்கிறது என்று அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** செங்கம் வட்டத்தில் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது, எந்த ஊர், எந்த வட்டம் என்பதை முழு விவரத்தைக் காண்கிறபோது அறியலாம்.

**திரு. நா. வீராசாமி:** செங்கம் வட்டத்தில் காணப்படுகின்ற கல்வெட்டுக்கள் தேவ பாஷையில் எழுதப்பட்டு இருப்பதாகவும், அதிலே புதையல் அங்கே இருப்பதுபற்றிச் சொல்லப்பட்டிருப் பதாகவும் சொல்லப்படுகிறது. அப்படி ஏதாவது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் கண்டுபிடித்திருக்கிறார்களா? புதையல் ஏதாவது அங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். கல் வெட்டுக்களிலே சில செய்திகளைத்தான் அறிந்திருக்கிறார்கள். அந்தக் கல்வெட்டுக்களின்கீழே பிணம்தான் இருப்பதாகத் தெரிகிறதேதவிர பணம் இருப்பதாகத் தெரியவில்லை.

**தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் புதிய உயர்வுகள்**

* 273 வினா—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில், புலவர், பி.ஏ., பி.டி., ஆசிரியர்கள் நியமனம் செய்யும்போது தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றும் மேற்படி பட்டங்களைப் பெறுபவர்களுக்கு, அவர்கள் வயதினைக் கணக்கிடாமல் முதலிடம் வழங்கி ஆசிரியராக நியமனம்செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தொடக்கப் பள்ளிகளில் பணி ஆற்றிவரும் ஆசிரியர்கள் புலவர் மற்றும் பி.ஏ., பி.டி., பட்டங்கள் பெறுவாராயின். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர், பி.டி. அல்லது உதவி ஆசிரியர் பதவிகளுக்கு

விண்ணப்பிக்க வசதி செய்யும் வகையில் அதற்கான வயது வரம்பினை அப்படிப்பட்டவர்களுக்கு 40 வரை உயர்த்தலாம் என்ற செயற் குறிப்பு ஒன்று அரசின் ஆய்விலுள்ளது.

## Teacher-pupil ratio

* 274 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to **state** :

(*a*) whether there is any proposal to reduce the teacher-**pupil ratio in the elementary schools of this State; and**

(*a*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) முன்பு இருந்ததைவிட இப்பொழுது விகிதாச்சாரம் கணிசமாகக் குறைந்துள்ளது.

(ஆ) மேலும் குறைப்பதற்கான திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் நியமனம் செய்வதின்மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தவும் அதிகப்படியான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவும் முடியும் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சராசரி விகிதம் 1 : 35 அதாவது ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற அளவிலேதான் இருக்கிறது. அந்த எண்ணிக்கையை மேலும் குறைக்கலாம். அப்படி நினைக்கிறபோது நிதி வசதி தடையாக இருக்கிறது. அதிகமாக நிதி வசதி இருந்தால் அப்படிச் செய்யலாம். அல்லது பள்ளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய நிலைமைக்குப் போகவேண்டும், அப்படிச் செய்தால் 1 : 20 என்ற நிலைமைக்கு விகிதம் வருமானால் மாணவர்களின் சேர்க்கை அளவு தடைப்படும். எனவே பொருளாதார நிலைமை, கல்வியறிவின்மை, இவற்றைக் கணக்கிலேகொண்டுதான் முன்பு



1 : 40 என்று இருந்ததை இப்பொழுது 1 : 35 என்ற அளவுக்குக் கொண்டுவந்திருக்கிறோம். நிதிவசதி ஏற்பட ஏற்பட அதைக் குறைப்பதுபற்றிக் கவனிக்கலாம்.

**திரு. கே. கந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று முன்பு இருந்ததைவிட மாணவர்களின் கல்வித்தரம் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது, அப்படிக் குறைந்திருப்பதற்கு ஒரு காரணம் ஆசிரியர்களுடைய கவனக் குறைவுதான் என்று பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்களே, அதன்மீது நம்முடைய அரசு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள இருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தரம் குறைந்தது என்பது விவாதிக்கப்படவேண்டிய ஒன்று. எந்த வகையிலே, எந்த இடத்திலே எந்த நிலையிலே என்று தனித்தனியாகப் பார்த்து ஒவ்வொன்றையும் ஆராயவேண்டும். பொதுவாகச் சொல்வதில் பொருளில்லை. இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு என்ன சிலபஸ் இருந்ததோ அதே சிலபஸ்தான் இன்னும் இருக்கிறது. முன்பு என்ன என்ன கேள்விகள் கேட்கப்பட்டனவோ அப்படிப் பட்ட கேள்விகள்தான் இப்பொழுதும் கேட்கப்படுகின்றன. ஆகவே சொல்லிக்கொடுப்பதிலே தரம் குறைந்ததாகச் சொல்ல முடியாது. ஏற்கனவே படித்து முன்னேறிய பாரம்பரையிலிருந்து வந்தவர்கள் படிக்கின்ற நிலையில் தரம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இருக்கத்தான் செய்கிறது. அப்படியில்லாமல் எந்த நிலையில் உள்ளவர்களும் படிக்கலாம், படிக்க வேண்டும் என்ற முறையில் சமுதாயம் வளருகின்ற நிலையில் அவர்கள் படிப்பதிலே பர்சென்டேஜ் ஓரளவு குறைந்திருக்கலாமேதவிர மற்றவற்றைப்பற்றிச் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற விகிதாசாரம் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த விகிதாசாரம் எல்லாப் பள்ளிகளிலும் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே கண்டிப்பாக ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற வகையில் கட்டாயமாக உத்தரவு பிறப்பிக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் சராசரி 35 என்று குறிப்பிட்டேன். சிலவிடங்களில் அது 40 ஆகக்கூட இருக்கும், சிலவிடங்களில் 20, 25 என்ற அளவில்கூட இருக்கக் கூடும். கூடுமானவரையில் சராசரி எண்ணிக்கையைக் குறைப்பதற்கான வகையில், ஏற்கனவே கூறியபடி நிதிவசதி ஏற்பட ஏற்படக் குறைத்துக்கொண்டுவரலாம்.

*Chief Educational Officer for Dharmapuri district.*

* 275 THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any representation has been received from Dharmapuri District M.L.As. requesting to appoint a separate Chief Educational Officer for Dharmapuri district; and

(b) if so, when he will be appointed?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) தர்மபுரி மாவட்டத்திற்கெனத் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி நியமனம்பற்றிய கருத்து அரசினால் பரிசிலனை செய்யப்பட்டுத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த சீப் எஜுகேஷனல் ஆபீசர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இருக்கும்போது தர்மபுரிக்கு மட்டுமில்லாமல் தர்மபுரி-சேலத்தைச் சேர்த்து வைக்கப் பட்டிருக்கிறது. தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அங்குள்ள பகுதியினருக்கு அதிருப்தி அளிக்கும் என்ற வகையில் உடனடியாக அப்படி ஒரு அதிகாரியை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பெரும் மாவட்டங்களுக்கு ஒரு மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரி இருந்து வருகிறார். ஏற்கனவே இரண்டு மூன்று மாவட்டங்களை ஒன்றாகச் சேர்த்து டிவிஷனல் இன்ஸ்பெக்டர் என்ற ஒரு அதிகாரி இருந்தார். திருநெல்வேலி, கன்னியாகுமரி இரண்டுக்கும் சேர்த்து ஒரு தலைமைக் கல்வி அதிகாரி, கோவை, நீலகிரிக்கு சேர்த்து ஒரு தலைமை கல்வி அதிகாரி, சேலம்—தர்மபுரிக்கு சேர்த்து ஒரு தலைமைத் கல்வி அதிகாரி என்று போடப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திற்குத் தனியாக ஒரு முதன்மைக்





கல்வி அதிகாரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சிறு மாவட்டமாக இருப்பதால் சேலம். தர்மபுரி ஆகியவற்றிற்குச் சேர்த்து ஒருவர் வைக்கலாம் என்றும் இப்போது தனியாகத் தேவையில்லை என்று தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. டி.இ.ஓ. என்ற அளவில் ஒரு மாவட்டக் கல்வி அதிகாரி இருக்கிறார் எண்ணிக்கை பெருகும்போது வேண்டுமானால் அதைப்பற்றி யோசிக்கலாம். இப்போது தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். சின்னசாமி :** தர்மபுரி மாவட்டத்தில் ஏறத்தாழ 100 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கல்வி அதிகாரிகள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். தர்மபுரியிலிருந்து சேலத்திற்குச் சென்று முதன்மைக் கல்வி அதிகாரியைச் சந்திக்கவேண்டுமென்றால் எங்களைப் போன்றவர்களுக்கு அதிக நேரம் செலவிடவேண்டியிருக்கிறது. ஆகவே உடனடியாக தர்மபுரி மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு முதன்மைக் கல்வி அதிகாரியை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இரண்டு மூன்று ஆண்டுக் காலத்திற்கு முன்பு, வட ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, கோவை, நீலகிரி ஆகிய அத்தனை மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரு கல்வி அதிகாரி வட ஆர்க்காடு மாவட்டத்தில் இருந்தார்கள். அந்தக் கஷ்டங்களைப் போக்க பெரிய மாவட்டங்களுக்கு ஒவ்வொரு தலைமைக் கல்வி அதிகாரியை நியமித்தோம். இப்போது தர்மபுரிக்கு ஒரு முதன்மைக் கல்வி அதிகாரி தனியாக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னை தள்ளி வைக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். அறவே நீக்கவில்லை. பிறகு ஆராய்ந்து தேவை ஏற்படும்போது நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற அளவில் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** வேலைப் பளுவின் அளவை வைத்து தலைமைக் கல்வி அதிகாரிகளை நியமனம் செய்வதில் ஒரு ஜில்லாவிற்கு ஒன்று என மாற்றுவதுபற்றி அரசாங்கம் புனர் பரிசிலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த எண்ணத்தை வைத்துக்கொண்டுதான் இப்போது தள்ளிவைக்கப் பட்டிருக்கிறது. பத்து மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் நியமிக்க வேண்டுமென்றால்

[1972 ஆகஸ்ட் 23

கன்னியாகுமரிக்கும், தர்மபுரிக்கும் ஒருவர் என்று நியமிக்க வேண்டிவரும். அது பரிசீலனையில் இருந்து வருகிறது. தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** முதன்மைக் கல்வி அதிகாரிகள் ஜில்லாவிற்கு ஒருவர் நியமிப்பதற்கு சமீபத்தில் ஹைதாராபாத்திலிருந்து வந்த எக்ஸ்பெர்ட் குழு ஆலோசனை கூறியிருப்பதாகவும், அந்தக் குழு கல்விக்காக ஏராளமான பணம் செலவு செய்யப்பட்டும்கூட கல்வியின் தரம் குறைவாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருப்பதாகப் பத்திரிக்கைகளில் செய்தி பார்த்தோம். அது உண்மையா? கல்வி அதிகாரிகள் அதிகமாக்கப்பட வேண்டும் என்று அவர்கள் யோசனை கூறியுள்ளார்களா? அதன்பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது அரசால் நியமிக்கப்பட்ட குழு அல்ல. கல்வி பற்றி ஆராய்வதற்காகத் திட்டக்குழுவில் டாஸ்க் போர்ஸ் ஒன்று பணியாற்றிவருகிறது, டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில். அவர்கள் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த கமிட்டி அறிக்கையைப் பொறுத்தவரையில் ஸஜஷன்ஸ் என்ற அளவில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்பதற்குப் பதிலாக குற்றச்சாட்டுகள்தான் அதிகமாக இருந்தன. ஆகவே அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். டாஸ்க் போர்ஸ் பல்வேறு கருத்துக்கள் குறித்து. பல்வேறு பிரச்சினைகளில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள். இன்னும் அரசுக்குச் சமர்ப்பிக்கவில்லை. ஒன்றிரண்டு திங்கள்களில் எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தபிறகு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

*Wages for Handloom weavers in Madurai*

* 276 *Q*.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether it is a fact that 15,000 Handloom Weavers in Munichalai area of Madurai demanded wage increase and bonus from Master Weavers; and

(*b*) if so, the steps taken for settlement of the same?



1972 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) 4-10-1971 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் கைத்தறி நெசவாளர்கள் ஊதிய உயர்வுக் கோரிக்கை உட்பட மற்றும் சில கோரிக்கைகளை எழுப்பியதைத் தொடர்ந்து, 12-10-1971 அன்று தறியுடையோர்க்கும் நெசவாளர்களுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின்படி ஊதியத்தில் ஏற்பட்ட உயர்வு பாவு ஒன்றுக்கு ரூ. 7 ஆகும். ஆனால் 10-12-71 முதல் தறியுடையோர் ஊதியத்தை பாவு ஒன்றுக்கு ரூ. 4 ஆகக் குறைத்தனர். அதன் காரணமாக 3-1-1972-லிருந்து நெசவாளர்கள் உண்ணாநோன்பு இருந்ததோடு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். அதன் பலனாக ஏற்கெனவே ஒப்புக்கொண்டபடி 15-1-1972 முதல் ஊதிய உயர்வு மீண்டும் கொடுக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. 17-1-1972 முதல் மீண்டும் இயல்பான நிலை திரும்பியது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இம்மாதிரியாகக் கைத்தறி நெசவாளர்கள் சம்பளம் சம்பந்தமாக ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும் மாஸ்டர்வீவேர்ஸ் அதை நிராகரித்தார்கள், காரணம் அது சட்டப்படி செல்லாத என்று சொல்கிறார்கள். ஆகவே இப்போது அமைத்திருக்கக்கூடிய சம்பளம் நிர்ணயிக்கும் குழு தன் அறிக்கையை விரைவில் வெளியிடுவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

*Employees in film studios*

*277 *Q*. THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state whether there are proposals under the consideration of the Government to bring the employees in the Film Studios under the purview of the Labour Legislation in this State?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இல்லை. ஆனால், சட்டம் இயற்றும் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** சினிமாத் தொழில் தற்போது அதிகமாக விரிவடைந்து வருகிறது. ஆதலால் இனியாவது விரைவில் இந்தச் சட்டத்தை அமல் நடத்த மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா?

[1972 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** 23-7-70 நாளன்று நடைபெற்ற தொழிலாளர் நிலைக்குழுவின் கடைசிக் கூட்டத்தில் விவாதிக்கப்படுவதற்காக இந்த அறிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது. அக்கூட்டத்தில் திரைப்படத்தொழில் பணியாளர் களுக்காக சட்டமியற்றுவது குறித்து முத்தரப்பு குழுவின் அறிக்கையில் அடங்கியிருந்த செயற்குறிப்புகள் ஏற்பளிக்கப் பட்டன. இச்சட்டத்திற்கு இறுதி உரு கொடுக்கப்பட்டு வருவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மத்திய அரசு சட்டம் இயற்று வதற்கு முன்பாக நேற்று நிறைவேற்றிருக்கக்கூடிய தொழிலாளர் களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அந்தச் சட்டம் இருக்கிறதே அந்தச் சட்டமாவது பிலிம் ஸ்டுடியோக்களில் பணியாற்றக்கூடிய வர்களுக்கு அமலாக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தற்போது ஷாப் ஆக்ட் அதற்குப் பொருத்தமாக இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னது பரிசீலிக்கப்படும். இப்போதும் அவர்களுக்கு ஷாப் ஆக்ட்படி தக்க பாதுகாப்பு இருக்கிறது.

**திரு. அ. தேவேந்திரன் :** சினிமா உலகம் என்பது அது ஒரு தனி உலகமாகக் கருதக்கூடிய அளவிற்கு அது ஒரு பெரிய தொழிலாக இன்றைய தினம் நடந்துகொண்டிருப்பதால் அவர்களுக்கும் இந்தச் சட்டங்கள் அவசியமாக வேண்டும் என்பதால் மத்திய அரசிடம் நம் அரசு இது பற்றிக் கடுமையாக வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** பலமுறை வற்புறுத்தப் பட்டிருக்கிறது. அதன் காரணமாக விரைவில் சட்டம் ஒன்று கொண்டுவருவதற்கு மத்திய அரசும் ஒப்புக் கொண்டிருக்கிறது.

### சட்டமன்ற அச்சுப் பணிகள்

*278 வினா.—**திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டப்பேரவைக்கெனத் தனியாக அச்சகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



1972 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. என் வி. நடராசன் :** சட்டமன்ற அச்சுப் பணியைக் கவனிப்பதற்கென்று தனி அச்சகம் ஒன்றை நிறுவும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** சட்டசபைக்கான தனி அச்சகம் அமைக்க முடியாத நிலை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் இப்போது அண்மையில் வெகு வேகமாக வந்து கொண்டிருக் கின்றன, அந்த விதத்தில் அமைச்சர் அவர்கள் பாராட்டை பேரவைத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். அது மாதிரி இங்கே நிறைவேற்றப்படுகிற சட்டங்களும், சட்டத்திருத் தங்களும் அந்தந்த வாரமே அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** உறுப்பினர் அவர்களது யோசனையை பரிசீலனை செய்து ஆவன செய்ய அரசு முயற்சிக்கும்.

### சத்துணவுத் திட்டம்

*279 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் ரொட்டி பால் வழங்குவது சென்னை நகரில் எத்தனை இடங்களில் செயல் படுத்தப்படுகிறது ?

(இ) தமிழகத்தின் மற்ற மாவட்டங்களில் எங்கெங்கு வழங்கப்படுகிறது ?

(உ) தமிழகத்தின் எல்லா நகராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தை செயல்படுத்தவேண்டி மத்திய அரசினை நமது அரசு வலியுறுத்தியுள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) மத்திய அரசின் சிறப்புச்சத்துணவுத்திட்டத்தின்கீழ் சென்னை நகரில் 319 உணவு வழங்கு நிலையங்கள் மூலம் மாடர்ன் பேக்கரிஸ் நிறுவனத் தாரால் தயாரிக்கப்படும் சத்தூட்டப்பட்ட பால்ரொட்டி (Milk Bread) குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

(இ) ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கட்தொகையுடைய 18 நகராட்சிகளில் மாடர்ன் பேக்கரிஸ் நிறுவனத்தாரால் தயாரிக்கப் படும் சத்தூட்டப்பட்ட பால்ரொட்டி மட்டுமே வழங்கப்படுகிறது.

(உ) மக்கட்தொகை 50,000-த்திற்கு அதிகமுள்ள நகராட்சிப் பகுதிகளுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த மத்திய அரசிடம் கோரிக்கை விடுப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. என். கிட்டப்பா :** கிராமப் பகுதியில் உள்ளவர்களுக்கும், நோயாளிகள், வயது வந்தவர்கள், உடல் ஈனமுற்றவர்களுக்கும் இந்தச் சத்துணவு திட்டத்தை விரிவுபடுத்த முன்வருவார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நோயாளிகளுக்கு விரிவுபடுத்தும் ஆலோசனை இப்போது இல்லை. பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு விரிவுபடுத்தும் திட்டம் செயல்படுகிறது. அவர் களுக்கு வைட்டமின் மாத்திரைகள் எல்லாம் சேர்த்துக் கொடுக் கப்படுகிறது. எல்லாக் குழந்தைகளுக்கும் இந்தச் சத்துணவு தர வேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

**திரு. கி. ஜெயராமன் :** சேலம் நகராட்சியிலிருந்து இத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கோரிக்கை வந் துள்ளதா? அரசு துரிதமான நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சேலத்தில் 4,000 குழந்தைகளும், 746 பெண்களும் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறு கிறார்கள். இந்தத் திட்டத்தின்மூலம் சத்துணவு தர அரசு ஆலோசித்து வருகிறது.

THIRU K. M. SUBRAMANIAM · Since this distribution is mainly taking place through voluntary organisations, there is lot of complaint that certain parties take advantage of this distribution. So will this Government consider the question of distributing these articles through Corporation and through its Child Welfare Department?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இப்போது கொடுக் கின்ற முறையில் எந்தவிதத் தவறுகளும் இருப்பதாகப் புகார் வர வில்லை. சென்னை மாநகராட்சியில் மட்டும் அப்படிப்பட்ட நிலையங்



கள் மூலம் தரலாம். மற்ற மாவட்டங்களில் முடியாது. குறைகள் அதிகமாக இல்லை. ஒன்றிரண்டு இருந்தாலும் உடனடியாக நீக்கப் படுகின்றது.

*280 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கும் வயது வரம்பை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) இத்திட்டத்திற்கு மத்திய அரசு வழங்கும் உதவி யாது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) மத்திய அரசின் அனுமதியின் பேரில் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங் கும் வயது வரம்பு மூன்றிலிருந்து ஆறு ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(இ) மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் இச்சிறப்புச் சத்துணவுத் திட்டம் இம்மாநிலத்தில் செயற்படுத்தப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** சத்துணவாக என்ன பொருள்கள் கொடுக்கப்படுகின்றன? சத்துணவு வகையில் வைட்டமின் மாத் திரைகள் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** குழந்தைகளுக்கும் தாயார்களுக்கும் சத்துணவு, வைட்டமின் மாத்திரைகள், இரும்புச் சத்துள்ள மாத்திரைகள் ஆகியவை கொடுக்கப்படுகின்றன.

**திரு. வீ. செல்லதுரை :** சேரிப் பகுதிக் குழந்தைகளும், தாய் மார்களும் மிகவும் பலவீனமாக இருப்பதால் மற்றவர்களுக்குக் கொடுக்கும் அளவை விட இரண்டு மடங்கு அவர்களுக்கு கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதன் அவசி யத்தை உணர்ந்துதான் அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அதிகமாகக் குழந்தைகள் பெறுவதைக் குறைத்துக் கொண்டால் தாய்க்கும் சேய்க்கும் நலமாக இருக்கும்.

*Export of fish*

* 281 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether there are fish exports at present from this State to (i) other States and (ii) out of India;

(*b*) if so, the details thereof; and

(*c*) the annual income derive from this sale?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) & (உ) 1970-71-ம் ஆண்டில் ரூ. 2,44 லட்சம் மதிப்புள்ள 6,764 டன் மீனும் மீன் பொருட்களும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இது தவிர, அநேக மீன் வியாபாரிகளும் ஏற்றுமதி முகமையாளர்களும் கடற்கரையோரமெங்கும் இரால்களை வாங்கி, பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்காக கேரளத்தி லுள்ள கொச்சிக்கு அனுப்புகின்றனர். இவற்றின் சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை. கடல்மீன்கள் தவிர ஆறு மற்றும் ஏரி (fresh water) மீன்களும் இம்மாநிலத்திலிருந்து கல்கத்தா மற்றும் பிற இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மத்திய மீனளக் கழகம் கல்கத்தாவுக்குக் கடந்த மூன்றாண்டுகளில் அனுப்பியுள்ள ஆறு மற்றும் ஏரி (fresh water) மீன்களின் விவரங்கள் வருமாறு:—

1969-70—77 டன்—மதிப்பு ரூ. 1,07,800.

1970-71—45 டன்—மதிப்பு ரூ. 65,800.

1971-72—54 டன்—மதிப்பு ரூ. 77,000.

THIRU N. DENNIS: May I know whether export is by private parties or by the State? If private parties are there, will the Government come forward to set up a Fish Export Corporation in this State?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நான் சற்று முன்னால் சொல்லிய கணக்கு அரசாங்கத்தின் மூலம் மற்ற நாடுகளுக்கு அனுப்பப்படுவது பற்றியதாகும். தனிப்பட்டவர்களும் கடற்கரை ஓரங்களில் மீன்களை வாங்கி கொச்சி துறைமுகத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. 1,13 லட்சம் ரூபாய் அளவுக்கு அவர்கள் அனுப்புவதாக ஒரு கணக்கு இருக்கிறது. அது சரியான புள்ளி விவரமாக எனக்குத் தெரியவில்லை. அரசின்





மூலமாக முழுக்க முழுக்க வெளிநாடுகளுக்கு மீன் அனுப்ப வேண்டுமென்ற முறையில் சென்னை, தூத்துக்குடி துறைமுகங்கள் விரிவுபடுத்தப்பட்ட பிறகு திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

* **282 வினா.—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டை அகழியில் மீன் வளர்க்க, அதனை விற்க தமிழ்நாடு அரசு மத்திய அரசின் அனுமதி பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில். அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) வேலூர் கோட்டை அகழி, 1919-ஆம் ஆண்டிலிருந்து அதாவது 1904-ஆம் ஆண்டு பண்டைச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட சின்னம் என்று இக்கோட்டை அறிவிக்கப் படுவதற்கு முன்பே, மாநில மீனளத்துறையின் உடைமையாக இருந்து வருகிறது, அதனால் பயன்படுத்தப்பட்டும் வருகிறது. அவ்வகழியில் மீன்களை வளர்க்கவோ அல்லது அவற்றை விற்கவோ இந்திய அரசின் அனுமதி பெறப்படவில்லை, அது அவசியமுமில்லை. இவ்வகழியைப்பழுதுபார்ப்பதற்கும் மேம்பாடுகள் செய்வதற்கும் மட்டுமே, இந்திய அரசின் தொல்பொருள் துறையின் இசைவு தேவைப்படும். ஏனெனில், அகழிக்குப் பழுது பார்க்கும் பணியும் மேம்பாடுகள் செய்யும் பணியும் தொல்பொருள் கோட்பாடுகளுக் கிணங்க நிறைவேற்றப்பட வேண்டும்.

*Industrial Licences*

* 283 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the industrialist J. R. D. Tata who met the Chief Minister as the end of December 1969 at Madras expressed full support to the State's demand that Industrial Licensing powers should be progressively transferred to the State Government?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இல்லை, உரிமங்கள் பெறுவதிலும் நிறைவேற்றுவதிலும் உள்ள பல்வேறு இடர்பாடுகளை அவர் தெரிவித்தார்.

[1972 ஆகஸ்ட் 23

Dr. H. V. HANDE : May I know whether this Government discussed any details about starting of any industires in Tamil Nadu? If so may I know the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** குறிப்பிட்ட எந்தத் தொழிலைப் பற்றியும் விவாதிக்கவில்லை. பொதுவாகத் தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி விவாதித்தோம்.

**திரு. எம். சுரேந்திரன் :** தொழில்களைப் படிப்படியாக அரசாங்கம் எடுத்துக் கொள்வதில் 5 கோடி ரூபாய்க்கு மேல் மூலதனமுள்ள தொழில்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறதா அல்லது இன்னும் அதிக அளவில் மூலதனம் இருக்கக் கூடிய தொழில்களைத் தான் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எல்லாத் தொழில்களையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எப்போதும் அரசாங்கம் சொன்னதில்லை. தொழில் கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் திட்டவட்டமாகச் சொல்லப்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். மொனாபலி என்ற பெயரால் தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் செய்யாது தொழில் திட்டத்தைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். இந்த அரசைப் பொறுத்தவரை ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் மூலதனம் உள்ள எல்லாத் தொழில்களையும் அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற கொள்கையைப் பரிசீலித்து வருகிறோம்.

### காகிதத் தயாரிப்புத் தொழில்

* 284 வினா.—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்திடும் தொழிற்சாலை அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

**திரு. என். கிட்டப்பா :** தஞ்சை மாவட்டத்தில் திரு. ஆருரான் சர்க்கரை ஆலை இருக்கும் வடபாதி மங்கலத்தில் காகிதத் தொழிற் சாலை ஆரம்பிப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டுள்ளதா? நெல்லிக்



1972 ஆகஸ்ட் 23]

குப்பம், போரூர் சர்க்கரை ஆலைச் சக்கைகளையும் இங்கே கொண்டு வந்து தொழிற்துறையில் பின்னடைந்துள்ள தஞ்சையில் கூட்டுறவுத் துறையில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாட்டில் சுமார் 9 லட்சம் டன் 'பகஸ்' இருக்கிறது. பெரும்பாலும் இவற்றை ஆலையில் ஃப்யூவலுக்குப் பயன்படுத்துகிறார்கள். ப்யூவலுக்கு ஆல்டர் நேடிவ் கண்டுபிடித்தாலொழிய காகிதத் தொழிற்சாலைக்கு இதைப் பயன் படுத்துவது கஷ்டமாக இருக்கும்.

THIRU B. VENKATASWAMY : We are importing paper from other Nations. May I request the Hon. Minister whether there is any concrete proposal so as to use bagasse from all the sugar factories in the State to manufacture paper in our State itself.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போதுதான் பதில் சொன்னேன். இப்போது இதை ஃப்யூவலுக்குப் பயன்படுத்துகிறார்கள். அதற்கு மாற்று ஏற்பாடு செய்தால்தான் அதைக் செய்யப் பயன்படுத்த முடியும்.

* 285 வினா.—**திரு. பெ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காகிதக்கூழ், காகித உற்பத்தி ஆகியவைகளுக்கு வேண்டிய இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்ய சென்னைக்கு அருகாமையில் ஒரு தொழிற்சாலை நிறுவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இதுபோன்ற சாதனங்கள் தற்போது எங்கிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

### குளிர்சாதனப் பெட்டிகள் தயாரிப்பு

*** 286 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் குளிர் சாதனப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவிட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே. தனியார்த் துறையைச் சார்ந்தவர்கள் யாரேனும் குளிர் சாதனப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவிட முன் வந்து, அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே சென்னையில் இரண்டு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவதாக ஒரு நிறுவனம் நிறுவிட மனு போட்டிருக்கிறார்கள். அந்த மனு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினாக்கள் 287, 288, 289 ஒத்திவைக்கப்படுகின்றன.

### காரணிக்கு விவசாயத் துணைக் கிடங்கு

*** 290 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், காரணி கிராமத்தில் விவசாயத் துணைக் கிடங்கு நிலையம் ( **Agriculturalsub-depot** திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவரவர்களே, இந்தக் காரணி கிராமத்தில்—அந்த வட்டாரத்தில்—உள்ள விவசாயிகள் உரங்கள், விதைகள் வாங்குவதற்காக இரண்டு பஸ்களைப்





பிடித்துக் கொண்டு கும்முடிப்பூண்டிக்குச் சென்று தான் வாங்க வேண்டியிருக்கிறது. அங்கே துணைக் கிடங்கு ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று பஞ்சாயத்து ஒன்றியத்திலே கூட தீர்மானம் போட்டு அனுப்பி வைத்து இருக்கிறது. அதை அரசு ஏற்று, மறு பரிசீலனை செய்து, அங்கே ஒரு துணைக் கிடங்கு ஒன்று ஏற்படுத்தித் தர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** பஞ்சாயத்து ஒன்றியம் அந்தக் கிடங்கு ஏற்படுத்த ஆகும் முழுத் தொகையையும் கொடுக்க முன்வந்தால், அதை வேளாண்மைத் துறை அங்கீகரிக்கும்.

### *Cultivation of Jasmine*

*** 291 Q.—Thiru K. S. KOTHANDARAMIAH :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Government have received proposals from the Collector of Dharmapuri, recommending the cultivation of jasmine flowers in Hosur and Denkanikota taluks; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Thiru B. VENKATASWAMY : Sir, jasmine is coming up very nicely in Hosur and Denkanikota taluks. There is good demand for it in Bangalore and Bombay and jasmine scent is exported to other countries. May I know from the Hon. Minister whether this Government would come forward with concrete programmes so as to produce jasmine plants at Hosur and Denkanikota taluks?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, இது வரையில் நம்முடைய மாநில சர்க்காரோ, மத்திய சர்க்காரோ இதற்கான திட்டம் கொண்டு வரவில்லை. அது பற்றிய திட்டம் இல்லையென்றாலும் இப்போது பெங்களூர் போன்ற மற்ற ஊர்களுக்கு பூக்கள் அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் திட்டம் இல்லாமலேயே இன்றைக்கு கிட்டத்தட்ட மல்லிகை 2,000 ஏக்கரிலும், செவ்வந்திப் பூ 400 ஏக்கரிலும்,

கனகாம்பரம் சுமார் 200—300 ஏக்கரிலும், மருவு 50 ஏக்கரிலும் சாகுபடி செய்து இருக்கிறோம். இதற்கு தமிழக சர்க்காரிலும், மத்திய சர்க்காரிலும் ஒரு திட்டம் கொண்டு வர வேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கிறோம். அது விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

## ஓட்டல் தொழில்

*** 292 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரிய ஓட்டல்களை அரசுடைமையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, ஓட்டல்களை அரசுடைமையாக்கும் திட்டம் தற்போது இல்லையென்றாலும், டெல்லியில் மத்திய அரசு அசோகா ஓட்டல் நடத்துவது போன்று, நம்முடைய அரசும் 5 நட்சத்திர ஓட்டல் ஒன்றைக் கட்டி, வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கும் வகையில் முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். சென்னையில் 65 மாடி ஓட்டல் ஒன்று கட்டுவதற்கான முயற்சி எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அரசு சுற்றுலாத் துறையின் மூலமாக அப்படிப்பட்ட ஓட்டல் ஒன்று கட்டுவதற்கான உத்தேசம் இல்லை. 65 மாடி ஓட்டல் கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், பெரிய ஓட்டல்களை அரசுடைமையாக்காவிட்டாலும்—அரசுடைமையாக்கும் திட்டம் மக்களுக்கு எளிதான வகையில், குறைந்த விலையில் சாமான்கள் கிடைக்க வேண்டுமென்பது தான்—அதையாவது செய்து கொடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஓட்டல்களை அரசாங்கம் ஏற்று நடத்தும் திட்டம் இல்லை. சுற்றுலா வாரியத்தைப் பொறுத்த வரையில் ஓட்டல்களைத் திறந்து





குறைந்த விலையில் சாமான்களை சப்ளை செய்வது என்ற எண்ணம் இல்லை. வெளி நாட்டுப் பயணிகளை ஈர்க்க வேண்டும், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் தான் சுற்றுலா வாரியம் ஓட்டல்களை நடத்திக்கொண்டு வருகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, எலியெட்ஸ் கடற்கரையில் இன்டர்நேஷனல் ஓட்டல் ஒன்று கட்டுவதாகத் திட்டம் இருந்ததே, அது என்னவாயிற்று?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, எலியெட்ஸ் கடற்கரையில் 5 ஸ்டார் ஓட்டல் ஒன்று கட்டுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அது ஏற்கெனவே ஒருவருக்குக் கொடுக்கப் பட்டு, அவர் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். அந்த இடம் அப்படியேயிருக்கிறது. வேறு யாரேனும் விண்ணப்பிப்பார்களானால் அதை அரசாங்கம் பரிசீலிக்கும்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, ஓட்டல்கள் நிறைய இருக்கின்றன என்றாலும், அவை சரிவர வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் இல்லையென்ற குறையைச் சொல்லுகிறார்கள். ஆகவே, இப்போது அப்படிப்பட்ட ஓட்டல்களில் பணியாற்றுகிறவர்களுக்கு எப்படிப் பயணிகளைக் கவனிக்க வேண்டுமென்பதற்காக ஒரு பயிற்சி நிலையமோ, கல்லூரியோ ஆரம்பித்து, அவர்களுக்கு அம்முறையில் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா? வெளி நாடுகளில் இருக்கிற ஓட்டல்களில் அழகான இளம் பெண்கள் மிக நல்ல முறையில் ஓட்டல்களுக்கு வருபவர்களை வரவேற்று உபசரிக்கிறார்கள். அந்த முறையை இங்கேயும் பின்பற்ற அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டின் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தான் நாம் இங்கே ஓட்டல்களை நடத்த முடியும். அந்த வகையில் தான் இங்குள்ள ஓட்டல்கள் நடத்தப்படுகின்றன. வெளிநாட்டுப் பயணிகள் நம் நாட்டின் கலாசாரம், கலை, சிற்பங்கள், பண்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்ள, தெரிந்து கொள்ள, பார்த்துச் செல்லத்தான் வருகிறார்கள். அந்த வகையில் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் சென்னையில் பல ஓட்டல்கள் இருக்கின்றன.

[1972 ஆகஸ்ட் 23

*House-sites for freedom fighters*

* 293. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to allot house-sites for freedom fighters ; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) & (இ) இல்லை. ஆனால் மதுரை அனைத்துக் கட்சி இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் சங்கச் செயலாளரிடமிருந்து வரப்பெற்ற ஒரு விண்ணப்பத்தைப் பரிசீலித்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தவணை முறையில் வீட்டு மனைகளையும் அங்கணங்களையும் தவணை முறைக்கு ஒதுக்கும்போது, விடுதலைப் போராட்ட வீரர்கள் நகரங்களில் மனைகள், அங்கணங்கள் வேண்டுமென கோரி விண்ணப்பித்தால் அவர்களுக்கு பொது மக்களுக்கு என்று ஒதுக்கப்பெற்ற 53 சதவிகிதத்திலிருந்து தனிச் சலுகையாக வழங்க வேண்டுமென அரசு தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு அறிவுறுத்தியிருக்கிறது.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, போதுமான வீட்டு மனைகள் அளிப்பதற்காக, விடுதலை வீரர்கள் எவ்வளவு என்ற கணக்கை எடுத்து, அவர்களுக்கு ஹவுஸ் சைட் வழங்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இது வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த கேள்வி. தியாகிகளுக்கு இலவசமாக நிலம் கொடுக்கும் பொறுப்பு என்னிடத்தில் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, வீடு இல்லாதவர்கள் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடாது என்ற கொள்கை இருக்கிற காரணத்தால், உடனடியாக இலவசமாக வீட்டு மனைகளை வழங்குவதற்கு ஏதோ ஆலோசனை இருப்பதாகக் கூறினார்கள். இந்த ஆண்டு இறுதிக்குள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, இந்த வீட்டு மனைகள் நாம் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இலவசமாகத் தருவதில்லை. அதற்கான கட்டணம் முதலில் ¼ பங்கு வாங்கிக்



1972 ஆகஸ்ட் 23]

கொண்டு விட்டு, மீதியுள்ளதை 15 ஆண்டுகளில் தவணை முறையில் தரலாம் என்று நிலை இருக்கிறது. பண்படுத்தப்பட்ட நிலம் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. இடம் ஒதுக்குகிற நேரத்தில் தியாகிகளுக்கு முதலிடம் தரலாம் என்ற கருத்து வீட்டு வசதி வாரியத்திற்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

*Financial assistance for marriages*

* 294. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the authorities of Sri Subramaniaswami temple, Tiruchendur, have undertaken to finance marriages; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) இந்து ஏழைகளுக்கு இலவசமாகத் திருமணம் செய்து வைக்க சுப்பிரமணியசாமி திருக்கோயில் அறங்காவலர் குழுவில் ரூ 100-க்கு மேல் ரூ. 150-க்குள் இலவசமாக வருடத்திற்கு 100 திருமணங்கள் வரை வைகாசி மாதம் முதற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வகையில் மணமக்களுக்கு கல்யாண உடை, திருமாங்கல்யம், கோவில் கட்டணம், புரோகிதம் முதலியவை இலவசமாக மேற்படி தொகைக்குள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பலயிடங்களில் ஆண்டவனுக்கு ஆண்டுதோறும் திருமணம் நடைபெறுகிறது. அதற்குப் பதிலாக இப்படிப்பட்ட ஏழைகள், தாலி வாங்கக் கூட வசதியில்லாதவர்கள், அல்லது அப்படிப்பட்டவர்களுக்கு கோவிலில் திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட ஏழைகளுக்கு திருமணம் செய்து வைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எந்தக் கோவிலில் உபரி நிதி இருக்கிறதோ, எந்தக் கோவிலில் உள்ள அறங்காவலர்கள் இப்படிப்பட்ட திருமணங்களைச்" செய்வதற்கு ஒப்புக்கொள்கிறார்களோ, அந்தக் கோவில்களில் இந்த முறை செயல்பட இருக்கிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே, அரசாங்கம் ஒரு பக்கத்திலே குழந்தைகள் பிறப்பதை தடை செய்யவேண்டுமென்பதற்காக நிறைய பணத்தைச் செலவு செய்து பிரசாரம் செய்து வருகின்றது. கல்யாணம் கொஞ்சம் லேட்டாகச் செய்தால் குழந்தைகள் பிறப்பதையும் கொஞ்சம் தடை செய்ய முடியும். அரசாங்கமே கல்யாணம் செய்வதற்கு உதவி செய்கிறேன் என்று சொல்லி ரூ. 2,000 பணத்தை இப்போது ஒதுக்கியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் கல்யாணம் ஆனவர்கள் கூட பணம் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். இப்போது கல்யாணம் செய்வதற்கு கோவில் பணத்தையும் எடுத்துச் செலவிடலாமா ? ஒரு பக்கத்தில் மக்கள் தொகையைக் குறைப்பதற்குப் பிரசாரம், மற்றொரு வகையில் அரசாங்கமே விரைவாகக் கல்யாணம் நடத்தி வைப்பதற்கு வசதி செய்து கொடுப்பது, இது விஷயத்தில் அரசாங்கம் என்ன கொள்கை அனுஷ்டித்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கூழுக்கும் ஆசை. மீசைக்கும் ஆசை என்றால். கூழ் குடிக்கும்போது மீசையை ஒதுக்கிக்கொண்டுதான் கூழ் குடிக்க வேண்டும். (சிரிப்பு)

### ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில்

*** 295. வினா—திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஸ்ரீவில்லிபுத்தூர் பெருமாள் கோயில் கோபுரத் திருப்பணி செய்ய அரசு திட்டமிட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஆம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]**





## 2. அறிவிப்பு

### (அ) சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஒரு அறிவிப்பு. கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள், தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் திருத்தங்கள் ஏதுமின்றி, 19-8-1972-ம் நாளன்று நிறைவேற்றப்பட்டன என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/72).

2. தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/72).

மேலும், தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, கூடுதல் நிலவரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 28/72) பரிந்துரை ஏதுமின்றி, 19-8-1972-ம் நாளன்று சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்டது என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) மணலியிலுள்ள மதறாஸ் ஃபெர்டிலைசர்ஸ்-ல் நடந்த ஒப்பந்தத் தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து.

**THIRU N. DENNIS :** Mr. Deputy Speaker, Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, namely, the strike by the contract labourers of the Madras Fertilisers in July, 1972.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** துணைத் தலைவர் அவர்களே, சங்கர் என்னும் தொழிலாளி தனது வேலையிடத்தை விட்டு வேறு இடத்திற்குச் சென்று அங்கு மிகுதி நேரம் வேலை

செய்து கொண்டிருந்த தொழிலாளிகளை வேலை நிறுத்தும்படி தூண்டியதாக கூறப்பட்ட குற்றத்திற்காக தற்காலிகமாக வேலை நீக்கம் செய்ததை மறுப்பு தெரிவிக்கும் வகையில் மெட்ராஸ் ஃபெர்டிலைசர்ஸ் பணியாளர்கள் யூனியனைச் சார்ந்த தொழிலாளிகள் திடீரென்று 26-7-1972 அன்று பிற்பகல் 1-15 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 31-7-72 அன்று சென்னை மூன்றாவது சரக தொழிலாளர் துறை அலுவலர் இரு தரப்பினரையும் அழைத்து ஒரு சமரச உடன்பாடு ஏற்பட பேச்சு வார்த்தைகள் நடத்தி வேலை நிறுத்தத்தை கைவிட அநேக யோசனைகள் எடுத்துக் கூறப்பட்டன. அப்போது நிர்வாகத்தினர் எந்த கோரிக்கை மீதும் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு முன் நிபந்தனையாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு வேலைக்கு திரும்ப வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள். மேற்படி தொழில் நிறுவனம் தொழில் தகராறு சட்டத்தின் கீழ் அத்தியாவசிய பொருள் உற்பத்தி தொழிலாக விளம்பரப்படுத்தப்பட்டதால் வேலை நிறுத்தத்தை கைவிட்டு வேலையில் சேரும்படி தொழிலாளருக்கு தொழிலாளர் துறை அலுவலரால் அறிவுரை வழங்கப்பட்டது. சமரச பேச்சு வார்த்தைகளுக்கிடையில் 7-8-1972 தேதி அன்று மாலை நிர்வாகத்தினருக்கு சங்கம் ஒரு கடிதத்தில் எவ்வித நிபந்தனையுமின்றி வேலை நிறுத்தத்தை கைவிட்டதென்று தெரிவித்ததோடு 8-8-1972 முதல் எல்லா நேரிடை தொழிலாளர்களும் வேலையில் சேர்ந்தனர். வன் செயலைத் தூண்டிய குற்றத்திற்காக 9 தொழிலாளிகளை விசாரணை முடியும் வரை நிர்வாகம் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது.

சிப்பங்கட்டி பட்டுவாடா (packing and delivery) செய்வதற்காக வேலையில் அமர்த்தப்பட்ட 200 ஒப்பந்த தொழிலாளர்களுள் 75 தொழிலாளருக்கு வேலை கொடுத்து அவர்கள் 8-8-1972 முதல் வேலை செய்ய தொடங்கினர். அவர்கள் கொடுத்த வேலையை முடித்தபிறகு சிப்பங்கட்டவேண்டிய சாமான்கள் இல்லாததால் ஒப்பந்தத் தொழிலாளர்களை அனுப்பும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சிப்பங்கட்டி பட்டுவாடா செய்யும் வேலைக்காக தொழிலாளர்கள் கேட்கப்படவில்லை. இந்த 200 ஒப்பந்த தொழி-



லாளர்கள் தவிர மற்றும் 200 ஒப்பந்த தொழிலாளர்கள் கட்டிட வேலைக்காக நியமிக்கப்பட்டு இந்த 200 தொழிலாளர்களும் முன் போலவே வேலைசெய்து வருகின்றனர். இப்பொழுது தொழிற்சாலையில் அமைதியான சூழ்நிலை நிலவி வருகிறது.

**திரு. என். டென்னிஸ் :** ஒப்பந்த முறையில் வேலை ஆட்களை எடுப்பதில் பல சிக்கல்கள் இருப்பதால், நிரந்தரமாக வேலை ஆட்களை எடுப்பதற்கு வழிவகுப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஒப்பந்த முறையில் வேலை ஆட்களை எடுப்பதை கூடுமான அளவுக்குக் குறைப்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

## (ஆ) நெசவாளர் வேலையின்மையைப் போக்க நூல் விநியோக முறையை ஒழுங்குபடுத்தல் குறித்து.

**திரு. கி. செயராமன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உயர்ந்த ரக பருத்தி நூலின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளதால் கைத்தறி நெசவாளர்களின் வேலை வாய்ப்பு குறைந்தும் பல இடங்களில் வேலையின்மை ஏற்படுகின்ற நிலை உண்டாவதைப் போக்க, நூல் விநியோக முறையை ஒழுங்குபடுத்த வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, the prices of cotton yarn, particularly in the higher counts, have increased over the last two years. At present there is no statutory control over the distribution of cotton yarn. Only a voluntary pool scheme is in vogue, under which cotton yarn under 40 counts and below are allotted to consumers at prices fixed by the Textile Commissioner. This scheme has been extended to higher counts from 1st August 1972, and 50 per cent of the production of yarn of these counts will be made available by the mills for distribution under the regulated price. The voluntary pool scheme has not been found to work satisfactorily in actual practice. The loop-holes in the scheme have been pointed out to Government of India and they have been requested to give the necessary powers to State Government to control the price of yarn and regulate the distribution.

In order that the handloom industry may get yarn at reasonable prices, the Co-operative Spinning Mills in the State are selling nearly 50 per cent of the yarn produced by them, on an average at less than 10 per cent margin of profit, at a much lower price than the open market price to the Weavers Co-operative Societies. The prices of cotton yarn sold by the Co-operative Spinning Mills are generally lower by one or two per cent compared to the open market prices. In finer counts the prices are lower, at times, even by 10 per cent. In allotting the yarn produced by the Co-operative Spinning Mills to Weavers Co-operative Societies, the economic working of the Co-operative Spinning Mills has also to be taken into account. The Government are considering the question of distributing the entire requirement of yarn of the Weavers Co-operative Societies at reasonable prices, from the Co-operative Spinning Mills, the Mills taken over by the Tamil Nadu Textile Corporation and other private mills.

In marketing the finished goods of the primary societies the Tamil Nadu Handloom Weavers Co-operative Society has in recent years vastly increased its operations in procurement and sales.

| Year. | (Rs. in crores.) | | |
|---|---|---|---|
| | Sales by primaries. | Procurement by Co-optex. | Sales by Co-optex. |
| (1) | (2) | (3) | (3) |
| 1966-67 .. | 10·50 | 3·5 | 4·10 |
| 1971-72 .. | 16·50 | 7·2 | 7·90 |

The total sales by the primaries has increased from Rs. 10.5 crores in 1966-67 to Rs. 16.5 crores in 1971-72.

During this period the Tamil Nadu Handloom Weavers Co-operative Society has also increased its procurement from the primaries. In 1966-67, the Society procured handloom goods worth Rs. 3.5 crores from the primaries out of their total sales worth Rs. 10.5 crores. In 1971-72 it has procured for Rs. 7.2 crores out of the total sales of Rs. 16.5 crores. Also the Co-optex has doubled the procurement in this period from Rs. 3.5 crores to Rs. 7.2 crores.

In spite of this commendable performance by the primaries and the Apex Society there is at present heavy accumulation of stocks (to the tune of about Rs. 8 crores) in the primaries and the Apex Society. The value of the accumulated stock is nearly 80 per cent more than that of the stock held last year at this time.



The Government are taking all necessary steps to see that the stock accumulated in the primary societies are cleared away as early as possible. The Tamil Nadu Handloom Weaver's Co-operative Society has taken necessary steps to pay all pending bills of the primary societies immediately and procure their entire accumulated marketable stocks. Regarding payment of rebate for the current year to the primary societies and Co-optex, out of the total Budgetary allotment of Rs. 130 lakhs, so far a sum of Rs. 45 lakhs has been sanctioned. Claim worth R. 10 lakh are pending with the Director of Handlooms which will be cleartd within a week. Regarding the balance, prompt action will be taken to pay the rebate on receipt of the recommended claims from the Assistant Director of Handlooms. As against the credit limit of Re. 1 crore in 1966, a special credit limit of Rs. 3 crores has also been obtioned from the Reserve Bank of India with Government guarantee. Government have also written to the Government of India on 11th August 1972 for a grant of Rs. 1.50 crores as special assistance to the Handloom Industry for clearing the accumulated stocks. This assistance is for (i) participation in the share capital of the Tamil Nadu Handloom Weavers' Co-operative Society; (ii) giving 10 per cent rebate during the festival occasion; and (iii) starting modern show rooms in major cities in the country. When these steps are taken the apex society will be sufficiently strengthened to handle atleast about 75 per cent of the total production of primaries for the next few years.

The Government have also taken up with the Government of India the question of reservations of certain varieties exclusively for the Handloom Sector. The existing orders on reservation are not applicable to units of less than 5 powerlooms thus opening a vast field for powerlooms to encroach into the reserved categories. Also the order is riddled with too many minute technical details which are too difficult to detect and enforce. These loopholes in the existing orders have been pointed out to Government of India and they have been requested to reserve all varieties of dhoties, sarees towels, bed covers and bed sheets exclusively to handlooms without stipulating any condition regarding the width of the border or number of powerlooms, as it is the case in the present order. The Government also have suggested to Government of India that the State Government should be empowered

to check and stop the movement, within the State, of fabrics produced, if any, in other States, in violation of the reservation orders.

The main problem for the Handloom Industry is availability of adequate finance to the primary societies. The Reserve Bank of India allots necessary finance on the basis of production in the societies. But whenever there is accumulation of stock and as a result the production of the society goes down, the societies do not get their basic requirement of finance, and they suffer in the result. The societies accumulate stocks over the major part of the year and dispose of them only during special seasons like Deepavali, but the borrowing limit has been fixed as 25 per cent of the annual production value. The Government are considering the question of getting the full requirement of financial assistance to the primaries from the Reserve Bank of India by liberalising the existing production and sales norms of the bank on the strength of Government guarantee and on the assurance of Apex Society to lift the goods fully.

To help the weavers outside the Co-operative fold the Tamil Nadu Handloom Finance Corporation has been formed. The Corporation sanctioned during the last year loans to the extent of Rs. 149.35 lakhs. Upto June 1966 a sum of Rs. 217 lakhs was issued. After 1966 June and upto 1971, a sum of Rs. 553 lakhs has been issued.

The Government are also taking necessary steps to increase the export of handloom fabrics. The total value of exports which fell from Rs. 3.66 crores in 1966 to Rs. 1.22 crores in 1970, picked up again in 1971 to Rs. 2.8 crores and shows further signs of increasing. The Government have sanctioned a grant of 2 per cent rebate of F.O.B. value of cotton handloom fabrics exported through Madras Port during the period 1st April 1971 to 31st March 1972. The question of extending this rebate for the current year also, is under consideration. Government are also considering the further steps to be taken to increase the value of export of handloom goods.

The Government have also proposed several ameliorative measures for weavers affected by gradual introduction of powerlooms. These measures include starting of training centres for



them to train in improved and latest methods of weaving providing alternative employment in the Co-operative Spinning Mills, assignment of land, issue of loans for cultivation, facilities for education, etc. Government have also constituted an Advisory Committee for fixing of minimum wages for employees in Handloom weaving. The provision of housing facilities will be taken into account along with the various housing programmes implemented by the State Housing Board and Slum Clearance Board.

The Government have all along been taking all possible measures to help the Handloom Industry. The expenditure on handloom has been steadily increasing year by year and from a sum of Rs. 118 lakhs in 1967-68, it has increased to Rs. 239 lakhs in 1971–72. The provision of adequate working capital to weavers co-operative societies at a reasonable rate of interest is the most important pre-requisite for the development of these institutions. The Reserve Bank of India provides funds to the Weavers Co-operative Societies through the State Co-operative Bank and the District Co-operative/Central Banks for production and marketing at 1.5 per cent below the bank rate. The Co-operative Financing Banks are given a subsidy of 3 per cent as their margin, to enable them to lend to the Weavers Co-operative Societies at concessional rate of interest.

The Working capital loans provided to the Weavers Co-operative Societies including the State Handloom Weavers Co-operative Society is backed by Government guarantee. During the year 1970-71 the Government have given guarantee in this regard to the extent of Rs. 500 lakhs to the Reserve Bank of India. For the year 1971–72 the Government have given guarantee in this regard to the extent of Rs. 625 lakhs to the Reserve Bank of India. During 1972–73, a sum of Rs. 777 lakhs has been recommended for Government guarantee. The subsidy assistance is extended in respect of the loans given by the Central Banks from their own funds also. A subsidy of 1 per cent is given to the Tamil Nadu State Co-operative Bank as its margin for routing the Reserve Bank of India finance at concessional rate to the State Handloom Weavers Co-operative Society.

[திரு. செ. மாதவன்] [1972 ஆகஸ்ட் 23

The credit limit sanctioned to the State Handloom Weavers Co-operative Society and the Primary Weavers Co-operative Societies and the subsidy sanctioned towards interest are given below :—

| | Credit limits sanctioned | | | Total subsidy towards interest on working capital loans sanctioned. |
|---|---|---|---|---|
| | State Handloom Weavers Co-operative Society. | Primary Weavers Co-operative Societies. | Total | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (Rs. in lakhs.) | | |
| 1967-68 .. | 100·00 | 286·05 | 386·05 | 10·62 |
| 1971-72 .. | 275·00 | 250·29 | 625·29 | 10·85 |

The expenditure on rebate also has tremendously increased from Rs. 64 lakhs in 1966–67 to 130 lakhs in 1971–72. The State participation in the share capital of the Apex Society has also increased over the last five years. In 1966 the Apex Society had a total share capital of only Rs. 36.25 lakhs with a Government contribution of Rs. 18 lakhs. Now the society has a share capital of Rs. 87 lakhs, the Government contribution being Rs. 62.5 lakhs. This enhanced contribution by Government in the share capital has enabled the society to increase its borrowing power, thus increasing its procurement capacity. The Central Co-operative Banks are asked to continue to take the outstandings due from the State Apex Society as an admissible item of cover for borrowings in making advance to the primary societies.

It should be mentioned in this context that the cess fund scheme under which a separate cess was levied on organised mill sector and kept in a fund out of which handloom development schemes were implemented, has been dropped since 1960. At present the cess fund has been completely merged with the central revenues. The Government of India do not allot any specific amount for handloom schemes but give only a block grant covering various plan schemes. The amount made available for handlooms out of the block grant by the Government is much more than what would have been allotted under the cess fund scheme.



1972 ஆகஸ்ட் 23] [திரு. செ. மாதவன்]

From what has been said above it will be clear that the Government have taken all necessary steps for the development of handloom industry. In particular this Government have introduced the following new schemes to help the handloom weavers :

1. State participation in the share capital of primary weavers co-operative societies in order to improve their borrowing base. Under the scheme, since 1967–68, Rs. 30 lakhs has been invested.

2. Sanction of 100 per cent loan towards share capital required by individual weavers to become member of Co-operative Societies, a provision of Rs. 6 lakhs has been made for the year 1972–73.

3. Introduction of new training programmes imparted in the 12 training centres in all the districts except Nilgiris and Madras. The expenditure on this which was Rs. 1.41 lakhs in 1966–67 has now risen to a proposed 5.83 lakhs for 1972–73.

Finally a comparison of the amount spent on Handlooms among various States will clearly show that Tamil Nadu is leading all other States in this filed. The average annual expenditure on Handlooms during the last three years has been of the order of Rs. 200 lakhs and the plan outlay on handlooms during the 4th Five-Year Plan is Rs. 1,060 lakhs. The outlay for Andhra Pradesh which is second to Tamil Nadu is only Rs. 322.44 lakhs. The outlay for Kerala is only Rs. 165 lakhs.

Government do not think that all the problems of the Handloom Industry have been solved or that there is very little to do for them in this field. They are aware that the Handloom Industry still faces a number of problems regarding availability of adequate finance, supply of yarn at reasonable prices and marketing of the finished handloom goods. In order to study these problems in detail and suggest suitable measures for the healthy and sound development of the handloom industry, the Government have decided to constitute an Expert Committee with Thiru K. Santhanam as Chairman and Thiru R. Kanakasabai, Chairman, Tamil Nadu State Co-operative Bank and Thiru M. P. Nachimuthu, President, Chennimalai Weavers Co-operative Society. The

Committee has been requested to submit its report within two months. On the submission of report by the Committee Government will take such further action as may be necessary.

THIRU K. T. K. THANGAMANI : This is rather a lengthy statement and a very useful statement from the point of view of handloom weavers and yarn prices. I request that copies of the same may be circulated to all hon. Members.

MR. SPEAKER : Yes, that will be circulated.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1972-ம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வரைவை அறிமுகம் செய்து மேற்படி சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கோருவார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு ஆயத்தீர்வைத் (திருத்த) சட்ட முன்வடிவை * அறிமுகம் செய்து, அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டத்தைச் செயல்படுத்தும்போது ஏற்பட்ட அனுபவத்திலிருந்து சிலமுறை பிறழ்ந்த செயல்களின் விளைவால் அரசுக்கு வருமான விரயம் ஏற்படுகிறதென தெரியவந்துள்ளது. எனவே, இம்முறை பிறழ்ந்த செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகச் சட்டத்தைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் தண்டனை விதித்துறைகளை மேலும் இறுக்கவும் கருதப்பட்டுள்ளது. சிலவகைக் குற்றங்களுக்கு விதிக்கப்படத்தக்க உயர்ந்த அளவு தண்டனையை உயர்த்தவும், சிறைத் தண்டனையும் அபராதமும் இணைந்த குறைந்த அளவு தண்டனையை வரையறுக்கவும் கருதப்

* 21-7-72-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பட்டுள்ளது. சில வகைக் குற்றங்கள் செய்தவர்களைப் பிணையத்தில் விடக்கூடாதென விதித்துறை இயற்றவும் கருதப்பட்டுள்ளது. வழக்குகளில் விரைந்து தீர்வு காண்பதற்காக, ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இவ்விரண்டு தண்டனைகளும் விதிக்கப்படத்தக்க குற்றம் செய்தவர்களை குற்றவியல் நீதிபதிகள், வழக்கை வரைவிடாமல் உடனுக்குடன் விசாரணை செய்ய அவர்களுக்கு அதிகாரம் வழங்கவும் கருதப்பட்டுள்ளது. குற்றம் செய்வதையே வழக்கமாகக் கொண்ட குற்றவாளிகளிடமிருந்து நன்னடத்தைப் பத்திரங்கள் வாங்கவும் கருதப்பட்டுள்ளது.

இதனை ஏற்குமாறு பேரவையை வேண்டுகிறேன்.

THIRU N. K. PALANISAMY : Sir, I move my amendment :—

"That the Bill be circulated for eliciting public opinion".

THIRU K. N. KUMARASWAMY : I second it.

**திரு. என். கே. பழனிசாமி :** ஸ்பீக்கர் சார், இன்றைக்கு இருக்கக் கூடிய போலீஸ் மெஷினரியைச் சரிசெய்து, சரியான முறையிலே ஏற்கெனவே இருக்கக்கூடிய சட்டங்களை அமல் செய்தாலே போதுமானது. இப்பொழுது கொண்டுவந்திருக்கிற இந்தமாதிரியான மசோதாவினால் எந்தவிதமான பிரயோஜனமும் கிடையாது. இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால் போலீசுக்கு மறுபடியும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்படும். அதனால் ஏழை எளிய மக்களின் கூட்டம் ஜெயிலிலே அதிகமாகி மேலும் நெருக்கடிதான் ஏற்படும்.

மதுவிலக்கு ரத்து செய்யப்படுவதற்கு முன்னால் பிரஞ்சு பாலிஷ், ஸ்பிரிட் இல்லிசிட் சாராயம் இவைகளை ஏழை எளிய மக்கள் குடித்து, அதன் காரணமாக அவர்கள் உடம்புக்கு பாதகம் ஏற்படுகிறது என்ற காரணங்களைச் சொல்லி மதுவிலக்கை ரத்து செய்தார்கள். மதுவிலக்கை ரத்து செய்தபின்னால் இரண்டு மாதங்களுக்கு கோர்ட்டில் கூட்டமே இல்லை. ஆனால் இரண்டு மாதங்களுக்குப் பின்னால் கள்ளச்சாராயத்தின் டேஸ்ட் காரணமாக கிராமப் புறங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சத் தொடங்கினார்கள். அதனால் மீண்டும் முன்போலவே கோர்ட்டில்

[திரு. என். கே. பழனிசாமி] [1972 ஆகஸ்ட் 23

கூட்டம் ஏற்பட்டுவிட்டது. இம்மாதிரி சட்டத்தைவிட கடுமையான சட்டத்தைப் போட்டாலும் கிராமப்புறங்களில் கள்ளச்சாராயம் காய்ச்சிக் கொண்டுதான் இருப்பார்கள். ஏனென்றால் அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. வேறு தொழில் கிடையாது. ஆகவே, அவர்களுக்கு ஏதாவது தொழில் கிடைத்து, பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டால் ஒழிய இம்மாதிரியான சமூக விரோத செயல்களைத் தடுக்க முடியாது.

அதுமட்டுமல்ல. முன்பெல்லாம் கோர்ட்டுக்குக் கொண்டு போவதற்கு முன்னால் அவர்கள் அருந்தியிருப்பது "சோண்டிச் சோறு, வாரா" என்று டெஸ்ட் பண்ணி கோர்ட்டுக்குக் கொண்டு போவார்கள். இந்த மசோதாவின்படி அப்படி டெஸ்ட் பண்ண வேண்டியதில்லை. அதனால் இரண்டும் ஒன்றுதான் என்று ஆகிறது. போலீசார் தயாரிக்கும் மகஜரில் மூன்று அல்லது இரண்டு விட்னெஸ் கையெழுத்து மட்டும் வாங்கி மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பினால் போதுமானது. அதை வைத்துக்கொண்டு அவர்களுக்குத் தண்டனை வழங்கிவிடுவார்கள்

அது மட்டுமல்ல. முன்பெல்லாம் சாராயம் காய்ச்சி வைக்கப் பட்ட பானைகள், பாட்டில்கள் எல்லாவற்றையும் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்குக் கொண்டுபோக வேண்டும். இப்பொழுது அப்படி இல்லை. பிடித்த இடத்திலேயே அவைகளை உடைத்து விடலாம். மகஜரில் விட்னெஸ் கையெழுத்து மட்டும் வாங்கியிருந்தால் போதும்.

அது மட்டுமல்ல. யார் மீதாவது பாண்டிச்சேரியிலிருந்து சாராயம் கொண்டுவரச் சொன்னார் அல்லது கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்குச் சொன்னார் என்று சொல்லி, இரண்டு விட்னெஸ் போட்டுக் கொடுத்தால் அவர்கள் மீதும் கேஸ் போட முடியும். போலீஸ் மகஜரில் விட்னெஸ் போடுவது யாரென்று நமக்குத் தெரியும். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் சாதாரண மக்கள் கையெழுத்துப் போட மாட்டார்கள். சாட்சி சொல்ல மாட்டார்கள். போலீஸ்காரர்களே இரண்டு மூன்று பேர்களை இதற்கென்றே தயார் செய்து வைத்திருப்பார்கள். அவர்கள் இரவிலே போய் கையெழுத்துப் போடுவார்கள். பகலிலே போனால்



1972 ஆகஸ்ட் 23] [திரு. என். கே. பழனிசாமி]

அவர்கள் யார் என்று அடையாளம் தெரிந்து கிராம மக்கள் அவர்களை சும்மா விட மாட்டார்கள். அதனால் அவர்கள் இரவிலே தான் போவார்கள்.

அதுமட்டுமல்ல. முன்பெல்லாம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், குடித்தாயா என்று கேட்டால் "ஆம்" என்று ஒத்துக்கொண்டால் 25 ரூபாய் அபராதம் போடுவார்கள். அதனால் அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். ஆனால் இப்போது மினிமம் 500 ரூபாய், மூன்று மாத ஜெயில் என்று இந்த மசோதாவில் வகை செய்திருப்பதால் யாரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். கன்டெஸ்ட் செய்வார்கள். அப்படி கன்டெஸ்ட் செய்வதனால் கோர்ட்டில் வழக்குகள் விரைவில் முடிவடையாது. அதனால் கூட்டம் அதிகமாகிக் கொண்டே போகும்.

அதுமட்டுமல்ல. கேஸ் கன்டெஸ்ட் பண்ணும்போது எல்லாவற்றையும் பதிவு செய்ய வேண்டும் என்றில்லை. போலீசார் மகஜரில் என்ன சொல்லியிருக்கிறார்களோ அதற்குப் பொருத்த மானவற்றை மட்டும் ரிக்கார்டு செய்துகொண்டால் போதும் என்று இருக்கிறது. வாதப் பிரதிவாதங்களைக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை; அதன்படி தீர்ப்பு சொல்லவேண்டும் என்றில்லை. அதுவுமல்லாமல் சாதாரண ஏழை எளிய மக்கள் வக்கீலுக்குப் பணம் கொடுத்து கேஸ் நடத்த முடியாது. பணக்காரர்களாக இருந்தால் நிறையப் பணம் செலவு செய்து, குற்றம் செய்திருந் தாலும் தப்பித்து விடுவார்கள். அதனால் இந்த மசோதாவினால் பாதிக்கப்படுகிறவர்கள் ஏழை எளிய மக்கள்தான்.

அதுமட்டுமல்ல. சமீபத்தில் சுப்ரீம் கோர்ட்டில் புஷான் கேஸில் ஒரு தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள். அதன்படி கெமிக்கல் டெஸ்ட் செய்து பார்க்க வேண்டும். டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுத்திருந்தால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அப்படி என்றால் கோர்ட்டில் ஒரு கேஸ்கூட நடக்காது. ஏனென்றால் ஒருவன் ஸ்பிரிட் குடித்திருக்கிறான் என்றால், கெமிக்கல் டெஸ்ட் முடிந்து வந்த பிறகுதான் கேஸில் தீர்ப்பு கூற முடியும். கெமிக்கல் டெஸ்ட் வந்து சேருவதற்கு ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது. அதுவரை வாய்தா போட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அதனால் கேஸும் முடியாது, புதிதாக வரக்கூடிய கேஸ்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே போகும்.

[திரு. என். கே. பழனிசாமி] [1972 ஆகஸ்ட் 23

அதுமட்டுமல்ல. இப்படி வழக்கு முடிவடைய காலதாமதம் ஆவதால் வக்கீல்களுக்குத்தான் வருமானம் அதிகமாகும். அதிகப் பணம் கொடுத்துத் திறமையான வக்கீல்களை வைத்துக்கொள்ள பணக்காரர்களால்தான் முடியும். ஏழைகளால் முடியாது அதனால் பணக்காரர்கள் தப்பித்துக் கொள்வார்கள்; ஏழைகள் தான் ஜெயிலுக்குப் போவார்கள். இதைத் தவிர வேறு ஒரு பிரயோஜனமும் இந்த மசோதாவினால் ஏற்படப் போவதில்லை.

அதுமட்டுமல்ல. ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் மூன்று மாதங்களுக்குள் குறைந்தபட்சம் இவ்வளவு கேஸ் பிடித்தாக வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதனால் ஏழை எளிய மக்கள் குற்றம் செய்திருந்தாலும், செய்யாவிட்டாலும் அவர்களைப் பிடித்துக்கொண்டு போய் கேஸ் போடுகிறார்கள். அந்த நிலைமை மாற வேண்டும். ஆகவே, இந்த மசோதா தேவையில்லை. இதனால் தீமைகள்தான் அதிகமாக ஏற்படும். அதனால் நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், பிரதானமான கருத்துக்களை ஏற்கெனவே எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் பழனிசாமி அவர்கள் தெரிவித்து விட்டார்கள். இந்த மசோதாவினுடைய நோக்கத்தைப் பார்த்தால், இன்று—1971 ஆம் ஆண்டு மதுவிலக்கு ரத்து ஆனதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கிற சில அனுபவங்களை வைத்து அதை எப்படித் தடுக்க வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க கொண்டு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த மசோதாவின் ஷரத்துக்களைப் பார்த்தால் அந்த நோக்கத்திற்கு சற்றும் உதவி இல்லாமல் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, இன்றைக்கு இரண்டு வகைச் சாராயம் விற்பனை செய்யப்படுகிறது. ஒன்று அரசாங்கம் அனுமதித்திருப்பது; மற்றொன்று சாதாரணமாக நடைமுறையில் இருக்கக்கூடிய கள்ள சாராயம் என்று சொல்லப்படுவது. கிராமப்புறங்களில் இதைப் பட்டைச் சாராயம் என்று சொல்லுகிறார்கள். அதைப் பற்றி இங்கு ஏதாவது இருக்குமென்று எதிர்பார்த்தேன்; ஒன்றும் இல்லாதது கண்டு ஏமாற்றம் அடைகிறேன். அதற்கு மாறு பழைய சோற்றுக் கஞ்சியை இரண்டு நாள் வைத்திருந்தா



1972 ஆகஸ்ட் 23] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஒருவித புளிப்பு ஏற்பட்டு கள்ளு போன்று இருக்கும்; அதற்கும் கள்ளுக்கும் வித்தியாசம் இல்லை என்று இருக்கிறது. இந்த மசோதாவினுடைய மூன்றாவது ஷரத்தைப் பார்த்தால். "Sonti soru" means a liquid prepared from rice or starch which is in the process of vinous or alcoholic fermentation or in which such fermentation has ceased; and என்றிருக்கிறது. இது புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கும் இன்றைக்கு நடைமுறையிலே இருக்கின்ற கள்ளச் சாராயத்திற்கும் சம்பந்தமில்லை என்ற விஷயத்தை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இரண்டாவது, இப்போது எக்சைஸ் அதிகாரிகளுக்கு போலீஸ் அதிகாரிகளுக்குள்ள அதிகாரம் கொடுத்திருப்பது வரவேற்கத் தக்கது. இந்த மசோதாவில் 54 ஏ பிரிவில்

"An excise-officer shall be deemed to be a police officer within the meaning and for the purposes of section 125 of the Indian Evidence Act 1872". என்று சொல்லியிருப்பது வரவேற்கக்கூடிய அம்சம்தான். இன்னொன்றைப் பார்க்க வேண்டும். வெளிநாட்டு பிராண்டி, விஸ்கி என்று எல்லாம் சொல்லிக்கொண்டு வந்து கொடுக்கிறார்கள். நாங்கள் இருக்கக்கூடிய இடங்களுக்குக் கொண்டுவந்தே கொடுக்கிறார்கள். ஆனால் அதை உபயோகிப்பவர்கள் வெளிநாட்டு பாட்டில்களாகத்தான் இருக்கிறதே தவிர அதில் இருக்கக்கூடிய சரக்கு உள்நாட்டுச் சரக்காகத்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அம்மாதிரியான விஷயங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கை வேண்டும்.

கடைசியாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது இந்தியன் பீனல் கோடிலேயே கான்ஸ்பிரசி பற்றி
Two or three or more persons combining to do an illegal act
என்று இருக்கிறது. இன்று புதியதாக இந்த மசோதாவிலும் கான்ஸ்பிரசி பற்றிய ஒரு பிரிவு கொண்டு வந்திருப்பது திரு. பழனிசாமி சொன்ன மாதிரி வீணாகப் பலருக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடிய வகையில்தான் உதவியாக இருக்கும். இந்த மசோதாவின் நோக்கம் நல்லதாக இருந்தாலும் அமைப்பு பல முறையில் ஊனம் அடைந்ததாக இருக்கிறது என்று சுட்டிக்

காட்ட விரும்புகிறேன். தண்டனை அதிகமாகக் கொடுக்க வேண்டும், விசாரணை சீக்கிரமாக முடியவேண்டும் என்பதனை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். அந்த முறையில் திருத்தம் கொடுப்பது—கொஞ்சம் காலதாமதமாக வந்தாலும்கூடப் பரவா யில்லை என்கிற கருத்து நல்லதான கருத்து என்பதை வலியுறுத்தி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். மதுவிலக்கை ரத்து செய்து இந்தச் சட்டமானது அமல் நடத்தப் படுகிறது. இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. இதில் குற்றம் புரிபவர்களுக்கு எந்த வகையில் தண்டனை அளிக்க வேண்டும் என்பதற்குப் பிரிவுகள் இருக்கின்றன. இதிலேயே மினிமம் பனிஷ்மெண்டு எவ்வளவு இருக்க வேண்டும் என்கிற கருத்தையும் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக இதிலே கீழ் வரம்பு விதிக்கப் பட்டிருக்கிறது. " be punished with imprisonment for a term whirh may extend to one year and with fine which may extend to two thousand rupees, but such imprisonment shall not be less thon three months and such fine shall not be less than five hundred rupees ".

என்பதாக 3 மாதமும், 500 ரூபாயும் குறைந்த பட்ச அபராதமாக இருக்கவேண்டுமென்று இந்தச் சட்டத்திலே கொண்டுவரப் பட்டிருக்கிறது. இப்படி மினிமம் பனிஷ்மெண்டு என்பது நிர்ணயிக்கப்பட வேண்டுமா? மாஜிஸ்ட்ரேட்டுகளுடைய டிஸ்க்ரிஷனரி பவர்சுக்கு விட்டுவிடுவது சிறப்பாகவும், பொருத்தமாகவும் இருக்காது என்று கூற விரும்புகிறேன். புட் அடல்ட்ரேஷன் தடுப்பு மசோதாவில்கூட முதல் முறையாகக் குற்றம் செய்தால் இன்ன தண்டனை, இரண்டாவதாகத் தண்டனை செய்தால் இன்ன தண்டனை என்கிற பாகுபாடு வைத்து இருக்கிறோம். அதுபோன்றுகூட இல்லாது இந்த மசோதாவில் முதல் முறை குற்றம் செய்தவராக இருந்தாலும் மினிமம் தண்டனை இந்த அளவுக்கு அளித்தாக வேண்டும் என்று—மாஜிஸ்ட்ரேட்டுக்கு எவ்வித டிஸ்க்ரிஷனரி பவர்சும் இல்லாமல் கொண்டு வந்திருப்பது சரியல்ல. இதுபோல அன்றி மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு, என்ன



தண்டனை வழங்குவது என்பது பற்றிய சுதந்திரமும் உரிமையும் வழங்குவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோலவேதான் 66-ஆவது செக்ஷனிலும் மினிமம் பனிஷ்மெண்டு 3 மாதம் சிறைத் தண்டனை, 500 ரூபாய் அபராதம் என்பது விதிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் தேவைதானா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராயவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் குற்றங்களுக்கு எல்லாம் 77-ஆவது தனிப் பிரிவில் சம்மரி ட்ரையல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1898, the Government may confer on—

(i) any Magistrate of the first class or

(ii) any Magistrate of the second class who has exercised the powers of such Magistrate for not less than one year and so on and so forth.

இந்தமாதிரி சம்மரி ட்ரையல் விசாரணை நடத்துவதற்கு கிரிமினல் குற்ற சட்டத்தில் 260-ஆவது பிரிவு இருக்கிறது. சின்னஞ்சிறு குற்றங்களுக்குத்தான் அது விதிக்கப்பட்டிருக்கிறது. மினிமம் 3 மாதம், 500 ரூபாய் அபராதம் விதிக்கத்தக்க இந்தக் குற்றங் களுக்கு எல்லாம் சம்மரி ட்ரையல் நடத்தினால் அப்பீலில் பெரும் தடங்கலும், பாதகமும் ஏற்படும் என்கிற ஆட்சேபணையைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்—ஆனரரி மாஜிஸ்ட்ரேட் இதை விசாரணை நடத்துவதும் பெரும் பாதகமாக அமையும் என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, கிரிமினல் ப்ரொசீஜர் கோடு 414 ஆவது பிரிவைத் தங்கள் அனுமதியுடன் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதில் Notwithstanding anything herein before contained, there shall be no appeal by the convicted person. என்று இருக்கிறது.

சம்மரி ட்ரையல் என்கிறபோது வேறு ஒரு சங்கடமும் இருக்கிறது. அப்பீலுக்கு வழியில்லை. சாட்சியங்கள் எல்லாம் அப்படியே எழுதப்படாது குறிப்புகள்தான் எடுக்கப்படுகின்றன. முதல் விசாரணை, குறுக்கு விசாரணை ரெக்கார்டுகள் எல்லாம் பூரணமாக இருக்காது. ரிவிஷன் அப்பீல் கொடுக்க நேர்ந்தால் ஆய்வு செய்ய உரிமையில்லாமல் போய்விடும். புதியதாக ஆரம்பிக்கப்பட்ட சட்டத்திலே இவ்வளவு அதிகப்படியான அதிகாரங்களை வழங்குவது நியாயம் அல்ல. பொருத்தமல்ல என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டப் பிரச்சினையும் அதிகமாக இருக்கிறது. ஆகவே ஆர அமர சிந்தித்துச் செயல்படுவது பொருத்தமாக இருக்கும். இன்றைக்கு ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்டுகள் பல பகுதிகளிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் குற்றங்களை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதுகூட அவ்வளவு பொருத்தமானதாக இல்லை. காரணம், இவர்களுக்குச் சட்டப் படிப்பு இல்லை. நான் ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டுகள் பற்றிக் குறை சொல்ல வேண்டும் என்று விரும்பவில்லை. அவர்களுக்கு வேறுவிதமான தகுதிகள் இருந்தாலும், சட்டப் படிப்பு போதிய அளவில் இல்லாத காரணத்தினால் ஸ்டேஷனரி மாஜிஸ்ட்ரேட்டுகள் இந்த வழக்குகளை விசாரிக்க வகை செய்வதே பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்பீலுக்கு வரக்கூடிய அளவில் தண்டனை வழங்கியிருக்கக்கூடிய வழக்குகளை நான்—அப்பீல் வழக்குகளை மட்டும் விசாரிக்கக் கூடியவர்களை விட்டு விசாரணை நடத்தச் செய்வது பொருத்தமாக இல்லை. ரிவிஷனிலே லீகாலிட்டி, புரோப்ரைட்டி போன்ற சில குறிப்பிட்ட ஒருசில தன்மைகளுக்குத்தான் அந்த ரிவிஷன் கோர்ட்டுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆதலால், முழுமையாக அதிலிருக்கிற தன்மைகளைப் புரிந்து கொள்வதற்கு ரிவிஷன் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லையென்ற கருத்தினையும் நான் இங்கு கூற விரும்புகிறேன். ஆதலால், அந்தக் காரணத்தையொட்டியும் இந்த ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்ஸ் என்று சொல்லக்கூடிய சிறப்பு பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகளானாலும் சரி, விதிமுறைகளை அவர்கள் மாற்றக்கூடாது என்ற குறிப்பினை டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுகளுக்குக் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.





நான் முதலிலே கூறினேன். இந்த 260-ஆவது ஷரத்துப்படி, சம்மரி ட்ரையல் நடத்துவது. அப்பீல் ரைட்டுக்குக் குந்தகமாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

அதே போல் இன்னொரு ஷரத்தில், 77-டி-யில் பான்ட் எக்ஸ்க்யூட் செய்ய வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. சாதாரணமாக, செக்யூரிட்டி புரசீடிங்ஸில் பான்ட் எழுதுகிற மாதிரி, நன்னடத்தைக்காக ஒரு பான்டை எழுதவேண்டுமென்ற ஒரு கருத்து டி-யிலே இருக்கிறது. அவர்களுக்கு எவ்வளவு சொத்தோ, அல்லது அவர்களுடைய சொத்து என்ன என்று கணக்கிலே இருக்கிறதோ அதற்கு ஏற்றவாறு இந்த பான்டை உருவாக்க வேண்டுமென்றுகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மாதிரி பான்ட் தேவைதானா என்பதைப் பற்றி சற்று சிந்திக்க வேண்டும். பான்டை விட இன்னொன்றை வைக்கலாம். அவர்கள் பொதுவாக, குற்றம் புரிகிறவர்களாக இருந்தால், அவர்களுக்கு வேறுவிதமான தண்டனை விதிப்பது பொருத்தமாக இருக்குமென்றே கருதுகிறேன். ஆதலால், அதையும் கொஞ்சம் ஆராய வேண்டும். ஆத்திரத்திலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வரக் கூடாது. இந்த பில்லிலே கொடுக்கப்பட்டிருக்கிற ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்-ஐப் படித்துப் பார்த்தேன். அதிலே சுருக்கமாகக் கூறி இருக்கிறார்கள். கடந்த ஒரு வருடமாக சில அனுபவங்களைப் பெற்றிருக்கிறார்கள். இன்னும் அந்த அனுபவங்கள் எல்லாம் முழுமையாக ஆக்கப்படவில்லை. ஆதலால், இதுமாதிரி சம்மரி குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு அதிகாரம் வழங்குவது குந்தகமாகவும், பாதகமாகவும் இருக்கிறது என்று கூறி, இந்த பில்லை மறுமுறையும் ஆராய வேண்டும், அது மட்டுமல்லாமல், இதை செலக்ட் கமிட்டிக்கு விடுவது பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தினை வலியுறுத்திக் கூறி இதோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா குறித்து ஒருசில வார்த்தைகள் மட்டும் கூறி முடிக்க விரும்புகிறேன்.

இந்த மசோதாவிலே கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு மிகக் கடுமையான தண்டனை விதிப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசு, ஏற்கெனவே மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலமாக,

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1972 ஆகஸ்ட் 23

சாராயம் குடிப்பதும், கள் குடிப்பதும் தவறல்ல என்ற கொள்கையினை நடைமுறையில் ஏற்றுக்கொண்டுள்ள தன்மையினை நாம் உணர வேண்டும். அந்த நிலைமையிலே கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கான ஊக்கம் இயற்கையாகவே மக்களுக்கு ஏற்படும். அதோடு, கிராமப்புறங்களிலே இருக்கிற வேலையின்மை அதிகரிப்பும் இதற்குக் காரணமாக இருக்கிறது. ஒன்றை நான் ஒத்துக்கொள்வேன். அரசாங்கத்திற்கு வருகிற வருமானத்தை இழக்கிற, பாதிக்கிற குற்றங்கள் செய்வது தவிர்க்கப்பட வேண்டுமென்பதை ஒத்துக்கொள்வேன். ஆனால், அரசாங்கம் மதுவிலக்கை ரத்து செய்ததன் மூலம் தார்மீக ரீதியாக இது தவறில்லை என்ற கருத்தினை மக்களிடையே பரப்புகிறது. அதே நேரத்திலே இந்த மசோதாவிலே கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள். போலீசாருக்கும் சரி, கோர்ட்டுகளுக்கும் சரி, மிக அதிகமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும். அதே நேரத்திலே குற்றமற்றவர்கள் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கும், குற்றம் புரிந்தவர்கள் குற்றத்தின் அளவைவிட அதிகமாக தண்டனை பெறாமல் பார்த்துக் கொள்வதும் அவசியம் என்ற கருத்தினை அரசுக்குத் தெரிவிக்கிறேன். இதிலே, குற்றமற்றவன் என்று நிரூபிக்கின்ற கடமை குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதே சுமத்தப்பட்டிருக்கிறது. சாராயம் காய்ச்சுபவர்களோ, அனுமதிப்பவர்களோ, இருசாராருமே குற்றமற்றவர் என்ற தன்மையினை நிரூபிக்க வேண்டிய பிரிவு இந்த பில்லிலே வைக்கப்பட்டிருக்கிறது. சம்மரி டிரையலுக்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. குற்றமற்றவர்களைத் தண்டிக்க இது வழி செய்யும் என்று அஞ்சுகிறேன். முன்பு தண்டனை அல்லது அபராதம் என்று இருந்தது. அது மாற்றப்பட்டு தண்டனை, அபராதம் இரண்டுமே கட்டாயம் விதிக்கப்பட வேண்டுமென்ற விதி உள்ளது. இது சாதாரண ஏழை எளிய மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்று நான் கருதுகிறேன். அரசாங்கத்தினுடைய நோக்கத்திற்கு ஊறு விளைவிக்காமல், அதே நேரத்திலே குற்றமற்றவர்கள் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கு ஏற்ப இந்தச் சட்டத்தினைத் திருத்துவதற்கு மறு பரிசிலனை செய்ய வேண்டும். ஆகவே, 'இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, ஆழ்ந்த பரிசீலனைக்குப்' பிறகு, இதைக் கொண்டு வர வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்து அமர்கிறேன்.



1972 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, மதுவிலக்கு எடுத்ததற்குப் பின்னாலே நம்முடைய அரசினுடைய வருமானம் குறையாத அளவிற்கு இந்த நிர்வாகத்தை நடத்தும் பொழுது சட்டத்திலேயுள்ள சில குறைபாடுகள் நமக்கு புலப்பட்டன. அதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்த சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சட்டம் கடுமையாக ஆக்கப்பட்ட ஒரே காரணத்தினாலேயே, நீதிமன்றங்களுக்கு அதிக அதிகாரம் கொடுத்த ஒரே காரணத்தினாலேயே குற்றமற்றவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்வது பொருத்தமாகாது. அதிலே உள்ள பிரிவுகள் பற்றி எல்லாம் விரிவாகப் பேசப்பட்டது. இதுவரை குற்ற இயல் சட்டம். criminal law அறியாத ஒன்றை நாம் புதிதாகக் கொண்டு வரவில்லை. இந்தக் கொள்கை எல்லாம் ஏற்கெனவே பல சட்டங்களிலே இருப்பதைத் தான் நாம் பார்க்கிறோம். ஆகவே, அதிலே கடுமை இருப்பதாலே பாதகம் ஏற்படும் என்பதை ஒத்துக் கொள்ள முடியாது.

அதுமட்டுமல்ல. மதுவிலக்கு சட்டம் ஒருவனைக் கெடுக்காதே என்று சொல்கிறது. சமுதாயத்திலேயுள்ள கேட்டை அகற்றும் பொழுது, அதிலே குற்றமற்றவர்கள் அகப்பட்டுக்கொள்வார்களோ என்ற சந்தேகம் ஏற்படலாம். ஆனால், இப்பொழுது நாம் கொண்டு வந்திருக்கிற சட்டம், சமுதாயத்தைக் கெடுக்கின்ற சில பேர் வியாபாரம் செய்கிறார்கள், கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள், அந்த வியாபாரத்திலே ஈடுபடுகிறார்கள் என்ற குற்றத்திற்காகத்தான். ஏற்கனவே நாம் நடைமுறையிலே எல்லாத் தேவைகளையும் கொடுத்து விட்டதற்குப் பிறகு, அதற்கு விரோதமாக யாராவது நடப்பார்களானால், அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்பதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம். கள் குடித்தார்கள், சாராயம் குடித்தார்கள், ஆகவே கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்றிருந்தது. அதைக் கண்டிக்கத் தான் மதுவிலக்குச் சட்டம். ஆனால். இப்பொழுது மது இருக்கிறது, சாராயம் இருக்கிறது, எங்கெங்கே சென்று குடிக்க வேண்டுமோ அங்கங்கே குடித்துக் கொள்ளலாம். ஆனால், அரசாங்கத்திற்கு விரோதமாக. அரசாங்கத்தினுடைய வருவாயைக் குறைக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் செய்வதைத் தண்டிக்க வேண்டுமென்றுதான் இந்தச் சட்டம் கொண்டு

வரப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பரிந்து பேசுவதோ அல்லது இது தவறு என்று சொல்வதோ சரியல்ல என்று கருதுகிறேன்.

சம்மரி டிரையல் எதையும் புதிதாகப் புகுத்தவில்லை. ஏற்கனவே குற்ற இயல் சட்டத்திலே இருக்கிற முறைதான். அந்த முறையை இந்த சட்டத்திற்கும் பயன்படுத்த வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறோம். இந்த நோக்கத்தை எல்லோரும் வரவேற்றார்கள். மிக்க மகிழ்ச்சி. . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** சம்மரி டிரையல் வைத்திருப்பதால், ஜட்ஜ்மென்ட்டை 3, 4 லைனிலே எழுதுகிறார்கள். தெளிவாக எழுதவில்லையென்ற ஆட்சேபணையும் இருக்கிறது. அதையும் கருத்தில் கொண்டு இதை மறு பரிசீலனை செய்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நான் தெளிவாகச் சொன்னேன். அது இந்தச் சட்டத்திற்குப் புதிதாக இல்லை. சம்மரி டிரையல் ஒரு பிரின்சிபிள். அது குற்ற இயல் சட்டத்திலே ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மை. சிவில் லாவிலே சம்மரி ரெக்கார்ட் ஆப் எவிடென்ஸ் உண்டு. நீதிபதி முழுமையாக எழுத மாட்டார், தேவையான பகுதியை விட்டுவிடுவார் என்று நாம் ஊகிக்கத் தேவையில்லை. இதுபோன்ற தவறுகளைச் செய்யும் பொழுது ஆர்கனைஸ்டாகச் செய்கிறார்கள். இந்தக் கடுமையான சட்டம் இல்லாவிட்டால், நீதிமன்றங்களில் குற்றங்களை நிரூபிப்பது கஷ்டமாக இருக்கிறது. அப்படியே கஷ்டப்பட்டு நிரூபித்தால் அவர்களுக்குக் குறைந்த தண்டனை கொடுக்கிறார்கள், அல்லது அபராதம் விதிக்கிறார்கள். அந்த அபராதத்தைக் கட்டுவதற்கு ஒரு ஆர்கனைஸ்டு கும்பல் இருக்கிறது. ஒருவர் அபராதம் செலுத்துவார். இன்னொருவர் தொடருவார். இன்னொருவர் சிறைக்குச் செல்வார், பின்னாலே அவருடைய குடும்பத்திலே ஒருவர் வருவார். இப்படி சமுதாயத்திலே இருப்பதைத் தடுக்க வேண்டும். குறைந்த அளவு தண்டனை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்படி நடப்பது திட்டமிட்டு அன்று. ஏதோ ஒரு நாளைக்கு, இரண்டு நாளைக்குச் செய்வதல்ல. திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற இந்த வியாபாரத்தைத் தடுக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலேதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தவறு



செய்யாதவர்கள் மாட்டிக்கொள்கின்ற சூழ்நிலை ஏற்படாத அளவுக்கு அரசாங்கமும், அலுவலர்களும் பார்த்துக் கொள்வார்கள் என்ற உறுதியினைத் தருகிறேன். இப்பொழுது தவறு செய்கின்றவர்களுக்கு அதிக வாய்ப்பிருக்கிறது, நீதிமன்றத்திலே சென்றுகூட தப்பித்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது என்று கூறி, அந்த வாய்ப்பை நாம் கொடுப்பது நல்லதல்ல என்று கூறி, இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகின்றபொழுது யாரும் பாதிக்காத அளவுக்குப் பார்த்துக்கொள்வோம் என்ற உறுதியினைத் தந்து, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

'தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 to 6 were put and carried.

MR. SPEAKER: Clause 7.........

**திரு. என். கே. பழனிசாமி:** நான் கிளாஸ் மூன்றின் மேல் பேச விரும்புகிறேன். போன்ட் ஆக்டுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆறுவது கிளாஸ் வரையில் நிறைவேறிவிட்டது. இப்பொழுது ஏழாவது கிளாஸ் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

*Clause 7.*

MR. *SPEAKER*: The question is—

'That clause 7 do stand part of the Bill.'

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 ஆகஸ்ட் 23

மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் 28—4—1969 நண்பகல் தொடங்கி 3 ஆண்டுகளாகும். 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தினால் மதுரை நகராட்சி 1—5—1971 லிருந்து மாநகராட்சியாக அமைக்கப்பட்டபோது, மதுரை மாநகராட்சி மன்றத்திற்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1—5—1971-ல் உறுப்பினர்களாக இருந்தவர்கள் அவர்கள் நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்களாக எந்த நாள் வரை பதவி வகித்திருப்பார்களோ அதுவரையில் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாகப் பதவி வகிக்க அனுமதிக்கப்பட்டனர். 1—5—1971 ஆம் நாளன்று நகராட்சி மன்றத்தின் தலைவராகவும், துணைத் தலைவராகவும் இருந்தவர்கள் இதைப் போலவே அவர்கள் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக இருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட கால அளவு வரையில் மாநகராட்சி மன்றத்தின் மேயராகவும், துணை மேயராகவும் இருக்க அனுமதிக்கப்பட்டனர். அதன் பின்னர் மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் கால அளவு 1—5—1974 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதை இந்த அவை அறியும். மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களின் சட்டப்படிக்கான பதவிக்கால நீட்டிப்புக் காலத்தில் மேயர், துணை மேயர் ஆகியோர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆண்டுத் தேர்தல்கள் அரசு அறிவிக்கும் நாளில் நடத்தப்பட வேண்டும் என்று அரசு கருதியது. எனவே, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் புதியதொரு விதித் துறையை அதாவது 29-எ என்ற பிரிவை ஏற்படுத்தியும், 30 ஆவது பிரிவையும் VII ஆவது விவர அட்டவணையில் 7 ஆவது விதியையும் திருத்தியும் 23—5—1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/1972) சாற்றுரைக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 213 (2) (a) பிரிவின் விதித் துறைகளுக்கு இணங்க 1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் (திருத்த) சட்ட வரைவு மேற்படி அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இச் சட்ட வரைவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.



1972 ஆகஸ்ட் 23]

திரு. கே. டி. கே. தங்கமணி: ஸ்பீக்கர் சார், இந்த மசோதாவின் பேரிலே நான் பேச விரும்புவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. 1971 ஆம் ஆண்டு மே மாதம் மதுரை கார்ப்பரேஷன் ஆனதற்குப் பின்னாலே முதல் முறையாக முனிசிபல் கவுன்சிலர்களாக இருக்கின்றவர்களுடைய பொறுப்பு 1—5—1974 வரையில் நீடிக்க வேண்டுமென்று முடிவு செய்தோம். அந்த நேரத்திலேயே இம் மாதிரியாக முனிசிபல் கவுன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் புதிய முறையிலே தொகுதிகள் எல்லாம் பிரிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினேன், அது நிராகரிக்கப்பட்டது. அன்றைக்கு நிராகரிக்கப்பட்டதை இன்றைக்குச் சட்டமாகக் கொண்டு வந்திருப்பதை நான் குறை சொல்லவில்லை.

When we decided to extend the life of the Councillors, we should have also visualised that there was need to extend the life of the Mayor and the Deputy Mayor. மேயர், டெபுடி மேயர் என்பவர்கள் வருஷாவருஷம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பது அப்பொழுதே தெரிந்திருக்கும், அப்படித் தெரிந்திருந்தும் அவசர அவசரமாகச் சட்டம் கொண்டு வரக்கூடிய முறையை கைவிட வேண்டும். அவசரச் சட்டம் வருகிறது என்றால் திடீரென்று தொழிலாளர்களுக்கு விவசாயிகளுக்கு அல்லது கஷ்டப்படக் கூடியவர்களுக்கு நன்மை செய்வதற்காக ஏதாவது கொண்டு வந்தால் அதைப் புரிந்துகொள்ள முடியும். அப்படி இல்லாமல் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் மேயரையோ, டெபுடி மேயரையோ தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள். பிறகு இப்படித் தேர்ந்தெடுத்தது சரியா இல்லையா என்று பார்க்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. கவுன்சிலர்களின் வாழ்க்கையைத்தான் நீடித்தோமே தவிர முறையாக மேயருக்கோ, டெபுடி மேயருக்கோ சட்டம் இயற்றவில்லை என்பதைப் புரிந்து கொண்டு அதற்காக அவசரச் சட்டம் கொண்டு வருவது என்றால் ஒன்று இதை நிர்வகிக்கக்கூடிய இந்த இலாக்கா எவ்வளவு குறைபாடு உள்ளதாக இருக்கிறது என்றும், இந்த இலாக்காவிற்கு ஆதரவு காட்டும் இந்த லா டிபார்ட்மெண்ட் எவ்வளவு உதவியற்ற முறையிலே இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் கூறினேன்.

அமெண்ட்மெண்ட்ஸ் வருவதெல்லாம் சரிதான். இந்த நேரத்திலே வரக்கூடிய சில விஷயங்களுக்கு ஒவ்வொரு திருத்தம் கொண்டு வர வேண்டுமா? அவசர அவசரமாகக் கொண்டு வருவது, பிறகு திருத்தத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வருவது என்ற முறை கூடாது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் கூறுகிறேன். இப்பொழுது ஏற்கனவே அந்த மேயரும், டெபுடி மேயரும் வருஷத்திற்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற முறை, சென்னை நகர கார்ப்பரேஷனில் இருக்கிறதே அதே முறைதான் அங்கேயும் இருக்கிறது. ஆனால் அங்கே ஒரு கன்வென்ஷன் உருவாகவில்லை. சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டுக்கு ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மேயராக இருந்தால் அடுத்த ஆண்டு இன்னொரு வகுப்பைச் சேர்ந்தவர் இருக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது. அந்த முறை மதுரைக்கு வரவில்லை. அதனால் யாராவது ஒருவரே தொடர்ந்து மேயராகி விடலாம் என்ற ஆபத்துகூட இருக்கிறது. எனவே இம்மாதிரியான கன்வென்ஷனைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காக அரசு தலையிட்டு, ஏற்கனவே எப்படி ஒரு கார்ப்பரேஷனில் முறை இருக்கிறதோ அதை மதுரைக்கும் செய்ய வேண்டும். அதைச் சட்டத்தில் கொண்டு வர முடியாது ஆனால் நல்ல முறையிலே மதுரை கார்ப்பரேஷனிலும் ஆண்டுக்கு ஒரு முறை மேயரும், டெபுடி மேயரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றுதான் இருக்கிறது. அது சென்னையிலுள்ள முறைப்படிதான் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட மாதிரி அவசரச் சட்டம் கொண்டு வந்து பதவியை பாதுகாத்துக் கொள்ள வைத்துவிட்டு பிறகு அதை ஊர்ஜிதப்படுத்தக்கூடிய அளவில் ஒரு சட்டம் வருகிற தன்மை உள்ளது என்றால் அது சரியாக இருக்க முடியாது. இம் மாதிரி திருத்தங்களை, சில புரொசீஜர்களுக்காகத் திருத்தங்கள் கொண்டுவரும் நேரத்தில் பல முறையிலேயும் யோசித்து இலாக்கா யோசனை சொல்ல வேண்டும். அப்படி அவர்கள் செய்யத் தவறினாலும் இதை அளிப்பதாக இருக்கும் சட்ட இலாக்கா இருக்கிறதே அது முனைப்பாக இருக்க வேண்டும் என்பதை உங்கள் மூலம் இந்தத் திருத்தத்திலே வற்புறுத்திச் சொல்லிவிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I would like to stress only one point. Sir, in the Corporation of Madras, there is the principle of rotation of the high office and can this principle be extended to Madurai, is the question which will have to be considered by the Government.

Sir, the term of the Municipal Councillors has been extended through the previous legislation. Now the amending Bill has been brought forward to extend the term of the Mayor and the Deputy Mayor. Sir, the exalted position could go by rotation is an accepted principle and in the working of that principle, Madras Corporation principle is found to be working very satisfactorily and this salutary principle should also be extended to Madurai and this is the only point I want to stress.

So far as the legal lacuna is concerned, a doubt has arisen and it has now been dispelled by the new legislation and I think now there would be no legal lacuna for the continuance of the present Mayor and the Deputy Mayor. This is all I want to say in regard to this Bill.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே. இந்தச் சட்ட வரைவின் மீது மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்களும் கருத்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள், இந்தச் சட்டத் திருத்தம் வரும்பொழுது முன்கூட்டியே ஆராய்ந்து அதன் விளைவுகளுக்கேற்ப அலைகள் ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டத்தை நாம் கொண்டுவந்தபொழுது, 1969 ஆம் ஆண்டிலே தேர்தல் நடை பெற்றிருந்தது நகராட்சிக்கு. அந்த நகராட்சியின் தேர்தல் முடிவுக்கேற்ப மூன்றாண்டுக் காலம் அந்த நகராட்சி இயங்கும் என்று இருந்தது. மதுரை மாநகராட்சிச் சட்டம் கொண்டுவந்த பொழுது, ஒரு ஆண்டுக் காலத்தில் புதிதாகத் தேர்தல் வைக்கப்பட வேண்டுமென்ற நிலையிருந்தது. நகராட்சியை மாநகராட்சியாக ஆக்கியபொழுது மதுரை நகராட்சியின் தலைவரை மேயராகவும், துணைத் தலைவரை துணை மேயராகவும் 1—5—71-லே இருந்து போட்டோம். மூன்றாண்டுக் காலத்தில் தேர்தல் என்ற

நிலை தொடர்ந்து வந்திருந்தால் கிட்டத்தட்ட 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள்ளே மறு தேர்தல் வந்திருக்க வேண்டும். ஒரு ஆண்டுக் காலத்திற்குப் பதவி நீடிக்கும்பொழுது மேயரும், துணை மேயரும் நீடிப்பார்கள் என்ற அளவிற்கு, உறுப்பினர்களின் பதவிக் காலம் நீடிக்கும் அளவிற்கு மேயரும் துணை மேயரும் நீடிப்பார்கள் என்ற வகையில் அப்பொழுது போட்டோம். பிறகு ஐந்தாண்டுக் காலம் வரையில் நகராட்சி, மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலம் நீடிக்கலாம் என்ற நிலையினால் 1—5—74 வரையிலும் செல்லும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது ஆகவே உறுப்பினர்களின் பதவிக் காலம் 1—5—74 வரையிலும் போகும் என்ற காரணத்தினால் மேயர், துணை மேயரின் காலமும் 1—5—74 வரையிலும் போகும் என்ற நிலை ஏற்பட்டது.

சட்டத்தின் வேறொரு விதியில் ஆண்டுக்காண்டு மேயர், துணை மேயர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றிருக்கிறது. ஆனால் உறுப்பினர்களின் பதவிக் காலம் 1—5—74 வரையிலும் நீட்டிக்கப் படலாம் என்று சொன்னதால் மேயர், துணை மேயரின் பதவிக் காலமும், அந்தக் காலம் வரையிலும். 1—5—74 வரையிலும் நீடிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. ஆகவே, சந்தேகம் ஏற்பட்ட காரணத்தால். அதைப் போக்க வேண்டுமென்று ஆணையாளர் கேட்டதால், அந்தச் சந்தேகத்தை நீக்கும் முறையில் இந்த அவசரச் சட்டம் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதில் தெளிவு பிறப்பதற்காக இந்தச் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டு, சட்ட வரைவு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள், இப்படிப்பட்ட சூழ்நிலை வரும் என்று கண்டறிந்து சட்டத் துறையும் மற்றவர்களும் செய்திருக்க வேண்டாமா என்று கேட்டார்கள். அந்தக் கருத்து கவனத்தில் கொள்ளப்பட்டு துறையினர் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் கவனித்துக் கொள்வார்கள் என்ற நிலைமையின் அடிப்படையில் இந்தக் கருத்தை நான் கூறுவதற்கு ஆசைப்படுகிறேன். ஆகவே அந்த முறையிலே வேறு வழி இல்லாததால் இந்த அவசரச் சட்டம், கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இல்லாவிட்டால் இவர்களே நீடிக்க வேண்டுமென்ற நிலை ஏற்படும். இந்தியாவில் எல்லா மாநகராட்சிகளிலும் மேயர், துணை மேயர் பதவி ஒரு



ஆண்டுக் காலம்தான். சென்னையிலும் அப்படித்தான். அதே முறையைத்தான் மதுரை மாநகராட்சியிலும் கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில் இந்த அவசரச் சட்டமும், அதை யொட்டி சட்ட வரைவுகளும் கொண்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டது.

மாநகராட்சி மேயர் பதவியில் ரொட்டேஷன் முறை ஏற்பட வேண்டுமென்ற கருத்தைக் குறிப்பிட்டார்கள். சென்னையைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட ஒரு மரபு, வழக்கம் இருக்கிறதே தவிர சட்ட. திட்டத்தின் அடிப்படையில் இல்லை. 20. 30 ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையிலிருந்த பெருமக்களும், மாநகராட்சி மன்றத்திலிருந்தவர்களெல்லாம் பெருமக்களும், அந்த முறை முறையை வகுத்துக் கொண்டிருந்தார்கள். சென்னை மாநகராட்சியிலும் காப்பாற்றப்பட்டு வருகிறது. மறுபடியும் நிற்கக் கூடாது என்பது கூட ஒரு முறை இருந்தவர் மறுபடியும் நிற்கக் கூடாது என்பது சட்டம் அல்ல. அடுத்த ஆண்டு கூட நிற்கலாம். ஆனால் ஒரு மரபு முறை கையாளப்பட்டு வருகிறது. அதே மரபு முறையை மதுரையிலும் இந்த முறையிலேயோ அல்லது வேறு முறையிலேயோ அங்குள்ள உறுப்பினர்களெல்லாம் முயன்று ஒரு மரபை ஏற்படுத்திக் கொண்டால் அதற்கு அரசோ அல்லது சட்டமோ தடையாக இருக்காது. ஆனால் அங்கும் இந்த மரபை சட்டத்தின்மூலம் வற்புறுத்த ஏற்படுத்த வேண்டுமென்று முடியாது. அந்த எண்ணத்தை உருவாக்க வேண்டியவர்கள் மதுரை மாநகராட்சியில் உள்ள அந்த கவுன்சிலர்கள்தான். ஆகவே அந்த வகையிலே ஒரு மரபை ஏற்படுத்திக் கொண்டு அந்த மரபைக் காப்பாற்றுவதற்கான முயற்சியை அந்த மாநகராட்சி மன்றத்திலுள்ளவர்களே மேற்கொள்ளலாமே தவிர இப்பொழுது சட்டத்தில் கொண்டு வர முடியாது.

ஆகவே, இடையிலே ஏற்பட்ட அவர்களுடைய சந்தேகத்தைப் போக்குவதற்காக அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சட்ட வரைவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1972 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி "1972-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, பிரிவு வாரியாக சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 to 6 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, "1972-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/72) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(இ) 1972-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/72).**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : பேரவைத் தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

சென்னை மாநகராட்சிப் பணியாளரமைப்பில் தற்போது ஐந்து வகையான அதிகாரிகள், பணியாளர்கள் உள்ளனர். 1-A வகைப் பதவிகளுக்குத் தற்போது அரசு நியமனம் செய்கின்றது. B II வகைப் பதவிகளுக்கு மாநகராட்சி மன்றம் நியமனம் செய்கின்றது. இந்த நியமனம் அரசின் ஒப்புதலுக்குட்பட்டதாகும். திங்கள் ஒன்றுக்குச் சம்பளம் அல்லது பேரளவுச் சம்பளம் ரூ. 100-க்கு மேற்படும், III, IV -ம் வகைப் பதவிகளுக்கு, மேயர் மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர்



1972 ஆகஸ்ட் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கமிஷனர் ஆகியோரைக் கொண்ட நியமனக் குழு ஏற்பளிக்கிற விண்ணப்பதாரர் பட்டியலிலிருந்து கமிஷனர் நியமனம் செய்கின்றார். III, IV -ம் வகையின்கீழ் உள்ள ஏனைய பதவிகளுக்கு அதாவது திங்கள் ஒன்றுக்கு சம்பளம் அல்லது பேரளவுச் சம்பளம் ரூ 100-க்குக் குறைவாக உள்ள பதவிகளுக்கு கமிஷனர் நியமன அதிகாரியாவர்.

இது தொடர்பாக, 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 4/1919) விரிவான திருத்தங்கள் செய்வது பற்றிக் கருத்தும் தெரிவிக்கத் தனிப்பட்ட குழு ஒன்றை மாநகராட்சி மன்றம் அமைத்தது என்பதை நான் இங்கு கூற விழைகிறேன். முன்பிருந்த செயற் குழுக்களை மீண்டும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும் மாநகராட்சிப் பணியாளரமைப்பின்கீழ் அதிகாரிகள் பணியாளர்கள் வகைப் பதவிகளுக்குக் கீழ்க்காணும் நியமன அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்பதும் தனிப்பட்ட குழு தெரிவித்த திருத்தங்களில் ஒன்றாகும்.

IA, IB, II ஆம் வகைப் பதவிகள் அரசின் ஒப்புதலுக் குட்பட்டு மன்றம் நியமனம் செய்வதாகும்.

III, IV ஆம் வகைப் பதவிகள்—கமிஷனர் நியமனம் செய்வதாகும்.

அவசரமெனக் கருதப்பட்ட சில கருத்துக்கள் குறித்து சொன்ன சட்டத்தைத் திருத்தும் வகையில் சட்டம் ஒன்று ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள கருத்துக்களைப் பொறுத்த வரையில் மேற்படி சட்டத்தை விரிவாகத் திருத்துவது பற்றி அரசு முனைந்து பரிசீலித்து வருகிறது. இது குறித்து அரசு இறுதி முடிவு எடுக்கவும், அடங்கல் சட்டம் ஒன்றைக் கொண்டு வரவும் இன்னும் சிறிது காலமாகும். இதற்கிடையே. மாநகராட்சிப் பணியாளரமைப்பு குறித்து தனிப்பட்ட குழு செய்த பரிவுரையை மட்டும் மீண்டும் வலியுறுத்தி, சென்னை மாநகராட்சி மன்றம் 20—6—72-ல் 716 ஆம் எண் தீர்மானம் இயற்றியுள்ளது.

* 12-8-1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 ஆகஸ்ட் 23

1. A வகைப் பதவிகளுக்குத் தற்போது அரசிஞல் நியமனம் செய்யப்பட்டு வருகின்றது. இந்தப் பதவிகள் குறித்துத் தற்போதுள்ள நிலைமையை நீடிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் மீண்டும் குறிப்பிடலாம்.

I-B, II -ம் வகைப் பதவிகளுக்கு மன்றம் நியமன அதிகார மன்றமாகும். ஆனல் இந்த நியமனம் அரசின் ஒப்புதலுக்கு உட்பட்டதாகும். எனவே, மேற்படி சட்டத்தில் இந்த விதித் துறையை நீடிக்கக் கருதப்பட்டுள்ளது. மேலும் இது மாநகராட்சி மன்றத்தின் வேண்டுகோளை யொட்டியும் அமைந்துள்ளது.

III, IV, ஆம் வகைகளின் கீழ் வருபவையும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100-க்கு மேற்பட்டு சம்பளம் உடையதுமான பதவிகளுக்கு, மேயர், கமிஷனர் மாநகராட்சி மன்றம் தேர்ந்தெடுத்த ஓர் உறுப்பினர் ஆகியோரைக் கொண்ட நியமனக் குழுவிஞல் ஏற்பளிக்கப்பட்ட விண்ணப்பதாரர் பட்டியலிலிருந்து கமிஷனர் நியமனம் செய்கிருர் IV ஆம் வகையின் கீழ் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100-க்கு குறைவாகச் சம்பளம் உடைய ஏனைய பதவிகளுக்கு கமிஷனரால் நியமனங்கள் செய்யப்படுகின்றன. III, IV, ஆம் வகைகளின் கீழ் உள்ள எல்லாப் பதவிகளுக்கும் கமிஷனரால் நியமனங்கள் செய்யப்படலாம் என்று மன்றம் பரிவுரை செய்துள்ளது. இப் பரிவுரையை ஏற்றுக்கொள்ளக் கருதப் பட்டுள்ளது. இதன் விளைவாக, நியமனக் குழுவை நீடிப்பதற்கு அவசியமேதும் இல்லை எனவே, இக் குழுவை ரத்து செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன பரிவுரை தவிர III, IV, -ம் வகைகளில் கீழ் சேர்க்கப்பட்டிராதவர்களும், மாநகராட்சி நிதியிலிருந்து ஊதியம் பெறுபவர்களும், அரசுத் துறைகளில் சில்லறைச் செலவு நிதியிலிருந்து ஊதியம் பெறும் பணியாளர்களின் பதவித் தரத்திற்கு இணையாகக் கருதக்கூடியவர்களுமான ஏனைய பணியாளர் எவரையும் நியமிப்பதற்கு கமிஷனருக்கு அதிகாரம் அளிக்கக் கருதப்பட்டுள்ளது. இச் சட்ட வரைவு மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது என்று கூறிக் கொண்டு இச் சட்ட வரைவை இப்பேரவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்



1972 ஆகஸ்ட் 23] [திரு. கே. எம். சுப்ரமணியம்]

THIRU K. M. SUBRAMANIAM : Hon. Speaker, Sir, I congratulate the Government for having brought forward this amendment to the City Municipal Act. I brought forward a similar amendment last time but at that time Government had not gone sufficiently deep into that question. They did not accept my amendment. But I am glad, at least a few months afterwards Government had brought forward the same amendment which I brought forward a few months back. It is not too late.

First of all I have to explain that in the City administration, the appointments were done by the Commissioner in consultation with departmental heads; though the Commissioner is the appointing authority he does not take the entire responsibility himself. He keeps along with him departmental heads when appointing class III and class IV personnel.. He is the supreme executive authority and the staff should be responsible to him and the efficiency of the administration always depends upon the discipline the administrator commands. He is the appointing and punishing authority. In olden days the efficiency of administration was really high. But I am sorry to say that of late the efficiency has been gradually coming down various aspersions are cast on the Appointments Committee because the Appointments Committee consists of politicians. If democracy is to succeed, the executive should be independent and they should have no fear about the way in which the party behaves. So I think it is good that the Government have brought forward this amendment. It is very welcome.

Now there is a small lacuna attached. Generally when an Appointments Committee ceases its function, it gives a panel of names to the appointing authority.. It may consist of 100 or 200 names. The next Appointments Committee finds so many names the panel and it says 'we do not want to make selection'. Suppose there is the Education department and 50 teachers are required. They have to be selected from the old panel. I think in the interest of efficiency of Corporation and in the interests of the new Appointments Committee, that panel of names of the previous Committee also should be abolished along with the abolition of the previous Appointments Committee. Only with that view I have given my

[திரு. கே. எம். சுப்பிரமணியம்] [1972 ஆகஸ்ட் 23

amendment so that there may not be any loophole by which persons could come in through backdoor. I think the panel of names also should go when the Committee suggesting that panel goes.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சித் திருத்த மசோதாவின் பேரில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அப்பாயின்ட்மென்ட் கமிட்டிகளை அபாலிஷ் செய்ய வேண்டுமென்பதை வரவேற்கிறோம். மூன்றாம் வகுப்பு, நான்காம் வகுப்பு தொழிலாளர்களை எடுக்கும் போது அதிலே கமிஷனருக்குப் பவரை கொடுக்க வேண்டு மென்றிருக்கிறது. சென்ற கால சரித்திரத்தைப் பார்க்கும்போது கமிஷனராக நியமிக்கப்பட்டவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.சி.எஸ்., அதிகாரிகளாக இருந்தார்கள். இப்போது கார்ப்பரேஷனில் கமிஷனராக உள்ளவர் பல ஆண்டு அங்கு அதிகாரியாக இருந்தவர். இனிமேல் என்ன சூழ்நிலை ஏற்படும் என்றால் கமிஷனர்களுக்குப் பெரிய இடைஞ்சல் ஏற்படும். தொடர்ந்து கார்ப்பரேஷனில் இருக்கக்கூடிய கவுன்சிலர்கள், ஊழியர்களோடு பழகிவிட்டு கமிஷனர் "appointing authority" ஆக நியமிக்கப் பட்டால் அங்குள்ள கவுன்சிலருக்கும் ஊழியர்களுக்கும் வேண்டியிருக்கிறது. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் நிலையில் அவர் வெறுப்புக்கும் விருப்புக்கும் ஆளாகக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இதற்காக தனிப்பட்ட கமிட்டி அமைத்து அங்கு எடுக்கக்கூடிய தொழிலாளர்கள், மஸ்தூர், நர்சுகள் ஆயாக்கள் ஆகியவர்களைத் தேர்ந்தெடுக்க வகை செய்வது நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காரணம், கார்ப்பரேஷனில் அப்பாயிட்மென்ட் செய்யும் போது பலரது விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதுபோல் அந்தப் பானலில் உள்ளவர்களுக்கு அடுத்த ஆண்டு கூட வேலை கிடைக்க வாய்ப்பில்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. அப்பாயின்ட் செய்யும்போது அவரவர்கள் சூழ்நிலைக்கு ஏற்ப, அவரவர்கள் மனோபாவத்திற்கேற்ப செய்யப்பட்டு வந்திருக்கிறது. ஊழல், லஞ்சம் என்று சொல்லக்கூடிய அளவில் கூட அங்கு நடக்கிறது என்று சொன்னால் அது தவறாகாது. எனக்குப் பல கேஸ்கள் தெரியும். அவைகளை நான் இங்



1972 ஆகஸ்ட் 23] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

குறிப்பிட விரும்பவில்லை. ஆதாரம் கேட்டால் கொடுக்கத் தயார். கமிஷனரைப் போட்டாலும் விருப்பு வெறுப்பு ஏற்படும், கவுன்சிலர்கள் ரெக்கமெண்ட் செய்தார்கள். அல்லது அவர்களுக்கு வேண்டியவர்கள் ரெக்கமெண்ட் செய்தார்கள் என்று நியாயமான முறையில் தேர்ந்தெடுக்கப்படுவதில் இடைஞ்சல் ஏற்படும். ஆகவே, அப்பாயின்ட்மென்ட் செய்வதற்கு தனிப்பட்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழு கார்ப்பரேஷனில் இருப்பவர்களுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் வேலைவாய்ப்பு நியாயமான முறையில் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அதற்காக தனி கமிஷன் ஒன்று போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள திருத்த மசோதாவை ஆதரித்து சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன்.

நாட்டின் தேவைகளை ஒழுங்காக நிறைவேற்ற சட்டங்கள் அவசியப்படுகின்றன. அதன் அடிப்படையில்தான் 1919-ஆம் ஆண்டில் சட்டம் இயற்றப்பட்டு அது தேவைக்கேற்றவாறு பல முறை திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் தான் நகராட்சி நிர்வாகம் நடந்து கொண்டிருந்த நிலையில் 1962-ஆம் ஆண்டு அன்று ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் அரசு வெள்ளை அறிக்கை என்ற ஒரு அறிக்கையினை சமர்பித்து அதை அமலுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டு 1962-ஆம் ஆண்டில் நகராட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகித்திருந்த ஒரு சூழ்நிலையாலும் மாநில சர்க்காரில் ஆளும் கட்சி காங்கிரஸ் கட்சியாக இருந்த சூழ்நிலையாலும் அந்த அறிக்கையை அமலுக்குக் கொண்டுவர வேண்டிய தன் சூழ்நிலை ஏற்பட்டதன் விளைவாக அந்த வெள்ளை அறிக்கையை அமலுக்குக் கொண்டு வந்து வட்டக் கமிட்டிகள் எண்களாகப் பிரிக்கப்பட்டு பணம் வீண் விரயமாக்கப்பட்டது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்தில் பழைய முறைதான் நல்ல நிர்வாகத் திறமைக்கு

ஏற்ற முறை என்பதை உணர்ந்து 1971-ஆம் ஆண்டு அந்த வெள்ளை அறிக்கை ரத்து செய்யப்பட்டது என்பதை இந்த மன்றம் நன்கு அறியும்.

எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் எனக்கு முன்பு பேசிய திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும், அம்மையார் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதில் அங்கம் வகிக்கிறவர்கள் போடுகிற பானல் பற்றி. இந்தச் சிக்கல்கள் எல்லாம் தவிர்க்கப் படும் ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென்றால் 3, 4 கேடர் களுக்கான வேலையாட்களை நியமிப்பதற்கான பொறுப்பை ஆணையாளரிடம் விட்டுவிட வேண்டும். காரணம், நகராட்சியில் அவர்தான் சுப்பீரியர் அத்தாரிட்டியாக இருக்கிறார். அப்படி விட்டுவிட்டு மற்ற அலுவலர்களை நியமிப்பதில் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலம் அரசு செய்வதுபோல் அதே முறையை நகராட்சிகளும் பின்பற்றினால் நல்ல முறையில் அமைய ஏதுவாகும். இப்படிப்பட்ட சங்கடங்களும் ஏற்படாது. மதுரை நகராட்சியில் அந்த முறைதான் பின்பற்றப்படுகிறது என்று கருதுகிறேன். ஒருவேளை அது நகராட்சி மன்றமாக ஆகிவிட்ட காரணத்தினால் அது எப்படி என்று தெரியவில்லை. ஆனால் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சஸ் மூலம் வேலையாட்கள் சேர்க்கப் படுவார்களேயானால் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். அதோடு கமிஷனரைப் போன்றவர்கள் கவுன்சிலர்களின் கண்டனத்திலிருந்து தப்பித்துக் கொள்ளவும் முடியும்.

1962-க்கு முன்பாக இதே முறை பின்பற்றப்பட்ட சூழ்நிலையில் அப்பாயின்மென்ட் கமிட்டிக்கு அங்கீகாரம் கிடையாது. 1971-ல் தான் திருத்தம் செய்யப்பட்டு அப்பாயின்ட்மென்ட்ஸ் கமிட்டிக்கு அதிகாரம் கொடுத்து. மேயருக்கு அதிகாரம் கொடுத்து அந்தக் கமிட்டியை நடத்திச் செல்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதில் கூடச் சிக்கல்கள் உள்ளன. மேயருக்கும், கமிஷனருக்கும், உடன் சார்ந்த மெம்பர்களுக்கும், இந்தச் சங்கடங்களை அறவே ஒழிக்க வேண்டுமென்றால் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலம் அதற்கு நிவர்த்தி தேடிக் கொள்ள முடியும். அதோடு ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் என்றும், பிற்பட்ட வகுப்பினர்களுக்கு 31 சதவிகிதம்



என்றும் இடம் ஒதுக்கியுள்ளது. அரசாங்கம் கடைப் பிடிக்கிற வகையில் அது வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களில் இவைகளில் இந்த முறையில் வழங்கப்படுவதில்லை. அதையும் சீர்தூக்கிப் பார்த்து நகராட்சி விதிகளில் அதற்குத் தக்கபடி வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மசோதாவை வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரிக்கக்கூடிய அளவிற்கு இங்கு சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. இருந்தாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மசோதா எந்த அடிப்படையில் இங்கு கொண்டுவரப்பட்டது என்பதை மிகத் தெளிவாக, சுருக்கமாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் வேலைக்கு ஆள்களை எப்படி எடுத்துக் கொள்வது என்ற பிரச்சினை வந்தபோது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஒரு ரிப்போர்ட் தயார் செய்தது. அதில் கடுமையான வகையில் கார்ப்பரேஷன் குறைபாடுகளை அது கண்டித்திருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். சென்ற ஆண்டு அல்லது அதற்கு முந்திய ஆண்டு என்று நினைக்கிறேன். அது குறித்து சட்டசபையில் எழுப்பியிருந்தேன். கேள்விகள் மூலமும் கேட்டிருந்தேன். ஆனால் சரியான பதிலை அமைச்சர் அவர்கள் கொடுக்கவில்லை. கார்ப்பரேஷனில் சில அப்பாயின்ட்மென்ட்களைச் செய்யும் அந்தப் பொறுப்பை சர்வீஸ் கமிஷன் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அதைச் செய்வதற்கும் முன்வந்தார்கள். ஆனால் அவர்கள் சொன்னபடி அப்பாயின்ட் செய்யவில்லை. அவர்கள் சொன்னபடி போஸ்ட்களை பில் அப் செய்யவில்லை. காரணம் என்ன என்று தெரியவில்லை. கவுன்சிலர்கள், அல்லது நகராட்சிமன்ற லீடர், இவர்களுக்குச் சாதகமாக உள்ளவர்களை அப்பாயின்ட் செய்ய வேண்டுமென்று நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை. கமிஷனர் நல்ல வகையில் கொடுத்த யோசனைகளை மறுத்து இடங்களை பூர்த்தி செய்யாமல் அப்படியே வைத்திருந்தார்கள். அப்படி எதற்காக வைக்க வேண்டும் என்று

எனக்குப் புரியவில்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட்டை எடுத்துப் பார்த்தால் தெரியும். அந்த ரிப்போர்ட்டில் மிகக் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்கள். "The Corporation is not even bothered to fill up the posts" என்று கடுமையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏன் பில் அப் செய்யவில்லை? யாரும் சரியான பதில் கொடுக்கவில்லை. கார்ப்பரேஷனில் உத்தியோகத்திற்கான இடங்களை பூர்த்தி செய்யும் முறையில் மிக மிக முறைகேடாக இருக்கிறது என்ற பயங்கரக் குற்றச்சாட்டினை இந்த மன்றத்தில் அரசாங்கத்தின் மீதும் கார்ப்பரேஷன் மீதும் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவோ புகார்கள் வருகின்றன. அண்மையில் ஃபைலேரியா எராடிகேஷன் ப்ரோக்ராம் என்று 120 இடங்களில், ஒவ்வொரு கவுன்ஸிலருக்கும் ஒவ்வொரு இடம் என்ற முறையில் செய்திருக்கிறார்கள். இது என்ன நியாயம் என்று தெரியவில்லை. கவுன்சிலர் சொல்கிறார் ஒரு அப்பாயின்மென்ட் செய்துவிட்டேன் என்று. ஒவ்வொரு கவுன்ஸிலருக்கும் ஒவ்வொரு அப்பாயின்மென்ட் என்று ஏன் வைக்க வேண்டும் என்று கேட்கிறேன்.

**திரு. என். கணபதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 120 இடங்கள், கவுன்சிலர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப் பட்டது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் கே. எம். எஸ். அவர்களுக்கும் ஒரு இடம் ஒதுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நமக்குள்ளேயே முடித்து விடுவதற்குப் பார்க்கிறார்கள். அதிலே நான் விறுத் தயாராக இல்லை. அதிலே ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று இல்லை. அந்த முறையே தவறு. இப்போது எதற்காக இந்தத் திருத்தம் கொண்டு வருகிறீர்கள். நம்முடைய கணபதி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இதை யெல்லாம் சிந்தித்துப் பார்த்துத் தான் கொண்டு வந்திருக்கிறார்கள். இது அனைவருக்கும் ஒருவருக்கும் கெட்ட பெயர் கொண்டு வரும் என்பதால்தான் இப்படிப்பட்ட திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதிலே குறிப்பிட வேண்டியது என்னவென்றால் இந்த ஆண்டில்-மலேரியா ப்ரோக்கிராமிலே முறைகேடான வகையில் அப்பாயின்ட்மென்ட் நடந்து இருக்கிறது என்ற குற்றச்சாட்டை



நான் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இது பல்வேறு விதமான அப்பாயின்ட்மென்ட்டுகள் நடந்து இருக்கின்றன. ஆசிரியர்கள் அப்பாயின்மென்டில் இப்படி நடந்து இருக்கிறது. மக்கள் கவுன்சிலர் வீட்டிற்கு அலைகிறார்கள். ஆகவேதான் இதை இப்போது புதிதாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது நல்ல முறையில் கே. எம். எஸ். அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். எப்படிப்பட்ட முறையில் முறைகேடான வகையில் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை யெல்லாம் கருதித்தான் இப்போது இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் கூட இந்தத் திருத்த மசோதா ஒழுங்காக இல்லை, இதற்கு ஒரு திருத்த மசோதா அப்புறம் கொண்டு வரப் போகிறீர்களா என்று கேட்டார்கள். இப்போது கமிஷனரிடம் அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கமிஷனர் எப்படி ஒழுங்காக அந்த நியமனம் செய்யும் பொறுப்பைச் செய்ய முடியும். ஒரு கவுன்சிலர் இப்படிச் செய்ய வேண்டுமென்று அவர் செய்யாமல் விட்டு விட்டால், அவர் ரூலிங் பார்ட்டியிடம் சொல்லி, ஏன் மேயரிடத்திலேயே சொல்ல மாட்டாரா? அதன் விளைவுகளைப் பற்றி அவர் பயப்படமாட்டாரா? முன்பு தைரியமாக இருக்கும் கமிஷனர் இருந்தார். ஆகவே, இவை யெல்லாம் முறையல்ல. நியாயமல்ல. இதை எப்படிச் செய்ய வேண்டு மென்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** சார் ஒரு கிளாரிபிகேஷன். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏதோ இப்போது நான்-ஐ.ஏ.எஸ். கமிஷனராக இருக்கிறார்கள் என்பது போல பேசுகிறார். ஷெனாய் போன்றவர்கள் கூட கமிஷனராக இருந்தார்கள். அவர்கள் கூட நான்-ஐ.ஏ.எஸ். தான். அவர்களைப்போல் இப்போது இருக்கும் கமிஷனரும் நல்ல முறையில் நிர்வாகம் செய்ய முடியும். டாக்டர் ஹாண்டே அவர்கள் இதற்கு என்ன சொல்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** என்னுடைய பேச்சை முழுமையாய்க் கேட்டால் நிச்சயமாகத் தெரிந்து கொள்வீர்கள். இப்போது நான்-ஐ.ஏ.எஸ். கமிஷனராகப் போட்டிருக்கிறார்கள்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1972 ஆகஸ்ட் 23

அசிஸ்டென்ட் கமிஷனராக இருந்தவர் தற்போது கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் கமிஷனரைப் பற்றிச் சொல்ல வரவில்லை. இருக்கும் சூழ்நிலையைப் பற்றித்தான் சொல்கிறேன். அங்கேயே வளர்ந்து, அங்கேயே பதவி உயர்வு பெற்றவர்கள் எந்த நிலையில் இருப்பார் என்பதைச் சொன்னேன். ஏற்கெனவே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருந்தார்கள் அவர்கள் கடுமையாக நடவடிக்கைகள் எடுத்தார்கள். என்ன ஆயிற்று, அவர்கள் திடீரென்று மாற்றப்பட்டார்கள். அதற்காக மாற்றப் பட்டார்கள் என்று சொல்லவில்லை. ஆனால் பொதுவாக பரவலாக பேசப்பட்ட கருத்து அது. அதை மறுக்க முடியாது.

The Commissioner is only a handmaid and a victim of circumstances..

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே. திரு ஹாண்டே அவர்கள் பேசும்போது ரொம்ப வருத்தப்பட்டு சொன்னார்கள். அங்கே இருக்கும் 120 உறுப்பினர்களும் ஆளுக்கொரு இடத்தை எடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், அந்த மன்ற உறுப்பினர்களே எங்களுக்கு இந்த அதிகாரம் வேண்டாம் என்று ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்த காரணத்தினால், அரசு அதை ஏற்று இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அவர்களுக்கு அந்த அதிகாரம் வேண்டுமென்று எண்ணம் இருந்தால். இப்படிப்பட்ட ஒரு சட்டத் திருத்தத்தைக் கண்டித்திருப்பார்கள். வேண்டாம் என்று சொல்லியிருப்பார்கள். எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அந்த அதிகாரம் எங்களுக்குத் தேவையில்லை என்று நல்ல எண்ணத்தோடு ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற நேரத்தில் அதைப் பாராட்டாமல் இருப்பது நல்லதல்ல, முறையுமல்ல.

கமிஷனரே வைத்துக்கொள்ளட்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். கார்ப்பரேஷன் ஒரு எலெக்டட் பாடி. அதிலே தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று பொருள்படக்கூடிய வகையில்--(குறுக்கீடு) நீங்கள் அப்படிச் சொல்லவில்லை—குறை சொல்லியிருக்கின்றார்கள். நீங்கள்



1972 ஆகஸ்ட் 23] [திரு. ப. உ. சண்முகம்]

சொன்ன தொனி அப்படியிருக்கிறது. சொல்லவில்லை என்று சொன்னார்கள், அதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அவர்கள் குறை இருக்கிறது, குற்றம் இருக்கிறது என்று சொன்னார்கள், ஆகவே தான், அந்த நியமனம் செய்யும் பொறுப்பை கமிஷனரிடத்தில் கொடுக்க இப்போது சட்டத்தை திருத்தம் செய்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் சொல்லவில்லை. நான் மீண்டும் சொல்கிறேன், நான் ஒருவர் மீதும் தனியாக லஞ்சம் வாங்கியிருக்கிறார் என்று சொல்லவில்லை. நிலைமைகள் பல அப்படி இருந்த காரணத்தால்தான் இப்போது இந்த மாதிரி அதிகாரம் மாற்றித் தரும் சூழ்நிலை வந்திருக்கிறது. ஆனால் இப்படி மாற்றிக் கொடுப்பதால் மட்டும் இந்தப் பிரச்னை தீர்ந்து விடாது. நான் யார் மீதும் குற்றம் சாட்டத் தயாராக இல்லை. எனக்குத் தெளிவாகத் தெரியும். இந்த மாதிரி எலெக்டட் பாடீஸ் மீது குற்றம் சொல்லக் கூடாது. எம்.பி.க்கள், எம்.எல்.ஏ., பற்றி குற்றம் சொல்லக்கூடாது, எம்.எல்.ஏ.க்கள், கவுன்சிலர்களைப் பற்றி குற்றம் சொல்லக்கூடாது. நான் அப்படிச் சொல்வதற்கும் முன்வரமாட்டேன். ஆனால் என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம், அந்த அதிகாரம் கவுன்சிலர்களிடத்தில் இருந்தபோது அவர்கள் மிகுந்த தொல்லைக்குள்ளாக்கப்பட்டார்கள். அதிலே எந்த விதமான சந்தேகமும் இல்லை. முழுமையாக கார்ப்பரேஷன் கமிஷனருக்கு இந்தப் பவர்சைக் கொடுத்து இருக்கிறார்கள்.

The Corporation Commissioner can be swayed by pulls and counter-pulls.

இதனால் இந்த மாதிரியான நிலைமை, சூழ்நிலை இதனால் உருவாக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நகராட்சி மன்ற உறுப் பினர்கள் அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டிருந்தபோது அந்தச் சந்தேகம் இருக்கிறது என்று சொன்னார்கள். நகராட்சி ஆணையரிடத்தில் அந்த அதிகாரத்தைக் கொடுக்கிறோம் என்று சொல்கிறபோதும், அதே சந்தேகத்தைக் கூறுகிறார்கள். இப்படிச் சொன்னால் வேறு யாரிடத்தில்தான் அந்த அதிகாரத்தைக் கொடுப்பது. என்னைத் தனிப்பட்ட முறையில் கேட்டால், ஒரு

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 23

எலெக்டட் பாடியிடத்தில் இருக்கும் அதிகாரத்தை எடுப்பது என்பது முறையல்ல. நான் நகராட்சி மன்றத் தலைவராக இருந்த காரணத்தால் இதைச் சொல்கிறேன். நாங்கள் ஏன் அதை ஒப்புக் கொண்டோம் என்றால், அவர்கள் ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பினார்கள் என்பதால்தான். நகர மன்ற உறுப்பினர்களிடத்தில் இருந்த அதிகாரத்தை நகர மன்ற ஆணையருக்குத்தான் மாற்றலாம். வேறு யாருக்கும் அந்த அதிகாரத்தை கொடுப்பது முறையல்ல. அது போன்ற கருத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்ல வேண்டாம். நாங்கள் கொண்டு வந்திருக்கும் சட்டத்திருத்தம் நியாயமானதுதான், தவறு இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் அதைத்தான் கூற வருகிறேன். என்னுடைய கருத்து என்னவென்றால், அந்த அதிகாரத்தை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமாகப் பேசுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சுருக்கமாகத்தான் பேசுகிறேன். நீங்களே பாருங்கள் எவ்வளவு குறுக்கீடுகள். அந்த அதிகாரத்தை எடுத்துக் கொள்வது தவறு என்று நானும் கருதுகிறேன். அந்த அதிகாரத்தை யாருக்கு கொடுப்பது என்பதைச் சொல்கிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் செக்ரிடேரியட்டில் பணிபுரிபவர்களுக்கு அப்பாயிண்ட்மெண்ட் கொடுக்கும் உரிமை இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. வேண்டவே வேண்டாம். அதற்கு வேறு முறை இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள் அவர்கள் தொகுதியில் இருக்கும் குறைகளைச் சொல்லவேண்டும். கவுன்சிலர்கள் அவர்கள் வட்டத்தில் உள்ள குறைகளைச் சொல்லவேண்டும். அப்பாயிண்ட்மெண்ட் அதிகாரம் கவுன்சிலர்களுக்கு இருக்கக் கூடாது. பொதுவாக மாநிலத்திலுள்ள பொதுவான பிரச்னைகளைப் பற்றி பேசுவதற்கும், தொகுதிகளில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்வதற்கும் எம்.எல்.ஏக்களுக்கு உரிமை தரப்பட்டிருக்கிறதே தவிர. செக்ரிடேரியட்டில் பணிபுரிபவர்களை அப்பாயிண்ட் செய்யும் உரிமை வேண்டுமென்று கேட்பது எவ்வளவு பொருத்தமற்ற வாதமோ, அதைப்போல் தான் இந்த வாதம் நகராட்சி மன்றத்திற்குப் பொருந்தும். கார்ப்பரேஷனில்



1972 ஆகஸ்ட் 23] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

எந்த அப்பாயிண்ட்மெண்ட் செய்யவேண்டுமென்றாலும்—அதற்கு நல்ல பெயர் வரவேண்டுமென்று எண்ணம் இருந்தால்—நல்ல பெயர் வரவேண்டுமென்ற எண்ணத்தில் சொல்கிறேன்—அதற்கு இரண்டு வழியிருக்கிறது. ஒன்று எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாகச் செய்யுங்கள் அல்லது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகச் செய்யுங்கள். ஏறத்தாழ 12 கோடி ரூபாய் வருகிறது வருமானம். இந்தியாவில் சில மாநிலங்களில் வரும் வருமானமே இவ்வளவுதான். ஆகவே இந்த அப்பாயிண்ட்மெண்ட் விஷயத்தில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன். அதற்காகத்தான் முன்பே

The Public Service Commission has passed scathing remarks. என்று பீடிகை போட்டேன். இன்றைக்கு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருந்தாலும், இன்னொரு திருத்த மசோதா அவர்கள் கொண்டு வருவார்கள், இந்த அதிகாரம் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குக் கொடுக்கவேண்டுமென்று. ஆகவே, அரசாங்கம் இந்தக் கருத்தை மனதில் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம் :** ஆன் எ பாயிண்டு ஆப் கிளாரிபிகேஷன். நம்முடைய மதிப்பிற்குரிய அங்கத்தினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசுகிற பொழுது கவுன்சிலர்களைப் பற்றி குறிப்பிட்ட காரணத்தினால் நான் சொல்கிறேன். நான் சென்னை மாநகராட்சி மன்றத்தில் ஒரு உறுப்பினர் என்ற காரணத்தினால் சொல்கிறேன். ஒவ்வொரு கவுன்சிலரும் ஒவ்வொரு நபருக்கு ரெகமெண்ட்டேஷன் செய்கிறார் என்று கூறினார். நான் அவர்களுக்கு நகராட்சி மன்ற உறுப்பினர் என்ற முறையில் சொல்லிக் கொள்வேன். இதுவரையில் நான் எந்த விதமான . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. அப்படி நிலைமை ஏற்படுகிற ஒரு ஆபத்து இருக்கிறது என்றுதான் சொன்னார்.

**திரு. வை. பாலசுந்தரம் :** குறிப்பைப் பார்த்தால் தெரியும். ஒவ்வொரு நகராட்சி மன்ற உறுப்பினரும் ஒவ்வொருவருக்கு . . .

[1972 ஆகஸ்ட் 23

**திரு. நா. வீராசாமி :** டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும் பொழுது நகராட்சி மன்றத்தில் செய்யப்படுகின்ற அப்பாயிண்ட் மெண்ட் எல்லாம் எம்.பி.எஸ்.ஸி. மூலமாகச் செய்யப்படவேண்டும என்று சொன்னார்கள். இந்தியாவில் பல நகராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அந்த நகராட்சி மன்றங்களில் இப்படித்தான் செய்யப்படுகிறதா? வேறு எந்த மாநகராட்சி மன்றத்திலும் இல்லாத ஒரு முறையை ஏன் சென்னை நகராட்சி மன்றத்தில் மட்டும் கடைப்பிடிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள்? அது திராவிட முன்னேற்றக் கட்சியின் நிர்வாகத்தில் இருக்ககிற காரணத்தினால் அப்படிச் சொல்கிறார்களா?

MR. SPEAKER : It is not a good point of clarification.

**திரு. என். கணபதி :** நம்முடைய மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது கமிஷனரைப்பற்றி குறிப் பிடும்பொழுது 'நான்-ஐ.ஏ.எஸ்., நான்-ஐ.ஏ.எஸ்.' என்று சொன்னார்கள். ஏதோ கமிஷனர் பதவிக்கு வந்தது பெரிய பாவம் போல் சொன்னார். எந்த சர்க்கார் அதிகாரியும் தன்னுடைய திறமையையும், தகுதியையும் காட்டி உயர்ந்த பதவிக்கு வருவது நல்லது இல்லையா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அந்தக் கமிஷனர் மீதும் எனக்கு மரியாதை உண்டு. யார் மீதும் நான் குறை சொல்லவில்லை. அந்த பலஹீனத்தை ஏற்படுத்தாதீர்கள் என்று தான் சொன்னேன். இப்பொழுது இருக்கக்கூடிய கமிஷனரின் மீது எனக்கு நல்லெண்ணம் இருக்கிறது. கெட்ட எண்ணம் கிடையாது.

**திருமதி த. ந அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, சென்னை நகராட்சி மன்றம் இயற்றிய தீர்மானத்தைப் பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். ஏற்கனவே அப்பாயிண்டுமெண்டு கமிட்டி என்று ஒரு கமிட்டி இருந்தது. சென்னை நகராட்சியினுடைய நிர்வாகம் எப்படி இருக்கிறது என்பதை சென்னை நகரத்தில் வாழக்கூடிய மக்கள் மறந்திருக்க முடியாது. நானும் அங்கே ஆறு வருஷம் கவுன்சிலராக இருந் திருக்கிறேன். கார்ப்பரேஷன் எனக்குப் புதியது அல்ல. ஆகவே, அங்கு இருக்கும் நிலைமைகள் தெரியாமல் பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். எனக்கு ஆறு வருஷ அனுபவம் இருக்கிறது.



1972 ஆகஸ்ட் 23] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இதற்கு முன்பு அப்பாயிண்டுமெண்டு கமிட்டி என்று போட்டிருந்தார்கள். மேயர், ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர், கமிஷனர் இவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி போட்டிருந்தார்கள். அதில் என்ன தவறு கண்டீர்கள் இந்த முறையை மாற்றுவதற்கு என்பதைக் கொஞ்சம் விளக்கவேண்டும். அவர்களே தங்களுக்கு அந்த அதிகாரம் வேண்டாம் என்று தீர்மானம் போட்டிருந்தாலும், அப்படி கார்ப்பரேஷன் கவுன் சிலர்கள் தீர்மானம் போட்டதன் காரணம் என்ன? தவறுகள் நடந்தன என்று அவர்கள் கருதுகிறார்களா? அல்லது அவர்களால் சமாளிக்க முடியவில்லை என்று நினைத்தார்களா? எலக்டெட் பாடி மூலம் ஒரு குழுவைப் போட்டுவிட்டு, பிறகு அதை ஏன் மாற்ற வேண்டும்? அதில் என்ன தவறு கண்டீர்கள் என்பதைச் சொல்ல வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், மேயர் ஒரு வருஷம் பதவியில் இருப்பார். ஒரு எலெக்டெட் கவுன்சிலர் இருந்து வருகிறார். கார்ப்பரேஷன் கமிஷனர் இருக்கிறார். இந்த மூன்று பேர்கள் சேர்ந்த ஒரு கமிட்டி நியமனங்களை செய்து கொண் டிருந்தது. இதில் என்ன தவறு நடந்தது என்பதைச் சொல்லுங்கள். அப்படிச் சொன்னால்தான் நாங்களும் புரிந்து கொள்ள முடியும். கார்ப்பரேஷனுக்கு பல லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. ரூ. 3 கோடி வருமானம் வந்த காலத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்கூட, இப்பொழுது ரூ. 12 கோடி வருமானம் இருந்தும்கூட, எடுக்கப்பட வில்லை. சென்னை நகர மக்களுக்கு வேண்டிய வசதி கிடையாது. தெரு வீதிகளில் விளக்குகள் ஒழுங்காக எறிவது கிடையாது. அவ்வப்பொழுது அணைந்து கொண்டே இருக்கிறது. இப்படி ர்வாகத்தில் கோளாறு இருக்கிறது என்பதை எடுத்துச் ான்னால், நல்லெண்ணத்தோடு இருக்கிற குறைகளை எடுத்துச் ான்னால், அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். நீங்களும் ர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இப்படிக் குறை சொல்லலாமா என்று ி முழுகப் பார்ப்பது நல்லது அல்ல, நோய்க்கு அது பரிகார காது, நோய் புரையோடுவதில்தான் முடியும்.

கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் எத்தனையோ கோளாறுகள் ்க்கின்றன. அப்பாயிண்ட்மெண்ட்ஸில் எத்தனையோ கோளாறு இருக்கின்றன. ஸ்டேட் பூராவும் செலக்ஷன் கிரேடு ஹெட்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 ஆகஸ்ட் 23

மாஸ்டர்ஸ் மிடில் ஸ்கூல்களுக்கு 900 பேர்கள்தான் கேட்டிருக்கிறார்கள். ஆனால் சென்னை நகராட்சிக்கு மட்டும் 120 இடங்களுக்கு அப்ளிகேஷன் கேட்டிருக்கிறார்கள். 120 மிடில் ஸ்கூல் ஹெட் மாஸ்டர்ஸுக்கு வாய்ப்பு இருக்குமா? எதற்காக இப்படி அப்ளிகேஷன் கேட்கிறார்கள். ஏன் இப்படி வரம்பு மீறி அதிகமாக ஆட்களைப் போட்டுவிட்டு அவஸ்தைப்படவேண்டும்.

இரண்டு, மூன்று வருஷங்களுக்கு முன்பு 1,000 டீச்சர்களை ஸர்ப்ளஸாக அப்பாயிண்ட்மெண்டு செய்துவிட்டு, அவர்களை ஒரே நாளில் வீட்டுக்குப் போகச்சொன்னபொழுது ஒரு பெரிய கிளர்ச்சி ஏற்பட்டது. நான் ஏன் இதைச் சொல்ல வருகிறேன் என்றால் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும்.

நம்முடைய அரசு கார்ப்பரேஷனுக்கு நிதி உதவி செய்கிறது. கொஞ்சம் அரசின் கட்டுப்பாடு இருந்தால்தான் அங்கே நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்திக் கொண்டு போக முடியும். கார்ப்பரேஷன் கவுன்சிலர்களுக்கு குப்பை ஒழுங்காக எடுக்கப்படுகிறதா, தண்ணீர் சப்ளை ஒழுங்காக செய்யப்படுகிறதா, தெரு விளக்கு ஒழுங்காக எரிகிறதா என்பதைப்பற்றி கவலை கிடையாது. எவ்வளவு ஹெட்மாஸ்டர்கள் போடலாம், எவ்வளவு பேர்களை அப்பாயிண்டு செய்யலாம் என்று இப்படித்தான் எஸ்டாபிளிஷ்மெண்டை அதிகரித்துக்கொண்டே போவதில்தான் அக்கறை இருக்கிறது.

சென்னை நகரிலுள்ள மக்கள் வரிப்பணம் கொடுக்கிறார்கள். அதற்கேற்றபடி அவர்களுக்கு வேண்டிய வசதி கிடைக்கவில்லை. சென்னை நகர மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். வரி ஒழுங்காக கட்டுகிறவர்களுக்குக் கூட வரி கட்டவில்லை என்று நோட்டீஸ் வருகிறது. முன்பு ஒரு தடவைகூட டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் தான் வரி கட்டி ரசீது வாங்கியிருந்தும்கூட, திரும்பவும் கார்ப்பரேஷனிலிருந்து நோட்டீஸ் வந்ததாகச் சொன்னார். இந்த அளவுக்கு நிர்வாகத்தில் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் சற்று கண்காணிப்பு அதிகமாக இருக்க வேண்டும். திறமைசாலிகளை அப்பாயிண்மெண்டு செய்யவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களுக்கு முக்கியமான வேலைகள்



1972 ஆகஸ்ட் 23] [திருமதி த. ந. அனந்தநாயகி]

தெருவில் விளக்குகள் நன்றாக எறிகிறதா, தண்ணீர் வருகிறதா, குப்பை சரியாக அகற்றப்படுகிறதா, தெருக்கள் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கிறதா, மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறதா என்பதைக் கவனிப்பதுதான். பிறருக்கு வேலை வாங்கித் தருவது அவர்களுடைய வேலை கிடையாது. எங்கேயாவது ஏதாவது வேண்டுமென்றால் உதவி செய்யலாம். யாராக இருந்தாலும், கவுன்சிலர்களுக்கு அப்பாயிண்டுமெண்டு செய்யும் வேலை கண்டிப்பாக வேண்டியதில்லை. கமிஷனருக்கு அந்த அதிகாரம் கொடுத்தாலும் தொல்லைதான். எல்லா கவுன்சிலர்களும் எனக்கு வேலை கொடு, உனக்கு வேலை கொடு என்று கேட்டுக் கொண்டிருப்பார்கள். அதுவும் பலமான கமிஷனராக இருந்தால் செய்யப்போவது கிடையாது.

கமிட்டியை எடுத்துவிட்டு கமிஷனரிடம் அதிகாரத்தைக் கொடுப்பதினால் வேறு ஏதாவது விளைவுகள் ஏற்படாதா என்பதையும் பார்க்க வேண்டும். இதையெல்லாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்பாயிண்டுமெண்டு விஷயத்தை பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடம் விட்டுவிடலாம். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் செலக்ஷன் செய்து அனுப்புகிறவர்களிலிருந்து சூஸ் செய்து கொள்ளட்டும். கவுன்சிலர்களுக்கு இந்த அதிகாரம் அவர்களிடத்தில் இருந்தால் சங்கடம்தான். ஒன்பது பேர்கள் வேலை வாங்கிக்கொடு என்றால், ஒன்று அல்லது இருவருக்கு மட்டும் வேலை வாங்கிக்கொடுத்துவிட்டால், மற்றவர்கள் விரோதிகளாகி விடுவார்கள். அதனால் அவர்களுக்கும் நன்மை கிடையாது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் காப்பாற்றவேண்டுமென்றால், கமிஷனரோடு ஒரு இண்டிபெண்டெண்டு பெர்ஸனையும் சேர்த்துப் போடுங்கள். அவர்களும் தப்பு செய்துவிடுவார்கள் என்று கருதினால் வேறு மாதிரியாக ஒரு கமிட்டி போடுங்கள். சர்வீஸ் கமிஷன் ரெப்ரெசெண்டேடிவ், கமிஷனர், கவர்ன்மெண்டு ரெப்ரெசெண்டேடிவ் இம்மாதிரி மூன்று பேர்கள் கொண்ட ஒரு கமிட்டியைப் போடுங்கள். அம்மாதிரி ஏதாவது செய்தால்தான் நன்மையாக இருக்குமே தவிர. இதிலே மீண்டும் பல கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்யும். திரும்பவும் திரும்பவும் திருத்தம் செய்ய வேண்டியிருக்கும். சிக்கல் எங்கே இருக்கிறது, அதை எப்படி

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 ஆகஸ்ட் 23

விலக்குவது என்பதை அரசாங்கம் யோசிக்கவேண்டும். ஏதோ அவர்கள் சொன்னதைக் கேட்டுக்கொண்டு அடிக்கடி திருத்தம் கொண்டுவருவது நல்லது அல்ல என்று சொல்லி, முடிக்கிறேன்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷன் சம்பந்தப்பட்டவரையில் அப்பாயிண்டுமெண்டு கமிட்டியிலே கொண்டுவரப்பட்ட மாறுதலை நான் ஏற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இங்கே பேசிய அம்மையார் அவர்கள் ஏதோ தி.மு.க. கார்ப்பரேஷன் கவுன்சிலர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு ரோடுகள் குறுகிவிட்டது, தெரு விளக்கு எறியவில்லை, மக்களுக்கு வசதி செய்து தரப்படவில்லை என்றெல்லாம் கூறினார்கள். அவர்கள் சற்று உண்மையை எண்ணிப்பார்க்கவேண்டும். 1946-க்கு முன்னால் சென்னை நகரோடு பல பகுதிகள் சேர்க்கப்பட்டன. காங்கிரஸ் ஆட்சி இருக்கும்பொழுது அவைகளையெல்லாம் அபிவிருத்தி செய்யாமலேயே சென்னை நகரத்தோடு இணைத்துவைத்து விட்டார்கள். தி.மு.க. நகராட்சி நிர்வாகத்திற்கு வந்த பிறகு தான் இந்த புதிய பகுதிகளுக்கெல்லாம் நல்ல அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தி, டிரைனேஜ் அண்டு வாட்டர் ஃபேசிலிடீஸ் அங்கெல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

அம்மையார் அவர்கள் இங்கே ஏதேதோ அளக்கிறார்கள். கார்ப்பரேஷன் வருமானம் 3 கோடியிலிருந்து 12 கோடியாக ஆயிற்று என்று இவர்கள் சொல்லலாம். 3 கோடி 12 கோடி எப்படி ஆயிற்று, ஏன் ஆயிற்று என்று டிடெயில்ஸ்களை பார்த்தால், அவர்களே வெட்கப்படவேண்டி இருக்கும். அந்த அளவுக்கு வாங்க வேண்டியவர்களிடம் இருந்து தான் வரிகளை வாங்கியிருக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எக்ஸ்டெண்டட் ஏரியாக்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துவிட்டதாகச் சொன்னீர்கள். கோடம்பாக்கத்திலே பல இடங்களிலே குடித் தண்ணீர் கூட கிடைக்கவில்லை.

**திருமதி எம். ஆர். கண்ணன் :** அந்த எக்ஸ்டெண்ட் ஏரியாக்களை எல்லாம் அபிவிருத்தி பண்ணித்தான் சென்னை கார்ப்பரேஷனிலே சேர்த்து இருக்க வேண்டும். அப்படியில்லாமல் அன்றைக்கு



1972 ஆகஸ்ட் 23] [திரு. எம். ஆர். கண்ணன்].

இருந்த காங்கிரஸ் ஆட்சி வெறுமனே சேர்த்து விட்டது. இன்றைக்கு எக்ஸ்டெண்டெட் ஏரியாக்களுக்கு நாங்கள் வந்ததற்கு பிறகுதான் வாடர் பெசிலிடி, டிரைனேஜ் பெசிலிடி எல்லாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். ஆகவே 3 கோடி 12 கோடி ஆகியது. ஆனால் மக்களுக்கு எந்தவித அபிவிருத்தியும் கிடைக்கவில்லை என்று சொன்னால் என்ன அர்த்தம்? தி.மு. கழகம் ஆட்சி பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு எல்லா மக்கள் மீதும் வரியை போட்டு இருக்கிறது, என்றால் என்ன அர்த்தம்? பணக்காரர்களுக்கு வால் பிடித்துக்கொண்டு அவர்களுடைய பெரும் பங்களாக்களுக்கு எல்லாம் வரியை போடுவதே கிடையாது அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள். இப்படித்தான் அநியாயம் செய்து கொண்டு வந்தார்கள். தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு தான் சர்வே செய்து அசெஸ்மெண்ட் செய்தது. இன்றைக்குக் கூட பல பணக்காரர்கள் அதிகாரிகளை ஏமாற்றிக்கொண்டு தான் வருகிறார்கள். நாங்கள் வந்து ஓரளவு நல்ல அபிவிருத்தி செய்ததால் தான் வருமானத்தை 9 கோடியாக உயர்த்த முடிந்தது. வேறு யாரையும் கொள்ளை அடிக்கவில்லை. நீங்கள் எல்லாம் தவறான ஒரு அட்மினிஸ்டிரேஷனை நடத்தினீர்கள். இப்பொழுது சாதாரண ஏழை மக்கள் மேயர்களாக வருகிறார்கள். இப்படிப்பட்ட மேயர்களை இதற்கு முன்பு பார்த்து இருப்பார்களா?

இதற்கு முன்னால் மேயர் தேர்தல் என்றால் சென்னை நகரத்தில் யாருக்குமே தெரியாது. தி.மு. கழகம் வந்ததற்குப் பிறகு தான் யார் மேயராக வருகிறார்கள். சாதாரண மக்கள் வருகிறார்களா என்பது போன்ற அம்சங்கள் எல்லாம் தெரிய வந்தது. அந்த அளவுக்கு கார்ப்பரேஷன் அட்மினிஸ்டிரேஷன் வந்ததற்குப் பிறகு எங்களை குறை கூறுவதா? அங்கெல்லாம் நாங்கள் நன்மைகளை செய்திருக்கிறோம். இங்கே ஒன்றை மட்டும் சொல்வேன், தென் சென்னையில் தான் அபிவிருத்தி அதிகமாக இருக்கிறது. எட்வர்ட் எல்லியட்ஸ் ரோடில் முக்கால்பாகம் பிளாட்பாரமாக வந்திருக்கிறது. வடசென்னையில் எல்லாம் அப்படிப்பட்ட அபிவிருத்தி இல்லை. தென் சென்னை ஏற்கெனவே டெவலப்ட் ஏரியா. ஆகவே இதிலே குறை சொல்லவில்லை.

அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி என்பது ஏற்கெனவே இருந்திருக்கிறது. நல்ல முறையிலே தான் இயங்கி வந்திருக்கிறது என்பதாக நான் நினைக்கிறேன். ஏன் இப்பொழுது மாற்றி அமைத்தார் என்பது எனக்குத் தெரியவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, on a point of order. We are not on the subject of administration. We are on the subject of appointment. But the hon. Member is talking about Mayor and the Deputy Mayor.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்பாயிண்ட்மெண்ட் பற்றி பேசுங்கள். அப்பாயிண்ட்மெண்ட் எப்படி பண்ணுவது. இதற்கு முன்பு எப்படி பண்ணினார்கள் என்பதைப் பற்றி பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற சப்ஜெக்டின் மேல் பேசாமல், தி.மு. கழகம் எதுவுமே செய்யவில்லை என்று சொன்னதன் விளைவு தான் இப்படி வந்தது. எனக்கு பயன்படுகிற அளவுக்கு இங்கே கொண்டு வந்திருக்கிற அளவுக்கு நின்று பேசினால் நல்லது. இதைப் பொது விவாதம் போல் எடுத்துக் கொண்டு பேசுவது சரியில்லை. அவ்வப்பொழுது எடுத்துக்கொள்கிற கருத்துக்களுக்கு அவ்வப்பொழுது மறுப்பு உரைகள் தரலாம். இங்கே கொண்டு வந்திருக்கிற சட்ட அளவுக்கு மாத்திரம் கருத்துச் சொன்னால் நன்றாக இருக்கும். சாதனைதனை சாதனை இல்லை என்று சொன்னால் இரண்டு தரப்பும் வாதிட்டுக் கொண்டு தான் இருப்பார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி ஒரு எக்ஸ்பிளனேஷன். அப்பாயின்ட்மேன்டு ஒழுங்காக நடந்தால் தான் நிர்வாகம் நன்றாக நடக்கும். ஆகையால் தான் நல்ல அப்பாயின்ட்மெண்ட்டாக போடுங்கள் என்கிறேன். சரியாக போடாததால் நிர்வாகம் மோசமாக இருக்கிறது. நல்ல ஆட்களைப் பார்த்து அப்பாயின்ட்மெண்ட் பண்ணுங்கள்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** அம்மையார் அவர்கள் அதிக அனுபவம் உடையவர்கள். அப்பாயின்ட்மென்டுக்கும் கவுன்சிலர்களுக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? எலெக்டட் மெம்பர்



களுக்கு எந்த பவர்ஸும் தருவதில்லை. காரணம் அவர்கள் எல்லாம் லஞ்சம் வாங்கிவிடுவார்கள் என்பதற்காக கொடுப்பதில்லை. கவர்ன்மெண்டிலே கூட அப்பாயின்ட்மெண்ட் பண்ணுவதெல்லாம் அபிஷியலுக்குத் தான் தருவார்கள், நான்-அபிஷியலுக்கு தருவதில்லை. இங்கே ஒரு மெம்பர் அப்பாயின்ட் பண்ணினால் மேயர், கமிஷனர் போன்றோர்கள் இருக்கிறார்கள். எந்த ஒரு தி.மு.க உறுப்பினரும் எதையும் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அதை எல்லாம் அந்த அபிஷியல்கள் அரசாங்கத்திற்கு ரிபரசன்ட் செய்வார்கள். இந்த இரண்டு எலக்டட் மெம்பர்களை அவர்களுடைய ஆதரவிற்காக போடுகிறார்கள். அம்மையார் அவர்கள் ஏன் இந்த வாரியம் என்று பேசுவார்கள். உடனே இந்த வாரியத்திற்கு ஒரு ஆள் போடுங்களேன் என்று கேட்பார்கள். அப்படிப் பட்ட முறையிலே ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காகத் தான் இப்படி பேசுகிறார்கள். . .

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் சொல்வதை ஒழுங்காக சொன்னால் போதும், உங்களிடத்திலே நான் எதையும் கற்றுக் கொள்ள விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது மாதிரி ஒரு உறுப்பினரைப் பற்றி பேசும் பொழுது ஏதோ சொல்லவேண்டுமென்று நோக்கங்கள் கற்பித்து பேசுவது மரபில்லை. உறுப்பினர் அவர்கள் இந்த நோக்கத்தோடு சொல்கிறார்கள் என்று சொல்லுவது இந்த மன்றத்தின் மரபுகளுக்கு முரணாக இருப்பதால், அப்படிச் சொல்லக் கூடாது. முரணான கருத்து இருந்தால் அதைச் சொல்லலாம். அவர்கள் ஏதோ வேண்டும் என்பதற்காகத்தான் அப்படிச் சொல்கிறார்கள் என்பது சரியான மரபு இல்லை. முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** "பாயின்ட் ஆப் ஆர்டர்".

MR. SPEAKER : No point of order. This has been disposed of.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவரவர்களே, இந்த மன்றத்திலே தொடர்ந்து நான் பல நாட்களாக பார்த்துக் கொண்டு வருகிறேன். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் உட்கார்ந்த

[திரு. எம். ஆர். கண்ணன்] [1972 ஆகஸ்ட் 23

அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி என்பது ஏற்கெனவே இருந்திருக்கிறது. நல்ல முறையிலே தான் இயங்கி வந்திருக்கிறது என்பதாக நான் நினைக்கிறேன். ஏன் இப்பொழுது மாற்றி அமைத்தார் என்பது எனக்குத் தெரியவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, on a point of order. We are not on the subject of administration. We are on the subject of appointment. But the hon. Member is talking about Mayor and the Deputy Mayor.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்பாயிண்ட்மெண்ட் பற்றி பேசுங்கள். அப்பாயிண்ட்மெண்ட் எப்படி பண்ணுவது. இதற்கு முன்பு எப்படி பண்ணினார்கள் என்பதைப் பற்றி பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற சப்ஜெக்டின் மேல் பேசாமல், தி.மு. கழகம் எதுவுமே செய்யவில்லை என்று சொன்னதன் விளைவு தான் இப்படி வந்தது. எனக்கு பயன்படுகிற அளவுக்கு இங்கே கொண்டு வந்திருக்கிற அளவுக்கு நின்று பேசினால் நல்லது. இதைப் பொது விவாதம் போல் எடுத்துக் கொண்டு பேசுவது சரியில்லை. அவ்வப்பொழுது எடுத்துக்கொள்கிற கருத்துக்களுக்கு அவ்வப்பொழுது மறுப்பு உரைகள் தரலாம். இங்கே கொண்டு வந்திருக்கிற சட்ட அளவுக்கு மாத்திரம் கருத்துச் சொன்னால் நன்றாக இருக்கும். சாதனைதனை சாதனை இல்லை என்று சொன்னால் இரண்டு தரப்பும் வாதிட்டுக் கொண்டு தான் இருப்பார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பாயின்ட் ஆப் ஆர்டர் பற்றி ஒரு எக்ஸ்பிளனேஷன். அப்பாயின்ட்மென்டு ஒழுங்காக நடந்தால் தான் நிர்வாகம் நன்றாக நடக்கும். ஆகையால் தான் நல்ல அப்பாயின்ட்மெண்ட்டாக போடுங்கள் என்கிறேன். சரியாக போடாததால் நிர்வாகம் மோசமாக இருக்கிறது. நல்ல ஆட்களைப் பார்த்து அப்பாயின்ட்மெண்ட் பண்ணுங்கள்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** அம்மையார் அவர்கள் அதிக அனுபவம் உடையவர்கள். அப்பாயின்ட்மெண்டுக்கும் கவுன்சிலர்களுக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? எலெக்ட்டட் மெம்பர்



1972 ஆகஸ்ட் 23]

களுக்கு எந்த பவர்ஸும் தருவதில்லை. காரணம் அவர்கள் எல்லாம் லஞ்சம் வாங்கிவிடுவார்கள் என்பதற்காக கொடுப்பதில்லை. கவர்ன்மெண்டிலே கூட அப்பாயின்ட்மெண்ட் பண்ணுவதெல்லாம் அபிஷியலுக்குத் தான் தருவார்கள், நான்-அபிஷியலுக்கு தருவதில்லை. இங்கே ஒரு மெம்பர் அப்பாயின்ட் பண்ணினால் மேயர், கமிஷனர் போன்றோர்கள் இருக்கிறார்கள். எந்த ஒரு தி.மு.க உறுப்பினரும் எதையும் செய்ய முடியாது. அப்படிச் செய்தால் அதை எல்லாம் அந்த அபிஷியல்கள் அரசாங்கத்திற்கு ரிபாசன்ட் செய்வார்கள். இந்த இரண்டு எலக்டட் மெம்பர்களை அவர்களுடைய ஆதரவிற்காக போடுகிறார்கள். அம்மையார் அவர்கள் ஏன் இந்த வாரியம் என்று பேசுவார்கள். உடனே இந்த வாரியத்திற்கு ஒரு ஆள் போடுங்களேன் என்று கேட்பார்கள். அப்படிப் பட்ட முறையிலே ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காகத் தான் இப்படி பேசுகிறார்கள். . .

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் சொல்வதை ஒழுங்காக சொன்னால் போதும், உங்களிடத்திலே நான் எதையும் கற்றுக் கொள்ள விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது மாதிரி ஒரு உறுப்பினரைப் பற்றி பேசும் பொழுது ஏதோ சொல்லவேண்டுமென்று நோக்கங்கள் கற்பித்து பேசுவது மரபில்லை. உறுப்பினர் அவர்கள் இந்த நோக்கத்தோடு சொல்கிறார்கள் என்று சொல்லுவது இந்த மன்றத்தின் மரபுகளுக்கு முரணாக இருப்பதால், அப்படிச் சொல்லக் கூடாது. முரணான கருத்து இருந்தால் அதைச் சொல்லலாம். அவர்கள் ஏதோ வேண்டும் என்பதற்காகத்தான் அப்படிச் சொல்கிறார்கள் என்பது சரியான மரபு இல்லை. முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** "பாயின்ட் ஆப் ஆர்டர்".

MR. SPEAKER : No point of order. This has been disposed of.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவரவர்களே, இந்த மன்றத்திலே தொடர்ந்து நான் பல நாட்களாக பார்த்துக் கொண்டு வருகிறேன். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் உட்கார்ந்த

இடத்திலே இருந்து அதிகமான வார்த்தைகளை அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறார்கள். இது சபையின் மரபுகளுக்கு முறை ஆனதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நாங்கள் ஏன் அநாவசியமாக எழுந்திருக்கிறோம். நாங்கள் பேசும் பொழுது நீங்கள் தான் அடிக்கடி இடை மறிக்கிறீர்கள். நீங்கள் சொல்லுவதை தப்பாக சொன்னால், நாங்கள் மறுத்துத் தானே ஆக வேண்டியிருக்கிறது.

**திரு ஏ. சி நரசிம்மன் :** அவர்கள் உட்கார்ந்த இடத்திலே இருந்து அடிக்கடி பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த இடத்திலேயிருந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். யாராவது எதையாவது பேசினால் அவர் மறுப்பு தெரிவித்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அவர் அவர்கள் இடத்திலே இருந்து பேசுவதுதான் நியாயம். அதை எப்படி தவறு என்று சொல்லுகிறார் உறுப்பினர் என்று எனக்கு புரியவில்லை.

**திரு. துரைமுருகன் :** அப்படி அவர்கள் பேசிக் கொள்ளலாம் என்று அம்மையார் அவர்கள் சொல்லுகிறார்களா? தலைவர் அவர்களே உங்கள் மூலமாகக் கேட்கிறேன். உட்கார்ந்த இடத்திலே இருந்து அவரவர்கள் பேசிக்கொண்டிருந்தால் இந்த சபையின் நடவடிக்கை என்ன ஆகும் என்பதை அம்மையார் அவர்கள் கவனிக்க வேண்டும், உறுப்பினர் திரு. நரசிம்மன் அவர்கள் உட்கார்ந்த இடத்திலே இருந்து பேசாதீர்கள் என்று தான் சொன்னார். அப்படி பேசலாம் என்றால், உட்கார்ந்த இடத்திலே இருந்து எதை வேண்டுமானாலும் பேசலாம்.

**திருமதி த ந. அனந்தநாயகி :** இது நியாயம் இல்லை. நீங்கள் அநாவசியமாக பேசுகிறீர்கள். நாங்கள் எதையும் கேட்கக் கூடாது என்றால், நாங்கள் சட்ட மன்றத்தை விட்டு வெளியேறி விடுகிறோம், நீங்கள் வேண்டுமானால் சட்ட மன்றத்தை நடத்திக் கொண்டிருங்கள்.



**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** இந்த விவாதத்தில் பேரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கலந்து கொள்வதற்கு உரிமை உண்டு. அதே நேரத்தில் தங்களுடைய பெருமை மிக்க பொறுப்புக்களை உணர்ந்து பேசுவது இந்த பேரவையினுடைய மரபு, ஒரு விஷயத்தைப்பற்றி விவாதிக்கின்ற பொழுது நாம் முதலில் விவாதிக்க ஆரம்பிக்கும்பொழுதே நம்முடைய பெருமையை மனதில் கொண்டு விவாதிக்க வேண்டும் என்பது இந்த பேரவைக்கு தெரியாததில்லை. ஒரு பிரச்சினை பற்றி சொல்லுவதற்கு உரிமை உண்டு. ஆனால் அளந்து சொல்லும் உரிமைதான் முக்கியமானது. இங்கே நான் கேட்டுக் கொள்ளுவது என்னவென்றால் பிரச்சனையை நாம் அணுகலாம், நன்றாகச் சிந்திக்கலாம், அதைப் பற்றிப் பேசலாம். ஆனால் ஒன்று இங்கே தொடர்ந்து நடக்கிறது. ஒருவர் பேசிக்கொண்டிருக்கிற பொழுதே கீழே தன்னுடைய இடத்திலே உட்கார்ந்து கொண்டு அதை குத்தலாக பேசுகிற முறை இருக்கிறது. யாராக இருந்தாலும் இது சரி இல்லை. அவ்வாறு பேசுவதை விட சபாநாயகரிடம் இருந்து அனுமதி பெற்று, எழுந்து நின்று பதில் சொல்லுவது அழகாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அந்த மாதிரி செய்யாமல் நம்முடைய அருமையான நேரத்தை இந்த பேரவையில் அர்த்தமற்ற விவாதங்களுக்கு பயன்படுத்த வேண்டாம் என்று நான் மிக அன்போடு இந்தப் பேரவையின் தலைவரின் சார்பில் சொல்லி, விடை பெறுகிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இன்றைக்கு உட்கார்ந்த இடத்திலே இருந்து பேசவில்லை. உறுப்பினர் பேசும் பொழுது குறுக்கிட்டால் நான் "ஈல்டு" ஆகவில்லை என்கிறார். அந்த நேரத்தில் குறுக்கிடுபவர் பாதி உட்கார்ந்தும், பாதி நின்று கொண்டும் குறுக்கிடும் நிலைமை எழுகிறது. எனவே, அம்மையார் அவர்கள் கேட்கும் பொழுது உட்கார்ந்து கொண்டு பேசுவது போல் தெரிகிறது. இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த மன்றத்திலே சுவையான விவாதத்திற்குப் பதிலாக சூடான விவாதம் சில சமயங்களிலே ஏற்பட்டு விடுகிறது. உறுப்பினர்கள்

உட்கார்ந்துகொண்டே எதையாவது பேசலாமா என்று, இங்கே விவாதிக்கப்பட்டது. பார்லிமெண்டரி-பிரிட்டிஷ் பார்லிமெண்டரி நடவடிக்கைகளைப் பார்த்தாலும் இப்படி இருந்து கொண்டே 'ஹியர், ஹியர்' என்று சொல்வது தொன்று தொட்டே இருந்துவருவது தெரியவரும். 'மே'ஸ் பார்லிமெண்டரி ப்ரொசிடிங்ஸில்கூட இருக்கிறது. ஆனால் ஒரு மெம்பர் இன்னொருவர் பேசிக்கொண்டிருக்கும்போது வேண்டுமென்றே தடஸ்தம் செய்வதற்காக குறுக்கிடுவது என்பது உரிமையை மீறிய செயலாகத்தான் இருக்கும். இந்தமாதிரி நேரங்களில் குறிப்பாக எங்களைப் போன்றவர்கள்—எதிர்க்கட்சியிலே சிறிய அளவில் இருக்கிறோம்—கருத்துக்களைச் சொல்வதற்கு தகுந்த வாய்ப்பும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டு வருகிறது; மேலும் அளிக்கப்பட வேண்டும்.

மேலும் இந்த மன்றத்திலே அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சற்று சுறுசுறுப்பாக பேசுபவர்கள் என்பதும், அவர்கள் பேசினால்தான் இந்த அவையிலே ஒரு சுவாரஸ்யமும் சுறுசுறுப்பும் இருக்கும் என்பதும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். அதனால் மற்றவர்கள் யாரையும் நான் குறைத்துச் சொல்வதாக அர்த்தமல்ல. நாங்கள் எல்லாம் மிதவாதிகளா இல்லையா என்ற விவாதத்திற்கும் நான் செல்லவிரும்பவில்லை. யாராக இருந்தாலும் உறுப்பினர் ஒருவர் கோர்வையாக கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வரும்போது வேண்டுமென்றே சில ஆட்சேபங்களை கிளப்பி, பேசுபவரின் கருத்துக்களை சிதைப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆகையால் எங்களைப்போன்றவர்களுக்கு—சிறுபான்மையாக இருக்கக்கூடியவர்களுக்கு போதிய அவகாசமும், பாதுகாப்பும் தரவேண்டுமென்று தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**Thiru V. KRISHNAMOORTHY** : Sir, with your permission I want to clarify the position. Interruptions made sitting are parliamentary but that right should not be extended to running commentary. Nobody is prevented from making interruptions but it should be short. But if he goes on making comments on the speech, then it leads to running commentaries and that should be avoided. That is my submission.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவில்லாத ஒரு விவகாரத்தை பெரிதுபடுத்திவிட்டார்கள், என்பதுதான் இதிலே என்னுடைய முடிவு. திரு நரசிம்மன் அவர்கள் ஒழுங்குப் பிரச்சனை என்று கூறி இடையிலே குறுக்கிட்டார். கடைசியில் அவருடைய ஒழுங்குப் பிரச்சனை என்ன என்றே சொல்லவில்லை. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் மற்ற உறுப்பினர்கள் பேசுகின்றபோது எப்படி நடந்து கொண்டார்கள் என்பதுபற்றித் தீர்ப்பு சொல்லவேண்டியது பேரவைத் தலைவரின் பொறுப்பு. திரு. நரசிம்மன் அவர்கள் ஒழுங்குப் பிரச்சனை இல்லாத ஒன்றை ஒழுங்குப் பிரச்சனை என்று கிளப்பி விவாதித்தது பொருத்தமுடையதல்ல. அதுகுறித்து நான் மிகவும் வருந்துகிறேன். அதைப்போன்று திரு. துரைமுருகன் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொல்லவேண்டிய அவசியமே இல்லை. அதற்காகவும் நான் வருந்துகிறேன். கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் குறுக்கிடுகிறார்கள் என்றால் அவர்கள் என்னுடைய அனுமதியைப் பெற்று தங்கள் கருத்துக்களைச் சொல்கிறார்கள்.

பொதுவாக இப்போது பல மெம்பர்கள் உட்கார்ந்து பேசுவதும், எழுந்து பேசுவதும் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. அது இந்த மன்றத்தின் மரபை மீறுகிற செயலாக இருக்கிறது. வரவர மன்றத்தின் மரபை மீறுவது என்பது சாதாரணமாகி விட்டது. சில தினங்களுக்கு முன்னால் கூட இப்படி ஒரு மெம்பர் பேசுகின்றபோது இடைமறித்து பேசியதால், வாக்குவாதம் ஏற்பட்டு, அதனால் ஒரு துர்பாக்கியமான நிலைமை உருவாகிவிட்டது. அவையெல்லாம் வேதனைப்படத் தக்கவைகள். இந்த மன்றத்தின் மரபுமுறை சரியாக கடைபிடிக்கப்பட்டிருந்தால் அம்மாதிரி செய்கையால் நடந்திருக்கா.

ஒரு உறுப்பினர் பேசும்போது, ஒழுங்கு பிரச்சனை என்று இடைமறித்து விட்டு, ஒழுங்குப் பிரச்சனையைச் சொல்லாமல் தங்கள் கருத்துக்களை விளக்கிக் கொண்டுப் போவது நல்லதல்ல. இதைத்தான் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். உறுப்பினர் பேசும்போது ஏதாவது விளக்கம் கேட்கவேண்டும் என்றிருந்தால், அவரது உரையில் ஏதாவது தவறுதலாக சொல்லி விட்டார் என்றால் உரையின் முடிவில் கிளாரிப்பிகேஷன் கேட்க

லாம் பொதுவாக, இப்போது எல்லாம் அமைச்சர்கள் அடிக்கடி குறுக்கிடும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அவை கூட வரம்பை மீறியவைதான் அமைச்சர் குறுக்கிடுவதுபோய் இப்போது திரு. நரசிம்மன் போன்ற மெம்பர்களும் குறுக்கிடத் தொடங்கிவிட்டார்கள்

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவரவர்களே. நான் சொல்வது, ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது உட்கார்ந்துகொண்டே யாரும் பேசக்கூடாது என்பதுதான். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் உட்கார்ந்து கொண்டு ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். ஏதாவது பேசவேண்டுமென்றால் எழுந்து நின்று தலைவரின் அனுமதியோடு பேசலாமே என்றுதான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பதை நான் புரிந்துகொண்டேன். உங்கள் விளக்கம் தேவையில்லை. நீங்கள் உட்காருங்கள். ஒவ்வொருவரும் பேசும்போது தங்களுக்கு பொருத்தமான வியாக்கியானங்களைத்தான் சொல்வார்கள். இவற்றிற்கு எல்லாம் ஒரு தீர்ப்பு என்று சொல்ல முடியாது. மாண்புமிகு அமைச்சர்களுக்குக் கூட பல தடவைகள் சொல்லியிருக்கிறேன் மன்றத்தின் மரபு மீறப்படாமல், நியாயமான வகையில் தேவைப்பட்டால் ஒழிய உறுப்பினர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன். புதிய உறுப்பினர்கள் பேசும்போது வார்த்தைகள் அழகாக இருக்கவேண்டுமென்று, அடுக்குத்தொடரில் கோர்வையாகப் பேசுவார்கள். குறுக்கிடுவதால் அவர்கள் கருத்துக்கள் சிதைவுறக்கூடும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எல்லோருக்கும் இது பொருந்தும்.

கிளாரிபிக்கேஷன், அல்லது பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு, பிறகு தங்கள் வியாக்கியானங்களைச் சொல்லிக்கொண்டிருப்பது இந்த மன்றத்தின் மரபுக்குட்பட்டதல்ல. அதே மாதிரி மாண்புமிகு அமைச்சர்களும், முதலமைச்சரும் ஒரு முக்கியமான பிரச்சனையைப் பற்றிப் பேசும்போது எதிர்க்கட்சியினரும் குறுக்கிடுகிறார்கள். பின் அவர்களுக்குள்ளே



மாறிமாறிப் பேசிக்கொள்கிறார்கள். சில பத்திரிகைகள் அம்மாதிரி சம்பவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து 'வாக்குவாதம்' என்று தலைப்பு போட்டு பெரிதுபடுத்திவிடுகிறார்கள். சபையில் வாக்குவாதம் என்பது சட்ட மன்ற மரபே ஆகாதது. முன்பெல்லாம் அமைச்சர்கள் தான் குறுக்கிட்டு வந்தார்கள். இப்போது அந்த பழக்கம் எதிர்க்கட்சி வரிசைக்கும் தாவியிருக்கிறது.

நான் இந்தப் பேரவைத் தலைவர் பொறுப்புக்கு வந்து கிட்டத்தட்ட ஒன்றரையாண்டு காலம் ஆகிவிட்டது. எந்தெந்த நேரத்தில் தலையிடலாம், எந்தெந்த நேரத்தில் குறுக்கிடலாம் என்று எந்த விதிமுறையில் சொல்லப்பட்டிருக்கிறதென்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒரு உறுப்பினர் பேசும்போது குறுக்கிடுவதாக இருந்தால், அந்த உறுப்பினர் 'ஈல்ட்' செய்தால் பேசலாம் என்றுதான் நான் தெரிந்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர்களையும், மாண்புமிகு உறுப்பினர்களையும் மன்றத்தின் மரபுக்கு உட்பட்டு, மன்றத்தின் மரபை நிலைநிறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நரசிம்மன் அவர்கள் 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்று சொல்லி ஒரு ஒழுங்குப் பிரச்சனையைக் கிளப்பினார்கள். அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. இதையே என்னுடைய தீர்ப்பாக ஏற்றுக்கொண்டு, இன்னும் பல மசோதாக்கள் நிறைவேற்றப்படவேண்டியிருப்பதால் மேலும் இந்த பிரச்சனையில் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை விவாதத்திற்கு பதிலளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, சென்னை மாநகராட்சி திருத்தச் சட்ட மசோதா மீது இங்கே பேசிய உறுப்பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இதிலே முக்கியமான ஒன்று, ஏற்கெனவே பணியாளர்களை மூன்று நான்கு வகையினராகப் பிரித்து, 100 ரூபாய்க்கு குறைவாக சம்பளம் வாங்கும் ஊழியர்களை நியமிப்பதற்கு அமைக்கப்பட்டிருந்த குழுவைப்பற்றியது. அந்தக் குழுவில் மேயர், கமிஷனர், மாநகராட்சி மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் ஆக மூன்று பேர் இருக்கிறார்கள். இனி கமிஷனரே 100 ரூபாய்க்கு

குறைவாக சம்பளம் பெறும் ஊழியர்களை நியமிக்கலாம் என்று மாநகராட்சி ஏகமனதாக ஒரு தீர்மானத்தைப்போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அரசாங்கமே இந்தச் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரவில்லை. மற்ற நகராட்சிகளானாலும் சரி அல்லது மதுரை மாநகராட்சியானாலும் சரி அங்கெல்லாம் இந்தக் குழு இருக்கும். அவற்றை நாம் மாற்றவில்லை. சென்னை மாநகராட்சியிலிருந்து இப்படி ஒரு தீர்மானத்தைப் போட்டு அனுப்பியிருப்பதால், அதற்கு நாம் மதிப்புக்கொடுக்கவேண்டும் என்ற முறையிலேதான் இந்தத் திருத்த சட்டம் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

மாநகராட்சி இந்த தீர்மானத்தைப் போட்டு அனுப்பியது சரியா இல்லையா என்று விவாதிப்பதற்காக கொண்டுவரப்பட்டதல்ல இந்த மசோதா. அதைப்பற்றி விவாதிப்பதை மற்ற நேரங்களில் வைத்துக்கொள்ளலாம். அதை தனியாக ஆராய வேண்டும். இந்த மசோதாவிற்கு சம்பந்த மில்லாத கருத்துக்களையெல்லாம் சிலர் தெரிவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகமே சென்னை மாநகராட்சியிலும் இருப்பதால் இந்த திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். அந்த மாதிரியான பிரச்சனைகளுக்கு எல்லாம் ‘ஆம்’ என்று ஒரு வரியிலோ அல்லது ‘இல்லை’ என்று ஒரு வரியிலோ பதில் சொல்லி விட முடியாது. அவைகளுக்கு எல்லாம் புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்டு, அவை தனியாக விவாதிக்கப்பட வேண்டியவை. இந்தத் திருத்தச் சட்டத்தில் அவைகளை விவாதிப்பது பொருத்தமானதல்ல.

சென்னை மாநகராட்சி ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. அதற்கு மதிப்பளித்து, நாம் அங்கீகாரம் அளிக்கின்றோம். ஆகவே, மாநகராட்சி ஆணையாளருக்காக இதை நாம் செய்யவில்லை.

அடுத்து, மாநகராட்சி மன்ற ஆணையாளராக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடுவதா, ஐ.எ.எஸ். அல்லாதவர்களைப் போடுவதா என்பதுபற்றியும் கருத்து தெரிவிக்கப்பட்டது ஐ.ஏ.எஸ். அல்லாதவர்களும் ஆணையர்களாக இருந்திருக்கிறார்கள். திரு. ஷெனாய், திரு. சுப்பராயன், திரு. நரசிம்மன் ஆகியவர்கள் எல்லாம் ஐ.ஏ.எஸ். இல்லை. ஆகவே இதுபற்றியும் இரண்டுவித அபிப்பிராயம் தான் இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போடுவதைவிட அங்கேயிருக்கிற பிரச்சினைகளை ஆராய்ந்து. நன்கு அறிந்திருக்கக்கூடியவர் ஆணையராக இருப்பது நிர்வாகத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். அதுவும் மாநகராட்சி மன்ற நிர்வாகத்தை புரிந்துகொள்வது மிகவும் எளிதான ஒன்று அல்ல. ஆறு மாதம் இருந்தால்தான் கொஞ்சம் புரிபடும். ஆகவே அங்கே இருந்து அனுபவம் பெற்ற ஒருவர் ஆணையராக வருவது மிகவும் நல்லதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. அதுவும் இப்போது இருக்கிற ஆணையர் பரவலாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற, பாராட்டப்பெறுகிற ஒருவராக இருப்பதால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி பிரச்சினை இல்லை.



மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். எஸ். குறிப்பிட்டது போல ஏற்கனவே குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு வைக்கப் பட்டிருக்கிற பட்டியல் இந்தச் சட்டம் வந்தவுடன் என்ன ஆகும் என்பது ஒரு கேள்வி. இதுபற்றி அவர் ஒரு திருத்தம் கூடக் கொடுத்துள்ளார்கள். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் உள்ளவர்களில் நியமனம் செய்யப்பட்டவர்கள் போக பாக்கியுள்ளவர்கள் பெயர்கள் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அமலுக்கு வந்த அன்று கான்சலாகிவிடும். அதுதான் நிலைமை. ஆணையர் அந்தப் பட்டியலில் உள்ளவர்களையே தேர்ந்தெடுக்கவும் செய்யலாம், தேர்ந்தெடுக்காமலும்விடலாம்.

ஏற்கனவே இருந்த குழுவினர் கூட ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறபோது கூட அந்த அந்தப் பதவிகளுக்காக விதிக்கப்பட்டிருக்கிற படிப்பு, திறன் ஆகியவைபற்றிய விதிகளுக்கு உட்பட்டே தேர்ந்தெடுக்கவேண்டும். அப்படி மீறி தேர்ந்தெடுத்திருந்தால் அவர்களை நியமிக்கக்கூடாது என்று அரசாங்கத்திற்கு அறிவிக்க ஆணையருக்கு உரிமை இருந்திருக்கிறது. கவுன்சிலுக்கே உரிமை இருந்திருக்கிறது.

இப்போதும் நகராட்சி மன்றம் இதுபோன்ற குழு தேவையில்லை, ஆணையரே நியமிக்கலாம் என்பதாக ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருப்பதனால்தான் இந்தத் திருத்தச் சட்டம் வருகிறது. இதன் காரணமாக விதிகளை மீறி ஆணையர்

தம் இஷ்டப்படி எவரையும் நியமனம் செய்துவிடவும் முடியாது. கவுன்சிலில் எல்லாக் கட்சியினர்களும் இருக்கிறார்கள். அப்படி அவர் யாரையாவது நியமனம் செய்தாலும் கவுன்சிலில் அதைப் பற்றி விவாதிக்க இடமிருக்கிறது. அரசாங்கத்திற்கும் அதைப் பற்றித் தெரிவிக்க சந்தர்ப்பம் இருக்கிறது. இப்போது மாநகராட்சிமன்ற ஆணையர் 3-வது, 4-வது பிரிவினரைத்தான் தேர்ந்தெடுக்கலாம். மதுரை மாநகராட்சியில் உள்ளதுபோல, திரு. பாலசுந்தரம் கூறியதுபோன்ற ஆணையர் இவர்களையும் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜில் இருந்து லிஸ்ட் கால்பார் பண்ணி நியமிக்க வேண்டும் என்பதாக பை லாஸ்—விதிமுறைகள் போடும்போது சேர்க்கலாம். இந்தச் சட்டத்தின் கீழ் விதிமுறைகளைக் கூட கவுன்சில்தான் ஏற்படுத்தவேண்டும். அவை அரசாங்கத்தின் சம்மதத்திற்கு வரும்—ஆகவே இந்த விதிமுறைகளில் இதுபோல ஆணையர் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜில் இருந்து லிஸ்டை கால்பார் பண்ணி அதில் இருந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்று செய்துவிடலாம்.

அடுத்து மாநகராட்சிப் பணியாளர்களை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமே தேர்ந்தெடுக்கச் செய்யலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. இப்படிச் செய்வதற்காக 1965-ல் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. மாநகராட்சி மன்றத்தார் அதை எதிர்த்தார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சட்டப்படி ஆட்களைத் தேர்ந்தெடுத்து லிஸ்டும் அனுப்பினார்கள். அதை லிஸ்டில் உள்ளவர்களை நியமனம் செய்யவேண்டியது மாநகராட்சி ஆகையால் அவர்கள் அந்த லிஸ்டில் உள்ளவர்களை நியமனம் செய்யாது இருந்தார்கள். இதுபற்றிய தகராறு காரணமாக பேச்சுவார்த்தைகள் 1967 வரை நடந்தது. அந்த நேரத்தில் பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ரிட் போட்டார்கள். அதன் காரணமாக 1968 வரை ஒன்றும் செய்ய முடியாது இருந்தது. அதன் பிறகு தான் 1968 இல் சட்டமே திருத்தப்பட்டது. 94, 95 வது பிரிவுகள் ரிப்பீல் பண்ணப்பட்டன.

That the provision shall be deemed never to have been enacted.

என்பதாக அழுத்தந்திருத்தமாக கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. இப்போதும் நாம் ஒன்றும் சொல்ல



வில்லை. மாநகராட்சியில் இந்தக் குழு வேண்டாம், ஆணையரே நியமிக்கலாம் என்பதாக ஏகமனதாகத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திருத்தச் சட்டம் வந்திருப்பதனால் இதில் சங்கடங்கள் எதுவும் ஏற்படவில்லை.

1. ஏ, பி பிரிவுகளைப் பொறுத்தவரையில் அரசாங்கமே நியமிக்க வேண்டும் என்று இருந்தது. அதுவேண்டாம் மன்றத்தின் நியமனத்தை அரசாங்கம் அங்கீகரிக்கும்படியாக இருந்தால் போதும் என்றார்கள், அதை ஏற்கவில்லை, அரசாங்கமே நியமிக்கும் என்பது இருக்கிறது. அடுத்த பிரிவைத்தான் மாநகராட்சி மன்றம் நிறைவேற்றி, அரசாங்கம் அங்கீகரிக்கும் என்று இருக்கிறது. இதில் எந்தவிதமான சங்கடங்களும் ஏற்பட வழியில்லை, ஆகவே இதை நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : The Hon. Minister said that the Madras Public Service Commission was already seized of the matter, that the matter went to the Court then, etc. My argument is, we have given to the Public Service Commission the right to appoint. Why should that convention be revised all of a sudden? Let us take the original stand and let the entire appointments, be made by Public Service Commission? Will that not be proper?

Whenever in future we appoint an I.A.S. Officer, will it not be better for the arguments advanced by the Hon. Minister himself, to have him for 2 or 3 years there in the Corporation?

These are the two points on which I would like the Hon. Minister to give clarification.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சர்வீஸ் கமிஷன் மூலம் தான் நியமனம் செய்யவேண்டும் என்பதாக 1965 இல் சட்டம் கொண்டுவரப்பட்டு அதை நகராட்சி மன்றம் ஏற்கவில்லை, அதன்காரணமாக சர்வீஸ் கமிஷன் லிஸ்டில் உள்ளவர்களை நியமனம் செய்யாமலே இருந்தார்கள் என்பதைச் சொன்னேன். மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்தவரை ஆட்களை நியமனம் செய்துகொள்ளக்கூடிய அதிகாரம் அவர்களிடமே தான் இருக்கிறது. அவர்களுடைய கருத்துக்கு ஏற்பத்தான் நாமும் ஆட்களை விதிமுறைகளுக்குட்பட்டு, முறையாகத் தேர்ந்தெடுக்கக்கூடிய வகையில் சட்டத்தை அமைத்துக்கொடுக்க வேண்டும். நாம்

சொல்வதை அவர்கள் ஏற்காது, அவர்கள் சொல்வதை நாம் ஏற் காது போவது முன்னே குறிப்பிட்டபடி வீண் சங்கடங்களுக்குத் தான் இடமளிக்கும். இப்போது அவர்களது வேண்டுகோளுக் கிணக்கமாக இந்தச் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக் கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

DR H. V. HANDE: The original stand was that Fublic Service Commission should make the recruitment. That was a good suggestion. That was later on revised. Why not we stick to that old stand? That is my question.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சங்கடங்கள் இருக்கின்றன என்று அவர்கள் கூறுகிற காரணத்தினாலும் மாநகராட்சி மன்றமே அதை முழுவதும் எடுத்துக் கொள்ளவில்லை யென்ற காரணத்தினாலும் அந்த அளவுக்குப் போகவில்லை. நாம் அதை வற்புறுத்தவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Since the Corporation is an elected body, I think their wishes should be respected and I am glad Government had respected it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"1972-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முன் வைக்கப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, பிரிவுவாரியாக சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

*Clause 2.*

MR. SPEAKER: The question is—

"That clause 2 do stand part of the Bill".

THIRU J. JAMES: Sir, I move the following amendment:

In the proposed clause (i) of sub-section (3) of section 85 of the Proincipal Act, for the words "the Commissioner" the words "the Public Service Commission" shall ...





**The amendment was duly seconded.**

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the assurance given by the Hon. Minister, I withdraw my amendment.

MR SPEAKER: The amendment of Thiru K. M. Subramaniam is not moved.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, எனது திருத்தத்தை ஆதரித்து, இங்கு, ஏற்கனவே பல அங்கத்தினர்கள் உரையாற்றி னார்கள். எனவே, எனது திருத்தமும் இப்பொழுது வந்திருக்கிற மசோதாவையொட்டி, இன்னும் ஒரு படி முன்னதாக இந்த மசோதா அமையவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தவேண்டிய அவசியத்திற்குத்தான் இந்த திருத்தத்தை நான் கொண்டு வந் திருக்கிறேன். இப்பொழுது இந்த அவையின்முன் வைக்கப்பட் டிருக்கிற மசோதாகூட, நண்பர் கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் இதற்கு முன்னதாக ஒரு மசோதாவின் மீது உரைத்த கருத்தை ஒட்டித்தான் வந்திருக்கிறது. ஆக, இப்பொழுது நான் கொடுத் திருக்கிற திருத்தம் கூட, இப்பொழுது இருக்கிற மசோதாவுக்கும் இன்னும் ஒரு புரொகிரசிப் ஸ்டேப் ஆக இருக்கும் என்ற அடிப் படையில், இப்பொழுது இல்லையென்று சொன்னாலும் கூட, வரு கின்ற காலத்தில் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல. அனு பவத்தையொட்டி, இந்த திருத்தத்தைக் கூட அரசு ஏற்கக் கூடிய சூழ்நிலை வரும் என்று எண்ணுகிறேன்.

அதோடு கூட, இன்றையதினம் அமைச்சர் அவர்கள் ஒன்று கூறினார்கள். இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்வதில் சில கஷ் டங்கள் இருக்கின்றன. மாநகராட்சி மன்றமானது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நியமனத்தை எதிர்த்தது. ஆகவே தான் 1965-ல் நிறை வேற்றிய சட்டத்தை ரத்து செய்வதற்கான சூழ்நிலை உருவானது என்று கூறினார்கள். ஆனால் இன்றைய நிலையில், மாநகராட்சி மன்றமே அவர்கள், தாங்களாக முன் வந்து தங்களுக்கு அளிக்கப் பட்ட உரிமையை வேண்டாமென்று சொல்லி, கமிஷனரே அந்த அதிகாரத்தை வைத்துக்கொள்ளட்டும் என்று கூறி இருக்கிறார்கள். ஆக. இனிமேலாவது, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நியமனம் செய்ய வேண்டுமென்ற கருத்தை அரசு தெரிவித்தால், நிச்சயமாக மாநகராட்சிமன்றம் விருப்பக் குறைவாக இருக்காது என்று எண்ணுகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இன்றிருக்கிற சூழ்நிலையில், மெட்ராஸ் கார்ப்பரேஷன் இந்தக் கருத்தை முன் வைத்து, அரசாங்கம் இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்கியது போல நமது மாநிலத்திலேயுள்ள பல்வேறு நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் கூட தற்போது இருக்கிற சூழ்நிலையில் அவர்களுக்கு இந்த நியமனங்களைச் செய்வதில் இருக்கிற சிரமங்களை ஒழிப்பதற்காக இந்த பாரத்தை, ஒரு பாடிக்கு, அதாவது பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்ற குழுக்களுக்குக் கொடுப்பது என்ற கருத்தை, உணர்வார்கள் என்று எண்ணுகிறேன். ஆகவே, இப்பொழுதிருக்கிற சூழ்நிலையில் கார்ப்பரேஷன் கமிஷனருக்கு இந்த அனுமதியைக் கொடுத்தது போல் நான் கூறிய கருத்தை ஏற்று இதற்குப் பதிலாக, பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு அல்லது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அமைத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள நகராட்சி மன்றங்களுக்கும் பேரூராட்சி மன்றங்களுக்கும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் தேவையான நியமனங்களை அந்த மாவட்ட பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வழியாகச் செய்வதற்கு இந்த திருத்தம் உதவியாக இருக்கும் என்று கூறி, இதுபற்றி அமைச்சர் அவர்கள் கருத்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முன்கூட்டியே அதுபற்றி குறிப்பிட்டேன். சாதாரணமாக, உள்ளாட்சி மன்றங்களுக்கு நாம் அதிகாரங்கள் கொடுத்திருக்கிறோம். கொடுத்த அதிகாரத்தை நாமாக எடுப்பது அவ்வளவு முறையாகாது. மதுரை மாநகராட்சி மன்றத்திலே வேலைக்கு நியமிக்க அந்த குழு தனியாக இயங்கி வருகிறது. அதே மாதிரி சென்னை மாநகராட்சியிலும் இயங்கி வந்தது. அவர்களாகப் பார்த்து அந்த அதிகாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதன் காரணமாக, நாம் ஏற்றுக்கொள்கிறோமே தவிர, இந்தத் தீர்மானத்தை அவர்கள் ஏகமனதாக நிறைவேற்றியிருக்காவிட்டால், நாமாக வற்புறுத்திக் கொண்டு வரமுடியாது, கொண்டு வரப்படவில்லை. பொதுப் பணித் தேர்வுக் கழகம் மூலமாக நியமிக்கவேண்டுமென்று நாமே அவர்கள் மீது இந்த கருத்தை திணிப்பது என்பது அவ்வளவு முறையாகாது. 'எல்லா





நகராட்சி மன்றங்களும், ஏகமனதாக ஒரு தீர்மானம் இயற்றி, இதைப் 'பொதுப் பணிக் கழகத்திற்கு கொடுக்கலாம் என்று சொன்னால், அப்பொழுது அதைப் பரிசீலிக்கலாம்.

இதுபற்றி ஏற்கனவே அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்தது. கொண்டு வந்த சட்டம் 1965-லிருந்து, 1968-வரை தள்ளிப்போடப்பட்ட வரலாற்றை நான் கூறினேன். 1965-லே சட்டம் வந்தது. 1966-லே ரெகுலேஷன்ஸ் கொண்டு வந்தார்கள். பொதுப் பணிக் கழகத்தினால் அனுப்பப்பட்ட பட்டியலை ஏற்றுக் கொள்ளாமல், அரசாங்கத்தோடு கடிதப்போக்குவரத்து வைத்து அதை நிறுத்தினார்கள். அதற்குப் பிறகு ரிட் பைல் பண்ணி, கோர்ட்டுக்குப் போனார்கள். மறுபடியும் திருத்தம் இல்லாத அளவுக்கு மிகவும் அழுத்தம் திருத்தமாக provision was made in the amending Act and the provision should be deemed to have never been enacted. என்ற அளவுக்கு 1968-லே கொண்டு வரப்பட்டது. ஆக, மாநகராட்சி மன்றத்தினுடைய கருத்து அறிந்து செய்வதுதான் முறை என்ற முறையிலே தான் தமிழக அரசின் சார்பிலே முன்னாலே முயன்றுபார்த்து கைவிடப்பட்ட நிலையில் மீண்டும் நாமாகவே, அதை வற்புறுத்துவது முறையாகாது. எனவே, இப்பொழுது அவர்கள் விரும்புகிற மாற்றத்தை மட்டும், சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு மட்டும் நாம் செய்கிறோம். ஆகவே, மற்றைய நகராட்சிகளுக்கு அதைக் கொண்டு வரவில்லை. இப்பொழுது இதை ஏற்றுக்கொள்வதுதான் பொருத்தமுடையதாக இருக்கும், அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்றதாக இருக்கும். இந்த நிலையில், உறுப்பினர் அவர்கள் கொடுத்த திருத்தத்தை திரும்பப் பெற்றுக்கொள்வது இப்பொழுது நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

The amendment of Thiru James was, by leave, withdrawn.

Clause 2 was put and carried.

Clauses 3 and 4 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த)

சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/72) நிறைவேற்றப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**தீர்மானம்** பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் வேண்டுகோள் விடவிரும்புகிறேன். இன்றைய நிகழ்ச்சி நிரலில் 8 மசோதாக்கள் இருக்கின்றன. இன்னும் 5 எடுக்கப்பட வேண்டியுள்ளன. மணி 12½ ஆகிறது. அதல்லாமல் நாளை தனியார் அலுவல் நாளாக இருக்கிறது. இந்த மன்றம் 25-ம் தேதிவரையில் நிகழ்ச்சி நிரலை வைத்திருக்கிறது. இன்னும் ஏறத்தாழ 8 மசோதாக்கள் இருக்கின்ற காரணத்தினால், இப்பொழுதிருப்பவை எல்லாம் 1½ மணிக்குள் முடியுமா என்ற பெரிய சந்தேகம் இருக்கிற காரணத்தால், இன்று மாலை நிகழ்ச்சிகளை நடத்திக்கொள்ளலாமா, இரவு 7 மணிக்கு மேலாவது, நிகழ்ச்சிகளை நடத்திக்கொள்ளலாமா என்பதைப் பற்றியும் அல்லது 26-ம் தேதி வைத்துக்கொள்ளலாமா, அல்லது நாளைய தனியார் தினத்தை ஒத்திவைக்கலாமா என்றும் சொன்னால் அதற்கு கட்டுப்பட்டு நடப்போம் என்ற வகையில் கருத்துக்களைக் கோருகிறேன். ரெவின்யூ அமைச்சர் அவர்களுடைய மசோதாக்கள் தான் இருக்கின்றன. அவர்கள் ரொம்ப ஆவலாக இருக்கிறார் என்ற வகையிலே அதற்கு உதவுகிற வகையிலே 7 மணிக்கு மேல் 10 மணி வரையிலே வைத்துக்கொள்ளலாமா ? முதலமைச்சர் அவர்கள் எப்படி கருத்து தெரிவிக்கிறாரோ அதையொட்டி முடிவு எடுக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு நாம் எடுத்துக்கொள்ள இருக்கின்ற உத்தியோகச் சார்பற்ற மசோதாக்களை அடுத்த . . .

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தாங்களிடத்திலே நான் பல முறைகள் நேரிலேயும் சட்டமன்றத்திலேயும் இந்த விஷயத்தைப்பற்றி வற்புறுத்திக்கொண்டிருக்கிறேன். தனியார் அலுவல்களை வேறு ஒரு நாளைக்கு ஒத்திபோடுவது என்று சொல்கிறார்கள். அப்படிச் செய்தால். . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படி இருக்க வேண்டும் என்பது முடிவான கருத்தல்ல, யோசனைதான்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மசோதாக்களிலே பேசுவதற்கு பல உறுப்பினர்கள் ஆர்வத்தோடு இருக்கிறார்கள், ஆகவே சாயந்திரமாக அவற்றை வைத்துக்கொள்ளலாம். 25-ஆம் தேதிக்கு ஏற்கனவே சில மசோதாக்களை ஒதுக்கியிருக்கிறோம். இதைத் தவிர புதிதாக நேற்று தாக்கல் செய்த மசோதாக்கள் இருக்கின்றன, அவற்றை எந்த அளவுக்கு எடுத்துக்கொள்ளப்போகிறோம் என்ற நிலை வேறு இருக்கிறது. அவையெல்லாம் செலக்ட் கமிட்டிக்குப் போகின்ற மசோதாக்களாக இருந்தால் வெள்ளிக்கிழமைக்குள் முடித்துவிடமுடியும்.

There are two Bills, one on Education and another on Rent Control.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** ரெண்ட் கண்ட்ரோல் பில் 25-ஆம் தேதி எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. அந்த பில்லைப் பொறுத்த வரையில் சட்டப் பேரவை, மேலவையின் உறுப்பினர்களைக் கொண்ட கூட்டாய்வுக் குழுவுக்குப் போக இருக்கின்றது, எனவே அதிலே அதிகமான அளவிற்கு விவாதங்கள் இருக்காது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒரு நாளைக்கு இரண்டு பில்களுக்கு மேல் எடுக்கவேண்டாம் என்று சொல்வது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தங்கமணி அவர்கள்தான். ஆனால் அப்படி வைத்துக் கொள்கின்ற நிலையில் பேசுவதற்கு உறுப்பினர்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டு ஒரு நாள் 12-45 மணிக்கும் ஒரு நாள் 1 மணிக்கும் கூட்டம் முடிந்து ஏறக்குறைய ஒன்றே கால் மணி நேரம் வரையில் வீணாகப் போய் விட்டது. இவற்றையெல்லாம் அனுசரித்து தனி நபர் அலுவல்களை மாற்றியமைத்துக்கொண்டால் அவற்றை அடுத்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒரு நாளில் வைத்துக்கொண்டால்—ஏனென்றால் பல நேரங்களில் நாம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கிறோம்—மற்ற அலுவல்களை குறித்த நாளுக்குள் முடித்துவிட முடியும், அந்த வகையிலே திரு தங்கமணி அவர்கள் விட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்கள். திரு. தங்கமணி அவர்கள்

தான் இனி விட்டுக்கொடுக்க வேண்டும். திரு. தங்கமணி அவர்கள் விட்டுக்கொடுத்தால் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். எனவே திரு. தங்கமணி அவர்கள் இதற்கு அவர்களுடைய ஒப்புதலை அளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மௌனம் சம்மதம் என்று தான் கருதுகிறேன். ஆனால் அவை முன்னவர் அவர்கள் அதற் காக ஒரு தீர்மானம் கொண்டுவந்தாக வேண்டும். அதை நாளைக்குக் கொண்டுவர முடியாது, ஏனென்றால் நாளைக்கு என்ன நிகழ்ச்சிகள் என்று நிகழ்ச்சி நிரல் அனுப்பப்பட வேண்டும். எனவே இப்பொழுது அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவது தான் பொருத்தமானது என்று கருதுகிறேன். நாளைய தினம் என்ன நிகழ்ச்சிகள் என்று போட்டு அனுப்பிவிட்டு நாளைய தினம் 11 மணிக்கு நிகழ்ச்சி மாற்றம்பற்றிய தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் கொண்டுவருவது சரியாக இருக்காது. எனவே, இப்பொழுது அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து விடலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அப்படிச் செய்வதானால் ஏற்கனவே நாளைக்கு பிரைவேட் மெம்பர்ஸ் பிஸினஸ் என்னென்ன எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று போட்டிருக் கிறோமோ அவற்றையெல்லாம்—அந்த அஜன்டாவையே—அடுத்த பிரைவேட் மெம்பர்ஸ் பிஸினஸ் நாளில் எடுத்துக்கொள்ளவேண்டு மென்று போட வேண்டும். நாளைக்கு பில்களை எடுத்துக்கொண் டால், அவற்றை முடிப்பதற்கு இரண்டு மணி நேரத்திற்கு மேல் ஆகாது, நாளைக்கு ஆவணி அவிட்டம் என்று சொல்கிறார்கள், ஆகவே நாளை சபை காலையில் 9 மணிக்குமேல் கூடுவதற்குப் பதி லாக காலை 10 மணிக்கு மேலாகக் கூடுவதாக வைத்துக்கொள்ள லாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, also there is Avani Avittam tomorrow and what is to be done may also be decided.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆவணி அவிட்டத்தைப்பற்றி மாண்புமிகு அம்மையார் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற அக்கறையை நான் அறிகிறேன். அவர்கள் மயிலாப்பூர் தொகுதி



அக்கறை காட்டுகிறார்கள்
உறுப்பினர். அந்த வாக்காளர்களுக்காக கம்யூனிஸ்ட்
என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் என்ன சம்பந்தம்
கட்சித் தலைவருக்கும் ஆவணி அவிட்டத்திற்கும் புரிந்து கொள்ள
அவர்களுக்கு உள்ள அக்கறையை நான் யாருக்குமே
முடியவில்லை. ஒருவரையும் பாதிக்காத முறையில் பணி
இடைஞ்சல் இல்லாத முறையில் பணியாளர்கள் நடைபெறும்
புரிவதற்குத் தகுந்த முறையிலே பணிகள்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5 அரசினர் தீர்மானங்கள்.

(அ) தனிநபர் தீர்மானங்களுக்குப் பதில் அரசினர் சட்ட
முன்வடிவுகளை எடுத்துக்கொள்வது குறித்து

தலைவர்
**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முன்மொழிகிறேன்—
அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை தீர்மானங்கள்
“ நாளை எடுக்கப்பட இருக்கிற தனி நபர் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.
அப்படியே இன்னொரு நாளைக்கு எடுத்துக் எடுத்துக்
நாளைக்கு அரசாங்கத் திருத்தச் சட்ட முன்வடிவுகள்
கொள்ளப்படவேண்டும் ”.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972–ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/72).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்ட முன்வடிவை* (தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைச் சட்டவரைவு எண். 30/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

---

*10-8-1972-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 ஆகஸ்ட் 23

இந்தச் சட்டவரைவை முன்மொழிந்து பேசுகையில், 1961-ஆம் ஆண்டில் மதுரையில் தொடக்கப்பள்ளிக் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்து அதனால் மாணவியர் பலர் மடிந்தது மதிப்பிற்குரிய பேரவை உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கலாம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய விபத்து நிகழாவண்ணம் தடுப்பதன் பொருட்டும், பொதுக் கட்டடங்கள் அனைத்தின் கட்டுமானமும் உறுதியாக உள்ளனவா என்பதைக் கவனத்துடன் பார்த்துக் கொள்வதன் பொருட்டும், தமிழ்நாடு 1965-ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள், வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் எண். 13/1965) நிறைவேற்றப்பட்டது. இது 1966 ஏப்ரல் 1-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டத்தைச் செயல்படுத்துவதால் தொல்லை ஏற்படும் என்று காரணம் காட்டி, இச்சட்டத்தை ரத்து செய்யவாவது வேண்டும் அல்லது இச்சட்டத்தின் ஆளுகையினின்றும் தமக்கு விதி விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, தனி நபர்களிடமிருந்தும், வணிகக் கழகங்கள் முதலிய பொது நிறுவனங்களிடமிருந்தும் பல முறையீடுகள் அரசுக்குக் கிடைத்தன.

இவ்வாறு, இம்முறையீடுகளை ஊன்றிக் கவனமுடன் பரிசீலித்துப் பார்த்த பிறகு, கீழ்க்காணும் சில வகையான பொதுக்கட்டடங்களுக்குத் தற்காலிகமாக விதிவிலக்கு அளித்தது, அவையாவன— 11.61 சதுர மீட்டர் தரைப் பரப்புடைய சிறு கடைகள், ரோமன் கத்தோலிக்க மடாலயங்கள், தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் வரும் தொழிற்சாலைக் கட்டடங்கள், திரைப்பட மாளிகைகள், கோயில்கள், மசூதிகள், மாதா கோவில்கள், சீக்கியர் ஆலயங்கள், சங்கங்கள் அல்லது குழுக்கள் பயன்படுத்தும் 250 சதுர அடி பரப்புடைய கட்டடங்கள், மருத்துவர் இல்லத்தின் சிகிச்சை அறைகள், இராணுவப் பாதுகாப்பு அறிவியல் நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள், படைக்கலத் தொழிற்சாலைகள் குன்னூரில் உள்ள மலைத் தோட்டக் கட்டடங்கள் ஆகியவை. மேலே சொல்லியவை அல்லாத ஏனைய கட்டடங்கள் அவசியமான நேர்வுகளில் உரிமத்துக்கான விண்ணப்பம் செய்துகொள்வதினின்றும், அவசியமான இடங்களில் இச்சட்டத்தின் கீழ் உரிமக் கட்டணங்கள் செலுத்துவதனின்றும் 31—3—1972 வரை அவ்வப்போது விலக்கு அளிக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் நிறைவேற்றப்



1972 ஆகஸ்ட் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பட்ட நாள் முதல் நடைமுறையில் இது செயல்படுத்தப்படவில்லை. வணிகச் சமூகத்தினரும், ஏனைய பொது மக்களும், ( i ) இதற்கென உரிமம் எடுக்க வேண்டும் என்று சொல்வதால் தங்களுக்குத் தொல்லை உண்டாகும் என்றும் மேற்சொன்ன காரியத்திற்காக, மாவட்ட நகராட்சிகள் சட்டம், ஊராட்சிகள் சட்டம், நகரமைப்புச் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம், கல்விச் சட்டம் போன்ற ஏனைய சட்டங்களில் போதுமான விதித்துறை உள்ளது என்றும் கூறி, இச்சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்று வேண்டுகோளை இடைவிடாமல் வற்புறுத்தியும் வந்துள்ளனர்.

இது குறித்து வந்துள்ள பல்வேறு முறையீடுகளைக் கருத்தில் கொண்டு, இச்சட்டத்தை ரத்து செய்வதற்கான வேண்டுகோளும், ஏனைய சட்டங்களில் போதுமான விதித்துறை உள்ளதென்றும் கருத்தும், மேற்சொன்ன பல்வேறு சட்டங்களிலும், பொதுமக்கள் பொழுதுபோக்குமிடங்கள் சட்டம், மாநகரக் காவலர் சட்டம் போன்ற இன்னும் சில சட்டங்களிலும் உள்ள விதித்துறைகளை யொட்டிப் பரிசிலித்துப் பார்க்கப்பட்டன. இவற்றை விரிவாகப் பரிசிலித்துப் பார்த்த பிறகு, மேலே சொல்லிய சட்டம் எதிலும் பொதுக் கட்டடக் கட்டுமானம் உறுதியாக உள்ளதா என்பதைக் கவனித்துக் கொள்ள விதித்துறை எதுவும் இல்லை என்பதால் இச்சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை ஒப்புக் கொள்ளக்கூடாது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, விண்ணப்பம் செய்து கொள்வதற்கான கால அளவை, 1972 ஏப்ரல் 1-லிருந்து மேலும் ஆறு திங்களுக்கு நீட்டிப்பதென்றும், இதற்கிடையில், இன்றியமையாத கட்டட வகைகளை மட்டுமே இச்சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரும் விதத்தில், பொதுக் கட்டடங்கள் எனும் சொற்றொடருக்கான பொருள் விளக்கத்தைத் தக்கபடி திருத்தலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆகவே, 100 சதுர மீட்டருக்கு மேல் தரைப் பரப்புடைய கட்டடங்கள் மட்டுமே இச்சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப்படும் விதத்தில் "கட்டிடம்", 'பொதுக் கட்டடம்' என்னும் சொற்றொடர்களுக்கான பொருள் விளக்கங்களைத் திருத்தக் கருதியுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 ஆகஸ்ட் 23

இச்சட்ட வரைவு, மேற்சொன்ன முடிவைச் செயல்படுத்த விழைகிறது. இந்தச் சட்ட வரைவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு இப்பேரவையினைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர்களே, இந்த மசோதாவின் மீது ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, பொதுக் கட்டடங்கள் என்ன முறையிலே அமைந்திருக்க வேண்டும், அதன் உறுதித் தன்மை எப்படி இருக்க வேண்டும் என்று இரண்டு திருத்தங்களை இந்தச் சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். பப்ளிக் பில்டிங் என்றால் என்ன இருக்கிறது என்று பல தொகுப்புகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக இம்மாதிரியான பொதுக் கட்டடங்கள் உறுதியாகவும், நல்ல முறையில் அமைந்துள்ள தன்மையிலேயும் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்வதற்குப் பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மதுரையில் ஏற்பட்ட ஒரு பள்ளி விபத்தின் காரணமாக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு அமல் நடத்தப்பட்டு வருகிறது. இதை அமல் நடத்துவதில் பல சிக்கல்களும், இடைஞ்சல்களும் இருக்கின்றன என்று கண்டறிந்து திருத்தங்கள் இந்த அவை முன் வந்திருக்கின்றன.

பொதுவாக நான் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுக்கட்டிடங்கள் உறுதித் தன்மை படைத்தவைகளாக இருக்க வேண்டுமென்பதை யாராலும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் சிறு சிறு நிறுவனங்கள், சிறு கடைகள் போன்றவைகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு மனுக்கள் வந்திருக்கின்றன. அதை அனுதாபத்துடன் கவனித்து வழிவகைகள் செய்திருக்கிறது. ஆனால் நாகர்கோவிலில் ஒரு கட்டிடம் இருக்கிறது. எஸ்டிமேட் கமிட்டி நாகர்கோவிலுக்கு விஜயம் செய்தபொழுது வெட்டர்னரி ஆஸ்பத்திரி பழுதடைந்த கட்டிடத்தில் இருக்கிறது, அதை உடனடியாக மாற்ற வேண்டுமென்ற கருத்தை அங்கு வந்த கமிட்டி அங்கத்தினர்கள் அத்தனைபேரும் ஏகோபித்த கருத்தைக் கூறினார்கள். ஆனால் இன்றைக்கும் அது பழுதடைந்த விழுந்து விடக்கூடிய நிலையில் அப்படியே இருக்கிறது. யாருடைய தலையிலே விழும் என்ற ஐயத்தில் இருக்கிறது. அங்கிருக்கும் ஊழியர்



1972 ஆகஸ்ட் 23] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

களெல்லாம் அந்தப் பதட்ட நிலையில் இருக்கிறார்கள். இம்மாதிரி சட்டங்கள் செய்யும்பொழுது அரசாங்கம் நிர்வாகத்தில் இருக்கும் அந்தக் கட்டடங்கள் பழுதடைந்து இருந்தால் அதைப் பிரித்து மாற்றுவதில் காலதாமதம் ஏற்படக்கூடாது என்ற ஆலோசனையைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பள்ளிக்கூடங்கள், நர்சிங் ஹோம்ஸ், கிளினிக் பற்றியெல்லாம் இந்தச் சட்டத்திலே கூறப்பட்டிருக்கிறது. டியுட்டோரியல் கல்லூரியைப் பற்றி, டியுட்டோரியல் ஸ்கூலைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவை நல்ல உறுதி படைத்த தன்மையில் இருக்க வேண்டுமென்பதை யாராலும் ஆட்சேபிக்க முடியாது. ஆகவே, இந்தத் திருத்தத்தின் அடிப்படையிலே உள்ள சட்டச் சிக்கலையெல்லாம் அகற்றுவதற்கு உகந்த வழிவகைகளைக் கண்டுள்ளது. இதில் இன்னும் சங்கடங்கள் இருந்தால் அதை சட்ட இலாக்கா ஆய்வு செய்து அதற்கு வேண்டிய திருத்தங்களைக் கொண்டுவருவது பொருத்தமாய் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இம்மாதிரியாக அடிக்கடி 'பீஸ் மீல் அமெண்ட்மென்ட்ஸ்' வருவது நல்லது அல்ல. பொதுவாக இந்த மன்றத்தில் 'பீஸ் மீல் அமெண்ட்மென்ட்ஸ்' அதிகமாக வருவது விரும்பத் தக்கது அல்ல. எனவே இம்மாதிரியான குறைகளை அகற்ற வேண்டுமென்று கூறிக்கொண்டு இத்தோடு முடிக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த தமிழ்நாடு பப்ளிக் பில்டிங்ஸ் (லைசென்சிங்) சட்டத்தின் திருத்தத்தைப் பொதுவாக நான் ஆதரிக்கும் வரையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதுமாதிரி, சில வர்த்தக நிறுவனங்கள் வற்புறுத்தியதற்கு இடம் கொடுக்காமல் மீண்டும் இந்த லைசென்சிங் முறை இருக்க வேண்டும், லைசென்ஸ் உறுதியாக இருக்க வேண்டுமென்ற நிலையை எடுத்தது பாராட்டத் தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதில் 100 சதுர மீட்டர் உள்ள கட்டடங்களுக்கு விதிவிலக்கும், அதற்குமேல் இருக்கும் கட்டடங்களுக்கு விதிவிலக்கு இல்லை என்றும் இருக்கும் நிலை வரவேற்கத் தக்கது. குறிப்பாக பள்ளிகள், ஆஸ்பத்திரிகள்,

ஹாஸ்டல்கள், லைப்ரரி, லாட்ஜிங் ஹவுஸ், சவுல்ட்ரி போன்று பொதுக் கட்டடங்களாக இருக்கும் இவைகளையெல்லாம் பொதுக் கட்டடங்களாக ஏற்பாடு செய்திருப்பது வரவேற்கத் தக்கது. ஆனால் அதே நேரத்தில் சில விதிவிலக்குகளைக் கொடுத்திருக்கிறோம்.

கோயில், மசூதி போன்ற இப்படிப்பட்ட இடங்களுக்கு விதி விலக்கு என்று இருக்கிறது. எந்த முறையிலேயும் கட்டடங்கள் இருக்கலாம் என்ற நிலை ஏற்பட்டால் அங்கே ஆபத்து இருக்கத் தான் செய்யும். மணிநகரத்தில் சரஸ்வதி பாடசாலை கட்டடம் இடிந்து விழுந்தபொழுது, அந்தப் பிள்ளைகள் இறந்த நேரத்தில் நான் அங்கு இருந்திருக்கிறேன். பலபேர்களுடைய உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. மகா கோரமாக இருந்தது. அதை யொட்டித்தான் இந்தச் சட்டம் வந்தது. நாளைக்கு கோயில், மசூதிகள் மோசமாக இருந்து கோயிலுக்குப் போகும் இடங்களில் ஆபத்து வருகிறது என்றால் அதிலிருந்து பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு இருக்க வேண்டும். ஆகவே அம்மாதிரி இடங்களுக்குக் கொடுத்திருக்கும் விதிவிலக்கு இருக்கிறதே அவைகளை உங்களுடைய சர்க்காரின் கண்காணிப்பின் மூலம் கவனிக்க முடியும் என்ற நிலையிருந்தால் சரியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, இந்த நிர்ப்பந்தங்களுக்கு இடம் கொடுக்காமல் உறுதியாக நின்றது பாராட்டத் தக்கது என்று சொல்லி பொதுவாக இந்தத் திருத்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, இந்த பொதுக் கட்டடங்களுக்கு லைசன்ஸ் வாங்க வேண்டுமென்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததன் காரணம் என்ன என்பதை கல்வியமைச்சரவர்கள் விளக்கிக் கூறினார்கள். மதுரையில் பள்ளிக் கட்டடம் இடிந்து விழுந்து பச்சிளம் குழந்தைகள் இறந்து போனார்கள். பொதுமக்கள் சேரும் இடங்களையெல்லாம் நம்முடைய கட்டு திட்டத்தில் கொண்டு வர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் கொண்டு வருகிறோம். ஆனால் அதே சமயத்தில் சிறுசிறு கடை வைத்திருக்கக் கூடியவர்கள் இதிலே மாட்டிக்கொண்டு எக்கச் சக்கமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொல்லைகளுக்கு ஆளாகிறோம், இது தேவையில்லை, தயவு செய்து விலக்கு கொடுக்க





வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். நல்ல வேளையாக அந்த விலக்கை இன்றைக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

நான் கூற விரும்புவது என்னவென்றால், இந்தச் சட்டம் ஏதோ சட்டப் புத்தகத்தில் ஒரு சட்டமாக இருக்கிறதே தவிர எங்கேயாவது ஒழுங்காக நிர்வகிக்கப்படவில்லை என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு செய்யப்பட்டிருக்கிறதா? அரசாங்கம் நடத்தும் பள்ளிக்கூடங்கள், கார்ப்பரேஷன் நடத்தும் பள்ளிகள், அரசாங்கம் நடத்தும் ஆஸ்பத்திரிகள், கார்ப்பரேஷன் நடத்தும் ஆஸ்பத்திரிகளையெல்லாம் பார்க்க வேண்டும். இதற்காக நீங்கள் வெளியே சென்று பார்க்க வேண்டாம், சென்னை நகரத்திலேயே அமைச்சர்கள் வந்து பார்த்தால் இவைகளெல்லாம் இந்தக் சட்டத்தின்படி செய்தால் அவைகள் இருக்குமா என்ற கேள்விக்குப் பதில் கூற வேண்டிய நிலைமை வரும். எத்தனையோ கார்ப்பரேஷன் பள்ளிகளின் கட்டடங்கள் பழுதடைந்து எந்த நேரத்தில் யார் தலையில் விழுமோ என்ற நிலையில் இன்றைக்கும் இருக்கிறது. அப்படி எத்தனையோ ஆஸ்பத்திரிகளைக் காட்ட முடியும். இந்தச் சட்டத்தில் கிளினிக்குகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. சிறு சிறு மருந்தகங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் இவைகளெல்லாம் சட்டத்தில் இருந்தால் மட்டும் போதாது. அவைகளை அமல் நடத்த வேண்டும். நகராண்மைக் கழகச் சட்டத்தில் ஒரு செக்ஷன் இருக்கிறது. Dilapidated building என்றால் நோட்டீஸ் கொடுத்து உடனே இடித்து கட்ட வேண்டுமென்று சொல்லும் நிலை இருக்கிறது. ஆனால் அது அமல் செய்யப்படுகிறதா? பள்ளிக் கூடங்கள் எப்படிப்பட்ட கட்டடங்களில் இருக்கின்றன என்பதைப் பார்க்கும்பொழுது மிகவும் பயங்கரமான நிலையிலிருக்கிறது. ஏன் இதை நான் கூறுகிறேன் என்றால் பல விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடப்பதைப் பார்க்கிறோம்.

நான் ரூல் 42-ன் கீழ் ஒரு மோஷனை, அட்ஜர்ன்மெண்ட் மோஷனைக் கொடுத்தேன். திருப்பாய்த்துறையிலே உள்ள அந்தக் குடிலில் இருக்கின்ற பிள்ளைகள், ஆர்பனேஜஸ், அனாதைப் பிள்ளைகள் கட்டடம் கட்டும் வேலையில் ஈடுபட்டிருந்த நேரத்தில் மூன்று பேர்கள் இறந்து விட்டார்கள். பிள்ளைகளை விட்டுக்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 ஆகஸ்ட் 23

கட்டடம் கட்டச் சொன்னால் அந்தக் கட்டடம் எத்தனை நாட்களுக்கு நிற்கும்? கட்டடத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற அனுபவஸ்தர்கள் கட்டுகின்ற கட்டடங்களை சில சமயங்களில் சாமான்கள் சரியாக சேர்க்கப்படாமல் இருந்தால் எத்தனை நாட்களுக்கு நிற்கின்றன? அப்படியிருக்கையில் சிறுசிறு பிள்ளைகளை விட்டு கட்டச் சொல்கிற கொடுமை இருக்கிறது என்றால் இதை நான் கல்வியமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோன்று கொடைக்கானலில் ஒரு பள்ளியில் மாணவர்கள் கட்டடம் கட்டும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டு அப்பொழுது மண், மேலே விழுந்து ஒருவன் செத்துவிட்டான் என்று அவனுடைய தந்தை மனமுருகி எழுதி இருக்கிறார். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் சட்டத்தைப் போடுவது பெரிதல்ல, அந்தச் சட்டத்தைச் சரியாக அமல் நடத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நம்முடைய அரசாங்கம் நடத்துகின்ற கட்டடங்களிலே சரிவர மெயின்டனென்ஸ் இருக்காது என்ற குற்றச் சாட்டைச் சாட்ட விரும்புகிறேன். பி.டபிள்யு.டி. கட்டும் கட்டடங்களைப் பார்த்தால் கட்டிய பிறகு சரியாக மெயின்டனென்ஸ் அமைக்கவில்லை. கட்டடங்களைக் கட்டும்பொழுது எழிலகம் மாதிரி அழகாக, உறுதியாக கட்டினாலும் 10 வருஷங்களுக்குப் பாரமரிப்பு இல்லாமல் இருந்தால் அது பாழாய்ப் போன நிலையில் காட்சி அளிக்கும். எனவே, இப்படிப்பட்ட பொதுமக்கள் சேரும் ஹாஸ்டல்கள் போன்றவைகளைக் கண்காணிக்க வேண்டும்.

அரிஜன ஹாஸ்டல்களைப் போய்ப் பார்க்கவேண்டும். பேய் பங்களா மாதிரி ஹாஸ்டல்கள் இருக்கின்றன. பழைய கட்டடங்களுக்கு சுண்ணாம்பு அடிக்காமல் கெட்டுப் போயிருக்கின்றன. சுவர்களெல்லாம் பொலபொல என்று உதிர்ந்து விழும் நிலையில் உள்ள இடங்களில் அரிஜன் ஹாஸ்டல்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் ஸ்கூல்ஸ், ஹாஸ்பிடல்ஸ் போன்றவைகள் இருக்கின்றன. எனவே சட்டத்தில் இருக்கிறது, ஆனால் அதை அமல் செய்கிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. முதலில் தயவு செய்து சென்னையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.



1972 ஆகஸ்ட் 23] [திருமதி த. ந. அனந்தநாயகி]

கார்ப்பரேஷன் நல்ல எண்ணத்தில் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் ஓலை போடக்கூடாது, ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டு கட்டி வருகிறார்கள். இன்னும் சில கட்டடங்களுக்கு வாடகை குறைவாக இருக்கும் காரணத்தால் சொந்தக்காரர்கள் சுண்ணாம்பு அடிப்பதில்லை, பழுது பார்ப்பதில்லை. இந்தச் சட்டத்தின் மூலம் இவற்றை எல்லாம் நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும். லைசென்ஸ்தாரர்கள் திறமையாகக் கண்காணிக்க வேண்டுமென்று கூறப்பட வேண்டும். இந்த மசோதாவை வரவேற்று திறமையாக அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்

**திரு கே. எ. வகாப் :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கின்ற பொதுக் கட்டடங்கள், உரிமைகள் வழங்குதல் திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்கும் முகத்தான், பாராட்டுகின்ற முகத்தான் இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு சட்ட முன்வடிவை மக்கள் சமுதாயம் நிச்சயமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அதற்கு சில எதிர்ப்புகள் இருந்தன என்பதையெல்லாம் இந்த அரசாங்கம் பரிசீலனை செய்து இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகளுக்கு விதிவிலக்கு அளித்திருப்பதிலிருந்தே புரிந்து கொள்ளமுடியும். மதிப்பிற்குரிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகளுக்குக் கூட விதிவிலக்கு கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். அவை பக்தர்களால் நல்ல முறையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்ற காரணத்தால் இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்திருப்பது பொருத்தமானது என்பதைத் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு நாற்றுக்கணக்கான மக்கள் வந்து கூடுகின்ற காரணத்தாலும், நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற—நிர்வாகம் இல்லாத கட்டடங்களுக்கு வேண்டுமென்றால் இந்தச் சட்டத்தை அமல்படுத்தலாம்—தொழப்படுகின்ற இடங்களுக்கு விதிவிலக்கு அளித்திருப்பது பொருத்தமானது என்பதைக் கூறிக் கொள்ளுகிறேன்

[திரு கே. எ. வகாப்] [1972 ஆகஸ்ட் 23

வியாபாரிகள் போன்றவர்களுக்குப் பாதிக்கப்படக்கூடிய அபாயம் ஓரளவு நீங்கி இருக்கிறது. வியாபார ஸ்தாபனங்கள் நல்ல முறையில் கட்டடங்களில் உரிமம் பெற்று கட்டுவதற்கு முன்னால் திறமையான முறையில் கட்ட வேண்டுமென்று அறிக்கை கொடுப்பதோடு கட்டிய பிறகும் ஆண்டுக்காண்டு உரிமம் வழங்குகின்ற சாக்கை வைத்துக் கொண்டு தொல்லை கொடுக்காத அளவுக்குப் பாதுகாக்க வேண்டும். எந்தக் காரணத்திற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றித் தெளிவாகச் சொன்னார்கள். இளம் சிறார் படிக்கும் பள்ளிகூடக் கட்டடங்கள் எல்லாம் நல்ல முறையில் கட்டப்பட வேண்டும். பல பள்ளிக் கட்டடங்கள், மாநகராட்சிப் பள்ளிக் கட்டடங்கள் பழுது பார்க்கப்படாமலே இருக்கின்றன. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி உடனடியாக அந்தக் கட்டடங்களைப் பழுது பார்க்கச் செய்ய வேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக வைத்திய விடுதிக் கட்டடங்களும் பல பழுதடைந்திருக்கின்றன. அடையாற்றில் இருக்கக்கூடிய கான்சர் இன்ஸ்டிட்யூட்டுக்குச் சென்று பார்த்தால் எப்போது விழுமோ என்று சொல்லுகின்ற நிலையில் இருக்கின்றது. அதைப் பற்றி நான் அந்த டாக்டர்களிடம் கூடக் கேட்டேன். அரசாங்கத்திடமிருந்து உதவியை நாடியிருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். இப்படித் தனிப்பட்டவர்கள் நடத்தும் ஸ்தாபனக் கட்டடங்களும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அப்படிப்பட்டவர்களுக்கும் கூட நல்ல கட்டடங்கள் கட்டுவதற்கு வழி செய்ய வேண்டும்.

பொதுவாக இந்தச் சட்டத்தை வரவேற்று அதிகத் தொல்லைகள் வராத அளவுக்குக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட மசோதாவை உறுப்பினர்கள் வரவேற்று உரையாற்றினார்கள். அதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்



1972 ஆகஸ்ட் 23]

ஒரு பள்ளிக் கட்டடம் இடிந்து விழுந்ததன் காரணமாக அத்தகைய பொதுக் கட்டடங்கள் பாதுகாப்பான முறையில் வைக்கப்பட வேண்டுமென்பதற்காக 1965-ல் சட்டம் நிறைவேற்றப் பட்டது. அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் இருந்த பல சங்கடங்களின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப் படாமல் இருந்தது. அதை அறவே ரத்து செய்துவிட வேண்டுமென்ற கோரிக்கையும் இருந்தது. அந்த நிலைக்கு விட்டு விடக்கூடாது என்றுதான் இன்று திருத்தச் சட்டமாக வந்திருக்கிறது.

சாதாரண கடைக்காரர்களுக்கு, பொதுக் கட்டடங்கள் வைத்திருப்பவர்களுக்கு பாதகம் ஏற்படாத அளவுக்கு திருத்தச் சட்டமாக வந்திருக்கிறது. 100 சதுர மீட்டருக்கு உட்பட்ட கட்டடங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மிகக் குறைந்த அளவுதான் உரிமக் கட்டணம் வைக்கப்பட்டிருக்கிறது. இதை நடைமுறைப்படுத்துவதில் அதிகக் கஷ்டம் ஏற்படாது.

மாண்புமிகு அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சில கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். அதை எல்லாம் கண்காணிக்க வேறுபல சட்டங்களும் இருக்கின்றன.

Tamil Nadu District Municipalities Act.

Tamil Nadu Panchayats Act.

Tamil Nadu Town Planning Act.

Tamil Nadu Elementary Education Act.

Tamil Nadu Factories Act.

Tamil Nadu Places of Public Resort Act.

Madras City Police Act.

இந்தச் சட்டங்களின் மூலம் கட்டடங்கள் மற்றவைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற, கண்காணிக்கின்ற விதிமுறைகள் இருந்தாலும் கூட இந்தச் சட்டத்தின் மூலம் சில விதிமுறைகளைக் கொண்டு வருவது எல்லோராலும் வரவேற்கப்

பட்டிருக்கிறது. நடைமுறையில் கஷ்டங்கள் ஏற்பட்டால் அதைத் திருத்திக் கொள்ளலாம் என்று கூறி இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2, Clause 1, the Preamble and the Long Title were put and carried.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/72) சட்டமாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

The motion was put and carried and the Bill was passed into law.

### 5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, பேரவை நிகழ்ச்சிக் குறிப்பில் ஆறாவதாக உள்ள சட்ட முன்வடிவை இப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு மற்றவற்றை பிறகு எடுத்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.



### 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/72)ஐ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

### 4. அரசினர் சட்ட முடிவுகள்—தொடர்ச்சி.

### (உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/72).

**மாண்புமிகு திரு. க இராசாராம்** : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

இந்தத் திருத்த மசோதா மிகச் சாதாரணமான ஒன்றாகும். மூலச் சட்டத்தின் கால வரம்பு செப்டம்பர் திங்கள் 30-ல் முடிவடைகிறது. அந்தக் கால வரம்பை இன்னும் 9 திங்கள் நீட்டுவதற்காகவே இந்தத் திருத்த மசோதா பேரவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு நடந்த கூட்டத் தொடரில் மூலச் சட்டத்தின் கால வரம்பை ஒரு ஆண்டுக்கு நீட்டுவதற்காக வந்த திருத்த மசோதாவின்போதே மாண்புமிகு அங்கத்தினர்கள் இப்படி அடிக்கடி கால வரம்பைக் குறுகிய காலத்துக்கு நீட்டுவது கூடாது என்றும் மூலச் சட்டத்துக்கு விரிவான திருத்தம் தேவை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

உள்துறை செயலாளர் தலைமையின் கீழ் அரசு அமைத்த குழுவின் அறிக்கையை அரசு ஆய்ந்து அதன் கருத்துரைகளை சில மாற்றங்களுடன் ஏற்று அதற்கான விரிவான விளக்கமான திருத்த மசோதா பேரவையின் முன்பு நேற்றைய தினம் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

* 10-8-1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

அந்தத் திருத்தத்தின்படி மூலச் சட்டத்தை கால வரையறையின்றி ஒரு நிரந்தரச் சட்டமாக ஆக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. அந்த விரிவான திருத்த மசோதா மூலச் சட்டத்தின் பல பிரிவுகளைத் திருத்த முயலுவதாலும், குழுவின் அறிக்கையோடு அந்தத் திருத்த மசோதாவை நிதானமாகப் பரிசீலிக்க வேண்டியிருப்பதாலும் அதைப் பேரவை, மேலவை அங்கத்தினர்கள் கொண்ட பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு விட்ட, பின்பு அவர்கள் கருத்தோடு பேரவை அந்தத் திருத்த மசோதாவை ஆராயலாம் என எண்ணுகிறேன். ஆகவே அதற்கு சற்று காலம் தேவைப்படுவதாலும் இடையே மூலச்சட்டத்தின் காலவரையறையை நீட்ட இந்தத் திருத்த மசோதா முயல்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை விரிவான திருத்தச் சட்டத்தினை ஆராயும்போது சொல்லலாம். தற்போது இந்தத் திருத்த மசோதாவை ஏற்று சட்டமாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேறு விரிவான கருத்துக்களுக்கு இதில் இடமில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, இதுபற்றி சில கருத்துக்கள் சொல்லவேண்டியிருக்கிறது.

கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு முன்பாகவே இப்படி கட்டடங்களுக்கு ரெண்ட் சம்பந்தமாக விரிவான ஒரு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்று இந்த சபையில் பலரால் வற்புறுத்தப்பட்டது. வாக்குறுதி கொடுத்தார்கள் அமைச்சர் அவர்கள். இன்று ஓரளவிற்கு இந்த ரெவ்யூ கமிட்டி ரிப்போர்டை முன்னால் வைத்து இன்னொரு மசோதா கொண்டு வருகிறேன் என்று சொன்னது வரவேற்கத்தக்கது. இந்த மசோதா சென்ற சட்டசபைத் தொடரில் கொண்டு வரப்பட்டு அப்போதே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். இப்படி ஏற்கனவே இருக்கக்கூடிய பல குறைகள் உள்ள ஒரு சட்டத்தை நீட்டித்துக் கொண்டு போவது, ஜூன் 73 வரையில் நீட்டித்துக்கொண்டு போவது என்ற இந்தப் போக்கு இருக்கிறதே இது சரியல்ல. அதே நோக்கில் நான் என்ன கேள்வி எழுப்பப் போகிறேன் என்று எதிர்பார்த்து பதில் சொல்வதுபோல் சொல்லியிருக்கிறார்கள்.





இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் இது ஒரு முக்கியமான மசோதா. ரெவ்யூ கமிட்டி பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நாடு பூராவிலும் உள்ள அனுபவங்களை எல்லாம் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் இணைத்துப் பேசவேண்டுமென்று சொன்னால் போதுமான நேரம் இருக்காது. பொறுக்குக் குழுவிற்கு விடுவது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பொறுக்குக் குழுவிற்கு விட்டு அடுத்த கூட்டத் தொடரில் இதை எடுத்து நிறைவேற்றுவோம் என்ற நிலையில் தங்கள் உதவி வேண்டும், பொறுப்பில் உள்ள அமைச்சர் அவர்களும் அதற்கான முயற்சியை எடுக்கவேண்டுமென்ற ஒரு அம்சத்தை மட்டும் வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER : Thirumathi T. N. Anandanayaki..............

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, Sir, I did not intend to speak on the Bill because the object of the Bill is to extend the life of the original Act. The new comprehensive Bill which the Government are going to bring forward shortly should be enacted into law at least before September 1972. I hope the Government would bring forward that Bill which needs comprehensive study. With these words, I conclude my speech.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I am happy to note that the Government are going to introduce a comprehensive legislation on Rent Control.

So far as rent control is concerned, this is nothing new. There has been the previous law and there have been several decisions given by the Honourable High Court of Madras which found fault with the ill-drafting of the original enactment. So, in the light of the experience that has been gained, it is time and it is right for us to think about the future legislation. Now that the future legislation is to be introduced very soon, I do not want to go into details. But, Sir, this sort of piecemeal legislation is always dangerous. A comprehensive legislation is needed and that is the order of the day.

So far as tenancy matters are concerned, it is the statutory tenancy that is being created and it abridges the contractual rights of the contracting parties. Sir, the question of rent control lo——

large and it supplants, if I may say so, the Transfer of Property Act. According to section 106 of the Transfer of Property Act, notice before eviction is mandatory and that has been ruled by the Supreme Court and I think that that aspect of the matter will be considered when the new legislation is introduced. I hope the Hon. Minister will take pains, as he always takes pains, to bring forward a comprehensive Bill which will correctly mirror the picture as it exists today. That is the only point I want to stress.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, முழு மசோதா ஏற்கனவே சபை முன்னால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. விவாதம் நாளை அல்லது மறுநாள் வர இருக்கிறது. மேலவை, பேரவை உறுப்பினர்களைக் கொண்ட பொறுக்குக் குழுவிற்கு இதை விடுவதாகத் தீர்மானித்திருக்கிறோம். அவை முன்னால் வைத்திருக்கிற சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒன்பது மாத காலம் நீட்டிக் கொடுக்க வேண்டுமென்று கூறக் காரணம் பொறுக்குக் குழு எவ்வளவு காலம் எடுத்துக் கொள்கிறது என்று தெரியாது. பல விவாதங்களைக் கொண்டுவரலாம். நல்ல பல கருத்துக்களைப் பெறக்கூடும். அந்தக் கருத்துக்களை எல்லாம் இணைத்து முழுச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத் தான் மேலவை, பேரவை உறுப்பினர்களைக் கொண்ட பொறுக்குக் குழுவிற்கு விட ஏற்பாடு செய்திருக்கிறோம். கருத்துக்கள் விரைவில் வந்தால் அடுத்த சட்டமன்றத் தொடரில்கூட சிறந்த ஒரு சட்டத்தை நிறைவேற்றித்தர முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில் இதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.



Clause 2, Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU K. RAJARAM: Sir, I move—

"That the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1972 (L.A. Bill No. 29 of 1972) be passed".

**The motion was put and carried and the Bill was passed into law.**

***(ஊ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 51/71) (ஆய்வுக் குழு திருத்தியமைத்தவாறு).***

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/71) ஆய்வுக்குழுவால் திருத்தப்பட்டவாறு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவையில் 14-12-71-ல் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதும், அதனை ஆய்வு செய்வதற்காக ஆய்வுக்குழு ஒன்றிற்கு அது அனுப்பப் பட்டது என்பதும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். ஆய்வுக்குழு கேட்டுக்கொண்டதன் பேரில், வணிகக் கழகங்களும் ஏனைய வர்த்தகச் சங்கங்களும் சட்ட முன்வடிவில் செய்யக் கருதிய திருத்தங்கள் குறித்து கருத்துரை வழங்கும் படிக் கேட்டுக் கொள்ளப்பட்டன. ஆய்வுக் குழு பரிசீலனை செய் வதற்காக 30 வர்த்தக சங்கங்களிடமிருந்து ஆலோசனைகளும், கருத்துரைகளும் பெறப்பட்டன. ஆய்வுக்குழு மொத்தத்தில் நான்கு முறை கூடியது. சட்ட முன்வடிவின் ஒவ்வொரு பிரிவையும் பரிசீலித்து 3—7—1972-ல் நடைபெற்ற கூட்டத்தில் தனது ஆய்வுகளுக்கு இறுதி வடிவம் கொடுத்தது.

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 23

ஆய்வுக் குழுவின் அறிக்கையும் அக்குழு செய்த திருத்தங்களுடன் கூடிய சட்ட முன்வடிவும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. குழு செய்த முக்கியமான மாறுதல்களாவன :—

(i) சட்ட முன்வடிவின் 2-வது பகுதியில் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் 2 (R) பிரிவில் உள்ள திருத்தம் விவசாயிகள் விற்பனை செய்யும் ரப்பர், பாக்கு இவைகளுக்கு விதிக்கப்படும் வரியைப் பொறுத்தவரை, அத்திருத்தம் குழுவால் விட்டு விடப்பட்டுள்ளது.

(ii) சட்ட முன்வடிவின் 3-வது பகுதியில், சட்டத்தின் 3 (3) பிரிவில் உள்ள திருத்தங்கள் சரக்குகளை விற்பனை செய்கிற வியாபாரியும் சரக்குகளைக் கொள்முதல் செய்கிற வியாபாரியும் கொடுக்க வேண்டிய உறுதி மொழியையும் வரி விதிப்பதை விற்பனை முனையிலிருந்து கொள்முதல் முனைக்கு மாற்றுவதையும் பொறுத்தவரை அத்திருத்தங்களை இக்குழு நீக்கி உள்ளது.

(iii) சட்ட முன்வடிவின் 5, 7, 8, 12, 19, 20, 25-வது பகுதிகளில் குறிப்பிட்டுள்ள கால அளவை ஒரு சீராக 5 ஆண்டுகள் எனக் குழு மாற்றி அமைத்துள்ளது.

(iv) சட்டத்தின் 21-ஏ பிரிவில் செய்யக் கருதியுள்ள திருத்தத்தை சட்ட முன்வடிவின் 11-வது பகுதியில் குழு மாற்றி அமைத்துள்ளது. வரியை கடன்பட்டு தீர்த்துக் கொள்வதற்கான வசதிகளை வியாபாரிகளுக்கு அளிப்பதற்காகவும், வியாபாரியின் அனுமதிச் சீட்டை ரத்து செய்யுமுன் அவரது தரப்பை எடுத்துச் சொல்ல அவருக்கு வாய்ப்பினைக் கொடுப்பதற்காகவும் இவ்வாறு திருத்தப்பட்டுள்ளது.

(v) சட்ட முன்வடிவின் 12-வது பகுதி சட்டத்தின் 22-வது பிரிவிற்குப் பதிலாகப் புதிய பிரிவை அமைத்துக் கொள்ள முற்படுகிறது. பதிவு பெற்ற வியாபாரி அல்லாத எவரும் வரி வசூல் செய்வதைத் தடை செய்யவும் பதிவு பெற்ற வியாபாரி ஒருவர் இச் சட்டம் விதிகள் இவற்றின் விதித்துறைகளை மீறி வரி வசூல் செய்வதைத் தடை செய்வதற்கும் இவ்வாறு புதிய பிரிவு அமைத்துக் கொள்ளப்படுகிறது. செய்யக் கருதப்பட்டுள்ள 22-வது புதிய பிரிவுடன் விலக்கு நிபந்தனை ஒன்றைக் குழு சேர்த்துள்ளது.



1972 ஆகஸ்ட் 23] [திரு. ப. உ. சண்முகம்]

எந்தச் சரக்குகளில் விற்பனை அல்லது கொள்முதல் விலை அமுலில் உள்ள ஒரு சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகிறதோ அப்பொருள்கள் குறித்து, பதிவு பெற்ற வியாபாரி ஒருவர் இச்சட்டத்தின் கீழ் ஏற்கனவே அனுமதித்துள்ள வரியை வசூலிப்பதற்கு இந்தத் தடை பொருந்தக் கூடாது என்பதே இதன் நோக்கம்.

(vi) சட்டத்தின் 36, 37, 38-வது பிரிவுகளில், சட்ட வரைவின் 21, 22, 23-வது பகுதிகள் மூலம் செய்யக் கருதியுள்ள திருத்தங்களில் மேல் முறையீட்டு நடுவர் மன்றத்திற்கும உயர் நீதி மன்றத்திற்கும் செய்து கொள்கிற மேல்முறையீடுகளுக்கும் மறு விசாரணை மனுக்களுக்கும் செலுத்தத்தக்க கட்டணங்களை விதிகள் மூலம் வரையறுக்கும் அதிகாரத்தை மேற்கொள்ள விதித்துறை இயற்றப்பட்டது. தற்போதுள்ள விதித்துறைகளை அப்படியே வைத்துக் கொள்ளலாமெனக் குழு முடிவு செய்தது.

(vii) சட்ட முடிவின் 27-வது பகுதி சட்டத்தின் 42-வது பிரிவைத் திருத்த முற்படுகிறது. சோதனைச் சாவடிகளில் வண்டிகளைச் சோதனையிடுவதற்கும், தடுத்து நிறுத்துவதற்கும் இப்பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. இப்போது உள்ள விதித்துறையின்படி, பயணிகள் மோட்டார் வண்டியில் எடுத்துச் செல்லப்படுகிற சரக்குகளும் சோதனைக்கு உட்பட்டவையாகும். சரக்கு வண்டிகள் அல்லது படகுகளில் மட்டும் எடுத்துச் செல்லப்படுகிற சரக்குகள் தொடர்பாக பார்வையிடுவதும் சோதனை செய்வதும் நடைபெறும் வகையில் இவ்விதித்துறை தற்போது திருத்தப்பட்டுள்ளது. செய்யக் கருதியுள்ள திருத்தத்தைக் குழு கீழ்க்கண்டவாறு மாற்றியுள்ளது. அதாவது, சோதனைச் சாவடியின் அல்லது தடை அமைப்பின் பொறுப்பு வகிக்கிற அதிகாரி, அவ்வாறு எடுத்துச் செல்லப்படுகிற சரக்குகளின் விற்பனை அல்லது கொள்முதலுக்கு இச்சட்டத்தின்கீழ் வரி செலுத்துவதற்காக அவை சரியாகக் கணக்கில் கொண்டு வரப்பட்டுள்ளனவா என்பதைப்பற்றி மட்டும் தெரிந்துகொண்டால் போதும். சரக்குகளில் சொந்தக்காரர் பெயரில் ரசீது கொடுப்பதற்காகவும் இக்குழு விதித்துறை ஒன்றை சேர்த்துள்ளது; அப்போதுதான் பின்னொரு தேதியில் அவர் அவற்றை எளிதில் திரும்பிப் பெற முடியும்.

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 23

ஆய்வுக்குழு திருத்தியவாறு உள்ள இச்சட்ட முன்வடிவினை இப்பேரவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தத் திருத்தங்கள் மீது ஒன்றிரண்டு கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இப்போது செக் போஸ்ட் பற்றி ஒரு திருத்தம் வந்திருக்கிறது. இந்த இலாகாவில் இதனுல்தான் ஏராளமான வருமானம் வருகின்றது. விற்பனை வரியை ஏமாற்றி சரக்கு அனுப்புபவர்களைக் கண்டுபிடித்து இவர்கள் அரசாங்கத்திற்குப் பணத்தைப் பெற்றுத் தந்து இருக்கிறார்கள். அப்படியிருந்த போதிலும், இந்த செக் போஸ்டால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உதாரணமாக விவசாயிகள் அவர்களுடைய களத்துமேட்டிலிருந்து விறகு, வைக்கோல் போன்றவற்றை சொந்த உபயோகத்திற்கு வண்டியில் கொண்டு வருகிறபோது அவர்கள் அதற்கு ஏதாவது ரசீது இருக்கவேண்டுமென்ற நிர்பந்தத்திற்குள்ளாக்கப்படுகிறார்கள். அரசாங்கம் அதைக் கவனிக்க வேண்டும்.

அதேமாதிரி அவர்கள் விறகு கொண்டு போனல் அதை விற்பனைக்குக் கொண்டு போகிறார்களா என்ற சந்தேகத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அவர்களை சோதனைச் சாவடியில் சோதனையும் செய்கிறார்கள். இந்தச் சட்டத்தில் பல நல்ல நோக்கங்கள் இருந்தாலும். சில கஷ்டங்கள் விவசாயிகளுக்கு இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சுங்கசாவடி என்ற பகுதியில் இப்படி நடந்து கொண்டிருக்கிறது. வைக்கோல் வீட்டிற்கு கொண்டு வரவேண்டுமென்றால் கூட கடிதம் எழுதிக்கொடுத்தால்தான் அனுப்பப்படுகிறது. இதை அரசாங்கம் சற்று கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த அசெஸ்மெண்ட் எல்லாம் ஒழுங்காக இருக்க வேண்டும். எஸ்டேட் அசெஸ்மெண்ட் எப்படி இன்கம் டாக்ஸ் அசெஸ்மெண்ட் புனர்பரிசீலனை செய்ய வேண்டிய முறையில் இருக்கிறதோ அதேமாதிரியான முறையில் வழிவகை செய்து இருக்கிறோம்.



1972 ஆகஸ்ட் 23] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

பொதுவாக விற்பனை வரியைப் பற்றிச் சொன்னார்கள். அது ஒரு காமதேனுவாக இருந்தாலும் நிர்வாகத்தில் இருப்பவர்களும், வியாபாரிகளும் அதிகம் கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு கணக்கு வைப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. முறைகேடுகள் இருக்கின்றன. அந்தக் காரணத்தால்தான் வியாபாரிகள் மிகவும் தொல்லைக்கு அடிக்கடி உள்ளாக்கப்படுகிறார்கள். அவர்கள் கணக்கு ஒழுங்காக இருக்கின்றனவா என்று அதிகாரிகள் அடிக்கடி பரிசீலனை செய்துகொண்டேயிருக்கிறார்கள். சில வேளைகளில் அவர்கள் வைத்துள்ள கணக்குகளை ஏற்றுக்கொள்ளாத நிலைமை கூட இருக்கிறது. சிலர் துப்புகளின் பேரில் ஆங்காங்கு சோதனைகளை நடத்தி வியாபாரிகளுக்கு கஷ்டத்தைக் கொடுத்து வருகிறார்கள். எல்லா வியாபாரிகளும் ஒழுங்காக இருக்கிறார்கள் என்று சொல்ல மாட்டேன். அப்படிச் சோதனைகள் முன்பு நடந்தது சட்ட விரோதமானது என்று ஹைகோர்ட்டில் ஒரு தீர்ப்பு இருக்கிறது. அந்த மாதிரி வியாபாரிகளை சங்கடத்தில் உள்ளாக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ப்ரிபரேஷன் ஆப் அக்கௌண்ட்ஸ் எப்படி இருக்கவேண்டுமென்று இந்த பில்லில் எடுத்துக்கூறப்பட்டது. அதையெல்லாம் விரிவாக அந்த ஆய்வுக் கமிட்டி பரிசீலனை செய்து இருக்கிறது. ஆதலால் நிர்வாகத்திலே இருக்கிற கோளாறுகளை அகற்றுவதற்கு ஆய்வுக்குழு பல கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறது. அந்த மாதிரி சங்கடங்கள் எல்லாம் வராமல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அது செய்திருக்கிறது. இந்தச் சட்டத்தால் பல கோளாறுகள் சிக்கல்கள் தீரும். இது ஒரு நல்ல சட்டம் என்று கூறி அதை வரவேற்று என்னுடைய கருத்துக்களை இதோடு முடித்துக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, Sir, so far as this amendment is concerned, I would like to submit that this is the fifth amendment on this subject and that itself shows that this will have to be amended comprehensively and that a new Bill must be brought forward. The very fact that this is the fifth amendment shows that there are lot of things to be amended

and unless and until a comprehensive Bill is brought forward by Government, I am sure many loopholes in the Bill cannot be plugged.

Small traders have been making a number of representations. Now the exemption limit is Rs. 25,000. The prices have risen so high and even the small trader's turnover exceeds Rs. 25,000. Once they called the Health Minister for an annual conference and they submitted there that Rs. 25,000 was very small and it must be raised to Rs. 50,000 or Rs. 75,000 in future. The Hon. Minister for Food may now say that he had given compounding facilities up to Rs. 75,000. What I say is that the exemption limit may be raised to Rs. 75,000.

They have been asking for single-point tax on a number of items. That also has not been really considered by this Government. Number of items had been listed and the traders' conference had also assured the Government that there would not be evasion of tax, that there would not be dimunition of income if single-point tax was levied on those items. Apart from that, supposing the turnover is about Rs. 26,000, the small businessman is taxed for the entire amount. But the exemption limit is only up to Rs. 25,000. They want eventhough they may have a turnover of Rs. 26,000 per annum, since the exemption limit is only up to Rs. 25,000 he is taxed not for Rs. 1,000 but the whole amount. Even if the turnover is Rs. 25,001 you are taxed for the entire amount. That factor may also be considered. The small traders have made representations and they have not been considered.

Certain good changes have been brought about for the escaped turnover. Before the amendment they used to be taxed after a period of 8 years. Now they have reduced it to 5 years. The businessmen welcome this move.

In this amendment, the most dangerous clause is clause 27. Section 42 provides for detention of vehicles and goods to facilitate investigation. I only like to stress upon the Government this. You can detain goods; but if such goods be perishable, it should not be detained. But if you detain the vehicle, it will ruin the



small businessman. If you hold over a lorry and if it does not ply and lies idle for 4 or 5 days in the Sales Tax Office, he will be ruined and crippled. Government should consider that. In this amendment, they need not detain vehicles. By such detention you will be causing unnecessary hardship to the small traders. Even in the case of goods, if they are perishable, there is no fun in detaining them. Such perishable goods can be sold and proceeds given to them. (Interruption) Take rice. If you detain for 6 or 8 months, what happens? It will become unfit for consumption. Therefore, you have to leave out perishable goods. Foodstuffs if they are detained for long will get rotten. In respect of detention of goods and vehicles, I would like the Government to give a second thought to that problem. If you detain them unnecessarily for long, definitely it will cause hardship to the small businessmen.

With these few words I would like to impress upon the Government the necessity to bring in a comprehensive bill, so far as General Sales tax is concernd, as there has been a lot of changes. Now with scrapping of prohibition, the position would have been affected. It is better to reconsider all these things and bring in a comprehensive bill on the subject.

THIRU K. T. K. THANGAMANI: Mr. Speaker, Sir, I did not want to speak on sales tax, as the Members of the Select Committee have sufficiently gone through the various clauses and have even amended some which are very explanatory and exhaustive. But I thought I should mention about the new clause, clause 26 which has been introduced. In the original Bill it was 27, I think. In clause 26—a portion of it has been dealt with by the previous speaker. Under the existing provision, goods and passenger car are liable to be checked. This has been done for inspection and checking. It has been said that the officer-in-charge of checkposts or officer empowered to examine the contents in the vehicle should ascertain and satisfy himself whether sales tax in respect of goods transported had been paid already இம்மாதிரி வர கூடிய நேரத்தில்தான் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இம்மாதிரி ஏதாவது ஒரு இடத்தில் அங்கே இருக்கக்கூடிய ஒரு வேலை

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 23

டாக்ஸ் அதிகாரி அந்த வெஹிகிளில் இருக்கக்கூடிய சாமான்களை ஸேல்ஸ் டாக்ஸ் கொடுத்துவிட்டார்களா அல்லது ஸேல்ஸ் டாக்ஸ் கொடுக்கக்கூடிய ஒரு சாமான்தானு என்பது பற்றி அவர் முடிவு செய்கிருர் என்று சொன்னுர், அந்த இடத்தில்தான் சில நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டு, பல சிக்கல்கள் வந்து சேருகின்றன.

ஒரு விஷயத்தை சமீபத்தில் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட எழுப்பினுர். ஒரு செக் போஸ்டில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு வெஹிக்கிளை அனுப்ப வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவதற்கு அந்தக் குறிப்பிட்ட அதிகாரியின் பேரில் ஏதோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இம்மாதிரியாக நாம் ஒரு சட்டம் நிறைவேற்றி அந்தச் சட்டத்தை அமல் நடத்துவதற்காக இருக்கக்கூடிய அதிகாரிகளைப் பொறுத்தவரையில் கொஞ்சம் அதிகாரத்தை நாம் அவர்களுக்குக் கொடுக்கிறபொழுது அது தடையில்லாத முறையில் இருந்தால் தான், அந்த அதிகாரிகள் சரியான முறையில் பணியாற்ற முடியும். அதிகாரிகள் சில சமயங்களில் சில தவறுகள் செய்யலாம். ஸேல்ஸ் டாக்ஸ் கொடுக்கக் கூடாத சில சாமான்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி, வெஹிகிளில் கொண்டுவரக்கூடிய சில சாமான்களை பரிசோதனை செய்வதுமாதிரி சில தவறுன காரியங்களைச் செய்வதற்கு இடம் இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனுல் இப்படி நிறுத்தி அதைப்பற்றி தாங்கள் காரியங்கள் செய்யக்கூடிய அந்த அதிகாரிகளைச் சார்ந்த அம்சமாவது கண்டிப்பாக இருக்கவேண்டும். அதுவும் நாம் கிளாஸ் 27 வந்ததற்குப் பிறகு உறுதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"As under the existing provisions of the Act, a dealer will pay the tax for a month, only on the succeeding month and that to require every consignor to pay tax on the day of sale and transport of goods by a provision of this Bill is not in conformity with the other provisions of the Act, this provision has been suitably amended to the effect that the Officer has to satisfy only whether the sale or purchase of the goods carried has for the purpose of the payment of tax under the Act been properly accounted for". சபையினுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ளவேண்டி



1972 ஆகஸ்ட் 23] [கே. டி. கே. தங்கமணி]

யிருக்கும் என்பதற்காக நான் விரிவாகச் சொல்லவில்லை. பொது வாக 26-வது பிரிவு முழுமையும், ஏற்கனவே இருந்த 27-வது பிரிவு, பரிபூரணமாக திருத்தப்பட்ட விரிவான முறையில் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமாக ஒரு பொதுவான கருத்தை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எப்படி நாம் ஒவ்வொரு சட்டத்திற்கும் ஒரு முறையான சட்டம், காம்ப் ரெஹென்ஸிவ் சட்டம் வேண்டும் என்று சொல்கிறோமோ, அது இந்த ஸேல்ஸ் டாக்ஸ் சட்டத்திற்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன். அதே நேரத்தில் ஸேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகள் முறையாகச் செயல்பட்டிருக்கிருர்கள். சில ஸேல்ஸ் டாக்ஸ் அதிகாரிகளின் பேரில் சில கண்காணிப்பு தேவையாக இருக்கிறது. அதுபோன்ற விஷயங்கள் சபைக்கு அவ்வப்பொழுது தெரிவிக்கப் பட்டிருந்தால் உதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஸேல்ஸ் டாக்ஸ் மூலம் நமக்கு ரூ. 100 கோடி வருகிறது. ஒவ்வொரு தடவையும் சட்ட மன்றத்தில் பேசும் பொழுது 'நீங்கள் ரூ. 90 கோடி என்று சொல்கிறீர்கள். அது ரூ. 100 கோடியாகிறது, ரூ. 100 கோடி 110 கோடியாகிறது. முறையாக ஸேல்ஸ் டாக்ஸை ஒழுங்காக வசூலித்தால் இன்னும் 0 சதவீதம் அதிகமாக வருமானம் வரும்" என்று ஒரு வாதத்தை சபையில் அநேகமாக எல்லாப் பகுதியிலுள்ளவர்களும் சொல்கிருர்கள். ஸேல்ஸ் டாக்ஸ் வசூலிக்கக்கூடிய அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்களை நல்ல முறையில் உற்சாகப்படுத்தக் கூடிய, அவர்கள் நியாயமாக செயல்படக்கூடிய அம்சத்தை மட்டும் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

27-வது பிரிவு நல்ல பொருத்தமானதாகக் கொண்டுவரப்பட்டி ருக்கிறது. பொதுவாக செலக்ட் கமிட்டியைப் பொறுத்தவரை யில் செலக்ட் கமிட்டி உறுப்பினர்களும், அவர்களுக்கு உதவியாக இருந்த அதிகாரிகளும் நல்ல முறையில் ஆலோசனை சொல்லியிருக் கிறார்கள் என்பது எனக்குப் படுகிறது என்பதைத் தெரி

வித்துக்கொண்டு, இந்தக் கருத்துக்களை அமைச்சர் அவர்களும், அரசும் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவர் அவர்களே, விற்பனை வரி ஐந்தாவது திருத்த மசோதா மீது அங்கத்தினர்கள் கருத்து தெரிவிக்கும்பொழுது, எல்லோருமே பொதுவாக பொறுக் குக் குழு செய்திருக்கிற திருத்த மசோதாவில் மாறுபட்ட கருத்து எதுவும் சொல்லாமல் வரவேற்றதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் பொறுக்குக் குழு விற்கு வந்தபொழுது என்னென்ன பிரச்னைகள் எழுப்பப் பட்டனவோ, அந்தப் பிரச்னைகளையெல்லாம் விவாதித்து, அரசுத் தரப்பில் எல்லாத் திருத்தங்களையும் ஒத்துக்கொண்டபிறகு, ஏக மனதாக திருத்தங்கள் சிபார்சு செய்யப்பட்டு, இந்த மாமன்றத் திற்கு திரும்பும் வந்திருக்கிறது. இங்கே பேசிய உறுப்பினர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் திருத்தம் கொண்டு வருவதற்குப் பதிலாக ஏன் காம்ப்ரெஹென்ஸிவ் பில் கொண்டுவரக்கூடாது என்று **சொன்னார்கள்.**

அரசு ஏற்கெனவே விற்பனை வரியை பொறுத்தமட்டில் ஒரு காம்பிரஹென்ஸிவ்பில் கொண்டு வர வேண்டும் என்பதற்காகத் தான் தனிப்பட்ட ஒரு அதிகாரியை நாம் நியமித்தோம். ஆனால் அந்த அதிகாரி விடுமுறையில் சென்றுவிட்டதால், இன்னொரு அதிகாரியை அந்த இடத்திலே அமர்த்தி, தொடர்ந்து அவர் அதிலே வேலை செய்யுமாறு அரசு உத்தரவிட்டிருக்கிறது. அவருடைய அறிக்கை அரசாங்கத்திற்கு கிடைத்ததும், அதைப் பரிசீலித்து நல்லதொரு முடிவு இதிலே எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்பொழுது, விவசாயப் பொருட்களை கொண்டு போகும்பொழுது அங்கே இருக்கிற னச் சாவடிகளிலே இருப்பவர்கள் தடுக்கிறார்கள் என்று கள். அப்படி விவசாயி தன்னுடைய சொந்த விவ



சாயப் பொருட்களை எடுத்துச் சென்றால், எந்த கிராமத்திலே இருந்து அதை எடுத்து வருகிறார்களோ அந்தக் கிராமத்தின் கிராம அதிகாரியிடமிருந்து சர்ட்டிபிகேட் ஒன்றை கொண்டு வந்து கொடுத்தால் போதும். உடனே எந்தவிதமான தடங்கலும் பண் ணாமல் அதை அனுமதித்துவிடுவார்கள் என்று நான் இங்கே தெரி வித்துக்கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்பொழுது, 25,000 ரூபாய் வரையில் வரி இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள், இன்னும் கொஞ்சம் அதை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். கடந்த வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பிக்கும் பொழுதுதான் 15,000 ரூபாயிலிருந்து இந்த வரி விதிப்பை 25,000 ரூபாய்க்கு என்று அந்த லிமிட்டை உயர்த்தினோம். அப்பொழுது தான் காம்பவுண்ட் செய்யும் வரம்பை இலட்சம் ரூபாயாக ஆக்கியிருக் கிறோம். இதன் மூலம் அரசாங்கத்திற்கு இழப்பு 45 இலட்சம் ரூபாய். எனவே, இதை மேற்கொண்டு உயர்த்துவதாக இந்த அரசுக்கு உத்தேசமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று சொன்னார்கள், முதல் 25,000 ரூபாய்க்கு வரி போடக்கூடாது என்று சொன்னார்கள். அதை ஏற்றுக்கொள்ள முடியாது. காம்பவுண்ட் செய்யும் வரம்பை இலட்சம் ரூபாய் வரை வைத்திருக்கிறோம்; அதற்கெல்லாம் அப்பொழுது ஸ்லாப் போட்டு இந்த மன்றத்தின் முன்னாலே வைக்கப்பட்டு, இந்த மன்றம் அதற்கு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. அப்பொழுது வியாபாரிகள் கூட 25,000 ரூபாய்க்கு அந்த வரிவிதிப்பை உயர்த்தியதற்காக இந்த அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் கூட போட்டிருக்கிறார்கள். எனவே, இதிலே சங்கடம் ஒன்றுமில்லை.

திரு. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது சக் போஸ்ட் அதிகாரிகளுக்கு பல்வேறு வரம்பு அதிகாரத்தை கொடுப்பது பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் வேறு ஒன்றையும் இங்கே சொன்னார்கள். அதன் முழுமையான விபரத்தை எல்லாம் இங்கே நான் பேச விரும்பவில்லை. அதிகாரிகளுக்கு சில வரம்புகளை ந்திருக்கிறோம். அந்த அதிகாரிகள் அந்த வ

[ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 23

இரண்டு வகையிலே பயன்படுத்தக்கூடாது. பொருட்களை கொண்டு வருபவர்களுக்கு வெறுமனே தொல்லை கொடுக்கக் கூடாது. இன்னொன்று கொண்டு வரக்கூடிய பொருட்களுக்கு விற்பனை வரி இல்லை என்றாலும் கூட வேறு விதமான தொல்லைகளை அவர்களுக்கு கொடுக்கக்கூடாது. அதற்காகத்தான் இந்த அரசு அவர்களை கண்காணித்துக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் எதைச் செய்தாலும் அதை அப்படியே அரசாங்கம் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று கனம் உறுப்பினர் தங்கமணி அவர்கள் சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன். அதிகாரிகள் தவறு செய்தால் அதை திருத்துவதற்கு, அதை கண்டிப்பதற்கு, அந்த தவறை கண்டுபிடித்து, அவருடைய மேல் அதிகாரிகளிடத்தில் சொல்லி, இதை கண்காணி என்று சொல்லுவதற்கு அரசாங்கத் திற்கு நிச்சயமாக அதிகாரம் இருக்கவேண்டும். அப்பொழுது தான் அதிகாரிகள் காரியங்களை ஆற்றும்பொழுது சட்ட வரம்பிற்குட்பட்டு காரியங்களை ஆற்றுவார்கள் என்று கருதுகிறேன்.

பொதுவாக இந்த சட்டத்திலே அதிக கருத்து மாறுபாடுகள் சொல்லாமல் இதை ஆதரித்து பேசியதற்காக நான் நன்றி சொல் லிக் கொள்கிறேன்.

லாரிகளைப் பற்றிக்கூட திருமதி அனந்தநாயகி சொன்னார்கள். லாரிகளை தடுத்து நிறுத்துவதுபற்றிச் சொன்னார்கள். அதிலே வரும் பெரிஷபில் குட்ஸ்பற்றிச் சொன்னார்கள். அது அழுகும் பொருளாக இருந்தாலும், அல்லது கெட்டுவிடக்கூடிய பொருளாக இருந்தாலும் அது பற்றி இதிலே ஒரு அதிகாரம் இருக்கிறது. அங்கேயே அவைகளை நிறுத்தி, பாழாகி விடாமல் இருப்பதற்காக, அவைகளை ஏலத்திற்கு விட்டுவிடலாம் என்று வைத்திருக்கிறோம். அப்படி எல்லாம் நடந்து விடுவதில்லை. சில இடங்களிலே அதி காரிகள் உடனடியாக ரசீது கேட்கிறார்கள். உடனடியாக வரி கட்ட வேண்டும் என்று கேட்கிறோம். அவர்களும் வரியை கட்டி விட்டு சாமானை எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அதிலே ...லாம் புகார் இல்லை. புகார் இருக்கும் இடங்கள் எல்லாம் அதி...



1972 ஆகஸ்ட் 23] [திரு. ப. உ. சண்முகம்]

ரசீதுகள் கிடைக்கும் பொழுது அதிகாரிகள் வரியை வசூலிக்க இறங்குகிறார்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. இந்தத் துறையில் சென்ற ஆண்டு மட்டும் 110 கோடி ரூபாய் வருமானத்தை அர சாங்கத்திற்கு தேடித் தந்திருக்கிறார்கள். எனவே, இந்த துறை யிலே பணியாற்றும் அதிகாரிகளை பாராட்ட நாம் கடமைப்பட் டிருக்கிறோம். எனவே, இந்த திருத்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill, 1972 (L.A. Bill No. 51 of 1971) as amended by the Select Committee be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration clause by clause.

Clauses 2 to 36 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried

THE HON. THIRU P. U. SHANMUGAM: **Sir, I move—**

'That the Tamil Nadu General Sales Tax (Fifth Amendment) Bill, 1972 (L.A. Bill No. 51 of 1971) as amended by the Select Committee be passed.'

The motion was put and carried and the Bill was passed into **law.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று, பேரவை நாளைக் காலை மீண்டும் 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

### (6) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### A. *Statutory Rules and Orders.*

264. Notification issued with the G.O. Ms. No. 167, Home, dated the 19th January 1972, in regard to certain amendments to Rule 273-B of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

265. Notification issued with G.O. Ms. No. 1608, Revenue, dated the 30th May 1972, in regard to an amendment to Revenue Department Notification II—1 No. 3987 (b) of 1971, published at page 2 in Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, Extraordinary, dated the 8th September 1971. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Land Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

266. Notification issued with G.O. Ms. No. 1781, Home, dated the 3rd July 1972, in regard to concessional rate of tax in respect of the ambulance TNH 555, belonging to Seva-Caritas Health and Maternity Centre, Thiruvallavayal, Chingleput district. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

#### B. *Reports, Notifications and other Papers*

@ 92. Report of the Committee constituted to Review the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960.

---

@ Laid on the table of the House on 22nd August 1972.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

———

### வியாழக்கிழமை, 1972 ஆகஸ்ட் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) நீத்தார் நினைவுக் குறிப்பு.

நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : சட்டப் பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு தேசிய கவிஞராகவும் இருந்த நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் இன்று அதிகாலையிலே இறந்துவிட்ட செய்தியை இம் மன்றத்திற்கு வருத்தத்துடன் தெரிவிக்கிறேன். அவர்களின் பிரிவால் வருந்தும் அன்னாரின் குடும்பத்திற்கு இந்த மன்றத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த கவிஞருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

[1972 ஆகஸ்ட் 24

## (2) வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### வாக்குரிமை வயது வரம்பு

*296 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வோட்டுரிமை வயதை இருபத்தி ஒன்றிலிருந்து பதினெட்டாகக் குறைக்கும்படி செய்வது குறித்து மத்திய அரசு நமது மாநில அரசின் கருத்தைக் கோரியுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) தேர்தல் சட்டத்தைத் திருத்துவது குறித்து அமைக்கப்பட்ட மக்கள் பேரவை இணைக் குழுவின் அறிக்கையை இந்திய அரசு மாநில அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மக்கள் பேரவை இணைக் குழு வாக்குரிமை வயதை 21-லிருந்து 18 ஆகக் குறைக்க வேண்டுமென்றும், அதற்காக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 326-வது பிரிவு திருத்தப்பட வேண்டுமென்றும் பரிவுரை செய்துள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, அமெரிக்காவில் இப்போது வாக்காளர்களின் வயது வரம்பைக் குறைத்திருப்பதாகத் தெரிகிறது. அதைப் போன்று மேலும் பல நாடுகளில் வயது வரம்பைக் குறைக்க இருப்பதாகத் தெரிகிறது. ஐந்து பொதுத் தேர்தல்களை நல்ல முறையில் வெற்றிகரமாக நடத்தி முடித்த நம் நாட்டிலும் வாக்காளர்களின் வயது வரம்பைக் குறைக்க மத்திய அரசை நமது அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாநில அரசுகளுடைய பரிவுரைகளை இந்திய அரசு கேட்டிருக்கிறது. அதுபற்றி மாநில அரசு பரிசீலனை செய்து வருகிறது. இதற்கிடையில் இந்திய அரசு இந்தப் பரிவுரைகளை ஏற்கவில்லை என்பதைப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆகவே, ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியாக இதுபற்றிக் கருத்துத் தெரிவிப்பதைவிட, மாநிலங்களுடைய முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி, இந்தக் கருத்தினை வலியுறுத்துவது சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.



1972 ஆகஸ்ட் 24]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார். இப்போது 21 வயதாக இருப்பதை 18 வயதாகக் குறைக்க வேண்டுமென்று ஒரு தெளிவான தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, நமது மாநிலத்தினுடைய அபிப்பிராயம் என்ன என்பதைத் திட்டவட்டமாக மத்திய அரசாங்கத்திற்கு அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே. மத்திய அரசு மாநில அரசின் கருத்தைக் கேட்டிருக்கிறது. 1—4—1972 அன்று அதுபற்றிய கடிதம் வந்திருக்கிறது. அதுபற்றி மாநில அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**DR. H. V. HANDE:** From what I understand from the reply of the Hon. Chief Minister, the State Government are for reducing the age from 21 to 18 years. If that is a fact will the Government also take into consideration the fact that all the Members of this House are also for reduction of the age from 21 to 18 years. Also will the Hon. Chief Minister pass on the unanimous views of the Assembly Members and the State Government to the Central Government so that the proposal could be implemented expeditiously?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதில் மாநில அரசினுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுபற்றிய கருத்து பரிசீலனையில் இருப்பதால் இந்த நேரத்தில் திட்டவட்டமாக நான் எதுவும் கூற இயலாது. ஆனால் மன்றத்தின் உறுப்பினர்களுடைய எண்ணத்தையும் கருத்துக்களையும் மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்கும்.

இந்திய அரசின் சார்பில் சட்ட அமைச்சர் தெரிவித்த கருத்துக்களாகப் பத்திரிகைகளில் வந்திருப்பவற்றை அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வாக்குரிமைக்கான வயது இந்திய அரசியலமைப்பிலேயே வரையறுக்கப்பட்டிருப்பதால், மேலும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டால் இன்னும் திருத்தம் செய்யவேண்டியது அவசியமாகும். அரசியலமைப்பில் பல திருத்தங்கள் ஏற்கெனவே செய்யப்பட்டிருப்பதாலும், அவற்றில் சில இன்னும் நாடாளுமன்றத்தில் முடிவு எடுக்கப்படாத நிலையில் உள்ளதாலும், மேலும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவது உகந்ததல்ல. இப்போதுள்ள வாக்குரிமை வயதைக் குறைத்தோம் என்றால், ஒரேயடியாக வாக்காளர் பட்டியலில் மேலும் 10 கோடி

[1972 ஆகஸ்ட் 24

பேர் இடம் பெறுவர். இதனால் இப்போதிருப்பதைவிட தேர்தல் நடத்துவது என்பது மிகப் பெரிய வேலையாகிவிடும். அத்துடன் எளிதில் நடத்த இயலாமலும் போகலாம். தேர்தல் சாவடிகள் அதிகமாக ஏற்படுத்த வேண்டியிருக்கும். தேர்தல் நடத்துவதற்குத் தகுந்த பணியாளர்கள் கிடைப்பதும் அரிதாகிவிடும். இந்த மாறுதலால் தேர்தல் தொகுதிகளை முற்றிலும் புதிதாகப் பெருமளவில் வரையறுக்க வேண்டிய அவசியத்தை உண்டாக்கும். தேர்தல் செலவு இன்னும் அதிகமாகும் என்ற கருத்தினை மத்திய சட்ட அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே, இதுபற்றி மாநில முதலமைச்சர்களும், தலைமை அமைச்சரும், மத்திய சட்ட அமைச்சரும் கூடிப்பேசி முடிவெடுக்க வேண்டும் என்பது நமது கருத்து.

**திரு ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, பாராளுமன்றத்தில் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமென்ற ஒரு பரிந்துரை இப்போது இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த வயது வரம்பை 18 ஆக குறைக்கலாம் என்று மாநில அரசாங்கம் சிபாரிசு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இதிலே என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன என்பதை மத்திய அரசு சட்ட அமைச்சர் வெளியிட்டிருக்கிறார்.

**திரு. கே. டி கே. தங்கமணி :** சார், நம்முடைய அரசாங்கம் வயது வரம்பை 18 ஆக குறைக்க வேண்டுமென்று உறுதியாக கடிதம் எழுதவேண்டும். அதே நேரத்தில் அவர்கள் குறிப்பிட்டது போல் சங்கடங்கள் இருக்கும் என்று சொன்னால் 21 வயதாக இருப்பதை 28 வயதாக ஏன் ஆக்கியிருக்கக்கூடாது ? ஆகவே, இது பற்றி உறுதியாக மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நாங்கள் இந்த நிலையில் இருக்கிறோம் என்று சொல்லி, வயது வரம்பைக் குறைத்துத் தேர்தலிலே ஒரு புரட்சியை ஏற்படுத்தலாம் என்று கருதுகிறார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. முதலமைச்சர்கள் கலந்து பேசி, அதில் ஒரு முடிவு எடுக்கலாம் என்பது என் கருத்து. அதனால் 18 வயதாக ஆக்க வேண்டாம் என்று நான் சொல்வதாக அர்த்தமல்ல.



1972 ஆகஸ்ட் 24]

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, வயது வரம்பைக் குறைக்க வேண்டுமென்று பல மாநிலங்களிலிருந்து மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். நமது மாநில அரசாங்கமும் அந்தக் கருத்தை வற்புறுத்திச் சொல்லுகின்ற அதே நேரத்தில் தேர்தலில் கள்ள வோட்டு போடுவதையும் தடுப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. வயது வரம்பைக் குறைப்பது பற்றி ஏற்கெனவே தெளிவாகப் பதிலளித்துவிட்டேன்.

### அரசுப் பணிகளில் சேர வயது வரம்பு

***297 வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சர்வீஸ் கமிஷன் தேர்வுகளுக்கான வயது வரம்பினை உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அரசுப் பணியில் சேருவதற்கான உயர்ந்த அளவு வயது வரம்பை 25-லிருந்து 30 ஆக உயர்த்த வேண்டும் என்ற தமிழ்நாடு அரசிதழ் பதிவு பெறு அரசு அலுவலர்களின் சங்கத்தின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that many persons who have registered their names in the Employment Exchange are given only temporary jobs for two or three months and again they have to go back to the Employment Exchange for renewal of their names. By the time they get permanent jobs, they would be more than 25 years. So, will the Government show some concession to the persons who have got temporary jobs by relaxing the age restriction so that they can get permanent jobs?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் அதன் உட்பொருளை உணர்ந்துகொண்டு விளக்கம் அளித்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் பரிசீலனை செய்துபார்த்து, 'மத்திய சர்வீஸ் கமிஷனில்—அவர்கள் 24 வயது என்றிருந்ததை 26 என்று உயர்த்தி

[1972 ஆகஸ்ட் 24

பேர் இடம் பெறுவர். இதனுல் இப்போதிருப்பதைவிட தேர்தல் நடத்துவது என்பது மிகப் பெரிய வேலையாகிவிடும். அத்துடன் எளிதில் நடத்த இயலாமலும் போகலாம். தேர்தல் சாவடிகள் அதிகமாக ஏற்படுத்த வேண்டியிருக்கும். தேர்தல் நடத்துவதற்குத் தகுந்த பணியாளர்கள் கிடைப்பதும் அரிதாகிவிடும். இந்த மாறுதலால் தேர்தல் தொகுதிகளை முற்றிலும் புதிதாகப் பெருமளவில் வரையறுக்க வேண்டிய அவசியத்தை உண்டாக்கும். தேர்தல் செலவு இன்னும் அதிகமாகும் என்ற கருத்தினை மத்திய சட்ட அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிருர்.

ஆகவே, இதுபற்றி மாநில முதலமைச்சர்களும், தலைமை அமைச்சரும், மத்திய சட்ட அமைச்சரும் கூடிப்பேசி முடிவெடுக்க வேண்டும் என்பது நமது கருத்து.

**திரு ஆர். பொன்னப்ப நாடார்** : தலைவரவர்களே, பாராளுமன்றத்தில் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமென்ற ஒரு பரிந்துரை இப்போது இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த வயது வரம்பை 18 ஆக குறைக்கலாம் என்று மாநில அரசாங்கம் சிபாரிசு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவரவர்களே, இதிலே என்னென்ன சங்கடங்கள் இருக்கின்றன என்பதை மத்திய அரசு சட்ட அமைச்சர் வெளியிட்டிருக்கிருர்.

**திரு. கே. டி கே. தங்கமணி** : சார், நம்முடைய அரசாங்கம் வயது வரம்பை 18 ஆக குறைக்க வேண்டுமென்று உறுதியாக கடிதம் எழுதவேண்டும். அதே நேரத்தில் அவர்கள் குறிப்பிட்டது போல் சங்கடங்கள் இருக்கும் என்று சொன்னுல் 21 வயதாக இருப்பதை 28 வயதாக ஏன் ஆக்கியிருக்கக்கூடாது ? ஆகவே, இது பற்றி உறுதியாக மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : நாங்கள் இந்த நிலையில் இருக்கிறேம் என்று சொல்லி, வயது வரம்பைக் குறைத்துத் தேர்தலிலே ஒரு புரட்சியை ஏற்படுத்தலாம் என்று கருதுகிருர்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. முதலமைச்சர்கள் கலந்து பேசி, அதில் ஒரு முடிவு எடுக்கலாம் என்பது என் கருத்து. அதனுல் 18 வயதாக ஆக்க வேண்டாம் என்று நான் சொல்வதாக அர்த்தமல்ல.



1972 ஆகஸ்ட் 24]

**திரு. கே. என். குமாரசாமி** : தலைவரவர்களே, வயது வரம்பைக் குறைக்க வேண்டுமென்று பல மாநிலங்களிலிருந்து மத்திய சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிருர்கள். நமது மாநில அரசாங்கமும் அந்தக் கருத்தை வற்புறுத்திச் சொல்லுகின்ற அதே நேரத்தில் தேர்தலில் கள்ள வோட்டு போடுவதையும் தடுப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. வயது வரம்பைக் குறைப்பது பற்றி ஏற்கெனவே தெளிவாகப் பதிலளித்து விட்டேன்.

### அரசுப் பணிகளில் சேர வயது வரம்பு

***297 வின—திரு. அ. தேவேந்திரன்** : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சர்வீஸ் கமிஷன் தேர்வுகளுக்கான வயது வரம்பினை உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: அரசுப் பணியில் சேருவதற்கான உயர்ந்த அளவு வயது வரம்பை 25-லிருந்து 30 ஆக உயர்த்த வேண்டும் என்ற தமிழ்நாடு அரசிதழ் பதிவு பெறு அரசு அலுவலர்களின் சங்கத்தின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that many persons who have registered their names in the Employment Exchange are given only temporary jobs for two or three months and again they have to go back to the Employment Exchange for renewal of their names. By the time they get permanent jobs, they would be more than 25 years. So, will the Government show some concession to the persons who have got temporary jobs by relaxing the age restriction so that they can get permanent jobs?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் அதன் உட்பொருளை உணர்ந்துகொண்டு விளக்கம் அளித்திருக்கிருர்கள். அவைகளை எல்லாம் பரிசீலனை செய்துபார்த்து, ' மத்திய சர்வீஸ் கமிஷனில்—அவர்கள் 24 வயது என்றிருந்ததை 26 என்று உயர்த்தி

இருக்கிறார்கள்; நீங்கள் 25-ல் இருந்து 30 ஆக உயர்த்தலாமே' என்று தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்குத் தெரிவிக்கப் பட்டது. அவர்கள் அது சாத்தியமில்லை என்று தெரிவித்திருக் கிறார்கள். மீண்டும் மத்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் இருப்பது போல் 26 வயதாக உயர்த்தலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அதுபற்றி பரிசீலனை செய்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே. கேரளா பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் பின்தங்கிய வகுப்பினருக்கு 28 வயது என்று வைத்திருக்கிறார்கள். அதேமாதிரி தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலும் உடனடியாகப் பின்தங்கிய வகுப்பினருக்கு வயது வரம்பை 28 என்று நிர்ணயிக்க தமிழ்நாடு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நம் முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பின்தங்கிய வகுப் பினர்களுக்கு—சாதாரணமாக எல்லோருக்கும் வயது வரம்பு 25 என்றிருந்தாலும்—கூடுதல் கல்வித் தகுதி இருந்தால் வயது வரம்பே கிடையாது என்ற நிலை இருக்கிறது. கேரள அரசைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி பரிசீலனை செய்யவேண்டும். அதிலும் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 30 வயது வரை தளர்த்திக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. கூடுதல் கல்வித் தகுதி பெற்றிருப்பார்கள். ஆனால் வயது வரம்பே இல்லாத நிலை இருக்கிறது. மேலும் பின்தங்கிய வகுப்பினர் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதுவதற்கு இரண்டு முறை பீஸ் கட்ட வேண்டியதில்லை என்றிருந்தது. இப்போது அதை மூன்று தடவை ஆக்கியிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எப்போதுமே பீஸ் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அறிவர்.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, ஒருவர் 10 (ஏ) (i) விதிப்படி ஒருமுறை வேலை வாய்ப்பு பெற்று விட்டாலே, சர்வீஸ் கமிஷன் தேர்வு அப்பியர் ஆவதற்கு வயது இன்னதுதான் என்று குறிப்பிடாமல் இருக்கச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தக் கேள்விதான் ஏற்கனவே கேட்கப்பட்டது. அதற்கு நான் பதில் அளித்து விட்டேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, அரசு முடிவு செய்யும்போழுது, ஏற்கெனவே 25 வயது ஆகிவிட்டது என்ற காரணத்தினாலே உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கு அந்த உரிமை யைக் கொடுக்க வழி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முடிவு எடுக்கிற நேரத்தில் அதுபற்றி யோசிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, வயதைக் கூட்டுவதற்கு அரசாங்கம் யோசித்துக் கொண்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனாலே, ரிடையரிங் ஏஜ் எதாவது மாற்றியமைக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி ஒன்றும் உத்தேசம் இல்லை.

*Sale of liquor and toddy.*

* 298 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to bring under the co-operative fold, the sale of liquor and toddy instead of the present system of auctioning of the shops; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : துணைத் தலைவர் அவர்களே, கடைகளை தனிப்பட்டவர்களுக்கு ஏலம் விடுவதன்மூலம் அதிகப் படியான லாபம் அவர்களுக்குக் கிடைக்கிறதே, அதை மாற்றி கூட்டுறவு முறையிலே அதை நடத்தினால் இன்னும் அதிகமான லாபம் சர்க்காருக்கு வருமே, அதை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது இயலாத ஒன்று என்று எண்ணி அந்த முறையை மேற்கொள்ளவில்லை.

[1972 ஆகஸ்ட் 24

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு ஓராண்டு முடிந்து விட்டது. இந்த ஓராண்டிலே, மதுவிலக்கு ரத்தினாலே, இந்த மாநிலத்து மக்களின் வாழ்க்கைத்தரம் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற ஆராய்ச்சியை அரசு செய்துள்ளதா? இல்லையென்றால் ஆராய்ச்சி செய்ய உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சார்ந்துள்ள கட்சி ஆளுகின்ற மாராட்டியத்திலே மதுவிலக்கை ரத்து செய்திருக்கிறார்கள். அங்கு எப்படி வாழ்க்கைத்தரம் இருக்கிறதோ, அதைப் போலத்தான் இங்கும் இருக்கிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** அவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஹோல்சேல் ஏஜென்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையை மாற்றி, கோவாப்பரேட்டிவ் யூனியன்களுக்கு அந்த ஹோல்சேல் ஏஜென்சி கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

### கள்ளக்குறிச்சிக்கு தீயணைப்பு நிலையம்

* 299 வினா—திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சியில் தீயணைப்பு நிலையம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) கள்ளக்குறிச்சியில் தீயணைப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) தீயணைப்பு நிலையத்திற்கான கட்டடம் கட்டி முடிந்தவுடன் தீயணைப்பு நிலையம் இயங்கத் தொடங்கும்.

**திரு. ந. தருமலிங்கம் :** துணைத் தலைவர் அவர்களே, அதற்குரிய இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா? எவ்வளவு நாட்களில் தீயணைப்பு நிலையம் அமைக்க பரிசீலனை செய்யப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.



1972 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது 1970-71-ல் மணலி, கள்ளக்குறிச்சி, ஜெயங்கொண்டசோழபுரம் இந்த 3 இடங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தகவல். வரைபடங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன, தயாரானதும் கட்டடங்கள் தொடங்கும். அதற்குரிய தொடராச் செலவு ரூ. 2,15,000, தொடரும் செலவு ரூ. 1,21,000 ஆகும்.

### மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு

* 300 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 18—12—1971 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்று சென்னையில் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த கலெக்டர்களுடைய மாநாட்டில், யுத்தம் நடந்த காரணத்தினால், அந்த யுத்த காலத்திலே என்ன செய்வது, எந்தமாதிரி கமிட்டி அமைப்பது என்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது அந்த மாவட்ட ரீதியான கமிட்டிகள் செயல்படுகின்றனவா, செயல்படவில்லையா? செயல்படுகிறது என்று சொன்னால் எம்மாதிரி செயல்படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது கமிட்டிகள் இருக்கின்றன, கலைக்கப்படவில்லை. ஆனால் செயலற்றிருக்கின்றன.

### சென்னை நகரிலுள்ள சாலைகள்

* 301 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் எந்தெந்த சாலைகள் அண்மையில் அகலப்படுத்தப்பட்டன?

---

* 389-390-ஆம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

[1972 ஆகஸ்ட் 24

(இ) அப்பொழுது சாலை ஓரங்களில் அப்புறப்படுத்தப்பட்ட நிழல் தரும் மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை வளர்க்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) விரிவுபடுத்தப்பட்ட சாலைகளின் பட்டியல் @ ஒன்று அவையின் முன் வைக்கப்படுகின்றது.

(இ) அப்புறப்படுத்தப்பட்ட நிழல் தரும் மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்கள், புதை வடிகால்கள், மேனிலைக் கம்பிகள் போன்ற தடைகள் இல்லாத இடங்களிலும், விரிவாக உள்ள நடைபாதைகளிலும் நடப்பட்டு வருகின்றன.

**திரு. என் கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அணி தேர் புரவி ஆட்பெரும் படையொடு மன்னர்க்கு இருக்க—
நிழல்தரும் மரங்களெல்லாம் தமிழ்நாட்டின் சாலை ஓரங்களில் இருந்த நிலைமாறி, இப்பொழுது இருக்கின்ற மரங்களையும் வெட்டுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறதே, இதனைத் தடுத்து நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அணி தேர் புரவி ஆட்பெரும் படையொடு மன்னர்க்கு இருக்க . . . மரங்கள் வைக்கப்பட்டன. இப்பொழுது கார்கள் எல்லாம் போவதற்கு வழிகள் செய்யவேண்டிய காரணத்தினால் இந்த மரங்களை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, சாலையை அகலப்படுத்த வேண்டுமென்ற குறைபாடும் இருக்கிறது. இல்லாவிட்டால் சென்னை நகரப் போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க முடியாது. பிற்காலத்தில் சாலைகள் இவ்வளவு அகலம் ஆகும் என்று எண்ணாத காலத்தில் மரங்கள் வைக்கப்பட்டன. கூடுமான வரையில் இந்த மரங்கள் அகற்றப்படக் கூடாது என்ற எண்ணத்தை வைத்துத்தான் அகற்றப்படாமல் இருக்கின்றன. இருப்பினும் சில இன்றியமையாத நேரங்களில் மரங்கள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன. தேவையான இடங்களில், மரங்கள் வைக்கப்படுகின்றன. அதைக் கவனத்தில் கொண்டுதான் ராஜ்பவன் சாலையில் இருமருங்கிலும் போக்குவரத்துக்கு இடைஞ்சல் எதுவும் இல்லாததால், அங்கே 30 நிழல் தரும் மரங்கள் நடப்பட்டிருக்

@ 391-394-ஆம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1972 ஆகஸ்ட் 24]

கின்றன. 40 மரங்கள் எட்வர்டு எலியட்ஸ் சாலையிலே நடப்பட்டிருக்கின்றன. 6 மரங்கள் ஆற்காடு சாலையிலே நடப்பட்டிருக்கின்றன. எங்கெங்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறதோ. அங்கங்கு மரங்கள் நடப்படுகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், பெர்லின் போன்ற பெரிய நகரங்களில் சாலைகள் இருக்கின்றன. அவற்றை 4 பகுதிகளாக பிரித்து, அதிகமான மரங்கள் நடப்பட்டு, இன்றைக்கும் இருக்கிறதே, அதேமாதிரி அண்ணா சாலை போன்ற இடங்களிலே ஏற்கெனவே இருக்கிற மரங்களையாவது வெட்டாமல் இருப்பதற்கும் முடிந்த இடங்களிலெல்லாம் மரங்களை வைப்பதற்கும் அரசு தனியாக ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட வசதியான இடங்களில் மரங்கள் வைக்க வேண்டுமென்ற எண்ணத்தை இப்பொழுது மாநகராட்சி மன்றம் கொண்டிருக்கிறது. மாநகராட்சி மன்றத்திற்கு ஒரு யோசனையும் சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, சிறு கன்றுகளாக வைத்துத் தண்ணீர் ஊற்றி வளர்ப்பதைவிட, ஒரு குறிப்பிட்ட இடத்திலோ, அல்லது பண்ணையிலோ, அல்லது தோட்டத்திலோ, 8 அடி, 10 அடி, 15 அடி உயரம் மரங்களை வளர்த்து விட்டபிறகு, அவற்றை வேரோடு பறித்துக்கொண்டுவந்து இந்தச் சாலைகளின் ஓரங்களில் நடுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த முயற்சியை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, நலனும் இருப்பதால், அவற்றை வேரோடு கொண்டுவந்து வைப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த முயற்சியை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டிருக்கிறது.

*Ambasamudram market.*

* 302 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether it is a fact that it has been pointed out in the Audit Report that the President of the Ambasamudram Town Panchayat had not paid the licence fee of Rs. 1,050 for 1967–68 towards the market building owned by him and that the amount should be realised from him; and

(b) if so, the action taken thereon?

[1972 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஒப்பந்தப்படி [illegible] கட்ட, உரிமக் கட்டணம் கட்டவில்லை என்பதைப்பற்றி இல்லை. அந்த பதிலுக்குப் பின்பு இந்த தணிக்கைக் குறையும் கூட நீக்கப்பட்டுள்ளது.

**திரு. ச. தங்கமுத்து தேவர் :** தலைவர் அவர்களே, இது ஒப்பந்தப்படி கட்டாமலிருந்து தணிக்கையில் கண்டபடி, இந்த பணத்தை [illegible] செய்யவேண்டுமென்று ஒரு வேண்டுகோள் கூட்டுறவு [illegible] செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா? அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, திரு. ராஜலிங்க ராஜாவுக்குச் சொந்தமான மார்க்கெட்டுக்கு 1966-67-க்கான [illegible] பாக்கி இருந்தது போலவும், 1967-68-க்கு அப்பொழுதிருந்த தலைவர் நடவடிக்கை எடுக்காதது போலவும் கருதப்படுகிறது. ஆனால், நிலைமை அப்படியல்ல. 1967-68-க்கு லட்சுமணனும் அவருடைய சோதரர் விஜயேந்திர மூப்பனாரும் உரிமம் பெறுவதற்கு ரூ. 1,050 கட்டினார்கள். அப்பொழுது திரு. ராஜலிங்க ராஜா அவர்களும் உரிமம் பெற ரூ. 1,050 கட்டினார்கள். 17-3-1967-ம் நாளன்று உரிமத்தை, திரு. எஸ். பி. லட்சுமணனுக்கும் அவருடைய சோதரர் விஜயேந்திர மூப்பனாருக்கும் அளிப்பது என்றும் உரிமம் அளிக்கப்படாத ராஜலிங்க ராஜாவுக்கு ரூ. 1,050-ஐ திருப்பிக் கொடுத்துவிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது அதற்கேற்ப ராஜலிங்க ராஜா கட்டிய பணம் திருப்பித் தரப்பட்டது. அது திருப்பித்தரப்பட வேண்டியதில்லையென்று தணிக்கைக் குழு சொல்லியது. இரண்டு பேரும் பணம் கட்டியதன் காரணமாகவும் ஒருவருக்கு உரிமம் அளிக்கப்பட்டதாலும் மற்றொருவருக்குப் பணம் திருப்பித் தரப்பட்டது என்று கூறப்பட்ட அந்த முடிவைத் தணிக்கைக் குழு ஏற்றுக்கொண்டது.

தமிழ்ப் பல்கலைக்கழகம்.

* 303 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனித் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1972 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, தனித் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழகத்திலே இன்று நிறுவப்படாவிட்டாலும், தமிழ் மொழியினுடைய ஆழ்ந்த ஆராய்ச்சிக்காக, உலகத் தமிழ் மாநாட்டில் பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கும் ஒதுக்கப்பட்ட பணம் எப்படி செலவழிக்கப்படுகிறது என்று அரசு கண்காணிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் மூன்று, மூன்று லட்சம் ரூபாய் வீதம் திருக்குறள் ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்டது. அந்த ஆராய்ச்சித் துறைக்கு ஆராய்ச்சி வல்லுநர்கள் நியமிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் 3 நூல்கள் இதுவரையில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் நூல்கள் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. மதுரைப் பல்கலைக் கழகத்தின் மூலமாக இரண்டு நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. ஒதுக்கப்பட்ட பணத்தின் அடிப்படையிலே எத்தனை ஆராய்ச்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டுமோ அத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டு ஆராய்ச்சி முறையாக நடைபெற்று வருகிறது.

**திரு. செ. கந்தப்பன் :** அகில உலகக் கல்விப் பண்பாட்டு நிறுவனத்தின் உதவியோடும் மத்திய அரசின் உதவியோடும் உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் ஒன்று சென்னையிலே நிறுவுவதுபற்றி முடிவுசெய்யப்பட்டதே, அது ஏற்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். தமிழ்நாடு இந்தியாவில் மட்டுமல்ல, வேறு நாடுகளிலும்கூடத் தமிழைப் பல்கலைக் கழக மொழியாக இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசின் உதவியோடு தமிழ்ப் பல்கலைக் கழகங்களாக தமிழக அரசு ஆவன செய்ய முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டு இருக்கிறது. அதற்குத் தாற்காலிக இயக்குநராக மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சேலம் கல்லூரி முதல்வராக இருந்த திரு. மீனாட்சி

அவர்கள் அதற்குச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றத் துறைகள் எல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன.

## கள்ளக்குறிச்சிக்குக் கலைக்கல்லூரி

*** 304 வினா—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் ஒரு கலைக் கல்லூரி கட்டும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். தருமலிங்கம் :** மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள், அங்கே கலைக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்த இடம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்பதால் இதைப்பற்றி மீண்டும் பரிசீலனைசெய்து அந்தக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கள்ளக்குறிச்சிக்குப் பக்கத்திலுள்ள விருத்தாசலத்தில் ஒரு கலைக் கல்லூரி இருக்கிறது. அதுமட்டுமல்ல, ஆத்தூரிலே ஒரு கல்லூரி வந்து இருக்கிறது. கள்ளக்குறிச்சியிலே ஒரு கல்லூரி வரவேண்டுமென்றால் 5 லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கப்படவேண்டும், அத்தோடு 40 ஏக்கர் நிலமும் அளிக்கப்படவேண்டும். தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கல்லூரிகள் பக்கத்திலே பக்கத்திலே அமைந்திருக்கின்ற காரணத்தினால் புதிதாக இப்பொழுது அங்கே ஒரு கலைக் கல்லூரி தேவையில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

## புதிய உயர்நிலைப் பள்ளிகள்

*** 305 வினா—திரு. டி. வி. சம்பத் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் 5 மைல் சுற்றளவிற்கு ஒரு உயர்நிலைப் [illegible] வேண்டும் என்று வரம்பு ஏதேனும் உள்ளதா?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கட்டாயமான வரம்பு இல்லை.

**திரு. டி. வி. சம்பத் :** தலைவர் அவர்களே, தற்போது கிராமப் புறங்களிலே இருக்கிற மக்கள் படிப்பதற்கு ஆர்வம் காட்டுகிற இந்தச் சமயத்தில் மூன்று மைல் தூரத்தில் உள்ள கிராமங்களுக்கு எல்லாம் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு உயர் நிலைப்பள்ளிகளை அமைக்க அரசு முன்வருமா.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக கருத்து மேற்கொள்ளப்பட்டிருப்பது. ஐந்து மைல்கள் சுற்று வட்டாரத்திற்கு ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கவேண்டும் என்பது தான். அந்த நிலையில் அந்த உயர்நிலைப்பள்ளியில் போதுமான அளவுக்கு மாணவமாணவியர்கள் வந்தபிறகு வேண்டுமானால் இரண்டாவது உயர் நிலைப்பள்ளி அமைப்பதுபற்றிப் பரிசீலிக்க லாம். இப்பொழுதுகூட சில உயர்நிலைப்பள்ளிகளில் போதுமான அளவுக்கு மாணவமாணவியர்கள் கிடைக்காத நிலையில் மொத்தம் இரண்டு ஆயிரத்து அறுநூற்றுச் சில்லரைப் பள்ளிகளில் 600 பள்ளி களில் போதுமான மாணவ மாணவியர் வந்து சேராத நிலையில் 6 பேர்கள், 7 பேர்கள், 8 பேர்கள் என்றளவிற்குத்தான் மாணவர்கள் ஒரு வகுப்பிலே இருக்கின்ற அளவுக்கு இருக்கின்றன. அவை யெல்லாம் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட உயர்நிலைப்பள்ளிகள் என்ற காரணத்தினால்தான் அவைகளையெல்லாம் மூடாமல் வைத் திருக்கிறோம். போதுமான மாணவ மாணவியர்கள் சேருவார்கள் என்ற நம்பிக்கை இருந்து நிதி முதலிய வசதிகள் எல்லாம் இருந்தால் அப்படிப்பட்ட நிலைமையிலே வேண்டுமானால் அனுமதி அளிக்கப் பரிசீலனை செய்யப்படுகிறது.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister has stated that there are several schools where we do not have enough students. But there are several areas in Tamil Nadu where wo do not have enough high schools. So, may I know whether the Government have taken concrete steps to increase the number of high schools to solve the problem of admission especially during the month of June?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதற்கான முயற்சியிலேதான் அரசு ஈடுபட்டு இருக்கிறது. இந்த ஆண்டு கூட வரவு-செலவுத் திட்டத்திலே 40 உயர்நிலைப் பள்ளிகள்

[1972 ஆகஸ்ட் 24

ஏற்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும்கூட இந்த ஆண்டு 54 உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்துவதற்கு, அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது, நிதி வசதிகளைப் பொறுத்தும், மக்கள் தொகை மாணவ மாணவிகள் சேரும் நிலை, நெருக்கடி நிலைகள் இவற்றையெல்லாம் பொறுத்தும் இந்த ஆண்டு அதிகமான அளவிலே 54 உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.

**திரு. ப. முத்துசாமி :** புதிதாக உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த வேண்டுமானல் அதற்காக மக்கள் கொடுக்கவேண்டிய பங்குத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, பள்ளி பராமரிப்புச் செலவுக்காக 10 ஆயிரம் ரூபாய், முன்பணமாகவும், 5 ஏக்கர் நிலமும் கிடைப்பதற்கு வழிசெய்ய வேண்டும், அதோடு, கட்டடம் கட்டுவதற்கு 12,500 ரூபாய் ஈட்டு மானியமாகக் கொடுக்கவேண்டும், அப்படிக் கொடுத்தால் அதற்குப் பிறகு அரசாங்கம் அதற்குரிய தொகையைக் கொடுக்கும். தற்காலிகமாகப் பள்ளியை நடத்துவதற்கு வசதிகள் செய்துதர வேண்டும், வேறு எந்தப் பள்ளிக்கும் போட்டியாக இருக்கின்ற அளவிலே இருக்கக்கூடாது. இது எல்லாம் அரசாங்கத்தின் சார்பிலே பள்ளி அமைக்கப்படுவதற்கு வேண்டியவையாகும். தனியார்கள் அமைக்கவேண்டுமானல் வேறு எந்தப் பள்ளியும் அதனல் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும், 1 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும், அதிலே முதலில் 50 ஆயிரம் ரூபாயும் பிறகு ஆண்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதமும் கொடுக்கவேண்டும். நிர்வாகத்தில் தேவைப்படும் பங்குத் தொகையும், பராமரிப்புச் செலவிற்காக 5 ஆயிரம் ரூபாய் ஆண்டிற்கும் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலேயும் இதைத்தவிர இன்னும் சில நிபந்தனைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

***306 வின—திரு. வெ. குருசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வாண்டு முதல் ஏற்படுத்தப்படும் ?



1972 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**விசைப்படகுகள் ஒதுக்கீடு**

***307 வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைப் படகு ஒதுக்கக் கோரி சென்ற ஆண்டில் எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?

(இ) எத்தனை பேருக்கு ஒதுக்கப்பட்டது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) மீனவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் நடைமுறை 1968 முதல் நிறுத்தப்பட்டது. எனினும், அகதிகள் வேலையிழந்த பொற்கொல்லர்கள் ஆகியோரிடமிருந்து வரும் விண்ணப்பங்களைப் பதிவு செய்வதை அரசு அனுமதித்தது. அவ்வண்ணமே, 1971-72-ல் 6 விண்ணப்பங்கள் வரப்பெற்றன.

(இ) 1971-72-ல், 154 படகுகள் (32 அடி நீளமுள்ள 44 படகுகளும், 30 அடி நீளமுள்ள 110 படகுகளும்) அதே எண்ணிக்கையுள்ள மீனவர் தொகுதியினருக்கு வழங்கப்பட்டன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, எஞ்சியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு எப்பொழுது ஒதுக்கப்படும். இந்த ஆண்டு எப்பொழுது குலுக்கல் நடைபெறும் ? குலுக்கல் நடைபெறும் பொழுது எல்லா விண்ணப்பதாரர்களுடைய சீட்டுகளும் ஒன்றாகச் சேர்த்துக் குலுக்கல் நடைபெறுமா? அல்லது மாவட்ட வாரியாக வந்த விண்ணப்பங்களை வைத்துக் குலுக்கல் நடைபெறுமா என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இன்னமும் 1,193 படகுகள் வழங்கப்பட வேண்டியிருக்கின்றன பயிற்சி பெற்றவர்கள் பயிற்சி பெருதவர்கள், வழங்கப்பட்ட இடம். வழங்கப்படாத இடம் என்ற அடிப்படையிலே விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பிறகுதான் இயக்குநர் அவர்கள் மாவட்டவாரியாக குலுக்கலை நடத்துகிருர்கள்.

**திரு. த. சோனையா :** தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்தில் இருந்து எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா? எத்தனை படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இராமேஸ்வரம் என்று இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்னமும் 89 படகுகள் கொடுக்கப்படவேண்டியிருக்கின்றன.

**திரு பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த விசைப் படகுகள் கோரி நிறைய மனுக்கள் வருவதால் அத்தனை பேர்களுக்கும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மனுக்கள் கொடுக்கிறவர்களில் தகுதி உள்ளவர்களுக்குத்தான் கொடுக்கலாம். தகுதி பெற்றிருக்கிறார்களா என்று பரிசீலனை செய்ததற்குப் பிறகுதான் குலுக்கல் சீட்டு முறையின் மூலமாகப் படகுகள் வழங்கப்படுகின்றன.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, does the Hon. Minister know that most of the 36-foot mechanised boats are out of order and if so, have the Government probed into the reasons for that?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி. மெக்கனைஸ்டு போட்ஸ் எத்தனை சீரடைந்திருக்கின்றன என்ற தகவல் என்னிடத்திலே இல்லை.

### நைலான் வலை தயாரிப்பு

* 308 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நைலான் மீன் வலை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆமெனில், எப்போது எந்த மாவட்டத்தில் ?





**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) தமிழ்நாட்டில் நைலான் வலை செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைக்க தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் முடிவு செய்துள்ளது.

(இ) அத் தொழிற்சாலையை சென்னையில் அமைக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது சென்னையில் அமைக்க ஏற்பாடு நடைபெறுவதாகக் கூறினார்கள். வட செங்கற்பட்டு மாவட்டத்தில் எண்ணூர் பகுதியிலாவது ஆரம்பாக்கம் பகுதியிலாவது ஏற்படுத்தினால் ஏராளமான மீனவர்கள் இருக்கும் பகுதியாக இருப்பதால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். அதை அமைச்சரவர்கள் கவனிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மீன் வலை நெய்யத்தான் இந்தத் தொழிற்சாலை. தமிழகத்தில் உள்ள எல்லா மீனவர்களுக்கும் இந்த வலையைக் கொடுக்க வேண்டும். ஒரு பகுதியில் அதிகமான மீனவர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக தொழிற்சாலையை அங்கு வைக்க வேண்டுமென்பது முறையல்ல. தொழிற்சாலை வைப்பதற்கான தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டதில் சென்னை தகுந்த இடமாக இருக்கிறது. ஆகவேதான் சென்னையில் வைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம்.

### *Ex-gratia payments for fishermen's families.*

* 309 Q.—THIRU K. P. KANDASWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) the number of petitions requesting ex-gratia grant received during 1971-72 from the families of the fishermen who had lost their lives in the sea; and

(b) the amount distributed as such grants?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) 50 மனுக்கள்.

(இ) ரூ. 53,000.

[1972 ஆகஸ்ட் 24

*Ceiling on stock of local grains.*

* 310 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to fix ceiling on grain stock holdings; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ) இப்பொருள் குறித்துப் பரிசீலிக்கப்பட்டு, தற்போதைக்குத் தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, இதற்கு உச்சவரம்பு இல்லாது போனால் பதுக்கலுக்கும், அதன்மூலம் விலையேற்றத் திற்கும், கள்ளச்சந்தைக்கும் வழிவகுப்பதாக இருக்கிறது. எனவே அதற்கு உச்சவரம்பு நிர்ணயிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இப் பொழுதிருக்கும் சட்டப்படியே ஒருவர் 40 குவிண்டாலுக்கு மேல் நெல்லோ அல்லது 25 குவிண்டாலுக்கு மேல் அரிசியோ வைத் திருந்தால் ஒரு வார காலத்திற்குள் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றிருக்கிறது. விவசாயிகள் எவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்பதுபற்றி உச்சவரம்பு கொண்டுவரலாம் என்று யோசித்தோம். அது இப்பொழுது தேவையில்லை என்று அரசு விட்டு வைத்திருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இந்த உச்சவரம்பில் யாராவது இதுவரையில் பிடிபட்டிருக்கிறார்களா? 40 குவிண்டா லுக்கு மேல் நெல்லோ, 25 குவிண்டாலுக்கு மேல் அரிசியோ வைத் திருக்கக் கூடாது என்ற சட்டப்படி இதுவரை ஏதாவது குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா? அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஏராளமாக இப்படிக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் சமீபத்தில் பிடித்திருக்கிறார்கள். அப்படி அதிகமாக வைத்திருப்பவர்களில் விவரம் தெரியாமல் வைத்திருப்பார்கள் என்று அங்குள்ள மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் கருதினால் அவர்களிடம் உள்ள நெல்லை



1972 ஆகஸ்ட் 24]

அரசாங்கம் 50 சதவிகிதம் கொள்முதல் செய்கிறது. வேண்டு மென்றே பதுக்கி வைத்திருந்தால் அரசாங்கம் அவர்கள்மீது வழக்கும் தொடரும். இப்பொழுது வழக்குத் தொடரவில்லை. எங்கெங்கு அதிகமாக இருக்கிறதோ அங்கே அரசாங்கம் கொள் முதல் செய்திருக்கிறது.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, மத்திய அரசின் குறிப்பு ஒன்று ஒருவர் 8 கிலோ அரிசிதான் சாப்பிடலாம் என்று இருக் கிறது. அந்த அளவிற்கு 8 கிலோ வைத்துக் கொள்ளலாம் என்ற அளவிலே உச்சவரம்பு நிர்ணயிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதுபற்றி எனக்குத் தகவல் இல்லை.

### ரெட்டையாபாளையத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள்

* 311 வினா—திரு [redacted] பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து பின்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி வட்டம், ரெட்டையாபாளையம் கிராமத்தில் சிலைகள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டனவா?

(இ) ஆம் எனில், மேற்படி சிலைகள் எங்கெங்கே ஒப்படைக்க பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) அறந்தாங்கி வட்டம், ரெடைபாளையம் என்ற கிராமத்தில்தான் சிலைகள் கண்டெடுக்கப் பட்டன.

(இ) அறந்தாங்கி வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, என்னென்ன சிலைகள் கண்டெடுக்கப்பட்டன என்கிற விவரத்தை அறியலாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, என்னென்ன சிலைகள் என்ற முழு விவரம் என்னிடத்தில் இல்லை. 7 சிலைகளும். 1 பாதரட்சை கட்டையும் வைக்கப்பட்டிருந்ததாக வும். 4 கைகள் உள்ள சிலையும் இன்னும் சில சாமான்களும் காணாமல் போய் அறந்தாங்கி தாசில்தாருக்கு அறிவிக்கப்பட்டு,

தாசில்தார் விசாரணை செய்து மேற்படி விக்கிரகங்களை ஜீப்பில் எடுத்துச் சென்று விட்டதாகவும், காணாமல் போன 4 கைகள் உள்ள லட்சுமி சிலையும் 9 அங்குலம் உயரம் உள்ள ஒரு சிறிய சிலையும் 1 பாதரட்சையும் சிறுவிளத்தூர் அழகிரிசாமியிடமிருந்து போலீசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

**திரு. த. சோணையா :** தலைவரவர்களே, இந்த சிலைகள் அடிக்கடி கண்டெடுக்கப்படுகின்றன. அப்படி கண்டெடுக்கப்படுகின்றபொழுது கிடைக்கின்ற சிலைகளிலே பெண் தெய்வங்களின் சிலைகள் இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் சொன்ன பதிலிலே லட்சுமி சிலை ஒன்றைச் சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்படிக் கண்டெடுக்கப்படும் சிலைகள் எப்படி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு காணாமல் போயிற்று? அல்லது ஒப்படைப்பதற்கு முன்னால் காணாமல் போனதா? அதைக் கண்டுபிடிக்க எத்தனை நாட்கள் ஆனது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, வட்டாட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது காணாமற் போக வில்லை. காணாமல் போனவற்றை கண்டுபிடித்து ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் சொன்னேன்.

**திரு ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, அடிக்கடி தமிழகத்தில் சிலைகள் காணாமல் போகின்றன. ஆகவே தொல் பொருள் ஆராய்ச்சி நிலையத்தால் ஒரே நோக்கிலே தமிழ்நாடெங்கும் எந்தெந்த மாவட்டத்தில் சிலைகள் இருக்கின்றன என்று கண்டு பிடிக்க அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதுபற்றி முதல்வரவர்களுக்குக் கேள்வி போட வேண்டும்.

### தையல் மிஷின்கள் தயாரிப்பு

***312 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் தையல் மிஷின் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் தொழில் துறையில் மிகமிகப் பின் தங்கியதாக இருந்துகொண்டு வருகிறது. எனவே இனிமேலாவது இத்தகைய ஒரு தையல் மிஷின் செய்யக்கூடிய சாதாரணத் தொழிற்சாலையையாவது அங்கு நிறுவ அரசுத்துறையில் இல்லாவிட்டாலும் கூட்டுறவுத் துறையிலாவது நிறுவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தையல் மிஷினைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் சென்னையில் ஏற்கனவே இரண்டு தொழிற்சாலைகள் அனுமதி பெற்றிருக்கின்றன.

### முகவை மாவட்ட வேலை வாய்ப்பகம்

***313 வினா—திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-ல் முகவை மாவட்ட வேலை வாய்ப்பு நிலையத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 21,515 பேர்.

### *Closed textile mills in Madurai district.*

* 314 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is a proposal to re-open the three closed Textile Mills in Madurai district, namely Raja Mills, Kothandaram Spinning Mills and Murugan Mills; and

(b) if so, the steps taken in this regard?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

## கிணறுகள் வெட்டக் கடன்

* 315 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகள்மூலம் கிணறு வெட்டக் கடன் பெற வேண்டுமானால் ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையில் 600 அடிக்குமேல் இடைவெளி இருக்கவேண்டும் என்று விதிமுறை ஏதேனும் விதிக்கப்பட்டுள்ளதா?

(இ) இதன் முக்கிய நோக்கம் யாது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) 600 அடி என்ற விதிமுறை இல்லை ஒரு கிணற்றில் விசையேற்றம் வைத்திருந்தால் மற்றொரு கிணற்றின் தண்ணீர் பாதிக்காமல் கிணறுகள் அமைக்கப்பட வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, நம்முடைய நாட்டின் நில அமைப்பு பல பாகங்களாகப் பிரிந்தும், பல இடங்களில் சிதறியும் இருக்கிறது. ஆகவே, ஏழை விவசாயிகள் பயனடைய இந்த விதிமுறையைத் தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கடந்த இரண்டு வாரங்களுக்குமுன்தான் இது கொஞ்சம் தளர்த்தப்பட்டிருக்கிறது. ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் உள்ள தூரம் என்பதை மாற்றி ஒரு தாலுக்காவில் இத்தனை கிணறுகள் என்று மாற்றியிருக்கிறோம்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the basis on which the Government are going to dig wells for getting water through pumpsets?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இதற்காக நமக்குத் தனியாக நிலத் துறை இயக்குநர், நிலத்து நீர் இயக்குநர் தண்ணீர் பாதிக்கப்படாது என்று நற்சான்றிதழ் வழங்க வேண்டும்.





**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் :** தலைவரவர்களே, இந்த கிணறு வெட்ட 600 அடி தூரம் என்பது ஆயில் எஞ்ஜின்கள், மின் ஏற்ற இயந்திரங்களுக்குத்தான் கணக்கில் எடுக்க வேண்டும். மற்றபடி தொலை ஏற்றம், கவலை போன்றவைகள் கணக்கில் வரக்கூடாது. எனவே. நிலவள வங்கிகளுக்குச் சுற்றறிக்கை விட்டு—இப்பொழுது 600 அடி தூரம் என்பதை எல்லாக் கிணறுகளுக்கும் கணக்கில் எடுக்கிறார்கள்—இந்த மின் ஏற்றங்களுக்கு மட்டும் கணக்கில் எடுக்க வேண்டுமென்று உத்தரவு இடப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வது உண்மை. விசையேற்றத்திற்குத்தான் இந்த கணக்கே ஒழிய, அதுவல்லாமல் கவலை வைத்திருந்தால் இது கணக்கில் எடுக்கப்படமாட்டாது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** துணைத் தலைவரவர்களே, இதில் லேண்ட் டெவலப்மெண்ட் பேங்க் மூலமாகக் கடன் கொடுத்து அதன் மூலமாக எத்தனை வீட்டுக் கிணறுகளில் தண்ணீர் வரவில்லை என்று ஏதாவது புகார் அரசுக்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, சில கிணறுகளில் தண்ணீர் வரவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. அதற்கு நிவாரணம் செய்ய ஏற்பாடுகள் ஆகிவிட்டன. அதற்காக மாநில நிலவள வங்கிகளில் தனியாக நிதி ஒதுக்கியிருக்கிறோம். அரசாங்கமும் கொடுக்கிறது.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, * இப்படி கண்டிஷன் போடுகிறார்கள். உலக வங்கியின் கட்டுப்பாட்டின்படி 600 அடி கிணறுவெட்ட முடியாது. உண்மையிலேயே ஹார்ட் ராக் ஏரியா என்றும் டெல்டாயிக் ஏரியா என்றும் பிரிக்கலாம். இந்த விதி டெல்டாயிக் ஏரியாக்களுக்கு மட்டும் பொருந்தும். தஞ்சாவூர் தென்னார்க்காடு மாவட்டங்கள் டெல்டாயிக் ஏரியாக்களாக இருக்கின்றன. மற்ற மாவட்டங்களெல்லாம் ஹார்ட் ராக் ஏரியாக்களாகத்தான் இருக்கின்றன. ஜியாலஜிகல் சொசைட்டி முடிவு செய்திருக்கிறது. எனவே இந்த கண்டிஷன்களை அதற்குப் பொருந்துமாறு அமைக்க உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1972 ஆகஸ்ட் 24

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சரவர்கள் பதில் சொல்வதற்கு முன், * * * என்று உறுப்பினர் சொன்னதைச் சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த விதி ஹார்ட் ராக்காக இருந்தாலும்சரி, சாஃப்ட் ராக்காக இருந்தாலும்சரி, ஒரு கிணற்றில் இருந்து விசையேற்றம் மூலமாகத் தண்ணீர் இறைக்கும்போது அடுத்த கிணறு பாதிக்கப்படக்கூடாது என்பது தான்.

திரு. ஏ. கே. துரைசாமி : இந்தத் திட்டத்தால் சிறு விவசாயிகள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை ரத்து செய்தாலொழிய விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இல்லை. ஆகவே, அந்தத் திட்டத்தினை ரத்து செய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ரத்து செய்வதாக இல்லை. இந்த ஒப்பந்தம் தமிழக அரசு சார்பாக நிதித் துறை செயலாளர் அவர்கள், மாநில நிலவள வங்கித் தலைவர், மத்திய அரசு, உலக வங்கி எல்லோரும் சேர்ந்து கையெழுத்திட்ட ஒப்பந்தம். இந்த விதி நியாயமாகவே தெரிகிறது. ஒரு கிணற்றில் தண்ணீர் இறைக்கும்போது அடுத்த கிணற்றில் தண்ணீர் பாதிக்கப் படக் கூடாது என்பது வேறு விஷயம்.

திரு. கே. கே. முத்தையா : 600 அடி என்பது ஒரு சிலர் பகுதிக்குத்தான் பொருந்தும். கனம் அமைச்சர் அவர்கள் பகுதியில் வேண்டுமென்றால் அப்படி இருக்கலாம். எங்கள் பகுதியில் இரண்டு மூன்று ஏக்கருக்கு இடையே கூட கிணறுகள் வெட்டுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதை மாற்றி யார் லோன் கேட்டாலும் கொடுக்கும் அளவில் விகிதாசாரத்தைத் திருத்தியமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மூலக் கேள்விக்கே விடை சொன்னேன். 600 அடி என்ற விதிமுறை இல்லை.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



1972 ஆகஸ்ட் 24]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இருபது நாட்களுக்கு முன்பாக அரசுத் துறை விவசாயச் செயலாளர் அவர்களும், பிராஜக்ட் ஆபீசர்களும் இது சம்பந்தமாகப் பேசினார்கள். பேசி அந்தந்த இடங்களில் இருக்கும் நிலைமைக்கேற்ப 600 அடி என்ற விதியைத் தளர்த்திக் கொள்ளலாம் என்ற முடிவை எடுத்துள்ளார்கள் என்று அறிகிறேன். அதை அமைச்சர் அவர்கள் அமல்படுத்த முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த வினாவுக்கு ஏற்கெனவே விடை சொல்லியிருக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் இடையில் இருக்கும் தூரம் இவ்வளவு இருக்க வேண்டுமென்பதை நீக்கிவிட்டு ஒரு வட்டத்திற்கு இவ்வளவு புதிய கிணறுகள் என்று நிர்ணயித்திருப்பதாகத் தெரிகிறது. புதிய கிணறுகள் இவ்வளவு இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா அல்லது ஒரு வட்டத்திற்கு இவ்வளவு கிணறுகள்தான் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புதிய கிணறுகள் எத்தனை, பழைய கிணறுகள் எத்தனை, விசையேற்றம் வைத்திருக்கக்கூடிய கிணறுகள் எத்தனை என்பதைப் பற்றி யெல்லாம் நிலவள இயக்குநர் அவர்கள் சான்றிதழ் கேட்டிருக்கிறார்கள்.

## பல்லடம் பகுதிக்குக் குழாய்க் கிணறுகள்

*316 வினா— திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சிப் பகுதியான பல்லடம் பகுதிக்குக் குழாய்க் கிணறுகள் அரசாங்கமே அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், எத்தனை குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட இருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** வறட்சிப் பகுதியில் குழாய்க் கிணறுகள் அமைத்து சர்க்காரே முழுச் செலவையும் செய்து எப்படி தஞ்சை போன்ற மாவட்டங்களில் அணைகளின் மூலம் தண்ணீர் கொடுக்கும்போது அதற்கு 30 ரூபாய், 35 ரூபாய் என்று வசூலித்துக் கொள்ளுகிறார்களோ அப்படி குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுத்து 30, 35 ரூபாய் வசூலித்துக் கொள்ளும் வகையில் அரசு குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுக்க முன் வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** 'இல்லை' என்று பதில் சொல்லும்போது கூட்டுறவுத் துறையில் இப்படிப்பட்ட திட்டம் இல்லையென்று சொன்னேன். உள்ளாட்சித் துறையில் சமுதாயக் கிணறுகள் என்ற திட்டத்தில் பல்லடம் தாலுகாவும் அடங்கு மென்று கருதுகிறேன்.

### கூட்டுறவுப் பண்ணைகள்.

* 317 **வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தற்போது கூட்டுறவுப் பண்ணை சாகுபடித் திட்டம் எங்கெங்கு நடைபெறுகிறது?

(இ) எத்தனை ஏக்கர் நிலத்தில் நடைபெறுகிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) தஞ்சை மாவட்டத்தில் 50 இடங்களில் குத்தகைதார் கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் நடைபெறுகின்றன.

விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை* ஒன்று சட்டப் பேரவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவு சாகுபடித் திட்டங்களின் கீழ் நடைபெறும் கூட்டுறவுத் திட்டங்கள் எந்த அளவுக்குச் சாகுபடி முறையில் முன்னேற்றம் அடைந் திருக்கிறது? சாகுபடியாளர்கள் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா?

---

* 395-398-ஆம் பக்கங்களில் மூன்றாம் இணைப்பாக வைக்கப்



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விவர அறிக்கையில் விடை இருக்கிறது. எவ்வளவு நிலம் சாகுபடியாளர்கள் கையில் இருக்கிறது, எவ்வளவு நிலங்கள் சாகுபடி செய்து வருகிறார்கள் என்ற விவரம் எல்லாம் விவர அறிக்கையில் இருக்கிறது.

### *Crop Insurance Scheme.*

* 318 Q.—THIRU K. KANDASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether there is any proposal to introduce Crop Insurance Scheme in this State; and

(b) if so, the present stage thereof?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மாநில அரசுகளுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட்ட இந்திய அரசின் மாதிரி மசோதா பரிசீலனையில் உள்ளது. 1970-ஆம் ஆண்டு, பயிர்க் காப்புறுதியைக் கொண்டுவரும் வாய்ப்புக் கூறுகள் குறித்து ஆய்வு செய்வதற்காக இரண்டு ஆண்டுகால அளவுக்கு ஒப்பளிக்கப்பட்ட முன்னோடித் திட்டத்தின் முடிவுகள். 1972 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன. அம்முன்னோடித் திட்டத்தின் முடிவுகள் கிடைத்த பின்னர், இவ்விஷயத்தில் மாநில அரசின் கருத்துக்கள், மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

**திரு. கே. கந்தசாமி :** மத்திய அரசு அனுப்பி வைத்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் இன்னும் மாநில அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதை விரைவில் பரிசீலித்து உடனடியாக அமல் படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அதற்கு என்று திட்டம் வகுக்கப்பட்டு ஒரு நாள் குறிக்கப்பட்டு அந்த நாளைப் பற்றியும் சொன்னேன். இரண்டு ஆண்டுகளுக்கு என்று திட்டத்தை வைத்து டிசம்பர் மாதத்தில் முடிக்க இருக்கிறார்கள். அது முடிந்த பிறகுதான் அதனுடைய ஆராய்ச்சி முடியும்.

[1972 ஆகஸ்ட் 24

### ஊத்துக்கோட்டையிலுள்ள விதைப் பண்ணை

*** 319 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டையில் உள்ள விவசாய விதைப்பண்ணை முழுமையாகச் செயல்படுகின்றதா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டையில் உள்ள அரசினர் விதைப் பண்ணை 37.33 ஏக்கரா பரப்பளவு கொண்டது. இப்பரப்பளவில் 1.92 ஏக்கரா கட்டடம் மற்றும் பாதைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைத்து நிலமும் பயிரிடப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** இந்த விதைப் பண்ணையில் எவ்வளவு லாபம் கிடைக்கிறது? அந்தப் பகுதியில் நல்ல வேளாண்மை நிலங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் இந்தப் பண்ணையை மேலும் விரிவுபடுத்தி சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தை அமல் படுத்த முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** செங்கற்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டையில் அரசு விதைப் பண்ணை 1956-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. 37.33 ஏக்கர் கையகப் படுத்தப்பட்ட நிலத்தில் இப்பண்ணை உள்ளது. இது நஷ்டத்தில் செயல்பட்டு வந்தது. 1967-68-ல் 3,840 ரூபாய் நஷ்டம்; 1968-69-ல் 7,852 ரூபாய் நஷ்டம். 1969-70-ல் 13,777 ரூபாய் நஷ்டம். வளம் குறைந்த மண்ணுகவும், நீர்க்கசிவு பூமியாகவும், ஆடுமாடுகள் அத்து மீறி நுழைவதன் காரணமாகவும் இந்த நஷ்டம் ஏற்பட்டது. 1970-71-ல் 1,239 ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. 1971 டிசம்பர் வரையிலும் உள்ள கணக்கைப் பார்த்தால் அதிலும் ஓரளவு லாபம் கிடைத்திருக்கிறது. இனிமேல் அந்த விதைப் பண்ணை நல்ல முறையில் லாபகரமாக நடக்க வாய்ப்பு இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆதாயம் வர என்ன முன்னேற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன? ஆடுமாடுகள் வருவது தடுக்கப்பட்டிருக்கிறதா? மண்வளம்



1972 ஆகஸ்ட் 24]

பெருகியிருக்கிறதா? அந்தப் பண்ணையை லாபகரமாக நடத்த முயற்சி செய்வார்களா? அப்படி இல்லையென்றால் மூடிவிடுவதற்காவது அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தண்ணீர் வசதி எந்தப் பகுதியில் இருக்கிறதோ அந்த அளவுக்குள்ள ஏரியாவில் பாசனம் நடைபெறுகிறது, லாபகரமாக நடக்கிறது. ஆடுமாடுகள் வருவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது ஓரளவு லாபம் வந்து கொண்டிருக்கிறது. மேலும் லாபம் வரக் கூடிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** இவ்வளவு குறைபாடுள்ள பண்ணை எந்தக் காலத்தில் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பதைக் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

### வெங்காயம் ஏற்றுமதி.

*** 320 வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து விவசாயிகளுக்கு வெங்காயம் வெளிநாடு மார்க்கெட்டுகளுக்கு ஏற்றுமதி இல்லாத காரணத்தால் வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே வெங்காய சாகுபடி ஏராளமான விவசாயிகள் செய்து கொண்டிருந்தார்கள். அதை இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த காரணத்தினுல் அவர்களுக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. ஆனால் அது இன்றைக்கு

[1972 ஆகஸ்ட் 24

மாற்றப்பட்டு, அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, இலங்கை போன்ற நாடுகளிலே வெங்காயத்திற்கு மார்க்கெட்டை தேடித் தர அரசாங்கம் முன் முயற்சி எடுத்து ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் இப்பொழுது ஒன்றும் விலைவு குறை வாக இல்லை. வெங்காயம் அப்படி ஒன்றும் தேங்கிக் கிடக்க வில்லை. இன்றைக்கும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி நடந்து கொண்டுதான் இருக்கிறது. இலங்கை ஒன்று மட்டும்தான் அந்த ஏற்றுமதியைத் தடை செய்திருக்கிறது என்றாலும், வெங்காயம் ஏற்றுமதி 1969-70-லே 1 இலட்சத்து 90,000 டன்னும், 1971-72-லே 2 இலட்சத்து 8,000 டன்னும், 1971-72-லே 2 இலட்சத்து 28,000 டன்னும் செய்திருக்கிறோம்.

**திரு. நா. வீராசாமி:** முன்பெல்லாம் தமிழகத்திலே சொல்லாற்றல் பெற்றவர்களுக்கே வெங்காய பெர்மிட் கொடுத்ததாகவும், இப்பொழுது தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட தலைவர்கள் கட்சிமாறிய காரணத்தால் அது எல்லாம் நிறுத்தப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அது பற்றி உறுப்பினருக்கு தெரியும் போல் இருக்கிறது. அதைப் பற்றி என்னிடம் தனிப்பட்ட முறையில் கேட்டால், நான் பின்னால் சொல்லுகிறேன் என்று உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1969-70, 1970-71, 1971-72 ஆகிய மூன்று ஆண்டுகளில் வெங்காயம் எவ்வளவு ஏற்றுமதியானது என்பதைத் தெரிவித்தார்கள். இதில் மலேயாவுக்கும், சிங்கப்பூருக்கும் மாத்திரம் இந்த ஆண்டிற்கும் இதற்கு முந்திய ஆண்டிற்கும் எவ்வளவு ஏற்றுமதி ஆனது என்பதைச் சொல்ல முடியுமா? இலங்கைக்கு ஏற்றுமதியானதை இந்த நாடுகளுக்கு ஈடுகட்ட முடிந்ததா என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதற்குத் தனித் தனியாக விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், பிறகு நான் பதில் சொல்லுகிறேன்.



1972 ஆகஸ்ட் 24]

**திரு. சோ. அழகர்சாமி:** அப்படி வெங்காய ஏற்றுமதி மலேசியா விற்கும் சிங்கப்பூருக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது தனியார் மூலமாகவா அல்லது அரசாங்கமே இதைச் செய்ததா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தனியார் துறை யினாலும், ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனாலும் ஏற்றுமதி செய்யப் பட்டது.

**திரு. சு. துரைசாமி:** தற்பொழுது ரெயில்வே வாகன் சரியாகக் கிடைக்காததால் கடந்த ஒரு மாதகாலமாக வெங்காய வியாபாரி கள் கஷ்டப்படுகிறார்கள். இதனால் வெங்காய ஏற்றுமதி தேங்கி விட்டது. இந்தக் குறைபாட்டினை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முயற்சிக்கிறோம்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, வெங்காயம் சாப்பிடுவதால் ரத்தத்திலே இருக்கிற 'கொலாஸ்ட்டல்' என்ற பொருள் குறைந்து 'ஹார்ட் அட்டாக்' போன்ற வியாதிகள் வராமல் இருக்கிறது என்கிறார்கள். இது பலருக்குத் தெரிவதில்லை. எனவே, இதை அரசாங்கம் விளம்பரப் படுத்த பிரச்சாரம் செய்யுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வெங்காயத்தின் விலை உள்நாட் டிலே அடிக்கடி ஏறுவதும், இறங்குவதுமாக இருக்கிறது. அது சமயத்திலே கிலோ 70 பைசா என்று விற்கிறது; இன்னொரு சமயத் திலே ஒரு ரூபாய் 70 பைசா என்று விற்கிறது. வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதால் இப்படி உள்நாட்டு விலை பாதிக்கப்படுகிறதா? நம்முடைய தேவைக்கு இல்லாமலேயே வெங்காய ஏற்றுமதிக்கு அரசாங்கம் அனுமதி கொடுத்து விடுகிறதா? இவைகளை எல்லாம்

கவனித்து வெங்காயத்தின் விலை உள்நாட்டிலே ஏறாமல் இருப்பதற்கு அரசாங்கம் கண்காணித்து, தக்க அளவிலே ஏற்றுமதி செய்வதற்கு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நமது நாட்டிலே எல்லாப் பொருள்களின் விலையும் திடீரென்று ஏறுவதெல்லாம் வியாபாரிகளின் தந்திரத்தால்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலே குறிப்பாக எந்தப் பொருட்களின் உற்பத்தி குறைகின்றனவோ அந்த நேரத்திலே விலை ஏறும். அந்தப் பொருள் உற்பத்தி அதிகமாக இருக்கிற சீசனிலே விலை குறையும். ஏற்றுமதி காரணமாக மாத்திரம் அந்த விலை ஏற்றம் வருவதில்லை. விலை ஏற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசாங்கமும் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

சுற்றுலாப் பேருந்துப் பணி

* 321 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக போக்குவரத்துத் துறை பேருந்துகள் மூலமாக சென்னை நகரிலிருந்து மாநிலத்தின் முக்கியப் பகுதிகளுக்கு சுற்றுலா சென்று வர பயணிகளுக்கு ஏற்பாடு செய்வதா அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தற்போது இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** வாரம் ஒரு முறை மாமல்லபுரத்திற்குச் செல்ல தனிப் பேருந்துகள் விடுவதுபோல், தமிழ்நாட்டிலே இருக்கும் முக்கியப் பகுதிகளுக்கு விடுமுறை நாட்களிலே சென்று வர தனி சுற்றுலாப் பேருந்துகளை விட தமிழக போக்குவரத்துத் துறை பரிசீலித்து ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர்களே, இந்த சுற்றுலாவிற்காக பேருந்துகளை விடும் பணியை சுற்றுலா வாரியம் கவனித்து வருகிறது. அவர்களிடத்திலே இரண்டு சீர்வசதி பேருந்துகள் இருக்கின்றன. இந்தப் பணியை அவர்கள் மேற்கொள்வதுதான் சரியே ஒழிய, தமிழக போக்குவரத்துத் துறை மேற்கொள்வது சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.



*Thanjavur Big Temple.*

* 322 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government had received a letter on 17th July 1970 from the Civic Association, Ponvilainthakalathur, requesting for the introduction of a bus service through their village either to Chingleput or Pondicherry; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) பல்லவா போக்குவரத்துக் கழகம், 129-சி எண் வழித் தடத்தில், சென்னை—பொன்விளைந்தகளத்தூருக்கு செங்கல்பட்டு வழியாக புதிய பேருந்துப் பணியை 13—4—1972 முதல் தொடங்கியுள்ளது.

நாதசுரப் பயிற்சியாளர்கள்

* 323 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவையாறு, வலிவலம் ஆகிய இடங்களில் உள்ள நாதசுரப் பள்ளிகளில் எத்தனை பேர் பயிற்சி பெறுகிறார்கள் ?

(இ) அங்கு பயிலும் மாணவர்கட்கு உதவிப் பணம் வழங்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் :** (அ) திருவையாறு நாதசுரப் பள்ளியில் 23 மாணவர்களும், வலிவலம் நாதசுரப் பள்ளியில் 17 மாணவர்களும் பயிற்சி பெறுகிறார்கள்.

(இ) இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த திருவையாறு, வலிவலம் ஆகிய இடங்களிலுள்ள நாதசுரப் பள்ளிகளிலே பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை ஏதேனும் வழங்குகிறதா ? இந்தப் பள்ளிகளிலே பயிற்சி முடிந்ததும் அந்த மாணவர்களுக்கு நற்சான்றிதழ் கொடுக்கப்

படுவதுடன், பட்டங்கள் ஏதேனும் வழங்கப்படுகிறதா ? அதைப் பற்றி பரிசீலித்து ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அரசு உதவித் தொகை எதுவும் தருவதில்லை. அங்கு வந்து பயிலுகின்ற மாணவர்களுக்கு உண்ண உணவும், இருக்க இட வசதியும் இலவசமாகச் செய்து தருகிறார்கள். அங்கே நான்கு ஆண்டுக் காலம் பயிற்சிப் பெற்றதற்குப் பிறகு, நாதஸ்வரத்திலே பயிற்சி பெற்றவர்களுக்கு "நாதஸ்வர இசை மணி" என்றும், தவிலிலே பயிற்சி பெற்றவர்களுக்கு "தவுல் நாதமணி" என்றும் பட்டத்தை வழங்குகிறார்கள்.

## Thanjavur Big Temple.

* 324 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether it is a fact that the State Government has urged the Union Government to permit the tourists visiting Thanjavur to go up to the High Tower of the Big temple; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## இராமேஸ்வரம் கோயில்

* 325 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்

திரு. ச. சங்குமுத்துத் தேவர் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972 சனவரியில் இராமேஸ்வரம் கோயிலில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதனால் ஏற்பட்ட நட்டம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) சுமார் 1½ இலட்சம் ரூபாய் என மதிப்பிடப்படுகின்றது.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்தத் தீ விபத்து எப்படி ஏற்பட்டது என்பதன் விவரம் அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அந்த இராமேசுவரக் கோயிலினுடைய உட்பிரகாரத்திலே சில பேர் கடைகளை வைத்திருக்கிறார்கள். அங்கே, ஒரு சிறு மெழுகு விளக்கை உட்பிரகாரத்தில் ஒருவர் உள்ளே வைத்துவிட்டுச் சென்றுவிட்டதால், அது கீழே விழுந்து, அந்த விளக்கின் மூலம் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. அதனால் பக்கத்திலே இருந்த கடைகளுக்கெல்லாம் தீ பரவி, அங்கே இருக்கின்ற கோயிலின் மண்டபமும் தீயினால் பாதிக்கப்படுகின்ற அளவுக்கு அந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கடைகளை அப்படி உள்ளே வைத்திருக்கிற கோயில்களை "பயர் இன்சூரன்ஸ்" செய்யக்கூடிய ஒரு திட்டத்தை அறநிலைய இலக்கா வைத்திருக்கிறதா? அப்படி ஒரு திட்டத்தை வைத்திருந்தால்தான் இப்படி நஷ்டம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அப்படிப்பட்ட உத்தேசம் ஏதும் இல்லை.

**திரு. ச. சங்குமுத்துத் தேவர் :** இதுமாதிரி நம் மாநிலத்தில் பெரிய பெரிய தேவஸ்தானங்களில் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டு வருகிறது. இதற்கெல்லாம், தர்மகர்த்தாக்கள் போட்டிதான் காரணம் என்று பரவலாக மக்கள் மத்தியிலே பேசப்படுகிறது. இதுபற்றி அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே. எந்தப் பழைய கோயில்களிலே அப்படிப்பட்ட தீ விபத்து ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் வசதியாக இருக்கும். வெளியே பரவலாகப் பேசப்படுகின்ற கருத்துக்களை இங்கே சொன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

**திரு. ச. சங்குமுத்துத் தேவர் :** குருவாயூரப்பன் கோயிலிலே கூட இப்படித் தீ விபத்து ஏற்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த கோயில் கேரளாவிலே இருக்கிறது.

[1972 ஆகஸ்ட் 24

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இராமேசுவரம் கோயிலில் நடந்த தீ விபத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது சம்பந்தமாக அந்த கோயிலிலே மராமத்து வேலைகள் உடனே மேற்கொள்ளப்பட்டனவா ? அதன் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, உடனடியாக, தீயினால் சேதம் அடைந்த பகுதிகள் பார்வையிடப்பட்டு, திருப்பணி செய்வதற்கான வேலைகள் தொடங்கப்பட்டன. அந்தத் திருப்பணிகள் செய்வதற்காக 2½ இலட்சம் ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது. அந்த வேலைகள் துரிதமாக நடைபெறுவதற்கு, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. எம். முத்தையா :** தலைவர் அவர்களே, இராமேசுவரம் கோயிலிலே தீ விபத்து ஏற்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தத் தீ விபத்திற்குக் காரணமாக இருந்தவர்களின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, அங்கே கடை வைத்துப் பிழைப்பவர்கள் எல்லாம் சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களிடத்திலே நஷ்ட ஈடு வாங்குவதோ அல்லது வேறு வித நடவடிக்கையோ எடுக்க முடியாது. எனவே, இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண வேண்டுமானால், கோயிலுக்குள்ளே கடைகளை வைத்திருப்பதை வெளியே வைக்கும் வகையிலே அவர்களுக்கு வசதியான முறையிலே கடைகளை கட்டித் தர ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தகைய ஒரு நடவடிக்கையை இராமேசுவரம் கோயிலிலே எடுத்து வருகிறோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற பிரசித்தி பெற்ற கோயில்களில் கீத்துக் கொட்டகைகள் போடப்பட்டிருப்பதால்தான் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அறநிலையத் துறை பிரசித்தி பெற்ற கோயில்களில் கீத்துக் கொட்டகைகள் போடுவதைத் தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1972 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, கீத்து கொட்டகை போடப்பட்டதினால் எங்கும் தீ விபத்து ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, பல கோவில்களில் இன்னும் அகல் விளக்கும், எண்ணெய் விளக்கும் இருப்பதினால் தான் தீ விபத்து ஏற்படுகிறது. எனவே அவைகளை எல்லாம் மாற்றி எல்லாக் கோயில்களிலும் மின்சார விளக்கைப் போட அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, அகல் விளக்கு ஏற்றி வைப்பது என்பது ஒரு முறையாக இருந்து வருகிறது ஆகவே. அதிலே தலையிடுவது என்பது இயலாது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இராமேஸ்வரம் கோவில் மிகப் பழமையானது. அங்கே தீ விபத்து ஏற்பட்டது மனித சக்தியினால் ஏற்பட்டதல்ல ; தெய்வ சக்தியால் ஏற்பட்டது என்று கருதப்படுகிறது. எனவே, கடவுள் செய்கைகளைத் தவிர்த்து, கடவுள் விரும்பும் பணிகளையெல்லாம், கடவுளின் விருப்பப்படி நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று அரசாங்கம் அறிவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி இப்படிப்பட்ட கேள்விகள் மூலம், தான் ஒரு பழுத்த ஆஸ்திகர் என்பதை வெளிப்படுத்தி வருகிறார். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, கோவில்களுக்குள்ளே கடைகளை வைக்காமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? பைபிளில் கூட
Why do you canvert my father's house into a den of robbers.
என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, எந்தெந்தக் கோவில்களில் கடைகள் உள்ளே இருக்கின்றனவோ அவைகளை மாற்றி வெளியே வைப்பதற்கும், மேலும், உள்ளே கடைகளை வைக்காமல் இருப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துதான் இந்த அரசின் கருத்தும். ஆனால் அதற்குச் சிலருடைய எதிர்ப்பு இருக்கிறது. மதுரை கோவிலில் கூட அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டபோது, அரசியல் கட்சி

களும், தனிப்பட்ட சங்கங்களும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித் தார்கள். அதனால் அதை கைவிடவேண்டிய நிலை இருக்கிறது. இப்போது கோவில்களில் கட்டப்படும் கடைகளை வெளியே கட்ட ஏற்பாடு செய்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவாவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"பேரவையின் விதி 41(3)-ஐ தளர்த்தி, இரண்டுக்கு மேற் பட்ட தீர்மானங்களை இன்று எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) மணலி எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru N. Dennis will now call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance.

THIRU N. DENNIS : I now call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, i.e., fire at Manali Project on 20th July 1972 and the serious loss involved therein.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 20-7-1972 அன்று இரவு 11-30 மணியளவில் மணலியில் உள்ள சென்னை, எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையில் தீ விபத்து ஒன்று ஏற்பட்டது. 25,000 டன் உயர்வகை மண்ணெண்ணெய் அடங்கிய 406-ஆம் எண் தொட்டியில் தீ பற்றியது.



தீ விபத்து பற்றிய தகவல் சென்னை-3 இல் உள்ள தீ விபத்து தகவல் அறையில் நள்ளிரவில் கிடைத்தது. வண்ணாரப்பேட்டை தீ அணைப்பு நிலையத்திலிருந்து 2 தீயணைப்புப் பிரிவுகள் உடனடி யாகப் புறப்பட்டு, 14 கி.மீ. தொலைவைக் கடந்த தீ விபத்து நடந்த இடத்தை 21-7-72 அன்று 00.17 மணிக்கு அடைந்தன. இவற்றின் பின்னால் எஸ்பிளனேடு, ராயபுரம், வேப்பேரி, எழும்பூர், தேனாம் பேட்டை தீ அணைப்பு நிலையங்களிலிருந்து தீ அணைப்பு வண்டிகள் வந்து சேர்ந்தன. அச்சமயம் 406-ஆம் எண் எண்ணெய்த் தொட்டி கொழுந்து விட்டு எறிந்து கொண்டிருந்தது. எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையைச் சேர்ந்த தீ அணைப்புப் படையினர் தீயை அணைக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தனர். அண்மையில் உள்ள தொட்டிகளுக்கும் வளைவுகளுக்கும் தீ பரவாமல் தடுக்க பட்டு 11 மணி நேரம் கழித்து தீ முழுவதும் அணைக்கப்பட்டது. தமிழ்நாட்டு தீ அணைப்புப் படையினரின் இன்ஸ்பெக்டர், வட சென்னை தீ அணைப்புப் படையின் துணை இயக்குநர், தீ அணைப்பு கோட்ட அதிகாரி ஆகியோர் தீ விபத்து நடந்த இடத்திற்கு வந்திருந்து தீ அணைப்புப் படையினரின் பணியை மேற்பார்வை யிட்டனர்.

406-ஆம் எண் தொட்டியில் உள்ள மண்ணெண்ணெய் முழுவதும் எரிந்து விட்டது. தொட்டியின் ஒரு பகுதியும் சேதமடைந்தது. உயிர்ச்சேதமோ, காயமோ எவருக்கும் ஏற்படவில்லை. ஏறத்தாழ ரூ. 16,65,500 மதிப்புள்ள சொத்து விபத்தில் சிக்கியது. ரூ. 2.7 இலட்சம் மதிப்புள்ள மண்ணெண்ணெய் விரயமாயிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. தொட்டிச் சாதனங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் ரூ. 6.5 இலட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. தீ விபத்திற் கான காரணம் பற்றி வல்லுநர் குழு ஒன்று ஆய்வு செய்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். டென்னிஸ் : தலைவாவர்களே, தீ விபத்து ஏற்படக் காரணம் என்ன ? தீ விபத்து ஏற்பட்ட உடனே தகுந்த தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படாததற்கு என்ன காரணம் ? இனிமே லாவது இப்படிப்பட்ட விபத்து ஏற்பட்ட உடனே தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 ஆகஸ்ட் 24

மணலி எண்ணெய்த் தொழிற்சாலை நிறுவனத்தார் ஒரு குழுவை அமைத்து விசாரணை செய்து வருகிறார்கள். அதன் அறிக்கை வந்த பிறகு ஏற்ற நடவடிக்கைகளை முன் எச்சரிக்கையாக எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஆ) பள்ளி இறுதியாண்டு மாணவர்களுக்கான கல்விப் பயிற்சி முறை ரத்து செய்யப்பட்டுள்ளதால் இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள ஏமாற்றம் குறித்து.**

THIRU K. T. K. THANGAMANI : Sir, I call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the abolition of Educational Training Course for S.S.L.C., students causing disappointment to youths, particularly, girls.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1967-68-ஆம் வருடம் இரண்டாம் பிரிவு திட்டத்தை (Part II Scheme) பரிசீலனை செய்யும்பொழுது, பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை தேவைக்கு மிகுதியாக இருப்பதால், பயிற்சிப் பிரிவுகள் குறைக்கப் பட வேண்டுமென கருத்து தெரிவிக்கப்பட்டது. ஒரு பயிற்சிப் பிரிவு 40 மாணவர்களைக் கொண்டதாகும். அதன்படி புதிதாக மாணவர்களைச் சேர்க்கும் பயிற்சிப் பிரிவுகள் கீழே குறிப்பிட்ட வாறு நிர்ணயிக்கப்பட்டன :—

| வருடம். | மொத்தப் பிரிவுகள். |
|---|---|
| 1. 1967—68 | |
| 2. 1968—69 | 252 |
| 3. 1969—70 | 269 |
| 4. 1970—71 | 227 |
| 5. 1971—72 | 199 |
| | 160 |

தற்சமயம், 129 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவைகளில், 72 அரசினர் நிறுவனங்கள், 57 மானியம் பெறும் தனியார் நிறுவனங்கள் ஆகும்.

பள்ளிக் கல்வித் துறையினரால் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் மூலம், 1972-73-ம் வருடத் துவக்கத்தில் 13,000 (ஹையர் கிரேடு



1972 ஆகஸ்ட் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மற்றும் செகண்டரி கிரேடு, முக்கியமாக (செகண்டரி கிரேடு) ஆசிரியர்கள் வேலை கிடைக்காமல் திண்டாடுவதாகத் தெரிய வந்துள்ளது. இவ் வருடம் பயிற்சி பெற்று வரும் மாணவர்களின் எண்ணிக்கை 10,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இதையும் சேர்த்துக் கொண்டால் மொத்தம் 23.000 ஆசிரியர்கள் வேலை வாய்ப்பில்லாமல் இருப்பார்கள். 1972-73-ம் வருடத்தில் அதிகப்படியான மாணவர்களைச் சேர்க்கயிருப்பதனால், 2,600 அதிகப்படியான ஆசிரியர்களின் பதவிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் எண்ணிக்கை சுமார் 3,600 என மதிப்பிடப்பட்டுள்ளது. இக் கணக்குப்படி., 6,200 ஆசிரியர்களுக்கு 1972-73-ல் வேலை கொடுக்க முடியும். அவ்வாறு கொடுத்தாலும் மேற்கொண்டு 16,800 ஆசிரியர்கள் வேலை வாய்ப்பின்றி இருப்பார்கள்.

1973-74 ம் வருடம் 8,000 ஆசிரியர்சள் பயிற்சி பெற்று வெளியேறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி யென்றால் 24,800 ஆசிரியர்கள் வேலை வாய்ப்பின்றி இருப்பார்கள். 1973-74-ல் 6,300 பேர்களுக்கு வேலை கொடுத்தாலும், மேற்கொண்டு 18,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்காது.

வருடாவருடம் பயிற்சி நிறுவனத்திலிருந்து 8,000 ஆசிரியர்கள் வெளியேற இருப்பதாலும், இவர்களில் சுமார் 6.300 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடியுமாதலாலும், ஏற்னவே 1972—73-ம் வருடத்தில் 13,000 ஆசிரியர்கள் வேலை வாய்ப்ப இன்றி இருப்பதாலும், பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தேவைக்கேற்ப ஒழுங்கு படுத்துவது அவசியமாகும்.

இப்பிரச்சினை, கேரளா, ஆந்திரா மாநிலங்களிலும் கூட எழுந்துள்ளது. கேரள அரசு 2 பிரிவுகளை 1 பிரிவாகக் குறைத்து ஒவ்வொரு பிரிவிலும் 30 மாணவர்களுக்கு 20 மாணவர்களைத் தேர்ந்தெடுத்தது. 1972—73-ல் புதிதாக மாணவர்கள் சேர்க்கப்படவேயில்லை. சில பயிற்சி நிறுவனங்கள் நீதி மன்றங்களுக்கு முறையிட்டுள்ளன. ஒரு வருடம் விட்டு மற்றொரு வருடத்தில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு பயிற்சி நிறுவனங்கள் ஒத்துக்

கொண்டுள்ளன. ஆனால் இன்னும் ஒரு முடிவான சூழ்நிலை ஏற்படவில்லை. 1970–71 முதல் செகண்டரி கிரேடு பயிற்சி இருக்காது என ஆந்திர அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது.

இம் மாநிலத்தைப் பொறுத்தவரை, பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடமுள்ள வேலையில்லாப் பிரச்சினையைச் சமாளிக்க 1972–73-ல் பயிற்சி நிறுவனங்களில் முதல் வருட பிரிவில் புதிதாக மாணவர்களைச் சேர்ப்பதை ஒரு வருடத்திற்கு நிறுத்தி வைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1972–73-ல் இரண்டாவது வருட பிரிவுகள் மட்டும்தான் நடைபெறும். ஆகவே 1974-ம் வருடத்தில் ஏப்ரல் மாதத்தில் T.S.L.C. தேர்வுகள், ஏற்கனவே பயிற்சி பெற்று தேர்வில் தோல்வியுற்ற மற்றும் தனியாகப் பயின்று தேர்வு எழுதும் ஆசிரியர் மாணவர்களுக்கு மட்டும்தான் நடைபெறும். பயிற்சி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு குறைந்த பட்சம் குறிப்பிட்டளவு வேலை பார்க்க வேண்டும் என்ற விதியில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசினர் மற்றும் மானியம் பெறும் தனியார் பயிற்சி நிறுவனங்களில் தேவைக்கு மிக இருக்கும் ஆசிரியர்களை, இதர பள்ளிகளில் பணியில் அமர்த்த ஆணையிடப்பட்டுள்ளது. தனியார் பயிற்சி நிறுவனங்களை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றவோ அல்லது அவைகளை ஒரே பயிற்சி நிறுவனத்துடன் இணைத்து விடுவது பற்றியோ குறித்து தனியார் நிறுவனங்களுடன் கலந்தாலோசிக்க கூட்டம் கூட்ட பள்ளி கல்வி இயக்குநர் அனுமதிக்கப்பட்டுள்ளார். நிலைமை இந்த ஆண்டு இறுதியில் மீண்டும் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 1973-74-ம் ஆண்டிலாவது மொத்தம் இருக்கக்கூடிய 129 பயிற்சி நிறுவனங்களிலும் மாணவர்கள் சேர்க்கப்படுவார்களா? அப்படி 129 நிறுவனங்களிலும் சேர்ப்பதற்கு சிரமங்கள் இருந்தால் அரசு நடத்தக்கூடிய 72 நிறுவனங்களிலாவது உறுதியாகச் சேர்க்கப்படுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 129 நிறுவனங்களிலும் இரண்டாவது ஆண்டுப் பயிற்சி பெறுகிறவர்கள் இருந்து வருகிறார்கள். சில தனியார்த் துறையினர்கூட அந்த ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளை



உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றிக் கொள்ளலாம் என்று சில பேர் எண்ணம் தெரிவித்திருக்கிறார்கள். கூடுமான வரையில் அப்படி மாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுமானால் மாற்றலாம் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநருக்குக் கூறப்பட்டிருக்கிறது. எப்படியும் இந்த ஆண்டு இறுதியில் முடிவு எடுக்கப்பட்டுவிடும். அறவே நீக்காத அளவுக்கு—எந்த அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாமோ அந்த அளவுக்குக் குறைக்க—முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஓராண்டு விட்டு ஓராண்டு எடுப்பது என்ற முறையில், இந்த ஆண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் முதல் வருடப் பிரிவில் புதிதாக மாணவர்களைச் சேர்ப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவு எடுக்கப்பட்டுவிடும். உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்ற கருத்தை மனதிலே கொண்டு. எண்ணிக்கையை 40 லிருந்து 30, 20 என்றும் வைத்துக்கொள்ளலாம். 129 நிறுவனங்களில் சில பல பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாகக்கூட மாற்றலாம். மாவட்ட வாரியாக எடுக்கச் சொல்லியிருக்கிறேன். ஒரு மாவட்டத்தில் ஒரேயொரு ஆசிரியர் பள்ளி இருந்தால் அதை அப்படியே விட்டுவிட்டு, எங்கெங்கே அதிகம் இருக்கின்றனவோ அங்கே எடுக்கலாமா என்ற முயற்சியும், குறைவாக இருக்கும் இடங்களில் அப்படியே நிறுத்திக் கொள்ளவும் ஆன முயற்சிகள் ஆராயப்படுகின்றன. இதெல்லாம் ஆராய்ந்து இந்த ஆண்டு இறுதிக்குள் ஒரு முடிவு எடுக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## (இ) கோவை மாவட்டத்தில் பூச்சிக் கொல்லி மருந்துகள் இல்லாமையும் அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பும்.

**திரு. சு. துரைசாமி :** துணைத் தலைவர் அவர்களே. சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட பொருள் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

“ திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திலும், கோவை மாவட்டத்திலும் பருத்தி விவசாயத்திற்குப் பயன்படுகிற பூச்சி மருந்துகள் இல்லாததால் விவசாயம் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது பற்றி.”

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கோவை மாவட்டத்தில், குறிப்பாக கோயம்புத்தூர், திருப்பூர், பகுதிகளில் பருத்தி விதைப்பு இப்பொழுதுதான் தொடங்கப்பட்டுள்ளது.

பருத்திப் பயிர்களுக்கான பூச்சிக் கொல்லி மருந்துகள், விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, கோவை மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறையின் கிடங்குகளில் சேகரித்து வைக்கப் பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் இப்பொழுது சேமித்து வைக்கப் பட்டுள்ள, பருத்திப் பயிருக்கு ஏற்ற, மருந்துகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். (1) | மருந்தின் பெயர் (2) | | | 1—7—1972 அன்றுள்ளவாறு கையிருப்பில் உள்ள அளவு. (3) |
|---|---|---|---|---|
| | | | | மெட்ரிக் டன் |
| | **தூள்** | | | |
| 1. | B. H. C. | 10 சதவீதம் | | 920·000 |
| 2. | B. H. C. | 50 ,, | W.P. | 312·000 |
| 3. | D. D. T. | 5 ,, | | 207·000 |
| 4. | D. D. T. | 50 ,, | | 72·000 |
| 5. | கார்பரைல் | 10 ,, | | 136·000 |
| 6. | கார்பரைல் | 50 ,, | W.P. | 2·000 |
| 7. | ,, | 85 ,, | W.P. | 1·000 |
| 8. | செவிடால் கிரானுவல்ஸ் | | | 2·000 |
| 9. | கந்தகத்தூள் | | | 108.000 |
| 10. | கந்தகம் (ஈரம்) | | | 0·495 |
| 11. | தாமிரக் காளான் நாசினி | | | 398·000 |
| 12. | O. M. S. D. | 1 ,, | (காய்ந்தது) | 2·000 |
| 13. | ,, | 3 ,, | (ஈரம்) | 2·000 |
| 14. | ,, | 6 ,, | (ஈரம்) | 0·016 |
| 15. | துத்தநாகம் பாஸ்பைடு | | | 0·877 |
| 16. | தாமிரச் சல்பேட் | | | 13·000 |
| 17. | பேரரேட் | | | 21·000 |
| | **திரவம்** | | | |
| | | | | லிட்டர்கள் |
| 18. | எண்டிரின் | 20 சதவீதம் E.C. | | 48,000 |
| 19. | எதில் பாரதைன் | 50 சதவீதம் | | 2,900 |
| 20. | ,, | 46·7 சதவீதம் | | 8,569 |





| தொடர் எண். (1) | மருந்தின் பெயர். (2) | | 1—7—1972 அன்றுள்ளவாறு கையிருப்பில் உள்ள அளவு. (3) |
|---|---|---|---|
| | | | லிட்டர்கள் |
| 21. | மெதில் பாரதைன் | 50 சதவீதம் E.C. | 145 |
| 22. | டெடாசிட் கோம்பி | | 549 |
| 23. | பராக்ளோர் | | 62,365 |
| 24. | டெக்ஸோபேன் × D.D.T. E.C. | | 3,800 |
| 25. | டையால்டிரின் E.C. | | 584 |
| 26. | எண்டிஸல்பேன் | | 1,100 |
| 27. | வாமிடிதயான் | | 118 |
| 28. | மெதில் டெமிடான் | | 1,300 |
| 29. | டிமிதோட் | | 2,641 |
| 30. | பாஸ்போமைடன் | | 2,800 |
| 31. | நாவன் | | 381 |
| 32. | மோனோகுரோடோபிஸ் | | 2,300 |
| 33. | பெனிடிரோதையான் | | 4,356 |
| 34. | உறிஞேசான் | | 130 |

திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள மருந்துகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | | |
|---|---|---|---|
| | **திராவகம்** | | |
| | | 20 சதவீதம் E. C. | 3,000 |
| 1. | எண்டிரின் | | 260 |
| 2. | நுவுக்கிரான் | | 200 |
| 3. | மெட்டாஸிஸ்டாக்ஸ் | | 1,000 |
| 4. | பராக்கிளோர் | | 30 |
| 5. | டிமாக்கிரான் | | 220 |
| 6. | அராகர் | | 500 |
| 7. | ஆன்தியோ | | |
| | **தூள்** | | |
| | | | 750 கிலோ |
| 8. | சேவின் | | 2 டன் 700 கிலோ |
| 9. | கந்தகத்தூள் | | |

மாவட்டத்தில் வேளாண்மைக் கிடங்குகளில் தற்போது உள்ள இரசாயன உர இருப்புகள் சாகுபடி செய்பவர்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானவையாகும்.

...வை மாவட்டத்தில் பூச்சிக் கொல்லி மருந்துகள் இல்லாமையும் அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பும்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1972 ஆகஸ்ட் 24

கோயம்புத்தூர் மாவட்டம் உட்பட இம் மாநிலத்தில் உள்ள பல்வேறு வேளாண்மைத் துறைக் கிடங்குகளில் போதுமான அளவு பூச்சிக்கொல்லி மருந்துகள் இருப்பில் வைத்துக்கொள்ளவும் பூச்சிக் கொல்லி மருந்துப் பற்றுக்குறையினால் பருத்தி மற்றும் ஏனைய பயிர்களின் உற்பத்தி பாதிக்கப்படாமலும் இருக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சரவர்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளின் இருப்பைப்பற்றித் தெரிவித்தார்கள். இந்த இருப்பெல்லாம் எந்தத் தேதியில் இருந்த விவரம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இருக்கின்ற இருப்புகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இப்போதுள்ள இருப்பை நான் சொன்னேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

## (2) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே. இன்றைய நிகழ்ச்சி நிரலில், "2. அரசினர் சட்ட முன்வடிவுகள்' என்ற தலைப்பில் இனம் "(3) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/72)" என்பதனை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.



1972 ஆகஸ்ட் 24]

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்

**(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/72).**

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 8,92,11,100 செலவழிக்கலாம் என்று இந்தச் சபை அங்கிகாரம் கொடுத்திருக்கிறது. பல தலைப்புகளின்கீழ் செலவழிப்பதற்கு நாம் அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அப்படி அதிகாரம் கொடுத்திருக்கும்போது, இந்தத் தொகை முறையாகவும் முழுமையாகவும் செலவழிக்கப்பட வேண்டும் என்று சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது என்ற முறையில்தான் நான் சில விஷயங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மதுவிலக்குத் திட்டத்தை ரத்து செய்ததற்குப் பின்னால் எக்ஸைஸ் ட்யூடிக்காகப் புதிதாக வேலைக்கு அமர்த்தக்கூடியவர்களுக்கு 93,000 ரூபாய் நாம் ஒதுக்கியிருக்கிறோம். அப்படி ஒதுக்கிய 93,000 ரூபாய் முறையாகச் செலவழிக்கப்பட வேண்டும் என்றும், இதில் ஸ்டாப் அதிகமாக வரக்கூடிய காரணத்தால் அதிகம் செலவழித்து விட்டோம் என்னும் நிலைமை வரக் கூடாது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விற்பனை வரி சம்பந்தமாக நேற்று நாம் ஒரு மசோதாவை நிறைவேற்றியிருக்கிறோம். அதை நிறைவேற்றியதன் அடிப்படையில் விற்பனை வரி 'ஸ்டாப்' செக் பண்ணுவதற்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில்தான் ரூ 2,80,000 வரையிலும் செலவழித்து ஜீப்கள் வாங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படியானால் அதற்குத் தகுந்தபடி ஜீப்கள் வாங்கப்பட்டனவா, அந்த ஜீப்களெல்லாம் புதிதாக இம் மாதிரியான ஸ்டாப்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அப்படி ஏற்கெனவே சில ஜீப்களெல்லாம் வாங்கி

யிருந்ததற்கு அங்கீகாரம் கொடுக்கக்கூடிய முறையில் சபைக்கு முன்னால் மானியக் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தால் அதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட வாரியாக "ப்ளானிங் ஸெல்ஸ்" அமைக்க வேண்டும் என்ற ஆலோசனை நீண்ட காலமாக இருந்து வந்தது. அப்படி அமைப்பதற்கு ரூ. 2,83,000 வரையிலும் நாம் ஒதுக்கியிருக்கிறோம். அதுவும் ஏற்கெனவே செலவழிக்கப்பட்டிருக்கிறதா அல்லது இனி மேல்தான் செலவழிக்கப் போகிறோமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

விவசாயிகள் சம்பந்தமாக சென்சஸ் தயாரிப்பதற்கு இப்பொழுது ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கும் கர்ணங்களுக்கும் அதிகப்படியாக ரூ. 3,20,000 கொடுக்க வேண்டும் என்று நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம், அதிலும் ஏற்கெனவே நம்முடைய கர்ணங்களுக்கும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கும் அம் மாதிரி பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா, அப்படிப் பணம் கொடுக்கப்பட்டு அதை ஈடு செய்வதற்குக் காரியங்கள் செய்கின்றோமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட சிவில் சப்ளைஸ் இலாக்கா சம்பந்தமாக, அங்கு புதிதாக ஆட்கள் சேர்க்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். அதற்கு, திட்டத்தட்ட ரூ. 10 லட்சம் வரையில் ஒதுக்கியிருக்கிறோமே, அப்படியானால் எத்தனை பேர் வரையிலும் அந்த இலாக்காவிலே புதிதாகச் சேர்ப்பதாக இருக்கிறோம். ஏற்கெனவே சேர்க்கப்பட்டவர்கள் எந்த காரணத்தைக் கொண்டும் குறைக்கப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதம் வேண்டும். இப்பொழுது 9 லட்சத்து சொச்சம் ஒதுக்கியிருக்கிறோம், அதில் புதிதாகச் சேர்க்கப்பட்டார்கள் என்று இருக்க வேண்டுமே தவிர, ஏற்கெனவே இருப்பவர்கள் குறைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கக் கூடாது என்றும் கூற விரும்புகிறேன்.

இன்றைக்குக் கல்வியைப் பொறுத்த வரையிலே, இன்றைக்குப் பல்கலைக் கழகங்களுக்கு எல்லாம் ஏற்கெனவே கிராண்டுகள் கொடுத்திருக்கிறோம். இதற்கு மேலும் நம்முடைய சென்னை பல்கலைக்கழகத்திற்கு ரூ. 5 லட்சம் கொடுக்கிறோமே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 4 லட்சம் கொடுக்கிறோமே, அது எந்த நிலையில் பயன்படப் போகிறது என்பதும் அறிய விரும்புகிறேன்.





இப்பொழுது கண் வைத்தியத்திற்காக புதிய திட்டம் என்று காட்டப்பட்டு விளம்பரங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. அதே நேரத்திலே நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் கண் வைத்தியம், சம்பந்தமாக ஏற்கனவே மதுரை மாவட்டத்தில் டாக்டர் வெங்கடசாமி போன்றவர்கள், அல்லது பம்பாயில் இருக்கக்கூடிய டாக்டர் மோடி போன்றவர்கள் இங்கு தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் வந்து இம் மாதிரியான கண் சிகிச்சைகளை நடத்தி வந்திருக்கிறார்கள். புதுச்சேரிக் கெல்லாம் சென்று சிகிச்சை செய்த டாக்டர் மோடி உண்மையிலே உலகப் பிரசித்திப் பெற்றவர். அவர் தானாகவே, எவ்வளவோ லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்க முடியும் என்ற நிலைமை இருந்தாலும், மகாத்மா காந்தியடிகள் சீடராகி, உலகமெல்லாம் சுற்றி ஒரு நாளைக்கு 500, 600 ஆப்பரேஷன் செய்யக் கூடியவர் என்று பெயர் பெற்றிருக்கிறார். அப்படிப்பட்ட டாக்டர் மோடி போன்றவர்கள் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மதுரை மாவட்டத்திலே டாக்டர் வெங்கடசாமி இருக்கிறார்கள். டாக்டர் வெங்கடசாமி அவர்கள் சேவையையும் பயன்படுத்திக் கொண்டு ஏற்கனவே அவர்களுக்கு உள்ள அனுபவங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே இதற்கு முன்னால், அரசாங்கம் இந்தச் செலவை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் கண் சிகிச்சை எல்லாம் செய்யப்பட்டு, அதற்குத் தனிப்பட்ட முதலாளிகள் எல்லாம் பணம் கொடுத்து வந்திருக்கிறார்கள். ஆகவே, இப்படிப் பணம் ஒதுக்குகிறோம் என்ற முறையிலே, அரசு ரூ. 44 லட்சம் செலவு செய்ய இருக்கிறது என்ற முறையிலே மற்றவர்களிடமிருந்து கான்டிரிபியூஷன் பெற வேண்டும். பெறுவதற்கு எந்த ஏற்பாடு இருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அறிய விரும்புகிறேன். இந்தத் திட்டத்தைப் பொருத்த வரையிலே நல்ல திட்டம் தான். குறிப்பாக. வயது வந்தவர்களுக்கு இந்த காடராக்ட் ஆப்பரேஷன் மட்டும் செய்வதாலே, எவ்வளவோ உதவியாக இருக்கிறது. காடராக்ட் வந்தவுடனே, ஏதோ கண்ணே தெரியாது என்று வயது வந்தவர்கள் எல்லாம் நினைக்கிறார்கள். நான் மதுரையிலே இந்தத் திட்டம் வருவதற்கு முன்னாலே வருஷா வருஷம் இப்படி காடராக்ட் வந்த ஆண்களும் பெண்களும் காடராக்ட் ஆப்பரேஷன் செய்தவுடனே, கண்

தெரிந்ததற்காக அவர்கள் பெருமைப்பட்டார்கள், மகிழ்ச்சி யடைந்தார்கள், என்பதைப் பார்த்திருக்கிறேன். ஆகவே. அப்படிப்பட்டவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையிலே, வைத்தியத்திற்காக லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்துக் கொண்டிருக்கிறோமே. அந்தப் பணத்தின் மூலம் எல்லோருக்கும் வசதி கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். இதற்காக ரூ. 40 லட்சத்தை அரசு ஒதுக்கியிருக்கிறது. இதற்கு, அதிக தொகை ஒதுக்கி, மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிட்டத்தட்ட 9 கோடி ரூபாய் செலவழிப்பதற்காக அரசுக்கு ஒப்புதல் கொடுக்கிறோம் என்றால், ஓட் செய்யவிருக்கிறோம் என்றால், அந்தப் பணம் முறையாகவும் அதே நேரத்தில் எந்த நோக்கத்தோடு செலவழிக்கப்பட வேண்டுமென்று சிபாரிசு செய்கிறோமோ, அந்த முறையில் செலவழிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவாக, துணை மதிப்பீட்டில் விவாதங்களே நடைபெறுவதில்லை. அதிலே இருக்கிற குறிப்பான விஷயங்கள் பற்றி நம் தலைவர்களை மட்டும் தான் பேச அனுமதிக்கலாம் என்று இருக்கிறேன். ஆகவே, 2, 3 நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஓரிரண்டு முக்கியமான கருத்துக்களை மிக சுருக்கமாகச் சொல்லி விடை பெறலாம் என்று இருக்கிறேன்.

இப்பொழுது நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய இலாகாவிலிருந்து ஒரு உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். ஜி.ஓ.எம்.எஸ். நெம்பர் 272. எடுக்கேஷன், டேட்டட், 28—2—1972 ; இந்த உத்தரவின் மூலம் நடுநிலைப் பள்ளிகளிலே பணியாற்றக் கூடிய தலைமை ஆசிரியர்கள் கிராஜுவேட்டாகத் தான் இருக்க வேண்டு மென்ற ஒரு நிபந்தனையை போட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, ஏறத்தாழ 300 பேர் இப்பொழுது பணியாற்றக் கூடியவர்கள் கிராஜுவேட்ஸ் ஆக இல்லை. அவர்கள் செகண்டரி கிரேட் பயிற்சி பெற்று இப்பொழுது





இருக்கிறார்கள். சென்னையிலே, மெட்ராஸ் கார்ப்பரேஷன் பள்ளிகளிலே பணியாற்றுகிறவர்கள் ஏறத்தாழ 300 பேர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது திடீரென்று அரசு இந்த உத்தரவிட்டதன் விளைவாக, இப்பொழுது பணியில் இருக்கக் கூடிய அந்த தலைமை ஆசிரியர்கள் தங்கள் பதவியை இழந்து விட்டு, அவர்களுக்கு மேல் கிராஜுவேட்ஸ் தலைமை ஆசிரியர்களாக வர வேண்டிய நிலை இருக்கிறது. இது பற்றி பலபேர் சொல்லி இருக்கிறார்கள், மனுவும் கொடுத்திருக்கிறோம்.

நான் இந்த அவையிலே கேட்டுக் கொள்வது, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு கிராஜுவேட்ஸ்-ஐப் போடுவது நியாயம்தான். ஆனால், ஏற்கனவே பணியாற்றுகிறவர்களை அப்புறப்படுத்தி, டிமோஷன் செய்துவிட்டு, அவர்களுக்குப் பதிலாக மற்றவர்களைக் கொண்டு வந்தால், 20, 25 ஆண்டுகளாக அந்தப் பதவியில் இருப்பவர்கள் தங்களுடைய பதவியை இழக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, அவர்களுடைய மனதில் துன்பம் ஏற்படுத்தாமல், எங்கெங்கே காலி இருக்கிறதோ அங்கங்கே கிராஜுவேட்ஸ் டீச்சர்ஸ் போட்டு, படிப்படியாக இதைச் செய்ய வேண்டும். எப்படியும் இப்பொழுது இருப்பவர்கள் ஓய்வு பெறப் போகிறார்கள். 2 ஆண்டுகள், 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெறப் போகிறார்கள். அப்படி ஓய்வு பெறுகிறவர்களுடைய பதவியில் கிராஜுவேட்ஸ் டீச்சர்ஸ் கொண்டு வந்தால் சுமுகமான நிலை ஏற்படும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்று எல்லா உயர் தொடக்கப் பள்ளிகளிலும் கட்டாயம் பி.ஏ., பி.டி. ஆசிரியர்களை நியமித்துத் தீர வேண்டுமென்ற உத்தரவு போடவில்லை. கல்வியின் தரம் உயரவும், மாணவர்களுடைய தரம் உயரவும் பரவலாக எடுத்துச் சொல்லப்பட்ட இது ஆதரிக்கப்படுகின்ற சூழ்நிலையும் இருக்கிறது. இப்பொழுது இந்திய அரசு 900 ஆசிரியர்களை முழுச் சம்பளம் அளித்து நமக்கு வழங்குகிற நிலை வந்தது. பி.ஏ., பி.டி. ஆசிரியர்களை எங்களுக்கு அளித்தால் வாய்ப்பாக இருக்கும், வசதியாக இருக்கும் என்று கேட்டோம். அந்த அளவிலே பி.ஏ., பி.டி. ஆசிரியர்கள் வருகிறார்கள். இதற்காக மத்திய அரசு 100 பங்கு ஊதியம் தருகிறார்கள். பரவலாக, நாடெங்கிலும்

900 ஆசிரியர்களை நியமிப்பதற்கு வழிவகை செய்கிறோம். அவர்களை நியமித்துக் கொள்வதன் மூலம் 120 ஆசிரியர்களை கார்ப்பரேஷன் பள்ளிகளில் நியமிக்கிறோம் என்றால், அவர்களுக்கு 100 பங்கு சம்பளம் இந்திய சர்க்காரிடமிருந்து வருவது, கார்ப்பரேஷனுக்கு உதவி தருவதாக இருக்கும். 900 என்பதை ஊராட்சி ஒன்றியங்கள் சார்பாக இருக்கிற உயர்நிலைப் பள்ளிகள், மாநகராட்சி, நகராட்சிகளின் சார்பாக இருக்கிற உயர்நிலைப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் இவைகளுக் கெல்லாம் அளிக்கலாம். 900-ஐ எந்த அளவுக்கு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு அளிக்கலாம் என்ற விகிதாசாரத்தை வைத்து அந்த வகையிலே நாம் முடிவு காண வேண்டு மென்று பள்ளிக் கல்வி இயக்குநருக்குச் சொல்லி இருக்கிறேன். சென்னையைப் பொறுத்த வரையிலும் அவ்வளவு தலைமை ஆசிரியர்களைப் போட வேண்டுமென்று அல்ல. 1/3 பங்கு, அல்லது ¼ பங்கு போட்டுவிட்டு, மாநகரக் கல்வி அதிகாரியும், பள்ளிக் கல்வி இயக்குநரும் இது பற்றிப் பேசி முடிவு எடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறேன். அந்த அளவுக்கு மாநகராட்சி மன்றம் விரும்புமேயானால் 1/3 பங்கு ஆசிரியர்களைப் போட்டு மற்றவர்களை விட்டு விடலாம். காலி வரவரப் போட்டுக் கொள்ளலாம். சென்னையிலே இருப்பவர்களை மாற்றிவிட்டு வேறு பல இடங்களிலே மாற்றங்கள் செய்யாமல் இருந்தால் நலமில்லை என்ற குறைபாட்டினை நாங்கள் உணர்ந்தோம். ஆகவே, எல்லாவற்றையும் கவனத்திற் கொண்டு முடிவு எடுக்கிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மிக்க நன்றி. பேஸ்டு ப்ரோகிராமாக மாற்றி அமைக்கிறேன் என்று சொன்னதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

இன்னொரு முக்கியமான விஷயம். செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியைப் பொறுத்த வரையிலே ஏற்கனவே . அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்திலே அந்தக் கல்லூரியை மாற்றுவதற்கு அந்த இடத்திலிருந்து வேறு எங்கேயாவது கொண்டு போவதைப் பரிசீலனை செய்வதாக வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். அங்கே இருக்கக்கூடிய நிலை எல்லோருக்கும் தெரியும். வெரைட்டி ஆஃப் கேஸஸ் அங்கே கிடைப்பதில்லை. ஏராளமான நோயாளிகள் அங்கே கிடைப்பதில்லை. செங்கற்பட்டுக்கு அருகிலே சென்னை இருக்கிற காரணத்தினாலே, நோயாளிகளை சென்னைக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள் என்றும் இதன் காரணமாக அங்கே இருக்கக்





கூடிய மாணவர்களுக்குச் சரியான பயிற்சி கிடைக்கவில்லையென்றும் பல ஆண்டுகளாகச் சொல்லி வந்தார்கள். அங்கே கல்லூரி ஆரம்பித்த நேரத்திலே கூட. நான் இதை எடுத்துச் சொன்னேன். ஆண்டுக்காண்டு, ஒவ்வொரு முறையும் இதைச் சொல்லி வருகிறோம். இப்பொழுது. சிம்பதடிக்'காக அரசாங்கம் கவனிக்கும் என்று சொன்னதன் காரணமாக, இந்த விஷயத்தையும் சரியான முறையிலே கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வேண்டுமென்றால், முதல் 2 வருடங்கள் அங்கே மாணவர்களை வைத்து, அனடமி, பிசிக்ஸ், இவற்றை அங்கே வைத்து அதற்குப் பிறகு சென்னைக்கு மாற்றியமைக்கக் கூடிய அந்த விஷயத்தையும் ஆராய்ச்சி செய்து அதற்குத் தக்க முடிவு எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக ஒரே ஒரு விஷயம். நான் பல முறைகள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நோ கான்பிடன்ஸ் மோஷன் வந்த நேரத்திலே கூட இதைப் பற்றி நான் சொல்லி இருக்கிறேன். இந்தச் சட்ட மன்றத் தொடரிலே இதுதான் கடைசி வாய்ப்பு, ஆகவே அதைப் பற்றி மட்டும் சொல்லி விடுகிறேன்.

பொதுக் கூட்டங்கள் நூற்றுக்கணக்கான இடங்களிலே நடைபெறுகின்றன. அண்மையிலே விருத்தாசலத்திலே ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அங்கே பேசவே முடியாதபடி சில பேர்கள் தடுத்து அந்தக் கூட்டத்தையே நடத்த முடியாதபடி செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி பத்திரிகைகளிலே கூட வந்திருக்கிறது. எனக்குக் கூட டெலிபோன் மூலமாகச் செய்தி வந்தது. முதலமைச்சர் அவர்கள் அழுத்தந் திருத்தமாக ஒரு உத்தரவு போட வேண்டும், எல்லாத் தரப்புக்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய முறையில்—எப்படி நாம் எல்லோரும் இந்த மன்றத்திலே நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி விவாதிக்க வாய்ப்பு இருக்கிறதோ அதைப் போன்று—எல்லோரும் அவர்களுடைய கருத்துக்களைப் பொது மேடையிலே தெரிவிக்கின்ற நேரத்திலே அதை வன்முறைகள் செய்து தடுப்பதற்கு இயலாதபடி அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு அளிப்பதற்கும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும்.

[டாக்டர் எச் வி ஹாண்டே] [1972 ஆகஸ்ட் 24

தேவகோட்டையிலிருந்து முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் ஒரு செய்தியை டெலிபோன் மூலம் தெரிவித்து இருக்கிறார்கள். அங்கே பொதுக் கூட்டம் நடந்தபொழுது அந்த மேடையை நோக்கி சிலர் வந்து மாநில சுயாட்சியைப் பற்றிப் பேசாதீர்கள் என்று சொல்லித் தடுத்திருக்கிறார்கள், அதனால் சப்-இன்ஸ்பெக்டர் எல்லாம் கூடத் தாக்கப்பட்டார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுமானால் நான் முழுத் தகவலையும் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; பேசுகிறவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

அண்மையிலே பரமக்குடியிலே அந்தச் சேர்மன்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபொழுது—அங்கே ஆளுங் கட்சியாக தி.மு.க. இருக்கிறார்கள், எதிர்க் கட்சியிலே இரண்டு பேர்கள் இருக்கிறார்கள்—அந்த இரண்டு பேர்களையும் கூட கிட்நாப் செய்வதற்குத் திட்டம் போட்டு இருக்கிறார்கள் என்று எனக்கு டெலிகிராம் வந்திருக்கிறது, அதை நான் படிக்க வேண்டி அவசியமில்லை என்று கருதுகிறேன். இப்படி ஒரு முனிசிப சேர்மன் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தா கூட உறுப்பினர்களை கிட்நாப் செய்யக்கூடிய நிலைமையை— நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து தோல்வி யடைந்தாலும் பரவாயில்லை—ஆனால் அப்படித் தீர்மானம் கொண் வரக்கூடிய நபர்களைக் கூட அதைக் கொடுக்க முடியாத வகையிலே நடவடிக்கைகள் மேற்கொள்வதைத் தடுத்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அரசியலிலே வன்முறைச் செயல்கள் நடக்காத வண்ணம் அதைப் பற்றி இந்த அவையிலேயே முதல் அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டால் அல்லது உத்திரவு போட்டால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்த நிதி ஒதுக்க மசோதாவிலே சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

---



1972 ஆகஸ்ட் 24] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நான் ஏற்கனவே துணை மானியக் கோரிக்கையிலே எடுத்துத் தெரிவிக்கப்பட்ட குறைகளைப் பற்றி எல்லாம் அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் நேரம் இல்லாததால் அவைகளை எல்லாம் கவனிக்கிறேன் என்று சொல்லி சுருக்கமாகப் பேச்சை முடித்து விட்டார்கள். ஆகவே, அன்றைக்கு எடுத்துச் சொன்ன குறைகளுக்கு எல்லாம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். ஒதுக்கப்பட்ட பணத்தைக் கண்காணிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கின்ற மெடிக்கல் காலேஜ் இன்னும் திறக்கப்படவே இல்லை, தண்ணீர் இல்லை என்று வேறு மாணவர்கள் சொல்கிறார்கள். இதைப்பற்றி பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களை மாணவர்கள் கேட்டால் நீங்கள்தான் முதலமைச்சரைப் பார்த்தீர்களே, அவரையே இதற்கும் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னாராம். உங்களுக்குள்ளே ஏதாவது இருந்தாலும் உடனடியாகத் தண்ணீர் கிடைக்கச் செய்வதற்கு, கல்லூரியைத் திறக்கச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்தியன் மெடிக்கல் இன்ஸ்டிட்யூஷனை அங்கே கொண்டு போய் ஆரம்பித்தார்கள். நான் அப்பொழுதே சொன்னேன், அப்பொழுது எங்கள் கட்சி தான் இருந்தது, இருந்தாலும் கேட்கவில்லை, நான் சொன்னேன். திருநெல்வேலியிலேயே வைக்காதீர்கள், போதுமான பேஷண்ட்கள் இருக்கமாட்டார்கள் என்று சொன்னேன்: கேட்கவில்லை. இன்றைக்கு ஆரம்பித்துவிட்டு அவதிப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பாளையங்கோட்டையிலே பேச்சலர் ஆப் இன்டியன் மெடிஸன்ஸ் கோர்ஸ் நடந்து கொண்டிருக்கிறது. அமிஞ்சிக்கரையிலே ஒரு இன்ஸ்டிட்யூஷன், அண்ணா இன்டியன் மெடிஸன்ஸ் கல்லூரி என்று நடந்து கொண்டிருக்கிறது. பாளையங்கோட்டையிலே இருக்கின்ற அந்தக் கல்லூரியை இங்கே கொண்டுவந்து வைத்தால் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு வசதியாக இருக்கும். மத்திய அரசு இதுபோன்ற திட்டங்களுக்கு உதவி செய்கின்ற நிலையில் பல மாநிலங்கள் அதை நல்ல முறையிலே வளர்ப்பதற்குப் பயன் படுத்திக் கொள்கின்ற நிலையில் ஆர்வம் காட்டுகின்றன. நாமும் சித்தம், யுனானி போன்ற மருத்துவ முறைகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கீழ்ப்பாக்கத்தில் உள்ள மருத்துவ மனையில் சித்த மருத்துவம் என்று எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மருத்துவ மனையை அங்கே கொண்டுபோய் முதலில் குற்றாலத்திலே வைத்தார்கள், பிறகு பாளையங்கோட்டையிலே வைத்தார்கள், நான் அப்பொழுதே சொன்னேன், கேட்கவில்லை, அவர்களுடைய காதிலே விழவில்லை. அப்பொழுது ஜோதி அம்மையார் அவர்கள் தான் இருந்தார்கள். காதில் விழவில்லை, இப்பொழுதும் சொல்கிறேன், காதில் விழுகிறதோ விழவில்லையோ தெரியவில்லை.

இப்படிப் பயிற்சி பெற்றவர்கள் இன்றைக்கு வேலைவாய்ப்புக் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். இன்றைக்கு எத்தனையோ ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன, தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. இதைத் தவிர கோயில்கள் மூலம் நடத்தும் ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன, அவைகளில் எல்லாம் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் சித்தம் படித்தவர்கள் பித்துப் பிடிக்கக்கூடிய நிலைக்குப் போய் அதைப் படிப்பதற்கே யாரும் முன்வரமாட்டார்கள். படித்தவர்களில் 6 பேர்களுக்குத்தான் இதுவரையில் வேலை கிடைத்திருக்கிறது. மற்றவர்களுக்கு டிஸ்டிரிக்ட் ஹெட்குவாட்டர்ஸ் ஆஸ்பத்திரியிலோ, தாலுக்கா ஹெட்டுவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரியிலோ பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியிலோ—இப்பொழுது பல ஆஸ்பத்திரிகளில் மருத்துவர்களே இல்லை என்ற நிலைமை இருக்கிறது—ஒரு பக்கம் படித்தவர்களுக்கு வேலையில்லை, ஒரு பக்கம் மருத்துவர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகள் இருக்கின்ற நிலையில் திண்டாடிக் கொண்டிருக்கிறோம்—அவர்களை வேலைக்கமர்த்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு மாணவர்கள் பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களிடம் சென்று சொன்னால் அவர்களிடம், உங்கள் கல்லூரி மத்திய அரசாங்கம் பணம் கொடுக்கிறது. அதனால்தான் நடத்துகிறோம் உங்களைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை என்று சொன்னால் அர்த்தமே கிடையாது.

பல இடங்களிலே இன்றைக்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று பொதுக் கூட்டங்கள் நடத்த முடியவில்லை என்ற புகார்கள் வந்திருக்கின்றன. எனக்குக்கூட



தகவல் வந்திருக்கிறது, புதுவயலிலே அப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்று இருக்கிறது, மல்லெங்கிக் கிணறு என்ற இடத்திலே சர்வகட்சிக் கூட்டம் நடந்தபொழுது தாக்கப்பட்டிருக்கிறார்கள். *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * சாதாரணமாக குறைகளைப் பற்றித்தான் பேச வேண்டும். ஆடிட் ரிப்போர்ட்கள் இவைகளில் ஏதாவது இருந்தால் பேசலாம். ஆகவே அம்மையார் அவர்கள் ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எல்லா இலாகாக்களுக்கும் துணை மானியம் ஒதுக்கி வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதை ஆட்சேபிக்கவில்லை. எந்தக் காரியத்திற்காகக் கேட்கப்பட்டிருக்கிறதோ. அதைப் பற்றிச் சொல்லுங்கள், தவறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். அப்படியில்லாமல் பொதுவாக லா அண்ட் ஆர்டர் பற்றிக் கேட்டால் எப்படி இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல முடியும்?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: For Head of State. Legislature, Courts, Public Health, etc., the Government have asked for Supplementary Grant.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தவறு செய்திருந்தால் ஒரு தவறு இன்னொரு தவறுக்கு ஆதாரமாகி விடாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். சீக்கிரமாகப் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இன்றைக்கு அந்த ஹெட் ஆஃப் ஸ்டேட் டிமாண்டில் கேட்டிருக்கிறார்கள்.

* * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1972 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் புதுவயல், மல்லாங்கிணறு பற்றி

* * *

ஒன்றை எழுப்பினர்கள். அதைப் பற்றிய விவரங்கள் பூராவும் இந்தச் சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** எந்தப் பகுதி எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்ட பகுதி என்று சொன்னால் உதவியாக இருக்கும்.

* * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைத்தான் சொல்கிறேன். * * * * பேரவைத் தலைவர் ஓவர் ரைட் செய்து அதைச் சபையிலே மறைமுகமாகக் குறுக்கு வழியில் நுழைப்பது உறுப்பினரின் உரிமையைத் துஷ்பிரயோகம் செய்ததாக ஆகும் அதில் அவர்கள் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதற்காகத்தான் அது சம்பந்தமான விவரங்கள் * * * * அதில் என்னென்ன விவரங்கள் அடங்கியிருக்கிறதோ, அந்த விவரங்களும் சேர்ந்து எக்ஸ்பஞ்ச் செய்யப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி நான் கூற விரும்புகிறேன்

* * *

ஆனால் என்னென்ன விஷயங்கள் எழுப்பப்பட்டது என்று சொல்லாமல் குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றிப் பேசுவதற்கு உறுப்பினர் பேசுவதற்கு அனுமதி இருக்கிறது. வேறு விஷயமாகக் கூட இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மல்லாங்கிணறு அல்லது வேறு எந்தக் கிணறு விஷயமாக இருந்தாலும் பேசலாம். பேசக் கூடாது என்பது அல்ல. அது அப்பொழுது விவாதிக்கப்படுகிற விவகாரத்தைப் பொறுத்தது.

* * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



1972 ஆகஸ்ட் 24]

THIRU K. T. K. THANGAMANI : Rule 66, is clear. Every speech must be strictly relevant to the matter before the Assembly. என்பதுதான். ஹெட் ஆஃப் ஸ்டேட் என்பதில் போலீஸ் பற்றி வருகிறது. போலிஸ் குறிப்பிட்ட விஷயத்தில் தலையிடவில்லை என்று சொல்ல உரிமை இருக்கிறது அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் வழக்கறிஞர். நல்ல பாண்டித்யம் பெற்றவர். பாராளுமன்றத்தில் இருந்திருக்கிறார்கள். இந்த மன்றத்தில் நான் நெடுநாட்களாக இருந்திருக்கிறேன். துணை மானியக் கோரிக்கையின்பொழுது நிமிஷயங்களில் நிதி ஒதுக்கீடு முடிந்துவிடும். ஆடிட் ரிப்போர்ட் சம்பந்தமாக தவறுகளோ அல்லது ஏற்கனவே உள்ள தவறுகளோ இருந்தால் அவைகளைச் சுட்டிக் காட்டுவதாகத்தான் அது அமைவது வழக்கம். ஒரு தலைப்பு இருக்கிறது என்ற காரணத்தினால் எல்லா விவகாரங்களையும் பேசுவது சரியல்ல. * *

எனவே, நான் ஆணையிட்டபடி அது சம்பந்தமான எல்லாவிதமான குறிப்புகளும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படுகிறது.

* * *

**திருமதி த. ந அனந்தநாயகி :** நான் சபாநாயகரின் மீது மாடிவ் கற்பித்திருந்தால் தவறு. நான் கடைசி ஆள். எல்லா உரிமைகளையும் நீங்கள் எங்களுக்கு அளித்திருக்கிறீர்கள் என்பதில் மிகுந்த நம்பிக்கை உண்டு. ஆகையால் சபாநாயகர் பாரபட்சமாக நடந்து கொள்கிறார் என்று கூறினால் அது தவறு. * * நிதி ஒதுக்க மசோதாவிலே எல்லா ஹெட்ஸ்லேயும் பணம் கேட்கும்பொழுது எல்லா ஹெட்ஸ்ஸைப் பற்றியும் பேசுவதற்கு வாய்ப்பிருக்கலாம். அது நேரத்தைப் பொறுத்தது நிமிஷத்தில், 1 நிமிஷத்தில் முடிவதை நான் என்னுடைய பத்து வருஷ அனுபவத்தில் பார்க்கவில்லை அப்பொழுது எதிர்க் கட்சியிலே இருந்தவர்கள் விவரமாகத் தெளிவாகத்தான் பேசினார்கள். எனவே அது இருக்கிற நேரத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, இந்தக் குற்றங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து இது முக்கியமான பிரச்னை என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

THE HON. THIRU K. ANBAZHAGAN : With your permission I want to make this personal explanation.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இங்கே பேசும்பொழுது திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தண்ணீர் கிடைக்கவில்லை என்பதால் ஏற்பட்ட வேலைநிறுத்தத்தின் விளைவாக முதலமைச்சரவர்களைக் கண்டு பேசியதாகவும், பிறகு என்னைச் சந்தித்துப் பேசியதாகவும் அப்பொழுது நான், முதலமைச்சரைப் பார்த்துவிட்டீர்கள். பிறகு ஏன் என்னைப் பார்க்க வேண்டும் என்று கூறியதாகச் சொன்னதாக அறிகிறேன். அந்த மாணவர்கள் முதலமைச்சரவர்களைக் காணவே இல்லை. அவர்கள் கண்டது கல்லூரி முதல்வரை. அந்த முதல்வரைப் பார்த்துவிட்டு, தகராறு முற்றி என்னிடத்தில் வந்தார்கள். நீங்கள் முதல்வரைப் பார்த்திருக்கிறீர்கள். அவர் பதில் சொல்லிய பிறகு அமைச்சரைப் பார்க்க வேண்டிய காரணம் என்ன என்று கேட்டுவிட்டு, தண்ணீர் இறைக்கும் மோட்டார் ரிப்பேரினால் நின்று விட்டது. இந்தப் பிரச்னையைப் பெரியதாக்கலாமா என்று நான் மாணவர்களைக் கேட்டேன். அந்த மாணவர்கள் முதலமைச்சரைச் சந்திக்கவில்லை. கல்லூரி முதல்வரைத் தான் சந்தித்தார்கள். அம்மையார் அவர்கள் இந்த அமைச்சரவையிலே தகராறை உண்டாக்க வேண்டுமென்று பேச விரும்பினால் அந்த ஆசையைப் பொது மேடைகளிலே பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று நம்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சரவர்கள் முதல்வர் என்று சொன்னதால் அந்தத் தவறு ஏற்பட்டுவிட்டதோ என்னவோ ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த மசோதாவிலே ஓரிரு கருத்துக்களை, இந்த மசோதாவின்மீது எழுந்த காரியங்கள் என்ற முறையிலே பேச முற்படுகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே பேசும்பொழுது மேலும் எந்தவிதமான சம்பள உயர்வும் இல்லை, என்று அதிலும் குறிப்பாக செக்ரட்டேரியட் ஊழியர்களுக்கு இல்லை என்ற கருத்தைக் கூறினார்கள். அதற்கு ஆதாரமாக நான்கு இராஜ்யங்களிலே இருக்கின்ற சம்பள விகிதங்களைப் பற்றியெல்லாம் உள்ள



கணக்கை இந்த மன்றத்திலே கொடுத்திருக்கிறார்கள். நானும் இந்த விஷயத்திலே ஓரிரு கருத்துக்களை மட்டும் கூறுவதற்கு முற்படுகிறேன். 1960-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சம்பள ஆணைக் குழுவின் போது அன்றைக்கு ஒரு இன்க்ரிமெண்ட் ரேட் இருந்தது. அதற்குப் பிறகு 1972-ல் இப்பொழுது ரேட்டுகளிலே ரிவிஷன் ஆகியிருக்கிறதா என்றால், அன்றைக்கு எப்படி இன்க்ரிமெண்ட் ரேட் கொடுத்திருக்கிறார்களோ அதே விகிதம்தான் இன்றைக்கும் 72-லேயும்' இருக்கிறது. அதுபோல 12 வருஷமாக இருக்கிறது. விலைவாசி உயர்ந்திருக்கின்ற இன்றுள்ள நிலைமையில் அந்த இன்க்ரிமெண்ட் பற்றிப் புனர் பரிசீலனை செய்வது பொருத்தமாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, ஏதோ அரசியல் கட்சிகள் எந்தப் பிரச்னை வந்தாலும் அதன் பின்னால் நுழைந்து கொள்கிறார்கள் என்ற கருத்தைக் கூறினார்கள். நான் அரசியலுக்காகக் கூறவில்லை. ஆனால் நான் சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். செக்ரட்டேரியட் அசிஸ்டெண்டுகளுக்கு நான்கு மாநிலங்களிலுள்ள சம்பளத்தையும் அகவிலைப்படியையும் சேர்த்துக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். குஜராத் மாநிலத்திலே சம்பளமாகவும், அகவிலைப்படியாகவும் சேர்ந்து அந்த செக்ரட்டேரியட் அசிஸ்டெண்டுகளுக்கு ரூபாய் 346-இல் ஆரம்பமாகி 636 ரூபாயிலே முடிவடைகிறது. அதேமாதிரி உத்தரப் பிரதேசத்திலே 346 ரூபாயிலே ஆரம்பமாகி 596 ரூபாயிலே முடிவடைகின்றது. பீஹார் மாநிலத்திலே 364 ரூபாயிலே ஆரம்பமாகி 544 ரூபாயில் முடிவடைகிறது. தமிழ்நாட்டில் இப்பொழுது ரூபாய் 340-இல் ஆரம்பமாகி 540 என்று போட்டிருக்கிறது. அதேமாதிரி செக்ரட்டேரியட் சூப்பிரண்டெண்டுகளுக்கு குஜராத் மாநிலத்திலே 571 ரூபாயிலே ஆரம்பமாகி 970 ரூபாயில் முடிவடைகிறது. ஹரியானா மாநிலத்திலே ரூ. 646 இல் ஆரம்பமாகி 970 ரூபாயிலே முடிவடைகிறது. உத்தரப் பிரதேசத்திலே 496 ரூபாயாக ஆரம்பமாகி 870-இல் முடிகிறது. இங்கே நமது மாநிலத்தில் 450 ரூபாயில் ஆரம்பமாகி 750 ரூபாயில் முடிகிறது. இதையெல்லாம் நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது நிதி நிலைமையும், இந்த மாநிலங்களில் இருக்கின்ற நிலைமைகளும் ஏறத்தாழ ஒரே கூறாக இருக்கின்றன. ஆகவே, இதைப் புனர் பரிசீலனை செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக

செக்ரட்டேரியட்டில் இருப்பவர்களுக்குத் தனித் தகுதி இருக்க வேண்டும். ஒரு அசிஸ்டெண்டாகப் போக வேண்டுமென்றால் குறைந்த பட்சம் கிராஜுவேட்டாக இருக்க வேண்டும். கிளாஸ் கிடைத்திருக்க வேண்டும். அல்லது எம். ஏ. படித்திருக்க வேண்டும் அல்லது 2 பட்டப் படிப்பு இருக்க வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. மேலும் அவர்கள் செய்கின்ற வேலையானது மிகவும் பொறுப்பான வேலையாகும், மற்ற அசிஸ்டெண்டுகளோடு அவர்களை ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமல்ல என்ற கருத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு விஷயத்தை நான் கூற முற்படுகிறேன். பொதுவாக துணை மானியக் கோரிக்கையில் ரீ செட்டில்மெண்டைப் பொறுத்து ஓரளவு காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஸ்டாப்பர் ரீ-செட்டில்மெண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள். அங்கு தாவா கொடுப்பதற்கும், அப்பீல் காலம் கொடுப்பதற்கும் நான் ரெவின்யூ அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர்கள் ஆவன செய்வதாகச் சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரெவின்யூ போர்டு மெம்பர் அங்கே சென்றிருந்தார்கள். அது சம்பந்தமாக அரசாங்கம் நோட்டிபிகேஷன் போடப் போகிறார்களா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அவர்களிடம் நான் நோட்டிபிகேஷன் போடுவதாக ஒத்துக்கொண்டேன். நிச்சயமாக நோட்டிபிகேஷன் போடப்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அந்த மாவட்டத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து செங்கல்பட்டு மாவட்ட மருத்துவக் கல்லூரி விஷயத்தைப்பற்றி உறுப்பினர் ஹாண்டே அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அதை எங்கள் கட்சியின் சார்பில் நாங்களும் ஒத்துக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு ஆண்டுக் காலம் அங்கே படிப்பினை முடித்தவுடன்





க்ளினிகல் பெசிலிடிக்காக பாக்கிப் படிப்புக் காலத்தை சென்னையில் நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றி எதிர்க் கட்சி வரிசையில் உள்ள எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அக்ரிகல்சுரல் காலேஜுகளிலும் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் அமைதிக் குறைவு ஏற்பட்டு வருகின்றது. மருத்துவக் கல்லூரி, வெட்டனரி கல்லூரி ஆகியவற்றில் படித்து வருகிறவர்களுக்குக் கொடுக்கிற சம்பளம் தங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்கிறார்கள். நாட்டில் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆகஸ்டு 1 ஆம் தேதியில் இருந்து ஆயிரத்திற்கும் மேலான ஆசிரியர்கள் தங்களை டி.ஈ.ஓ. ஆபீஸ் முன்பாக உண்ணா நோன்பு மேற்கொண்டிருக்கிறார்கள். பலரும் 29, 30 என்கிற வயது வரம்பை எய்தக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக 30 வயதிற்குள் அவர்களுக்கு வேலை கொடுக்க ஆணை பிறப்பிக்க வேண்மென்ற கருத்தினைக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இதில் மாதவரம் பால்பண்ணைக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாதவரம் பால்பண்ணை நீண்டநெடுங் காலமாக நட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. இப்போது அதற்கு அதிகமான பணத்தைக் கொடுக்க இருக்கிறார்கள். தற்போது நான் சென்னை நகரத்தில் பாலுக்கு இருந்த கஷ்டமான நிலைமை ஓரளவு சமாளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே இந்த நேரத்தில் இப்போது ஒதுக்கப்படுகிற பணம் விரயமாகிவிடாத முறையில் கண்காணிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கடன் வசூல் செய்கிற விஷயத்தில் விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கிறது. கூட்டுறவுக் கடன்களுக்குத் தவணை தாண்டிவிட்ட காரணமாக அபராத வட்டி விதிக்கிறார்கள், கண்டிஷனல் அட்டாச்மெண்டு கூட நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுடைய வீட்டுக் கதவை ஜப்தி செய்து எடுத்துக் கொண்டு போகக்கூடிய நிலைமை இருக்கிறது. குறிப்பாக

வறட்சித் தன்மை நிறைந்த நேரத்தில் சற்று இந்தக் கடனைத் தள்ளி வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கூட்டுறவுக் கடனைத் தள்ளி வைப்பது ஒன்றும் சிரமம் இல்லை. வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதாக கனம் உறுப்பினர் அவர்களே எனக்கு எழுதி அனுப்பினால் போதும். அவருக்குச் செலவு கால் காகிதமும், ஒரு சொட்டு மையும் தான்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அபராத வட்டியைத் தள்ளிப் போட அரசாங்கம் சட்டம் கொண்டுவருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** காலம் கடந்துவிடுவதற்குள் கடனைத் தள்ளி வைக்க வேண்டுமென்று எழுதிவிட்டால் அபராத வட்டி போடுகிற பிரச்சினையே இல்லையே. இதுபோல எங்களுக்கு எழுதினவுடன் தள்ளி வைக்கப்பட்டிருக்கிற கடன் கோடிக்கணக்கில் இருக்கிறது. கனம் உறுப்பினர் எழுதி அனுப்பினால் கன்னியாகுமரி மாவட்டத்திற்குத்தானா தள்ளி வைக்காமல் போவேன் ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எப்படி நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதை நான் அறிவேன். அதுவும் அவரது சிஷ்யர் ஒருவர் இருக்கிறார் அவர்கள் எப்படி எல்லாம் நடக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அவற்றை எல்லாம் இங்கே எடுத்துக் கூற விரும்பவில்லை. குறிப்பாக நான் முன்பே சொல்லியிருக்கிறேன். திருவாரூர் மார்க்கெட்டிங் பெடரேஷனுக்குப் பணம் அதிகமாகக் கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதையும் கண்காணிக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் நிர்வாகம் செம்மையான முறையில் நடைபெற, எல்லா ஜில்லாக்களுக்கும் நிதி வழங்கக் கூடிய முறையில் நிதி ஒதுக்கீடும் இருக்க வேண்டுமென்று கூறி இத்துடன் அமர்கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே துணை மானியக் கோரிக்கையைத் துணையாகக் கொண்டும், அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினைப் பற்றியும் வேறுபல விவகாரங்களைப் பற்றியும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். துணை மானியக் கோரிக்கை விவாதிக்கப்பட்ட நாளில் உறுப்பினர்களுக்குக் கிடைத்த நேரம் எனக்குக் கிடைக்காத காரணத்தினால் எழுப்பப்பட்ட பல்வேறு விஷயங்களுக்கு நான் பதிலளிக்க இயலாதவனாக அன்றையதினம் ஆகிவிட்டேன். இன்றையதினம் நிதி ஒதுக்கீட்டில் பேசிய கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் இரண்டு மூன்று ஐயங்களை எழுப்பினார்கள். மாட்ட திட்டச் செயல்கள் எல்லாம் பணியாற்றத் தொடங்கிவிட்டனவா என்று கேட்டார்கள். அந்தப் பணிகள் தொடங்கிவிட்டன என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே ஜீப்புகள் வாங்கப்பட இருந்த குறிப்பு செயல்படத் தொடங்கிவிட்டதா என்று கேட்டார்கள். ஜீப்புகள் வாங்கப்பட்டுவிட்டனவா என்றார்கள். பழைய ஜீப்புகளுக்குப் பதிலாக விற்பனை வரி இலாக்காவுக்கு வரி வசூல் செய்ய உதவியாக 11 ஜீப்புகள் வாங்க அனுமதிக்கப்பட்டு 2 ஜீப்புகள் வந்து சேர்ந்துவிட்டன. மற்ற ஜீப்புகளும் வந்துவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல அக்ரிகல்சுரல் சென்சஸ் கணக்குப் பணிக்கு ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், கர்ணம் ஆகியவருக்கு மதிப்பீட்டு ஊதியம்—ஆனரோரியம் தருவதற்கு நாம் மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்றோம். தொடக்கத்தில் அந்தச் செலவை நாமே செலவு செய்ய அனுமதித்துள்ளோம். அந்த வகையில் அந்தத் தொகையும் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. அவர்கள் கண் சிகிச்சை முகாம்களைப் பற்றி இங்கே சொன்னார்கள். அரசு எடுத்திருக்கிற முயற்சியை முழுமையாகப் பாராட்ட மனம் இல்லாத காரணத்தினால் அரசு ஒன்றும் புதியதாக இதைச் செய்யவில்லை. பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிற காரியம் தான் இது என்று சொன்னார்கள். கண்சிகிச்சை

என்பது மனிதனுக்கு கண் இருக்கிற காலத்தில் இருந்து, கண்ணில் நோய் தோன்றிய காலத்தில் இருந்து சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதுரையில் இந்தத் திட்டம் வருவதற்கு முன்னால் கிட்டத்தட்ட ஆயிரம் பேருக்கு டி.வி.எஸ். பட்டியல் டாக்டர் வெங்கடசாமி முயற்சியில் கண்சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குச் செலவான தொகை பொது மக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் மோடி அவர்கள் தமிழகத்திலும், புதுவை ராஜ்யத்திலும் கண்சிகிச்சை செய்து வருகிறார்கள். அவர்களையும் இத் திட்டத்தின் கீழ் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், இதற்காக நிதி ஒதுக்கீட்டில் 40 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படியின்றி பொதுமக்களிடம் இருந்து இதற்காகும் செலவை வசூலிக்கலாம். பிலாந்திரபிரஸ்டுகளுடைய உதவியுடன் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியும், அவர்கள் உதவியைத் தடுத்துவிடக் கூடாது என்று சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவர்களிடமிருந்தெல்லாம், செல்வம் படைத்தவர்களிடமிருந்தெல்லாம் பணம், பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணம். அந்த அடிப்படையில் இதை ஒரு தீவிரத் திட்டமாக அரசு உருவாக்கி இருக்கிறது. ஏற்கனவே ஆண்டு ஒன்றுக்கு ஐநூறு பேர், ஆயிரம் பேர், இரண்டாயிரம் பேர் என்ற அளவுக்குத்தான் கண்சிகிச்சை முகாம்கள் மூலமாக இது நடை பெற்றுக் கொண்டிருந்தது. ஒருசில பணக்காரர்கள் இந்தக் காரியத்தை ஏதோ ஒரு உபயம் போல, தர்மம் போலச் செய்து வந்தார்கள். இந்தப் பணியை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் பேருக்குக் கண் சிகிச்சை அளிப்பது என்பது விளையாட்டான காரியம் அல்ல. அது மாத்திரமல்ல. எடுக்கப்பட்ட கணக்குகளின்படி தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்கள் பத்து லட்சம் பேர் கண்ணொளி இழந்து தவிக்கிறார்கள். அப்படிப்பட்ட பத்து லட்சம் பேருக்கு நாலைந்து ஆண்டு காலத்தில் இந்த உதவியைச் செய்து முடிக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகும் தொடர்ந்து இந்தத் திட்டத்தை



நிறைவேற்றி வருவது என்றும் திட்டமிட்டு இந்த ஆண்டு ஒரு லட்சம் பேருக்கு இந்த நற்பணியைச் செய்வது என்று அரசு முன்வந்திருக்கிறது.

இதிலே 40 அல்லது 45 லட்சம் ரூபாயை அரசாங்கமே செலவு செய்கிறது என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அதற்கு அடுத்த வாக்கியத்தைப் படிக்காததற்காக நான் மிகவும் வருந்துகிறேன். 'இது குறித்து தொடக்கத்தில் ஆகும் ரூபாய் 45.4 லட்சம் செலவுக்கு மானியம் 14 வகை செய்கிறது' என்பதோடு முடியவில்லை. இத் தொகை நாளாவட்டத்தில் கண்ணொளி வழங்கும் திட்டத்தில் இருந்து நேர் செய்யப்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு என்னுடைய பிறந்த நாளன்று நான் விடுத்த வேண்டுகோளுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கும் இணங்க இதுவரை 12 லட்சம் ரூபாய் நிதியாகச் சேர்ந்திருக்கிறது. மேலும் பல லட்சம் ரூபாய் சேருமென்று எதிர்பார்க்கிறோம்.

முன்பு பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்காக சென்ற ஆண்டு 40 லட்சம் ரூபாய் கேட்டோம். ஒரு கோடி ரூபாய்க்கு மேல் தமிழ் நாட்டு மக்கள் அதற்கு நிதியாகத் தந்திருக்கிறார்கள். ஆகவே, கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கும் அரசாங்கம் தொடக்கத்தில் செலவழித்தாலும் நாளடைவில் இதற்காக வந்து குவிய இருக்கிற நிதியிலிருந்து நேர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த ஒரு பெரிய நல்ல காரியத்தை இந்த அரசாங்கம் முன் நின்று செய்தாலும் அந்த நல்ல காரியங்களை, பரவலாக கிடைக்கிற பயனை பாராட்டுவதற்குப் பதிலாக அங்கொன்றும் இங்கொன்று மாக நடந்துவிடுகின்ற குறைபாடுகளைச் சிலாகித்து, பெரிது படுத்திப் பேசி வருவது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகும்.

யாரோ பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன் ஒரு பெரியவர் 'மூக்குக் கண்ணாடிக் கடைக்காரர்களுக்கு வியாபாரம் நடக்க வேண்டுமென்பதற்காக கண்ணொளி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து கண்ணாடிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்' என்று பேசியிருக்கிறார். சில பத்திரிகைகள் இதைப் பாராட்டுவதற்குப்

பதிலாக ‘ஒரு கண்ணாடியின் விலை 15 ரூபாய் என்றால் ஆயிரம் கண்ணாடிகள் வழங்குவதற்குப் 15,000 ரூபாய்தான் செலவு; இதற்குப் போய் ஒரு லட்சம் ரூபாய் செலவு என்று சொல்லுகிறார்கள்’ என்றெல்லாம் கேள்வி போடுகிறார்கள்.

கண்ணாடி என்பது கண் சிகிச்சை முடிந்து ஒரு வாரத்திற்குப் பிறகோ, பத்து நாளைக்குப் பிறகோ, இறுதியாக நடைபெறுகிற நிகழ்ச்சியாகும். அதற்கு முன்பு அங்குள்ள நோயாளிகளுக்குத் தகுந்த வசதிகள் அளித்து, அவர்களுக்கு உணவு, உறையுள் போன்ற வசதி வாய்ப்புகள் அளித்து, அறுவை சிகிச்சை செய்து, அதற்குப் பணியாளர்கள், மற்றும் அங்கு ஊழியம் புரிய அந்தந்தப் பகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற தொண்டர்கள் இவர்களுக்கெல்லாம் ஆகின்ற செலவுகளை வைத்துப் பார்த்தால் ஒரு நாளைக்குக் கிட்டத்தட்ட ஒரு நோயாளிக்கு 50 ரூபாயில் இருந்து 60 ரூபாய் வரை செலவாகும் நிலை இருக்கிறது. ஆகவே, ஆயிரம் பேருக்கோ, இரண்டாயிரம் பேருக்கோ முகாமில் கண்ணொளி வழங்குவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளலாம். ஏதோ வெறும் கண்ணாடி வழங்குவது மாத்திரம் திட்டமல்ல. கண்ணாடி வழங்கிவிடுவதால் கண்ணொளி வந்து விடாது. அறுவை சிகிச்சைக்குப் பிறகுதான் கண்ணாடியைப் பயன்படுத்த முடியும்.

டாக்டர் வெங்கடசாமி போன்ற டாக்டர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். இந்தத் திட்டத்திற்காக முதல் முதலிலேயே நாங்கள் யோசனை கேட்டது டாக்டர் வெங்கடசாமி அவர்களிடத்தில்தான். இப்போதும் பெரும்பகுதி அவருடைய தலைமையில்தான் நடக்கிறது. ஒரு அணிக்குத் தலைவராக இருந்து கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிற டாக்டர்களில் ஒருவராகத் திரு. வெங்கடசாமி அவர்கள்தான் இருந்து வருகிறார். எனவே, நாங்கள் அவரைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று கூறுவதிலிருந்து இந்த அரசாங்கத்தின் நல்ல நடவடிக்கைகளை எல்லாம் பார்க்கக் கூடாது, படிக்கக் கூடாது என்று ஒதுக்கி விடுகிறார்கள் என்று நான் தோன்றுகிறது. ஒவ்வொரு கண் சிகிச்சை முகாமிலும் டாக்டர் வெங்கடசாமி அவர்கள்தான் வரவேற்றுப் பேசுகிறார். நோயாளிகளைப் பார்வையிட்டு ஆய்வு நடக்கிற [illegible] டாக்டர்கள்



பணியை மேற்பார்வையிட்டு கருத்துக்களைத் தெரிவிக்கிறார். ஆகவே, டாக்டர் வெங்கடசாமி அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள இயலாது—ஏற்கனவே நாங்கள் அவரைப் பயன்படுத்திக் கொண்டு வருகிற காரணத்தால் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதுபோன்ற நல்ல காரியத்திற்காக நிதி சேர்க்கின்ற நேரத்தில் இதற்கெல்லாம் கணக்கு உண்டா, வழக்கு உண்டா என்று சில பத்திரிகைகள், எரிச்சல் கொண்ட பத்திரிகைகள் எழுதுகின்றன. பல பெரியவர்கள், அவர்கள் நடத்தும் பத்திரிகைகளில் கூட ‘இதற்கெல்லாம் கணக்குக் கிடையாது; பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி ஒரு பெரிய மோசடி. அதிலே எல்லா அமைச்சர்களும் நீந்திக் குளிக்கிறார்கள்’ என்பது போன்ற கேலிச் சித்திரங்கள் எல்லாம் போடுகிறார்கள்.

இந்த நிதிகளைக் கொண்டு செய்கிற பணிகளுக்கெல்லாம் சட்டசபையிலே அனுமதி பெறுகிறோம். அனுமதி பெறுகிற காரணத்தால் அக்கவுண்டண்ட் ஜெனரல் தணிக்கைக் குழுவுக்கு அந்தக் கணக்கு உட்படுகிறது. அதற்கு மேலும் அந்த நிதிகளின் வரவு செலவுக் கணக்குகள் எக்ஸாமினர் ஆப் லோக்கல் பண்ட் அக்கவுண்ட்ஸால் தணிக்கை செய்யப்படுகிறது. சர்க்கார் கணக்கில் ரிசர்வ் பாங்கில் பணம் இருக்கிறது. ஃபினான்ஸ் டிபார்ட்மென்ட் டெபுடி செகரட்டரி ட்ரெஷரராக இருந்து பணி புரிந்து வருகிறார். ஆகவே, இவ்வளவு கட்டுதிட்டத்தோடு சட்டப்படி இந்த நிதி இன்றைக்கு செலவழிக்கப்படுகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய காரியங்களுக்கு இப்படிப்பட்ட ஊனங்களை, குந்தகங்களை, மாசு கற்பிக்கின்ற தன்மைகளைப் பெரியவர்கள் விட்டுவிட வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் சொல்லுகிறேன்.

இதனுடைய தொடர்பாக இங்கே பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் செங்கற்பட்டில் இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள். சென்னையில் ஒரு மருத்துவக் கல்லூரி இருந்த நேரத்தில் செங்கற்பட்டில் மருத்துவக் கல்லூரி அமைத்ததால் அது எவ்வளவு சங்கடத்திற்குரியதாக இருக்கிறது என்பதை இன்றைக்கு நாம் அனைவரும் உணருகிறோம். இப்போது அதைப் பற்றி எல்லாம் சொன்னால் பழைய விஷயங்களைக் கிளறுவதாக

சொல்லுவார்கள். இப்போது செங்கற்பட்டு கல்லூரி மாணவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். நேற்றையதினம் மாணவர்களிடத்தில் பேசி இருக்கிறார்கள். மீண்டும் அந்தக் கல்லூரியில் இருக்கின்ற மற்ற கல்வித் துறையினரிடத்திலும், மருத்துவ அதிகாரிகளிடத்திலும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளை நடத்தி சுமுகமான முடிவு நிச்சயமாக இந்த அரசின் சார்பில் எடுக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருத்தாசலம், காரைக்குடி இன்னும் வேறு சில இடங்களில் நடைபெற்ற கூட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் கூட்டங்களில் எல்லாம் கலவரம் நடைபெற்றது. யார் கலவரம் செய்தார்கள், யார் அடிபட்டார்கள் என்ற வாதத்திற்குள் நான் இறங்க விரும்பவில்லை. எங்கே கலவரம் நடந்தாலும் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் நடந்தாலும், கம்யூனிஸ்டுக் கட்சிக் கூட்டத்தில் நடந்தாலும், கழகக் கூட்டத்தில் நடந்தாலும் பாரபட்சம் இல்லாமல் காவல் துறையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற முறையிலேதான் அவர்கள் தங்களுடைய பணியைச் செய்து வருகிறார்கள். தொடர்ந்து பாரபட்சமற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் ஒருமுறை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேடைகளில் பேசுகின்றவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—குறிப்பிட்ட கட்சியைச் சொல்லவில்லை—நம்முடைய அரசியல் பண்பாடு, பெருந்தன்மை, நாகரிகம் இவைகளைக் காப்பாற்றக்கூடிய அளவுக்குப் பேசிப் பழகிக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். என்னையும் சேர்த்து அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில் என்ன பேசப்படுகிறது? இன்று காலை இந்து பத்திரிகையில் ஒரு பெருந்தலைவர் பேசியதாக வந்திருக்கிறது. 'மதுரை மாநாட்டின் கிளைமாக்ஸ்—மதுரை மாநாடே நாடகம்'. அதிலே கிளைமாக்ஸ் கட்டம் 'கதாநாயகன் கருணாநிதி மயக்கமுற்று விழுந்தது. இதெல்லாம் அவர்களுடைய தவறுகளை மறைக்கச் செய்யும் நாடகம்' எனப் பெருந்தலைவர்,



அகில இந்தியக் கட்சியின் பெருந்தலைவராக இருந்தவர் பேசி இருக்கிறார். எனக்கு நோய் வந்ததைப் பற்றிப் பெருந்தலைவராக இருக்கிறவர் இந்த அளவுக்குப் பேசியிருக்கிறார் என்றால் தமிழ் நாட்டில் அரசியல் பண்பு, அரசியல் நாகரிகம் வெகு வேகமாக எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்த நிலைமைக்குத் தமிழ்நாட்டு அரசியலைக் கொண்டு செல்லாமல் இருக்க அனைவருடைய ஒத்துழைப்பையும் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாணவர்கள் பற்றியும் வேறு மாணவர்கள் பிரச்சினை பற்றியும் திருமதி அனந்தநாயகி அவர்களும் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளைப் பற்றியெல்லாம் நாளையதினம் அவையில் வர இருக்கின்ற பிரச்சினைகளில் தொடர்புடைய அமைச்சர்கள் பதில் சொல்லும் போது விளக்கங்களை அளிப்பார்கள்.

டி.சி.எம்.எஸ்.ப் பற்றிச் சொன்னார்கள். அதிலும் ஸ்டேட் பாங்குக்கு இந்தச் சர்க்கார் பொறுப்பேற்றுக் கொண்ட முறையில் டி.சி.எம்.எஸ். நிறுவனம் சீர் குலையாமல் நடைபெற வேண்டுமென்பதற்காக 27 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம்.

சுமார் 22, 27 லட்சம் தொகைகளை இன்று வழங்கியிருக்கிறோம். இதற்கிடையில் டி.சி.எம்.எஸ்.ப்-ல் ஏற்பட்டது தவறு அல்லது ஊழலா என்பதைக் கண்டுபிடிக்கிற அந்த ஆராய்ச்சிகள், விசாரணைகள் தொடர்ந்து ஒரு ஆண்டு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் நிர்வாகத்தினர் எல்லாம் இன்றைக்கு அந்த நிறுவனத்தில் இல்லை. அதற்குப் பதிலாக ஒரு ஸ்பெஷல் ஆபீஸர் போடப்பட்டு அவர்கள் அதன் விசாரணையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் போலீஸார் விசாரணை நடத்தி முடித்து அவர்கள் குறிப்புகள் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கிடையில் அந்த நிறுவனம் சீர்குலைந்து விடக்கூடாது, அது ஒரு பெரிய நிறுவனம் என்று இங்கு இந்த ஒதுக்கீட்டைச் செய்திருக்கிறோமே அல்லாமல் வேறு அல்ல.

ஊதிய உயர்வு பற்றி சொன்னார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்லிவிட்டேன். மக்கள் வரிப்பணத்தை இப்படி நாம் சம்பளமாகவே கொடுத்துக் கொண்டிருந்தால் பிறகு ஒரு நாள் மக்கள் கொதித்தெழுவார்கள். திட்டங்களை நிறைவேற்ற வரி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவைகளை எல்லாம் சம்பளமாகக் கொடுத்துக் கொண்டிருப்பீர்களானால் எங்களுக்கு திட்டங்கள் எங்கே என்று கேட்கத் தொடங்கி மக்கள் ஆர்த்தெழுவார்கள். ஆகவே வரி கொடுக்கும் மக்களையும் கணக்கில் வைத்துக்கொள்ள வேண்டும். எடுத்ததற்கெல்லாம் போராட்டம், கிளர்ச்சி என்ற வகையில் ஆரம்பித்து ஊதியம் போதவில்லை. ஊதியம் போதவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தால் நாம் வருமானமாகப் பெறுகிற, அரசாங்கம் பெறுகிற பணம் அவ்வளவும் ஊழியர்களின் சம்பளமாகப் போய்விடும். பிறகு நல்ல காரியங்களைச் செய்ய முடியாது என்பதை மனதில் வைத்துக் கொண்டு அரசாங்க ஊழியர்களானாலும் சரி அல்லது ஆசிரியர்களானாலும் சரி அவர்கள் அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று அன்றே சொன்னேன், மேலவையிலும் அதைத்தான் சொன்னேன், இப்போதும் அதைத் தான் சொல்கிறேன். இந்த அளவோடு இங்கு எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு என் பதிலை வழங்கி இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2. and the Schedule were put and carried.
Clause 1, the Preamble and the Long Title were put and carried.



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/72) சட்டமாக்கப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக்கப்பட்டது.

## (6) அறிவிப்புகள்

**(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/72)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/72) பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/72)**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியவகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவைச் சட்ட வரைவு எண் 34/1972) ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

கீழ்த் தஞ்சாவூரில் உழவுத் தொழிலாளரின் பிரச்சினைகள் குறித்து விசாரணை செய்வதற்கென, 1968 டிசம்பரில் மாநில

* 12—8—1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு செய்த பரிவுரைக்கு இணங்க, தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/1969) சாற்றுரைக்கப்பட்டது. பின்னர், இதற்குப் பதிலாக, தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/1969) இயற்றப்பட்டது. ஒவ்வொரு நிலச் சொந்தக்காரரும் பயிரிடு பருவத்தின்போதும் அறுவடையின்போதும் எல்லா வகைப் பணிக்காகவும் தாம் அமர்த்துகிற உழவுத் தொழிலாளர்களுக்கு மேற்படி சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நியாய ஊதியங்களை வழங்க மேற்படி சட்டம் வகை செய்கிறது. நியாய ஊதியங்கள் வழங்குவதைச் செயற்படுத்துவதற்கும் மேற்படி சட்டம் வகை செய்கிறது. கீழத் தஞ்சை மாவட்டத்தின் ஆறு வட்டங்களில் 1969 ஆகஸ்டு 5 ஆம் நாளன்று மேற்படி சட்டம் செயலுக்கு வந்ததாகக் கருதப்பட்டது. மேலும், 1972 ஆகஸ்டு 4 ஆம் நாள் இது செயலிலிருக்கும்.

மேற்படி சட்டத்தை 1972 ஆகஸ்டு 4 ஆம் நாளுக்குப் பிற்பட்டும் தொடர்ந்து செயலிலிருக்கச் செய்ய வேண்டியதன் தேவை குறித்து அரசு கவனமாகப் பரிசீலனை செய்து, மேற்படி சட்டத்தின் ஆட்சிக் கால அளவை 1972 ஆகஸ்டு 4 ஆம் நாளுக்குப் பிறகு மூன்றாண்டுக் காலத்திற்கு நீட்டிப்பதென முடிவு செய்துள்ளது. இந்த முடிவைச் செயற்படுத்த, தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/1972) ஆளுநர் சாற்றுரைத்தார்.

அவசரச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கும் மூன்றாண்டு களுக்குப் பதிலாக ஐந்தாண்டுகளுக்கு மேற்படி சட்டத்தின் ஆட்சிக் கால அளவை நீட்டிப்பதெனப் பின்னர் அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவைச் செயற்படுத்தவும் தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு உழவுத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (திருத்த) அவசரச் சட்டத்திற்குப் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/1972) பதிலாக இருக்கவும் இச்சட்ட வரைவு விழைகிறது.



மேற்படி சட்டத்தை நிலையானதொன்றாகச் செய்வதற்கு நியாய ஊதிய விகிதங்களை மாற்றியமைப்பதற்காக அறிவிப்பின் மூலம் நியாய ஊதியங்களை வரையறுக்க அரசுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் அதைத் திருத்துவதற்கும் ஒருமுறை வரையறுக்கப்பட்ட நியாய ஊதிய விகிதங்கள் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத இடைவெளியில் மறு ஆய்வு செய்யப்படுவதற்கு உட்பட்டவையாக்குவதும் விரும்பத்தக்கதென இப்போது கருதப்படுகிறது. மேற்குறிப்பிட்ட நோக்கத்தைச் செயற்படுத்துவதற்காக அரசுத் திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

இத்தீர்மானத்தைப் பேரவை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu Agricultural Labourer Fair Wages (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 34 of 1972) be referred to a Joint Select Committee of both Houses consisting of . . . . members (names of members to be intimated later)."

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டும் என்பது என் தீர்மானம். காரணம், கனம் மந்திரி அவர்கள்கூட ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தத்தின் அடிப்படையில் அந்தந்தப் பகுதிகளில் உள்ள அந்தந்த சமயத்தில் ஏற்படக்கூடிய விலைவாசியைப் பொறுத்து அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஆள்களைப் பொறுத்து ஐந்து வருடங்களுக்கு ஒருதாம் இந்தமாதிரி சம்பளம் பற்றி புனர்பரிசீலனை செய்யப்படும் என்றிருக்கிறது. கூலி விகிதாசாரம் பற்றி பரிசீலனை செய்த கணபதியா பிள்ளை அவர்கள்கூட மூன்று வருடங்களுக்கு ஒரு தரம் கூலி விகிதத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று அவர்கள் கூட சிபார்சு செய்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக, விலைவாசிகள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தரம்தான் ஏறுகிறதா? அடிக்கடி விலைகள் ஏறிக்கொண்டே இருக்கின்றன. முன்பு ஆறு படி கூலி என்று நிலப்பிரபுக்களும்,

[திரு. என். கே. பழனிசாமி] [1972 ஆகஸ்ட் 24

தொழிலாளர்களும் மாண்புமிகு மந்திரி அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இப்போது ஏழு படி கேட்கிறார்கள். இது சட்டமானால் ஐந்து ஆண்டுகளுக்கு விலைவாசி எப்படி ஏறினாலும் ஒன்றும் கேட்கவே முடியாது. சட்டம் என்று வந்துவிட்டால் அது இரண்டு பேர்களையும் பைண்ட் பண்ணுகிறது. ஆகவே இப்படி ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை என்றில்லாமல்—இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் இருக்கிறது, மானேஜ்மென்டுக்கும் தொழிலாளர்களுக்கும் சமரசமான ஒப்பந்தம் அந்தந்த நிலைமைகளுக்கு ஏற்ப, விலைவாசி உயர்விற்கேற்ப ஒப்பந்தம் ஏற்படுகிறது. அதேமாதிரி இதற்கு ஸ்டாண்டிங் ஆக்ட் என்றிருக்கிறது. விலைவாசி நெருக்கடி ஏற்படும்போது அவர்கள் 15 நாள் நோட்டீஸ் கொடுத்துவிட்டு சமரசத்திற்கு ஏற்பாடு செய்யலாம். ஆகவே ஐந்து ஆண்டுகள் என்று போட்டுவிட்டால் அது கிராமப் பகுதிகளில் அடிக்கடி போராட்டங்கள் நடக்க வழிகோலும். காரணம், ஆகவே இதைப் புனர்பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டம் கிழக்கு தஞ்சைக்கு மட்டும்தான் இருக்கிறது. மாநிலம் பூராவும் கொண்டுவரவேண்டுமென்று ஏற்கனவே ஒரு பெரிய போராட்டம் நடத்தி அது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் கூலி ஆறணா. ஒரு வேளை சாப்பாடு. கொல்லிமலை, சத்தியமங்கலம் போன்ற இடங்களில் இன்னும் ஆறணா, எட்டணா என்றுதான் இருக்கிறது. மலைப்பகுதிகளில் அப்படித்தான் நிலைமை இருக்கிறது. தொழிலாளர்கள் நசுக்கப்படுகிறார்கள். ஆகவே எல்லாவற்றையும் பரிசீலனை செய்து நாடுமொத்தமாக குறைந்தபட்ச கூலி இவ்வளவு என்று மாநிலம் பூராவும் கொண்டுவருவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கூலியை ஒத்துக்கொண்டு அது சரியானமுறையில் கொடுக்கப்படுகிறதா என்பதை அந்தந்தப் பகுதிகளில் கீழ் மட்டத்திலிருந்து பல கட்சிகளைச் சேர்ந்தவர்களைக் கொண்ட ஒருகுழு போட்டு அது சரியானமுறையில் அமல் செய்யப்படுகிறதா என்று அவர்கள் பார்க்கவேண்டும். விவசாய போராட்டத்தின்போது ஏற்பட்ட



1972 ஆகஸ்ட் 24] [திரு. என். கே. பழனிசாமி]

ஒப்பந்தத்தில் உள்ள ஒரு ஷரத்தில் இது அரசுத் தரப்பிலிருந்து ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட்டு மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மீது சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன். முதலில் இந்த சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வராமல் தனி சட்டமாகக் கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தினை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், திருத்தம் என்று சொன்னால் ஒரு சிறு குறுகிய அளவிலேதான் அதிலுள்ள அம்சங்கள் பற்றி பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படும். பொதுவாக, இம்மாதிரி சட்டங்கள் வருகின்ற பொழுது எல்லாவற்றையும், அந்த பில்லில் அடங்கியிருக்கின்ற அம்சங்களைப் பற்றி சொல்வதற்கு வாய்ப்பு இருந்தாலும், அது குறுகிய நோக்கத்தோடு இருக்கிற காரணத்தினால், தெளிவாக அதன் எல்லாப் பகுதிகளைப் பற்றியும் சொல்ல முடியாது.

இந்த மசோதாவானது கிழக்கு தஞ்சையில் 6 தாலுகாக்களுக்கு கூலி நிர்ணயம் செய்கின்றதைப்பற்றிய திருத்த மசோதா. இந்தச் சட்டத்திற்கு முன்னதாக ஏற்பட்ட கமிட்டி பற்றியும், அந்தக் கமிட்டி கூலியை எப்படி நிர்ணயம் செய்தது என்பது பற்றியும் இந்த மன்றத்தில் கூறவேண்டிய தேவையில்லை.

பொதுவாக விவசாயக் கூலிகளெல்லாம் ஆர்கனைஸ்டு லேபராக இல்லை என்ற காரணத்தினால் அவர்களுக்கு ஒரு நிர்ணயமான கூலி என்ற ஒரு நியதி இல்லாத முறை காணப்படுகிறது. அவர்களுக்கு ராஜ்யம் முழுவதும் கூலியை நிர்ணயம் செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப, விலைவாசிக்கு ஏற்ப, இந்தக் காரியங்களையெல்லாம் செய்வதுபொருத்தமாக இருக்கும். உழவுக்கு எவ்வளவு, அறுவடைக்கு எவ்வளவு கூலி என்றெல்லாம் இந்த சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

பல பகுதிகளிலும் இம்மாதிரியான அறுவடை காலத்திலும், அதே மாதிரி உழுகின்ற நேரத்திலும் போராட்டங்கள்,

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 ஆகஸ்ட் 24

கிளர்ச்சிகள் சில அரசியல் கட்சிகள் நடத்திக்கொண்டிருக்கின்றன. அண்மையில் ஒரு விவசாயிக் கூலிக்கு குறைந்தபட்சம் ரூ. 5 கூலி இருக்கவேண்டும் என்று ஒரு கிளர்ச்சி நடந்துகொண்டிருப்பது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும். இத்தகைய கிளர்ச்சிகளெல்லாம் தேவைதானா, தேவையற்றது அல்லவா என்பதையெல்லாம் நாம் சற்று சிந்திக்கவேண்டும். ஆதலால், அரசாங்கம் சட்டம் செய்கின்றபொழுது விவசாயக் கூலியை நிர்ணயம் செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

கிழக்குத் தஞ்சைக்கு மட்டுமல்ல. வேறு விவசாயப் பகுதிகளுக்கும் இதை விஸ்தரிப்பது பொருத்தமாக இருக்கும். ஒரு ஒருங்கிணைந்த சட்டமாக இயற்றுவது பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தினைக் கூறிக்கொள்ள விழைகின்றேன். விவசாயப் பகுதிகளில் அமைதி இருக்கவேண்டும், பசுமைப் புரட்சி ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது, விவசாயப் பகுதிகளில் இம்மாதிரியான போராட்டங்கள் தலைதூக்குவது விவசாயத்திற்கே பெரிய ஆபத்தை விளைவிக்கும், நாட்டின் விவசாய முன்னேற்றத்திற்கு தடை ஏற்படும். விலைவாசி குறைந்தபாடில்லை உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோம். ஆனாலும், அத்தியாவசியமான உணவுப் பண்டங்களின் விலை இன்னும் கூடித்தான் இருக்கிறது. கூலியை நிர்ணயம் செய்யும்பொழுது 1960-ல் இருந்த கூலி எவ்வளவு என்பதை ஒரு அடிப்படையாகக் கொண்டு, இப்பொழுது இருக்கிற கூலியை நிர்ணயம் செய்வது பொருத்தமாக இருக்கும். பொதுவாக, இந்த சட்டமானது வேற்கக்கூடிய ஒரு சட்டம் என்று கூறி நான் அமர்கிறேன்.

**திரு. எ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டம் வரவேற்கத் தக்க சட்டம். ஆனாலும், ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டம் நிரந்தரமாக இல்லாமல் இருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு மட்டும் விஸ்தரிப்பதற்கு கொண்டு வரப்படுகிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை பெர்மனன்ட் ஆக்ட்டாக செய்வதற்கான திருத்தம் வரும் என்று சொல்கிறார்கள். அதற்காக மிக்க நன்றி.



1972 ஆகஸ்ட் 24][திரு. எ. சுப்பிரமணியம்]

அடுத்ததாக, இந்தச் சட்டம் கிழக்குத் தஞ்சைக்கு மட்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள் மாநிலம் முழுமையும் இருக்கிறார்கள். கிழக்குத் தஞ்சையில் போராட்டம் நடந்தது. அதனால் கணபதியாபிள்ளை கமிஷன் அமைக்கப்பட்டு இந்த சட்டம் வந்தது. மற்ற இடங்களில் போராட்டம் நடக்கவில்லை என்பது உண்மை. இருந்தாலும் போராட்டம் நடக்கவில்லை என்ற காரணத்தினால் அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் அனுகூலம் இல்லாமல் செய்வது சரியானதல்ல. அண்மையில் விவசாயிகளின் போராட்டம் நடந்தபொழுது ஒரு உடன்பாடு ஏற்பட்டு, எல்லா இடங்களிலும் உள்ள விவசாயத் தொழிலாளிகளுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்வதாக அரசு உத்தரவாதம் அளித்திருக்கிறது. இந்த உறுதியை நிறைவேற்றுகின்ற வகையில் இந்த சட்டம் மாநிலம் முழுவதற்கும் கொண்டுவரப்படவேண்டும்.

அது மட்டுமல்ல, விலைவாசி ஏறியிருக்கிறது. விலைவாசி ஏற்றம் மட்டுமல்ல, நாட்டின் சமுதாய மாற்றத்திற்கேற்ப அவர்களும் மனிதர்களாக அந்தஸ்துடனும், உரிமையோடும் வாழ்கின்ற நிலைமை ஏற்பட வேண்டும் என்பதனையும், அவர்களின் தேவைகள் வளர்ந்து வந்திருக்கின்றன என்பதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, விலைவாசி உயர்வையும் கணக்கில் எடுத்துக்கொண்டு விவசாயக் கூலியை திருத்தி அமைப்பதற்கு வகை செய்யவேண்டும். மாநிலம் முழுவதற்கும் செல்லுபடியாகக்கூடிய திருத்தம் கொண்டு வரவேண்டியது அவசியம் என்ற கருத்தினையும் வலியுறுத்தி, அமர்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். வடிவேல் :** சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, தோழர் என். கே. பழனிசாமி அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டிலே ரொம்பவும் அடித்தட்டில் வாழக்கூடிய விவசாயத் தொழிலாளிகளுக்கு நியாயக் கூலிச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகளுக்குப் பின்பு மற்ற தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய வாழ்வு நிலையை எடுத்து சரிவர கணக்குப் பார்த்தால், விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கை நிலை மிகமிகப் பின்

தங்கியிருக்கிறது என்பதை சட்டமன்றத்திலுள்ள அத்தனை பேர்களும் ஒத்துக்கொள்வார்கள், நியாய உள்ளம் படைத்தவர்கள் ஒத்துக்கொள்வார்கள். சமீபத்தில் காலம் சென்ற நீதிபதி கணபதியா பிள்ளை அவர்கள் பரிசீலனை செய்து ஒரு நியாயமான தீர்ப்பை அவர்களுக்கு வழங்கினார்கள். நெற்களஞ்சியம் என்று சொல்லக்கூடிய கீழ்த்தஞ்சை மாவட்டத்தில் ஆண்டுக்கு 180 நாட்களுக்கு ஆண்களுக்கும், 130 நாட்களுக்கு பெண்களுக்கும் வேலை கிடைக்கிறது, ஒரு குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றுக் ரூ. 300-க்கு மேல் சம்பாதிக்க முடியாது என்று அவர்கள் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள். அம்மாதிரி அவல நிலையில் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதை வைத்துப் பார்க்கிறபொழுது, இன்றைக்கு பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களையும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்களுடைய வாழ்க்கை நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால், அரசாங்கத்தினால் போடப்பட்டிருக்கும் நல்ல திட்டங்கள் அனைத்தும் வறுமையின் கடைக்கோடியில் வாழ்கின்ற விவசாயத் தொழிலாளிகளுக்கு கிடைக்கவில்லை. இதை நியாயபூர்வமாக சிந்தித்துப்பார்ப்பவர்கள் யாரும் ஒப்புக்கொள்வார்கள்.

இந்த நிலையை வைத்துக்கொண்டு, ஐந்து ஆண்டுகளுக்கு விவசாயத் தொழிலாளிகளுக்கு ஒரு சட்டம் கொண்டு வர வேண்டும் என்று நமது உணவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலவி வருகின்ற விலைவாசி ஏற்றத்தை மனதில் வைத்துப்பார்த்தால், அவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தரம் கூலியை நிர்ணயம் செய்வது நியாயமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

அடுத்தபடியாக எடுத்துக்கொண்டால், இன்றைக்கு ஒரு மீனவ தொழிலாளி கடலில் மூழ்கிவிடுகிறான் என்றால், மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொழுது அகால மரணம் அடைந்து விட்டான் என்றால், சர்க்கார் அந்தத் தொழிலாளிக்கு ஈட்டுத் தொகை வழங்குகிறது. அதே போல் இன்றைக்கு மரமேறித் தொழிலாளி வழுக்கி விழுந்து அகால மரணம் எய்தினால், அதற்கு அரசாங்கம் ஈட்டுத் தொகை வழங்குகிறது. ஆனால் ஒரு





விவசாயத் தொழிலாளி நாற்றுக் கட்டை அல்லது பயிர்கட்டை தூக்கிக்கொண்டு வரும்பொழுது விழுந்தாலும் சரி, அதைப் போல அறுவடைக் காலத்தில், அறுவடை செய்யும்பொழுது அகால மரணம் அடைந்தால், அவனுக்கு எத்தகைய ஈட்டும் தொகையும் சர்க்கார் வழங்குவது கிடையாது. இந்த நிலை மாற வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வள்ளுவர் பெருந்தகை கூறியுள்ளார் :

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.”

ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை “உழுதுண்டு வாழ்வாரே சாவார், தொழுதுண்டு பின்செல்பவர் தொந்தி பெருப்பார்” என்று குறளை மாற்றிக் கொள்ளவேண்டிய நிலையில் விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்வு அமைந்திருக்கிறது.

இன்றைக்கு ஒரு மாவட்டத்தில் இருக்கக்கூடிய கீழ்த் தஞ்சைக்கு மட்டும் நியாயக் கூலி சட்டத்தைக் கொண்டு வருவது பொருத்தமல்ல. தமிழகம் பூராவும் குறைந்தபட்சக் கூலி சட்டம் கொண்டுவருவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உழவுத் தொழிலில் நவீனத் திட்டங்கள் புகுத்தப்பட்டு, அந்தத் தொழில் வளர்க்கப்பட்டிருக்கிறது. நவீன இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தியை அதிகரிக்கவேண்டும் என்று எல்லோரும் ஒத்துக்கொள்கிற நேரத்தில், நவீன திட்டங்கள் அதிகரிக்க, அதிகரிக்க, உழவுத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு வேலை குறையும். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு ஒரு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்து, அந்த சட்டத்தை மாநிலம் முழுவதற்கும் அமுல்படுத்தவேண்டும். மற்ற தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுடைய நிலையைவிட உழவுத் தொழிலாளர்களுடைய நிலை மோசமாக இருக்கிறது. ஆகவே, இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி பரிசீலனை செய்யவேண்டும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவில் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு

ஐந்து ஆண்டு காலத்திற்கு கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற அடிப்படையில் சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் முழுவதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். நிரந்தரமாக அவர்களுக்கு வேலை கிடையாது. அவர்கள் அனாதைகள் மாதிரிதான். அவர்களுக்கு கூலி கிடைத்தால் உண்டு, இல்லாவிட்டால் இல்லை. வேலை கிடைத்தால் மட்டும் கூலி கிடைக் கின்ற ஒரு சூழ்நிலை சமுதாயம் முழுவதும் ஏற்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அவர்களுக்கு கூலி நிர்ணயம் என்று கூறுகின்றபொழுது, குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்கவேண்டும். இந்த மசோதா கீழ் தஞ்சைக்கு மட்டும் அமுலாக்குவது என்ற அடிப் படையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த அமைச்சரவை இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் விவசாயத் தொழிலாளிகளுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்கின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், கூலி நிர்ணயங்களுக்காக விவசாயத் தொழில் பாதிக் கின்ற அளவுக்கு கிளர்ச்சிகள் மேலும் வலுப்படுத்தப் படாமல் இருப்பதற்கான வாய்ப்புகளை நாம் இங்கே உருவாக்கிட வேண்டும். அதோடு மட்டுமில்லை, கூலி நிர்ணயங்களை அவர் களுக்கு செய்வது மாத்திரம் அவர்களுடைய வாழ்க்கையை பாதுகாத்துவிட முடியாது. அவர்களுக்கு சமுதாயத்திலே ஒரு 'பாதுகாப்பு நிதி', 'வைத்திய வசதி' போன்ற அம்சங்களை அரசாங்கம் கணக்கெடுத்துக் கொண்டு, பொருளாதாரத் துறை யிலேயும் அவர்களுக்கு நிதிகள் கூட ஒதுக்கி அவர்களுடைய குடும்பங்களை பாதுகாக்கக் கூடிய பொறுப்பு அரசாங்கத்திற்கு கடமையாக இருக்கிறது என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் துறையை எடுத்துக் சொன்னாலும், அங்கு பணி புரியும் சர்க்கார் ஊழியர்களுக்கு ஏராளமான சம்பளத்தை கொடுக்கிறோம். ஆனால் கிராம மட்டத்திலே இருக்கின்ற உழைக்கிற மக்களுக்கு சமுதாயப் பாதுகாப்பு என்ற அளவிலே எந்த உதவியை அளித்திருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்



கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் இப்படிப்பட்ட மசோதாக்களை கொண்டு வந்து நிறைவேற்றினால், இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் அவைகளை வரவேற்பார்கள். இந்த மசோதாவை தமிழ்நாடு முழுவதற்கும் விஸ்தரிக்க வேண்டுமென்றும், அதற்கான காரியங்களை உடனடியாக அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, விவசாயத் தொழிலாளர் நியாயக் கூலி சட்டமானது இந்த அவையின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த மசோதாவைப் பார்க்கும் பொழுது கீழ்த்தஞ்சை ஜில்லாவில் இருக்கிற 6 தாலூக்காகளுக்கு மட்டும்தான் இந்த மசோதா வையும், ஏற்கனவே இதன் மீது நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சட்டமும் இருக்கிறது என்று தெரிகிறது. ஆனால், இன்றைய தினம் இந்த நாட்டில் இருக்கிற அத்தனை விவசாயத் தொழிலாளர் களுமே மிகவும் குறைந்த கூலியைப் பெற்றுக் கொண்டு, மிகவும் வருந்தக்கூடிய நிலையிலேதான் இருக்கிறார்கள் என்பதை இந்த மன்றம் நன்கு உணருகிறது. நாடும் அறிகின்றது. ஆகவே, இந்த விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்கு "ஆர்கனைச்டு தொழிலாளர்களாக" இல்லாத காரணத்தினால் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க இந்த நாடோ, இந்த அரசோ முன் வரவில்லை என்றால், நிச்சயமாக அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. "ஆர்கனைச்டு தொழிலாளர்கள்" இப்பொழுது பல்வேறு தொழில் களில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் பெறுகின்ற ஊதியத்திற்கும், விவசாயத் தொழிலாளர்கள் பெறுகின்ற ஊதியத்திற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். இன்றையத் தினம் நம் நாட்டிலே விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கும் தருணத்திலே விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு நிரந்தரமாக தொழில் செய்யும் வாய்ப்பு இல்லாத நிலையைப் பார்க்கும் பொழுது, நிச்சயமாக "ஆர்கனைச்டு லேபரர்ஸுக்கு" இருக்கிற பாதுகாப்பை விட அதிகமான பாதுகாப்பை விவசாயத் தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

[1972 ஆகஸ்ட் 24

அத்தோடு, இன்றையத் தினம் இந்த மசோதாவை பார்க்கும் பொழுது கீழ்த்தஞ்சாவூரில் நெல் பயிர் செய்கின்ற தொழிலாளர்களுக்குத்தான் பாதுகாப்பு அளிப்பதாக இந்த மசோதாவின் நோக்கம் இருக்கிறது. நம் மாநிலத்தை எடுத்துக் கொண்டால், நெல் விவசாயம் செய்யும் விவசாயத் தொழிலாளர்களைப் போல் மற்ற பயிர் விவசாயம் செய்யும் தொழிலாளர்களும் குறிப்பாக பருத்தி பயிர் செய்பவர்களின் நிலையும் மோசமாகத்தான் இருக்கிறது என்பதை நான் கூறத் தேவையில்லை. அப்படி இருக்கும் பொழுது தஞ்சாவூர் மாவட்டத்திலே நெல் பயிர் செய்யும் விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டும்தான் இந்த நியாயக் கூலிச் சட்டம் என்றால் அது நன்றாக இருக்காது என்றே சொல்லுவேன். ஆகவே, இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பி, அது மாநிலம் முழுவதும் சென்று பல்வேறு விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற விவசாயத் தொழிலாளர்களையும், அவர்களைச் சார்ந்த அரசியல் கட்சிகளையும் சந்தித்து அவைகளின் எண்ணங்களை அறிந்து அதன் மூலம் இங்கே ஒரு விரிவான சட்டத்தை நிறைவேற்றி வைத்தால், நிச்சயமாக இந்த நாட்டிலே இருக்கிற பல்வேறு விவசாயத் தொழிலாளர்களும் பயன் பெறுவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இதே நேரத்திலே, இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு உழுகின்ற காலங்களிலேயும், விதைக்கின்ற காலங்களிலேயும் அறுவடை செய்கின்ற காலங்களிலேயும்தான் வேலை வாய்ப்பு இருக்கிறதே தவிர இடைக் காலத்திலே அப்படி வேலை வாய்ப்புகள் இருப்பதில்லை. அதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த இடைக் காலங்களில் அதாவது வேலை வாய்ப்புகள் இல்லாது இருக்கின்ற காலங்களில் வேலை அவர்களுக்கு மற்ற தொழில்களிலே அளிப்பதற்கான ஒரு சூழ்நிலையை செய்து தர இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற விவசாயத் தொழிலாளர்களுடைய நியாயக்கூலி மசோதா ஒரு நல்ல அம்சம் பொருந்திய ஒன்றாகும். இந்த சட்ட மன்றத்திலே இதற்கு முன்னால் நிறைவேற்றப்பட்டு, இந்த சட்டத்திற்கு மூன்று ஆண்டுகள் முடிந்து விட்டது. இந்த சட்டம் கொண்டு வருவதற்கு



1972 ஆகஸ்ட் 24] [திரு. ஆ. கு. சுப்பையா]

ஒரு சரித்திரமே உண்டு. கீழ்வெண்மணி சம்பவம்தான் இந்த சட்டம் வருவதற்கு காரணமாகும். 42 உயிர்கள் அங்கே பலி கொடுக்கப்பட்டு, தீயிலே வைத்து கொளுத்தப்பட்டு, அரசாங்கம் அதன் பிறகு இந்தச் சட்டத்தைகொண்டு வந்தார்கள். நம்முடைய இராஜ்யத்தில் 49 இலட்சம் குடும்பங்கள் இந்த விவசாயத் தொழிலிலே வேலை செய்து வருகிறார்கள். நம்முடைய ராஜ்யத்திலே இருக்கக் கூடிய மொத்த ஜனத் தொகையிலே பெரும் பகுதியான குடும்பங்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. அவர்களுக்கெல்லாம் ஊருக்கு ஒரு கூலியாக கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு ஊரிலே அதிகமாக கூலி கொடுப்பார்கள். மற்றொரு ஊரிலே ரொம்ப குறைந்த கூலியை கொடுப்பார்கள். இப்படி ஒரு நிச்சயமற்ற வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டீர்களானால், தஞ்சை மாவட்டம் முழுவதையுமே "டெல்டா பிரதேசம்" என்று சொல்லலாம். இது ஒன்று; அடுத்து அதையே புதிய பாசனப் பிரதேசம் என்று பிரித்திருந்தும் கூட, அது விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த ஒரு மாவட்டம் ஆகும். ஆனால் அந்த மாவட்டம் முழுவதும் இந்த மசோதா விஸ்தரிக்கப்படவில்லை. ஆனால் கீழத் தஞ்சையிலே இருக்கும் 6 தாலுக்காக்களுக்கு மாத்திரம்தான் இது விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்ததன் மூலமாக அங்கே இருக்கக் கூடிய நிலச் சுவான்தார்களும், விவசாயத் தொழிலாளர்களும் சமீபத்திலே வேளாண்மைத் துறை அமைச்சர் முன்னிலையில் 13—8—72 அன்று ஒரு சமாச உடன்பாட்டை செய்து கொண்டிருக்கிறார்கள். முன்னாலே இருந்த கூலி விகிதம் மிகக் குறைவாக ஆகிவிட்டது. காரணம் இந்த சட்டம் இயற்றப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டது. அதோடு மட்டுமில்லாமல் கணபதியா பிள்ளை கமிஷன் ரிப்போர்ட்டிலே கூறப்படுகிறது. வருஷத்திலே ஒரு தடவை இந்த நிர்ணயிக்கப்பட்ட கூலி விகிதத்தைப் பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று. அதற்கு என்று கமிஷன்களை அமைத்து அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு அரசாங்கம்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1972 ஆகஸ்ட் 24

அவ்வப்பொழுது அவர்களுடைய கூலி நிர்ணயத்தை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கணபதியா பிள்ளை அவர்கள் கூறுகிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், மூன்று ஆண்டிற்கு பிறகு ஒரு கமிஷன் அமைத்து விவசாயத் தொழிலாளர்கள் எவ்வளவு கூலி பெறுகிறார்கள் அவர்கள் வாழ்க்கை நிலைமை எப்படி இருக்கிறது என்பதை எல்லாம் பார்த்து அதன் மீது ஒரு சட்டம் கொண்டு வருவதுதான் நியாயமாக இருக்க முடியும். அந்த பழைய சட்டப்படி ஆறு லிட்டர் நெல்லும், 1.25 ரூபாய் அல்லது 3 ரூபாய் ஆண்களுக்கு கூலி கொடுக்க வேண்டும் என்றும், பெண்களுக்கு 5 லிட்டர் நெல்லும், 25 பைசாவும் அல்லது ரூபாயாக கேட்டால் 1.25 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. சமீபத்திலே நடந்த ஒப்பந்தம் பிரகாரம் நிலச் சுவான்தார்கள் பூரணமாக சம்மதித்து சட்டத்திலே குறிப்பிட்டிருப்பதை விட அதிகமாக தருவதாக ஒப்புக்கொண்டு கையெழுத்து போட்டிருக்கிறார்கள். அதன்படி ஆண்களுக்கு 6 லிட்டர் நெல்லும், 1.50 காசும், ரூபாயாக கொடுத்தால் 3.70 காசு கொடுப்பது என்றும். பெண் தொழிலாளர்களுக்கு 5 லிட்டர் நெல்லும் 50 காசும், பணமாக கொடுத்தால் 2.25 ரூபாய் என்றும் ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிறது. இதை இரண்டு தரப்பினரும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் இருந்து இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு இருக்கும் பொழுது சட்டப் பூர்வமாக 3 ஆண்டுகளுக்கு முன்னால் செய்த ஒரு கூலியை நாங்கள் சட்டப்படி கொண்டு வருகிறோம் என்பது அவ்வளவு பொருத்தமாக இருக்க முடியாது. ஆகவே, இதை எல்லாம் தீவிரமாக அரசாங்கம் பரிசிலனை செய்ய வேண்டும். அதற்குரிய முறையிலே நீங்கள் கமிஷன் அமைக்க வேண்டும். மாநிலம் முழுவதிலுமே ஒரு கமிஷன் அமைத்து அதற்குப் பிறகு ஒரு கார்ப்ரஹன்சிவ் சட்டம் கொண்டு வருவது சரியாக இருக்க முடியும். இல்லை என்றால் இந்த சட்டத்தையே பரிசீலிப்பதற்காக ஒரு பொறுக்குக் குழுவுக்கு இதை போடுவதுதான் நியாயமாக இருக்க முடியும். அதை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



1972 ஆகஸ்ட் 24]

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்று ஓரிரண்டு கருத்துக்களை மாத்திரம் வலியுறுத்திச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்த மசோதாவானது நீண்ட காலமாக நம்முடைய தமிழ் நாட்டில ஒரு பகுதியாக இருக்கக் கூடிய கீழ் தஞ்சையிலே இருக்கும்படியான ஏராளமான விவசாயத் தொழிலாளர்கள் எந்தவித பாதுகாப்பும் இன்றி, எந்தவித உத்தரவாதமும் இன்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததை மாற்றி, அவர்களுக்கு திட்டவட்டமான ஊதியம் எவ்வளவு என்று நிர்ணயிக்கும் பொருட்டு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி மாண்புமிகு திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் சொன்னதைப் போல, ஒரு பயங்கரமான ஒரு நிகழ்ச்சிக்குப் பிறகு, இந்த அளவிலே அரசாங்கம் தலையிட்டு அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ரீதியிலே திரு. அண்ணாதுரை அவர்கள் அதை கொண்டு வந்தார்கள் என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு கமிஷன் போட்டார்கள். நாம் இப்பொழுது கவனிக்க வேண்டியது என்னவென்றால் கமிஷன் போட்டாகிவிட்டது. ஊதியம் எவ்வளவு என்று நிர்ணயித்தார்கள். ஆகவே, அந்த ஊதியத்தை நிலச் சுவான்தார்கள் சரியாகக் கொடுக்கிறார்களா இல்லையா அல்லது வேறு வகையிலே அவர்கள் தப்பித்துக் கொள்ள எதாவது செய்கிறார்களா என்று கண்காணிப்பதற்கு ஒரு அமைப்பு மிக மிகத் தேவை என்று நான் நம்புகிறேன். அதற்காக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படியிருந்தாலும் கூட சிலர்—பத்து பதினைந்து பேர் அந்தத் தொழிலாளர் தோழர்களைப் பார்த்து "உங்களுக்கு இவ்வளவுதான் கூலி கொடுப்போம், இதற்கு மேல் நீங்கள் கேட்கக்கூடாது; இதற்கு மேலும் நீங்கள் வேண்டுமென்று கேட்டால் என்ன செய்வோம் என்று பாருங்கள்" என்று மிரட்டக் கூடும். தொழிலாளர்களும் பயந்து, நமக்கு ஏன் வம்பு என்று கொடுத்ததை வாங்கிச் செல்லக் கூடும். அப்படி இல்லாமல் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததோடு, அது சரியாக அமல் நடத்தப் படுகிறதா என்பதையும் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1972 ஆகஸ்ட் 24

பக்கிங்காம் அண்டு கர்னாட்டிக் மில்லிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு துணி இல்லை என்ற நிலை இருக்கிறது. செங்கல் தொழிற்சாலையிலே வேலை செய்கிறவர்களுக்கு வீடு இல்லை என்ற நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்போது இந்த விவசாயத் தொழிலாளர்களுக்காவது அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறதே என்று நான் முழு மனதோடு அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.

உணவு அமைச்சரவர்கள் சில சமயங்களில் சொல்வார்கள். 'எதிர்க் கட்சியிலே இருந்தாலும் அரசாங்கம் நல்லது செய்தால் பாராட்டுங்களேன். 'நீங்கள் ஒன்றை கூட பாராட்ட மாட்டேன் என்கிறீர்களே' என்று சொல்வார்கள். எதிர்க் கட்சியாக இருந்தாலும், பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டி, சுட்டிக் காட்ட வேண்டிய இடத்தில் சுட்டிக்காட்டி, எடுத்துக் கூற வேண்டிய இடத்தில் எடுத்துக் கூறி, இடித்துக் கூற வேண்டிய இடத்தில் இடித்துக் கூறி, தட்டிக் கேட்க வேண்டிய இடத்தில் தட்டிக் கேட்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நல்ல மசோதாவை நான் வரவேற்று பாராட்டுகிறேன்.

இந்த மசோதாவின் விளைவாக கீழ்த் தஞ்சையில் விவசாயிகளுக்கும் நிலச் சுவாந்தார்களுக்கும் இடையே ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி அரசாங்கத்தின் புரட்சி இயக்கத்தை—புரட்சி என்றால் ஏதோ என்று நினைக்க வேண்டாம், பசுமைப் புரட்சி—சீரிய முறையில் செயல்படுத்த வழி செய்யப்படுகிறது. அந்த வகையிலே அங்கே நல்ல அமைதியான நிலையை ஏற்படுத்தி ஏராளமான நெல்லை உற்பத்தி செய்து, நெற்களஞ்சியத்தை பெருக்கி, நாட்டை வளப்படுத்த வகை செய்கின்ற இந்த மசோதாவை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : தலைவரவர்களே, பொதுவாக இந்த மசோதாவை எல்லா அங்கத்தினர்களும் வரவேற்றார்கள். இந்த மசோதாவை வரவேற்றவர்களில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. சுப்பையா அவர்களும். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்களும் குறிப்பிடத்



1972 ஆகஸ்ட் 24] [திரு. ப. உ. சண்முகம்]

தக்கவர்கள். அவர்கள் எல்லாம் கூட இந்த மசோதாவை வரவேற்றதிலிருந்து இது எவ்வளவு நல்ல மசோதா என்பதை நாட்டு மக்கள் நன்கறிவார்கள். இந்த மசோதாவை வரவேற்று பேசிய அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய சில உறுப்பினர்கள், இந்தச் சட்டம் எப்படி அமுலாக்கப்படும் என்றும், இதை பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி பரிசீலனை செய்து அமுல்படுத்த வேண்டும் என்றும் சில ஐயப்பாடுகளைக் கிளப்பினார்கள். திரு. எ. கே. சுப்பையா அவர்கள் 'அடுத்த கமிஷன் போடும்வரைதானே நாங்கள் ஒப்புதல் அளித்தோம் ; இப்போது 5 வருடங்களுக்கு என்று மசோதாவில் சொல்லியிருக்கிறதே' என்ற ஐயப்பாட்டைக் கிளப்பினார்கள். அவர்களுக்கு எல்லாம் தொடக்கத்திலேயே என்னுடைய கருத்தைத் தெரிவித்து விடுகிறேன்.

கணபதியா பிள்ளை தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் காலாவதி 4-ம் தேதியுடன் முடிவடைகிறது. அதன் பிறகும் சிறிது காலம் நீடிப்பதற்கு அவசரச் சட்டம் ஒன்றைப் போட்டோம். அதன் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்களை தஞ்சைக்கு அனுப்பி, சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, மிராசுதார்களுடனும் விவசாயத் தொழிலாளர்களுடனும் சமரசம் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை ஏற்பதற்காகத்தான் இந்த தீர்மானத்தைப் பிரேரேபித்திருக்கிறேன். ஐந்தாண்டுக் காலத்திற்கு இந்த மசோதா நீடிக்கும் என்று சொல்லப் பட்டிருப்பதால் யாரும் ஐந்தாண்டு வரை இதை ஒன்றும் செய்ய முடியாது என்று எண்ண வேண்டாம். கூலி பிரச்சினைகள் சம்பந்தமாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றால். ஐந்தாண்டுகளுக்குள்ளும் பரிசீலிக்கலாம், அதற்கு மேலும் பரிசீலிக்கலாம்; அல்லது 6 மாதங்களுக்குள் அல்லது ஒரு வருடத்திற்குள் எப்போது வேண்டுமானாலும் பரிசீலிக்கலாம். அப்படி பரிசீலனை செய்வதற்கு மீண்டும் சட்ட மன்றத்தின் அனுமதி வேண்டப்பட வேண்டியதில்லை ; அரசாங்கம் நோட்டிபிகேஷன் போடலாம்,

அந்த வகையிலே தான் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. எனவே, அதிலே யாருக்கும் எந்தவித ஐயப்பாடும் தேவையில்லை. இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கூலி விகிதங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று முத்தரப்பு மாநாட்டின் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ முடிவெடுக்கப்படுமானால், சட்டசபையின் அனுமதி இல்லாமலேயே உடனே நோட்டிபிகேஷன் போட்டு, எந்த நேரத்திலும் மறு பரிசீலனை செய்யலாம்.

அடுத்து. மாநிலம் முழுவதும் இந்த மசோதாவை அமுல் படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். கீழ் தஞ்சையில் அமுல் படுத்தப்படும் இந்தச் சட்டம் விரைவிலே தமிழ்நாடு எங்கும் விஸ்தரிக்கப்படும். விவசாயப் போராட்டக் குழுவினருடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி ஒரு கமிஷன் ஏற்படுத்தி, தமிழ்நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து, எந்தெந்த இடத்தில் என்னென்ன பயிருக்கு என்னென்ன வகையில் கூலி நிர்ணயிக்கப்படலாம் என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை கிடைத்ததும் அதை பரிசீலனை செய்து தமிழ்நாடு முழுவதும் இந்தச் சட்டம் அமுல் படுத்தப்படும் என்பதை மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே இந்த மசோதாவை எல்லா உறுப்பினர்களும் வரவேற்று, ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. என். கே. பழனிசாமி இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாக கருதப்பட்டது.

**Mr. DEPUTY SPEAKER** : The question is :—

" That the Tamil Nadu Agricultural Labourer Fair Wages (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 34 of 1972) be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

**Mr. DEPUTY SPEAKER** : The Bill will now be taken up clause by clause.



## CLAUSE 2.

Mr. DEPUTY SPEAKER : The question is—

" That Clause 2 do stand part of the Bill ".

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move the following amendments :

1. For clause 2, *substitute* the following clauses, namely :

" 2. *Amendment of section 1, Tamil Nadu Act 19 of 1969*.—In section 1 of the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Act, 1969 (Tamil Nadu Act 19 of 1969) (hereinafter referred to as the principal Act),—

(i) for the heading " Short title Commencement and duration ", the heading " Short title and commencement ", shall be substituted.

(ii) for sub-section (3) the following sub-section shall be substitutely, namely :—

" (3) This Act as amended by the Tamil Nadu Agricultural Labourer Fair Wages (Amendment) Act, 1972 is hereby made permanent; "; and

(iii) sub-section (4) shall be omitted.

3. *Insertion of new sections 12-A and 12-B in Tamil Nadu Act 19 of 1969*.—After section 12 of the principal Act, the following sections shall be inserted, namely :—

" 12-A. *Alteration of rates in Schedule II*.—(1) The Government may, by notification, amend Schedule II and alter the rate of wages specified in Part I or Part II of Schedule II and different rates of wages may be fixed for different areas.

(2) Before issuing the notification under sub-section (1), the Government shall take into consideration the following factors, namely :—

(*a*) the availability of the labour in the area, or

(*b*) the price of essential commodities in the area, or

(*c*) the rise in the cost of living in the area, or

(*d*) such other factors as may be prescribed.

[The Hon. Thiru P. U. Shanmugam] [1972 ஆகஸ்ட் 24

(3) The Government may, after the publication of the notification under sub-section (1), review at such intervals not exceeding five years, as they may think fit, the fair wages fixed under sub-section (1) and revise the rate of wages if necessary :

Provided that where for any reason the Government have not reviewed the fair wages within any interval of five years, nothing contained in this sub-section, shall be deemed to prevent them from reviewing the fair wages after the expiry of the said period of five years and revising them, if necessary and until they are so revised, the fair wages in force immediately before the expiry of the said period of five years shall continue in force.

(4) All references made in this Act to Schedule II shall be considered as relating to Schedule II as for the time being amended in exercise of the powers conferred by this section.

12-B. *Minimum Wages Act not to apply.*—The Minimum Wages Act, 1948 (Central Act II of 1948) shall, in so far as it relates to matters dealt with in this Act, cease to apply to any area in which this Act has already been or is brought into force under sub-section (2) of section 1.".

THIRU A. K. SUBBIAH : Sir, I move the following amendment :—

In Clause 2, for the expression " the 4th day of August 1977 " the expression " 4th day of August 1975 " shall be substituted.

The amendment was duly seconded.

MR. DEPUTY SPEAKER : The clause and amendments are before the House for discussion.

திரு. என். கே. பழனிசாமி இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய திருத்தம் முன்மொழியப்படவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கிற திருத்த தீர்மானத்திலுள்ள கருத்துக்கள் எல்லாம் பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தனது பதிலில் குறிப்பிட்டார்கள். அதோடு இந்த மசோதா



1972 ஆகஸ்ட் 24] [திரு. ஆ. கு. சுப்பையா]

ஐந்து வருடங்களுக்கு என்றில்லாமல் எப்போது வேண்டுமானாலும் பரிசீலனை செய்யக்கூடிய வகையிலேதான் இருப்பதாகவும் தெரிவித்தார்கள். ஆகவே என்னுடைய திருத்தத் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

The amendment of Thiru A. K. Subbiah was by leave withdrawn.

The Government amendment was put and carried.

Clause 2, as amended was put and carried.

*Clause 3.*

MR. DEPUTY SPEAKER : The question is—

" That Clause 3 do stand part of the Bill ".

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move the following amendment—

" Renumber the existing Clause 3 as Clause 4 ".

The amendment was put and carried.

Clause 3, renumbered as clause 4, was put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move—

" That the Tamil Nadu Agricultural Labourer Fair Wages (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 34 of 1972) as amended, be passed ".

The motion was put and carried and the Bill, as amended, was passed into law.

**(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வேளாண்மை நில குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு வேளாண்மை நில குத்தகை உரிமைகள் ஆவண (திருத்தச்) சட்ட முன்வடிவு *(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/72) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நான் முன்மொழிகிறேன்.

* 17—8—1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 24

தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு வேளாண்மை நில குத்தகை உரிமைகள் ஆவண சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1969), இப்பொழுதுள்ள வேளாண்மை நிலங்கள் தொடர்பாக குத்தகை உரிமை ஆவணங்களைத் தயாரிக்கவும், அவற்றைப் பேணி வரவும் வகை செய்கிறது. இச்சட்டம், இப்பொழுதுள்ள எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[illegible] சொந்தத்தாக விடப்பட்ட யாதொரு நிலம் சம்பந்தமான, நில உரிமையாளர் அல்லது அந்நிலத்தின்மீது பற்றுள்ள இடையாள் அல்லது குத்தகைக்காரர், அந்த நிலத்தின் மீது தமக்குள்ள பற்றினைத் தெரிவிக்கத் தவறினால், அல்லது ஏற்படுத்தப்பட்ட குத்தகை உரிமை ஆவணத்தில் அந்நிலம் குறித்த விவரங்களைச் சேர்க்கச் சொல்வதற்கு விண்ணப்பிக்கத் தவறினால், அந்நிலம் குறித்துத் தாமாகவே விசாரணை நடத்தி குத்தகை உரிமை ஆவணங்களைத் தயாரிக்க ஆவண அதிகாரிக்கு இயலும் வகையில் இச்சட்டத்தில் விதித்துறை ஏதும் தற்போது இல்லை. எனவே, ஆவண அதிகாரி, தாமாகவே விசாரணை நடத்துவதற்கான விதித்துறையை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இச்சட்டத்தின் 15-வது பிரிவு அளிக்கிறது. இச்சட்டத்தின் விதித்துறைகளை விரைவில் செயல்படுத்த எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரத்தைச் செலுத்த, ஏனைய அதிகாரிக்கு அதிகாரமளிப்பதற்கான அதிகாரத்தை எடுத்துக் கொள்வது அவசியமென்று கருதப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆவண அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது ஏனைய அதிகாரி அல்லது அதிகார மன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய பொருட்கள் குறித்து [illegible] சம்பந்தப்பட்ட தரப்பினர் சிவில் நீதி மன்றங்களில் வழக்குத் தொடுப்பதினால் இச்சட்டத்தை அமுலாக்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே இச்சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள மேற்கூறிய அதிகாரிகளால் அல்லது அதிகார மன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய பொருட்கள் குறித்து சிவில் நீதி மன்றங்களுக்குள்ள



1972 ஆகஸ்ட் 24] [திரு. ப. உ. சண்முகம்]

அதிகார வரம்புக்குத் தடைவிதிக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்ட வரைவு, மேற்சொன்ன நோக்கங்களை எய்த விழைகிறது.

இச்சட்ட வரைவை இப்பேரவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to offer certain remarks regarding this Bill.

So far as the main amendments are concerned, *suo moto* action is conferred under section 4 *(a)* of the Bill. *Suo moto* action is a welcome measure and there is no doubt about it because many tenants have not preferred their claims in time and even if they had made their claims, some of them were not supported by documentary evidence and hence were not accepted by the Revenue authorities. To dispel all the doubts and to remove all the evils that have arisen, this Bill is a welcome measure and I think this will be accepted by the tenants as a whole.

The next point is with regard to the bar of jurisdiction of Civil Courts which has been proposed in new section 16A. It is stated—

"No Civil Court shall have jurisdiction in respect of any matter which the record officer, the District Collector or other officer or authority empowered by or under this Act has to determine and no injunction shall be granted by any Court in respect of any action taken or to be taken by such officer or authority in pursuance of any power conferred by or under this Act".

Sir, many suits have been filed after the passing of the original Act and they have been pending. What about the pending suits and whether retrospective effect would be given to them, is a matter which will have to be clarified. I think it would be better if retrospective effect is given to it so that there may not any legal lacuna with regard to pending suits. This section may be given retrospective effect from the date when the original Act came into force.

[Thiru R. Ponnappa Nadar] [1972 ஆகஸ்ட் 24

Sir, I myself have had an opportunity of handling certain cases. So far as the issue of injunction is concerned, they do not issue injunction as against the authority. They issue injunction as against the party. They cleverly manipulate it in such a way that there is colourable exercise of jurisdiction which will have to be averted. I think it is better and proper that retrospective effect should be given so that the benefit would go to the real tiller of the soil. Sufficient protection should be given to him from ouster by the rich landlord. I very much appreciate the intention of the Hon. Minister in this regard.

Sir, I would say that the revisional jurisdiction is now conferred on the District Collector. The District Collector is burdened with so many problems. It would be better if some judicial authority in the cadre of District Judge of the concerned district may be designated as *persona grata*. Also because of the plethora of powers exercised by the District Collector and the crowded work which he has to attend to, he will always find it very difficult to discharge those functions also. I think there may not be any difficulty in accepting my suggestion because it is only revisional jurisdiction that is conferred and it is not a regular suit or appeal where all the legal formalities have to be gone through. I hope this aspect of the matter would be gone into by the Government. With these words, I resume my seat.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மசோதாவை ஆதரித்து அதில் இருக்கக்கூடிய சிரமங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் முன்னரேயே அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டப் பிரகாரம் அரசாங்கம் தங்கள் அதிகாரிகள் மூலம் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தார்கள். இன்ன தேதியில் இருந்து இன்ன தேதிக்குள்ளாக பதிவு செய்ய வேண்டும் என்பதாக. அநேகமாக விவசாயிகள் படிக்கத் தெரியாதவர்கள். அந்த விளம்பரத்தைப் பார்த்து குறிப்பிட்ட காலத்திற்குள் பல இடங்களில் பதிவு செய்யவே இல்லை. அதன் காரணமாகவும் பல சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தால் போதாது. கிராம அதிகாரிகளும் விவசாயிகளுக்கு விளம்பரம் செய்ய வேண்டும்.



1972 ஆகஸ்ட் 24] [திரு. ஆ. கு. சுப்பையா]

தங்கள் தங்கள் கிராமத்தில் நிலத்துக்குச் சொந்தக்காரர் யார், குத்தகை வைத்திருப்போர் யார் என்கிற விவரங்களை அவர்களே சேகரிக்க வேண்டும். இன்னும் டாம்டாம் மூலம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பதை விளம்பரப்படுத்த வேண்டும். குத்தகைக்காரருக்கே நிலம் உடைமையாக்கப்பட வேண்டும் என்பதை அரசு கொள்கை அளவில் ஏற்றிருக்கிற காரணத்தினால் இன்னும் பல கிராமங்களில் நிலச் சொந்தக்காரர் கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் இருந்து கொண்டிருக்கிறபோதே நிலத்தை அவர்கள் நேரிடையாகச் சாகுபடி செய்வதுபோல அதிகாரிகளின் துணைகொண்டு போலியாக ரெக்கார்டுகள் வைத்திருக்கிறார்கள். அதுபோன்ற தவறுகள் செய்வதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடாது. அடுத்தபடி இந்த மசோதாவில் சிவில் கோர்ட்டுகளுக்கு இதில் தலையிட அதிகாரம் இல்லை என்று செய்திருப்பதை வரவேற்கிறேன். நிலச் சட்டங்கள் எதுவாக இருந்தாலும் இதுபோல முன்சிப் கோர்ட்டுகளுக்குப் போக அதிகாரம் இல்லை என்று சொல்வதன் மூலம் தான் விவசாயிகள் பயன் அடைய முடியும். பல சட்டங்களின் அடிப்படையில் இன்றைக்கு முன்சீப் கோர்ட் தீர்ப்புகள் தான் விவசாயிகளுக்குப் பாதகமாக அமைந்து வருகின்றன. ஆகவே இதில் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லை என்று செய்திருக்கிற நல்ல அம்சம் எல்லாவற்றுக்கும் கொண்டுவர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இந்த சட்டத்தினை அங்கத்தினர்கள் வரவேற்றதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம், குத்தகைதாரர்கள் தாங்கள் குத்தகைதாரர்கள் என்று சொல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டாலும் கூட, அதிகாரிகள் தாங்களாகவே சென்று விசாரித்து, அவர்களாகவே விசாரித்து, குத்தகைதாரர்கள் என்று பதிவு செய்து கொள்வதற்கு அதிகாரம் தருகிறோம். எனவே, குத்தகைதாரர்கள் தாங்களே சொல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலும் கூட அவர்களுக்கு உதவக்கூடிய வகையில்தான் இந்தச் சட்டம். இந்தச் சட்டத்தில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போல் சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லையென்பதைப் பார்க்கிறோம். சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லையென்று வைத்திருப்பதை பழைய

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 24

சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்துக் கொண்டு வர முடியுமா என்று திரு. பொன்னப்ப நாடார் கேட்டார்கள். அப்படிக் கொண்டு வருவதிலே சட்டச் சிக்கல்கள் வளரும். இனிமேல், புதிதாக இருப்பதற்கு சிவில் கோர்ட்டுக்குப் போவதைத் தடுப்பதற்குத் தான் அரசாங்கம் இந்த சட்டத்தைக் கொண்டு வருகிறதே தவிர, ஏற்கனவே இருப்பதை, நீதி மன்றத்தினுடைய முடிவுக்கு விட்டுவிட வேண்டுமென்றுதான் அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. புதிதாக, சிவில் கோர்ட்டுக்குப் போகிறவர்கள் இதில் அளிக்கப்பட்ட பாதுகாப்பைக் கெடுக்கக் கூடாது என்றுதான் இதைக் கொண்டு வந்தேன். ஆகவே, இந்த சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்க சந்தர்ப்பம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக இந்தச் சட்டத்தை திருத்தி இருக்கிறோம். இது நல்ல சட்டம் என்று அங்கத்தினர்கள் அனைவரும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள், நன்றி தெரிவிக்கிறேன். குத்தகைதாரர்களாக இருக்கிறவர்கள் இனி தாராளமாக பதிவு செய்து கொள்ளலாம்.

இந்நேரத்தில் மன்ற உறுப்பினர்களை ஒன்று கேட்டுக் கொள்வேன். குத்தகைதாரர்களைப் பதிவெடுக்க அதிகாரிகள் கிராமங்களுக்கு வருகிற நேரத்திலே, தயவு செய்து, அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்வேன், அதிகாரிகள் ஒழுங்காக பதிவு செய்கிறார்களா என்று கண்காணியுங்கள், பாருங்கள், விசாரியுங்கள்; அதிகாரிகள் எவ்வளவு சாதகமாக குத்தகைதாரர்களுக்குத் துணையாக இருந்து பதிவு செய்ய வேண்டுமோ அவ்வளவு சாதகமாக சட்டத்தை நிறைவேற்றுகிறோம். அந்த அதிகாரிகள் தவறு செய்ய மாட்டார்கள். அப்படி தவறு ஏதேனும் நடந்தால், அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர்களுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் அதை கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக் கொண்டு, இந்த சட்டத்தை நிறைவேற்றித் தருமாறு இந்த அவையை தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.



972 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

“தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வேளாண்மை நில குத்தகை உரிமைகள் ஆவண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்”.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, பிரிவு வாரியாக சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 to 5 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I move—

"The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 35 of 1972) be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

**(ஈ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்தச் சட்ட முன்வடிவுக்கு திருத்தங்கள் இன்னும் சர்குலேட் செய்யப்படவில்லையென்று கருதுகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : It will be circulated shortly. Let us commence discussion.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய வருமான வரி மசோதா சம்பந்தமாக அரசாங்கமே சில அமெண்ட்மெண்டுகளைக் கொடுப்பதாகத் தெரிகிறது. அந்த அமெண்ட்மெண்டுகள் என்ன என்று தெரிந்தால், அதுபற்றிய விவாதங்களை எடுத்துச் சொல்லலாம். அமெண்ட்மெண்ட் தெரியாமல் பொதுவாக, அதுபற்றி பேச முடியாது. ஆகவே, அமெண்ட்மெண்ட் கொடுத்த பிறகு டிஸ்கஷன் செய்வது நல்லது.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1972 ஆகஸ்ட் 24

அல்லது அமெண்ட்மெண்ட்கள் இன்னின்ன நிலையிலே இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மசோதாவை அடுத்து எடுத்துக் கொள்வோம். அடுத்த மசோதாவை இப்பொழுது எடுத்துக் கொள்வதற்கு பேரவையின் அனுமதி வேண்டியிருக்கிறது. ஆகவே, பேரவையின் அனுமதியுடன் அடுத்த மசோதாவை எடுத்துக் கொள்கிறேன்.

(6) **அறிவிப்புகள்**—தொடர்ச்சி.

**(ஆ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 38/72)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

(5) **அரசினர் சட்டமுன்வடிவுகள்**—தொடர்ச்சி.

**(உ) கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/72).**

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "1972-ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபாதம் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட வரைவு * பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

இச்சட்ட வரைவை முன் மொழிகையில், 1956-ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின் மூலம் (மத்தியச் சட்டம் 37/1956) முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து இம்மாநிலத்திற்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில்

* 19—8—1972-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1972 ஆகஸ்ட் 24]

சில சிறப்பு நில உரிமை முறைகள் நிலவி வந்தன என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 'திருப்புதார்கள்', 'ஜென்மிகள்' போன்ற இடையாட்கள் சிலருடைய உரிமைகளை ஒழிப்பதற்காகக் கீழ்க்காணும் சிறப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன:

(1) தமிழ்நாடு 1964-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட பகுதி) ரயத்துவாரி நில ஏற்பாட்டுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 30/1964).

(2) 1964-ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபண்டாரவாகா நிலங்கள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 31/1964).

(3) தமிழ் நாடு 1964-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட பகுதி) திருப்புவாரம் கொடுத்தல் ஒழிப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1964).

(4) தமிழ் நாடு 1964-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட பகுதி) ஜென்மிகரம் கொடுத்தல் ஒழிப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/1964).

இம்மாவட்டத்தில் திருவாங்கூர் மன்னர் குடும்பத்திற்குச் சொந்தமான ஸ்ரீபாதம் நிலங்கள் எனப்படும் மற்றொரு வகையைச் சேர்ந்த நிலங்கள் உள்ளன. 583.39 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த நிலங்கள் இம்மாவட்டம் முழுவதும் பரந்துள்ளன. இந்த நிலங்களுக்கு அடிப்படை நில வரியினின்றும் விலக்களிக்கப் பட்டுள்ளது. ஆனால் 'ராஜபோகம்' எனப்படுகிற சலுகை வரி வீதங்களில் இவற்றிற்கு வரி விதிக்கப்படுகின்றது. இவ்வரியை இந்த நிலவுடைமையாளர்கள் செலுத்த வேண்டும். ராஜ போகத்தை தவிர்த்து, இந்த நிலவுடைமையாளர்கள் ஸ்ரீபாதம் நிலச் சொந்தக்காரர்களுக்கு ரொக்கமாகவோ தானியமாகவோ குத்தகையும் செலுத்த வேண்டும். ஸ்ரீபாதம் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் இரு கோயில்களும் பேணி வரப்படுகின்றன. இம்மாவட்டத்தில் ஸ்ரீபாதம் நில உரிமை முறையை நீக்கிவிட்டு, இந்த நிலங்களை நில அளவை செய்து நிலவரி ஏற்பாட்டு அலுவல்களை நிறைவேற்றிய பின்னர் நில உடைமையாளர்களுக்கு ரயத்துவாரிப் பட்டா வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இச்சட்டவரைவு, மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

இத்தீர்மானத்தை இப்பேரவை ஏற்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த சட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்று ஓரிரு கருத்துக்களை கூற விரும்புகிறேன். நீண்ட காலமாக அந்தப் பகுதியிலே அரசர் பரம்பரைக்கு உரிமை இருந்த நிலங்களிலிருந்து இன்று விடுதலை தேடித் தருகின்ற பெருமை இந்த அரசுக்குச் சேரும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், பல்லாண்டு காலமாக, இந்த விவசாயிகள் அத்தனை பேரும் அவர்களுக்கு ரயத்துவாரி பட்டா கொடுக்க வேண்டும், மன்னருக்கு இருக்கிற அதிகாரங்கள் அனைத்தும் ஒழிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கொண்டே இருந்தார்கள். ஆனால், அது நடைபெறவில்லை. இப்பொழுதாவது சட்டவடிவிலே இது ஏற்படுகிறதே என்று நாங்கள் எல்லாம் மகிழ்ச்சிக்குரியவர்களாக இருக்கிறோம். ஆனால், அதிலே சில சிக்கல்களும் இருக்கின்றன. அதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் ஆராயவேண்டுமென்பதை நான் கூற விரும்புகிறேன். முதலிலே, இரண்டு ஆலயங்கள் இந்த மன்னருடைய பராமரிப்பிலே இருந்திருக்கின்றன. இந்த நிலங்களிலிருந்து கிடைக்கின்ற வருவாயின் அடிப்படையிலே அந்த இரு ஆலயங்களையும் நடத்தி வருகிறார்கள். இப்பொழுது தஸ்திக் அலவன்ஸ் மற்ற அலவன்ஸ் கொடுப்பது மாதிரி கொடுத்து, இந்த ஆலயங்களில் வழிபாடு நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இப்பொழுது ஒரு தேவஸ்வம் போர்டு இருக்கிறது. அரசாங்க தரப்பிலிருந்து 2 நபர்களும் மன்னருடைய பிரதிநிதியாக ஒரு நபரும் இருந்தார்கள். மன்னர்களுடைய மானியங்கள், விசேஷ சலுகைகள் ஒழிந்ததன் காரணமாக சட்டபூர்வமாக அவர்கள் அதைத் தொடர்வதற்கு உரிமையில்லையென்று சொல்ல முற்படுகிறேன். ஆனால் இந்த சட்டப் பிரச்னையைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்ற காரணத்தினால் அதை விவாதத்திற்குரிய பிரச்னையாக இங்கு கொண்டுவர விரும்பவில்லை. மன்னருக்கு மேலும் இந்த





அதிகாரங்கள் வழங்கப்பட முடியாது. ஆதலால், இந்த அதிகாரங்கள் அனைத்தையும் அரசாங்கம் ஏற்றெடுத்து, இந்த ஆலயங்களை நடத்துகின்ற பொறுப்பினை இலாகா மூலமாக நடத்த வேண்டும். அதுவும் Hindu Religious and Charitable Endowment Board மூலமாக நடத்தவேண்டுமென்ற கருத்தினை நான் இங்கு கூற விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இன்னும் மன்னர்களுக்கு அதற்காக காம்பன்சேஷன் கொடுக்கவேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி ஆராய வேண்டும். இப்பொழுது அரசியலமைப்புச் சட்டத்திலே 25-வது திருத்தம் ஏற்பட்டு இருக்கிறது அதற்குப் பிறகு பல நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் வந்திருக்கின்றன. இந்த நிலையில் இன்னும் காம்பன்சேஷன் கொடுக்கவேண்டுமா வேண்டாமா என்பதை பற்றி ஆராயவேண்டும். என்னைக் கேட்டால் கொடுக்கவேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மன்னர்களுக்கு அதிகமான நிலங்கள் இருக்கின்றன, இன்னும் ஏகபோக உரிமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே நிலங்களை எடுக்கும்பொழுது காம்பன்சேஷன் கொடுக்காமல் நேரடியாக எடுத்துக்கொள்ள வேண்டும், வேண்டுமானால் நாமினல் ரேட்டிலே கொடுக்கட்டும், மார்க்கெட் வேல்யூவில் கொடுக்கவேண்டாமென்று சட்டம் இருப்பதால் அதைப்பற்றி ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரயத்வாரிப் பட்டாக்களுக்கு வரி தவணை முறையிலோ மொத்தமாகவோ வாங்கிக்கொள்ளலாம். திருப்புவாரம் அபாலிஷன் சட்டத்தில் இருந்த ஷரத்துகள் போன்றுதான் இதிலும் இருக்கின்றது. அதே முறையிலேதான் இந்தச் சட்டமும் பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலங்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி பத்மநாபபுரம் கோட்டையைச் சுற்றித்தான், அதோடுகூட அகஸ்தீசுவரம், தோவாளை போன்ற இடங்களிலும் அந்த நிலங்கள் இருக்கின்றன. அதிலே விவசாயம் செய்கிறவர்கள் அந்த நிலங்களையெல்லாம் பண்படுத்தி நல்ல நிலங்களாக மாற்றி அபிவிருத்திகளையெல்லாம் செய்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குப் பரிபூரண உரிமை கொடுப்பது நியாயமாக இருக்கும், பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 ஆகஸ்ட் 24

இந்தச் சட்டத்தைத் துரிதமாக அமல் நடத்தவேண்டும். ஸ்ரீபாதம் பாட்டத்திற்கு என்று ஒரு சட்டம் இருக்கிறது. அதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். பாட்டம் என்று இருந்தால் அதிகமாக மன்னர்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. நான் மறுமுறையும் கேட்டுக் கொள்வது, அந்த பாட்டத்தை ரத்துசெய்யவேண்டுமென்பது தான், பொதுவாக இதிலே இருக்கின்ற கருத்துக்கள் எல்லாம் வரவேற்கத் தகுந்த கருத்துக்கள் என்ற நிலையில் நான் மறு முறையும் இந்த அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு நஷ்ட ஈடு கொடுக்காமல் நிலங்களைக் கையகப் படுத்துவதுதான் பொருத்தமாக இருக்கும்— It will vest with the Government என்ற ஷரத்து இருப்பதால்— நஷ்ட ஈடு கொடுக்கத் தேவையில்லை என்பதைக் கூறி, மன்னர்கள் நிலமோ அல்லது ப்யூடல் சொத்தோ இருக்கக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி இடையாளர்களுக்கு எந்தவிதமான பங்கும் நிலத்தில் இருக்கக்கூடாது என்று எடுத்துச்சொல்லி— அப்படிப் பட்ட நிலங்களின்மீது சிவில் கோர்டிலே கேஸ் கொடுப்பதற்குக் கூட உரிமையில்லை என்ற நிலைமை சிவில்புரொசீஜர் கோடிலே அந்த மாநிலத்திலே இருக்கும்பொழுது இருந்தது, அதையெல்லாம் மாற்றிவிட்டார்கள் சுதந்திரம் வந்ததற்குப் பிறகு— ஆகவே மன்னர்களுக்கு எல்லாம் நிறைய சொத்துக்கள் இருக்கின்றன, இவற்றையெடுப்பதால் ஒன்றும் குறைந்துவிடாது என்று சொல்லிக்கொண்டு இந்தச் சட்டத்தை துரிதமாக அமல்நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, பொது வாக பேசிய திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இந்தச் சட்டத்தை மனமார வரவேற்றிருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்த ஒரே ஒரு கருத்து மன்னர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமா என்பதைப்பற்றித்தான். நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்தும் பொழுது—ஏற்கனவே உள்ள சட்டங்களிலே எப்படி காம்பன் சேஷன் கொடுக்கவேண்டுமென்று போட்டிருக்கிறோமோ—அதைப் போன்றுதான் இதிலேயும் வரும். இது தனியாக வராது



1972 ஆகஸ்ட் 24] [திரு. ப. உ. சண்முகம்]

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய சட்ட சிக்கல்கள் வந்து அதன்மூலம் நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய நிலைமை வந்து நிலங்களை பெறுவதற்குள் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட சட்டத்தின்படி சீக்கிரமாக நஷ்ட ஈட்டைக் கொடுத்து எவ்வளவு சீக்கிரமாக நிலத்தை கையகப்படுத்த வேண்டுமென்ற முறையிலே தான் அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறது. இது ரொம்பவும் சிறப்பான சட்டம் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்தச் சட்டத்தை ஏகமன தாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : 'கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு-ரயத்து வாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clauses 2 to 9 were put and carried.

*Clause* 10.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That Clause 10 do stand part of the Bill."

THIRU J. JAMES : Sir, I move the following amendment :—

In sub-clause (5) (*a*) of Clause 10 delete the words 'threshing floor, cattle stands'.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I second the amendment.

**திரு ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே எங்கள் கட்சித் தலைவர் இந்த மசோதாவை மனமார வரவேற்று இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த அமைச்சர் அவர்களைப் பாராட்டிய நிலையில் நான் அதிகமாகக் கூறவேண்டியதில்லை. இருந்தாலும்கூட

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1972 ஆகஸ்ட் 24

இந்தச் சட்டம் வருவதால் இந்த சட்டத்தை அமல் நடத்தும் பொழுது ஏற்பட இருக்கின்ற ஒரு சில சிக்கல்களை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்பொழுது இந்தச் சட்டத்தின்படி யார் யார் எந்த எந்த விவசாயிகள் நிலங்களை கைவசம் வைத்து அனுபவித்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு விதிமுறைகள் இந்த மசோதாவில் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் இப்பொழுது இருக்கிற நிலையில் ரிக்கார்டின்படி ஒரு நபரிடமும் உண்மையிலேயே பயிர் செய்கிற விவசாயி இன்னொரு நபராகவும் இருக்கிற சூழ்நிலைதான் அங்கு இருக்கிறது. ஆகவே பயிர்செய்கின்ற விவசாயி மூன்று வருட காலமாவது தனது கைவசமாக வைத்திருக்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிற காரணத்தினால். உண்மையான விவசாயியைப்பற்றி ரிக்கார்டிலே இல்லாத நிலைமை இருக்கக்கூடும், ஏற்கனவே இருக்கிற டெனன்ஸி ரிக்கார்டு சிஸ்டத்தின்படி யார் யார் அனுபவிக்கிறார்களோ அவர்களுக்கு ரிக்கார்டு செய்கின்ற முறைக்கு ஏற்ற முறையிலே எந்த எந்த விவசாயிகள் உண்மையிலேயே பயிர் செய்கிறார்களோ அவர்களுக்கு அரசாங்கம் தாக்கீது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாவட்டத்தில் இருந்த பல்வேறு சிக்கல்களை நீக்கக்கூடிய வகையிலே அந்த மாவட்டத்திலே உள்ள உழுபவனுக்கே அங்கேயுள்ள நிலம் சொந்தமாகவேண்டுமென்ற முறையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம்.

இதுபோன்று இன்னும் எஞ்சி இருக்கின்ற, தனதுகண்டுகிரிஷி, பாட்டம் என்ற இரண்டு முறைகள் இருக்கின்றன. அந்த முறைகளை நீக்குவதற்கும் இந்தச் சட்டத்திலே இடம் இருக்கும் என்று எதிர்பார்த்தேன். அந்த நிலங்களையும் சேர்த்து பட்டா செய்து கொடுப்பதற்கு முன்வந்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன், ஏனோ தெரியவில்லை வரவில்லை. அமைச்சர் அவர்கள் விரைவிலே வரும் என்று சொன்னார்கள். சீக்கிரம் வரும் என்று எதிர்பார்க்கிறேன். இப்பொழுது கொடுத்திருக்கிற இந்த திருத்தச் சட்டத்தில் எல்லா நிலங்களையும் பட்டா செய்து கொடுக்க வேண்டும். ஆனால் த்ரெஷிங் ப்ளோர், கேட்டில் ஸ்டாண்ட்ஸ் ரோடு கேனல்ஸ் இவற்றிற்கு பட்டா செய்து கொடுக்க வேண்டாம் என்று இருக்கிறது. ஆனால் இந்த த்ரெஷிங் ஃப்ளோர். கேட்டில்



1972 ஆகஸ்ட் 24]

ஸ்டாண்ட் உள்ள இந்த நிலங்கள் அந்த விவசாயிகளின் சொந்த கைவசத்தில் அவர்கள் அனுபவிக்கின்ற நிலங்கள். அவைகள் மிகவும் அத்தியாவசியமான நிலங்கள். அவர்கள் சாகுபடி செய்வதற்குக் களம் தேவைப்படுகிறது. அவர்களுடைய கன்று போன்றவைகளுக்கு அந்த கேட்டில் ஸ்டாண்ட் தேவைப்படுகிறது. வேறு எந்தப் பகுதியிலாவது பொதுவான கேட்டில் ஷெட்ஸ், பொதுவான த்ரெஷிங் ஃப்ளோர் இருக்கலாம். ஆனால் அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் தனிப்பட்டவர்களுக்கு த்ரேஷிங் ஃப்ளோர், கேட்டில் ஷெட்ஸ் இருந்து அவர்கள் தனிப்பட்ட முறையில் அனுபவிக்கிறார்கள். அவற்றிற்கு விதிவிலக்கு அளிக்க வேண்டாமென்ற கருத்தை வலியுறுத்துவதற்காகத்தான் இந்தத் திருத்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கின்றேன். ஆகவே, அமைச்சரவர்கள் அதைப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதை நான் துவக்கத்திலேயே தெரிவித்துக்கொள்கிறேன். த்ரேஷிங் ஃப்ளோரைப் பட்டா செய்து கொடுப்பது நியாயமல்ல. அது சமுதாய நிலம் பலருக்குச் சொந்தமான இடமாக இருக்கக்கூடிய பூமியைத் தனிப்பட்டவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்பது முறையல்ல. எனவே அதை அங்கத்தினர் அவர்கள் வற்புறுத்த மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். ஏதோ ஒருவர் இருவர் வைத்திருக்கிறார்கள் என்று கருதி அதைக் கொடுத்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். பொதுவாக, சமுதாயத்திற்கு இருக்கின்ற த்ராஷிங் ஃப்ளோரைத் தனிப்பட்டவர்களுக்குப் பட்டா கொடுப்பது சரியானது அல்ல, எனவே அதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்டுக்ரிஷி பாட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள், பட்டா கொடுக்கும்படி. அதற்குச் சட்டம் தேவையில்லை. அதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பட்டா கொடுக்கும் வேலைகள் ஆரம்பமாகிவிட்டது. தானாகவே வந்துவிடும் தடங்கல் ஒன்றும் இருக்காது. எனவே அதற்காகச் சட்டம் தேவை இல்லை.

த்ரெஷிங் ஃப்ளோர் கம்யூனல் லேண்டாக இருப்பதாகக் கருதப்படுகிறது. அதைத் தனிப்பட்டவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பது சரியல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கம்யூனல் லேண்டாக இல்லாமல் இருந்தால் பட்டா செய்து கொடுப்பதில் சங்கடம் இருக்க முடியுமா?

THE HON. THIRU P. U. SHANMUGHAM: That has to be examined. It could be considered later on and not now.

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சரவர்களின் வாக்குறுதிக்குப் பிறகு இதை வலியுறுத்தத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

Clause 10 was put and carried.

Clauses 11 to 41 were put and carried.

*Clause 42.*

MR. DEPUTY SPEAKER: The question is—

'That clause 42 do stand part of the Bill.'

THIRU J. JAMES: Sir, I move the following amendment:—namely—

For sub-clause 1 of clause 42 substitute the following

"The Government shall provide alternate employments to those persons who will be affected by the enforcement of the provisions of this Act for which they are qualified".

THIRU R. PONNAPPA NADAR: Sir, I second the amendment.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, செக்ஷன் 42-வது பிரிவின்படி 42 (1)-இல்—

'The Government shall have power to terminate the services of any such person after giving him one calendar month's notice or paying him one month's pay in lieu of such notice.'

என்றிருக்கிறது.

இந்த ஸ்ரீபாதம் இலாக்காவானது மற்ற ரெவின்யூ இலாக்காவைப் போல அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தனி தாசில்தார், அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு



இந்த ஸ்ரீபாதம் நிலங்கள் மாற்றியமைக்கப்படுவதால், இதை ரத்து செய்வதால் பல அதிகாரிகள் பாதிக்கப்படக்கூடும். ஆகவேதான் இந்த கிளாஸ் அங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் நியாயப்படி அந்த இலாக்காவில் செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள், மீண்டும் தொடர்ந்து தங்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்பதற்கு, அந்தக் கோரிக்கையை வைப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. ஆகவே அவர்களுக்கு எந்தெந்த முறையில் மாற்று வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமோ அதைப் பரிசீலிக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஒரு வேளை இந்தச் சட்டம் வருவதால் பல அதிகாரிகள் பாதிக்கப்படக் கூடாது. அப்படிப் பாதிப்பது என்றால் நாம் பலருக்கு நன்மை செய்தாலும் ஒரு சிலருக்குக்கூட அதனால் தீமை வருவது கூடாது என்ற கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே அவர்களுக்கு ரெவின்யூ இலாக்கா அல்லது மற்ற இலாக்காக்களில் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எந்தெந்த வேலைகளுக்கு அவர்கள் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு அந்தந்த மாற்று வேலைகளைக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இந்தத் திருத்தத்தை நான் இங்கே கொண்டு வந்து இருக்கிறேன். ஆகவே, அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்த ஸ்ரீபாதம் நிலத்தின் மூலம் அரசாங்கம் கையகப்படுத்த இருக்கும் நிலம் 588 ஏக்கர் 39 செண்ட். இது கன்னியாகுமரி முழுதும் பரவியிருக்கிறது. கிராமம் கிராமமாக ஆங்காங்கு இருக்கிறது. அதைக் கவனித்துக்கொள்ள அதிகாரிகள் ஏற்கனவே இருந்த பழைய சட்டத்தின்படி இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அங்கு கிராம அதிகாரி இருக்கும்பொழுது இவர்களையும் கொண்டு வைக்க முடியாது. ஆகவே சட்டத்திலே போட முடியாது. ஆனால் அரசாங்கம் நிச்சயமாக இரக்கத்தோடு பரிசீலிக்கும். எங்கெங்கு எடுத்துக்கொள்ள வாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கங்கு எடுத்துக்கொள்வார்கள் என்ற உறுதியை அளிக்கின்றேன். ஆகவே இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ரூல்ஸிலேயே மாற்று வேலை கொடுக்க வேண்டுமென்ற கருத்தை அமைச்சரவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் கொடுக்கிற வாக்குறுதியே போதும் என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கருதுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அமைச்சரவர்களின் வாக்குறுதியை நான் தாராளமாக ஏற்றுக்கொண்டு திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

Clause 42 was put and carried.

Clauses 43 to 46 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I move—

'That the Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1972 (L.A. Bill No. 38 of 1972) be passed'.

The motion was put and carried and the Bill was passed into Law.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(இ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72).**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு அறிவிப்பு. தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, விவசாய வருமானவரி (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**(ஈ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்தச்) சட்ட வரைவு @ (சட்டமன்றப் பேரவைச் சட்ட வரைவு 37/1972) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின்கீழ், 7½ ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்பட்டு நிலம் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் அவரது வேளாண்மை ஆண்டு மொத்த வருமானம் ரூ 4,000-க்கு மேற்பட்டால் அவருக்கு, 1972 ஏப்ரல் 1-ஆம் நாளுக்கு முன்பு, வரி விதிக்கப்பட்டு வந்தது. மேலும் தோட்டப் பயிர்களைப் பொறுத்தமட்டில் 50 ஸ்டாண்டர்டு ஏக்கரும் அதற்குக் குறைவாகவும், மலைத்தோட்டப் பயிர்களல்லாத ஏனைய பயிர்களைப் பொறுத்தமட்டில் வரையறை ஏதுமின்றியும் நிலம் வைத்திருக்கும் ஒருவர் வரியை இசைந்து தீர்த்துக் கொள்ள மேற்படிச் சட்டத்தில் விதித்துறை இருந்தது. நமது மாநில அரசின் நிதிவாயில்களைப் பெருக்குவதற்காக, தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1971) மூலம் 1955-ஆம் ஆண்டு சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. நில வகைப்பாட்டிற்குப் பதிலாக நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கும் நிலத்தில் பயிரிடப்படும் பயிர்களுக்கும் ஏற்றவாறு வரி விதிக்கும் வகையில் "ஸ்டாண்டர்டு ஏக்கர்" என்பதற்குரிய பொருள் விளக்கம் திருத்தப்பட்டது. வரி இசைந்து தீர்த்துக் கொள்வதற்கான வரம்பு எல்லாப் பயிர்களுக்கும் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்களாக வரையறுக்கப்பட்டது. இசைந்து தீர்த்துக் கொள்வதற்கான வரி வீதங்களும் திருத்தி அமைக்கப்பட்டன. இந்த மாற்றங்கள் 1972 ஏப்ரல் 1-ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தன.

---

@ 19—8—1972 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 24

உழவர்கள் முறையீடு செய்துகொண்டதன் மேல், உழவர்களுக்கு இச்சட்டத்தின்கீழ் சில சலுகைகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. அவ்வாறே, வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படும் நில வரம்பை 7½ ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 10 ஸ்டாண்டர்டு ஏக்கராக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. வேளாண்மை வருமானம் குறித்து விலக்கு அளிக்கப்படும் வரையறையை ரூ. 4,000 லிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது. மேலும், மலைத்தோட்டப் பயிர்கள் அல்லாத ஏனைய பயிர்களைப் பொறுத்தமட்டில், வரையறை ஏதுமின்றி வரியை இசைந்து தீர்த்துக்கொள்ள அனுமதிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

வரி விதிப்புச் செய்கையில், விடுபட்டுப்போன வருமானத்திற்கு வரியை இசைந்து தீர்த்துக்கொள்ள விதித்துறை ஏதும் தற்போது இல்லை. உழவர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாட்டைத் தவிர்க்கும் நோக்குடன் விடுபட்டுப்போன வருமானத்தைப் பொறுத்த மட்டில், அந்த வருமானம் வரி விதிப்பிலிருந்து விடுபட்டுப் போகாமலிருந்து அதற்கு மேற்படி சட்டத்தின் 65-வது பிரிவின் கீழ் வரி இணக்கம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தால், அத்தகைய வருமானம் குறித்து வரி இணக்கம் செய்துகொள்ள வகை செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது.

திராட்சை, கரும்பு, வேர்க்கடலை (பாசனப் பயிர்), பருத்தி (பாசனப் பயிர்) ஆகிய பயிர்கள் அரசு பாசன வாயில்கள் அல்லாத பிற பாசன வாயில்களிலிருந்து பாசனம் பெற்ருல், அவற்றைப் பொறுத்தவரையில், நிலங்களை ஸ்டாண்டர்டு ஏக்கர்களாக மாற்றுவதில் ஓரளவு சலுகை காட்டவும் அரசு முடிவு செய்துள்ளது.

தற்போதுள்ள விதித்துறையின்கீழ், வாழை பயிரிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு ஏக்கர் மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாகும். வாழை பயிரிடுவதற்கான நிலத்தை ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றுவதில் ஓரளவு சலுகை காட்ட முடிவு செய்யப் பட்டுள்ளது. அவ்வாறே, மலைப் பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளில் அரசு பாசன வாயிலிருந்து வாழை பயிரிடப்படும் ஒரு ஏக்கர் இரண்டு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாகும். அது



1972 ஆகஸ்ட் 24] [திரு. ப. உ. சண்முகம்]

போலவே அரசு பாசனவாயில் அல்லாத பிற பாசன வாயிலிருந்து வாழை பயிரிடப்படும் ஒரு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமமாகும்.

இந்த நேரத்தில் நான் ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மலை வாழையில் மலையில் பயிரிடப்படுகின்ற வாழையாக இருக்குமானால் அதற்கு இந்த வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தரையிலே பயிரிடப்படுகின்ற வாழைக்கு விலக்கு கிடையாது. மலையிலே பயிரிடப்படுகின்ற வாழைக்குத்தான் இந்த வரி விலக்கு.

மலைப் பகுதிகளில் வாழை பயிரிடப்படுவதற்குப் பயன்படுத்தப் படும் நிலங்கள், அவற்றிற்கு விதிக்கப்படும் வரியின் அடிப்படையில் அவை ஸ்டாண்டர்டு ஏக்கராக மாற்றப்படும்.

சமயப் பொறுப்புக் கழகங்களாயிருந்தாலும், அறநிலையப் பொறுப்புக் கழகங்களாயிருந்தாலும் அவற்றிற்குக் கிட்டும் விவசாய வருமானம் மொத்த விவசாய வருமானத்திலிருந்து விலக்கப்படுகிறது. 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் கீழ் மொத்த வருமானத்தைக் கணக்கிடுவதற்காக சமயப் பொறுப்புக் கழகத்திலிருந்து அல்லது அறநிலையப் பொறுப்புக் கழகத்திலிருந்து கிடைக்கும் வருமானம் எந்த அளவுக்கு விலக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு, விவசாய வருமானம் மொத்த விவசாய வருமானத்திலிருந்து விலக்கப்படுகிறது.

இதல்லாமல் அரசாங்கத் தரப்பிலிருந்து கொடுக்கின்ற திருத்தங்கள் மூலம் சில சலுகைகள் கிடைக்கின்றன. சலுகைகள் நிறைந்த இந்தச் சட்ட முன்வடிவை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU S. ALAGARSWAMY: Sir, I move the following amendment :—

“That the Tamil Nadu Agricultural Income Tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 37 of 1972) be referred to a Select Committee of the House consisting of...........Members (Names of Members to be given later) with instructions to report on the first day of next session.”

THIRU B. VENKATASWAMY : Sir, I second the amendment.

DR. H. V. HANDE : Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 37 of 1972) be circulated for eliciting public opinion ".

The amendment was duly seconded.

MR. DEPUTY SPEAKER : Under Rule 77 the amendment of Thiru J. James is disallowed.

Thiru S. Alagarsamy may now speak.

**திரு. சோ. அழகர்சாமி :** துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய வருமான வரி சம்பந்தமாக முந்திய சட்டத்திலிருந்து சில விதிவிலக்குகள் அளித்திருப்பதாகத் தெரிவித்தார்கள். குறிப்பாக, விவசாய வருமானத்திற்கு வரி விதிப்பதைக் கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்டு ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் இருந்தால் வரி விதிப்பது என்று செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படக் கூடிய விவசாயிகள் பலர் இருக்கிறார்கள். மொத்தத்தில் 500 ரூபாய் வருமானம் வரக்கூடியவன் கூட சென்ற ஆண்டு 500 ரூபாய் வரி செலுத்தும் ஆபத்தான நிலை ஏற்பட்டது. அவர்களால் சரியாகக் கணக்கு வைத்துக் கொள்ள முடியவில்லை. அப்படி வைத்துக் கொண்டாலும் அதை வருமான வரி அதிகாரிகள் ஒப்புக்கொள்வது இல்லை.

கிணறு வெட்டி பாசனம் செய்து வாழையோ, கரும்போ நிலக்கடலையோ, பருத்தி போன்ற பயிர்களோ பயிர் செய்யக் கூடிய நேரத்தில் இதே மாதிரி ஒரு வரி அப்போது இருந்தது. அப்போது இதற்கெல்லாம் இரண்டு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருந்தார்கள். இப்போது வாழை பயிர் செய்தால் அது அரை ஸ்டாண்டர்டு ஏக்கர், கரும்பு முக்கால் ஸ்டாண்டர்டு ஏக்கர், நிலக்கடலை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இப்படி ஆக்கியிருக்கிறார்கள். பாசன வசதி பெற்று பயிர் செய்வதற்கும் கிணறு தோண்டி பாசனம் செய்வதற்குமுள்ள வித்தியாசத்தைப் பார்க்க வேண்டும். ஒரு கிணறு தோண்ட 15,000 ரூபாய் ஆகிறது. அதற்கு வட்டி மட்டும் வருஷா வருஷம்



1,500 ரூபாய் ஆகும். தண்ணீரை எடுப்பதற்குரிய கட்டணம் ஏக்கருக்குக் குறைந்தது 100 ரூபாய் செலவாகிவிடுகிறது. மூன்று நான்கு ஏக்கருக்குத்தான் தண்ணீர் பாயும். குறிப்பாக, இராமநாதபுரம், கோவில்பட்டி, சங்கரன்கோயில் வட்டாரங்களைப் பொறுத்தமட்டில் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து நான்கு ஏக்கர் மகசூல் செய்யலாம் என்றால் கடைசியில் ஒரு ஏக்கருக்குத் தான் தண்ணீர் இருக்கும். ஆகவே, இப்போது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற முறையைப் பார்க்கும் போது இந்த வருமான வரியினால் கிணற்றுப் பாசனத்தை நம்பி விவசாயம் செய்யக் கூடியவர்கள் பெரிதும் பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

(The hon. Member Thiru V. Krishnamoorthi was seen discussing with officials in the official gallery).

THIRUMATHI JOTHI VENKATACHELLUM : On a point of Order, Sir. Hon. Members cannot discuss with officials. Here a Member has been discussing with officials. I want to bring it to your notice.

MR. DEPUTY SPEAKER : உள்ளே இருந்து பேசக் கூடாது. வெளியே போய் பேசலாம்.

[Sri V. Krishnamoorthi (entering the Chamber) : Sir, I will be careful hereafter].

**திரு. சோ. அழகர்சாமி :** கிணற்றுப் பாசனத்தின் மூலம் ஆரம்பத்தில் நான்கு ஏக்கர் பயிரிடலாம் என்று ஏற்பாடு செய்து கணக்குப் பிள்ளையும் நான்கு ஏக்கர் என்று எழுதிவிட்ட பிறகு கடைசியில் தண்ணீர் இல்லையென்ற காரணத்தால் இரண்டு ஏக்கரில்தான் பயிர் செய்திருக்க முடியும். ஆனால் அவர்கள் எல்லாம் நான்கு ஏக்கர் என்ற கணக்கிலேதான் வரி செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

THIRU V. KRISHNAMOORTHI : On a point of Order, Sir. Whenever a member wants to go out while an hon. Member is speaking, while crossing the Speaker, he must bow down. I think the hon. Lady Member Jothi Venkatachellum is not doing that.

THIRUMATHI JOTHI VENKATACHELLUM (entering the Chamber) : I always do that.

MR. DEPUTY SPEAKER : The hon. Member should take it in a jovial way.

THIRU V. KRISHNAMOORTHI : My point is when a person is on his legs and speaking, nobody should cross between the Speaker and the person speaking.

MR. DEPUTY SPEAKER : So many times it is happening. At times it seems to be even a walk-out, persons going en-bloc like this. I just want to remind hon. Members, about it.

THIRU V. KRISHNAMOORTHI : Nobody should obstruct the sight of the Chair by crossing. That is what I want. If they leave by bowing down, it would be all right. The hon. Lady Member had not done that.

THIRUMATHI JOTHI VENKATACHELLUM : It is not a rule that I should bow down. I must bow to the Chair before I go. That is the procedure I have followed. I have been in the House sufficiently long and I know the procedure.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Members should not cross the person speaking and the Chair.

MR. DEPUTY SPEAKER : That is not a healthy practice.

THIRUMATHI JOTHI VENKATACHELLUM : I bowed to the Chair and then went out. I have followed the procedure.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இன்று கிணற்றுப் பாசனம் செய்யக் கூடியவர்கள் மிக அதிகமாக நஷ்டம் அடையக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மின்சாரக் கட்டணம் மற்றச் செலவுகளுக்கே 500 ரூபாய் ஆகிவிடுகிறது. அவர்களுக்கு இந்த வரி அதிகமாகப் பாதிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எப்படி மலையில் பயிரிடப்படுகின்ற வாழைக்கு விலக்கு அளித்திருக்கிறார்களோ மானாவாரி நிலங்களுக்கு 3 ஏக்கர் 4 ஏக்கர் வரை விலக்கு அளித்திருக்கிறார்களோ அந்த முறையில் கிணற்றுப் பாசனத்திற்கு இரண்டு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்க வேண்டும்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் தெரிந்துகொள்ள விரும்புவது—இரண்டு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொன்னால் வாழை வைத்தால் ஒரு ஏக்கர் அரை ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்தால் வாழைக்கு அவ்வளவுதான் வருமானம் வரும் என்று உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்களா? இதைப் பற்றி விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை விலக்கு அளித்திருக்கிறோம். 5,000 ரூபாய் வரையில் வருமானம் இருந்தால் வரி இல்லை என்றிருக்கிறது. ஐந்து ஏக்கர்களில் வாழை வைத்தால் விலக்கிருக்கிறது. தனிப்பட்ட முறையில் கிணறு வெட்டி தண்ணீர் எடுத்தால் சலுகை கொடுத்திருக்கிறோம். இதற்கு மேற்கொண்டு போகிறவர்களுக்கு வரி போடுகிறோம். பத்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் பயிரிடுகிறவர்களுக்காக உறுப்பினர் அவர்கள் வாதாடுகிறார்களா?

**திரு. சோ. அழகர்சாமி :** 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லும்போது எங்கள் வட்டாரத்தில் 45 ஏக்கர்களுக்கு வந்து விடுகிறது. அவை வானம் பார்த்த பூமி. அதில் மூன்று நான்கு ஏக்கர்களில் கிணறு வெட்டி பயிரிடும்போது மீதி நிலம் மானாவாரியாக இருந்தாலும் வருமான வரி செலுத்த வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நாற்பது ஏக்கர்கள் வைத்திருந்து மூன்று நான்கு ஏக்கர்களில் பயிரிட்டால், கிணறு எடுத்து பயிரிட்டால் வருமான வரி கட்ட வேண்டி வருகிறது என்று சொல்கிறார்கள். மீதி 36 ஏக்கர்களில் பயிர் வைக்காமல் மானாவாரியாக வைத்திருக்கிறார்களா? அப்படிப்பட்டவர்களுக்கு வருமான வரி வந்து விடுகிறது என்று சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு சோ. அழகர்சாமி :** நாற்பது ஏக்கர்கள் இருந்தால் கிணறு வெட்டி மூன்று நான்கு ஏக்கர்கள் போக மற்றவை வானம் பார்த்த பூமியாகத்தான் இருக்கிறது. நல்ல முறையில் மழை இருந்தால் மகசூல் இருக்கும். இல்லை என்றால் மகசூல் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. வருமான வரி போடும்போது

அதையும் சேர்த்துதான் கணக்கிடுகிறார்கள். அப்படி வரும்போது 30, 40 ஏக்கர்கள் உள்ளவர்களும் வரி செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. அங்கு ஏக்கர் ஒன்றுக்கு சராசரி வருமானம் இருபது ரூபாய்தான் வருகிறது. கோவில்பட்டி, சங்கரன்கோவில், விளாத்திக்குளம் போன்றவிடங்களில் மானாவாரிப் பூமிகளில் செலவு போக சராசரி வருமானம் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 30-க்கு மேல் வருவதில்லை. நிலங்களை குத்தகைக்கு விட்டால். ஏக்கர் ஒன்றுக்கு பத்து ரூபாய்க்கு மேல் குத்தகைக்கு எடுப்பதில்லை. வருமான வரி கணக்கிடும்போது எல்லாவற்றையும் சேர்த்து கணக்கு போடுகிறார்கள். அதிக வருமானம் இருந்தால் வரி போடட்டும். அரசாங்கப் பாசனத்தின் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய வாழை, கிணற்றுத் தண்ணீர் இறைத்து உற்பத்தி செய்யக்கூடிய வாழை இவற்றின் செலவை அமைச்சர் அவர்கள் சிறிது சிந்திக்க வேண்டும். ஒரு ஏக்கரில் தண்ணீர் இறைக்க ரூ. 500 செலவாகிறது. ஒரு சிறிய விவசாயி கிணறு வைத்து நாலைந்து ஏக்கர்கள் பயிரிட்டு மீதி நிலம் மானாவாரியாக இருந்தாலும்கூட அதையும் சேர்த்து கணக்கெடுத்து வருமான வரிக் கணக்கில் கொண்டு வருகிறார்கள். இரண்டு ஏக்கர் என்றிருந்து ஒரு ஏக்கருக்குத்தான் தண்ணீர் இருந்தது என்றாலும்கூட இரண்டு ஏக்கர்களில் வாழை வைத்தான் என்று வருமான வரி கட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. போன ஆண்டு வாழை வைத்தாயே என்று சொல்லி இரண்டிற்குமாக சேர்த்து நோட்டீஸ் வந்து விடுகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்தச் சட்டத்தின்படி ஒரு விவசாயி என்ன பயிர் வைக்கப் போகிறார் என்று எழுதிக் கொடுத்து விடலாம். அவர்கள் எழுதிக் கொடுத்ததை வைத்து அதிகாரி கணக்குகள் பார்ப்பார். அப்படி எழுதிக் கொடுக்கும் உரிமையை புதிதாகக் கொடுக்கிறோம்.

**திரு. சோ. அழகர்சாமி:** நன்றி. மகசூலைப் பார்க்கும்போது இடத்திற்கு இடம் வித்தியாசப்படுகிறது. ஒரு இடத்தில் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கிறது. இன்னொரு இடத்தில் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. ஒரு இடத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5,000 வரை வருகிறது, இன்னொரு இடத்தில் அவ்விதம் வருவதில்லை. பருத்தி போடும்போது சிலயிடங்களில்



பத்து பதினைந்து க்விண்டால்ஸ் வருகிறது. நானும் போட்டேன், இரண்டு ஆண்டுகள் போட்டேன். ஏக்கர் ஒன்றுக்கு மூன்று க்விண்டாலுக்கு மேல் வரவில்லை. ஆகவே நிலம், தரம், தண்ணீர் வசதி இவற்றைப் பொருத்து மகசூல் வேறுபடுகிறது. வருமானம் வந்தால் வரி போடட்டும், வரவேற்கிறேன், ஆனால் வருமானம் வராதவர்கள் வரி கட்ட வேண்டிய ஆபத்து இதில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வருமானம் 5,000 ரூபாய்க்கு மேல் வந்தால் வரி போடுகிறோம். எந்த வகையில் வருமானம் வராதவர்களிடம் வசூலிக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதைச் சொன்னால் அதுபற்றி யோசிப்போம். வருமானம் வந்தால் வரி உண்டு. ஒருவேளை பயிர் காய்ந்து விட்டது, தீய்ந்துவிட்டது, பூச்சி அடித்துவிட்டது என்று கருதுவார்களேயானால் இப்போதே சலுகைகளைச் சொல்கிறேன், பயிர் தீய்ந்துவிட்டது, அல்லது காய்ந்துவிட்டது. அல்லது பூச்சி அடித்துவிட்டது என்றால் உடனே நிலத்திற்குரியவர் அங்குள்ள இன்கம் டாக்ஸ் அதிகாரியிடம் எழுதிக் கொடுத்து விட்டார்களேயானால் உடனே அவர்கள் பார்த்து தீய்ந்துவிட்டது, காய்ந்துவிட்டது என்று எழுதிவிட்டால் போதும், அதைத் தள்ளி விடுவதற்கு உத்தரவு போட்டிருக்கிறோம், அந்தச் சலுகையைத் தர இருக்கிறோம். அப்படியிருக்கும்போது வருமானம் வராதவர்களுக்கு வரி போடுவதாக இல்லை, வருமானம் வருகிறவர்களுக்குத்தான் வரி போடுகிறோம். அப்படி வருமானம் வராதவர்களுக்கு எந்தெந்த வகைகளில் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமோ அவற்றைக் கொடுக்கிறோம். வருமானம் வரும்போது வரி போடுகிறோம், அதில் என்ன தவறு?

**திரு. சோ. அழகர்சாமி:** ஒரு ஜோடி மாடு வைத்து கணவன், மனைவி பாடுபடுகிறார்கள். சில சீசனில் கூலி ஆட்களை வைத்துக் கொள்கிறார்கள், இவர்களுக்கு முப்பது ஏக்கர் இருந்தால் அவர்கள் வருமான வரிக்கு உள்ளாகிறார்கள். நல்ல வசதி படைத்தவர்கள் அதிகப்படிச் செலவு செய்து அதிக வருமானம் ஈட்டும் நிலையில், வசதியில்லாதவர்களிடம் அங்கு அவ்வளவு வருமானம் வருகிறதே, உனக்கு அவ்வளவு வருமானம் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல என்று சொல்கிறார்கள். ஐநூறு ரூபாய் வருமானம் வந்தவர் ஐநூறு ரூபாய் வரி செலுத்த

வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. விளையவில்லை என்று சொன்னால் நம்பமாட்டேன் என்கிறார்கள். அவர்கள் கணக்குகளை சரியாக வைக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே சிறு விவசாயிகள், நேர்மையாகப் பாடுபடும் விவசாயிகள் பாதிக்கப் படாமல், வருமான வரி அதிகாரிகளிடம் அலையாமல் இருக்கும் படிச் செய்ய வேண்டும். இன்ன பயிர் வைத்திருக்கிறோம், இவ்வளவு ஏக்கர்களில் வைத்திருக்கிறோம் என்ற முறையில் எழுதி கையெழுத்து வாங்கும் முறையில் ஒரு ஏற்பாடு இருந்தால் சென்ற ஆண்டு என்ன வைத்திருந்தார்கள், இந்த ஆண்டு என்ன வைத்திருக்கிறார் என்று உறுதியாகக் கூற முடியும். ஆனால் நிலைமை இப்போது அப்படி இல்லை. சென்ற ஆண்டு என்ன பயிர் வைத்திருந்தார்களோ அதுதான் இந்த ஆண்டும் என்ற நிலையில் தான் ரிக்கார்ட்ஸ் இருக்கின்றன. இல்லையென்றால் நம்பமாட்டேன் என்கிறார்கள். ஆகவே என்னென்ன பயிர்கள் வைக்கப்படுகின்றன என்பதற்கு எழுதி கையெழுத்து வாங்கும் முறை இருக்க வேண்டும். இப்போது வருமானம் வந்தாலும் வராவிட்டாலும் வரி செலுத்த வேண்டியிருக்கிறது. உற்பத்திச் செலவு ஒரு சில இடங்களில் கூடுதலாக ஆகிறது, சிலவிடங்களில் குறைவாக ஆகிறது. சிலவிடங்களில் மகசூல் ஏக்கராவிற்கு அதிகமாகக் கிடைக்கிறது, சிலவிடங்களில் மகசூல் குறைவாகக் கிடைக்கிறது. வருமானம் வருகிறவர்களுக்கு வரி விதிக்கலாம். ஆனால் தகுந்த வருமானம் இல்லாதவர்கள் வரி விதிப்பிற்கு ஆளாகாமல் இருக்க வேண்டும். வருமானம் இல்லாதவர்களுக்கு தொந்தரவு இல்லாத முறையில், நல்ல முறையில் பரிசீலனை செய்து இந்த மசோதாவைக் கொண்டு வருவது நியாயம் என்பதால் செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்ற திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

*** திரு. வி கிருஷ்ணமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள விவசாய வருமான வரி திருத்தச் சட்டமும், தொடர்ந்து அவர்கள் கொடுத்துள்ள அமெண்ட்மெண்ட்டும் வரவேற்கத் தக்கனவாகும். இந்தச் சட்டத்திற்கு தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகள் தங்களுடைய ஆதரவை நிச்சயமாகத் தெரிவிப்பார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது. ஏதோ இல்லை என்ற நிலையிலிருந்து கொஞ்சமாவது



சில சலுகைகள் கொடுத்ததன் மூலமாக விவசாயிகள் அவர்களும் சமுதாயத்திற்கு தங்கள் பங்கினைச் செலுத்த வேண்டுமென்ற உணர்ச்சியோடு இந்த வரிகளை எல்லாம் கொடுப்பார்கள், கொடுக்க முன்வருவார்கள் என்று நான் நம்புகிறேன். இப்பொழுது கொடுக்கப்பட்டுள்ள இந்த மசோதாவிலே சில சலுகைகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். முதன் முதலில் தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் பெருமையாக எடுத்துக் கொள்வது கணக்குக் காட்டாமல் கம்பவுண்டு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பது தான். ஏனென்றால் கிராமங்களிலே விவசாயிகளுக்கு கணக்கு எழுதியே பழக்கம் கிடையாது. உழவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது என்று சொல்வார்கள். கணக்கு எழுதுகிற பழக்கமே கிராமங்களில் கிடையாது. கணக்கு வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்ட பொழுது அவர்கள் மனதில் அச்சம் இருந்தது. இப்பொழுது அந்த அச்சத்தைத் தவிர்க்கக் கூடிய விதத்தில் எவ்வளவு நிலம் இருந்தாலும் அவர்கள் கம்பவுண்டு செய்து கொள்ளலாம் என்ற முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது மிகவும் சிறந்த முறை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 7½ ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையிலும் எக்ஸெம்ப்ஷன் கொடுத்திருந்தார்கள். இப்பொழுது 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையிலும் கொடுத்திருப்பது விவசாயிகளுக்கு மிகவும் திருப்தி அளிக்கக்கூடிய ஒன்றாகும். அதையும் நான் வரவேற்கிறேன்.

ஒன்றை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது பயிர் அடிப்படையில். crop based முறையில் வரி போடுகிறோம். அதை இன்னும் கொஞ்சம் புனர்பரிசீலனை செய்து ஃப்ளாட் ரேட்டாக விவசாயி இவ்வளவு பயிரிட்டால், இவ்வளவு நிலம் வைத்திருந்தால் இவ்வளவு வரி கொடுக்க வேண்டும் என்ற முறையில் இருந்தால் நல்லது. crop based என்றால். கணக்குப் பிள்ளைதான் பெரிய இடத்தில் இருக்கிறார். அவர் சொல்வது தான் எடுபடும். விவசாயிகளுக்கும், கணக்குப் பிள்ளைகளுக்கும் இடையே எவ்வளவு தூரம் நல்லுறவு இருக்கிறது. எவ்வளவு தூரம் அவர்கள் நல்லபடியாக நடந்துகொள்கிறார்கள் என்பதெல்லாம் நான்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1972 ஆகஸ்ட் 24

சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் கிடையாது. என்னுடைய கிராமத்திற்குப் பக்கத்தில் தென் ஆற்காடு விவசாயச் சங்கத் தலைவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய இருப்பைத் தோப்பை கரும்பு பயிரிடுகிறார் என்று கணக்குப் பிள்ளை எழுதிவைத்து விட்டார். பிறகு அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் ஆபீசருக்கு மனுப் போட்டு, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வந்து பார்த்து, இருப்பைத் தோப்புதான், கரும்பு பயிரிடவில்லை என்று மாற்றி எழுதினார்கள். அவர் பி.எஸ்.ஸி. படித்தவர். விவசாயச் சங்கத் தலைவர். அவர் போராட்டம் நடத்தக் கூடியவர். அவர் போய் சொல்லி மாற்றிக்கொண்டுவிட்டார். ஆனால், சாதாரண விவசாயிகள், ஒன்றும் தெரியாத எளிய விவசாயிகள் அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் ஆபீசரையும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரையும் போய் பார்க்க முடியுமா ? அவர்களால் முடியாது. தயவு செய்து எங்களை கணக்குப் பிள்ளையிடம் நடக்க விடாதீர்கள். அமைச்சர் அவர்கள் மனது வைத்து அப்படி நடக்காமல் இருக்கக்கூடிய நிலையை உண்டாக்க வேண்டும். என்ன பயிர் வைத்திருக்கிறார் என்பதை அதிகாரியிடம் எழுதிக்கொடுத்துவிடலாம் என்று சொன்னார்கள் அமைச்சர் அவர்கள். எவ்வளவு பேர்கள் படித்திருக்கிறார்கள் ? எவ்வளவு பேர்கள் அம்மாதிரி எழுதிக் கொடுக்க முடியும் ? ஆகவே, அவர்கள் டெக்ளரேஷன் கொடுக்க மாட்டார்கள். அது நடைமுறையில் சரியாக வராது.

ஃப்ளாட் ரேட்டாக இந்த ஆண்டுக்கு ரூ. 100, அடுத்த ஆண்டுக்கு ரூ. 200, 300 என்று இப்படி சொல்லிவிட்டால், விவசாயியும் அரசாங்கத்திற்கு மனதோடு அந்த வரியைக் கொடுத்து விடுவான். அதில் ஒன்றும் கஷ்டம் கிடையாது. அடங்கலில் எழுதுவார்கள் என்று சொன்னால், கணக்குப் பிள்ளை எழுதுவது தான். அடங்கலில் உள்ள காலத்தில் கணக்குப் பிள்ளை எழுதுவது தான் எடுத்துக்கொள்ளப்படும். ஒரு கிராமத்தில் 1,500 ஏக்கர் இருந்தால், 2,000 பட்டாதாரர்கள் இருப்பார்கள். கணக்குப் பிள்ளை மகசூலையா பார்த்து அடங்கலில் எழுதுகிறார்? திண்ணையில் உட்கார்ந்துகொண்டு கணக்குப் பிள்ளை அந்தக் காலத்தில் எழுதிக்கொண்டே போவார். அது சில சமயம் நம்முடைய தலையில் வந்து விழும். அதற்காக சில கணக்குப் பிள்ளை ‘க’ என்று போட்டுவிடுவார்கள், அடங்கல் காலத்தில்



1972 ஆகஸ்ட் 24] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

என்னைப் போன்று கொஞ்சம் மிரட்டி உருட்டி கேட்கக் கூடியவர்களாக இருந்தால் ‘க’ என்றால் காம்பு என்று எழுதியிருப்பதாகச் சொல்வார். இல்லாவிட்டால், கணக்குப் பிள்ளைக்கு பிடிக்காதவராய் இருந்தால், பயந்து கொண்டிருப்பவராக இருந்தால், ‘க’ என்றால் கரும்பு பயிரிட்டதாக அர்த்தம் என்று சொல்லிவிடுவார். கொஞ்சம் மீடியமாக இருந்தால், கணக்குப் பிள்ளையிடம் கொஞ்சம் நல்லபடியாக நடந்துகொள்பவராக இருந்தால், கரும்பும் இல்லை. காம்பும் இல்லை. கம்பு என்று எழுதியிருப்பதாகச் சொல்லிவிடுவார். ஆகவே, இந்தக் ‘க’ விஷயமே வேண்டாம். தயவு செய்து கணக்குப் பிள்ளையிடம் எங்களை நடக்க விடாதீர்கள். அப்படி நடக்கவிட்டு எங்களை தொல்லைக்கு ஆளாக்காதீர்கள் என்று நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது அமைச்சர் அவர்கள் டெபினேஷனுக்கு ஒரு அமென்டுமெண்டு கொடுத்திருக்கிறார்கள். நேற்றைய தினம் பிரசுரிக்கப்பட்ட சட்டத்தில் கரும்பைப் பொறுத்தவரையிலும் ஒரு ஏக்கர் இரண்டு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இப்பொழுது அரசு ஏரி வைத்திருக்கிறோம் என்று சொன்னால், ஏரி இருக்கிறதே ஒழிய அதில் தண்ணீர் இல்லை. ஒரு ஏக்கர் நட்டால் இரண்டு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். அண்ணா அவர்கள் இருக்கும் பொழுது சொன்னார்கள். நீர் இல்லாத ஆறு, அழகு இல்லாத பெண், சாமி இல்லாத கோவில் என்று வேலூரைப் பற்றிச் சொன்னார்கள். அதுமாதிரி என்னுடைய தொகுதியில் உள்ள ஏரி தண்ணீர் இல்லாத ஏரி.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவர் அவர்களே, வேலூரில் பெண்கள் அழகாக இல்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதை நான் ஆட்சேபிக்கிறேன்.

**திரு துரைமுருகன்:** சட்ட மன்றத்தில் பொறுப்புள்ள ஒரு உறுப்பினர் வேலூரில் உள்ள பெண்கள் அழகாக இல்லை என்று சொல்கிறார். அப்படிச் சொன்னால் எங்கள் வீட்டுப் பெண்களை யார் கலியாணம் செய்து கொள்வார்கள்? இது பெரிய பிரச்னையாகி விடுமே? . . . .

—

[1972 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அம்மாதிரி பேசக்கூடாது. சட்ட மன்றத்தில் இம்மாதிரி விவாதத்தைக் கிளப்ப வேண்டாம்.

**திரு வி. கிருஷ்ணமூர்த்தி :** நான் அப்படிச் சொல்லவில்லை. நிச்சயமாக திரு. துரைமுருகன் வீட்டிலே உள்ள பெண்கள் அழகானவர்கள் தான். கணக்குப் பிள்ளையிடம் நாங்கள் நடக்காமல் எங்களுக்கு ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும். ஒரு ஏக்கர் இரண்டு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்தது. அதற்கு அமெண்டுமெண்டு கொண்டுவர வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் கண்டு கேட்டோம். தண்ணீர் இல்லாத ஏரியாக இருக்கிறது என்று சொன்னோம். அதற்கு கவர்ன்மெண்டு ஒரு அமெண்டுமெண்டு கொடுத்திருக்கிறார்கள். முழுவதும் (wholly) அரசாங்கத்தின் தண்ணீரை பயன்படுத்தினால் என்று கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஏக்கர் 1½ ஸ்டாண்டர்டு ஏக்கர் கரும்பைப் பொறுத்தவரையில் பிரைவேட் ஸோர்ஸாக இருந்தாலும், பப்ளிக் ஸோர்சாக இருந்தாலும் என்று சொல்லிவிடலாம். (மணி அடிக்கப்பட்டது) நான் கொஞ்சம் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன் இல்லாவிட்டால் மீண்டும் ஒரு போராட்டம் வந்துவிடும். நான் இங்கே சொன்னால் வெளியே கொஞ்சம் கூடு குறையும் whollyஎன்று சொன்னால் யார் டிபைன் செய்வது, யார் இதைத் தீர்மானிக்கிறது கணக்குப் பிள்ளையோ, அல்லது தாசில்தாரோ தான் செய்ய வேண்டும். 12 மாதமும் ஏரியில் தண்ணீர் இருந்தது என்று சொல்வார் அதிகாரி. விவசாயி இல்லை என்று சொல்வார். இதில் யார் ஆர்பிட்ரேஷன் செய்வது. இல்லாவிட்டால் ரெவின்யூ போர்டிடமும், ரெவின்யூ செகரடரிடமும் போய்க் கொண்டிருக்க வேண்டும். ரொம்பவும் கன்ஃப்யூஷனாக இருக்கிறது. பிரைவேட் ஸோர்ஸாக இருந்தாலும், கவர்ன்மெண்டு ஸோர்சாக இருந்தாலும் ஒரு ஏக்கர் கரும்பு போட்டால் 1½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கிளியராக டெபினஷன் கொண்டு வந்தால் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, பசிலியை எடுத்துக்கொண்டால், ஜனவரியில் கரும்பு நட்டால் அடுத்த டிசம்பரில் கரும்பு வெட்டுகிறார்கள் ஒவ்வொரு இடத்தில் 15 மாதத்தில் கூட வெட்டுகிறார்கள். கரும்



72 ஆகஸ்ட் 24] [திரு வி. கிருஷ்ணமூர்த்தி]

[illegible] டிசம்பர் மாதத்தில் நட்டால் [illegible] பசலி முடிந்துவிடுகிறது [illegible] வரையில் [illegible] ஒரு [illegible] ஆகிறது. ஆகையால் [illegible] 27 [illegible] 27 [illegible] டாது. [illegible] சொல்லுவார்கள். [illegible] இருக்கிறது. [illegible] டக்கூடாது. [illegible] கட்டையைப் போட்டு [illegible] கரும்பு [illegible] ரண்டு அஸெஸ்மெண்டு [illegible] ஒரு கிராப். ஒரு [illegible] வேண்டும். [illegible] இருக்கக் [illegible] அமெண்டு பண்ண [illegible] இருந்தாலும் [illegible] வேண்டும். 'Wholly' என்று போட்டால் விவசாயி [illegible] ரைவேட் ஸோர்ஸிலிருந்து தான் [illegible] பண்ணியதாகச் சொல்லுவார். தாசில்தார் அல்லது கணக்குப் பிள்ளை [illegible] வர்ன்மெண்டு ஸோர்ஸிலிருந்து தான் பயிர் பண்ணியதாகச் சொல்லுவார். ஒரு விவசாயிக்கு 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருந்தால். 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் எக்ஸெம்ப்ஷன் போக, பாக்கி [illegible] ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ரூ. 825 வரி கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இந்தச் சந்தேகங்களுக்கு [illegible] இடம் இல்லாத வகையில் இந்த சட்டத்தில் மேலும் [illegible] அமெண்டுமெண்டுகள் செய்ய வேண்டும். எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு அதிகமாக படிக்கத் தெரியாது. சட்டம் தெரியாது, டெபினஷனை பிரிந்துகொள்ளக்கூடிய சாமார்த்தியம் இல்லை. ஆகவே, ஸிம்பிளாக அமெண்டுமெண்டு கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு சமயத்திலும் [illegible] லா செகரடரியிடமும், ரெவின்யூ செகரடரியிடமும் நடக்க முடியாது. நான் போய் அதிகாரிகளைக் கேட்டபொழுது ஜோதி அம்மையார் அவர்கள்

பாயிண்டு ஆஃப் ஆர்டர் ரெய்ஸ் செய்தார். இந்தச் சட்டத்திலிருக்கிற அநோமலிகளைத் தவிர்த்து, மறுபடியும் வேறு ஒரு புதிய அமெண்டுமெண்டு கொண்டு வர வேண்டும். சந்தேகத்திற்கு இடம் இல்லாத அளவுக்கு சட்டம் போட்டுவிட்டால் ரொம்பவும் சௌகரியமாக இருக்கும். ரூல் 27-ஐ அமெண்டு செய்துவிட்டால் போதும் என்று சில இலாகாவினர் சொல்லி வருகிறார்கள். ரூல் 27-ன் கீழ் எக்ஸ்ப்ளநேஷன் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்துவிட்டால் போதாது. செக்ஷனை அம்மாதிரி அமெண்டு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் 'That will be erecessive delegation of power.'

'Rule 27 is *ultra vires* of section 2 of the Agricultural Income Tax Act'

என்று சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டியில் சொல்லி விடுவார்கள். சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி 'Is it within the purview of section 2 of the Act?'

என்று கேட்பார்கள். ஆகவே, இப்பொழுதோ அல்லது நாளைக் காலையிலாவது செக்ஷன் இரண்டுக்கு ஒரு தகுந்த அமெண்டுமெண்டு கொண்டு வர வேண்டும். ஒரு கிராப்புக்கு ஒரு அஸெஸ்மெண்டு என்பது சரியாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் திருப்திகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, அம்மாதிரி திருத்துகிற வகையில் ஒரு அமெண்டுமெண்டு கொண்டு வர வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி இந்த மசோதாவிற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. கே. என். குமாரசாமி:** பேரவைத் தலைவரவர்களே, இந்த வருமான வரி சட்டத்திலே திருத்தம் சம்பந்தமாக சில கருத்துக்களை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இந்த அமென்மெண்ட் பயிர் வாரி ஸ்டேண்டர்டு எக்கரா என்று வரும்போது சில சிக்கல்கள் வரத்தான் செய்கின்றன. ஒரு ஏக்கரா பகுதி என்றால், இன்ன வருமானம் வரும் என்று மொத்தமாக போட்டுவிட்டால், அப்படி அந்த விவசாயத்திலே ஒரு ஏக்கருக்கு வருமானம் குறைவாக வருபவர்களுக்கு சங்கடம் இருக்கத்தான் செய்யும். வருமானத்திலே அதை எப்படி கணக்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி தெளிவாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



அதை அடுத்து, "குளத்து பாய்ச்சலிலே" சர்க்கார் தண்ணீரை எடுத்தால், ½ ஏக்கர் கரும்புத் தோட்டம் என்றால், தண்ணீர் எடுக்காத பூமியில் ஒரு ஏக்கர்தான் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லப்படுகிறது. எங்கள் பிரதேசத்தில் 'குளத்துப் பாய்ச்சனம்' என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, 10 ஆண்டுகளாக அந்த பயிர்களுக்கு சர்க்கார் தண்ணீர் கொடுப்பதில்லை. ஆனால் வரி மாத்திரம் விவசாயிகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதை எப்படி ஸ்டாண்டர்டு ஏக்கராக எடுத்து கொள்வது என்பதற்கான விளக்கங்கள் இருக்கவேண்டும். அதை எந்த கணக்கிலே எடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்பதற்கு ஒரு விளக்கம் அமைச்சர் அவர்கள் தெளிவாக சொல்ல வேண்டும். அந்த அடிப்படையிலே சொன்னால் தான், அந்த பிரதேசத்திலே இருக்கக் கூடிய சிக்கல் தீர்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, எங்கள் பக்கங்களிலே ஒரு கிணறு வெட்ட 1,000 ரூபாய் செலவாகிறது. வருமான வரியை கணக்கிடும்பொழுது, இந்தச் செலவை வருமான கணக்கிலே கழித்துக் கொண்டால் தான், அந்த விவசாயிக்கு நிச்சயமாக அது பயனுள்ளதாக இருக்கும். கிணறு வெட்டும் செலவை வருமான கணக்கில் எடுத்துக் கொள்ளாவிட்டால், அந்த விவசாயிகள் பாதிக்கப்படக் கூடிய நிலைமையிலே இருக்கும். எனவே, இந்த மூன்று பிரச்சினைகளையும் அமைச்சர் அவர்கள் கவனித்து தெளிவுபடுத்த வேண்டுமென்று சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை முன்மொழிந்து கூறியபொழுது அது சலுகைகள் நிறைந்த மசோதா, உழவர்கள் முறையீட்டிற்கு இணங்கி பல்வேறு சலுகைகளை அளித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். உண்மையிலேயே பல்வேறு சலுகைகள் இருக்கின்றன இதிலே. ஆனால் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், நான் ஏற்கனவே இந்த மசோதா இந்த அவையிலே வந்த பொழுது கூட பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருப்பது போல் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்திலே இருக்கும் 'ரப்பர் சிறு தொழில் விவசாயிகள் சங்கம்' முதலமைச்சர் அவர்களையும், நமது ரெவின்யூ அமைச்சர்களையும் சந்தித்து மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1972 ஆகஸ்ட் 24

ஆனால் எனக்கு முன்னால் உரையாற்றிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஏதோ அமைச்சர் அவர்களை அவர்கள் கண்டதாகவும் அதன் பேரில் அரசாங்கத்திடமிருந்து சில திருத்தங்கள் வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். ஒரு வேளை எதிர் கட்சியிலே இருந்து பேசக் கூடிய காரணத்தினாலோ என்னவோ எங்கள் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எங்கள் மாவட்டத்து விவசாயிகளின் கருத்துக்கள் கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று நினைக்கிறேன். ஆக, இந்த நிலையில் நான் இந்த ரப்பர் சிறு விவசாயிகள் இந்த சட்டத்தினால் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சட்டம் ஒரு வேளை பெரிய தோட்ட முதலாளிகளைப் பொருத்த மட்டில் அதிகமாக பாதிக்காது என்று கூறினால் அது உண்மையாக இருக்கும். ஆனால் சிறு ரப்பர் தோட்ட விவசாயிகளை நிச்சயமாக இது பாதிக்கின்றது. ஏனென்று சொன்னால் அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. பெரிய தோட்டங்கள் அனைத்தும் அந்த பிரதேசத்திலுள்ள "ஹில் ரிஜினிலே" இருக்கிறது. அதாவது மலைப் பிரதேசத்திலே இருக்கின்றன என்பது தான். அந்த நிலங்கள் எல்லாம் ரப்பர் பயிரிடுகின்ற அளவிலே எந்த விதமான கஷ்டமும் இன்றி "வொர்ஜின் லேண்டிலே" ரப்பர் தோட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கராவுக்கு அதிலே 27 கிலோ கிராம் வருமானம் வருகிறது. ஆனால் கிராமங்களிலே பயிரிடுகின்றவர்களுக்கு வருமானம் ஒரு ஏக்கராவுக்கு 2 கிலோ தான் வருகிறது. எனவே, 27 கிலோவுக்கும் இரண்டு கிலோவுக்குமுள்ள வித்தியாசம் என்ன என்பது உங்களுக்கு தெரியும். அதிலே பெரிய தோட்ட முதலாளிகளுக்கும், சிறிய தோட்ட விவசாயிகளுக்கும் ஒரே சட்டமாக இருக்கும் பொழுது நிச்சயமாக சிறிய தோட்ட விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஏற்கனவே, இந்த சட்டத்தில் ரப்பர் தோட்ட பயிர் செய்யும் பிரதேசத்திற்கு சாதாரண ஒரு ஏக்கர் 20 சென்ட், ஒரு ஸ்டேண்டர்டு ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னதாக நிறைவேற்றப்பட்டிருக்கும் சட்டத்தில் 40 சென்டாக குறைக்கப்பட்டது. அப்படி என்றால் இதிலே 10 ஸ்டேண்டர்டு ஏக்கருக்கு வரி விதி விலக்கு கொடுக்கப்



1972 ஆகஸ்ட் 24] [திரு. ஜே. ஜேம்ஸ்]

பட்டதாக எடுத்துக் கொண்டால், சாதாரணமாக 4 ஏக்கர் நிலத்திற்குத் தான் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்தில் 4 ஏக்கரில் ரப்பர் உற்பத்தி செய்வது என்றால், கிடைக்கின்ற வருவாய் மிகவும் குறைவாகத் தான் இருக்கும். அதனை நான் கூறும் பொழுது, அமைச்சர் அவர்கள் கூறுவார்கள் 5,000 ரூபாய் வருவாய் வரையில் விதி விலக்கு கொடுத்திருக்கிறோமே, அந்த வகையிலே இவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று சொல்லக் கூடும். வருவாயை கணிக்க வருகின்ற அதிகாரிகள் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எவ்வளவு அதிகமாக அரசாங்கத்திற்கு வரி வசூலிக்க வேண்டும் என்று தான் அவர்கள் பார்ப்பார்கள். எனவே அந்த சிறு விவசாயிகள் கொடுக்கின்ற கணக்கை அந்த அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஆகவே, இந்த சட்டத்தினால் எந்த அளவுக்கு இந்த் சிறு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அதிகமாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, தான் அதற்கிணங்க நான் ஒரு திருத்தத்தை இங்கே கொடுத்திருக்கிறேன். ஏற்கனவே இருந்த ஸ்டேன்டர்டு ஏக்கர் என்பது சாதாரண ஒரு ஏக்கர் 20 சென்ட் என்று இருந்தாலும் கூட, இப்பொழுது இருப்பதை மாற்றி சாதாரண ஒரு ஏக்கரா ஒரு ஸ்டான்டார்டு ஏக்கரா என்று மாற்ற வேண்டுமென்ற திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மசோதாவில், ஏற்கெனவே இருந்த சட்டத்திற்கு மாறாக, வாழை, முந்திரி, கரும்பு போன்ற பயிர்களை பயிரிடுவோருக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஏழு ஏக்கராவிலிருந்து 10 ஏக்கராவிற்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. '4,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாய் குறைந்தது' என்று விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த விதி விலக்கினால் என்னுடைய மாவட்டத்திற்கு எந்த வித நன்மையும் வரவில்லை. ஆகவே, ஏற்கனவே இருக்கும் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்த மசோதாவால் எந்த வித நன்மையும் பெறவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதுமட்டுமில்லை. 'ரப்பர்' என்று சொல்லும் பொழுது அது வருவாய் உள்ள விவசாயம் என்று எண்ணிக் கொண்டாலும் கூட, குறிப்பாக கிராமப் பகுதியில் விவசாயம் செய்யப்படுகின்ற ரப்பர் ஆனது குறைந்த வருவாயைத் தான் தருகிறது; அதைப் போல் அதை பயிரிடுவதற்கு அதிக செலவு ஆகிறது என்பதையும் பார்க்க வேண்டும். பெரிய தோட்ட முதலாளிகள் இந்த பயிரிலே அதிக செலவு செய்தால் அதிக வருவாய் வரும். ஆனால் சாதாரண ரப்பர் பயிரைச் செய்யும் விவசாயிகள் அதிகமாக செலவு செய்ய இயலாத நிலையில் இருப்பார்கள். எனவே, அதிக உரம் போட்டு, அதிக செலவு செய்ய வேண்டிய வாய்ப்பும் வசதியும் இல்லாததால் அவர்களுக்கு வருவாய் குறைந்து வருகிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

ஆகவே, இந்தச் சிறு விவசாயிகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். அத்தோடு, பாக்கு விவசாயத்திற்கு கூட ஸ்டேண்டர்டு ஏக்கர் நிர்ணயித்திருப்பதை பார்க்கும்பொழுது விந்தையாக இருக்கிறது. அதற்கு 16 செண்ட்டு தான் ஒரு ஸ்டேண்டர்டு ஏக்கராக நிர்ணயித்திருக்கிறார்கள். விலைவாசி ஏற்றத்தை இன்றைக்குப் பார்க்கும் பொழுது இதிலே இருந்து வருகிற வருமானம் அதிகமாக இல்லை என்பதைத் தான் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, சாதாரணமாக எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வருவாய் துறை அமைச்சர் அவர்கள் கருணையோடுதான் இருக்கிறார்கள். எனவே, இதிலேயும் கூட அவர் சற்று கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த விவரங்கள் எல்லாம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வரப்படாததால் தான் இந்த நிலை இருக்கிறது என்று நான் உணருகிறேன். ஆகவே, இதை நன்கு பரிசீலனை செய்து ரப்பர் பயிர்களுக்கு ஸ்டேண்டர்டு ஏக்கரை நிர்ணயிக்கும் பொழுது "இந்தியன் ரப்பர் போர்டை" ஆலோசிக்கவில்லை என்று தான் கருதுகிறேன். அந்த போர்டையும் கலந்து ஆலோசித்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்த மசோதாவை தயாரிப்பதற்கு முன்னால் அந்த போர்டை கலந்து ஆலோசிக்கவில்லை; சிறு ரப்பர் பயிர் செய்யும் விவசாயிகளை கலந்தாலோசிக்கவில்லை. எனவே, அந்த போர்டையும் சிறு விவசாயிகளையும் கலந்து, இதிலே ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. கே. கந்தசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கிற விவசாய வருமான வரி (திருத்த) சட்டத்தை எங்கள் கட்சியின் சார்பில் வரவேற்று, எங்கள் ஆதரவைத் தெரிவித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே சில கஷ்டங்கள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தார்கள். அதிலே ஓரளவு உண்மை இருக்கிறது. நமது நாட்டில் 100-க்கு 80 பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் எழுத்தறிவற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் படிப்பு வாசனையற்றவர்களாக இருக்கிறார்கள். இங்கே கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவின்படி 5,000 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய விவசாயிகள் வருமான வரி செலுத்தவேண்டும் என்றிருக்கிறது. எழுத்தறிவில்லாத விவசாயிகள் எப்படிக் கணக்கு வைத்துக்கொள்வார்கள் என்பதைப் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படிப் புதுச் சட்டங்கள் வரும் போது முதலிலே கொஞ்சம் சிக்கல் இருக்கும் என்றாலும் படித்தறியும் தன்மை இல்லாத நம் விவசாயிகளுக்கு இதனால் அதிகமான சிக்கல்கள் ஏற்படும். கணக்குகளைப் பரிசோதிக்கின்ற அதிகாரிகளால் அதிகமான கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள்.

ஐ. பி. சி. 54 செக்ஷன்படி போலீசார் யாரை வேண்டுமானாலும் கைது செய்யலாம் என்று இருக்கிறது. அந்த அதிகாரம் இன்றைக்குச் சில சமயங்களில் எந்த அளவுக்குத் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதை நாம் நன்றாக அறிவோம். அதனால் ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்டது தான் இந்த விவசாய வருமான வரி திருத்தச் சட்டமும். ஆகவே, அதை மிகவும் கவனத்தோடு, கண்காணிப்போடு கையாள வேண்டும். சோஷலிசத்தை உருவாக்கவேண்டுமென்ற முறையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருந்தாலும், படிப்பு வாசனையற்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படாத வகையில் சட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும். இப்போது விவசாய அதிகாரிகள் எப்படி பயிர், சாகுபடி கணக்கு எடுக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அவர்கள் நேராக நிலத்தைப் பார்வையிடுவது கிடையாது. கிராம அதிகாரிகள், கணக்கப்பிள்ளை, வில்லேஜ்

[திரு. கே. கந்தசாமி] [1972 ஆகஸ்ட் 24

முன்சீப் போன்றவர்களைக்கேட்டு, அவர்கள் இருந்த இடத்திலிருந்தே என்ன சொல்கிறார்களோ அதை எழுதிக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட கிராம அதிகாரிகளுக்கு இப்போதே போதிய வருமானம், சம்பளம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்தச் சட்டத்தினால் அவர்களுக்கு மேலும் பொறுப்புகள் அதிகமாகின்றன. ஆகையால் அந்தப் பொறுப்புகளை அவர்கள் சரிவர செய்யவேண்டுமானால் அவர்களுக்குப் போதிய சம்பளம் அளிக்கப்பட வேண்டும். அப்படியானால்தான் இந்தச் சட்டத்தினால் நல்ல பயனடையும் முறையிலே அவர்கள் ஊக்கத்தோடு ஒத்துழைப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருமானத்தைக் கணக்கிடும்போது எல்லாப் பயிர்களுக்கும் எல்லா நிலங்களுக்கும் ஒரேமாதிரியாகக் கணக்கிடக்கூடாது. ஏனென்றால் ஒவ்வொரு இடத்திலும் வித்தியாசமான வருமானம் கிடைக்கும். பருத்தியையும், நெல்லையும் எடுத்துக்கொள்வோமானால், அவைகளின் சாகுபடி எப்படி இருக்கிறது என்பது தெரியும். தஞ்சையிலே நெல் நன்றாக விளையும். ஏக்கராவுக்கு 50 மூட்டை நெல் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் மதுரையில் போதிய தண்ணீர் வசதி இன்மையாலும், தஞ்சையைப் போல் நெல்விளைச்சலுக்கு ஏற்ற நல்ல மண்ணாக இல்லாததாலும் ஏக்கராவுக்கு 20 மூட்டை நெல் கிடைப்பது கூடக் கஷ்டமாக இருக்கிறது. அந்தச் செலவும் அதிகமாகிறது. அதேமாதிரி பருத்தியை எடுத்துக் கொண்டால் கோவையில் ஏக்கராவுக்கு 15 முதல் 30 குண்டால் வரை சாகுபடி ஆகிறது. ஆனால் மதுரையில் ஏக்கராவுக்கு 10 குண்டால் வரைதான் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். நானும் ஒரு விவசாயிதான். பருத்தி பயிர் செய்திருந்தேன். நன்றாக வளர்ந்திருந்தது. அதிகாரிகளின் ஆலோசனைப்படியே எல்லாம் செய்து வந்தேன். நல்ல மகசூல் கிடைக்கும் என்று சொன்னார்கள். இப்போது பார்த்தால் ஏக்கராவுக்கு 3 அல்லது 3½ குண்டால் தான் கிடைத்திருக்கிறது. அதற்கு ஆகியிருக்கிற செலவைப் பார்த்தால் வரவும் செலவும் சரியாகத்தான் இருக்கிறது. நிகர வருமானம் என்பது இல்லை. மற்ற விவசாயிகளுக்கும் இதே நிலைமைதான் இருக்கும். பயிர் செய்வதற்கான பண்ணைச் செலவை, மாட்டுக்கு தீவனம், ஆள் கூலி இவைகள் எல்லாம் கணக்கிட்டுப்பார்த்தால் 'நெட் இன்கம்'



1972 ஆகஸ்ட் 24] [திரு. கே. கந்தசாமி]

என்று சொல்கிறார்களே, அந்த வருமானம் மிக மிகக் குறைவாகத்தான் இருக்கும். இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான் வருமானத்தைக் கணக்கிடவேண்டும்.

அகில இந்தியாவிலேயே முதன் முதலாக நமது தமிழ்நாட்டில் தான் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அமுல்படுத்துகிறோம். எனவே, இந்தச் சட்டத்தை மிகவும் கவனத்தோடு ஜாக்கிரதையாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதன் முதலாகக் கொண்டுவரக்கூடிய சட்டமாக இருப்பதால், இந்த வருமான வரி விதிப்பு 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் என்று வைத்துக்கொள்ளலாம். ஆரம்ப காலத்தில் இந்தச் சட்டத்திற்கு விவசாயிகள் எவ்வளவு ரெஸ்பான்ஸ் காட்டுகிறார்கள் என்பதை அறிந்து, படிப்படியாக இந்த கணக்கு வைத்துக்கொள்ளும் முறையை அவர்கள் சரியாக அறிந்துகொண்டு, சட்டத்தின் நோக்கத்தைச் சரியாகப் புரிந்துகொண்டுவிட்டால், அதன் பிறகு 5,000 ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும் பரவாயில்லை. ஆகவே அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்திற்கு எங்கள் கட்சியின் ஆதரவைத் தெரிவித்து, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** தலைவரவர்களே, இந்த விவசாய வருமான வரி திருத்தச் சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை விவசாயிகள் எல்லாம் வரவேற்கிறார்கள். நானும் வரவேற்கிறேன். இவ்வளவு சலுகை கிடைக்கும் என்பது விவசாய மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று நான் நினைக்கிறேன். இன்று காலையில் கூட இரண்டு தலைவர்கள்—தென்னாற்காடு, செங்கற்பட்டு விவசாயச் சங்கத் தலைவர்கள்—என்னைச் சந்தித்து இந்தச் சட்டத்தை வரவேற்பதாகக்கூறி மகிழ்ச்சி தெரிவித்துச் சென்றார்கள். விவசாயிகளுக்கு ஏற்கெனவே பல சலுகைகள் கிடைத்திருக்கின்றன. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னால் மேற்கொண்டும் சலுகை கிடைக்கிறது. அதிலும்
" Wholly with Government water such sources"
என்றிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. 'ஹோல்லி' என்று சொல்லும்போது பத்து முறை தண்ணீர் விடவேண்டுமானால்

[திரு. கே. கந்தசாமி] [1972 ஆகஸ்ட் 24

முன்சிப் போன்றவர்களைக்கேட்டு, அவர்கள் இருந்த இடத்திலிருந்தே என்ன சொல்கிறார்களோ அதை எழுதிக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட பெரிய அதிகாரிகளுக்கு இப்போதே போதிய வருமானம், சம்பளம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்தச் சட்டத்தினால் அவர்களுக்கு மேலும் பொறுப்புகள் அதிகமாகின்றன. ஆகையால் அந்தப் பொறுப்புகளை அவர்கள் சரிவர செய்யவேண்டுமானால் அவர்களுக்குப் போதிய சம்பளம் அளிக்கப்பட வேண்டும். அப்படியானால்தான் இந்தச் சட்டத்தினால் நல்ல பயனடையும் முறையிலே அவர்கள் ஊக்கத்தோடு ஒத்துழைப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருமானத்தைக் கணக்கிடும்போது எல்லா இடங்களுக்கும் எல்லாப் பயிர்களுக்கும் ஒரேமாதிரியாகக் கணக்கிடக்கூடாது. ஏனென்றால் ஒவ்வொரு இடத்திலும் வித்தியாசமான வருமானம் கிடைக்கும். பருத்தியையும், நெல்லையும் எடுத்துக்கொள்வோமானால், அவைகளின் சாகுபடி எப்படி இருக்கிறது என்பது தெரியும். தஞ்சையிலே நெல் நன்றாக விளையும். ஏக்கராவுக்கு 50 மூட்டை நெல் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் மதுரையில் போதிய தண்ணீர் வசதி இன்மையாலும், தஞ்சையைப் போல் நெல்விளைச்சலுக்கு ஏற்ற நல்ல மண்ணாக இல்லாததாலும் ஏக்கராவுக்கு 10 மூட்டை நெல் கிடைப்பது கூடக் கஷ்டமாக இருக்கிறது. அதற்குச் செலவும் அதிகமாகிறது. அதேமாதிரி பருத்தியை எடுத்துக் கொண்டால் கோவையில் ஏக்கராவுக்கு 15 முதல் 30 குவிண்டால் வரை சாகுபடி ஆகிறது. ஆனால் மதுரையில் ஏக்கராவுக்கு 10 குவிண்டால் வரைதான் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். நானும் ஒரு விவசாயிதான். பருத்தி பயிர் செய்திருந்தேன். நன்றாக வளர்ந்திருந்தது. அதிகாரிகளின் ஆலோசனைப்படியே எல்லாம் செய்து வந்தேன். நல்ல மகசூல் கிடைக்கும் என்று சொன்னார்கள். இப்போது பார்த்தால் ஏக்கராவுக்கு 3 அல்லது 3½ குவிண்டால் தான் கிடைத்திருக்கிறது. அதற்கு ஆகியிருக்கிற செலவைப் பார்த்தால் வரவும் செலவும் சரியாகத் தான் இருக்கிறது. நிகர வருமானம் என்பது இல்லை. மற்ற விவசாயிகளுக்கும் இதே நிலைமைதான் இருக்கும். பயிர் செய்வதற்கான பண்ணைச் செலவை, மாட்டுக்கு தீவனம், ஆள் கூலி இவைகள் எல்லாம் கணக்கிட்டுப்பார்த்தால் 'நெட் இன்கம்'



1972 ஆகஸ்ட் 24] [திரு. கே. கந்தசாமி]

என்று சொல்கிறார்களே, அந்த வருமானம் மிக மிகக் குறைவாகத் தான் இருக்கும். இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான் வருமானத்தைக் கணக்கிடவேண்டும்.

அகில இந்தியாவிலேயே முதன் முதலாக நமது தமிழ்நாட்டில் தான் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அமுல்படுத்துகிறோம். எனவே, இந்தச் சட்டத்தை மிகவும் கவனத்தோடு ஜாக்கிரதையாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதன் முதலாகக் கொண்டுவரக்கூடிய சட்டமாக இருப்பதால், இந்த வருமான வரி விதிப்பு 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் என்று வைத்துக்கொள்ளலாம். ஆரம்ப காலத்தில் இந்தச் சட்டத்திற்கு விவசாயிகள் எவ்வளவு ரெஸ்பான்ஸ் காட்டுகிறார்கள் என்பதை அறிந்து, படிப்படியாக இந்த கணக்கு வைத்துக்கொள்ளும் முறையை அவர்கள் சரியாக அறிந்து கொண்டு, சட்டத்தின் நோக்கத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு விட்டால், அதன் பிறகு 5,000 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் பரவாயில்லை. ஆகவே அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்திற்கு எங்கள் கட்சியின் ஆதரவைத் தெரிவித்து, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** தலைவரவர்களே, இந்த விவசாய வருமான வரி திருத்தச் சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை விவசாயிகள் எல்லாம் வரவேற்கிறார்கள். நானும் வரவேற்கிறேன். இவ்வளவு சலுகை கிடைக்கும் என்பது விவசாய மக்களுக்கு ஒரு வரப் பிரசாதம் என்று நான் நினைக்கிறேன். இன்று காலையில் கூட இரண்டு தலைவர்கள்—தென்னாற்காடு, செங்கற்பட்டு விவசாயச் சங்கத் தலைவர்கள்—என்னைச் சந்தித்து இந்தச் சட்டத்தை வரவேற்பதாகக்கூறி மகிழ்ச்சி தெரிவித்துச் சென்றார்கள். விவசாயிகளுக்கு ஏற்கெனவே பல சலுகைகள் கிடைத்திருக்கின்றன. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னால் மேற்கொண்டும் சலுகை கிடைக்கிறது. அதிலும்
"Wholly with Government water such sources"
என்றிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. 'ஹோல்லி' என்று சொல்லும்போது பத்து முறை தண்ணீர் விடவேண்டுமானால்

ஒன்பது முறை தண்ணீர் விட்டால் கூட 'ஹோல்லி' என்று ஆகாது. நான் ஏற்கெனவே 'மெயின்லி' என்று சொன்னால் போதும் என்று சொல்லியிருந்தேன். அவர்கள் அரசாங்கம் 'ஹோல்லி' என்று போட்டிருந்தார்கள். தமிழ்நாட்டில் பெரும்பாலான பகுதியில்— முழுவதும் என்று கூடச் சொல்லலாம்—கவர்ன்மென்ட் சோர்ஸஸ் வாட்டர் கிடையாது. ஆகையால் விவசாயிகளுக்குப் பெரும் சலுகை கொடுத்திருக்கிறார்கள்

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உங்களுடைய கருத்தையும் ஏற்றுதான் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நீங்கள் இப்பொழுது கொடுக்கின்ற விளக்கம் சரியில்லை; உங்கள் விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. சில இடங்களில்— குறிப்பாக தஞ்சை, கோவை, திருச்சி போன்ற இடங்களில்— நிலங்கள் இருந்து, அதிலும் அரசாங்க டாங்குகளிலிருந்து தண்ணீர் வந்து, வேறு பிரைவேட் சோர்ஸும் இருக்குமானால் அந்த இடத்திலே 'ஹோல்லி' சோர்ஸ் இல்லை என்று நீங்கள் சொன்ன விளக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** தஞ்சாவூரில் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். கரும்புக்கு 12 மாதம் தண்ணீர் விட வேண்டும். அந்த 12 மாதமும் உங்களால் தண்ணீர் விட முடியுமா? நீங்கள் 10 மாதங்கள் தான் தண்ணீர் விடுகிறீர்கள். இரண்டு மாதம் கொடுப்பதில்லை . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தவறான ஊகம் வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்த விளக்கம் கொடுக்கிறேன். எந்த ஒரு இடத்திலாவது ப்ரைவேட் சோர்ஸ் இல்லை என்றாலே கவர்ன்மெண்டு சோர்சாகத் தான் அது இருக்க முடியும்.
The presumption will be the entire ayacut will be fed by Government sources.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** விளக்கத்திற்கு நன்றி. விவசாயத் துறையில் முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்பதில் இந்த அரசுக்கு உள்ள அக்கறையை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆயினும் இதிலே ஒரே ஒரு கருத்து என்னவென்றால் ஒரு வருஷத்தில் 2 பயிர் வைத்தால் இரண்டு



மாதம் வாழை போட்டால் அடுத்த ஜனவரிக்குத்தான் வெட்ட முடிகிறது. ரூல் 27 படி ஒரு க்ராப்புக்கு 2 இன்கம்டாக்ஸ் போட்டு விடுகிறார்கள். அப்பீல் பண்ணி திண்டாடவேண்டியதாக இருக்கிறது. ஆகவே இந்த ரூல் 27 ஐயே வித்டரா பண்ண வேண்டும். அல்லது திரு. கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டமாதிரி உடனடியாக ஒரு திருத்தமாவது கொண்டுவரவேண்டும். எப்படியோ ஒரு க்ராப்புக்கு இரண்டு டாக்ஸ் போடப்படுகிற நிலை தவிர்க்கப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ மாதவன் :** செக்ஷனில் total agricultural income of the previous year என்பதாகத் தான் இருக்கிறது. அதை மீறி யாராவது செய்துவிடுவார்கள் என்றுதான் 27-வது விதி போடப்பட்டிருக்கிறது. எப்படியும் வருமானம் உள்ளவருக்குத்தான் வரி போடவேண்டுமென்பது சட்டத்தின் நோக்கம். அது தெளிவாக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** அடுத்து இங்கே ஒரு முக்கிய குறிப்புப் புத்தகம் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குறிப்பை ரீ ப்ரின்ட் செய்து எல்லோருக்கும் இதன் காப்பி கிடைக்கச் செய்யவேண்டும்.

அடுத்து பயிர் தீய்ந்து போய்விட்டது என்றால் அதிகாரிகளுக்கு மனுக் கொடுத்தால் போதும் என்கிறார்கள். மனு எப்படிக் கொடுப்பது, எழுதி தபாலில் ரிஜிஸ்தர் செய்து அனுப்பலாம். அனுப்பினால் போதுமா? குறிப்பிட்ட நாட்களுக்குள் அந்த அதிகாரி வந்து பார்க்கிறாரா? நாங்கள் செய்ய வேண்டிய மரியாதைகளைச் செய்தால்தான் அவர் தயவு கிடைக்கிறது. (சிரிப்பு).

**திரு. ஜே. ஜேம்ஸ் :** செய்ய வேண்டிய மரியாதை என்றால் என்ன என்பதை உறுப்பினர் விளக்கமாகச் சொல்வாரா?

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** மரியாதை என்றால் போய் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகப் பார்ப்பது அவர்களைவிட நானும் ஜாக்கிரதையாகத்தானே பேசி வருகிறேன் விவசாயி சாகுபடி வேலைகளைக் கவனிப்பாரா? அதிகாரிகளைப் போய் பார்த்துப் பார்த்து வந்துகொண்டிருப்பாரா? ஆகவே டெபனெட் இன்ஸ்ட்ரக்ஷன் இருக்கவேண்டும். பயிர் தீய்ந்துவிட்டது என்று விவசாயி

மனு ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பினால் பதினைந்து தினங்களுக்குள் அதிகாரியே வந்து பார்த்து கணக்கை ஒப்புக்கொள்ள வழி செய்ய வேண்டும்.

அடுத்து, அக்கவுண்டிங் பற்றியும் நான் 68-இல் பேசியிருக்கிறேன். 71-இல் பேசியிருக்கிறேன். இன்கம்டாக்ஸ் எப்படி அக்கவுண்டிங் முறையில் பல ஒழுங்குகள் செய்யப்பட்டு இருக்கிறதோ அதுபோல இதிலும் செய்தால்தான் விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கும். டிஸ்க்ரிஷனரியாக இருப்பதனால் தான் பலர் கம்பௌண்டிங் செய்துவிடுகிறார்கள். ஆகவே அக்கவுண்டிங்குக்கும் வசதி செய்யப்படவேண்டும் என்று தெரிவித்து இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்பதோடு இந்தமாதிரி சலுகை கொடுத்திருப்பதைப்போற்றி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, on behalf of our party we have given an amendment, to the Bill that has been brought forward today, requesting members of the House to consider whether it is not possible to refer this Bill for eliciting public opinion. I feel that after hearing the speeches of hon. Members from various parties that no one agrees with the Bill. Even the hon. Member Thiru A. R. Subbiah Mudaliar, who was good enough on behalf of the ruling party to say that he wholeheartedly agreed with the Bill, even he had to frequently interject his speech with certain conditions which are basically found in the Bill. In other words even the hon. Member Thiru A. R. Subbiah Mudaliar does not agree with this. The hon. Member Thiru V. Krishnamoorthi totally does not agree with this Bill. The vociferous manner in which . . . .

THIRU V. KRISHNAMOORTHI: I have not offended you in anyway. I am not in the habit of offending anybody. What made you think that I have said so?

MR. DEPUTY SPEAKER: Cross talking may be avoided.

DR. H. V. HANDE: I was only saying that the vociferous manner in which Thiru V. Krishnamoorthi spoke showed that he did not agree with every clause of the Bill and the entire House



will be grateful to him for his saying like that. I would have been very happy if Mr. Krishnamoorthi defying party whip ended his speech with the words 'I am opposing the Bill'. That would have been still better. At the time of voting, we are going to press our point that this should be referred to Select Committee or for eliciting public opinion, and Mr. Krishnamoorthi will, for the arguments he had advanced, join with us. That is what we are hoping.

Thiru Krishnamoorthi was saying
'இந்த மன்றத்தில் பேசவில்லை என்றாலும் வெளியில் புரட்சி வரும் என்பதாக'
that persons, 'vivasayigal' would be forced to rise in revolution. He is absolutely right. That is my point also. This is going to affect thousands of farmers. The whole Bill is incomplete, haphazardly drafted. In fact how did this Bill come here? What is the origin? It came because of the 'vivasaya poratta kuzhu' which met the Hon. Chief Minister. The Hon. Minister for Revenue and Hon. Law Minister were there. It was in that conference when 3 or 4 subjects out of the 11 demands of Farmers' Agitation, was discussed that the Hon. Chief Minister gave an assurance that he will consider our demand and bring forward suitable amendment. That was the assurance given by the Hon. Chief Minister. Based on that, as a result of that, this particular Bill has now come.

I want this Bill to be brought forward in such a manner that will satisfy various parties who worked for the farmers' agitation. I am particular about it. Within 48 hours I find Government had moved so many amendments. I appreciate some amendments. That shows that Government was not clear yesterday and today some thinking had come. Clarity of thinking had come to Government today. That is evident from the amendments that had been brought now. So if this Bill is referred to Select Committee or referred to public opinion, there will be some more time and there could be more clarity of thinking and we could have a more clear and comprehensive Bill. As it is I find that the departmental machinery that has drafted the Bill had done it in a haphazard manner. Nothing is clear. There is utter confusion. The manner

in which Thiru Krishnamoorthi spoke shows that the Bill is not clear in many respects. That is why I say let it be referred to a Select Committee or for eliciting public opinion.

Now, Sir, I want to stress that this does not take place. I can assure the House that I am not for any 'porattam'. But what would happen? There would be discontentment in several districts and particularly in North Arcot, South Arcot and Madurai districts.

So far as the plantations in the hilly areas are concerned, about three months back I had been to pannaikadu where I met several members of the D.M.K. Party, as also members of other parties.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் நேரத்தை நீடித்து இந்த மசோதாவை முடித்து விடலாம் என்று கருதுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I make one submission? Many Members are desirous of making speeches on this important Bill. It is better that the House adjourns now and meets again tomorrow.

MR. DEPUTY SPEAKER : The Members of almost all the Parties have spoken on this Bill. In another 15 minutes we can finish the Bill. (குறுக்கீடு). நாளைக்கு இன்னும் 2, 3 மசோதாக்கள் இருக்கின்றன.

THIRU R. PONNAPPA NADAR : Most of the other Bills will be referred to the Select Committee and that is what I learn. Especially the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, will have to be referred to the Select Committee. So it is better that we rise for lunch and meet again tomorrow.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Let the hon. Member, Dr. Hande complete his speech and then we can adjourn.

THIRU R. PONNAPPA NADAR : If further consideration of the Bill is to take place tomorrow, it is better that we adjourn now.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிகின்றன. டாக்டர் ஹாண்டே தொடர்ந்து நாளை பேசலாம். நாளைக் காலை 9-00 மணியளவில் பேரவை, மீண்டும் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.*

## (7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A Statutory Rules and Orders.

267. @ Notification issued with G.O. Ms. No. 1677, Home, dated the 23rd June 1972, in regard to exemption from payment of tax in respect of the Ambulance Van belonging to St. John Ambulance Association (India) Tamil Nadu State Centre, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

268. Notification issued with G.O. Ms. No. 1479, Home, dated the 30th May 1972, in regard to exemption from payment of tax in respect of a lorry bearing registration number M.D.K. 3208 and Motor Cycle bearing registration number M.S.M. 2361 belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

269. Notification issued with G.O. Ms. No. 124, Home, dated the 13th January 1972, in regard to grace time for the payment of tax in respect of stage carriages and Public Carriers for the quarter ending 31st March 1972. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

270. Notification issued with G.O. Ms. No. 131, Excise and Prohibition, dated the 5th May 1972, in regard to exemption from payment of excise duty for 120 bottles of rum offered by D.C. Johar

[Dr. H. V. Hande] [1972 ஆகஸ்ட் 24

in which Thiru Krishnamoorthi spoke shows that the Bill is not clear in many respects. That is why I say let it be referred to a Select Committee or for eliciting public opinion.

Now, Sir, I want to stress that this does not take place. I can assure the House that I am not for any 'porattam'. But what would happen? There would be discontentment in several districts and particularly in North Arcot, South Arcot and Madurai districts.

So far as the plantations in the hilly areas are concerned, about three months back I had been to pannaikadu where I met several members of the D.M.K. Party, as also members of other parties.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் நேரத்தை நீடித்து இந்த மசோதாவை முடித்து விடலாம் என்று கருதுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I make one submission? Many Members are desirous of making speeches on this important Bill. It is better that the House adjourns now and meets again tomorrow.

MR. DEPUTY SPEAKER : The Members of almost all the Parties have spoken on this Bill. In another 15 minutes we can finish the Bill. (குறுக்கீடு). நாளைக்கு இன்னும் 2, 3 மசோதாக்கள் இருக்கின்றன.

THIRU R. PONNAPPA NADAR : Most of the other Bills will be referred to the Select Committee and that is what I learn. Especially the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, will have to be referred to the Select Committee. So it is better that we rise for lunch and meet again tomorrow.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Let the hon. Member, Dr. Hande complete his speech and then we can adjourn.

THIRU R. PONNAPPA NADAR : If further consideration of the Bill is to take place tomorrow, it is better that we adjourn now.



1972 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் முடிகின்றன. டாக்டர் ஹாண்டே தொடர்ந்து நாளை பேசலாம். நாளைக் காலை 9-00 மணியளவில் பேரவை, மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

## (7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A Statutory Rules and Orders.*

267. @ Notification issued with G.O. Ms. No. 1677, Home, dated the 23rd June 1972, in regard to exemption from payment of tax in respect of the Ambulance Van belonging to St. John Ambulance Association (India) Tamil Nadu State Centre, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

268. Notification issued with G.O. Ms. No. 1479, Home, dated the 30th May 1972, in regard to exemption from payment of tax in respect of a lorry bearing registration number M.D.K. 3208 and Motor Cycle bearing registration number M.S.M. 2361 belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

269. Notification issued with G.O. Ms. No. 124, Home, dated the 13th January 1972, in regard to grace time for the payment of tax in respect of stage carriages and Public Carriers for the quarter ending 31st March 1972. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

270. Notification issued with G.O. Ms. No. 131, Excise and Prohibition, dated the 5th May 1972, in regard to exemption from payment of excise duty for 120 bottles of rum offered by D.C. Johar

and Sons Private Limited, Coimbatore, after import from Khoday Industries Private Limited, Bangalore for the use of the Jawans in the battle-field. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

## *B. Reports, Notifications and Other Papers*

93.@ Notification issued with G.O. Ms. No. 2069, Revenue, dated the 21st July 1972, in regard to remission of stamp duty in respect of mortgage of house for the loan obtained from Government by Thiru N. Venugopalan, formerly permanent Assistant, Public Works Department and now working in the Tamil Nadu Electricity Board.

94. @ Notification issued with G.O. Ms. No. 2080, Revenue, dated the 22nd July 1972, in regard to remission of stamp duty chargeable in respect of the gift deed in favour of the Government of Tamil Nadu for Government Arts College for men at Udumalpet, Coimbatore district.

95. Notification issued with G.O. Ms. No. 2033, Revenue, dated the 14th July 1972, in regard to remission of stamp duty in respect of the agreements and security bonds to be executed by the Government Servants working in Tamil Nadu Small Industries Corporation Limited, Madras on foreign service terms for celebration of marriages.

96. £ The Tamil Nadu Agricultural Income-tax (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 37 of 1972).

97. £ The Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1972 (L.A. Bill No. 38 of 1972).

98. £ The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1972 (L.A. Bill No. 41 of 1972).

---

@ Laid on the Table of the House on 23rd August 1972.

£ Despatched to Members on 22nd August 1972.



### இணைப்பு-1

[255-ம் பக்கத்தில் 300-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

18—12—1971-ல் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மேற்கொண்ட முடிவுகள் பின்வருமாறு :—

1. டிசம்பர் மாதம் 26-ம் நாளை "வங்காள தேச விடுதலை விழா, இந்தியப் பாதுகாப்பு நாளாக"க் கொண்டாடவும். அப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அமைச்சர் பங்கு கொள்வார். பொதுக் கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஏற்பாடு செய்வதோடு இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு அனுப்புதல்.

2. தேசியப் பாதுகாப்பு உதவிக்காக மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள், தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், சமூக நல அமைப்புகளின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், நலப்பணியாளர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழுக்களை மாவட்ட அளவில் அமைத்தல்.

3. தேசியப் பாதுகாப்பு நிதிக்கு சிறப்புப் பரிசுச் சீட்டுகள் விற்பதன் மூலமும், பெரிய தொழிலதிபர்கள், உழவர்கள், வணிகர்களிடமிருந்தும், அவர்களைச் சார்ந்த நிறுவனங்களிடமிருந்தும் நன்கொடைகள், அன்பளிப்புக்கள் வாங்குவதன் மூலமும் உண்டியல்கள் மூலமாகவும் நிதி திரட்டுதல்.

4. நன்கொடைகளுக்கு ரசீது வழங்கியும், வசூல் செய்த தொகைகளுக்குச் சரியான கணக்கு வைத்துக் கொள்வதில் கண்டிப்பான நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்றும் வலியுறுத்துதல்.

5. மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட குழுக்களின் உறுப்பினர்கள், இராணுவ வீரர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் கூறி அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும், உதவிகளையும் நல்குதல்.

[1972 ஆகஸ்ட் 24

6. தேசியப் பாதுகாப்பு தொடர்பான பணியைக் கவனித்துக் கொள்ள ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் கூடுதலான ஓர் உதவியாளரை நியமிக்க அனுமதி வழங்குதல்.

7. இன்றியமையாப் பொருள்களைப் பதுக்குவது, பொருள் களின் விலையேற்றம் முதலியவற்றைத் தடுத்தல், சர்க்கரை பகிர்ந் தளிப்பதற்காக அட்டைகளை வழங்குதல்.

*Decisions taken at the Collector's Conference held on 18th December 1971.*

1. To celebrate the 26th December as" வங்காள தேச விடுதலை விழா இந்தியப் பாதுகாப்பு நாள் and to organise public meetings, processions by the Collectors with one Minister participating in the functions in each district and inviting representatives of the Political Parties to take part in the district functions.

2. To constitute District Level Committees for National Defence Aid with Collector as Chairman and M.Ps., M.L.As., M.L.Cs. and also select Panchayat Union Chairman, select representatives of Social Welfare Organisations, Welfare workers, Industrialists, businessmen and representatives of political parties as members.

3. To raise National Defence Fund by sale of special raffles and by Collection of donation and contribution from affluent industrialists, farmers, businessmen, Commercial men and related organisations and also through hundis.

4. To issue receipts for donations and to ensure strict observance of procedure in the collection of amounts and accounting.

5. To provide amenities to the families of the Jawans by the members of the District Committee by meeting families of Jawans offering them solace and rendering such assistance as may be required.

6. To sanction additional staff of one Assistant in each collectorate to attend to items of work concerning National Defence and

7. To guard against possible hoarding and hiking of prices of essential articles, to issue ration cards for distribution of sugar.



1972 ஆகஸ்ட் 24]

## இணைப்பு—2

256-ஆம் பக்கத்தில் 301-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

### நகரில் அகலப்படுத்தப்பட்ட சாலைகள்

1. கிரீம்ஸ் சாலை.
2. பேசின் பாலச் சாலை.
3. தங்கசாலை தெரு (பகுதி).
4. இராஜா அண்ணாமலை செட்டியார் சாலை.
5. கங்கா தீஸ்வரர் கோவில் தெரு.
6. எலியட்ஸ் கடற்கரை சாலை.
7. நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை (பகுதி).
8. சர். தியாகராய சாலை (பகுதி).
9. ராஜ் பவனம் சாலை.
10. சர். முகமது உஸ்மான் சாலை.
11. பலகை வாராவதி சாலை.
12. கத்திட்ரல் சாலை.
13. எட்வர்ட் எலியட்ஸ் சாலை.
14. ஆற்காடு சாலை.
15. திருவொற்றியூர் நெடுஞ்சாலை, கோட்டம் 21, 22 மற்றும் 23.
16. மணலி சாலை, கோட்டம் 21.
17. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, கோட்டம் 39.
18. மூர். அங்காடி சாலை, 40-வது கோட்டம்.
19. கான்ட்ஸ் சாலை, 45-வது கோட்டம்.
20. பெரம்பூர் நெடுஞ்சாலை, 45-வது கோட்டம்.
21. மாதவரம் நெடுஞ்சாலை, 43-வது கோட்டம்.
22. மூர்த்திங்க ஐயர் தெரு, 41-வது கோட்டம்.
23. கொன்னூர் நெடுஞ்சாலை, 44-வது கோட்டம்.

[1972 ஆகஸ்ட் 24

24. டாங்க் பண்ட் சாலை, 44-வது கோட்டம்.
25. ஸ்டீபன்ஸன் சாலை, 45-வது கோட்டம்.
26. பேரகிப்பாளையம் மெயின் தெரு, 48-வது கோட்டம்.
27. பேசின் யானை கவுனி சாலை, 50-வது கோட்டம்.
28. டிமெலோஸ் சாலை, 50-வது கோட்டம்.
29. ஸ்ட்ராஹன்ஸ் சாலை, 45-வது கோட்டம்.
30. சட்டண்ண நாயக்கன் தெரு, 50-வது கோட்டம்.
31. பேப்பர் மில்ஸ் சாலை, 53-வது கோட்டம்.
32. சிமெட்ரி சாலை, 61-வது கோட்டம்.
33. 1-வது மெயின் சாலை (மேற்கு), 61-வது கோட்டம்.
34. 3-வது மெயின் சாலை (மேற்கு), 61-வது கோட்டம்.
35. கஜபதி நாயுடு தெரு, 62-வது கோட்டம்.
36. கிளப் சாலை (கிழக்கு), 62-வது கோட்டம்.
37. சுப்பராய கிராமணி தெரு, 62-வது கோட்டம்.
38. வெங்கடேச முதலி தெரு, 62-வது கோட்டம்.
39. டாங்க் பண்ட் சாலை, 63-வது கோட்டம்.
40. ஸ்டர்லிங் சாலை, 63-வது கோட்டம்.
41. வில்லேஜ் சாலை, 63-வது கோட்டம்.
42. மெச்நிக்கல்ஸ் சாலை, 63-வது கோட்டம்.
43. ஹாரிங்டன் சாலை, 63-வது கோட்டம்.
44. ஹார்லேஸ் சாலை, 64-வது கோட்டம்.
45. ஆர்மெஸ் சாலை, 64-வது கோட்டம்.
46. மில்லர்ஸ் சாலை, 64-வது கோட்டம்.
47. பால்பர் சாலை, 64-வது கோட்டம்.



1972 ஆகஸ்ட் 24]

48. புரசைவாக்கம் நெடுஞ்சாலை, 64-வது கோட்டம்.
49. ஸ்பர்டாங்க் சாலை, 65-வது கோட்டம்.
50. ரண்டால்ஸ் சாலை, 67-வது கோட்டம்.
51. பாந்தியன் சாலை, 68-வது கோட்டம்.
52. கெங்கு ரெட்டி சாலை, 68-வது கோட்டம்.
53. காந்தி இர்வின் சாலை, 68-வது கோட்டம்.
54. லாங்ஸ் தோட்டச் சாலை, 69, 70 கோட்டங்கள்.
55. கமாண்டர்-இன்-சீப்-சாலை, 69-வது கோட்டம்.
56. தெற்கு கூவம் ஆறு சாலை, 70-வது கோட்டம்.
57. கல்லூரி சாலை, 71-வது கோட்டம்.
58. கான்ரன் ஸ்மித் சாலை, 72-வது கோட்டம்.
59. திரு. வி. க. சாலை, 72-வது கோட்டம்.
60. பைகிராப்ட்ஸ் சாலை, 73-வது கோட்டம்.
61. லாயிட்ஸ் சாலை, 79-வது கோட்டம்.
62. பிளாக்கர்ஸ் சாலை, 83-வது கோட்டம்.
63. சிங்கண்ண செட்டித் தெரு, 83-வது கோட்டம்.
64. பாடி கார்டு சாலை, 84-வது கோட்டம்.
65. டாக்டர் பெசண்ட் சாலை, 90-வது கோட்டம்.
66. இராயப்பேட்டை நெடுஞ்சாலை, 91-வது கோட்டம்.
67. பிரசன்ன விநாயகர் கோயில் தெரு, 93-வது கோட்டம்.
68. சாந்தோம் நெடுஞ்சாலை, 93-வது கோட்டம்.
69. இராமகிருஷ்ணமடம் சாலை, வெங்கடகிருஷ்ண ஐயர் சாலை, முதல் பாலம் வரை, 98-வது கோட்டம்.
70. கிரீன்வேஸ்சாலை, 99-வது கோட்டம்.
71. தெற்கு கால்வாய் கரை சாலை, 99-வது கோட்டம்.

72. மாதாகோயில் சாலை, 99-வது கோட்டம்.

73. பலகை வாராவதி சாலை, 100-வது கோட்டம்.

74. கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, 101, 102-வது கோட்டங்கள்.

75. பெரியார் சாலை, 102-வது கோட்டம்.

76. சிவசைலம் பிள்ளை சாலை, 102-வது கோட்டம்.

77. அருளாம்பாள் தெரு, 102-வது கோட்டம்.

78. சாரங்கபாணி தெரு, 102-வது கோட்டம்.

79. பஸ்லுல்லா சாலை, 103-வது வட்டம்.

80. வெங்கடநாராயண சாலை, 105-வது கோட்டம்.

81. நாகேஸ்வரராவ் சாலை, 105-வது கோட்டம்.

82. கோபாலகிருஷ்ண சாலை, 105-வது கோட்டம்.

83. முத்துரங்கம் தெரு, 106-வது கோட்டம்.

84. பஜார் சாலை, 107-வது கோட்டம்.

85. கெனல் பேங்க் சாலை, 108-வது கோட்டம்.

86. சி. ஐ. டி. நகர் 4-வது மெயின் சாலை, 108-வது கோட்டம்.

87. ஆர்ச் சாலை (நந்தனம் 6-வது தெரு) மவுண்ட்சாலையிலிருந்து, 109-வது கோட்டம்.

88. வெங்கடநாராயண சாலை.

89. நெல்சன் மாணிக்க முதலியார் சாலை, 111-வது கோட்டம்.

90. அமைந்தகரை பாட்டை, 111-வது கோட்டம்.

91. ஆரிய கௌடர் சாலை, 115-வது கோட்டம்.

92. தம்பையா ரெட்டி தெரு, 116-வது கோட்டம். நெடுவழித் துறையினரால் அகலப்படுத்தப்பட்டது.

93. தாலுக்கா அலுவலக சாலை, 119-வது கோட்டம்.

94. மவுண்ட் சாலை, 119-வது கோட்டம்.



இணைப்பு 3.

[274-ம் பக்கத்தில் 317-ஆம் எண்ணுள்ள வெளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

STATEMENT SHOWING THE CO-OPERATIVE FARMING SOCIETIES WORKING IN THANJAVUR DISTRICT AS ON 31ST DECEMBER 1971.

| Serial number. (1) | Name of the Tenant Farming Societies. (2) | Extent of Land held or pooled. (3) ACRES. | Extent of land under cultivation. (4) ACRES. | Number of members. (5) | Paid up share capital. (6) RS. |
|---|---|---|---|---|---|
| | Mayuram Circle.— | | | | |
| 1. | Sembanarkoil Tenant Farming Co-operative Society .. | 95·72 | 95·72 | 33 | 696 |
| 2. | Maruvathur .. ,, | 130·94 | 130·94 | 93 | 1,170 |
| 3. | Vadarengam .. ,, | 119·68 | 119·68 | 58 | 901 |
| 4. | Kuttalam .. ,, | 114·86 | 114·86 | 47 | 1,390 |
| 5. | Vedapureeswarar .. ,, | 42·51 | 42·51 | 23 | 420 |
| 6. | Annuruvi Perumal .. ,, | 80·66 | 80·66 | 57 | 910 |

| Serial number. (1) | Name of the Tenant Farming Societies. (3) | Extent of Land held or pooled. (3) ACRES. | Extent of land under cultivation. (4) ACRES. | Number of members. (5) | Paid up share capital. (6) RS. |
|---|---|---|---|---|---|
| | **Kumbakonam Circle.—** | | | | |
| 7. | Araseri Farming Co-operative Society .. .. .. | 132·28 | 132·28 | 49 | 1,185 |
| 8. | Koilramapuram .. ,, | 125·05 | 125·05 | 6'' | 853 |
| 9. | Serukadambur .. ,, | 170·24 | 170·24 | 70 | 895 |
| 10. | Tirucerai .. .. ,, | 56·62 | 56·62 | 35 | 483 |
| 11. | Tirunaraiyur .. ,, | 55·11 | 55·11 | 28 | 430 |
| 12. | Uthamalthani .. ,, | 33·25 | 31·13 | 23 | 350 |
| 13. | Mariammankoil .. ,, | 256·00 | 233·00 | 132 | 1,400 |
| 14. | Kathirinatham .. ,, | 54·86 | 54·86 | 53 | 645 |
| 15. | Kottaiyur .. ,, | 30·27 | 30·27 | 11 | 180 |
| 16. | Manickamangalam Tenent Co-operative Farming Society .. | 37·91 | 37·91 | 14 | 571 |
| 17. | Aravoor .. .. ,, | 173·56 | 157·00 | 43 | 3,188 |
| 18. | Tirupanandal .. ,, | 77·73 | 77·73 | 28 | 405 |
| 19. | Vilathur .. .. ,, | 60·00 | 60·00 | 34 | 480 |
| | **Tiruvarur Circle.—** | | | | |
| 20. | Tiruppugaloor Tenant Farming Society .. .. .. | 1,069·45 | 1,069·45 | 450 | 8,178 |
| 21. | Melaramansethi .. ,, | 224·90 | 224·90 | 89 | 2,072 |
| 22. | Tirukkanamangai .. ,, | 108·90 | 108·90 | 47 | 1,210 |
| 23. | Tirukkannangudi .. ,, | 133·56 | 133·56 | 55 | 675 |
| 24. | Kallikkudi .. ,, | 88·88 | 88·88 | 32 | 490 |
| 25. | Vallamangalam .. ,, | 36·89 | 36·89 | 24 | 282 |
| 26. | Nattiruppu .. ,, | 238·28 | 238·28 | 68 | 1,000 |
| 27. | Sembianmadevi .. ,, | 273·03 | 273·03 | 95 | 1,172 |
| 28. | Purasathangudi .. ,, | 35·80 | 35·80 | 11 | 166 |
| | **Mannargudi Circle.—** | | | | |
| 29. | Pamini Tenant Farming Society .. .. .. .. | 67·28 | 67·28 | 21 | 559 |
| 30. | Poovanur .. .. ,, | 71·02 | 71·02 | 38 | 633 |
| 31. | Nemmeli .. .. ,, | 68·88 | 68·88 | 21 | 615 |
| 32. | Vaiyakalathur Tenant Farming Co-operative Society .. | 40·90 | 40·90 | 27 | 434 |
| 33. | Ariyaloor .. ,, | 70·14 | 70·14 | 36 | 520 |
| 34. | Thillaivilagam .. ,, | 64·03 | 64·03 | 39 | 630 |
| 35. | Sithamalli .. ,, | 50·04 | 50·04 | 22 | 786 |
| 36. | Ottagudi .. .. ,, | 94·11 | 94·11 | 41 | 821 |
| 37. | Muleripuram .. ,, | 92·47 | 92·47 | 19 | 653 |
| 38. | Brahanayamki .. ,, | 45·00 | 45·00 | 21 | 377 |

| | | | | |
|---|---|---|---|---|
| 39. Alathambadi .. | 30·24 | 30·24 | 50 | 500 |
| 40. Tiruthangoor .. | 75·52 | 75·52 | 53 | 437 |
| 41. Tirunellikkaval .. | 226·56 | 226·56 | 50 | 1,147 |
| 42 Tirukkollikadu .. | 80·42 | 80·42 | 24 | 384 |
| 43. Panniapothu .. | 248·77 | 248·77 | 88 | 1,289 |
| 44. Kariapattinam .. | 72·97 | 72·97 | 27 | 243 |
| 45. Andarkadu .. | 150·00 | 150·0 | 127 | 2,555 |
| 45. Thirumaraikkadar .. | 220·00 | 220·00 | 80 | 960 |
| 47. Panneermahialpuram .. | 198·00 | 198·00 | 111 | 1,110 |
| Thanjavur Circle— | | | | |
| 48. Sakkarasamanadam .. | 39·42 | 39·42 | 20 | 933 |
| 49. Mela Tirupanthwithi .. | 106·00 | 106·00 | 57 | 1,110 |
| Pudukottai Circle— | | | | |
| 50. Pudukkottagom .. | 110·93 | 110·93 | 27 | 1,156 |
| Total .. | 6,237·64 | 6,237·96 | 2,761 | 49,697 |

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

### வெள்ளிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 25.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள் விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

#### ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் கொள்முதல் செய்யும் நெல்.

*1 குறுகிய கால வினா: திரு. க. நாகராஜன் } திரு. கே. டி. கே. தங்கமணி : } மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஈ.ஐ.டி. பாரி நிறுவனம் இம்மாநிலத்தில் பயன்படுத்துவதற்காக விதை நெல்லுக்கான நெல் கொள்முதல் செய்கிறதா ?

(இ) அந்த நெல்லில் பெரும் பகுதி அண்டை மாநிலங்களிலுள்ள அதன் கிளைகளுக்கு அனுப்பப்படுவது உண்மையா ?

(உ) ஆமெனில், அதைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) 1968–69, 1969–70, ஆண்டுகளில் பாரி நிறுவனம் கொள்முதல் செய்த மொத்த விதைகளை தமிழ் நாட்டிலேயே விற்பனை செய்தனர். 1970–71-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் 294 டன் விதைகளும், பிற மாநிலங்களில் 23 டன் விதைகளும் விற்கப்பட்டன. 1971–72-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் 287 டன் விதைகளும், பிற மாநிலங்களில் 635 டன் விதைகளும் விற்கப்பட்டன. 1972–73-ம் ஆண்டு துவக்கத்தில் கையிருப்பு 458 டன் விதைகளாகும். மொத்தக் கையிருப்பு விதைகளை இம்மாநிலத்தில் வழங்குவதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(இ) தகுதிசான்றுள்ள விதைகளை இந்தியத் துணைக் கண்டத்தில் எந்தப் பகுதிக்கும் எடுத்துச் செல்வது பற்றித் தடை ஏதும் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற ஆண்டு பாரி கம்பெனியாருக்குக் கொடுத்திருந்த நெல் விதைகளில் பெரும் பகுதி வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அம்மாதிரி, இவ்வாண்டு 458 டன் இருக்கிறதென்றால், அதில் பெரும் பகுதியைத் தமிழ் நாட்டில் உபயோகப்படுத்த வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இந்திய அரசின் ஆணைப்படி சர்ட்டிஃபைட் ஸீட்ஸ் எடுத்துக்கொண்டுபோவதைத் தடை விதிக்க முடியாது. 1971-72-ஆம் ஆண்டில் 287 டன் தமிழ் நாட்டில் விற்றிருக்கிறார்கள். வெளி மாநிலங்களுக்கு, 635 டன் விதைகளை அனுப்பியிருக்கிறார்கள். 1972-73-ம் ஆண்டு துவக்கத்தில், சென்ற ஆண்டு "கேரிஓவர்" ஆக 458 டன் விதைகள் வைத்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, இந்திய அரசின் ஆணைப்படி இந்த "சர்ட்டிஃபைட்" ஸீட்களை அனுப்ப நாம் ஒன்றும் தடை விதிக்க முடியாது.

திரு க. நாகராஜன் : இவ்வாறு அனுப்பப்படுகின்ற நெல் விதைகள் உணவுக்காக அங்கிருந்து விற்கப்படுகிறதா அல்லது, விதைக்காகவே பயன்படுத்தப்படுகின்றனவா என்று அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. எஞ்சியிருக்கும் விதைகளை வெளி மாநிலங்களில் விற்பதற்கு முன்னால், இந்த அரசின் ஒப்புதலைப் பெற்றுதான் வெளி மாநிலங்களில் விற்கவேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இந்த மாநிலத்தில்தான் விற்கவேண்டும் என்று நாம் வலியுறுத்த முடியாது. இந்த விதை நெல்லை உணவுக்காகப் பயன்படுத்த முடியாது. ஏனென்றால், இது விதைக்காகவே பக்குவப்படுத்தப்படுகிற (ப்ராஸெஸ் செய்யப்படுகிற) காரணத்தால் "இட் இஸ் அன்ஃபிட் ஃபார் ஹ்யூமன் கன்ஸம்ஷன்" என்று சொல்லப்படுகிறது. இதை விதைக்காகத்தான் பயன்படுத்த முடியும், உணவுக்காகப் பயன்படுத்த முடியாது என்றுதான் எனக்கு இருக்கும் தகவலிலிருந்து தெரிகிறது.

திரு. நா. வீராசாமி : இதுபோன்று விதை நெல் நம்முடைய மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதைப் போல, மற்ற மாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றதா ? அதை யார் இங்கே கொண்டுவந்து விற்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்து அளிக்கிறேன்.

## Institute of Film Technology

* 326 Q—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the facilities available to the students of the Institute of Film Technology, Adyar, Madras to prosecute their studies ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது குறித்து அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு என். டென்னிஸ் : துணைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்புக் கேற்றவாறு கல்வி முறை வகுக்கப்பட்டிருக்கிறதா ? அவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனரா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேலை வாய்ப்புக் கேற்றவாறு தான் கல்வி முறை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்வியைப் பெற்றவர்கள் பெரும்பாலும் வேலை வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் தகவல் வந்திருக்கிறது.

திரு கோவை செழியன் : துணைத் தலைவர் அவர்களே, சென்னை—அடையாறிலுள்ள இந்தத் தொழில் நுட்பக் கல்லூரியில் மற்ற தொழில் நுட்பங்கள் சம்பந்தமான எல்லாப் பாடங்களையும் சொல்லித் தருகிறார்கள். ஆனால், பூனாவில் இருப்பதைப்போல் நடிப்பதற்கான பாட முறை அதில் இல்லை. பூனாவைப் பின்பற்றி நம்முடைய தொழில்நுட்பக் கல்லூரியிலும் அந்தப் பாடங்கள் சொல்லித்தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது நடிப்பதற்கான பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

THIRU K.S. KOTHANDARAMIAH : What is the mininum qualification required for entry into this Institute of Film Technology ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதிலே சினிமா நிழற் படம் எடுத்தல், ஒலிப் பதிவு, படம் கழுவுதல் ஆகியவற்றுக்கு பி.யு.சி. தேர்வு அடைந்திருக்க வேண்டும். படத் தொகுப்புக்கு பி.யு.சி. படித்திருக்க வேண்டும். பயிற்சிக்காலம் இரண்டாண்டுகள். நடிப்புக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும். பயிற்சிக்காலம் இரண்டாண்டுகள். படம் இயக்குதல், திரைக் கதை வசனம் எழுதுதல் ஆகியவற்றுக்குக் கல்லூரிப் படிப்பு முடித்திருக்க வேண்டும். பயிற்சி காலம் மூன்று ஆண்டுகள்.

திரு செ. கந்தப்பன் : மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் பெருமளவுக்குச் செலவிட்டு பூனாவிலிருக்கும் அந்தப் பயிற்சி நிறுவனத்தை நடத்திக் கொண்டு வருகிறது. அதேபோன்று குழந்தைகள் புத்தகங்கள் வெளியீட்டு நிறுவனம், குழந்தைகளுக்குப் படங்கள் தயாரிக்கின்ற நிறுவனம் போன்று மத்திய அரசின் சார்பில் ஆரம்பிக்கப்படுகிற ஒவ்வொன்றும் இந்தி பேசுவோருக்கே பயன்படுவனவாக அமைந்திருக்கின்றன. அந்த வகையில் மத்திய அரசிடம் வலியுறுத்தி நம்முடைய தமிழ் இயக்குநர்கள். தமிழ்ப் படத் துறையில் இருப்பவர்கள், பயன்பெறும் வகையில் அரசு உதவி பெற முன்வருமா ?

@ 525–526-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையைக் கருத்திற் கொண்டு மத்திய அரசின் உதவியைப் பெற நாம் வற்புறுத்தலாம்.

திரு. எ. பி. நரசிம்மன் : தமிழ்நாட்டில் கடந்த 25 ஆண்டுக் காலமாக பார்த்த நடிகர்களை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். புதிய நடிகர்களை நாம் பார்ப்பதில்லை. ஆனால், இந்திப் படங்களைப் பொறுத்த வரையில், பூனாவில் புதிய நடிகர்களைத் தயாரித்து அவைகள் படங்களை வெளியிட்டு, அந்தப் படங்கள் சிறந்த படங்களாகவும் இருக்கின்றன. அத்தகைய முறையில் சிறந்த படங்களை அடையாறிலுள்ள நம்முடைய இன்ஸ்டிட்யூட்டின் மூலமாக புதிய நடிகர்களை—புதிய முகங்களை—வைத்து புதிய படங்களை எடுக்க அரசு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புதிய நடிகர்கள் வரவேண்டும் என்பதற்காகத்தான் இப்பொழுது இந்தத் தொழில் நுட்பக் கல்லூரியில் நடிப்புப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. புதிய நடிகர்கள், உறுப்பினர் அவர்களுடைய ஆவலை நிறைவேற்றுகின்ற வகையில், விரைவில் வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுப்பது போன்று கேள்வி கேட்கக் கூடாது. ஸ்டேட்மெண்டோடு கேள்வியை ஆரம்பித்தால் அதை நான் தடை செய்ய வேண்டியிருக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஒவ்வொர் ஆண்டும் இந்தத் தொழில் நுட்பக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற விவரம் அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த ஆண்டு சேர்க்கப்பட்டவர்கள் மொத்தமாக 41 மாணவர்கள். ஒவ்வோர் ஆண்டும் பத்துப் பதினைந்து பேர்கள் பயிற்சிபெற்றுப் பட்டம் பெறுகிறார்கள். இப்பொழுது மொத்தமாகப் பயிற்சி பெறுகிறவர்கள் 102 பேர்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பூனா நிறுவனத்தில் பயிற்சி பெறக் கூடியவர்களுக்குப் பட்டம் அளிப்பதுபோல் அடையாறில் பயிற்சி பெறுகிறவர்களுக்குப் பட்டங்கள் அளிக்கப்படுகின்றனவா ? அப்படியானால் இது வரை எத்தனை பேர் பட்டம் பெற்றிருக்கின்றனர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுக்கு டிப்ளமா வழங்கப்படுகிறது. எத்தனை பேர் என்று தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : இந்தத் தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரியில் படித்தவர்கள் யாராவது இதுவரை திரைப்படத்தில் நடித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தகவல் இல்லை. ஆனால், நிழற்படம் எடுப்பது, ஒளிப்பதிவு செய்தல், படம் கழுவுதல், படத் தொகுப்பு போன்ற பணிகளில் பயிற்சி பெற்றவர்கள் திரைப்படத் தொழிலில் இப்பொழுது ஈடுபட்டு செல்வாக்கோடு இருக்கிறார்கள் என்கிற தகவல் இருக்கிறது.

திரு. எம். முத்தையா : தொழில் நுட்பக் கல்லூரியில் பயிலுகிறவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த ஆண்டு சேர்க்கப்பட்டவர்கள் மொத்தம் 41 மாணவர்கள். ஒவ்வோர் ஆண்டும் பத்துப் பதினைந்து பேர்கள்தான் அதில் பயிற்சிபெற்றுப் பட்டம் பெறுகிறார்கள். இந்த ஆண்டு சேர்க்கப்பட்ட 41 பேர்களில் ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவர்களும், பாக்வார்டு க்ளாஸைச் சேர்ந்தவர்களும் 14 பேர்கள். பார்வேர்டு க்ளாஸைச் சேர்ந்தவர்கள் 17. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஐவர். கேரளாவைச் சேர்ந்தவர்கள் 2.

திரு. நா. வீராசாமி : இந்த ஆண்டு 41 மாணவர்கள் சேர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். எல்லோருமே மாணவர்களாக இருக்கிறார்கள். நடிப்பில் பெண்களும் வந்தால்தான் நடிப்புத் தொழிலில் அவர்களுக்கும் அதிகமான வேலை வாய்ப்பு கிடைக்கும். எனவே, பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லையென்றால் இனியாவது சேர்த்துக்கொண்டு பயிற்சி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியொரு யோசனை தெரிவிக்கப்பட்டது. முதலில் நடிகர்கள் பயிற்சி மாத்திரம் நடைபெறட்டும், நடிகைகள் பயிற்சியை பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது.

## நாடக அரங்குகள்.

* 327. வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாடக அரங்குகளை நாட்டுடைமை ஆக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. அ. தேவேந்திரன் : மாம்பலம், மைலாப்பூர் போன்ற இடங்களில் இருக்கிற நாடக அரங்குகளில் குறிப்பாக ஒரு தனிப்பட்ட இனத்தவர்களுக்கு மட்டுமே அங்கு நாடகங்கள் நடத்த அனுமதி வழங்கப்படுவதாகக் கேள்விப்படுகிறோம். எனவே அப்படிப்பட்ட நிலைமை மாறுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது அந்த நாடக அரங்குகளுடைய உரிமையாளர்களைப் பொறுத்த விஷயம். அதில் அரசு தலையிடுவது இயலாது.

திரு. என். கிட்டப்பா : நாடக அரங்குகளை அரசாங்கமே ஏற்று நடத்த தற்போது இயலவில்லை என்றாலும் சிலரப்பா அரங்குகளையாவது அரசு ஏற்று நடத்த முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசமும் இப்போது இல்லை.

திரு. கோவை செழியன் : அரசு உதவியோடு நடத்தப்பட்டு வருகிற மியூசிக் அகாடமி அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை அப்படிக் கொண்டுவர வேண்டிய தேவை இருக்குமேயானால் அதை அரசு ஆராயும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Chief Minister whether there is any proposal to give long-term loans with low interest to the people who want to construct theatres and drama theatres ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த உத்தேசமும் இப்போது அரசாங்கத்திற்கு எதுவும் இல்லை.

## குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*328. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) துறையூர் நகரத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ரூபாய் 39.00 லட்சம் நிறுவுதல் மதிப்பீட்டுச் செலவிலும் பேணுதலுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 60,000 என்று மதிப்பீட்டுச் செலவிலும் துறையூர் குடிநீர் வழங்கும் திட்டத்தின் முதல் கட்டப் பணிக்குப் பொதுப் பணித்துறையின் 5—2—1972 ஆம் நாளிட்ட 221-ஆம் எண் அரசு ஆணையில் அரசு ஒப்பளித்தது. இத்திட்டத்தின் தூநீர் ஈர்ப்புப் பெருங் குழாய் அமைப்பதற்காக தொழில் நுட்ப அடிப்படையில் ரூபாய் 29.79 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப் பெருங் குழாய் அமைக்



கும் பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொடக்க இடப்பணிகள், நீர்ப் பகிர்வு ஏற்பாடு ஆகியவை குறித்த மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வழங்கு, கழிவு நீர் அகற்று வாரியத் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : எந்த இடத்திலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புளியஞ்சோலைக்கு அருகில் உள்ள கொல்லிமலையில் தோன்றும் ஐயாறு என்னும் ஆற்றிலிருந்து தண்ணீர் பெறப்படும்.

*329. Q.—THIRU SOWDI S. SUNDARA BHARATHY : Will the Hon. the Chief Minister be pleased to state the date on which the drinking water supply scheme for Aruppukkottai will be completed ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அருப்புக்கோட்டை குடிநீர்த் திட்டத்தின் கீழ் எல்லா வேலைகளும் முடிவடைந்து 1973-ம் ஆண்டு மார்ச்சு இறுதியிலிருந்து முறையான குடிநீர் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : இந்தத் திட்டத்தில் எல்லா வார்டுகளுக்கும் முதலிலேயே தண்ணீர் சப்ளை செய்வதாகயிருக்கிறதா ? அல்லது பையர் சர்வீஸ் ஸ்கீம் போல் குறிப்பிட்ட இடங்களில் சப்ளை செய்யக்கூடிய அளவில் முதலில் நிறைவேற்றுவதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வார்டுகளைப் பற்றிய விவரம் இல்லை. ஆனால் ஒரு நாளைக்கு 13 லட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக 1996-ல் எதிர்பார்க்கப்படும் அருப்புக்கோட்டை நகர மக்கள் 80,000 என்று கணக்கிடப்பட்டு வழியில் உள்ள சிற்றூர் மக்கள் 20,000 என்று கணக்கிடப்பட்டு, இதனால் அவர்கள் பயனடைவார்கள் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. அருப்புக் கோட்டை நகரம் தவிர வழியில் பயன் பெறும் சிற்றூர்கள் :

புல்லைக்கரை,

மடக்கான்குளம்,

சிறுகுளம்,

கரிதான்குளம், செட்டிகுளம்,

காட்டான்குடி,

கோவல்குளம், கொளத்துப்பட்டி,

பாளையம்பட்டி

ஆகிய இடங்களுக்கும் இந்தத் தண்ணீர் பயன்படுத்தப்படும்.

திரு. த. சோனையா : இந்த அருப்புக்கோட்டைக்குத் தண்ணீர்கொண்டு போகிற திட்டம் திருப்புவனத்தில் வைகை ஆற்றிலிருந்துதான் தண்ணீர் எடுக்கப்படுகிறது. ஆனால் இடையில் இருக்கிற சிற்றூர்களுக்கெல்லாம் தண்ணீர் கிடைக்கும் என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எங்கு தண்ணீர் எடுக்கிறார்களோ அந்த திருப்புவனத்தில் இந்தத் தண்ணீர் வருவதாகத் தெரியவில்லை. ஆகவே அங்கும் தண்ணீர் வர உடனடியாக ஏற்பாடு செய்வார்களா ? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில நேரங்களில் அனைவருக்கும் ஒளி தருகிற விளக்கு அதற்குக் கீழ் இருட்டைத்தான் பெற்றிருக்கிறது. அதேபோல் திருப்புவனம் நிலை இருக்கும் என்று கருதுகிறேன். முடிந்தால் ஆராயப்படும்.

### பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள்.

*330. வினா—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் போட்டியைத் தவிர்க்கவும் அப்பரிசுச் சீட்டுகள் நமது மாநிலத்தில் வந்து குவிவதைத் தடுக்கவும் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. 23–12–1971 நாளிட்ட நிதித்துறையின் (பரிசுச் சீட்டுகள் பிரிவில்) வெளியான அரசு ஆணை எண் 180-ல் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ் நாட்டிற்குள் விற்கப்படுவதற்கு 1–1–1972 முதற்கொண்டு தடை விதிக்கப்படுமென உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இந்த ஆணையை எதிர்த்து, திரு. எச். தவ்தம் சந்த் ஜெயின் என்பவரால் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. 1–1–1972 முதற்கொண்டு பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ் நாட்டிற்குள் விற்கப்படுவதைத் தடை செய்யும் 23–12–1971 நாளிட்ட 180-ம் எண்ணுள்ள அரசு ஆணை செயல்படுவது, உயர்நீதி மன்றத்தில் விசாரணையிலுள்ள 3457/1971 எண் ரிட் மனுவின் மீது முடிவெடுக்கப்படுகிற வரையில் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று உயர்நீதி மன்றம் ஆணையிட்டது.

திரு. என். டென்னிஸ் : வெளி மாநில பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்கப்படுகிற காரணத்தினால் தமிழ்நாடு பரிசுச் சீட்டுக்கள் விற்பனை பெருமளவில் மந்தமடைந்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுவும் ஓரளவு காரணம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.



திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த ரிட் சம்பந்தமாக அரசாங்கத் தரப்பிலிருந்து கௌன்டர் போட்டு இதைத் துரிதமாக பைசல் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா ? ஏனென்றால் நம் வருவாய் பாதிக்கிற தன்மை இருக்கிற காரணத்தினால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. தருமலிங்கம் : தமிழ்நாட்டு லாட்டரிச் சீட்டு எந்தெந்த மாநிலங்களில் விற்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது மராட்டியத்தில் மாத்திரம் தடை செய்திருப்பதாக தகவல். மற்ற மாநிலங்களைப் பற்றி என்னிடம் விவரம் இல்லை.

திரு. கோவை செழியன் : சமுதாயத்தில் செல்வம் ஒரு இடத்தில் குவிந்து வருவதைத் தடுப்பதற்கு சோஷலிஸ நடவடிக்கைகளை நாம் எடுக்கிறோம், ஆனால் இந்த லாட்டரிச் சீட்டுகள் மூலம் உழைக்காமல் ஒருவன் திடீரென்று லட்சாதிபதியாகிவிடுகிறான். இது சரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில நேரங்களில் படம் எடுப்பதின் மூலமாக கூட லட்சாதிபதியாகி விடுகிறார்கள். அது போல் தான் இதுவும்.

திரு. கே. ஏ. வகாப் : இப்போது இந்த பரிசுச் சீட்டுகளை பெரும்பாலும் ஏழை மக்கள்தான் அதிகமாக வாங்குகிறார்கள். அதுதான் இப்படி குறைவான வருவாய் வருவதற்கான காரணம். அதே நேரத்தில் மதுவிலக்கை ரத்து செய்ததினால் எதிர்பார்த்ததைவிட அதிக வருமானம் வருவதன் காரணமாக பரிசுச் சீட்டை தடை செய்யும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நம் மாநில பரிசுச் சீட்டை தடை செய்யும் நோக்கமுண்டா என்று கேட்கிறார்கள். நிறுத்தி வைக்கும் நோக்கம் உண்டா என்று கேட்கிறார்கள். அப்படி நோக்கம் ஒன்றும் இல்லை. ஏதோ வந்து சேரக்கூடிய ஆதாயத்தை விட்டுவிட வேண்டாம் என்றுதான் கருதுகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த ராபில்ஸ் சம்பந்தமாக மத்திய அரசு ஏதோ சட்டம் செய்யப்போவதாகச் சொல்லப்படுகிறதே, அது சம்பந்தமாக நம் அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி நமக்கு விவரமான தகவல் எதுவும் வரவில்லை. அது போல் ஒரு ஒழுங்குமுறை மத்திய அரசு சார்பில் செய்யப்படுமானால் அது வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

திரு. ப. முத்துசாமி : தற்போது இந்த லாட்டரிச் சீட்டு விற்பனையை அதிகப்படுத்தும் வகையில் தமிழக அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் அவர்கள் கேட்டதற்குச் சொன்னது போல், வெளி மாநிலங்களின் பரிசுச் சீட்டுக்கள் இங்கு அதிகமாக விற்பனையாகிறது. ஆகவே நம் பரிசுச் சீட்டு விற்பனை குறைகிறது என்பது ஓரளவிற்கு உண்மைதான். அங்கு பரிசுத் தொகையை அதிகமாக ஆக்கியிருக்கிற காரணத்தினால் அவைகளுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. அதேபோல் நாமும் பரிசுத் தொகையை அதிகமாக ஆக்கமுடியுமா என்பதை அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : பிற மாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு வந்திருக்கிற பரிசுச் சீட்டுகளில் பணமாக பரிசு கொடுப்பது போக கவர்ச்சிகரமான முறையில் கார் போன்ற பரிசுகளும் கொடுக்கப் படுகின்றன. ஆகவே நம் நாட்டுமக்கள் அவற்றை வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த வகையில் நம் மாநில பரிசுச் சீட்டுகளிலும் கவர்ச்சிகர மான பரிசுகளை, பணத்தோடு அத்தகைய பரிசுகளையும் அளிக்கக் கூடிய முறையில் மாநில அரசு அதை விரிவாக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநில பரிசுச் சீட்டுத் திட்டம் இன்னும் வெற்றிகரமாக அமைய என்னென்ன யோசிக்கப்படலாம் என்பதைப்பற்றியெல்லாம் இப்போது அரசு ஆராய்ந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கேள்வியில் நான்கில் ஒரு பங்கு இருக்கிறது பதில்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, பிற மாநிலங்களில் பரிசுச் சீட்டு விற்பனை அதிகமாக்க வேண்டுமென்பதற்காக சினிமா நடிகர்களைக் கொண்டு குலுக்கலில் எடுக்கச் செய்கிறார்கள். அதையும் நம்முடைய மாநிலத்தில் பின்பற்றி விற்பனையை அதிகமாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பரிசுச் சீட்டுக்களைக் குலுக்கும் நேரத்தில் எடுப்பதைப்பற்றி இப்பொழுது பிரச்னை எதுவுமில்லை. பரிசுச் சீட்டை வாங்குவதைப்பற்றித்தான் இப்பொழுது பிரச்னை.

திரு. கே. என். குமாரசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பரிசுச்சீட்டின் தொகை அதிகமாக இருப்பதால் யாரோ ஒருவர் இருவருக்குத் தான் அது வருகிறது. எனவே அதைக் குறைத்து வாரத்திற்கு 10,000 ரூபாய் என்ற அளவில் வாரத்திற்கு ஒரு தடவை இந்தப் பரிசுச் சீட்டைக் குலுக்குவதன் மூலம் விற்பனை அதிகமாகும் என்ற அபிப்பிராயம் அரசுக்கு இருக்கிறதா ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மற்ற மாநிலங்களிலெல்லாம் இந்தப் பரிசுகள் குறைவான தொகையுள்ள அளவு மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆனால் நம் மாநிலத்தில்தான் அதிக மாகப் பயன்பெறும் அளவில் நாம் பரிசுகளைப் பகிர்ந்து அளிக்கிறோம். அதனால்தான் அதிகத் தொகையில் கவர்ச்சியில்லாத சூழ்நிலையில் மற்ற மாநிலங்கள் பரிசுச் சீட்டுகள் இங்கு அதிகமாக விற்கப்படுகிறது. அதைத் தான் அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, பரிசு விழுந்ததற்குப் பிறகு அதற்கு வரி போட்டிருப்பதால் ஓரளவுக்கு இந்த விற்பனை பாதித்து இருக்கிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுவும் இருக்கின்ற காரணங் களில் ஒன்று.

திரு. எ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள ஒருவருக்கு காஷ்மீர் பரிசுச் சீட்டின் பரிசு விழுந்து ஒரு ஆண்டுக்கு மேலாகி யும் இன்னும் அந்தப் பரிசுப் பணம் வரவில்லை என்று ஜனாதிபதிக்கு மனுக்கொடுத்திருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது. அத்தகைய அரசின் பரிசுச்சீட்டுகளையாவது நமது அரசாங்கம் தடை செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டு நான் எதுவும் பதில் அளிக்க இயலாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பரிசுச் சீட்டுத் திட்டத்தை ஊக்குவிக்க ஆறுதல் பரிசு தரும் திட்டம் ஏதாவது பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பரிசு விழாதவர்களுக்கு வேண்டு மானால் ஆறுதல் அளிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பரிசுச் சீட்டு வாங்குபவர்கள், மாதத்திற்கு ஒருமுறை குலுக்குகின்ற காரணத்தினால் ஒரு மாதம்வரையில் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். எனவே அதைக் குறைத்து 15 தினங்களுக்கு ஒருமுறை குலுக்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கனவு காண்பவர்கள் ஒரு மாதம் கண்டால் என்ன, 15 நாட்கள் கண்டால் என்ன ?

---

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்தப் பரிசுச் சீட்டினால், என்னுடைய சீட்டு, உன்னுடைய சீட்டு என்று தகராறாகி கோர்ட்டுக்குப் போனவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி ஒன்றிரண்டு வழக்குகள் உண்டு. அதிகமாக இல்லை.

ரயில்வே செஸ் நிதி

*331 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திற்கு 1971-ல் ஒதுக்கப்பட்ட ரயில்வே செஸ் நிதி இன்னும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணமென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1972-ம் ஆண்டு மே மாதம் அரசு, கோவை மாவட்டத்திலிருக்கும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு அம்மாவட்டத்தில் இருந்த ரெயில்வே செஸ் நிதியை தூநீர் வழங்கல் மற்றும் தொடக்கப்பள்ளி கட்டிடங்கள் கட்டும் திட்டங்களுக்காக செலவிட ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பித்துவிட்டது. மேற்கூறிய திட்டங்களுக்காக பஞ்சாயத்து ஒன்றியங்கள் செலவிடும் தொகையை அடிப்படையாகக் கொண்டு அவ்வப்போது மாவட்ட ஆட்சியர் நிதி ஒதுக்கீடு செய்வார்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1971-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 1972-ஆம் ஆண்டு மே மாதம் கொடுக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அது அந்தந்த ஆண்டிலேயே கொடுக்கப்பட்டால் நடவடிக்கை எடுப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வசதியாக இருக்கும். எனவே ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டிலேயே கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு எந்த அளவில் கொடுப்பது என்ற முழுப் பொறுப்பும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கலாம் என்பதற்கு அரசாங்கம் உத்தரவு கொடுத்து விட்டது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அதுபற்றி ஆராய்ந்து அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கேற்ப வழங்கி வருகிறார்கள்.

திரு. கே. ரங்கநாதன் : தலைவரவர்களே, இரயில்வே செஸ் நிதி ரிய காலத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படாததால் பல





அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தடையாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, செஸ் நிதியை எதிர்பார்த்து ஏற்கனவே எந்தத் திட்டமும் வகுக்கப்படவில்லை. புதிதாகச் சேரும் ஒன்று. இதன்மூலம் அதிக வாய்ப்புகளுக்கு வழிவகை செய்யப்படுகிறது.

தூ நீர் வழங்கல் மற்றும் துவக்கப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் திட்டங்களுக்காக முறையே ரூ. 32,72,950-ம் ரூ. 9,26,000-ம் பயன்படுத்திக் கொள்வதற்காக கோவை மாவட்ட ஆட்சியருக்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது.

பேரூராட்சிகள்

*332. வினா.—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த (1) வள்ளல் நதி, (2) மயிலாடும் பாறை, (3) நரசிங்கபுரம் இந்த மூன்று பேரூராட்சி மன்றங்களுக்குப் போதிய வருவாய் இல்லாத காரணத்தால் ஊராட்சி மன்றங்களாக மாற்ற வேண்டும் என்று அந்த பேரூராட்சி மன்றங்களில் இருந்து தீர்மானங்கள் போட்டு அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனின், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) and (இ) போதிய வருவாய் இல்லை என்ற காரணத்திற்காக வள்ளல் நதி பேரூராட்சி 15–2–1972 தேதி 14-வது தீர்மானத்தில் வள்ளல் நதி பேரூராட்சியை வள்ளல் நதி, ஆத்தங்கரைப்பட்டி, எட்டப்பராஜபுரம் என்று மூன்று ஊராட்சிகளாக பிரிக்கும்படியும், மயிலாடும்பாறை பேரூராட்சி 24–3–1972 தேதி 99-வது தீர்மானத்தில் மயிலாடும் பாறையை 10 ஊராட்சிகளாக பிரிக்கும்படியும், நரசிங்கபுரம் பேரூராட்சி 23–10–1970ந் தேதி 187-வது தீர்மானத்தில் நரசிங்கபுரத்தை ஊராட்சியாக மாற்றும்படி தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ அல்லது அது சம்பந்தப்பட்ட மற்றவரிடமிருந்தோ இத்தீர்மானங்களின் மேல் செயல் குறிப்புகள் வரவில்லை.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, வள்ளல் நதி, மயிலாடும் பாறை, நரசிங்கபுரம் இந்த மூன்று பேரூராட்சி மன்றங்களின் பரப்பளவு அதிகமாகும். ஒரு உறுப்பினர் 15 மைல், 20 மைல் கடந்து ஊராட்சி மன்றக் கூட்டத்திற்கு வரவேண்டியிருக்கிறது. இந்த நிலையிலே மேலும் அங்கு சிறுசிறு கிராமங்களாக, 10, 15 வீடுகள் இருப்பதால்

ஆங்காங்கு பிரித்தால் நல்ல வழியாக இருக்கும் என்றும், ஆகவே, அதைச் சிறுசிறு ஊராட்சி மன்றங்களாகப் பிரிப்பதற்கு உடனடியாக ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—தலைவரவர்களே, முதலிலே பேரூராட்சியாக வேண்டுமென்று விரும்புகிறார்கள். பேரூராட்சி யாக ஆனதற்குப்பிறகு அதில் ஏற்படும் சங்கடங்களைப் பார்த்து ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல் வெள்ளல் நதி 16 சதுர மைல் பரப்பளவும், நரசிங்கபுரம் 50 சதுர மைல் பரப்பளவும், மயிலாடும்பாறை 100 சதுர மைல்கள் பரப்பளவும் உள்ளதாக இருப்பதால் இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன. இதில் வெள்ளல் நதி பேரூராட்சியின் உத்தேச ஆண்டு வருமானம் 25,000 ரூபாய். ஆண்டு ஒன்றிற்கு அலுவலர்களின் சம்பளச் செலவு 22,500 ரூபாய் ஆகிவிடுகிறது. இவ்வளவு போனதிற்குப் பிறகு வேறு எதுவும் செய்யமுடியாது. நரசிங்கபுரம் பேரூராட்சியின் உத்தேச வருமானம் 49,000 ரூபாய், மயிலாடும்பாறையின் உத்தேச வருமானம் 70,000 ரூபாய். எனவே இதை மாற்றியமைப்பது நல்லது என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும், மற்ற அலுவலரிடமிருந்தும் இதுபற்றிய செயற் குறிப்புகள் வந்தபிறகுதான் அதன்மீது அரசு தக்க நடவடிக்கை மேற் கொள்ளும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தக் குறிப்பிட்ட மயிலாடும் பாறை வருஷநாடு பகுதி, மலைப்பகுதியாக இருக்கிறது. அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல 100 சதுர மைல் பரப்பு இருப்பதால் அதைப் பிரிப்பதற் கான உத்தேச நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவரவர்களே, இப் போது பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து செயற் குறிப்புகள் வந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(Thiru K. S. Kothandaramiah rose)

MR. DEPUTY SPEAKER : This question relates to a remote part in Madurai district. I wonder what supplementary the hon. Member can put.

* 333. வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், புலியூர் கிராமப் பஞ்சாயத்து நகரப் பஞ்சாயத்தாக மாற்றி அமைக்குமாறு பொதுமக்களிடமிருந்து 1972 மார்ச்சு மாதத்தில் கோரிக்கை ஏதேனும் வந்ததா?



(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கிராமப் பஞ் சாயத்தை நகரப் பஞ்சாயத்தாக மாற்றுவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று அரசு விதி வகுத்திருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—தலைவரவர்களே, பேரூ ராட்சி மன்றமாக மாற்றியமைப்பதற்கு மக்கட் தொகை 5,000க்குக் குறை வாக இருத்தல் கூடாது; ஆண்டு வருமானம் ரூ. 10,000க்கு அதிகமாக இருத்தல் வேண்டும், அந்தப் பகுதி நகர அம்சம் பொருந்தியதாக இருத்தல் வேண்டும். மேலும் பேரூராட்சியாக மாற்றியமைப்பது கிராம வளர்ச்சி இயக்குநரின் விருப்பத்திற்கு உட்பட்டதாகும். பேரூராட்சி மன்ற மாக ஆனதற்குப்பிறகு பொருளாதார நிலை மற்றவைகளெல்லாம் வளர்ச்சித் திட்டங்களுக்கு எற்ற வழியில் அமையுமா என்று பார்த்து இவைகளுக்கெல்லாம் இசைவு தரக்கூடிய சூழ்நிலை அமைந்தால் அதை யொட்டி பேரூராட்சி மன்றமாக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

* 334 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :—

(*a*) whether there are proposals under the consideration of the Government to convert Madurantakam into a Municipality ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(a) ஆம்.

(b) மதுராந்தகம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற முதலில் உத்தேசிக்கப்பட்டது. இப்போழுது உத்தேசிக்கப்பட்டுள்ள நகராட்சியோடு அதைச் சார்ந்த வேறு சில பகுதிகளை சேர்ப்பது பற்றி அரசு கவனித்து வருகிறது.

திரு. கே. ஏ. வகாப்:—தலைவரவர்களே, இப்படி பேரூராட்சியை நக ராட்சியாக மாற்ற எந்த அடிப்படை மேற்கொள்ளப்படுகிறது? சில பேரூ ராட்சிகள் தாங்கள் விரும்பாத போதுகூட அவைகள் நகராட்சியாக மாற்றப் பட்டு விடுகிறது. நகராட்சியாவதற்கு பேரூராட்சியில் தீர்மானம் ஏதாவது தேவைப்படுகிறதா? அல்லது அரசு அறிவிக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—தலைவரவர்களே, ஒரு பேரூராட்சி நகராட்சியாக மாற்றப்பட 20,000 மக்களுக்கு மேல் இருக்க வேண்டும். அதன் வருமானம் ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் இருக்க

வேண்டும். அப்படியிருந்தால் நகராட்சியாக மாற்றக்கூடிய செயற்குறிப்பு இருக்கிறது. அந்தப் பேரூராட்சியின் தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது. சில யிடங்களில் வருமானமும் நான்கைந்து லட்சமாகி, மக்கள் தொகையும் 40,000 அல்லது 50,000 என்று ஆகியும் மாற்றுமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் நாமே வற்புறுத்தி நகராட்சியாக ஆனால்தான் நகரத்திற்குரிய வசதிகளும், வாய்ப்புகளும் செய்து தர முடியும், எனவே அதை நகராட்சி யாக மாற்றும்படி நாமே வற்புறுத்த வேண்டுமென்ற கட்டம் ஏற்படும். அதுவரையில் அவர்களுடைய விருப்பம்தான் கேட்டறியப்படுகிறது.

## Poultry farms for Sevilimedu Panchayat.

பகல் ·30 *335. Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that a special project for poultry production is to be inaugurated at Sevilimedu in Kanchipuram; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த செவிலிமேடு ஊராட்சியில் 20 கோழிப் பண்ணைகள் 10-11-1971 அன்று ஏழை மக்களின் நன்மைக்காக முன்னோடி திட்டமாக துவக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின் கீழ் பயன் அடைபவர்கள் இருபது பேர் ஒரு குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். காஞ்சிபுரம் இந்தியன் வங்கி இத் திட்டத்திற்கு ரூபாய் 16,000 கடனாக முன் பணம் கொடுத்துள்ளது. தேர்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் கடனாக ரூபாய் 800 (ரூபாய் எண்ணூறு) அளிக்கப்பட்டுள்ளது. இக்கடனை 12 மாத தவணையில் திருப்பிக் கொடுக்க வேண்டும். இது தவிர ஒவ்வொருவருக்கும் கால்நடை மானிய திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியத்தால் ரூபாய், 100 மானியமாக அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் உற்பத்தியும் மற்றும் நலமும் கிடைக்கும்.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இதற்கு மத்திய அரசின் மானியம் ஏதாவது வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய மானியம் தரப்படவில்லை.

திரு. கா. வேழவேந்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த செவிலி மேடுத் திட்டம் ஒரு சிறந்த வெற்றிகரமான திட்டமாக இருக்கிறது. ஆகவே குறைந்த பட்சம் செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒவ்வொரு ஒன்றி யத்திலும் ஒரு இடத்திலாவது இது போன்ற சிறப்புத் திட்டங்கள் அமைக்கும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அடிப்படையிலே தான் முன்னோடித் திட்டமாக செவிலிமேட்டிலே இப்படித் திட்டம் அமைக்கப்பட்டது. அது உருவான பலன் தருமானால் அந்த மாவட்டத்திலே பல இடங்களிலும் வேறு மாவட்டங்களிலும் விரிவுபடுத்தலாம் என்ற எண்ணம் இருக்கிறது.

## அரிசனங்களுக்கு வீடுகள்

*336 விஞ—திரு ந. தருமலிங்கம்:—மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு சற்று அதிகப் பரப்பளவுள்ள வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இத்திட்டத்தின் கீழ் இதுவரை கட்டப்பட்டு வந்த வீடுகள் 96 சதுர அடி பரப்பளவு உடையன வாக இருந்தது. நடப்பு நிதியாண்டிலிருந்து இதை 177 சதுர அடியாக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ந. தருமலிங்கம்: தலைவர் அவர்களே, இப்பொழுது கட்டப்பட்டு இருக்கிற வீடுகளில் எல்லாம் கணவன் மனைவிகூட வாழ வசதியில்லாத முறையில் அமைந்திருக்கின்ற நிலை இருக்கிறது. எனவே மீண்டும் இதைப் பற்றிப் பரிசீலனை செய்து அகலமான வீடுகளாக கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அதைத்தான் நான் சொன்னேன். 96 சதுர அடி பரப்பளவுள்ளதாக இருந்தது இப்பொழுது 177 சதுர அடி பரப்பளவாகவும் 940 ரூபாய் வரையில் செலவழிக்கப் பட்டது இப்பொழுது 1,600 ரூபாய் வரையில் உயர்த்தபட்டும் இருக்கிறது. ஆகவே கூடுதலாகச் செலவழித்து அதிகப் பரப்பளவுள்ள வீடுகளைத்தான் நாம் கட்டிக் கொடுக்கிறோம்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, 1967ஆம் ஆண்டுக்கு முன்பு அரிசனங்களுக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளின் பரப்பளவு என்ன? இப்பொழுது கட்டிக்கொடுக்கின்ற வீடுகளின் பரப்பளவு என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திட்டவட்டமான குறிப்பு அதைப்பற்றி என்னிடம் இப்பொழுது இல்லை.

*337 விஞ—திரு இரா. இராமலிங்கம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக 1971-72ஆம் ஆண்டு எவ்வளவு தொகை நெல்லை மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) அதில் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ரூபாய் 44,000.

(இ) 64 வீடுகள்.

திரு இரா. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, அதிகமான அரிசனங்கள் வீடுகள் கட்ட விரும்புகிறார்கள். ஆகவே அதிகமான அளவுக்கு நிதி ஒதுக்கி அதிக அளவுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க ஏதாவது திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த மாநில அரசைப் பொறுத்தவரையில் கூடுமான அளவுக்கு நிதி ஒதுக்கி வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். மத்திய அரசாங்கம்தான் இன்னும் இதற்கு எந்தவிதமான உதவியும் செய்ய முன்வரவில்லை.

திரு சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 44 ஆயிரம் ஒதுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட தொகை தேவைக்குத் தக்கபடி போதாதபடி இருக்கிறது. அது மட்டுமல்ல, வீடுகள் கட்டுவதற்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் வீடுகள் கட்டி முடிக்கப்படவில்லை. அரசாங்கம் பணம் ஒதுக்கி இதைச் செய்வதைக் காட்டிலும் ஹவுஸிங் போர்டு மாதிரி இதற்குத் தனியாக ஏற்படுத்தி வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட புதிய திட்டத்தை இந்த ஆண்டு முதல் துவக்கியிருப்பதைப்பற்றி நான் பட்ஜெட் உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்கு தனியாக ஒரு கார்ப்பரேஷன் அமைக்கிறோம். அதிலே கடன் தருவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். எல்.ஐ.சி. மூலமாகவோ அல்லது சிண்டிகேட் பேங்க் மூலமாகவோ கடன் உதவிபெற்று மக்களுக்குத் தருவதற்கான குறிப்பு அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு ந. தருமலிங்கம் : தலைவர் அவர்களே, இப்படி வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக மாநில அரசு மத்திய அரசிடம் ஏதாவது நிதி கேட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசைக் கேட்டு இருக்கிறோம். அவர்கள் குறிப்பிட்ட சில டிசைன்களைக் கேட்டார்கள். அவற்றையும் நாம் வரையறுத்துக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. ஒப்புதல் அளித்த பிறகு அதற்கான தொகையை நாம் பெற வேண்டும். இன்னும் அவர்கள் இது பற்றி முடிவு எடுக்காமல் இருக்கிறார்கள்.



THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister when the Housing Corporation would be started ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எல்.ஐ.சி. மூலமாகக் கடன் உதவி கேட்டபொழுது அவர்கள் இப்பொழுது அப்பொழுது என்று சொல்லி கடைசியாக செப்டம்பர் மாதத்திலே பேச்சுவார்த்தை தொடங்குவதாக இருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்து அவர்கள் இல்லையென்றால் அதற்குப் பிறகு சிண்டிகேட் பேங்கோடு பேச்சு வார்த்தைகள் நடத்த இருக்கிறோம். அவர்கள் 1 கோடி ரூபாய் கடன் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். எல்.ஐ.சி.யுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் இல்லை என்று முடிவாகச் சொல்லி விட்டால் அதற்குப் பிறகு சிண்டிகேட் பேங்கோடு பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி முடிவு எடுக்க இருக்கிறோம்.

## பெரியதாழை ஆளிப்பாறை

* 338 வினா—திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், பெரியதாழை கடலில் இருக்கிற ஆளிப்பாறையை ( coral reaf ) உடைத்து, மீனவர்களுக்கு வசதியான வழி துலக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம்.

## ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கல்

* 339 வினா—திரு. தி. ஒ. பெரியசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துவக்கப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கும் திட்டம் அவிநாசி தொகுதியில் நடப்பு ஆண்டு மார்ச் மாதம்தான் அமுல்படுத்தப்பட்டது என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், காலதாமதத்தை தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இத்திட்டம் அவினாசி தொகுதியில் நடப்பு ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பே அமுல் நடத்தப்பட்டது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## தட்டப்பாறை மைனர் சிறைச்சாலை

* 340 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தட்டப்பாறை மைனர் சிறைச்சாலையைப் பார்வையிடும் குழுவில் அரசாங்கப் பற்றற்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், எத்தனை பேர் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) மூவர், மீண்டும் அங்கத்தினர்களாகவும் ஒருவர் புதிதாக அங்கத்தினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. கே. கே. முத்தையா : தலைவர் அவர்களே, அந்தச் சிறைச்சாலையிலே கல்வி பயில்கின்ற மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வி பயில்கிறார்களா ? அல்லது கல்வி மாத்திரம் பயில்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வெறும் கல்விதான் அங்கு கற்றுத் தரப்படுகிறது.

## New Revenue Division for Tiruchirappalli

*341 Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state —

(a) whether the Government have any proposal to form a new Revenue Division comprising of Perambalur and Thuraiyur taluks in Tiruchirappalli district ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெரம்பலூர் துறையூர் ஆகிய வட்டங்களைக்கொண்டு ஒரு புதிய வருவாய் கோட்டம் அமைப்பதற்கு கோரிக்கைகள் வரப்பெற்றன. அவற்றை மாவட்ட ஆட்சியர் பரிசீலித்து வருவாய் வாரியத்திற்கு ஓர் அறிக்கையை அனுப்பியுள்ளார். வருவாய் வாரியத்தின் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : அரியலூர் ரெவின்யூ டிவிஷனிலே சரிபாதி பெரம்பலூர் வட்டம் அடங்கியிருக்கிறது. ஏறத்தாழ 5 லட்சம் மக்கள் பெரம்பலூர் வட்டத்திலே வாழ்கிறார்கள். அரியலூரிலேயே ரெவின்யூ டிவிஷன் தலைமையிடம் இருப்பது மக்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, விரைவிலே அரசு இதைச் பரிசீலனை செய்து முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வருவாய்த் துறை வாரியத்தின் பரிந்துரை வந்ததற்குப் பிறகு அரசு பரிசீலித்து முடிவெடுக்கும்.



## இளையான்குடி துணை வட்டம்

* 342. வினா—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது தனி நிலை துணை வட்டமாக இயங்கி வரும் இளையான்குடியை வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் இளையான்குடி தனிநிலை துணை வட்டத்தை, வட்டமாக உயர்த்துவதை குறித்து பரிசீலனை செய்து வருகிறார்.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, இளையான்குடி வட்டம் ... துணை வட்டமாக இருக்கிறது, அதைத் தனி வட்டமாக்கக் கோரி பல ... கஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன. தனி வட்டமாக அதை ஆக்குவது பரிசீலனையில் இருப்பதாக என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எப்பொழுது வரும் என்று காலம் குறித்துச் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பரிசீலனை முடிந்த பிறகுதான் சொல்ல முடியும்.

திரு. கே. கே. முத்தையா : தலைவர் அவர்களே, துணை வட்டமாக ... இருப்பதைத் தனிவட்டமாக ஆக்கவேண்டுமானால் என்ன என்ன அடிப்படைத் தேவைகள் இருக்கவேண்டுமென்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் முழு விவரங்களும் சேகரித்துத் தருவேன்.

## வீட்டு மனைகள் ஒப்படை

*343 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் செம்மினிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பிள்ளையார்பாளையத்தில் வீடு கட்டிக் குடியிருக்கும் ஏழை மக்கள், அம்மனைகளுக்கான பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், பட்டா வழங்கப்படுவதில் தாமதமேற்படுவதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5 ஆம் நாள் ஒப்படை கேட்டு கொடுக்கப்பட்ட மனுவிற்கு, ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலத்தின் அண்டையில் உள்ள, ஆழ்வார்நாயக்கன் குளத்தின் ஆயக்கட்டு தாரர்கள் ஆட்சேபணை செய்ததால், மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர் செம்மினிபட்டு பஞ்சாயத்து, ஒப்படை செய்வதற்கு சாதகமாக தீர்மானித்துள்ளதால், ஒப்படை செய்ய முறையாக மனுக்களைப்பெற்று, ஆக்கிரமிப்பு உள்ள பகுதியை உட்பிரிவு செய்து ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*344 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், மாகரல் பேட்டு அரிசன காலனியில் குடி யிருப்போர்க்கு, வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் ஏற்படும் காலதாமதத் திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்னை நகரிலும் சென்னை நகரின் எல்லையினின்றும் 20 மைல் சுற்றுப்புறத் தில் செங்கற்பட்டு மாவட்டத்திலும் உள்ள அரசாங்கத்துக்கு சொந்தமான நிலங்கள் குடிசை மாற்று வாரியத்திற்குத் தேவை படலாம் என்ற காரணத்தால், மேற்கண்ட நிலங்களை எவருக்கும் ஒப்படை செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ கூடாது என்று அரசு உத்தரவிட்டுள்ளது. செங்கற்பட்டு மாவட்டம், திருவள்ளூர் வட்டம் மாகரல் பேட்டு கிராமம் மேற்கூறப்பட்டுள்ள தடைக்குட்பட்ட பகுதியான 2 மைல் எல்லைக்குள் உள்ளதால், அக்கிராம புல எண். 192-ல் உள்ள நிலம் அங்கு குடிசைகள் கட்டி ஆக்கிரமித்துள்ள அரிசனங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படவில்லை.

திரு. கா. வேழவேந்தன் : சென்னை நகரத்தின் எல்லையிலிருந் 20 மைல் தூரம் வரை பட்டா கொடுக்க முடியாது என்றாலும் கூட மாகரல் பேட்டு அரிசன காலனியில் பல வருஷங்களாகக் குடியிருந் வருகிற அரிசன மக்களை சாதி இந்துக்கள் வெளியேற்ற வழக்கு தொடர்ந்து தொல்லை கொடுக்கிறார்கள். ஆகவே, இதைத் தனி கேஸா எடுத்துக் கொண்டு அவர்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவை இருப்பதைத் தெரிவி தேன். யாரையோ வெளியேற்ற முயற்சிப்பதாகச் சொன்னார்கள். அந் இடம் எல்லாம் குடிசை மாற்று வாரியத்திற்குத் தேவைப்படுவதா பட்டா வழங்க உத்தேசம் இல்லை என்று தெரிவித்தேன். வேறு புகா இருந்தால் போலீசார் அல்லது ரெவின்யூ அதிகாரிகள் உதவி கொண் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பா. நாகலிங்கம் : முண்டியம் நகரில் பர்மா அகதிகளுக்கு பட்டா கொடுக்கப்பட்டது, ஆனால் பழங்குடி மக்களுக்குப் பட்டா வழங்க படவில்லை என்பதை அரசு அறியுமா ? அந்தப் பழங்குடி மக்களுக் உடனடியாகப் பட்டா கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசு அறியாது. தகவல் ந்திருக்கிறார்கள். விசாரித்துப் பார்க்கலாம்.

## வெட்டியார்கள், தலையாரிகளுக்கு வீடுகள்.

*345 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா ?

ஆதித் திராவிட சமுதாயத்தைச் சார்ந்த கிராம வெட்டியார்கள், தலையா கள் ஆகியோர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்ட அரசின் ஆலோசனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற வெட்டியான், தலையாரி போன்றவர்களுக்கு முழுமையா இலவசமாக வீடுகள் கட்டித்தர இயலாவிட்டாலும், பாதி கடன், பாதி மானியம், தந்து அத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்போது அத்திட்டம் அரசாங்க திடம் இல்லை.

## தேசிய நெடுஞ்சாலை.

*287 வினா : திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் மொத்த தூர எத்தனை கிலோ மீட்டர் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1,852 கிலோ மீட்டர்.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டில் தற்போதுள்ள தேசீய நெடு சாலைகள் எந்தெந்தப் பகுதியில் உள்ளன ? புதிய நெடுஞ்சாலைகளா எவை எவை மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டுமென், நமது அரசு வேண்டுகோள் விடுத்திருக்கிறது என்பதை அமைச் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தற்போதுள்ள தேசிய நெடுஞ்சாலைகள்—

| | KMS. |
|---|---|
| Madras-Chittoor-Bangalore road .. .. .. .. | 133.40 |
| Madras-Calcutta road .. .. .. .. .. .. | 52.80 |
| Mysore border-Krishnagiri-Salem road .. .. .. | 173.75 |
| Salem-Dindigul Madurai road .. .. .. .. | 234.05 |
| Madurai-Kanyakumari road .. .. .. .. | 231.60 |
| Madras-Tiruchirappalli-Dindigul road .. .. .. | 417.25 |
| Ranipet-Krishnagiri road .. .. .. .. .. | 145.00 |
| Salem-Cochin road .. .. .. .... .. .. | 182.40 |
| Kerala border to Kanyakumari .. .. .. .. | 55.60 |
| Madurai-Danushkodi road .. .. .. .. .. | 151.20 |
| Palayamkottai-Tuticorin road .. .. .. .. | 49.28 |

ஆகியவையாகும். அதல்லாமல் "பை-பாஸ்" ரோடுகள்—

| | M. | F. |
|---|---|---|
| Diversion of South Pennar Causeway at Villupuram .. | 1 | 3 |
| Ramkotta tank bund near Dharmapuri .. .. .. | 0 | 4 |
| Dharmapuri bye-pass .. .. .. .. .. .. | 1 | 6 |
| Tiruchirappalli bye-pass .. .. .. .. .. | 6 | 1 |
| Madurai bye-pass .. .. .. .. .. .. | 2 | 7 |
| Tirupparankundram bye-pass.. .. .. .. .. | 0 | 7 |
| Virudhunagar bye-pass .. .. .. .. .. | 1 | 7 |

ஆகியவையாகும். நம்முடைய மாநிலத்தில் இன்னும் பல சாலைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். அவர்கள் பாளையங்கோட்டை—தூத்துக்குடி சாலையை மட்டுந்தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மாதிரி நேஷனல் ஹைவேஸில் குறிப்பாக வாரணாசியிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ளவற்றில் நம்பர் 7-ல் பல பாலங்கள் அமைப்படுத்த இப்போது ரிப்பேர் நடந்து கொண்டிருக்கிறது. மழைக்காலம் ஆரம்பிப்பதற்குள் சீக்கிரமாக முடிக்க மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: சாலைகளை அகலப் படுத்தும் பணியை, புதுப்பிக்கும் பணியை சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த வேலைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.



திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கிழக்குக் கடற்கரை ரோடு கன்னியாகுமரி வரை செல்லுவதைத் தேசிய நெடுஞ்சாலையாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நம்முடைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. ஆனால் மத்திய அரசாங்கம் அனுமதிக்கவில்லை.

கருவேலன் குளம்.

*288 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) குளித்தலை வட்டம், மஞ்சநாயக்கன்பட்டி கிராமத்திலுள்ள கருவேலன் குளத்தை புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) திட்டம் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தக் கருவேலன் குளத்தைத் தனி நபர் ஆக்கிரமித்துக் கொண்டு திட்டத்தை நிறைவேற்ற இடையூறாக இருக்கிறார். அந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆக்கிரமிப்பு பற்றிய தகவல் இல்லை. குளித்தலை வட்டம், மஞ்சநாயக்கம்பட்டி கிராமத்தில் பாசனம் செய்யக்கூடிய அளவுக்குக் குளம் ஒன்றும் இல்லை. இருந்தாலும் சர்வே எண் 180/1, 180/3, 180/4 ஆகிய இடங்களை ஒரு குட்டையாக மாற்றியமைக்கும் உத்தேசம் இருக்கிறது. இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

நொய்யலாற்றின் குறுக்கே அணை.

*289 வினா.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உங்கம்பாளையம் அருகில் நொய்யல் ஆற்றின் மீது அணை ஒன்று கட்டி க. பரமத்தி ஊராட்சி ஒன்றிய மக்களுக்கு பாசன வசதி தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) வேலாயுதம் பாளையம் கிராமத்தில் நொய்யலாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டி உங்கம்பாளையம் அருகே வளையபாளையம் கிராமத்தில் ஒரு நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் திருச்சி செயற்பொறியாளர் பொறியாளரின் விவரமான ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்து பரிசீலனை செய்தபின் ஒப்புதல் அளிப்பது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு மா. மை. அப்துல் ஜப்பார் : கடந்த 25 ஆண்டுகளாக இந்தத் திட்டத்தை விரைந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவைக்குறிச்சி தொகுதியில் எவ்விதமான பாசனத் திட்டங்களும் நிறைவேற்றப்படாத காரணத்தால், இந்தத் திட்டம் மக்களுக்கு அதிகப் பலன் தரும் என்ற காரணத்தால் விரைவில் இதை நிறைவேற்றித்தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : நொய்யலாற்றின் குறுக்கே அணை கட்ட சர்க்காரால் பரிசீலிக்கப்பட்டு கைவிடப்பட்டிருக்கிறது. இப்போது இந்தத் திட்டத்தைப் பற்றி மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இந்த மறு பரிசீலனை முடிந்த பிறகு முடிவு எடுக்கப்படும்.

அரசினர் தோட்டத்தில் புதிய கட்டடம்.

* 346 வினா—திரு தொப்பூர் திருவேங்கடம், திரு மா. ரா. முனுசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை அரசினர் தோட்டத்தைச் சுற்றி அண்ணா சிலையை நோக்கி கடைகளை கட்டி வாடகைக்கு விட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : அண்ணா சிலையை நோக்கி, அரசினர் தோட்டத்தில் 10 அடுக்கு கட்டடம் கட்டும் திட்டம் பரிசீலனையிலுள்ளது. இத்திட்டத்தின்படி கீழ் பாகத்தில் கடைகளும், மேற்பாகத்தில் அரசின் அலுவலகங்களுமிருக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு நா. வீராசாமி : பத்து அடுக்கு மாடி ஒன்று கட்டுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பதிலாக அந்தத் தெரு முழுவதிலும் கடை கட்டினால் 200 கடைகளுக்கு மேல் வரும். அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு 10, 15 லட்ச ரூபாய் வருமானம் வரும். இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் குறிப்பிட்டது பத்து அடுக்கு கட்டடம் பற்றி. அதிலே கீழே கடைகளும், மற்றும் அலுவலகங்களும் இருக்கும். இப்போது அரசாங்க அலுவலகங்கள் பல வாடகைக்



கட்டடங்களில் இருந்து வருகின்றன. இது தவிர இன்னும் மூன்று திட்டங்களும் பரிசீலனையிலுள்ளன.

Three proposals costing Rs. 50 lakhs, Rs. 274 lakhs and Rs. 19·5 lakhs proposed by Industries Department, State Housing Board and State P.W.D. Department.

இப்படி நான்கு திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. எந்தத் திட்டம் முடிவாக எடுக்கப்படும் என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

பழவாறு நீர் இறைப்புத் திட்டம்.

* 347 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாயூரம் தொகுதி, தலைஞாயிறில் பழவாற்றில் "பம்பிங் ஸ்கீம்" வேலை செய்து முடிக்கப்பட்டு விட்டதா ?

(இ) அதற்காகும் செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத்திட்ட வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

(இ) செலவு இப்போது ரூ. 2·64 லட்சமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இம்மாதிரித் திட்டங்கள் எங்கெங்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும், அதற்கான எஸ்டிமேட் தொகை மொத்தமாக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது அரசாங்கத்தால் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல கேள்விகளைப் போட்டு பழக்கப்பட்டவர்கள். மூலக் கேள்வி குறிப்பிட்ட ஒரு பணியைப் பற்றிய கேள்வியாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தத் துணைக் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் திட்டவட்டமான பதிலுக்காகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூலக் கேள்விகளுக்குச் சம்பந்தப்பட்டதாக துணைக் கேள்விகள் கேட்க வேண்டும்.

பாலக் கோம்பையில் புதிய கண்மாய்.

* 348 வினா.—திரு நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த பாலக் கோம்பையில் ஓர் கண்மாய் அமைக்கப்படவிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு, சிக்கனமற்றதென்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக மதுரை சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியரும் மற்றும் பல அதிகாரிகளும் வந்து பார்த்து, அந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று என்னிடமே கூறிச் சென்றிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது இத்திட்டம் சரியில்லை என்று கூறுகிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அங்கே உள்ள மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை இனிமேலாவது மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கனவே அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, $7\frac{1}{2}$ லட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டது. அந்தத் திட்டம் சிக்கனம் அற்றது என்று கைவிடப் பட்டது. மறுபடியும் அந்த வட்டார மக்களிடமிருந்து வேண்டுகோள்கள் வந்ததால், அதையேற்று அரசாங்கம் தலைமைப் பொறியாளரை மறு பரிசீலனை செய்யச் சொல்லி ஆணையிட்டிருக்கிறது. மறுபரிசீலனையில் அது சிக்கனம் என்று அரசுக்கு அறிக்கை வருமானால், நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாட்டில் வீட்டு வசதித் திட்டங்கள்.

* 349 வினா.—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வீட்டு வசதி திட்டங்களை அமுல் படுத்த வருடாந்திர மானியமாக ரூ. 10 கோடி அளிக்கக் கோரி நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : ஆம்.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்தத் திட்டத்திற்கு இது வரை எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அது எப்போது நிறைவேற்றப்படவிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக ...





மாண்புமிகு திரு க. இராசாராம் : நம்முடைய அரசு 10 கோடி ரூபாய்க்கும் மேலாக பல திட்டங்களை மத்திய அரசுக்கு சமர்ப்பித்தது. அதற்கு தற்போது நிதி ஒதுக்க வசதியில்லை என்று கூறி, மத்திய அரசிடமிருந்து நம்முடைய கோரிக்கையை நிராகரித்து பதில் வந்திருக் கிறது.

திரு க. சுப்பு : தலைவரவர்களே, இராயப்பேட்டை காலனியில் குடியிருக்கும் நிருபர்கள் ஜூலை மாத வாடகைப்பணம் செலுத்தி யிருந்தும், அவர்களை வீட்டை காலி செய்யுங்கள் என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டதா ? அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : அது பற்றிய குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்கிறபோது அது மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும்.

திரு கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசிடமிருந்து நிதி நமக்கு கிடைக்கிற வரையில், ஏற்கெனவே, காலனியில் இருக்கக்கூடியவர்களை வெளியேற்ருவண்ணம் பாதுகாப்பு கொடுக்கப்படுமா? அல்லது நோட்டீஸ் கொடுத்து வெளியேற்றப்படுவார்களா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : அதற்காக தக்க பாதுகாப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

* 350. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Government order that Co-operative Housing loans could be granted for the construction of flats only has been cancelled ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய நகரங்களில் கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் கடன்கள் பல அடுக்கு மாடி வீடுகள் கட்டுவதற்கே வழங்கப்பட வேண்டும் என ஒரு ஆணை 1966-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் பிறப்பிக்கப்பட்டது. இத்தடையின் காரணமாக நிலம் வைத்திருப்ப வர்கள் பல அடுக்கு மாடி வீடுகள் கட்ட விரும்பவில்லை என்றும், ...

பாலக் கோம்பையில் புதிய கண்மாய்.

* 348 வினா.—திரு நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த பாலக் கோம்பையில் ஓர் கண்மாய் அமைக்கப்படவிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு சிக்கனமற்றதென்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக மதுரை சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியரும் மற்றும் பல அதிகாரிகளும் வந்து பார்த்து, அந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று என்னிடமே கூறிச் சென்றிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது இத்திட்டம் சரியில்லை என்று கூறுகிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அங்கே உள்ள மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை இனிமேலாவது மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கனவே அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, $7\frac{1}{2}$ லட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டது. அந்தத் திட்டம் சிக்கனம் அற்றது என்று கைவிடப் பட்டது. மறுபடியும் அந்த வட்டார மக்களிடமிருந்து வேண்டுகோள்கள் வந்ததால், அதையேற்று அரசாங்கம் தலைமைப் பொறியாளரை மறு பரிசீலனை செய்யச் சொல்லி ஆணையிட்டிருக்கிறது. மறுபரிசீலனையில் அது சிக்கனம் என்று அரசுக்கு அறிக்கை வருமானால், நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாட்டில் வீட்டு வசதித் திட்டங்கள்.

* 349 வினா.—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வீட்டு வசதி திட்டங்களை அமுல் படுத்த வருடாந்திர மானியமாக ரூ. 10 கோடி அளிக்கக் கோரி நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : ஆம்.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்தத் திட்டத்திற்கு இது வரை எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அது எப்போது நிறைவேற்றப்படவிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?



மாண்புமிகு திரு க. இராசாராம் : நம்முடைய அரசு 10 கோடி ரூபாய்க்கும் மேலாக பல திட்டங்களை மத்திய அரசுக்கு சமர்ப்பித்தது. அதற்கு தற்போது நிதி ஒதுக்க வசதியில்லை என்று கூறி, மத்திய அரசிடமிருந்து நம்முடைய கோரிக்கையை நிராகரித்து பதில் வந்திருக்கிறது.

திரு க. சுப்பு : தலைவரவர்களே, இராயப்பேட்டை காலனியில் குடியிருக்கும் நிருபர்கள் ஜூலை மாத வாடகைப்பணம் செலுத்தியிருந்தும், அவர்களை வீட்டை காலி செய்யுங்கள் என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டதா ? அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : அது பற்றிய குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்கிறபோது அது மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும்.

திரு கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசிடமிருந்து நிதி நமக்கு கிடைக்கிற வரையில், ஏற்கெனவே, காலனியில் இருக்கக்கூடியவர்களை வெளியேற்றாவண்ணம் பாதுகாப்பு கொடுக்கப்படுமா? அல்லது நோட்டீஸ் கொடுத்து வெளியேற்றப்படுவார்களா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : அதற்காக தக்க பாதுகாப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

* 350. *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Government order that Co-operative Housing loans could be granted for the construction of flats only has been cancelled ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய நகரங்களில் கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் கடன்கள் பல அடுக்கு மாடி வீடுகள் கட்டுவதற்கே வழங்கப்பட வேண்டும் என ஒரு ஆணை 1966-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் பிறப்பிக்கப்பட்டது. இத்தடையின் காரணமாக நிலம் வைத்திருப்பவர்கள் பல அடுக்கு மாடி வீடுகள் கட்ட விரும்பவில்லை என்றும், வீடு க[illegible] கூட்டுறவு சங்கத்திடமிருந்து கடன் வாங்க நினைத்த பலர்

கடன் அடைய முடியாத நிலைமையில் பல மனைகள் காலியாக இருந்தன எனவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. ஆனையால் மேலே கூறிய தடையை 5 ஆண்டு களுக்கு நிறுத்தி வைக்கலாம் என்று 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் உத்தரவிடப்பட்டது. பின்னர் இந்த பிரச்சினையை அரசு மறு பரிசீலனை செய்து 1972-ஆம் ஆண்டு மே திங்களில் இந்தத் தடையை முழுவதும் நீக்க ஆணை பிறப்பித்துள்ளது.

THIRU N. DENNIS : Sir, may I know whether the Government have issued orders for stoping financial assistance to the Co-operative Building Societies ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் தற்போது இல்லை.

## சீரணித் தொண்டர்கள்.

* 351 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைப் பேருந்து நிற்குமிடங்களில் பணியாற்றும் சீரணித் தொண்டர்களை முழு நேர ஊழியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தச் சீரணித் தொண்டர்கள் போக்குவரத்துத் துறைக்கு மிகவும் சிறப்பாக உதவி செய்து கொண்டு இருக்கிறார்கள். எனவே போக்குவரத்துத் துறைக்கு வேலைக்காக ஆட்கள் சேர்க்கப்படும்போது இந்தச் சீரணித் தொண்டர்களுக்கு முதலிடம் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை நகர போக்குவரத்துப் பொறுத்தவரையில் சீரணித் தொண்டர்கள் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பது உண்மை. ஆனால் அதே நேரத்தில் அவர்களைத் தான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்வது சரியல்ல. தகுதி, மற்றவையெல்லாம் ஒன்றாக இருக்குமானால், வெளியே இருந்து வேலைக்கு ஆட்களை எடுக்கும்போது, சீரணித் தொண்டர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

திரு நா. வீராசாமி : தலைவரவர்களே, முழு நேர வேலைக்கு அவர்களை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும், அன்றாடம் பீக்-அவர்ஸில் அந்தச் சீரணித் தொண்டர்களின் சர்வீஸ்களைபயன்படுத்திக் கொள்ள அரசு முன்வருமா ?





மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்போது நெரிசல் பகுதிகளில் மட்டும் சீரணித் தொண்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக 50 இடங்களில் அவர்கள் பயன்படுத்தப்படு கிறார்கள். அதை மேலும் 25 இடங்களுக்கு கூடுதலாக்கும் யோசனை போக்குவரத்துத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

## சென்னை-போந்தவாக்கம் பேருந்துகள்

* 352 வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 113 (சென்னை-போந்தவாக்கம்) பேருந்துகளை தேர்வாய் வரை சென்று திரும்புமாறு செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : வழித்தடம் எண் 113-A (தங்கசாலை-போந்தவாக்கம்) செல்லும் பேருந்துகள் 19—6—1972 முதல் காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் தேர்வாய் கிராமம் வழியாகத் திருப்பிவிடப்பட்டுள்ளன.

திரு கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த 113-A பேருந்து கள் காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும் தான் தேர்வாய் கிராமம் வழியாகச் செல்லவேண்டுமா ? அந்த வழியே செல்லும் எல்லாப் பேருந்துகளையும் தேர்வாய் கிராமம் சென்று வருவதற்கு உடனடியாக அரசு ஆணைப் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : போதுமான பயணிகள் இருப் பார்களேயானால் அதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

## *Temple Lands in Madras*

* 353. *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether lands of the temples at Madras City have been given to the State Slum Clearance Board ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஒரு விவரப் பட்டியல் *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக குடிசை மாற்று வாரியத்திற்கு தரப்பட்ட நிலங்கள் மிகவும் குறைந்த விலைக்குத் தரப்பட்டதாகச் சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா ?

*526—527-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கோவில் நிலங்கள் கிரௌண்டு ஒன்றுக்கு 2,850 என்ற விலைக்கு விற்றிருக்கிறோம். இன்னும் கொஞ்சம் அதிகமான விலைக்குப் போகும் என்றாலும், அறங்காவலர்களும், குடிசை மாற்று வாரியத்தினரும் கூடிப் பேசித்தான் இந்த விலையை நிர்ணயம் செய்தார்கள். அந்தப் பகுதியில் குடிசை போட்டுக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த மக்களிடமிருந்து ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் வாடகை வசூலைப் பெற முடியாமல் பல ஆண்டு காலம் தேங்கி நின்றது. இப்படி விற்றுவிடுவதன் மூலம் அதிகப்படியான வருமானம், சுமார் 30,000 ரூபாய் ஆண்டு தோறும் அதிகமாகக் கிடைப்பதால், அந்த நிலங்களைக் கொடுப்பதற்கு கபாலீஸ்வரர் கோவில், மற்றும் கோவில்களும் சம்மதித்து இருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இனிமேலாவது இப்படிக் குறைவான விலைக்கு கோவில் நிலங்களை விற்காமல், மற்ற தனியாரிடமிருந்து ஆர்ஜிதம் செய்தால் எப்படிக் கொடுப்பார்களோ, அது போல் கோவில் நிலங்களுக்கும், அதன் வருமானத்தை பாதிக்காமல் இருக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஏழை மக்கள், குடிசை வாழ் மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்காகத்தான் இந்த நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே வந்த வருமானத்தை விட அதிகமான வருமானம் இந்தக் கோவில்களுக்கு வருவதற்கு வழி வகை செய்து கொடுத்த பிறகுதான் அரசாங்கம் இந்தச் செயலில் இறங்கி இருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட நிலங்களை ஏழை மக்களின் உபயோகத்திற்காக அளிப்பதற்கு அரசு தயங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 354. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any land belonging to the Kapaleeswarar temple has been rented out to the P.S. High School, Mylapore, Madras ; and

(*b*) if so, the details thereof

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) சென்னை, மைலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஆர். எஸ். எண். 3543/1-ல் உள்ள மூன்று காணிகள் பத்து கிரவுண்ட் மற்றும் 246 சதுர அடி நிலம், கரஸ்பாண்டெண்ட், மயிலை, பி. எஸ். உயர்நிலைப் பள்ளிக்குக் குத்தகைக்கு 1937-ல் இருபத்தொரு ஆண்டுகளுக்கு விடப்பட்டது. இக்குத்தகை மீண்டும் 1—5—1958 முதல் மாத வாடகைக்கு ரூ. 500 வீதம் 21 வருடங்களுக்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது.



பழனியில் செவிடர்கள் பள்ளி

* 355. வினா.—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தேவஸ்தானத்தின் சார்பாக அண்மையில் பழனியில் " செவிடர்கள் " பள்ளி ஒன்று துவக்கப்பட்டுள்ளதா—

(இ) ஆம் எனில், அதற்காகும் செலவுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: (அ) ஆம். 14—2—1972-ம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

(இ) ஆண்டுக்கு ரூ. 14,400 ஆகும்.

திரு என். கிட்டப்பா: தலைவரவர்களே, அந்தப் பள்ளியால் எத்தனை பேர்கள் இது வரையில் பயன் அடைந்து இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: அந்தப் பள்ளி தொடங்கப்பட்டு சரியாக 7 மாத காலம் முடிவடைந்து இருக்கிறது. இது வரையில் 20 மாணவர்கள் அந்தப் பள்ளியில் சேர்ந்து பயன் பெற்று வருகிறார்கள்.

திரு சொ. காவேரிமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முற்பகல் 10-00 அந்த மாவட்டத்தில் துவங்கப்பட்டது போல மதுரை மாவட்டத்தில் இருக்கக் கூடிய தேவஸ்தானங்களிலும் இம்மாதிரியான செவிடர்களுக்கான விடுதிகள், அல்லது அனாதைக் குழந்தைகளுக்கான விடுதிகள் தொடங்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். வேறு தேவஸ்தானங் களிலும் தொடங்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: மதுரை மாவட்டத்தில் எந்தக் கோவில்களில் உபரி நிதி இருக்கிறதோ அங்கே இருக்கிற அறங்காவலர்கள் அதைப்பற்றி தீர்மானித்தார்களேயானால் அரசு அதைப் பரிசீலிக்கும். இப்பொழுது வேறு எந்தக் கோவில்களின் நிதியிலிருந்து இம்மாதிரி விடுதிகளைத் திறந்திருக்கிறோம் என்ற விவரம் என்னிடம் இல்லை.

வெள்ளிக் குறியிடாத வினாக்கள்

Repatriates from Ceylon

1. *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Harijan Welfare be plaesed to state—

(*a*) Whether the Hon. Chief Minister has received a petition dated 21st August 1972 from the Ceylon Repatriates Society, 10, Jothi Ramalingaswamy Street, West Mambalam, Madras-33 ; and

(*b*) If so, the details thereof ?

*A.*—

(*a*) A copy of the petition has been received by the Government.

(*b*) It has been requested in the petition that the concessions and assistance available to the repatriates from Ceylon covered by the Indo-Ceylon Agreement, 1964 and who have arrived in India on or after 1st November 1964 may be extended to the repatriates from Ceylon not covered by the Indo-Ceylon Agreement, 1964 and who have arrived in India from the year 1950 onwards.

(அ) மனுவின் படி ஒன்று அரசுக்குக் கிடைத்துள்ளது.

(இ) 1964-ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து 1-11-1964-லிலும் அதற்குப் பிறகும் இந்தியாவுக்குத் திரும்பி வந்த அகதிகளுக்குக் கிடைக்கும் சலுகைகளும் உதவிகளும், 1964 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் வராதவர்களும் 1950-லிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்தவர்களுமான அகதிகளுக்கும் கொடுக்கப்படலாம் என்று இந்த மனுவில் வேண்டப்பட்டுள்ளது.

பழனி கோடைக்கானல் சாலை

2. வினா.—டாக்டர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனியிலிருந்து கோடைக்கானலுக்குப் போடப்படுகின்ற சாலையினுடைய வேலை தொடங்கப்பெற்று இடையிலே நிறுத்தப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் காரணம் என்ன?

(உ) அதற்காகும் செலவுத் தொகை எவ்வளவு?

விடை.—(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) மதிப்பீட்டுத் தொகை ரூ. 81 லட்சத்துக்கு இவ்வேலை அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(*a*) No.

(*b*) Does not arise.

(*c*) This work has been approved by the Government at an estimated cost of Rs. 81 lakhs.

வேதாரண்யத்திற்கு கல்யாண மண்டபம்

3. வினா.—திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?



(அ) வேதாரண்யம், தேவஸ்தானத்தின் நிதியிலிருந்து, திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.—(அ) ஆம்.

(இ) இந்து சமய அறநிலைய ஆணையர் தனது 1972-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் தேதிய ப.மு. 36097/72 உத்திரவில் ரூ. 80,000 மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளார். கோயில் அதிகாரிகள், மேற்படி வேலையை நிறைவேற்றுவதற்காக ஒப்ப அறிவிப்புகள் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்

நியாய விலைக் கடைகள்

4. வினா.—திரு. கே. வ. ஷகாப் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழகத்தில் 1971-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய திறக்கப்பட்டுள்ள நியாயவிலை அரிசிக் கடைகள் எத்தனை?

(இ) இதன் மூலம் மொத்தம் செலவாகும் அரிசி ஒரு நாளைக்கு எத்தனை டன்?

விடை.—(அ) 2,060 கடைகள் திறக்கப்பட்டன. அதில் டிசம்பர் முடிவில் 150 கடைகள் செயல்பட்டன.

(இ) டிசம்பர் மாதத்தில் நாளொன்றுக்கு 236 டன் அரிசி செலவாயிற்று.

உடற்பயிற்சி ஆசிரியர்கள்.

5. வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில் அரசாங்க தேக பயிற்சி நிலைய பள்ளியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தற்போது எத்தனை பேர்?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு இன்றுவரை வேலை கொடுக்கப் பட்டுள்ளது?

விடை.—(அ) மொத்தம் 1970-71-ல் 97 பேர்கள் பயிற்சி பெற்றார்கள்.

(இ) விவரம் இல்லை.

[1972 ஆகஸ்ட் 25

## 2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

### (அ) தொழிற்படிப்புக் கல்லூரிகள் மூடப்பட்டதும் அதன் விளைவுகளும்

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

MR. DEPUTY SPEAKER: Under Rule 42 of the Assembly Rules the hon. Member Thiru K. Suppu has given notice of a motion to discuss the serious situation arising out of indefinite closure of professional colleges like Chingleput Medical College, Veterinary College, Coimbatore Agricultural College and the College of Indigenous Medicine Palayamcottai.

Thirumathi T. N. Anandanayaki and Dr. H.V. Hande also have given notice of motions on the same subject.

திரு க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, கோவையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி இவைகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சில கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டங்கள் வெடித்திருக்கின்றன. பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இரண்டு கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்துகிறார்கள். ஒன்று அந்தக் கல்லூரி சென்னைக்கு மாற்றப்பட வேண்டுமென்பது. இரண்டாவதாக மற்ற மாநிலங்களில் இந்திய மருத்துவர்களுக்கு என்ன தகுதி, முன்னேற்றம், பாட திட்டம், வேலை வாய்ப்பு ஆகியவைகள் இருக்கின்றனவோ அவைகளை இவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பது. இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து பாளையங்கோட்டையில் இருக்கும் இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தி, கல்லூரிக்குச் செல்லாமல் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கல்லூரி வளர்ச்சி கருதி.....

மாண்புமிகு திரு க. அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தைச் சொல்லும்பொழுது, நடைமுறையில் எதிர்பாராமல் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை மட்டும் சொல்லவேண்டுமே தவிர, வரலாறுகளை எடுத்துச் சொல்வது என்பது முறையல்ல. ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தை ஏன் அனுமதிக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்கிறபொழுது, நடைமுறைக்கு மாறாக ஏற்பட்ட எதிர்பாராத சூழ்நிலையை மட்டுப் குறிப்பாக எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, மற்றபடி அந்தத் தீர்மானம் அனுமதிக்கப்பட்ட பிறகு கூறவேண்டியவைகளையெல்லாம் நடைமுறைகளைப் பற்றியெல்லாம் பேசுவது முறையல்ல. ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் நோக்கத்தை மட்டும் விளக்க வேண்டும் என்று தங்கள் மூலமாக உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு க. சுப்பு: நடைமுறைக்கு விரோதமாக உள்ளவற்றைப் பற்றித்தான் சொல்கிறேன். ஒரு கல்லூரி மூடப்படுவது நடைமுறையில் நடப்பது அல்ல. கல்லூரி மூடப்பட்டதற்கான காரணத்தை சுருக்கமாகத் தான் எடுத்துச் சொல்கிறேன்.





அந்த மாணவர்கள் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகள் நியாயமானவைதான் என்று அமைச்சர் அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள்.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சில கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்துகிருர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கைகள் நியாயமானவைதான் என்று ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள்.

கோவையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி, அண்ணாமலைக் கல்லூரி, முதலிய கல்லூரி மாணவர்கள் கூட்டுச் செயல் கமிட்டி அமைத்து போராட்டம் நடத்தி வருகிருர்கள். அதற்கு முக்கியமான காரணம், வேளாண்மை பட்டதாரிகளுக்கு அளிக்கக்கூடிய ஊதிய விகிதம் கால்நடை மருத்துவ பட்டதாரிகளுக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். கெஜடெட் பதவி கேட்டார்கள்...........

மாண்புமிகு திரு க. அன்பழகன்: ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் அவசியத்தைப்பற்றிப் பேசும்பொழுது, பிரச்சனைகளின் பேரில் வாதம் நடத்துவது என்பது முறையல்ல. ஒற்றிவைப்புத் தீர்மானத்தின் அவசியத்தைப் பற்றி மட்டுமே சொல்ல வேண்டும். மன்றம் அனுமதித்த பிறகு அப்படி ஒரு வாதத்தை நடத்தலாமே தவிர, இப்பொழுது மாணவர்கள் சொல்கின்ற குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, அதற்கான காரணகாரியங்களை விளக்கி, அதற்காக வாதிடுவது என்பது கூடாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது இருக்கிற டென்ஸ் ஸிச்சுவேஷன் என்ன என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

திரு க. சுப்பு: டென்ஸ் ஸிச்சுவேஷன் மீன்ஸ், டென்ஸ் ஸிச்சுவேஷன் என்று சொல்லிவிட முடியுமா? அது எப்படி ஏற்பட்டது, அரசு அதில் எப்படி தவறி இருக்கிறது என்பதைத் தான் விளக்கிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: அரசாங்கத் தரப்பு விளக்கத்தைக் கேட்டுவிட்ட பிறகு அரசாங்கத்திற்கு அது தெரியாமல் இருக்குமானல், அப்பொழுது வேண்டுமானல், அந்த விளக்கத்தைச் சொல்லலாம். அரசுக்குத் தெரியாது என்று எண்ணிக்கொண்டு, அரசுக்கு விவரங்கள் புரியாது என்று எண்ணிக்கொண்டு உறுப்பினர் அவர்கள் பேசுவது முறையல்ல. ஒற்றிவைப்புத் தீர்மானத்தை ஏன் கொண்டு வருகிருர் என்பதற்கு விளக்கத்தை மட்டும் அங்கத்தினர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு விவரங்கள் தெரிந்தும், அதிலே தலையிட்டு எதுவும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிருர்கள் என்பது தான் குற்றச்சாட்டு. அதனல் தான் இப்படி மோசமான நிலைமை உருவாகியிருக்கிறது. அமைச்சர்

[திரு க. சுப்பு] [1972 ஆகஸ்ட் 25

அவர்களுக்கு பிரச்சனை தெரியாமல் ஒன்றும் இல்லை. பிரச்சனையைப் பற்றித் தெரியும். தெரிந்தும், அதிலே ஒரு தீர்வு காணப்படாததற்கு அரசாங் மும், அமைச்சர் அவர்களும் தவறியதினால்தான் அதன் விளைவுதான் இம்மாதிரி ஒரு மோசமான நிலை ஏற்பட்டிருக்கிறது. மாணவர்களுடைய கோரிக்கைகளை அரசாங்கம் அணுகக்கூடிய முறையே சரியல்ல. பிரச்சனை யைத் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் அணுகுவதற்குப் பதிலாக, பிரச்சனையை தள்ளிப்போட வேண்டும் என்ற அடிப்படையில், அணுகிய தால்தான், இம்மாதிரி போராட்டங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உரு வாகிறது. அவ்வப்பொழுது பிரச்னைகளுக்கு முடிவு காணாமல் தள்ளிப் போடுவதனால் தான், ஒரு சில நடவடிக்கைகளை ஏதோ தானே என்று எடுப்பதால் தான், அதன் விளைவாகத் தான் தமிழகத்தில் இருக்கக் கூடிய தொழில் கல்லூரிகளெல்லாம் மூடப்படுகிற மோசமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அங்கு ஒன்றும், இங்கு ஒன்றுமாக இல்லை. தமி ழகம் முழுவதும் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தகுதிக்கேற்ப ஊதியம் கேட்டால் அரசாங்கம் ஒரு உயர்மட்ட அதிகாரியை கமிஷன் என்று நியமனம் செய்திருக்கிறார்கள்....................

THE HON. THIRU K. ANBAZHAGAN: The Hon. Member is not moving for the necessity of bringing the adjournment motion but he is going on explaining about the failures of Government according to his opinion. Such a thing is not permitted when an Hon. Member is moving for the necessity of admitting an adjournment motion.

திரு க. சுப்பு: அரசாங்கம் எப்படித் தவறியிருக்கிறது என்பதைத் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே உள்ள அவ சரத்தைப்பற்றி ரொம்பவும் சீரியஸாக உள்ள நிலைமையைப்பற்றி உறுப்பினர் அவர்கள் பேசலாம். இம்மாதிரி நேரங்களில் காரண காரியங் களை எடுத்து விளக்கி விவாதம் நடத்துவது அவசியமில்லை. ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கான நெருக்கடியான நிலைமைப்பற்றி மட்டும் எடுத்து விளக்கினால் போதும்.

திரு க. சுப்பு: கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன என்பது ஒரு நெருக்கடியான நிலைமை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். கல்லூரிகள் மூடப்பட்டதற்கான காரணங்களைச் சொல்லி, அரசாங்கம் அதில் எப்படி தவறி இருக்கிறது என்பது அவசரப் பொது முக்கியம் வாய்ந்தது. அது எப்படி அவசரம் என்பதைத்தான் விளக்கிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒற்றிவைப்புத் தீர்மானத்தை இந்த அவை அனுமதித்த பிறகு பேசவேண்டிய விஷயங்கள் இவை. என் ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டும் என்று விளக்குகின்ற நேரத்தில், இம்மாதிரி விஷயங்களைப் பற்றிப் பேசுவது முறையல்ல,



1972 ஆகஸ்ட் 25]

திரு க. சுப்பு: என் ஒற்றி வைக்க வேண்டும், இது எப்படி அன்றா அலுவல்களுக்கு அப்பாற்பட்டது என்பதைத்தான் விளக்குகிறேன் இதெல்லாம் அரசின் அன்றாட அலுவல்கள் என்று அமைச்சர் அவ கள் ஒப்புக்கொண்டு விட்டால், நான் பேசுவதற்குத் தயாராக இல்லை கல்லூரிகள் மூடப்படுவது, மாணவர்கள் போராட்டங்கள் நடத்துவ அன்றாட அலுவல்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டால், நான் மேலும் பேசுவதை நிறுத்துவதற்குத் தயாராக இருக்கிறேன். நான் குறிப்பிட்டதெல்லாம், மாணவர்களின் கோரிக்கைகள் சரியான முறையில் தீர்க்கப்படவில்லை. அவைகளை அணுகும் முறை சரியல்ல என்பதுதான் ஒரு உயர்மட்ட அதிகாரியை ஒன் மேன் கமிஷன் என்று போட்டு.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தக் காரியங்களைப் பற்றி யெல்லாம் தீர்மானம் அனுமதிக்கப்பட்டபிறகு வேண்டுமானால் பேசலாம். இப்பொழுது இந்த அவையின் முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கிற ஒற்றி வைப்புத் தீர்மானம் சம்பந்தமாக என்ன நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை விளக்க அதற்கான சில சம்பவங்களை, விவரங்களை மட்டும் கூற வேண்டும்.

திரு க. சுப்பு: அப்படித்தான் நீதிபதி கணபதியாப் பிள்ளை கமிஷன் என்று போட்டு..............

THE HON. THIRU K. ANBAZHAGAN: I object to the whole speech suggesting what Government should do. That is not the procedure in explaining the cause for moving an adjournment motion.

MR. DEPUTY SPEAKER: The hon. Member must cite some untoward incident that made him move for adjournment of the House.

திரு கே. டி. கே. தங்கமணி: ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தால் சமீபத்தில் நடந்த ஒரு சில முக்கியமான சம்பவங்களையும், சாதாரணமாக இந்தச் சபையிலே அவைகளை எழுப்ப முடியாத நிலையில், அதே நேரத்தில் அரசாங்கம் செய்யத்தவறிய விஷயங்களையும், தவறுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் சுட்டிக்காட்டுவதற்கு உறுப்பினர் அவர் களுக்கு உரிமை கொடுக்க வேண்டும்.

Where the failure of Government has taken place, where there is failure, discussion should be allowed.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தாங்கள் அனுமதித்தால், அங்கத் தினர் அவர்களுக்குப் பதிலாக நானே இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை முன்மொழிந்து என்ன சொல்ல வேண்டும் என்பதை வேண்டுமானால் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That will be casting asperisions on the hon. Member. It is for the Hon. Speaker to decide.

THE HON. THIRU K. ANBAZHAGAN: After understanding the hon. Member Thiru Suppu persisting upon his own way of explaining things, that is why I said on behalf of the hon. Member, even the Minister himself will say what is the basis for the adjournment motion?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That is for the Hon. Speaker to say what should be the basis of the adjournment motion under Rule 42. It is not for the Hon. Minister to say what is the basis.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது இருக்கிற நெருக்கடியான நிலைமையைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு க. சுப்பு:—இப்பொழுது மிகவும் நெருக்கடியான நிலைமை என்னவென்றால், அரசாங்கம் என்ன செய்யத் தவறியிருக்கிறது என்பதை எடுத்துக் சொல்வதற்கு என்னை அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் சொன்ன காரியங்களைப்பற்றி நேற்றைய தினம்கூட கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொது விவாதங்கள் அல்லது மற்ற விவாதங்களில் நீங்கள் இதைப் பற்றியெல்லாம் பேசலாம். எத்தனையோ தடவை இதைப்பற்றியெல்லாம் பேசப்பட்டிருக்கிறது. ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கான நெருக்கடியான சில சம்பவங்கள், அதைப் பற்றியான நிலைமை, ஒற்றி வைத்தே ஆக வேண்டும் என்று வற்புறுத்துவதற்கான காரணம் ஆகியவற்றைப் பற்றித்தான் சொல்ல வேண்டும்.

திரு க. சுப்பு: துணைத் தலைவரவர்களே, இந்தக் கல்லூரிகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன என்பது ஒன்று. மூடப்பட்டிருக்கிற கல்லூரிகளைத் திறப்பதற்கு இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்குத் தவறி விட்டது. குறிப்பாக கால்நடை மருத்துவக் கல்லூரி மூடப்பட்டு எத்தனை நாட்கள் ஆகிவிட்டன என்பது அனைவருக்கும் தெரியும். அந்தக் கல்லூரியைத் திறக்க அரசாங்கம் தவறி விட்டது. அதன் விளைவு இந்திய மருத்துவக் கல்லூரிக்கு பரவியது, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்குப் பரவியது, கோவை வேளாண்மை கல்லூரிக்கு பரவியது, பின்னாலே மதுரையிலே இருக்கக்கூடிய கல்லூரிகளுக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் இப்படி தமிழகத்திலே இருக்கக்கூடிய எல்லாக் கல்லூரிகளுக்கும் பரவிக் கொண்டிருக்கும் சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்கி, அவைகளை எல்லாம் உடனடியாகத் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தவறி விட்டது என்பதுதான் காரணம். ஆகவே, இந்த காரணத்தை எடுத்துச் சொல்லி, இது அவசர பொது முக்கியம் வாய்ந்த பிரச்சினை என்றும், இதன் மீது விவாதிக்க இந்தச் சபையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு உத்தியோகப்



பற்றற்ற நீதிபதியைப் போட்டு அவர்கள் பிரச்சினைகளை விவாதித்திருப்பார்களானால் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.—இப்படியே நீங்கள் பேசிக் கொண்டு போனால் என்ன அர்த்தம்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:—ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவது என்பது ஏற்பட்டிருக்கிற நெருக்கடியான பிரச்சினையை எடுத்துக் காட்டி அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து வலியுறுத்துவதற்கும் நெருக்கடி நிலைமையை தீர்ப்பதற்கும் உதவி செய்வதற்காகத்தான் அப்படித்தான் பெரும்பான்மையான ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வருவார்கள். இதன் மூலமாக இங்கே மாணவர்களை தூண்டிவிடக்கூடிய கருத்துக்கள் சொல்லப்படுமானால் அது ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரும் நோக்கத்திற்கு ஏற்றதில்லை. ஆகவேதான் உறுப்பினர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வரும் பொழுது, வேறு கருத்துக்களை சொல்லாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. க. சுப்பு.—மாணவர்களை நான் என் பேச்சின் மூலம் தூண்டிவிடுவதற்கு முன்னால், இந்த மூடிய கல்லூரிகளைத் திறக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்காததன் மூலமாக மாணவர்களை அவர்கள்தான் தூண்டிவிடுகிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஆகவே, இதைச் சொல்லி, இந்தப் பிரச்சினை அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால், இதன் மீது விவாதிக்க இந்தச் சபையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, I wish to speak on my adjournment motion and I request the Hon. Minister for Public Health to be a little patient and calm and try his best to solve this problem.

Sir, the students of the College of the Indigenous System of Medicine at Palayamkottai have struck work. My point is that we should adjourn the business of the House to discuss how best we can solve their problem. In this context, I would like to point out that even when the College was started some years ago, there was an assurance given to the students that most of the students who passed from that college would be given appointment. Unfortunately that assurance, I am afraid, has not been kept up. In fact in a particular communication sent from the Director of Indigenous Systems of Medicine in 1971, there was a sort of assurance given that every possible effort would be taken by the Government to appoint these graduates wherever possible, namely the Hospital for Indigenous Systems of Medicine, District Headquarters Hospital, etc. Sir, I am not here to incite students and I am the last person to incite students. But we must all be united in trying to solve their problems and not increase it.

We must find out how best to provide appointment to them. If we are given an opportunity to adjourn the House it will be possible for us to discuss this matter, as also Thiru Metha's Report—I have got a copy of that voluminous report and I am sure the Hon. Minister also will be having one and if possible some of the points in that Report could be implemented. Therefore this is a very important matter. Even when the students met the Hon. Minister there was some argument and I do not want to go into it now. But all the students are sensitive and any word that is mentioned to the students will incite them and will be misinterpreted. So, I hope that the Hon. Minister will in his reply, assuage their feelings. It is only with that object, I have brought forward the adjournment motion.

So also students of some other colleges like Agricultural College are also on strike. I hope the Hon. Chief Minister or the Hon. Minister for Agriculture would reply in respect of this matter also.

திருமதி த. ந. அனந்தநாயகி:—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று கொண்டு வரப்பட்டிருக்கிற அவசரத் தீர்மானம் இந்த அரசாங்கத்திற்கு, மாணவர்கள் கல்லூரிகளுக்குப் போகாமல் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியை, கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான். நாம் ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். இன்னமும் கல்லூரிகள் திறந்து வேலை செய்யவில்லை என்றால், அது உண்மையிலே பெரிய நெருக்கடியான சூழ்நிலை என்பதை இந்த அரசாங்கம் புரிந்து இருக்க வேண்டும். அவர்கள் தாங்களாகவே இதைப் புரிந்து கொள்ளவில்லை என்பதால்தான் நாங்களாகவே இப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

குறிப்பாக, செங்கற்பட்டிலே இருக்கிற மருத்துவக் கல்லூரியை சென்னைக்குக் கொண்டு வர முயற்சிக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர்களைத் திருப்திபடுத்துவதற்காக அப்பொழுது சொன்னார்களோ என்னவோ அந்த மாணவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினையை வைத்துப் போராடுகிறார்கள். இப்பொழுது அந்த மருத்துவக் கல்லூரியை சென்னைக்கு மாற்ற முடியாது என்கிறார்களாம்.

அடுத்து பாளையங்கோட்டை இன்டிஜினியஸ் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அமைச்சர் அவர்களை வந்து சந்தித்து அந்தக் கல்லூரியை சென்னைக்கு மாற்ற வேண்டும் என்று கேட்ட பொழுது அமைச்சர் அவர்கள் கவனிப்போம் என்று சொல்லி இருந்தால் பரவாயில்லை. ஆனால் வார்த்தைகளை மோசமாக உபயோகப்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது. Your college is bogus and you are bogus என்றாராம். இப்படிக் கடுமையான வார்த்தைகளைச் சொன்னால் அந்த மாணவர்களும் "போகஸ் இலாக்கா" தான் இங்கே நடந்து கொண்டிருக்கிறதோ என்று நினைத்திருக்கக் கூடும்.

அமைச்சரை பார்க்க வருகின்ற மாணவர்களின் பிரச்சினைகளைத் தக்க முறையிலே கேட்டு, தீர்த்திருக்க வேண்டும் இந்த அரசாங்கம். அதை விடுத்து, இப்படிப்பட்ட சிறிய சிறிய பிரச்சினைகளையெல்லாம் கூட வளர்ப்பி



இருக்கிறார்கள். அதன் காரணமாக சிறு சிறு குறைகள் எல்லாம் பெரும் குறையாக இன்றைக்கு மாறி அத்தனை கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கிறது என்றால், ஆகஸ்ட் மாதம் வரையில் படிக்க வேண்டியவர்கள் படிக்கவில்லை என்றால், என்ன படித்துவிட்டு அவர்கள் வெளியே வருவார்கள் என்ற கேள்விக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். ஆகவே, நெருக்கடி ஏற்படும்பொழுது உடனடியாக அரசாங்கம் அதைத் தீர்க்க முன் வர வேண்டுமேயொழிய, பேசாமல் இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட காரணங்களைத்தான் எங்களால் சொல்ல முடியுமே தவிர ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால், மற்றவற்றைச் சொல்ல இயலாது. எனவே, அரசாங்கம் இப்படிப்பட்ட மாணவர்களுடைய பிரச்சினைகளிலே உடனடியாகத் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்றுதான் கோருகிறோம். தண்ணீர் இல்லை என்று திருநெல்வேலியிலே மக்கள் தவித்து கொண்டிருக்கிறார்கள். அதைத் தீர்த்து வைப்பதிலே கூட காலதாமதம் என்றால், என்ன அர்த்தம்? இந்த நிலை நீடிப்பது தவறு. ஆகவே, உடனடியாக அதற்கெல்லாம் நிவாரணத்தை அரசாங்கம் தேடுவார்கள் என்று நம்பி முடித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு திரு. க. அன்பழகன்:—இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக 3, 4 கல்லூரி மாணவர்கள் சில பிரச்சினைகளை எழுப்பி சில நாட்கள் வேலை நிறுத்தம் செய்து அதன் காரணமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைச் சொல்லுவதற்கான ஒரு வாய்ப்பை இங்கே ஏற்படுத்தி கொடுத்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

முதலில் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியைப்பற்றி கடைசியாக பேசிய அம்மையார் அவர்கள் சொன்னார்கள். நான் அந்த கல்லூரியை சென்னைக்கு மாற்ற ஒப்புக் கொண்டதாகவும், அதைச் செய்யவில்லை என்பதால் பிரச்சினை வந்தது என்றும் சொன்னார்கள். சென்னைக்கு அதை மாற்றுவதாக நான் எப்பொழுதும் சொன்னதில்லை, சொல்ல நேரிட்டதும் இல்லை.

பாளையங்கோட்டையில் இருக்கிற இந்திய மருத்துவக் கல்லூரியைப் பற்றி அந்த மாணவர்கள் விரும்பினால் இந்திய மருத்துவ ஆலோசனைக் குழுவைக் கலந்து படிப்படியாக அந்தக் கல்லூரியை சென்னையிலே ஏற்படுத்த முயற்சிக்கலாமா என்ற கேள்வியை 6 மாதத்திற்கு முன்னர் அந்தக் குழுவிலே எழுப்பினேன். அப்பொழுது குழுவிலே உள்ளவர்கள், அத்தனை பேரும் அதை மறுத்து விட்டார்கள். ஆகவே, ஆலோசனையை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டத்தில் கொண்டு வந்து வைக்கப்படவில்லை. இன்றைக்கு, சில நாட்களாக, அது சென்னைக்கு மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தை மாணவர்கள் தெரிவித்தார்கள். இப்பொழுது மறுபடியும் இந்தக் கருத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள்.

செங்கல்பட்டு மாவட்ட மருத்துவக் கல்லூரி சென்ற 1970–71-ல் சென்னைக்கு மாற்றப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் விடப்பட்டது. அப்பொழுது அந்த பிரச்சினை ஆராயப்பட்டு அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு என்ன குறை இருக்கிறது என்று ஆராயப்பட்டு அந்த கல்லூரி மாணவர்களுக்கு மற்ற அலபதி மருத்துவக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு கிடைக்கின்ற "ஆப்தோமாலஜி" ஆர்த்தோபாடிக்ஸ், ரேடியோலாஜி,

[திரு க. அன்பழகன்] [1972 ஆகஸ்ட் 25

சைக்காட்டிரி" ஆகிய இந்த நான்கு துறைகளில் போதுமான பயிற்சி அளிக்க வேண்டும் என்று கருதப்பட்டது. ஆக இந்த நான்கு துறைகளிலும் அவர்கள் 15 நாட்கள் வீதம் சென்னையிலுள்ள மருத்துவ மனைகளில் பயிற்சி பெறுவதற்கு ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. மறுபடியும் அண்மைக் காலத்தில் அங்கே சேருகிற நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாகவும், பல்வேறுவகையான நோய்களைப் பரிசோதிக்கும் வாய்ப்பு கிடைக்காத நிலையிலும் உள்ளது என்றும், ஆகவே, அதைச் சென்னைக்கு மாற்ற வேண்டுமென்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது. இரண்டு நாளைக்கு முன்னுல் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி குறிப்பிட்டுச் சொல்லும் பொழுது "1965-ஆம் ஆண்டிலே அந்த கல்லூரி எந்த அவசர நோக்கத்திலே ஏற்படுத்தப்பட்டது", என்பதை நான் சொல்லத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிருர். அது நோயாளிகளைப் பெறக் கூடியதாக அந்த இடத்தில் அமையவில்லை. நோயாளிகளைப் பெறக் கூடிய நிலைமையிலே அது அமைய வேண்டும் என்று நலத்துறை அமைச்சராக உள்ள நான் சொல்ல ஆசைப்படமாட்டேன்.

ஆனல் அங்கேயுள்ள மாணவர்களுக்கு தகுந்த பயிற்சியும் கிடைக்கவில்லை என்பதால் அந்தக் கல்லூரியை சென்னைக்கு மாற்றவேண்டும் என்று 3, 4 நாட்களுக்கு முன்னர் எனக்குத் தெரிவித்தார்கள். உடனடியாக அந்த மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களை எல்லாம் அழைத்து மருத்துவக் கல்வி இயக்குநர் பேசினுர்கள். நானும் அவர்களை அழைத்துப் பேசினேன். ஏதோ அமைச்சர்கள் மாணவர்களிடம் சரியாகப் பேசுவதில்லை என்று திருமதி அனந்தநாயகி ஒரு கருத்தை இங்கே சொன்னுர்கள். எனக்காவது மாணவர்களிடத்திலே 13 ஆண்டுகள் ஆசிரியனுக இருந்த பழக்கம் உண்டு. அவர் மாணவர்களை நான் மிரட்டுகிறேன் என்று சொல்லுகிருர். என்னுடைய குரலுக்கிருக்கின்ற தன்மையாகவும் அது இருக்கலாம் அல்லது இந்த பிரச்சினையில் நியாயத்தின் தன்மையாகவும் இருக்கலாம். ஆகவே, அந்த மாணவர்களிடத்திலே நான் சொன்னதெல்லாம் உடனடியாக போராட்டத்தை கைவிடுங்கள் என்பதுதான். அப்படிச் சென்னைக்கு மாற்றுவது என்ருல் அது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. படிக்கின்ற ஒவ்வொரு மாணவருக்கும் 7 படுக்கைகள் பயிற்சிக்கு இருக்க வேண்டும் என்பது அகில இந்திய மெடிகல் கவுன்சில் ஆணையாகும்.

அந்த முறையிலே சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி ஆகிய நான்கு கல்லூரிகளிலேயும் இருக்கின்ற படுக்கைகளிலே எவ்வளவு பேர் பயிற்சி பெற வேண்டும் என்று இருக்கிறதோ அவ்வளவு பேர் அங்கே இருக்கிருர்கள். அதை அந்தக் கவுன்சில் ஒத்துக் கொண்டும் இருக்கிறது. ஆனல் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியிலே சுமார் 140 மாணவர்கள் பயிற்சி பெற வேண்டியவர்களாக இருக்கிருர்கள். 3-ஆவது, 4-ஆவது, 5-ஆவது ஆண்டு மாணவர்கள் அறுவை சிகிச்சைப் பகுதியிலும் மருந்து துறை பகுதியிலும் பயிற்சிபெற வேண்டியவர்கள். அங்கே இருக்கின்ற நான்காவது ஐந்தாவது ஆண்டு பயிலும்106 மாணவர்களுக்கு 750 படுக்கைகள் தேவைப்படுகிறது.

அந்த மாணவர்களுக்கு பயிற்சிபெற எப்படி உதவி செய்யலாம் என்ற எண்ணத்தில்தான் அரசு இருக்கிறது. வருகிற ஜனவரியில் 5-வது



1972 ஆகஸ்ட் 25] [திரு க. அன்பழகன்]

ஆண்டு—இறுதியாண்டு படிப்புக்கு வருகிற மாணவர்கள் 40, 50 பேர் இருப்பார்கள். அவர்களுக்கு சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியிலும், ராயப்பேட்டை மருத்துவ மனையிலும், கஸ்தூரிபாய் மருத்துவ மனையிலும் இப்போது இருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியும் முடியுமானுல் இரண்டு மாத காலத்திற்குள் பயிற்சிக்கு வழி செய்யலாம். அத்துடன் சைதாப்பேட்டையில் இருக்கிற மருத்துவ மனையை விரிவுபடுத்தி, 60 அல்லது 100 படுக்கைகளை அதிகமாக அமைத்து, பயிற்சியளிக்க ஏற்பாடு செய்வதற்கும் யோசனை செய்யப்பட்டு வருகிறது. மாணவர்கள் நல்ல நோக்கத்தோடு தான் எங்களை அணுகுகிருர்கள். இந்த ஆண்டில் இறுதி ஆண்டில் படிக்கும் மாணவர்களுக்கு இன்னும் இரண்டு மாதங்கள்தான் இருக்கின்றன. எங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், எங்களுக்குப் பின்னுல் வருகின்ற மாணவர்களுக்காவது அந்த வாய்ப்பு கிடைக்கவழி செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். மாணவர்கள் சிறந்த பயிற்சி பெறுவதற்கு ஏற்ற வகையில் தக்க ஆய்வுகளை மேற்கொண்டு படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளோம். ஜனவரியில் முதற் கட்டமாக அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று எண்ணி இருக்கிறேம். அதோடு செங்கற்பட்டிலுள்ள பயிற்சிபெறும் ஹவுஸ் சர்ஜன்களை சென்னைக்கு மாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அதைப் பற்றியும் பரிசீலித்து வருகிறேம். இந்த முடிவுகளை எல்லாம் மாணவர்கள் ஏற்றுக் கொண்டு சென்ருர்கள்.

அடுத்து, சென்னையிலுள்ள கால்நடைக் கல்லூரியை மூடி வைத்திருப்பதாகச் சொன்னுர்கள். அந்தக் கல்லூரி மூடி வைக்கப்பட்டிருந்தது உண்மை. ஆனுல் இப்போது மூடப்பட்டிருக்கவில்லை. மாணவர்கள் திட்டவட்டமாக அந்தக் கல்லூரியைத் திறக்கவிட மாட்டோம் என்று கூறினுர்கள். மாணவர் சமுதாயத்திற்கு மதிப்பளிக்கின்ற வகையில் அவர்கள் கருத்திற்கு மாருக அரசு செயல்பட விரும்பாததால் இதுவரை மூடப்பட்டிருந்தது. அவர்கள் உணர்ச்சியை ஓரளவு அரசு உணர்ந்திருந்ததால், அப்போது திறக்கப்பட்டால் பல சிக்கல்கள் வரும் என்று எண்ணி கல்லூரியைத் திறக்கவில்லை. பின்னர் மாணவர் குழுவுடன் கலந்து பேசியதில் மாணவர்கள் வேலை நிறுத்தத்தை விட்டுவிடுகிறேம், கல்லூரியைத் திறக்க வேண்டுமென்று சொன்னுர்கள். இதற்கிடையில் அரசு நியமித்த தனி நபர் குழுவின் அறிக்கையும் வந்துவிட்டது. அதன்படி பணியாற்றக் கூடியவர்களுக்கு ஓரளவு ஊதிய உயர்வு கிடைத்திருக்கிறது. குறைபாடுகள் இருக்கலாம். அது எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கும். படிப்படியாக அதற்குத் தீர்வு காணப்படலாமே அல்லாமல் குறைபாடுகளே இல்லாத அளவுக்கு எப்போதும் இருக்க முடியாது. பூட்டிய வீட்டிற்குள்ளும் குப்பை சேர்ந்து கொண்டுதான் இருக்கும்.

இப்போது 489 மாணவர்கள் செப்டம்பர் தேர்வு எழுத வேண்டும். அந்தத் தேர்வை அக்டோபர் மாதத்திற்கு ஒத்தி வைக்குமாறு முதலமைச்சரவர்களை வேண்டிக் கொண்டார்கள். பல்கலைக் கழகத் துணை வேந்தர்தான் அதில் முடிவு செய்ய வேண்டியிருப்பதால், பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு அவர்களின் வேண்டுகோள் அனுப்பப்பட்டிருக்கிறது. துணைவேந்தர் ஆட்சிக் குழுவைக் கலந்துதான் முடிவைத் தெரிவிக்கமுடியும்.

மேலும். 249 மாணவர்கள் இடைக்காலத்தில் பண்ணை பயிற்சி பெற வேண்டும். அந்தப் பயிற்சி இப்போது வேண்டாம் என்று மாணவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதைப்பற்றிக் கல்விக்குழு—அக்கடமிக் துறையினர்—பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டும்.

அடுத்து, கால்நடைக் கல்லூரி மாணவர்களுக்கு 5 ஆண்டு காலப் பயிற்சித் தேவை. இடையிலே ஏற்பட்ட வேலை நிறுத்தத்தினால், வேலை நிறுத்த கால அளவு பயிற்சி நாட்கள் வீணாகிவிட்டன. அதனால் செப்டம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் வருகின்ற ஓய்வு நாட்களில் பயிற்சி பெற வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதன்படி மாணவர்களின் வேண்டுகோளை ஏற்று, அதற்கு வழி வகை செய்யப்படுகிறது.

அரசு தெரிவித்துள்ள கருத்தினை மாணவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதால், 18—8—72 முதல் கல்லூரி திறக்கப்பட்டிருக்கிறது. 118 மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்திருக்கிறார்கள். 80 மாணவர்கள் விடுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கத்தின் நல்லெண்ணத்தில் எப்போதுமே மாற்றமில்லை. குறைபாடுகள் இருக்குமானால், அதை உரிய முறையில் மாணவர்கள் எடுத்துச் சொல்வார்களானால் படிப்படியாக குறைகள் போக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கத் தயங்காது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பாளையங்கோட்டை இந்திய மருத்துவ கல்லூரியைப் பற்றிச் சொன்னார்கள். அங்குள்ள மாணவர்கள் கடந்த 3, 4 நாட்களுக்கு முன்னர் என்னைச் சந்தித்தார்கள். அவர்களோடு கலந்து பேசினேன். அங்கே உள்ள மருத்துவ மனை பெரிதாக இல்லை. மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி பெற அங்கு போதிய வாய்ப்புகளும் வசதிகளும் இல்லை. அவர்களுக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அந்த மருத்துவ மனையை விரிவுபடுத்தினால் மட்டும் போதாது. பாடம் போதிக்கின்ற ஆசிரியர்களும் தேர்ச்சிமிக்கவர்களாக இருக்க வேண்டும். மேலும் போஸ்ட் கிராஜுவேட் வகுப்பு தொடங்க வேண்டியிருக்கிறது. இவைகளை எல்லாம் கருத்திற் கொண்டுதான் அந்தக் கல்லூரியைச் சென்னைக்கு மாற்றுவது பற்றி கடந்த ஆண்டு கேட்டபோது, ஆலோசனைக் குழுவில் பெரும்பாலோர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அப்படி மாற்றுவது என்பதும் மிகவும் சிக்கலான ஒரு பிரச்சனைதான். இருக்கிற மருத்துவ கல்லூரியை மாற்றுவது என்பது நாற்றைப் பிடுங்கி நடுவது போன்றதல்ல. ஒரு மரத்தைப் பிடுங்கி நடுவது போன்றது. ஆகவே அதற்குச் சிறிது காலமாகும்.

கல்லூரியைச் சென்னைக்கு இப்போதே மாற்றும் எண்ணத்திற்கு இல்லாவிட்டாலும், படிப்படியாக போதிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு, கட்டடங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாணவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். கடந்த ஆண்டு கல்லூரியைச் சென்னைக்கு மாற்றலாமா என்ற ஆலோசனை எழுந்தது. சித்த மருத்துவ ஆலோசனைக் குழு அதைப் பரிசீலித்து இப்போது வேண்டாம் என்று கூறிவிட்டது. ஆகையால் இந்த ஆண்டு அங்கே கட்டடம் கட்டச் செலவழிக்கக் கருதப்பட்டத் தொகை இன்னும் செலவழிக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக சென்னையில் கட்டடத்தைக் கட்டவேண்டும் என்ற ஒரு கருத்தும் கூறப்படுகிறது. யாவும் பரிசீலனையில் உள்ளது.





அடுத்து, மற்ற மாநிலங்களில் இருப்பது போன்ற இந்திய மருத்துவ கல்வி முறையை இங்கும் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் ஆயுர்வேத படிப்பு 5 ஆண்டு காலம் படிக்கிறார்கள். இங்கே உள்ள முறைப்படி ஏற்கெனவே சித்த வைத்தியம் நான்கு ஆண்டுக் காலம் படிக்க வேண்டும். அதை 5 ஆண்டுகளாக ஆக்குவதற்குப் பாடத்திட்டத்தை மாற்ற மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்திருக்கிறோம். மதுரை பல்கலைக் கழகம் 1973–74ம் ஆண்டுக்கு அந்தப் பாடத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மதுரை பல்கலைக் கழகமே இதுபற்றி முடிவு செய்யவேண்டியிருப்பதால், அரசாங்கம் பல்கலைக் கழகத்தாரைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால், இந்த அரசு மாணவர்களின் கோரிக்கைகளைக் கேட்கவில்லை என்று சொல்ல மாட்டார்கள். எந்தக் கோரிக்கையானாலும் அரசு கேட்கிறது ; பரிசீலிக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பி.ஐ.எம். டாக்டர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஏற்ற இடங்களில் எல்லாம் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறோம். இப்பொழுது அறிஞர் அண்ணா மருத்துவ மனையில் வேறு தொகுதியைச் சேர்ந்த டாக்டர்கள் பற்றாக்குறை இருப்பதால் பி.ஐ.எம். டாக்டர்கள் நியமிக்கப்பட வழி செய்துள்ளோம். அதுமட்டுமல்ல; தமிழ் நாட்டில் உதகமண்டலம் ஒன்றைத் தவிர மற்ற மாவட்ட மருத்துவ மனைகளில் எல்லாம் பி.ஐ.எம். டாக்டர் நியமிக்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது. அறநிலையத் துறையினரால் நடத்தப்படும் மருத்துவ மனைகளில் 20 பி.ஐ.எம். டாக்டர்கள் நியமிக்கப்பட வழி செய்யப்பட்டுள்ளது. ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ள அறநிலையங்கள் எல்லாம் இந்திய மருத்துவ மனை நடத்தலாம் என்றிருக்கிறது.

அறநிலையங்கள் நாட்டு மருத்துவ முறைகளையே கையாளலாம் என்ற வகையில் இருப்பதால் அறநிலைய மருத்துவ மனைகளில் எல்லாம் இந்த டாக்டர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள 4, 5 அறநிலையங்களில் மருத்துவமனை இப்போது நிறுவி இருக்கிறார்கள். மேலும் தொடர்ந்து நிறுவப்படுவதாகத் தெரிகிறது. எல்.ஐ.எம். டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்றாலும், அவர்கள் இல்லாத இடங்களில் இந்த டாக்டர்களை நியமிக்கலாம். இவர்களை நியமிப்பதில் தடையேதுமில்லை. வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் ; அவர் தம் கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் தான் அரசு இவைகளையெல்லாம் செய்கிறது. ஆகவே நண்பர் சுப்பு அவர்கள் மாணவர்களின் குறைகளைப் போக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் முறையிலே பேச வேண்டுமே அல்லாமல் அரசாங்கத்தின்மீது என்னென்ன குறைபாடுகளை மாணவர்கள் பேரால் சொல்லலாம் என்று ருதிப் பேச வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து கோவையில் உள்ள வேளாண்மைத் துறை கல்லூரி முதுமாணவர்கள் வேலைநிறுத்தம் பற்றியும் நான் இந்த விளக்கத்தைத்

[திரு க. அன்பழகன்] [1972 ஆகஸ்ட் 25

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த மாணவர்கள் வேளாண்மைத் துறையில் பட்டப் படிப்பு பெறுகிற காரணத்தினால் மற்ற பட்டப் படிப்புக்களான பி.இ., பி.வி.எஸ்ஸிக்குச் சமமான ஊதியம் தர வேண்டும். என்றும், தங்களை கெஜட் அந்தஸ்துள்ளவர்களாக ஆக்கித் தந்திருக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு விளக்கமாகப் பதில் சொல்வதாக இருந்தால், இதில் ஒரு துறையினரை கெஜட் அதிகாரிகளாக ஆக்கவேண்டும் என்று பரிசீலிக்கிற நிலையில் இவர்களுடைய நிலை உயர்த்தப்படுவதற்கு ஏற்றாற்போல இவர்களைக் கண்காணிக்கின்ற பொறுப்பில் உள்ளவர்களையும் ஆக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இப்படி ஒன்று செய்யக் கருதும்போது அதற்குத் தொடர்பான பல வேறு பிரச்சினைகளையும் அரசாங்கம் கவனித்தாக வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இதில் உள்ள சிக்கல்கள் ஆழ்ந்து பரிசீலிக்கப்படுகின்றன. அரசாங்கம் அவர்களை கெஜட் பதிவு செய்யக் கூடாது என்ற நோக்கத்தில் இல்லை. அத்தகுதியுடைய அதிகாரிகளாக இவர்களை மாற்றுவதற்கு முன்னால் மற்ற பிரச்சினைகளையும் பரிசீலித்துக் கொண்டு முடிவு வேண்டியிருக்கிறது.

அடுத்து, மற்ற பட்டதாரிகளுக்குள்ளதுபோல தங்களுக்கு ஊதிய நிர்ணயம் இல்லை என்று சொல்கிறார்கள். பட்டதாரிகளிலேயே பல வகை உண்டு. ஒரே வகையில் ஒரேவிதமான பயிற்சியைப் பெற்ற இரண்டு பட்டதாரிகளில் கூட அவர்கள் சென்று பதவி ஏற்றுக்கொள்கிற இடம் வேறுபட்டதாக இருக்குமானால் ஊதிய வேறுபாட்டையும் இந்த நாட்டில் ஏற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட இந்த வேளாண்மைத்துறை பட்டதாரிகளுக்கு மற்றவர்களைவிட ஓராண்டு பயிற்சிக்காலம் குறைவாகவே இருக்கிறது. அரசாங்கம் மற்றவர்களோடு ஒப்பிடுகிறபோது இந்த ஓராண்டு காலத்தைக் கருதாமல் விட்டுவிடுவதற்கில்லை. ஒவ்வொரு பட்டபடிப்பிற்கும் தேவை படுகின்றவை இவை Minimum qualification for admission, duration or period of study, nature of study, service condition, recruitment possiblity, promotional opportunities. என்பது போன்ற இத்தனை பிரச்சினைகளையும் பொறுத்துத்தான் ஒவ்வொரு துறையிலும் ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது. பாரிடி என்பது பலவிடங்களில் பொருந்தி வருவதில்லை. Parity between one section and another section of service is not possible on so many back-ground conditions. ஆகவே அப்படி ஒரு வேறுபாட்டையும் சொல்ல இடமில்லை. ஏற்கனவே இருக்கிற ஊதிய விகிதத்தை எடுத்துப் பார்த்தாலும் எந்த வகையிலும் ஊதியக் குறைவும் ஏற்படவில்லை என்பதை மற்ற மாநிலங்களோடு இருக்கிற ஊதிய விகிதத்தோடு ஒப்பிடுகிறபோது உணர முடியும். அந்த ஒரு குறிப்பை மட்டும் நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன். ஊதியம் திருத்தி அமைக்கப்படுவதற்கு முன் தமிழகத்தில் அவர்களுக்கு ரூ. 200—10—250—15—400 என்று இருந்தது. திருத்தி அமைக்கப்பட்டவுடன் ரூ. 375—15—495—20—575—25—650. ஆந்திர பிரதேசத்தில் இன்றைக்கு இருப்பது ரூ. 200—12—320—இ.பி. 16—400. மைசூரில் ரூ. 250—10—300—15—420 இ.பி. 20—500. கேரளாவில் ரூ. 250—15—340—20—500 ஆகும். இதிலே மினிமம் மாக்சிமம் எவ்வளவு என்றும் பார்க்கலாம்.



1972 ஆகஸ்ட் 25] [திரு க. அன்பழகன்]

| | | | |
|---|---|---|---|
| கேரளா மினிமம் | ரூ. 424 | மாக்சிமம் ரூ. | 693 |
| மைசூர் ,, | ரூ. 411 | ,, | 679 |
| ஆந்திரா ,, | ரூ. 336 | ,, | 576 |
| தமிழகம் ,, | ரூ. 415 | ,, | 690 |

ஆகும். அவர்களுக்கு எந்தவித ஊதியக் குறைவும் ஏற்பட்டுவிடவில்லை. இந்த அரசாங்கம் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதிலும் எப்போதும் ஆதரவு காட்டும். இந்த மாணவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சரைச் சந்தித்தபோது கூட அவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, பெற வேண்டிய கல்வித் தகுதியைப் பெறுவதில் ஆர்வமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். கடந்த நான்கைந்து நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தாலும் உடனடியாக வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு படிக்கின்ற காலத்தில் கிடைக்கின்ற நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதாக அரசாங்கத்தின் சார்பாகவும் நான் கேட்டுக் கொள்கிறேன். எந்தப் பிரச்சினையையும் அரசாங்கம் அணுகாமல் இல்லை. எந்தப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டுமென்ற மனப்பான்மை இல்லாமல் இல்லை. மாணவர்களைச் சந்தித்துப் பேச மறுக்கிற மனப் பான்மையும் இல்லை. ஊழியர்களிடத்தில் அவமதிப்புக் காட்டுகிற நிலையும் இல்லை. ஆகவே அவை முன் வைக்கப்பட்டிருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒரே ஒரு சிறிய விளக்கம். இன்றைக்கு ஒரு நல்ல சூழ்நிலை வெட்டர்னரி கல்லூரியில் ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் மாணவர்களும் சரி, பெற்றோர்களும் சரி ஒரு கடிதம் எழுதித் தரவேண்டும் என்று இருப்பதைக் கைவிடுவார்களா ?

**May I know whether it is possible to withdraw that appeal wherein the signature of the student and the parent is necessary ?**

மாண்புமிகு திரு க. அன்பழகன்: அந்தக் கடிதம் கூட வேறு பல கல்லூரிகளில் அச்சிட்டுக் கையொப்பம் வாங்கப்படுகிற பாரத்தைப் பார்த்தே அச்சிடப்பட்டது. புதியதாக இங்கே கொண்டு வரவில்லை, மாணவர்கள் விதியில் ஓரளவு கட்டுப்பாடு இருந்தால் தான் எல்லா மாணவர்களுக்குமே படிக்கிற சூழ்நிலை ஏற்படும். ஒருசிலர் அரசியல் பேசுவதன் காரணமாக பலரது படிப்பு வீணாக இடமளிக்கக் கூடாது. பெற்றோர்களிலும், மாணவர்களிலும் 90 சத விகிதத்தினர் நல்ல முறையில் படித்துத் தேர்ச்சி பெற வேண்டும் என்றுதான் நினைக்கின்றனர். பத்துபேர்களுக்காக மற்றவர்களுக்கு இடையூறு ஏற்பட அனுமதிப்பது சரியல்ல. பெற்றோர்கள் கையெழுத்தில்லை என்றாலும் பிள்ளைகளின் கையெழுத்து மட்டும் இருந்தால் கூடப் போதுமானது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்களது விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அவசியம் இல்லை என்று கருதி அவற்றிற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

(ஆ) மூடப்பட்டிருக்கும் பி & சி ஆலையைத் திறக்க நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்து :

MR. DEPUTY SPEAKER: The hon. Member Thiru R. Ponnappa Nadar has given notice of the following adjournment motion :

" The failure of Government to re-open the B & C Mills which has been closed since 10th August 1972 and arrest of 73 workers on 23rd August 1972 and consequent unrest among workers in that area."

Thiruvalargal K. T. K. Thangamani and N. Marudhachalam have also given similar notices.

திரு ஆர். பொன்னப்ப நாடார்: நானும் திரு கே. டி. கே. தங்கமணியும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். இன்று தொழில் நிறுவனங்கள் சரியானபடி முறையில் இயங்குவதற்கு வழிவகைகளை வகுக்க வேண்டும். அதுவும் குறிப்பாக பி. அண்டு சி. மில் 14 ஆயிரத்திற்கு மேலான தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனம். அந்த நிறுவனம் மூடியிருக்கிற காரணத்தினால்பெரும் அளவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வேலை நிறுத்தத்தை நீக்க அரசாங்கம் கவனம் செலுத்தியாக வேண்டும். இந்த நிறுவனத்தை 3 வாரத்திற்குள் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாகக் கூறப்பட்டது. அந்த முயற்சி வெற்றி பெற்றதாக தெரியவில்லை. அதே நேரத்தில் சில ஊழியர்கள் கைது செய்யப்பட்டு வருவதும் விரும்பதக்க நிகழ்ச்சியல்ல. தொழில் துறையில் அமைதிக் குறைவு ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் இதுபோன்ற செயல் இன்னும் பெரும் அளவு பாதகத்தைதான் விளைவிக்கும். ஆகவே பி. அண்டு சி. மில் திறக்கப்படுவது பற்றி கவனிப்பது அவசியமும், அவசரமும் வாய்ந்த ஒன்றாக இருப்பதனால் உடனடியாக இந்த அவையை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி: சென்றவாரம் இதே பி. அண்டு சி. மில் கதவு அடைப்புபற்றி எழுப்பப்பட்ட விவாதத்திற்கு 21-ம் தேதி மில் திறக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நடந்த விஷயம் எதுவும் தெரியவில்லை. அதுபற்றி தெரிந்திருக்குமானால் இந்த மாதிரி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கவே மாட்டேன். அதுவும் இன்று அசெம்பளிக் கூட்டத்தின் கடைசி நாள். ஆகையால்— முன்பு கொடுத்த வாக்குறுதிக்கு அப்பால் என்ன என்ன காரியங்கள் நடந்தன, மில் திறக்கப்படாமல் போனதற்குக் காரணம் என்ன, உடனடியாக அதைத் திறப்பதற்குஎடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். பத்திரிகையில் வந்திருக்கிற தகவல்களை வைத்துப் பார்க்கிறபோது சில தொழிலாளர்கள் தடை உத்தரவை மீறியதாகவும் 73 பேர்கள் அதற்காகக் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வந்துக்கொண்டிருக்கிறது. அம்மாதிரி தொடர்ந்து கைது செய்யப்படுகிற நிலைமை ஏற்பட்டால் தொடர்ந்து வேறுபல சிக்கல்கள்தான் ஏற்படும் என்ற காரணத்தினால் இந்த அவசரமும், அவசியமுமான ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வர இருக்கிறேன். இதை ஏற்று சபையை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிப்பது நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களும் 10-8-1972 முதல் பி. அண்டு சி. மில் மூடப்பட்டிருப்பது குறித்தும் 23-8-1972-இல் 63 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதும் அதன் காரணமாகத் தொழிலாளர்களிடையே ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலை குறித்தும் விவாதிக்க பேரவையை ஒத்திவைக்க வேண்டும் என்கிற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, ஒரு சிலர் பவர் ஹவுசிலே புகுந்து மின் சக்தியைத் துண்டிக்கவும் முற்பட்டனர், ஆதலாலே, ஆலை நிர்வாகிகள் ஆலையை மூடவேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டதை ஏற்கெனவே உங்களுக்கு எடுத்துக் கூறி இருக்கிறேன். மீண்டும் அதை நினைவுபடுத்துகிறேன். அதற்குப் பிறகு, ஆலை நிர்வாகிகளும் தொழிற்சங்க நிர்வாகிகளும், தொழிலாளர் துறைச் செயலாளரும் கலந்து பேசி, பிரச்சினைகள்மீது முடிவெடுப்பதற்குப் பத்து நாள் ஆகலாம். ஆகவே, அதற்குள் ஆலை திறக்கப்பட வேண்டும்; தொழிலாளர்கள் மீது பழிவாங்கும் முறையில் மானேஜ்மெண்ட் நடவடிக்கை எடுக்குமானால், அது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், தொழிலாளர்களில் ஒரு சாரார், அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உடனடியாக எங்களுக்கு ஊதியம் அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆலைக்குச் செல்பவர்களை உள்ளே செல்ல விடமாட்டோம் என்று சொன்னார்கள். ஆக அவ்வாறு, எதிர்ப்புக் காட்டிய 63 பேர்கள் நேற்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த 63 பேர்களில் பெரும்பாலோர் தி.மு. கழகத்தினர் என்பதை மீண்டும் நினைவூட்ட விரும்புகிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்றால், அரசாங்கம் அரசாங்கச் சக்தியைப் பயன்படுத்தி தங்கள் கட்சியின் சார்பில் தொழிற் சங்கத்தை வளர்க்கிறது, கழகத்திற்கு ஒரு நியாயம், மற்றவர்களுக்கு ஒரு நியாயம் அளிக்கபடுகிறது என்று கூறுகிறார்களே அவர்களுக்காக இதை எடுத்துக் காட்டுகிறேன்.

கடைசியாக, நிர்வாகம் தொழிற்சங்கத்தோடு பேசியதிலிருந்து வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதைப்பற்றி நாளைக்கு 26-ம் தேதி சொல்வதாக தெரிவித்திருக்கிறார்கள், அநேகமாக, நாளையதினம் ஒரு நல்ல முடிவுக்கு வருவார்கள் என்று நம்புகிறேன். தொழிற்சங்கத்தில் ஒரு சார்பினர் தொழிலாளர் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நிர்வாகிகள் கூறினார்களே, அது கைவிடப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால், சிம்சன் கம்பெனியிலே ஒரு நியாயம், இங்கு ஒரு நியாயமாக இருக்க முடியாது என்று முதல்வர் அவர்கள் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள். எனவே, சிறையிலே இருக்கும் தொழிலாளர்களானாலும், வெளியேயிருக்கும் தொழிலாளர்களானாலும் அரசாங்கத்தை நம்பி வேலைக்குச் செல்ல வேண்டும். அதற்குப் பிறகு, நிர்வாகிகள் விசாரணை முடிந்து குற்றச்சாட்டுக்குத் தண்டனை அளித்தால், அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து, பழிவாங்கும் நிலையிருந்தால், அதைத் தவிர்க்க முற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த வேலை நிறுத்தம் அங்கு இரு சாராருக்கும் இடையே ஏற்பட்ட வேறுபாடே தவிர வேறில்லை. எனினும் அரசாங்கம் இதைப்பற்றிக் கவலைப்படாமலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

—

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>.—மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

## 3. அமைச்சர் அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டத்தில், இந்திய உணவுக் கழகம் நெல் கொள்முதல் செய்யும் முறை பற்றியும், விநியோகிக்கும் முறைபற்றியும் உணவு-வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>.—அடுத்து பேரவையின் 82-வது விதியின் கீழ் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>.—தலைவர் அவர்களே, இந்திய உணவுக் கழகம், தஞ்சாவூர் மாவட்டத்தில் தங்களுக்குள்ள அரைவை ஆலைகள், உலர வைக்கும் ஆலைகள் ஆகியவற்றின் உதவியுடன் குறுவைப் பருவத்தில் சுமார் 40,000 டன் நெல் கொள்முதல் செய்ய இயலும் என்று தெரிவித்துள்ளது. இது கிட்டத்தட்ட 25,000 டன் அரிசிக்கு சமமான அளவாகும். உற்பத்தியாளர்களுக்கு நியாயமான குறைந்த விலை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் தேவையான அளவுக்கு உணவுப் பொருள் வழங்கு கழகம் கூடுதலாகக் கொள்முதல் செய்யும்.

போதுமான இருப்பு நிலையைக் கருத்திற் கொண்டும் (அரசு இருப்பில் 1,00,000 டன்னுக்கு மேலும், இந்திய உணவுக் கழகத்திடம் 25,000 டன் அளவுக்கும்) பயிர் செய்யப்படாத காலத்தைக் கருத்திற் கொண்டும் சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வயது வந்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் அரிசி அளவு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை 2 கிலோ கிராம் ஆகவும், 12 வயதுக்குக் குறைந்த சிறுவர் ஒருவருக்கு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை 1 கிலோ கிராம் ஆகவும் அதிகரிக்கப்படுகிறது. தற்போது வயது வந்தவருக்கு, சிறுவருக்கு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வழங்கப்படும் அரிசி அளவு முறையே 1.50 கிலோ கிராம், 0·75 கிலோ கிராம் ஆகும். அரசு சில்லறை விற்பனைக் கடைகளில் துவரம் பருப்பு வழங்கப்பட்டு வருகிறது. விற்பனை அளவைக் கொண்டு இச் சோதனை முறை மேலும் விரிவாக்கப்படும். இந்திய உணவுக் கழகத்திடமிருந்து கடலை, கடலைப் பருப்பு வந்து சேர்ந்ததும் அரசு சில்லறை விற்பனைக் கடைகள்—நியாயவிலைக்கடைகள்—மூலம் அவை வழங்கப்படும். இது குறித்து இந்திய உணவுக் கழகத்திற்கு எழுதப்பட்டுள்ளது. அரசுக் கடைகள், நியாயவிலைக் கடைகளில் உணவுப் பங்கீட்டு அட்டைகளைக் காட்டி வீட்டு உபயோகத்துக்காக கோதுமை பொருள்களை வாங்கிக் கொள்ளலாம். பெருமளவில் பொருள்கள் வாங்குவோர்கள் கடந்த கால நுகர்வு குறித்த புள்ளி விவரங்களைக் காட்டி உணவுப்பொருள் வழங்கு அதிகாரிகளுக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளூர் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அவர்கள் அவசியமெனக் கருதினால் சர்க்கரை விற்பனை செய்யும் நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி இருப்பை தங்கள் உசிதம் போல் வழங்கலாம். பல்வேறு மாவட்டங்களில் அரசு கிடங்கு வசதிக் கழகத்தின் கிடங்குகளில் இருப்புகள் இருக்கின்றன.



அரசு இருப்புகளை, கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையோரப் பகுதிகளில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இதனால் தனிப்பட்டவர்கள் அரிசி எடுத்துச் செல்வது முழு அளவில் தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, குறுவையைப் பொறுத்த மட்டில் நான் ஏற்கெனவே சொன்னேன். குறுவை அறுவடைக்கு வருகிற நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு கிடைக்கிறதோ அவ்வளவையும் உணவுக் கழகமும், தமிழ்நாடு வர்த்தகக் கழகமும் வாங்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்.

### விதி 41(3)ஐத் தளர்த்தல்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>.—தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"பேரவையின் விதி 41(3)-ஐ தளர்த்தி, இரண்டுக்கு மேற்பட்ட தீர்மானங்களை இன்று எடுத்துக் கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>.—பேரவையின் விதி 41-ன் கீழ், திரு. எ. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர் இருக்கையில் இல்லை. ஆகவே, தீர்மானம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

## 5. கவன ஈர்ப்பு.

(அ) திருச்செந்தூர் பகுதியில் இறால் மீன் பிடிப்பதுபற்றி ஏற்பட்ட தகராறு குறித்து :

**THIRU N. DENNIS—Sir, I call the attention of the Hon. Minister for Harijan Welfare to a matter of urgent public importance, namely, the dispute over the prawn fishing at Tiruchendur area between various sections of people affecting harmony and export.**

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து** : திருச்செந்தூர் பகுதியில் மக்களில் பல பிரிவினருக்கிடையே ஒற்றுமையும் மீன் ஏற்றுமதியும் பாதிக்கப்படும் வகையில், இறால் மீன் பிடிப்பது பற்றித் தகராறு ஏற்பட்டது குறித்து மாண்புமிகு உறுப்பினர் தமது நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தில், கட்டுமரங்களையும், நாட்டுப் படகுகளையும், பயன்படுத்தி மீன்பிடித்துவரும் ஓவரி, மணப்பாடு, வீரபாண்டியன்பட்டிணம், பெரியதாழை கிராமத்து மீனவர்கள் இந்தப் பகுதியில் விசைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பதற்கு

மறுப்பு தெரிவித்து வருகின்றனர். இந்தத் தகராறு ஓராண்டுக்கு மேலாகவே நீடித்து வந்துள்ளது. தூத்துக்குடி உதவி ஆட்சியாளர் சில சமரச ஏற்பாடுகளைச் செய்தார். 4—10—1971-ல் இருதரப்பினரிடையே ஓர் ஒப்பந்தம் கையொப்பமாகியது.

18—10—1971 நாளன்றிரவு, திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், வீரபாண்டியன்பட்டினம் கிராமத்துக்கருகில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருந்த விசைப் படகுகள், நாட்டுப்படகுச் சொந்தக்காரர்கள் சிலரால் தாக்கப்பட்டு, எரிக்கப்பட்டுவிட்டன. பன்னிரண்டு படகுகள் முழுவதும் தீய்ந்து போயின. மூன்று படகுகள் சேதமடைந்தன. இழப்பு ரூ. 9·00 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டது. 1—11—1971-ல் விசைப் படகுச் சொந்தக்காரர்கள் எதிர்த் தாக்குதல் நடத்தினர். இதில், கட்டு மரங்கள், நாட்டுப் படகுகள் செலுத்தும் 12 மீனவர்கள் காயமுற்றனர். கட்டுமரங்களுக்கும் நாட்டுப் படகுகளுக்கும் ரூ. 50,000 வரை சேதம் ஏற்படுத்தப்பட்டதாகவும் அந்தப் படகுகளுள் ஒன்று கடலில் மூழ்கடிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஓவரி, மணப்பாடு, பெரியதாழை வீரபாண்டியன்பட்டினம் கிராமங்களைச் சேர்ந்த விசைப்படகுச் சொந்தக்காரர்களுக்கும் நாட்டுப்படகு மீனவர்களுக்குமிடையே நட்பிணக்கமான உடன்படிக்கை செய்து வைக்க, வருவாய்த்துறை, காவல்துறை மீனளத்துறை அதிகாரிகள் தங்களால் இயன்ற முயற்சிகள் மேற்கொண்டு, அவர்களைக் கொண்டு ஒப்பந்தம் ஒன்று கையொப்பமாகியிருந்தும், இந் நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. மீனளத்துறை இயக்குநர் அளித்த சில கருத்துகைகளின் அடிப்படையில், அரசு, வேளாண்மைத் துறையின் 7—1—1972 நாளிட்ட 56-ம் எண் ஆணையில், இவ் வழக்குகளை விரைவில் புலனாய்வு செய்வதற்குத் தனிக் காவலர்படையை அனுப்பிவைக்குமாறு காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்குக் கட்டளையிட்டது. நங்கூரம் பாய்ச்சப்படும் இடத்தில் விசைப் படகுகளின் பாதுகாப்புக்குப் போதிய பந்தோபஸ்து ஏற்பாடு செய்து, தேவைப்பட்டால், ரோந்துப் படகுகளில் படைக்கலம் தாங்கிய காவலர்களை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் அவருக்குக் கட்டளையிடப்பட்டது. மேற்சொன்ன ஆணைகளுக் கிணங்க, காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல், திருநெல்வேலி காவல்துறை சூப்பிரண்டுக்கு அவசியமான கட்டளைகளைப் பிறப்பித்தார். மேற்கொண்டும் ஒவ்வாத நிகழ்ச்சி எதுவு மில்லாமல், அந்தப் பருவத்தில் இறால் மீன் பிடிப்பு நடைபெற்றது.

இந்த மீன்பிடிபருவத்திலும் காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கு இதைப்போன்ற கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன நிலைமையை உன்னிப்புடன் கவனித்து, ஏதேனும் நிகழ்ச்சிகள் ஏற்பட்டால், அவை பற்றி அரசுக்கு உடனடியாகத் தெரிவிக்குமாறு மீனளத்துறை இயக்குநரும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பருவத்தின்போதும், இருதரப்பினரிடமிருந்தும் இது குறித்துப் பல முறையீடுகள் வந்துள்ளன. மீனளத்துறை இயக்குநரும்,



திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், கட்டுமர மீனவர், விசைப்படகுச் சொந்தக்காரர்கள் ஆகிய இருதரப்புப் பிரதிநிதிகளுடன் உடன்பாட்டுக்கு பேச்சு வார்த்தைகள் நடத்தினர். ஆனால், பலனேதும் கிட்டவில்லை. பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் இருதரப்புப் பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றை 17—8—1972-ல் கூட்டி, அவர்களுடன் இது பற்றிக் கலந்து பேசினார். இந்தப் பேச்சு வார்த்தைகளின் பலனாக, நட்பிணக்க முறையில் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. உடன்படிக்கை நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(i) திருச்செந்தூர் வட்டக் கடலோர மீன்பிடிப்புப் பகுதிகளில், வாரத்தில் ஆறு நாட்களில், அதாவது, திங்கட்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிவரையில் கட்டுமர, நாட்டுப் படகு மீனவர்கள் மீன் பிடிக்கலாம்.

(ii) திருச்செந்தூர் வட்டக் கடலோர மீன்பிடிப்புப் பகுதிகளில் விசைப்படகுக்காரர்கள், ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே, அதிலும் காலை 8 மணியிலிருந்து நள்ளிரவுக்குள் மட்டுமே மீன் பிடிக்கலாம்; அதாவது, விசைப்படகுக்காரர்கள் நள்ளிரவு 12 மணிக்கு மீன் பிடிக்கும் இடத்திலிருந்து திரும்பிவிட வேண்டும் ;

(iii) இந்த மீன்பிடிப் பகுதிகளில் செலுத்தப்படும் விசைப் படகுகளின் எண்ணிக்கை 150-க்கு மேற்படக் கூடாது ;

(iv) விசைப்படகுக்காரர்கள், பின் சொல்லிய நிபந்தனைக் குட்பட்டு, வாரத்தில் எஞ்சிய நாட்களில், திருச்செந்தூர் கடலோர மீன்பிடிப் பகுதிகள் நீங்கலாக மற்றப் பகுதிகளில் தாராளமாக மீன் பிடித்துக்கொள்ளலாம். இந்த மீன்பிடிப் பகுதிகளுக்கு அல்லது இந்தப் பகுதிகளின் வழியாக இவர்கள் வரக் கூடாது ; இந்த ஆறு நாட்களில் விசைப்படகுக்காரர்கள் வடக்கு நோக்கியே செல்ல வேண்டும்.

(v) மேற்சொன்ன நிபந்தனைகளை மீறி 150 விசைப்படகுகளுக்கு மேல் செலுத்தப்பட்டால், அல்லது எத்தரப்பினராவது, விசைப்படகுக்காரர் அல்லது கட்டுமரக்காரர் அல்லது நாட்டுப் படகுக்காரர் எவராவது, மேற்சொன்ன நிபந்தனைகளை எந்த முறையிலாவது மீறினால், இது குறித்து, சம்பந்தப்பட்ட மீனளத்துறை உதவி இயக்குநருக்கு பாதிக்கப்பட்ட நபர் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். அவர், அதன் பேரில், தகுந்த நடவடிக்கை எடுப்பார் ;

(vi) இந்தப் பகுதியில் நடப்புக் கால மீன் பிடிப்பின் போது, சட்டம் ஒழுங்கை நிலை நாட்டவும், ஒப்பந்த நிபந்தனைகளைச் செயல் படுத்தவும், தேவையான காவலர் பந்தோபஸ்து தொடர்ந்து நீடிக்க வேண்டும்.

விசைப்படகுக்காரர்களுக்கும், நாட்டுப் படகுக்காரர்களுக்கு மிடையே ஏற்படுகிற மோதல்கள் குறித்து கடலோர மாநிலங்களிலிருந்து இந்திய அரசுக்கும் தகவல்கள் வந்துள்ளதால்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 ஆகஸ்ட் 25

இந்தப் பிரச்சினை குறித்து இந்திய அரசும் தீவிர நாட்டம் செலுத்தி வருகிறது. பல்வேறு வகைப் படகுகளைக் கொண்டு கடலில் மீன் பிடிப்பதற்கான பகுதிகளை வரையறுப்பது குறித்து இந்திய அரசு பரிசீலித்து வருகிறது. இவ்வரசின் கருத்துக்களை இந்திய அரசு கேட்டுள்ளது. இது, மீனளத் துறை இயக்குநருடன் கலந்தாலோசிக்கப் பட்டுப் பரிசீலனையில் உள்ளது.

திரு என். டென்னிஸ் : இதன்மூலம் மீன் ஏற்றுமதி எவ்வளவு பாதிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதனால் ஏற்றுமதி ஒன்றும் பாதிக்கப்படவில்லை.

(ஆ) தர்மபுரி மாவட்டத்தில் நிலவும் பஞ்சநிலை குறித்து

THIRU B. VENKATASWAMY: Sir, I call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the serious situation arising out of the drought condition prevailing in Dharmapuri District in general and Hosur taluk in particular.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, the Collector of Dharmapuri has reported that during the year 1972 there was practically no rain till the end of April, 1972. In some places where drinking water was not available, local arrangements were made by the Panchayat Unions to deepen the wells. Fortunately, the rains in May and June 1972 afforded great relief, particularly in regard to the drinking water facilities, even though the irrigation sources were not benefited by the rains. The average rainfall in May and June, 1972 was 167·4 mm. and 120·84 mm. respectively. However, the supply position in the Krishnagiri Reservoir Project was satisfactory and water was let out from this Project with effect from 17th July 1972 for raising the first crop. It is reported that normal agricultural operations under this ayacut are even now in progress. The normal rains expected during the months of July and August 1972 have failed. The situation is being closely watched, atshe entire district, except parts of Krishnagiri taluk, Denkanikottah taluk and Hosur taluk, has been threatened with semi-drought conditions due to falure of rains for the past two months. The Collector has however, reportid that foodgrains including Ragi and millets were available in adequate quantities to meet the local needs, and that there is no abnormal rise in prices due to scarcity conditions.

So far as Hosur taluk is concerned, it is reported that the situation in this taluk cannot be said to be worse than those prevailing in other parts of the district. During the week ended 12th August 1972 there was a rinfall of 46·16 mm. in Hosur taluk and these rains have, to some extenthleaped the standing crops in Hosur taluk.



1972 ஆகஸ்ட் 25]

THIRU B. VENKATASWAMY: Sir, in Pennagaram, Hosur, Krishnagiri, Devenkanikottah and other areas, there is scarcity for drinking water. I have already represented the matter to the Hon. Minister. People are migrating from the district because there is no work. So, may I know whether drought relief works would be started in the affected areas of the district ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, a Member of the Board of Revenue is touring the district and he is expected to return back in a couple of days. As soon as he returns, he will submit a report and the Government will consider it as soon as it is received.

(இ) காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து மத்திய அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் முடிவும், அதனை நிறைவேற்றுவதில் தற்போதைய நிலைமை ஆகியவைபற்றியும்

THIRU K. T. K. THANGAMANI: Sir, I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the result of the talks on Cauvery dispute with the Union Government and the present stage of its implementation.

மாண்புமிகு திரு எஸ்.ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, புதுடில்லியில் 1972 மே 29-ம் நாள் முதல் 31 ஆம் நாள் வரை, தமிழ்நாடு, மைசூர், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் முதலமைச் சர்களைக் கூட்டி டாக்டர் கே.எல். ராவ் ஏற்பாடு செய்த கூட்டத்தில், காவிரி நீர்த் தகராறினைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டதை உறுப்பினர்கள் அறிவர். மேலும், காவிரி நீர், அதன் பயன் குறித்து விவரங்களைச் சேகரிக்க பொறியாளர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள், அவசியமாயின் வேளாண்மை வல்லுநர்களையும் கொண்ட ஆய்வுக் குழு ஒன்றை மத்திய அரசு அமைக்கலாம் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆய்வுக் குழு கொடுக்கும் விவரங்களைக் கொண்டு, காவிரி நீரை மூன்று மாநிலங்களும் பங்கிட்டுக்கொள்வது பற்றி ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டி மூன்று மாநிலங்களின் முதலமைச்சர்களிடையே பேச்சு வார்த்தை நடைபெறும். ஆறு திங்களுக்குள் அத்தகைய உடன் பாட்டுக்கு வர உதவி செய்யவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கிடையே, காவிரி நீர் பிரச்சினை குறித்துத் தற் போது என்ன நிலை இருந்த போதிலும் அதற்கு மேற்பட்டு காவிரி நீரைத் தேக்கி வைப்பதாலோ காவிரி நீரைப் பயன் படுத்துவதாலோ பிரச்சினையை மேலும் சிக்கலாக்க எந்த மாநிலமும் முயற்சி எடுக்கக் கூடாது என்று அக் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப் பட்டது. மேற்சொன்ன ஒப்பந்தத்தையொட்டி காவிரி நீர் குறித்த தகவலைத் திரட்ட கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை இந்திய அரசு அமைத்துள்ளது :—

(1) திரு ஆர். ஆர். அஹூஜா .. (தொழில் துறை) ஓய்வு பெற்ற (சிந்து நதி) ஆணையாளர், இணைச் செயலாளர், பாசன-மின்விசை அமைச்சகம்.

(2) திரு ஜதீந்திரசிங் .. .. ஓய்வு பெற்ற தலைமைப் பொ யாளர், பஞ்சாப்.

(3) டாக்டர் ஜே.எஸ். படேல் .. ஓய்வு பெற்ற வேளாண்மை ஆணையாளர், உண வேளாண்மை அமைச்சகம்

(4) திரு நீதிபதி பி.டி. பால் (நீதிபதி பம்பாய் உயர்நீதி மன்றத்தி உறுப்பினர்). ஓய்வு பெற்ற நீதிபதி.

இக்குழு 15—6—1972-லிருந்து தனது பணியைத் தொடங் யது ; இக்குழு தனது அறிக்கையை இந்திய அரசின் பாசன மின்விசை அமைச்சகத்திற்கு 1972 செப்டம்பர் 13 ஆம் நாளுக்கு அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நமது நிலையை தக்கவாறு எடுத்துரைக்க இயலும் வகையிலும், மத்தியக் குழுவிற் உதவவும் கீழ்க்கண்ட அதிகாரிகளைக் கொண்ட மாநில அளவிலா சிறப்புக் குழு ஒன்றையும் இந்த அரசு அமைத்துள்ளது :—

(1) திரு எஸ்.பி. நமசிவாயம் (பாசனத்), தலைமைப் பொற யாளர்.

(2) திரு ஆர். விஸ்வநாதன், வேளாண்மை இணை இயக்குந

(3) திரு வி. எ. வெங்கடாஜலபதி, சிறப்பு அதிகாரி, காவி நீர் சட்டப் பிரிவு.

(4) திரு என். கோதண்டபாணி, மின்சாரத் தலைமைப் பொறியாளர் தமிழ்நாடு மின் வாரியம்.

ஆய்வுக் குழுவிற்குத் தேவைப்படுகிற தகவலின் ஒரு பகுதியை இந் அரசு ஆகஸ்டு 9-ம் நாளில் அதற்கு அனுப்பியுள்ளது ; எஞ்சிய தகவ 1972 ஆகஸ்டு 25 ஆம் நாளுக்குள் அனுப்பப்படலாம். தேவை பட்டால் பின்னொரு நாளில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வத கான தங்களுடைய உரிமைக்குப் பாதகமில்லாமல், காவிரி நீர் தகராறு குறித்து தலைமை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந் தனது வழக்கை திரும்பப் பெறவும் மாநில அரசு முடிவு செய்துள்ளது அவ்வாறே, காவிரி நீர்த் தகராறு குறித்த 1/1971 ஆம் என் வழக்கைத் திரும்பப் பெறுவதற்கான அனுமதி கேட்டு விண்ணப்ப ஒன்று 22—7—1972-ல் தலைமை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மத்திய ஆய்வுக் குழு தனது அறிக்கையைக் கொடுத்தவுடன் மூன்று மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள் மீண்டும் சந்திப்பர்.

திரு கே. டி. கே. தங்கமணி: மத்திய அரசு மே மாத ஒப்பந்தத்தின் அடிப்படையிலே அமைத்திருக்கக்கூடிய, இந்தக் குழு, 15—6—197 முதல் செயல்படும் [illegible]





டைய சிபாரிசுகள் ஆகஸ்டு 9 ஆம் தேதி அனுப்பப்பட்டுள்ளதாகச் சொன்னீர்களே, அதற்கு பதில் வந்திருக்கிறதா ? அந்தப் பதிலின் அடிப்படையிலே மேற்கொண்டு சிபாரிசுகள் ஏதாவது அனுப்புவது பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கெனவே குறிப் பிட்டதைப் போல சில விவரங்களை அனுப்பியிருக்கிறோம். இன்னும் மற்ற விவரங்கள் அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அங்கிருந்து பதில் வரும் என்று எதிர்பபார்க்கவில்லை. முற்ப 11-0

This Government has been intimated that the Committee has proposed to reach Madras on 6th September 1972 and leave Madras for Delhi on 13th September 1972.

இதற்கிடையே அந்தக் குழு தமிழகத்திற்கு வந்து பல இடங்களைப் பார்வையிடுவதாக இருக்கிறது.

The Member has also requested this Government to furnish them a detailed tour programme for their visit. It has been sent separately. The committee has also stated that as the analysis of the data and the number of studies to be done after the receipt of the particulars from the State Governments would involve a tremendous amount of work, the Committee has come to the conclusion that they will not be in a position to submit their report before the 15th of September 1972 unless the data from all the States is received well in time. He has also promised that the Committee will discuss this matter further, when they visit this State from 6th September to 13th September 1972 and that in the meantime this aspect may be brought to the notice of the Minister for Works and the Chief Minister.

It may be mentioned that the following 2 volumes have been sent to the Committee on 9th August 1972:—

(i) Volume I—Cauvery Basin—Maps.

(ii) Volume II—Cauvery Basin Working Tables.

The remaining particulars are being compiled by the Chief Engineer (Irrigation) and are expected to be finalised by 25th August 1972.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் 21 ஆம் தேதியன்று மதுரை முனிசிபாலிட்டி விஷயமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது இதுவரையில் வரவில்லை, அதற்கு காரணம் என்ன?

### 6. அறிக்கை அளித்தல்.

"நாத்திகம்" நாளிதழ் மீதான உரிமை மீறல் வழக்கு பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கை.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, 10-3-1972-ம் தேதியிட்ட "நாத்திகம்" நாளிதழ் மீது கொண்டு வரப்பட்ட உரிமை மீறல் பற்றிய அவையுரிமைக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

### 7. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்ற சட்ட முன் வடிவு எண் 37/1972)—தொடர்ச்சி.

*Mr. Speaker* : Dr. Hande may now continue his unfinished speech of yesterday.

*Dr. H. V. Hande* : Sir, unless this Bill is referred to a select Committee or referred for eliciting public opinion, it will produce hardship among thousands of farmers, who are now engaged in the excellent task of producing foodstuffs for us. I would like to stress one more point. In the history of the house, for the past four or five years, Member after Member belonging to all parties, be they in Opposition or Ruling Party, almost every Member of this house, has categorically mentioned that this Bill has got injurious clauses. Member after Member has mentioned that. That is why I make a strong plea that it should be referred to a Select Committee.

If only the particulars, that I have mentioned in my speech last time when this Bill was discussed on 30th July 1971, had been acted upon, things would have been different. I have got the proceedings of the Assembly of that day. I had mentioned that I will not be surprised, if the Minister comes again with more facts in the form of another Bill. Some people were wondering and thinking that I was exaggerating. But it has proved a fact. The Minister has come again with another Bill. If only my views and suggestions had been taken seriously so many problems could have been solved. This Bill is for meeting one of the points out of the 11 points raised during the Farmers'agitation. Even as at present worded there are many loopholes. It has to be referred to a Select Committee so that more thought could be bestowed on it and loopholes plugged. How agricultural operation is different from production in a factory has to be considered. The production in a factory could be easily calculated by production of figures. But how the poor agriculturist has to depend on the vagaries of nature should be taken into consideration while computing his income. Is it easy to lay down what is agricultural income, when so much depends on nature? In the case of an industrialist, we can assess what property he has got and



we can tax on that; we can find how much profit he is making through his factory. But things are different in the case of agricultural operations. When he is subjected to the vagaries of nature, it is said thatcompounding is going to be at a flat rate. You take into consideration so many things and presume so many things. Just as a city man produces accounts, you can say that an agriculturist also can produce accounts. But what is the percentage of literacy in our State ? It is less than 40 per cent. When that is the case, how can you expect the farmer to produce accounts, when for that he has to depend upon some auditor? Some brilliant people had some ideas and produced some documents and that has come in the form of a Bill here. That is what I want this Ministry to consider. How can the poor farmer produce accounts? Let the Hon.Chief Minister consider this point. I am not blaming the Ministers. I want the Government to give a patient hearing to what we say. Agricultural income is not like income from industry, wherein all sorts of accounts could be maintained. When such is the case cannot the Government give 'Vithi vilakku' "exemption" to agriculturalists to produce accounts? Has the Government taken this into consideration? I do not find proof for the same anywhere in the Bill. Then what about harassment to farmers by officials? Can he withstand the harassment of officials? The Minister for Revenue and Chief Minister may have best of motives. But can they prevent the harassment of farmers by officials at the lower level? I do not blame the Ministers . But people lower down, the officials at the lower level, they have to be taken into account. Their harassment of farmers is there. Mr. Krishnamoorthi made mention of it and the hon. Member Thiru A. R. Subbiah Mudaliar also mentioned about it in a suitable manner as to how it is difficult to please the 'Karnam'. Unless he is pleased, he will harass the farmer. That is why I say let the poor farmer be not hit too much. Don't ask him to produce accounts. He does not know how to keep accounts.

Another point is that the slab rates should be revised since poor farmers owning 10 to 20 standard acres are heavily taxed, starting from Rs. 25.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு சிறு விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஸ்மால் ஃபார்மர்ஸ் என்றால், 10-இலிருந்து 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை வைத்திருப்பவர்கள் சிறு விவசாயிகள் என்பது ஹாண்டே அவர்களின் விளக்கம் என்பதாக நான் புரிந்துக் கொள்ளலாமா?

Dr. H. V. Hande : I say small farmers owning 10 to 20 acres should not be taxed much. If it is 7·5 acres, I take it as correct. Regarding laying of standards for different cash crops, that is another important point.

THE HON. THIRU P. U. SHANMUGAM: If persons holding 10 acres are small farmers, I would like to remind the hon. Member Dr. Hande—perhaps he has forgotten—that they have been exempted from the provisions of this Bill.

DR. H. V. HANDE: I mean 10 to 20 acres. I know for the first 10 acres the tax is 'Nil'. But for the next five standard acres, you are now charging Rs. 25. Originally the rate was Rs. 15. My personal request to the distinguished Hon. Minister is to reduce the rate from Rs. 25 to Rs.15. It is seen that the Government are keen on taxing more persons and getting more income and are not interested in giving relief to small farmers who are more in number. Nearly half the number of farmers hold lands between 10 to 20 acres. It is very easy for the Government to tax them......

MR. SPEAKER: The hon. Member's time is up.

DR. H. V. HANDE: Sir, this Bill pushes or drives persons in the rural areas to the urban areas. We want more urban people to go to the rural areas. But this Government are anti-rural and they want to drive the people in the rural areas to the urban areas.

Then, sugarcane irrigated through private sources should be treated on a par with that of banana.

Then about the 'manavari' cocoanut plantations, there are a number of such areas near the sea in the Chingleput district and they should be given some relief. In the Madurantakam taluk there are 18,000 acres under rain-fed cocoanut cultivation. Are you showing concession to such cocoanut cultivation? If it is not given, all the cocoanut trees in the seashore areas will be cut down.

Then I come to the Schedule. According to item (4) the rate per standard acre on the next 5 standard acres is Rs. 45. Then on the next 5 standard acres, it is Rs. 60. There is a sudden jump of Rs. 15. Why is this steep rise? I think it is a printer's mistake. Or it is wantonly done by the Hon. Minister. (Interruption.) The Hon. Chief Minister says that that is correct.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதிகமாக வருமானம் வரும் போது அதிகமான வரி கட்ட வேண்டுமென்று கருதுகிறோம். அதைத் தான் போட்டிருக்கிறோம். அது அச்சுப் பிழையல்ல. அது படிக்கின்றவர்கள் பிழையே தவிர வேறல்ல.

டாக்டர் எச்.வி. ஹாண்டே: நான் ஒழுங்காகத்தான் படித்தேன்.



Sir, my point is that the rate should be reduced to Rs. 20 if not Rs. 15 for the next 5 standard acres above the first 10 standard acres. Several Hon. Members have spoken in favour of reduction of the slab rates. Even yesterday some hon. Members belonging to the Ruling Party spoke in favour of reduction of the rate.......

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆளும் கட்சித் தரப்பிலிருந்து உறுப்பினர்கள் பேசியிருந்தாலும் அவர்களுக்கும் சேர்த்துச் சொல்வேன். விவசாய வருமான வரி என்பது அதிக நிலம் வைத்திருப்பவர்கள் கட்டித் தீர வேண்டுமென்பதற்காக போட்ட வரியாகும். சிறிய விவசாயிகள் நிச்சயமாக இதனால் பாதிக்கப்படமாட்டார்கள். இது ஒரு சோஷலிசக் கொள்கை. சோஷலிசக் கொள்கையின் விரோதிகள் ஆளும் கட்சியில் இருந்தால் கூட அவர்கள் பொறுத்துக் கொள்ளத் தக்கவர்கள் அல்ல.

டாக்டர் எச்.வி. ஹாண்டே: என்னுடைய கொள்கையும் சோஷலிசக் கொள்கைதான். நான் ஒரு சோஷலிஸ்ட் என்பது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பல விஷயங்களில் இதைமாகக் கூடக் கூறி இருக்கிறேன். நிலச் சுவான்தார்கள் சரியான வகையில் ஊதியம் கொடுக்காவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சுதந்திராக் கட்சியை நீங்கள் சோஷலிசம் பேசுவது மூலந்தான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே: எப்படியோ காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் போதும்.

Sir, I am not speaking on behalf of big landlords. Even small farmers are affected by this legislation. In 1967 a person holding 15 standard acres had to pay only Rs. 11·25. In 1968 the tax had been increased to Rs. 84·50. Now the farmers cultivating banana, cotton and groundnut on the same holding, will have to pay Rs. 825, which is 80 times the tax paid in 1967 and 10 times the tax paid in 1968. Of course, all State Governments and the Central Government will have to tax more and more. I fully know that even when the Swatantra Party comes power, they will have to tax. But the only point is that whether these taxes will hit the small farmers. Many farmers feel that it will hit them. Many of them are living in a very humble way and they will be affected by this Bill. Last time I mentioned that this Bill is likely to injure a large section of the people.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: Before Dr. Hande concludes his speech. I want to correct one thing டாக்டர் ஹாண்டே அவர்கள் பயங்கரமான ஒரு செய்தியைக் கூறினார்கள். 80 ரூபாய் கட்டி

[திரு ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 25

யவர்கள் 800 ரூபாய் வரிகட்டவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக கூறினார்கள் பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் இருந்தால் 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வரி இடையாது. மீதி ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு 25 ரூபாய் வீதம் 125 ரூபாய்தான் வரி; 800 ரூபாய் அல்ல. ஆகவே 800 ரூபாய் வரி என்று சொல்லி தமிழ்நாட்டு விவசாயிகளைப் பயமுறுத்த வேண்டாம். இப்படிச் சொல்லுவது தமிழ்நாட்டு விவசாயிகளைத் தூண்டிவிட்டு அரசியல் லாபம் பெறத்தான் பயன்படுமே தவிர அது தவறானது, நியாயத்திற்குப் புறம்பானது.

DR. H. V. HANDE : Just now the Hon. Minister went and collected statistics. If necessary, within 24 hours I also will be able to collect statistics.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : பதினைந்து சாதாரண ஏக்கர் பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கராக மாறினால் நீங்கள் சொல்லுகிற கணக்கு சரியாக இருக்கலாம், ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கில் பார்த்தால் இப்போது ரூபாய் 125 தான் வரியாகக் கட்ட வேண்டும்.

Dr. H. V. HANDE : 15 acres have been converted into standard acres.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : பதினைந்து சாதாரண ஏக்கருக்கு பழைய வரி 80 ரூபாய் அல்ல. பழைய வரி என்று சொல்லும் போது அதிலே ஸ்டாண்டர்டு ஏக்கர் வராது; புதிய வரி என்று சொல்லும் போது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லுவது சரியல்ல. முதல்வர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக அதைப் பிடித்துக் கொள்ள வேண்டாம். அவர் உங்களைக் காப்பாற்றுவதற்காகச் சொல்லியிருக்கிறார்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u> : முதல்வர் அவர்களுக்கும் உங்களுக்கும் உள்ள கருத்து வேற்றுமையை நான் பயன்படுத்திக் கொள்வது இடையாது.

பொதுவாகப் பேசுகிறபோது பெரிய பெரிய நிலச்சுவான்தார்கள் எல்லாம் எங்கே போயிருக்கிறார்கள் என்பதைப் பற்றி முதலமைச்சர் அவர்களே விளக்கியிருக்கிறார்கள். விவசாயம் பாதிக்கக்கூடாது; தமிழ்நாட்டின் எதிர் காலம் நன்றாக இருக்க வேண்டும்; அவர்களை அன்புறுத்தி அர்பன் ஏரியாவுக்கு அவர்களைத் துரத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

Most of the landlords are not with us. You know it. I do not know how this figure of Rs. 84·50 was arrived at. You can work it out and tell me. My point is substantial increase has taken place, 5 to 10 times. Therefore for heaven's sake......

<u>மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்</u> : 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு ரூ 125 தான் வரி, 15 ஏக்கர் என்று சொல்லக்கூடாது. 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு ரூ. 125 தான் வரி.



1972 ஆகஸ்ட் 25]

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u> : இப்போது பயிர் அடிப்படையில் மாற்றி அமைத்திருக்கிறீர்கள். பதில் கொடுக்கும் போது விளக்கமாகச் சொல்லுங்கள்.

It has increased a number of times. That is the point. The question is whether it is proper to increase the taxation to that extent. That is what the Hon. Chief Minister, the Hon. Minister for Revenue and the whole Cabinet have to consider. You must give more thought to that. That is why I once again make an impassioned plea with all emphasis at my command and with all persuasiveness at my command, I request them to refer this Bill to Select Committee or refer this for eliciting public opinion. As a last resort I think some more concession can be given. Unless and until it is done, it will never satisfy the farmers. It will lead to discontent. Therefore I want the Hon. Chief Minister to give an assurance before the end of discussion on this Bill satisfying the farmers. Thank you.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u> : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முன்பு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோதே சொன்னேன். விவசாயிகள் சம்பந்தமாக அவர்களுக்குக் கணக்கு வைக்கக்கூடிய கஷ்டத்தைக் கொடுக்காதீர்கள் என்று சொன்னேன். கம்பவுண்டிங் பெஸிலிட்டீஸ் கொடுங்கள் என்று சொன்னேன். ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர் சொன்னார் என்பதற்காக அதைக் கேட்கவில்லை. இப்போதுதான் அந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். முன்பே அதைக் கொண்டு வந்திருந்தால் கிளர்ச்சியிலிருந்து ஒரு பிரச்னையை உருவி இருக்கலாம். ஆகவே அந்தப் பிரச்னைக்கு நீங்களாகவே இடம் கொடுத்தீர்கள். இப்போது சொல்லும் கருத்துக்களையாவது எதிர்க்கட்சியினர் சொல்கிறார்களே என்று எண்ணாமல் திறந்த மனதோடு பிரச்னையைப் பார்க்க வேண்டும்.

காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது $12\frac{1}{2}$ ஸ்டாண்டேர்ட் ஏக்கருக்கு மேல் விவசாய வருமான வரி போடப்பட்டது. ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்பதை நிலச்சீர்திருத்தச் சட்டத்தில் என்ன டெபனிஷன் கொடுக்கப் பட்டதோ அதேதான் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்று நீங்கள் கொண்டு வந்துள்ள சட்டத்தில் பயிர் அடிப்படையில் ஸ்டாண்டேர்ட் ஏக்கராவை மாற்றியிருக்கிறீர்கள். ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சாமர்த்திமாகக் கேட்டார்கள் பத்து ஸ்டாண்டேர்ட் ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகள் சிறு விவசாயிகளா என்று. நான் ஒன்று உங்களைக் கேட்கிறேன். பயிர் வாரி அடிப்படையில் வரி போடுவதால் ஐந்து ஏக்கர் வரை வாழை வைத்திருந்தால் உங்கள் பத்து ஸ்டாண்டேர்ட் ஏக்கருக்குள் அவர்கள் வந்து விடுகிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நாங்கள்தான் இப்படி ஸ்டாண்டேர்ட் ஏக்கர் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். பழைய ஆக்டை பார்த்து விட்டுச் சொல்கிறார்களா அல்லது ஞாபகத்தில் சொல்கிறார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி : எனக்குள்ள ஞாபகத்தை வைத்துச் சொல்கிறேன். முன்பு $12\frac{1}{2}$ ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றிருந்தபோது பயிர் வாரியாகப் போடவில்லை. அதை ஒத்துக்கொள்கிறீர்களா? நீங்கள்தான் . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பயிர்வாரி வரி என்று கிடையாது. காம்போஸிஷன் என்று வரும்போது அதை வொர்க் அவுட் செய்ய பயிர்வாரி என்று வருகிறது. 1955-ம் ஆண்டுச் சட்டத்தில் கூட அந்தப் பிரின்சிபல் இருக்கிறது. சில க்ராப்ஸ்க்கு இருந்தது, இப்போது அதிகப் படியான க்ராப்ஸ்க்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : வாழை, கரும்புக்கு அந்த பிரின்ஸிபில் கிடையாது. மணிலா, பருத்தி, வாழை . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால் பாக்கு, பருத்தி, வாழை, கரும்பு போன்ற பணப்பயிர்களுக்கு பயிர்வாரி வரி போடக்கூடாது என்பது தேசீய காங்கிரஸ் கட்சியின் கொள்கையா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பயிர்வாரியாக வரி போடக்கூடாது என்பது கொள்கை அல்ல. எந்த அளவிற்கு போடுவது என்பதுதான் கொள்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நீங்கள் உணவு அமைச்சர் அவர்களை துருவித் துருவிக் கேட்டது பயிர்வாரி அடிப்படையில் போட்டிருக்கிறீர்களே, நீங்கள் போட்டிருக்கிறீர்களே, நீங்கள் போட்டிருக்கிறீர்களே என்று ரொம்பக் கோபமாகக் கேட்டார்கள். ஆகவே நான் சாவதானமாகக் கேட்கிறேன், பயிர்வாரி அடிப்படையில் வரி போடுவதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : எல்லாப் பயிர்களுக்கும் போடுவது தவறு. நல்ல வருவாய் கொடுக்கும் பாக்கு, ரப்பர் போன்ற பயிர்களுக்கு போடுவது சரி. தமிழகத்தில் உள்ள விவசாயிகளை நாம் வேறு கண்களோடு பார்க்கவேண்டும். காரணம் இங்கு விவசாயிகள் தண்ணீர் பற்றாக்குறையினால் மிகவும் அவதிப்படுகிறார்கள். இங்கு மழை பெய்தால்தான் விவசாயம். இங்குள்ள விவசாயிகளை பஞ்சாப், ஹரியானாவில் உள்ள விவசாயிகளோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. ஆந்திராவில் வளமிக்க விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு விவசாய வருமான வரி கிடையாது. அங்கும் இந்திராக் காங்கிரஸ்தான் ஆட்சி



புரிந்துகொண்டிருக்கிறது. எங்கு எங்கு இவர்களுக்கு சாதகமாக இருக்கிறதோ அப்போது இந்திரா காங்கிரசோடு முடிச்சுப் போடுகிறார்கள் இல்லாவிட்டால் விட்டு விடுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்திரா காங்கிரஸ் என்று அவர்கள் சொல்லுவதால் நானும் இந்திரா காங்கிரஸ் என்று அந்தப் பெயரில் சொல்கிறேன். இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் எந்த மாநிலத்திலும் விவசாய வருமான வரி வராது என்று அம்மையார் அவர்களால் உத்தரவாதம் அளிக்க முடியுமா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : இன்றுள்ள நிலையை வைத்துத் தான் பேசுகிறேன். நாளைக்கு என்ன நடக்கும் என்று யார் சொல்ல முடியும் ? நீங்கள் மாறலாம் அல்லது நாங்கள் மாறலாம், என்ன நடக்கும் என்று யாராலும் சொல்லமுடியாது. இன்றுள்ள நிலைமையை ஒப்பிட்டுத்தான் பேசுகிறேன். நாளைக்கு வருவதைப் பற்றிச் சொல்லமுடியாது. பிலஸாபிக்கலாகச் சொல்லவேண்டுமென்றால், நாளை வருவதை யாரே அறிவர் என்றுதான் கேட்கவேண்டும். சோஷலிஸக் கருத்துக்களில் யாருக்கும் மாறானவர்கள் அல்ல நாங்கள். தலை தாங்குமா என்பதைப் பார்த்து போடவேண்டும். சோஷலிஸம் என்ற கருத்தை வைத்துக் கொண்டு தாங்கமுடியாத தலைகளில் நீங்கள் பெரிய பெரிய பளுவை தூக்கிவைப்பது நல்லதல்ல. ஐந்து ஏக்கரில் வாழை வைத்தால் 10 ஸ்டாண்டேர்ட் ஏக்கர் வரிக்கு வந்துவிடுகிறது.

மாண்புமிகு திரு செ. மாதவன் : ஒரு புள்ளிவிவரம் தருகிறேன். ரூ. 5,000 ஒரு விவசாயிக்கு வருமானம் என்றால் மைசூரில் ரூ. 105 வரி, நம் தமிழ்நாட்டில் ரூ. 50 தான் வரி.

திருமதி த. ந. அனந்தநாயகி : சில உங்களுக்கு சாதகமாக இருக்கும், சில உங்களுக்குப் பாதகமாக இருக்கும். உங்களுக்குச் சாதகமாக உள்ளதை நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள், எங்களுக்கு சாதகமாக உள்ளதை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம். அதை வைத்து சொல்கிறோம். அதுதான் வக்கீல்கள் வாதம். உங்களுக்கு சாதகமாக உள்ள பாயிண்ட்களை வைத்து நீங்கள் பேசுகிறீர்கள். ஆந்திராவில் தண்ணீர் வசதி இருந்தும் இப்படிப்பட்ட ஒரு வரி இல்லாமல் அவர்கள் சமாளிக்கும்போது ஏன் தமிழகத்தில் மட்டும் விவசாயிகளுக்கு அந்தச் சிறிய சலுகையைத் தரக்கூடாது என்று நான் கேட்கிறேன். அன்று $12\frac{1}{2}$ ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றிருந்தது. ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்பது ஃபுல் ஸ்டாண்டேர்ட் ஏக்கர், இப்போது வாழை ஐந்து ஏக்கரில் வைத்திருந்தால் பத்து ஸ்டாண்டேர்ட் ஏக்கர் வரி விதிப்புக்கு அது உள்ளாகிறது. ஒரு ஏக்கர் சர்க்கார் பாசனமாயிருந்தால் இரண்டு ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றும், ஒரு ஏக்கர் தனிப் பாசனமாயிருந்தால் ஒரு ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றும் இருக்கிறது. கரும்பை எடுத்துக் கொண்டால் சர்க்கார் பாசனமாக இருந்தால் ஒரு ஏக்கர் என்பது இரண்டு ஸ்டாண்டேர்ட் ஏக்கர் என்றும், தனிப் பாசனமாகயிருந்தால் ஒரு ஏக்கர் என்பது $1\frac{1}{2}$ ஏக்கர் என்றும் இருக்கிறது. ஏன் இந்த வித்தியாசம் என்று கேட்கிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 ஆகஸ்ட் 25

I also want to say that there is no use of rushing amendments at the last stage, without explaining their nature in the House. The Hon. Minister simply says that amendments would be moved on behalf of Government. We of course get copies of amendments. But he must explain to the House the nature of those amendments.

சர்க்காரிலிருந்து அவசர அவசரமாக அமெண்ட்மெண்ட்ஸ் கொண்டுவருகிருர்கள். அவற்றைப் பற்றி அமைச்சர்கள் விளக்கிச் சொல்லமாட்டேன் என்கிருர்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர், சட்டம் படித்தவர். இங்கு வந்து வழக்கறிஞராக வாதாடாமல் ஒரு அரசியல்வாதி என்ற முறையில் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத் தரப்பில் அமெண்ட்மெண்ட்ஸ் பிரேரேபிக்கப்பட்டுவிட்டது என்று சொன்ஞர்கள். . . .

திருமதி த. ந. அனந்தநாயகி : அரசாங்க தரப்பிலிருந்து அவசர அவசரமாக அமெண்ட்மெண்ட்ஸ் கொண்டு வருகிருர்கள். பில் மூவ் செய்யும்போது எக்ஸ்ப்ளெயின் செய்வது மாதிரி இதில் எக்ஸ்ப்ளெயின் செய்வதில்லை. அச்சிட்டுக் கொடுத்துவிடுகிருர்கள்.

அமெண்ட்மெண்ட்ஸ் மூவ் செய்யும்போது விளக்கங்கள் சொல்லவேண்டும். இன்னின்ன சாதகங்கள் உள்ளன என்று சொல்லவேண்டும். விளக்கிச் சொல்லிவிட்டுத்தான் உட்காரவேண்டும். நேற்றுதான் அமெண்ட்மெண்ட்ஸ் அச்சிட்டுக் கொடுத்திருக்கிருர்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கத் தரப்பில் இருந்து தண்ணீர் எடுத்தால் ஒரு எக்கர் என்பது இரண்டு என்று முதலில் போடப்பட்டது. தனியார் துறையில் இருந்து தண்ணீர் எடுத்தால் 1 என்பதற்கு $1\frac{1}{2}$ என்று போட்டோம் கரும்புக்கு. விளக்கம் கொடுத்து போட்டோம். "ஹோல்லி" தண்ணீர் எடுத்தால் என்று விளக்கம் கொடுத்தோம். எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. சுப்பையா முதலியார் அவர்கள் நேற்று விளக்கமாக அதைப் பற்றிப் பேசிஞர்கள். அப்போது உறுப்பினர் அவர்கள் அவையில் இல்லை என்ருல் அது அவர்களது குற்றமே.

பிற்பகல் 11-30 திருமதி த. ந. அனந்தநாயகி : நான் சொல்வதை கனம் அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டால் பரவாயில்லை. கவர்ன்மெண்ட் அமெண்ட்மெண்ட் என்னவென்ருல் "Wholly irrigated by Government source" நான் அதைச் சொல்லவில்லை. நான் வாழைக்கும் கரும்புக்கும் வித்தியாசம் காட்டியிருக்கிறீர்களே அதைப் பற்றித்தான் சொல்கிறேன். வாழைக்கு அரசாங்கத் தண்ணீரை எடுத்து உபயோகித்திருந்தால் ஒரு ஸ்டாண்டர்ட் எக்கருக்கு ஒரு ஸ்டாண்டர்ட் எக்கர் என்றே வைத்திருக்கிறீர்கள். ஆனல் கரும்புக்கு மட்டும் 1 ஸ்டாண்டர்ட் எக்கரில் பயிரிட்டிருந்தால் $1\frac{1}{2}$ எக்கர் என்று கணக்கிடப்படும் என்று வைத்திருக்கிறீர்களே என்றுதான் கேட்கிறேன்.



1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : வித்தியாசத்திற்குக் காரணமே, அது வாழையாகவும், கரும்பாகவும் இருப்பதுதான்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இரண்டும் ரொம்ப தண்ணீர் சாப்பிடும். இவைகள் இரண்டையும் ஒன்ருக வைத்தால் பரவாயில்லை. வாழைக்கு எந்த மாதிரி வைத்திருக்கிறீர்களோ அதே மாதிரி வையுங்கள். எனக்குத் தெரிந்ததை நான் சொல்கிறேன். வாழைக்கும் அதிக பணம் செலவழிக்க வேண்டும், கரும்புக்கும் அதிகப் பணம் செலவழிக்க வேண்டும். ஆகவேதான் ஒன்ருக வையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி மணிலா, பருத்தி ஆகியவற்றிற்கும் சர்க்கார் பாசனமாக இருந்தால் 1 எக்கர் $1\frac{1}{2}$ ஸ்டாண்டர்ட் எக்கர், தனியார் பாசனமாக இருந்தால் 1 எக்கர் $1\frac{1}{2}$ ஸ்டாண்டர்ட் எக்கர். பருத்தி, மணிலாவுக்கு இத்தகைய வித்தியாசம் தேவைஇல்லை. சர்க்கார் பாசனத்தில் 1 எக்கருக்கு 1 எக்கர் என்று வாழைக்குக் கொடுக்கிற மாதிரி மணிலா, பருத்திக்கும் கொடுக்க வேண்டும். வாழை, பருத்தி, மணிலா, கரும்பு எல்லாமே பணப் பயிர்கள்தாம். வாழைக்கு மட்டும் என் தனிச் சலுகை கொடுக்கிருர்கள் என்ற காரணம் புரியவில்லை. ஒருவேளை வாழைப் பழம்தான் இந்த அரசாங்கத்திற்கு ரொம்பப் பிடிக்குமோ.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விவசாயத்தைப் பற்றி சரியாகத் தெரிந்து கொண்டு பேசுவது நல்லது என்று கருதுகிறேன். மணிலா 3 மாதப் பயிர், கரும்பு 12 மாதப் பயிர், வாழை 16 மாதப் பயிர். வாழை 16 மாதப் பயிர் என்ருலும் சீக்கிரத்தில் கெட்டுப் போய்விடக்கூடிய ஒன்ருகும். காற்று அடித்தால் கூட கீழே விழுந்து விடும். ஆகவே, வாழை பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதால்தான் அரசாங்கத் தண்ணீராக இருந்தால் 1 எக்கருக்கு ஒரு எக்கர் என்று வைத்திருக்கிருேம். வாழைக்கு தனிச்சலுகை கொடுக்கவேண்டுமெனபதற்காக அல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி : எனக்கும் கொஞ்சம் விவசாயத்தைப் பற்றித் தெரியும். அமைச்சர் அவர்கள் வாழைக்கு ரிஸ்க் இருக்கிறது ஆகவே கொடுத்தோம் என்று சொன்ஞர்கள். கரும்புக்கும் தான் ரிஸ்க் இருக்கிறது. வாழைக்கு புயல் அடித்தால் சாய்ந்து போகும் என்ருல், கரும்புக்கும் நோய் வந்தால் போய் விடும். எல்லாவிதமான பயிர்களுக்கும் ரிஸ்க் இருக்கிறது. அவற்றை பாதுகாப்பதற்காக "கிராப் இன்ஷ்ரன்ஸ்" இல்லாத வகையில் இந்த மாதிரியான பணப் பயிர்களுக்கு சற்று பாதுகாப்புத் தரவேண்டும். நெல்லைப் போட்டால் வரும் வருமானத்தை விட இந்தப் பணப்பயிர்களைப் போட்டால் அதிகமான வருமானம் வரும் என்பதால் அதை வரியாக எடுத்துக்கொண்டு போய் விடலாம் என்று பார்க்கிறீர்கள். அப்படிகொண்டு வருகிறபோது அதிக வித்தியாசம் இல்லாமல் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் சொல்வதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பது தெரியும். காரணம் நீங்கள் 184 பேர் இருக்கிறீர்கள். நாங்கள் சொல்லவேண்டுமென்பதற்காகச் சொல்கிருேம்.

அடுத்தபடியாக தென்னை பயிரைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மதுராந்தகத்திற்கு அருகிலுள்ள இடக்கழிநாடு என்ற இடத்தில் மானாவாரி நிலத்தில் தென்னை பயிரிட்டு இருக்கிறார்கள். மலைப்பகுதியில் வாழைப்பயிர் வைப்பவர்கள் கஷ்டப்படுவதைவிட இவர்கள் அதிகம் கஷ்டப்படுகிறார்கள். "ஒரு ஆர் ஆம் எக்சம்டட் ப்ராம் டாக்ஸ்" அவர்களுக்கு தாராள மனப்பான்மையோடு சலுகை தந்து இருக்கிறபோது, இந்த மானாவாரி நிலங்களில் தென்னை பயிரிட்டு இருக்கிறவர்களுக்கும் வாழைக்கு கொடுத்துள்ளது போல் தண்ணீர் வசதியற்ற நிலையில் இருக்கும் தென்னை மரத்திற்கும்—சலுகை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 5 ஏக்கர் வாழை வைத்து இருந்தால் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கணக்கிட்டு வரி வசூல் செய்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 5 ஏக்கர் வைத்திருந்தால் வரியில்லை. 10 ஏக்கர் ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் வைத்து இருந்தால் தான் வரி செலுத்த வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: 5 ஏக்கருக்கு மேல் 5 செண்ட் வைத்திருந்தால் கூட அதற்கு வரி போடுகிறீர்களே ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 10 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கர் வைத்திருந்தால் அதாவது 11 ஸ்டாண்டர்ட் ஏக்கர் இருந்தால், அந்த ஒரு ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு ரூ. 25 வரி செலுத்தவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: காங்கிரஸ்காரர்கள் காலத்தில் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றால் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர் தான், அதற்கு வரி கிடையாது ஆனால் தற்போது 5 ஏக்கர் வாழை போட்டு இருந்தால் அதை 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று கணக்கிடுகிறார்கள்.

5 acres of plantains are equal to 10 standard acres and above that if he possesses one acre more, he will have to pay Rs. 25 per annum.

5.5 செண்ட் நிலத்தில் வாழை பயிரிட்டிருந்தால்கூட அந்த விவசாயி வருமான வரி ரூ. 25 கட்டவேண்டும். "ஓனர் ஆஃப் 5.5 செண்ட் ஈஸ் நாட் எ பிக் லேண்ட் ஹோல்டர்" அதனால்தான் நாங்கள் கேட்கிறோம் தயவு செய்து அதை 15 ரூபாய் என்று மாற்றிவிடுங்கள். ஏன் ஆரம்பிக்கும்போதே ஸ்லாப்பை ரூ. 25 என்று ஆரம்பிக்கிறீர்கள்? 15 ரூபாயிலிருந்து ஆரம்பித்தால் சிறிய விவசாயிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும். 6 ஏக்கர் வைத்திருக்கும் ஒரு சாதாரண விவசாயிக்கு உதவி செய்யவேண்டுமென்ற உயர்ந்த மனப்பான்மை இருந்தால் தயவு செய்து அதை ரூ. 25 லிருந்து ரூ. 15-க்கு குறைத்து விடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகள் என்ன பயிர் செய்கிறார்கள் என்பதை கர்ணம் அடங்களில் பதிவு செய்யவேண்டும், இன்னார் இன்ன பயிர் செய்தார் என்று எழுதி வைப்பார். கரும்பை எடுத்துக்கொண்டால் இந்த ஜனவரியில்



போட்டால், அடுத்த ஜனவரியில்தான் அறுவடை செய்ய முடியும். கர்ணம் அடங்களில் எழுதுகிறபோது இந்த வருஷம் கரும்பு என்று எழுதியிருப்பார். அடுத்த வருட ஆரம்பத்திலும் அந்தக் கரும்பு அறுவடை செய்யப்படாமல் இருக்கும் என்பதால் இந்த வருஷமும் கரும்பு பயிரிட்டதாகக் கணக்கு எழுதிவிடுவார். இதனால் விவசாயிகள் இரண்டு தடவை, அதாவது இரண்டு வருஷங்களுக்கு வரி செலுத்தவேண்டிய நிலைமையே யேற்படும். ஆகவே, என்ன பயிர் எப்போது செய்தான், எப்போது அறுவடை ஆயிற்று என்பதையும் எழுத வேண்டும்.

அதோடு விவசாயிகளுக்கு அரசாங்கம் ஒரு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். நீ இன்ன பயிர் வைத்து இருக்கிறாய் என்று சொல்லவேண்டும். அப்போதுதான் விவசாயியும் கர்ணம் பொய் எழுதியிருக்கிறாரா நிஜம் எழுதி யிருக்கிறாரா என்று பார்க்க முடியும். விவசாயிகளுக்கு ஷோ காஸ் நோட்டீஸ் கொடுப்பது போல் கொடுக்கவேண்டும். அவனும் நான் இன்ன பயிர்தான் வைத்து இருக்கிறேன், நீங்கள் அதுபோல் பதிவு செய்து கொள்ளுங்கள் என்று பதில் தந்து விட்டால், அவனுக்கும் திருப்தியாக இருக்கும், அரசாங்கத்திற்குப் வரி வசூல் செய்வதற்கு வசதியாக இருக்கும். சட்டத்தில் இடம் இதற்கு இருக்கிறதோ இல்லையோ நிர்வாகத்தினருக்கு இப்படிப்பட்ட ஒரு உத்தரவை அரசாங்கம் அனுப்ப வேண்டுமென்று யோசனை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தச் சட்டத்தில் பலவேறு அம்சங்கள், நல்ல அம்சங்கள் இருந்த போதிலும் இதை மறுபடியும் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி, விவசாயிகள், மக்கள் இதன் பேரில் என்ன சொல்லுகிறார்கள் என்பதை நல்ல முறையில் அறிந்து, அடிக்கடி திருத்தங்கள் கொண்டு வராமல், ஒரு ஒட்டு மொத்தமாக அமெண்டுமெண்ட் ஆக்டாக, குறிப்பாக ஏழை விவசாயிகளை பாதுகாக்கிற வகையில், கொண்டுவருவதற்காக அரசாங்கம் வேண்டிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு பயிருக்குப் பயிர் வேறுபாடு காட்டுவது நியாயமில்லை, சரியில்லை என்று சொல்லி, இத்தோடு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், நான் சுருக்கமாக சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இதுவரையில் பல உறுப்பினர்கள் பேசியதிலிருந்து பலவிதமான கருத்தோட்டங்கள் குறிப்பிட்ட பயிர்களைப்பற்றி எல்லாம் வந்தது. ஆகவே இது சம்பந்தமாக நிதானமாக விவாதித்து ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்று ஒரு கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். பயிர் அடிப்படையிலே வருமான வரி விதிப்பதா, வேண்டாமா என்ற பிரச்னைக்குப் நான் போகவில்லை. காரணம் சில இடங்களில் பயிர் அடிப்படையில்தான் வருமான வரி விதிக்க வேண்டியிருக்கும். கிராமங்களில் உற்பத்தியாகக்கூடிய பொருள்களின் பேரில் வருமானவரி விதிப்பது

என்ற கொள்கை இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்படாத விஷயம் அல்ல. ஏற்கெனவே அந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு பல மாநிலங்களிலே சட்டங்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

நமது மாநிலத்திலே சென்ற கூட்டத் தொடரில் இந்தச் சட்டம் வந்தபொழுது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதற்கு சில புதிய வியாக்கியானங்கள் கொடுத்ததால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய பிரச்சினையை எடுத்துக்கொண்டு, விவசாயப் போராட்டம் நடந்தபொழுது இதை ஒரு கோரிக்கையாக வைத்தார்கள். அந்த விவசாயக் குழுவில் இம்மாதிரியான வருமான வரியே கூடாது என்று அவர்கள் இருந்திருக்கலாம். ஆனாலும் எல்லோரும் ஏற்றுக்கொண்டு இன்றைக்கு இருக்கக்கூடிய வருமான வரி கூடாது, அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னதன் பேரில், நடந்த பேச்சு வார்த்தைகளில் ஏற்கெனவே விதிவிலக்கு 7½ ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை இருந்ததை இப்பொழுது 10 ஸ்டாண்டர்டு ஏக்கராக ஆக்குவது என்பது அன்றைக்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆக, அந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் அபிப்ராய பேதம் கிடையாது. அதற்குப்பிறகு எந்த முறையில் ஸ்லாப் வைப்பது என்று என்னுடைய கருத்தைக் கேட்டால் 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ஏற்கனவே போடப்பட்டிருந்த ரூ. 15 போட வேண்டும் என்று நான் சொல்வேன். அதற்குப் பின்னால் மேற்கொண்டு 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ரூ. 10 கூட்டலாம். அதற்குப் பிறகு ரூ. 15 கூட்டவேண்டும் என்று சொல்வேன். அதற்குப் பிறகு ரூ. 20 கூட்டவேண்டும் என்று சொல்வேன். அதற்குப் பிறகு ரூ. 30 கூட்டவேண்டும் என்று சொல்வேன். அதற்கும் அதிகமாக 50 ஸ்டாண்டர்டு ஏக்கர் 100 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆகக்கூடிய காலத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ. 5, 10 என்று கூட்டுவது என்பதற்குப் பதிலாக ரூ. 15 அல்லது ரூ. 20 என்று ஸ்லாப் உயரவேண்டும் என்று சொல்வேன். இங்கே பார்ட் இரண்டைப் பார்க்கபோனால், முதலில் எடுத்த எடுப்பில் ஏற்கெனவே ரூ. 15 என்றிருந்தது ரூ. 25 ஆகிறது. ரூ. 25-க்குப் பிறகு ரூ. 35 ஆகிறது. ரூ. 35-க்குப் பிறகு ரூ. 45 ஆகிறது. ரூ. 45-க்குப் பிறகு ஒரு ஜம்ப் ரூ. 60 ஆகிறது. ரூ. 60-க்குப் பிறகு ரூ. 80 ஆக இருந்தால் புரிந்து கொள்ள முடியும். ரூ. 60-க்குப் பிறகு மீண்டும் ரூ. 70, ரூ. 70-க்குப் பிறகு மீண்டும் ரூ. 80 இப்படி வந்திருக்கிறது. இது பொதுவாக அன்ஸையிண்டிபிக்காக இருக்கிறது. ஒரு சமயத்தில் இதையே சரி, என்று கூட பின்னால் ஏற்றுக் கொள்ளலாம்.

முக்கியமாக வாழை பற்றியும், கரும்பு பற்றியும் பெரிய விவாதம் இங்கே வந்தது. முன்பு நிறைவேற்றிய திருத்த சட்டத்தில் வாழையையும், கரும்பையும் ஒரே இனத்தில் வைத்திருந்தோம். அன்றைக்கு வாழையை எப்படிப் பார்த்தோமோ அப்படித்தான் கரும்பையும் பார்த்தோம். இப்பொழுது இங்கே இந்த மசோதாவில் பார்க்கிறபொழுது சர்க்கார் சப்ளை பண்ணக்கூடிய தண்ணீரில் விளையக்கூடிய வாழையை ஒரு மாதிரியாகவும், நம் நேரடியாக லிப்ட் இர்ரிகேஷன் போன்ற ஸோர்ஸின் மூலமாக பயிரிடக்கூடிய வாழையை ஒரு மாதிரியாகவும் வைத்துக் கொண்டு, கரும்பு வரையிலும் சர்க்கார் கொடுக்கக்கூடிய ஆற்றுப்பாசனம் போன்ற ஸோர்ஸின் மூலம் பயிரிடும் கரும்பை வாழை மாதிரியாக வைத்துக்கொண்டும், லிப்ட் இர்ரிகேஷன் மூலம் பயிரிடப்படுவதை அங்கு இருப்பதுமாதிரி இல்லாமல் ஒரு ஏக்கருக்கு 1½ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நினைக்கிறேன், அம்மாதிரி போட்டிருக்கிறது. இப்படிப் பாகுபாடு வந்திருக்கிறது. அது அவ்வளவு சரியல்ல அநேகமாக இந்தச் சபையில் பேசிய பல உறுப்பினர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்களும் இந்தக் கருத்தை வெளியிட்டார்கள். ஆகவே, இதில் அவசரப் படவேண்டிய அவசியமில்லை. எதாவது ஒரு மசோதா செலக்ட் கமிட்டிக்குப் போகவேண்டுமென்றால், அதற்கு இந்த மசோதா தான் பொருத்தமானது. வரிவசூலிக்க வேண்டியது இல்லாமல் போய் விடும் என ஆபத்து இல்லை. இதுவரையில் அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸ் வசூலித்ததாகத் தெரியவில்லை. எவ்வளவு வசூல் பண்ணினார்களோ தெரியாது. கண்டிப்பாக 'Rural Rich'ஐ டாக்ஸ் பண்ண வேண்டும் என்ற கொள்கையில் இருக்கக்கூடியவர்கள் நாங்கள். ஆனால், அதை முறையாக, சாதாரண விவசாயிகளை பாதிக்காத முறையில் கொண்டுவந்து பாகுபாடு சரியான முறையில் வரக்கூடிய அளவுக்கு நிதானமாக யோசனை செய்து மாற்றி அமைக்க வேண்டும். நான் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. ஆகவே, இது செலக்ட் கமிட்டிக்குப் போகவேண்டிய ஒரு முக்கியமான மசோதா என்று நான் மீண்டும் வற்புறுத்தி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



THIRU R. PONNAPPA NADAR: Sir, I would also like to add a few remarks following the views expressed by the Hon. Member Thiru K. T. K. Thangamani.

I would like to reiterate that this Bill may be referred to a Select Committee. There are certain gaps and omissions. That has been pointed out by Hon. Memebers belonging both to the Ruling Party and Opposition. According to the consensus emanating from speeches of Hon. Members in this House what is evident is that this Bill requires some more careful examination. So far as definition of standard acre is concerned that creates so many difficulties. The present nebulous definition requires reconsideration. For example it has been agreed that the exemption limit should be 10 standard acres. Over that there is absolutely no quarrel. Previously it has been 7·5 and now it has been enhanced to 10 acres, as per agreement arrived at by Government and the Farmers' Action Council. So far as that matter is concerned, I do not want to say anything.

So far as standard acre is concerned in respect of 'arecanut' it requires modification. As per the present Bill "⅙th acre used for growing arecanut is considered to be a standard acre". There are areas like Mettupalayam where arecanut is grown in plenty. That

[Thiru R. Ponnappa Nadar] [1972 ஆகஸ்ட் 25

cannot be equated with other arecanut gardens obtaining in other places. It may be said that in hilly areas arecanut yields better but in the lower reaches it does not yield properly. Prices of arecanut have fallen considerably recently. So, I request that so far as arecanut is concerned, some justice should be done and we should say ⅓rd or ¼ would be taken as standard acre instead of the present ⅛th.

Another point is with regard to groundnut. It is stated in the amendment "¾ of an acre of land used for groundnut irrigated from Government sources of irrigation" or "one acre of land used for growing groundnut and irrigated from a source other than a Government source of irrigation". What is the benefit to the farmer by this amendment. That is the point we have to consider. There is no Government source of irrigation continuously so far as groundnut is concerned and that too in the case of medium and marginal farmers. That point has to be looked into. We have not been told how much agricultural income is expected by this. That will have to be worked out.

So far as coconut is concerned it should be classified under 3 heads. One which is assured of good irrigation in the deltaic area has to be classified separately. Another is private source of irrigation like pumpsets in North Arcot district. That should be classified separately. The third category is the 'manavari'. It depends upon vagaries of monsoon. That has to be classified separately.

In the matter of calculation of these cash crops, a correct norm or standard has to be fixed so that there will no ambiguity in the matter of (inter pretation( and calculation of agricultural income-tax Sir, that again will be gone into in greater detail and I think for this purpose, it is better that the whole matter is re-examined by an Expert Committee of the hon. Members of this Legislature, so that they may also bestow very careful and patient thought on it and they may evolve an agreed report which may be considered by this House. There is no hurry and heavens will not fall down even if this legislation is referred to a Select Committee. I hope this welcome suggestion would be accepted by the Hon. Minister who pilots this Bill.

Another point is relating to slab and that has been urged by many hon. Members of this House. I do not want to repeat them here. Suffice it for me to say tha tthe lowest minimum should be Rs. 15 and the slab should be 10 each. There shall not be any jump in this. The next 45 to 60 should be deleted. The slab should be 10 and after the slab increase it should be item 4 and not beyond that. The rich can afford to pay and the principle that has been enunciated and stated by the late lamented Anna is'tap the rich and pat the poor'. The small



1972 ஆகஸ்ட் 25] [Thiru R. Ponnappa Nadar]

farmer and medium farmer requires protection. That is the reason why we once again state that and with all the emphasis at my command on behalf of my party, I once again say that the matter be referred to a Select Committee so that there shall not be any difficulty in the matter of interpretation. Sir, I once again emphasise that the definition of the standard acre is nebulous and requires further clarification. With these words, I conclude my speech, Sir.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய வருமான வரி குறித்து இந்த அவையில் பல கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்து விளக்கிச் சொன்னார்கள்.

அப்படிச் சொன்னவர்களிலே பெரும்பாலான உறுப்பினர்கள் சிறு விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்ற நோக்கத்தோடுதான் இவை களை எல்லாம் இங்கே பேசியிருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். பேசிய பவர்களிலே பல பேர் இதை—ஏறக்குறைய அனைவருமே—பொறுக்குக் குழுவுக்கு அனுப்பி ஆர அமர யோசித்து பரிசிலித்து அதற்குப் பிறகு தான் அதைச் சட்டமாக ஆக்க வேண்டுமென்ற கருத்தை உரைத்தார் கள். நான் துவக்கத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புவது இந்த சட்டம் ஏற்கனவே இந்த மன்றத்திலே கொண்டுவந்து நிறை வேற்றப் பட்டு அதனாலே விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதகத்தை அரசாங்கம் உணர்ந்து விவசாயிகளுக்கு சலுகை கொடுக்க வேண்டுமென்று கருதி பல சலுகைகளை நாம் அளித்திருக்கிறோம். $7\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு எக்கரா பயிரிடுபவர்களுக்கு வரி உண்டு என்பதை மாற்றி 10 ஸ்டாண்டர்டு எக்கரா வரை வரி இல்லை என்று இப்பொழுது கொண்டு வந்திருக் கிறோம். ஏற்கெனவே நாம் போட்ட சட்டத்தில் ஒரு எக்கரா கரும்பு பயிரிட்டால் இரண்டு ஸ்டேண்டர்டு எக்கராவாக கருதப்படும் என்று சொல்லப்பட்டது. அதிலே நமக்கு சொல்லப்பட்டது என்னவென்றால் ஆற்றுச் பாசனம் என்பதன் கீழ் அரசாங்கத் தண்ணீரை எடுத்து பயிரிடு பவர்களுக்கும் தனிப்பட்ட முறையிலே கிணற்றின் மூலம் தண்ணீர் இறைத்து பயிரிடுபவர்களுக்கும் ஒரே மாதிரி வரி போடுகிறீர்களே, கிணற் றுப் பாசனத்திற்கும் ஒரு எக்கர் இரண்டு ஸ்டேண்டர்டு எக்கர் என்று போடுவது நியாயமா என்றார்கள். எனவே, அவர்களுக்கு சலுகை காட்ட வேண்டும் என்றார்கள். எனவே, அதிலே ஒரு திருத்தத்தை நான் பிரேரேபிக்கிறேன். அரசாங்கத் தண்ணீரை பாய்ச்சி பயிரிடும் சாதாரண ஒரு எக்கரை இரண்டு ஸ்டேண்டர்டு எக்கராக நாம் கணக் கிடும் பொழுது, தனியார்கள் கிணறு வெட்டி தண்ணீர் பாய்ச்சி பயிரி டும் நிலங்களுக்கு ஒரு சாதாரண எக்கர், $1\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு எக்கர் என்று கணக்கு எடுத்துக் கொள்வோம் என்று சொன்னோம். அதை தெளி வாக ஆக்கி விளக்கம் சொன்னோம்.

அரசாங்க தண்ணீர் என்று சொன்னால் எத்தனை மாதத்திற்கு பாயும் என்று கேட்டார்கள். கரும் தண்ணீரை கணக்கு எடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டார்கள். கரும் பிற்கு 12 மாதமும் தண்ணீர் தேவைப்படும், வாழைக்கு 14 மாதம் தண்ணீர் தேவைபடும். அப்படி எல்லா மாதங்களுக்கும் அரசாங்கத் தண்ணீர் கொடுக்கும் வகையிலே தமிழகத்திலேயே எந்த இடத்திலும்

இல்லை என்றும், ஆகவே, அரசாங்கத் தண்ணீர் என்று சொன்னால் 10, 15 நாட்களுக்கு தண்ணீர் கொடுத்துவிட்டாலும் கூட, அரசாங்க தண்ணீராலேயே பாய்ச்சப்பட்டதாக கணக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்ற சந்தேகத்தை கிளப்பினார்கள். அதற்கு ஒரு விளக்கம் சொன்னோம். அதிலே "ஹோல்லி" என்ற ஒரு வார்த்தையை போட்டோம். முழுமையாக அரசாங்கத் தண்ணீரை உபயோகப்படுத்தினால் ஒரு எக்கரா கரும்பு பயிரிடும் நிலத்து 2 ஸ்டாண்டர்டு எக்கராவாக கொள்ளப்படும் என்றும்; அப்படி "ஹோல்லி" இல்லை என்றும், அதாவது கிணற்று தண்ணீரை இறைத்து பயிரிடும் நிலங்களுக்கு ஒரு எக்கர் என்பதை $1\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு எக்காராக ஏற்றுக்கொள்ளப்படும் என்ற ஒரு விளக்கம் சொன்னோம். அதைத்தான் கனம் திரு. சுப்பையா அவர்கள் தெளிவாக சொல்லி வரவேற்றார்கள். தமிழ் நாட்டில் இனிமேல் கரும்பிற்கு ஒரு சாதாரண எக்கரா இரண்டு ஸ்டாண்டர்டு எக்கரா என்ற நிலைமை போய் $1\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு எக்கரா என்று வந்திருப்பதை அவர் வரவேற்றுப் பேசினார் சட்ட சபையிலே. "ஹோல்லி" என்று போட்டிருப்பதன் பொருள் என்னவென்றால் அரசாங்கத் தண்ணீரை நீங்கள் எடுத்துப் பாய்ச்சினாலும், தனிப்பட்ட சொந்த தண்ணீரையும் பாய்ச்சுவதாக ஆதாரம் காட்ட வேண்டும். அப்படி காட்டாவிட்டால், அது அரசாங்கத் தண்ணீரை பாய்ச்சியதாகத்தான் வரும். ஆகவே, உறுப்பினர் திரு. அழகிரிசாமி அவர்கள் கூட பேசும் பொழுது சொன்னார், "அதற்கு ஒரு ஒன்று வெட்டி விட்டால் போகிறது" என்றார். அந்த யோசனையை எல்லா விவசாயிகளுக்கும் சூசகமாக அவர்கள் இப்படி தெரிவித்தார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்.

அரசாங்கம் விவசாயிகளுக்கு சலுகை காட்டவேண்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு சலுகைகளையும் கொடுத்திருக்கிறோம். ஆனால் இந்தச் சலுகைகளை காட்டியதற்குப் பிறகும், இந்தச் சட்ட மன்றத்திலே நான் இதைப் பிரேரேபிக்கும் பொழுது இந்த சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கையோடுதான் பிரேரேபித்தேன். ஆனால், உறுப்பினர்கள் தான் இதையும் கடுமையாக தாக்கிப் பேசி, இதையும் பொறுக்கு குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக்கொள்கிறேன், அரசாங்கம் கொண்டு வருகிற எந்த வரிச் சட்டத்தையும் நாங்கள் எதிர்த்துதான் பேசவேண்டும் என்ற நிலையிலே எதிர் கட்சியிலே இருக்கும் உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கும்பொழுது...... ....

THIRU R. PONNAPPA NADAR : It is not in that light we have said it. It is on account of the instructions which we have received from the public and we have to ventilate their grievances before this House.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொது மக்களிடத்திலே இருந்து தங்களுக்குக் குறைகள் வந்ததாகவும், அதை பிரதிபலிக்கும் வகையிலே தான் பேசியதாகவும் சொன்னார்கள். பொது மக்களிடத்திலே இருந்து வந்த குறைகளை வைத்துத்தான் நாங்களும் சட்டத்தை திருத்தி இருக்கிறோம். ஆகவே இந்தச் சட்டம் பொது மக்களின் குறைகளை பிரதி



பலிப்பதாக இருக்கிறது என்றே சொல்லிக்கொள்கிறேன். கணக்கு கொடுப்பது பற்றி இங்கே சொன்னார்கள். 30 ஸ்டாண்டர்டு எக்கரா வரை கணக்கு வைக்க வேண்டாம்.

கம்பவுண்டிங் செய்யலாம் என்று போட்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு கணக்கு வைக்க கஷ்டமாக இருக்கிறது. அதை அதிகாரிகள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். கம்பவுண்டிங் செய்ய அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் கூட இந்தச் சட்டமன்றம் கூடுவதற்கு முன்னால் "கம்பவுண்டிங் செய்வதை எவ்வளவு வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் அல்லது விவசாயிகள் கணக்கு கொடுப்பதாக இருந்தாலும் கொடுக்கலாம்" என்று அறிவித்து விட்டார்கள். அதற்கு ஏற்ப இந்த சட்டத்திலே இன்னொரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இப்பொழுதும் சிறு விவசாயிகள் கணக்கு வைப்பதிலே சிரமம் இருக்கிறது என்று சொல்லுவார்களானால் அதை நான் புரிந்து கொள்ளுவேன். ஆனால் பெரிய பண்ணை நடத்துபவர்கள் எல்லாம் தாங்கள் கணக்கு வைப்பது சிரமமாக இருக்கிறது என்று சொல்லுவார்களானால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. இருந்தாலும் நாங்கள் கணக்கு வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிவிட்டோம்.

இந்த அவையிலே நான் ஒன்றை தெரிவித்துக் கொள்ளுவேன். கேரளாவிலே இருக்கிற சட்டப்படி—கேரளாவைச் சொன்னதும் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி செய்யும் மாநிலத்தை தானே சொல்லுகிறார். எங்கள் ஆட்சி செய்கிற 'மாநிலத்தை சொல்லவில்லையே என்று அம்மையார் நினைக்க வேண்டாம்—உங்கள் கட்சி ஆட்சி செய்கிற மைசூர் மாநிலத்திலே கூட கணக்கு வைக்கிற முறை இருக்கிறதே தவிர, கம்பவுண்டிங் செய்கிற முறையே கிடையாது. தமிழ் நாட்டில்தான் அந்த முறையை வைத்திருக்கிறோம். கேரளாவிலே இன்னும் சொல்லப் போனால் கணக்கு ஒவ்வொரு எக்காராவுக்கும் வைத்தாக வேண்டும். மைசூரிலேயும் அதே நிலைதான் என்று சொல்லிக் கொள்கிறேன். இப்படி இருக்கும் பொழுது தமிழ் நாட்டில் மட்டும் கணக்கு வைக்க முடியாது என்று வாதிடுவது அரசியல் நோக்கத்திற்காக சொல்லப்படுவதே தவிர வேறு ஒன்றுமில்லை. இருந்தாலும்கூட இதை இந்த தமிழக அரசு ஏற்று விவசாயிகள் கணக்கு வைக்க வேண்டாம். கம்பவுண்டிங் கொடுத்து விடலாம் என்று சொல்லி, 10 ஸ்டாண்டர்டு எக்கராவுக்கு வரி விதி விலக்கு என்று அரசாங்கம் அறிவித்து அதன் பிறகு வருகிற ஒவ்வொரு எக்கராவுக்கும் வரி போடுவோம் என்று சொன்னோம். ஒவ்வொரு ஸ்டாண்டர்டு எக்கராவிற்கும் 5 ரூபாய் வீதம் 15 ஸ்டாண்டர்டு எக்கராவுக்கு 25 ரூபாய் வரை வரி போடுவோம் என்றோம். உடனே தமிழ் நாட்டிலே வரி போடாதீர்கள்; விவசாயிகள் போராடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது வெடிக்கக் கூடிய நிலை இருக்கிறது என்று சுதந்திராக் கட்சித் தலைவர் பேசுவதை வேண்டுமானால் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. அழகிரிசாமி அவர்கள் பேசுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த ஒரு பிரச்சினையில் சுதந்திரா கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்திருப்பதைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

திரு சோ. அழகர்சாமி : நான் பேசும் பொழுது தனியாக கிணற்றுத் தண்ணீரை இறைத்து பயிரிடுபவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு வருமானம் 200 ரூபாய்தான் வருகிறது. ஆனால் அரசாங்கத் தண்ணீரை பாய்ச்சி பயிரிடுபவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு 500 அல்லது 600 ரூபாய் வருமானம் வருகிறது. இந்த ஸ்டாண்டர்டு ஏக்கரை நிர்ணயிக்கும் பொழுது இறவை பாசன நிலங்களையும், அரசாங்கத் தண்ணீர் பாசன நிலங்களையும் சமமாக மதித்து கணக்கிடப்படுகிறது. கிணற்றுப் பாசன நிலங்களிலே $\frac{1}{2}$ சாதாரண ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும், அரசாங்க தண்ணீர் பாசன நிலங்களை ஒரு சாதாரண ஏக்கர் நிலம் முக்கால் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் போட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னேன். இதனால் கிணற்றுப் பாசனம் செய்து பயிரிடும் சாதாரண விவசாயிகள் அதிகமாக பாதிக்கப் பட்டார்கள் என்றும், நீங்கள் சொன்ன பல சலுகைகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்றுதான் நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : ஒன்றும் சலுகைகள் கிடைக்க வில்லை என்று சொன்னார்கள் உறுப்பினர் அவர்கள். இப்பொழுதுதான் சலுகைகளை அறிவித்திருக்கிறோம். இதற்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. அழகிரிசாமி அவர்கள் திருப்தி அடைத்திருப்பார் என்று நம்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : என்னதான் என்றாலும் கிணற்றுப் பாசனம் செய்து பயிரிடும் சாதாரண விவசாயிகள் அதிகமாக பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லுவேன். காரணம், ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்கிடுவதிலே அவர்களுக்கு சரியான நியாயம் வழங்கப்படவில்லை என்றுதான் கருதுகிறேன். அதோடு நிலக்கடலை, பருத்தி போன்ற பயிர் செய்யக் கூடிய சாதாரண விவசாயிகளையும் அது பெரிதாக பாதிக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வாழைக்கும், கரும்பிற்கும் கொடுத்த சலுகை ஏன் கடலைப் பயிருக்கும் கொடுக்கவில்லை என்று அவர் கேட்கிறார். அங்குகூட நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது சிறு விவசாயிகளை பாதிக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் இவைகளை எல்லாம் கொண்டு வரவில்லை. 12, 14 மாதங்கள் தண்ணீர் தேவைப்படும் பொழுது அரசாங்கத் தண்ணீர் இந்தக் கடலை போன்ற பயிர்களுக்கு தேவைப் படாது என்று விலக்களித்தோம். இது மூன்று மாத பயிர். எனவே, இது தேவையில்லை என்ற காரணத்தினால்தான் இப்படி போடப்பட்டது. எனவே, விவசாயிகளை பாதகத்திற்கு உட்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் கருதவில்லை. பருத்திக்கு போட்டிருக்கிறோம். அதை உறுப் பினர் அவர்கள் கவனிக்க வேண்டும். எனவே, விவசாயிகளுக்கு வரு மான வரியை போடக் கூடாது என்றால் அதை என்னால் ஒத்துக்கொள்ள முடியாது. வருமானம் வரும்பொழுது, விவசாயிகளுக்கு அரசாங்கம் வரு மான வரியை போட்டுத்தான் தீர வேண்டும்.

நேற்று திரு. அழகிரிசாமி அவர்கள் பேசும் பொழுது சொன்னார்கள், ரொம்பவும் வாதிட்டார்கள். 15,000 ரூபாய் செலவு செய்து கிணறு வெட்டி அவன் விவசாயம் செய்கிறான். வெட்டிய கிணற்றிற்கு வருஷம்





ஒன்றுக்கு 1,500 ரூபாய் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. அவனுக்கு அதிகத் தீர்வை போட்டால் அவன் என்ன கஷ்டம் அடைவான் என்று கேட்டார். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. பத்து ஸ்டாண்டர்டு ஏக்கரா வரையில் வரி விதி விலக்கு அளித்திருக்கிறோம். அதை ஏற்றுக்கொள்ள அவர் மறுக்கிறார்.5 ஏக்கரா அல்லது 7ஏக்கரா வரையில் கரும்பு போட்டாலும் கூட, அது தனியார் கிணற்றுப் பாசனமாக இருந்தாலும் கூட, அவன் கட்ட வேண்டிய வரி அதாவது $10\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு ரூ. 12·50 காசு. இதை ஒரு விவசாயி ஒரு வருஷத்திலே கட்ட முடியாது என்று சுதந்திரா கட்சித் தலைவர் வாதிட்டார் என்றால் என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. அழகிரிசாமி பேசு வதைத் தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, இந்த கழக அரசின் மீது எந்த ஒரு குற்றமும் சொல்ல எதிர் கட்சியினர் காத்திருக்கிறார்கள் என்று நான் சொல்லுவேன்.

தலைவரவர்களே, இன்னொன்றையும் இங்கே தெரிவித்துக் கொள் கிறேன். துர்பாக்கியமான அரசியல் சூழ்நிலைகள் இங்கே இருப்பதை பார்க்கும் பொழுது, விவசாய கூலிகளுக்கு கூலி உயர்வு வேண்டும் என்று போராடுகிறார்கள். ஆனால் இந்த விவசாய வருமான வரியைப் போட்டால், அதுவும் கூடாது என்று சொல்லுகிறார்கள். இப்படி விவசாயத் தொழி லாளர்களுக்கு கூலி அதிகம் கொடுக்க வேண்டும் என்று கேட்கும் பொழுது அது நியாயம் என்று இந்த அரசு ஒத்துக்கொள்கிறது. அதற் காக வாதாடவும் இந்த அரசு தயாராக இருக்கிறது. கூலி உயர்வை வாங்கிக் கொடுக்கவும் தயாராக இருக்கிறோம். ஆனால் விவசாயத்திலே வருமானம் வருகிறவர்களுக்கு வரி போட்டால் கூடாது என்றால் ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை.

அரசாங்கத்தின் மீது குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணத் திலே, எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும், குறை சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கழக அரசின் மீது களங்கம் கற்பித்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஒன்றை செய்தாலும் தப்பு என்கிறார்கள் ; செய்யாவிட்டாலும் தப்பு என்கிறார்கள். இதைப் பார்க்கும்பொழுது எனக்கு ஒரு உதாரணம் ஞாபகத்திற்கு வருகிறது. யாரோ ஒருவனை எப்படியாவது அடிக்க வேண்டுமென்று எதிர்வீட்டுக்காரன் பக்கத்து வீட்டுக்காரனை யோசனை கேட்டானாம். அவன் வீட்டில் திருமணம் நடக்கிறது. பத்திரிகை வைக்க வருவான். அப்போது ஏன் எனக்கு பத்திரிகை கொடுத்தாய் என்று சொல்லி அடி, என்றானாம். அதற்கு, பத்திரிகை வைக்காவிட்டால் என்ன செய்வது என்று கேட்டானாம். பத் திரிகை வைக்காவிட்டால், ஏன் பத்திரிகை வைக்கவில்லை என்று சொல்லி அடி என்றானாம். அதைப்போல இந்த நாட்டிலே சிலர் எதெதற்கு குறை சொல்வது, என்ற ஒரு நியதி இல்லாமல் எதற்கெடுத்தாலும் குறை சொல்லிக்கொண்டே இருக்கவேண்டுமென்று நினைத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு கூலி நிர்ணயிக்கப்பட்டாலும் குறை சொல்கிறார்கள், வருமானத்திற்கு வரம்பு வைத்தாலும் குறை சொல்கிறார்கள். எதைச் செய்தாலும், "நாங்கள் இருக்கிறோம்,பார்த்துக்கொள்கிறோம்" என்று விவ சாயிகளைத் தூண்டிவிட்டு தங்கள் அரசியலை வளர்த்துக்கொள்கிறார்கள். இதுவல்ல அரசியல் நாகரீகம்.

நண்பக 12–0

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, நான் நேற்றைய விவாதத்தின்போது குறிப்பிட்ட கருத்துக்களை வைத்துக் கொண்டு, அதற்கு ஒரு உள்நோக்கம் கற்பித்து அமைச்சரவர்கள் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த நேரத்தில் என்னுடைய விளக்கத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

கிணறு வெட்டுவதற்கு என்று 15,000 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள் என்றால், அதற்கு 900 ரூபாய் வட்டி கட்ட வேண்டும். கரண்டு செலவு 300 ரூபாய் ஆகிறது. ஒரு ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு 400 ரூபாய் செலவாகிறது. அதே நேரத்தில் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட பாசன வசதியை பெற்றால் 40 ரூபாய்தான் செலவாகிறது. இவைகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தால் என்ன வருமானம் இருக்கும் என்பது நமக்குத் தெரியும். அதனால் சிறு விவசாயிகள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். 20 ஏக்கர் புஞ்சை நிலம் இருக்கிறதென்றால் நீங்கள் கொடுக்கும் கடன் 4, 5 ஏக்கர் தான் பயிர் செய்வதற்கு போதுமானதாக இருக்கிறது. உங்கள் கணக்குப்படி பார்த்தால், அவர்கள் செலவு செய்ததுபோக மிஞ்சக்கூடிய வருமானத்தைக் கொண்டு நீங்கள் கொடுத்த கடனைத் தீர்க்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அதனால்தான் இந்த விவசாயப் போராட்டமே நடைபெற்றது என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடியவர்கள் வருமான வரி செலுத்தவேண்டியதில்லை என்று நாங்கள் சொல்லவில்லை ; 5,000 ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடியவர்களுக்கு வருமானவரி விதிக்க வேண்டுமென்று சொன்னவர்களே நாங்கள்தான். வருமானத்தைக் கணக்கிடுவதிலே இருக்கின்ற சிக்கல்களைத்தான் நாங்கள் சொல்கிறோம். ஸ்டாண்டர்டு ஏக்கர் முறையில், 20 ஏக்கர் புஞ்சை நிலத்தை 10 ஏக்கர் நஞ்சை நிலம் என்று கணக்கிடுகிறீர்கள். ஒரு ஏக்கருக்கு வரக்கூடிய வருமானமே 20 ரூபாய்தான். உங்கள் கட்சியிலே இருக்கக் கூடியவர்களைக் கேட்டால்கூட இவ்வளவுதான் வருமானம் வருகிறது என்று சொல்வார்கள். ஆகவே இம்மாதிரியான குறைபாடுகளைச் சொல்வதால் எங்கள்மீது உள்நோக்கம் கற்பிக்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சபாநாயகர் அவர்களே, அமைச்சரவர்கள் என்மீது உள்நோக்கம் வைத்து பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன், உள்ளபடியே இதில் உள்நோக்கம் கற்பிப்பதற்கு இடமே இல்லை. ஏழை விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். அரசாங்கம் அவர்களுக்கு அதிக சலுகை அளிக்கவேண்டும். அவர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்க வேண்டும். விவசாயிகள் நசுக்கப்படக்கூடாது. அவர்களும் வாழவேண்டும்; அவர்களை வாழவைக்கவேண்டும். இதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது.

திரு. என். கே. பழனிசாமி : சார், கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையில், இந்த விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும்; அந்த விவசாயிகளுக்கு கொடுக்கக்கூடாது என்ற நோக்கம் அல்ல. பெரிய விவசாயி



களாக இருந்தாலும், சிறிய விவசாயிகளாக இருந்தாலும், நடுத்தர விவசாயிகளாக இருந்தாலும் எல்லோரும் நாட்டிலே உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று பாடுபடுகிறார்கள். ஆனால் நிலப்பிரப்புக்கள் குத்தகை என்ற பெயரால் விவசாயிகளை நசுக்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை எதிர்க்கிறோம். இந்த ஆட்சியை அகற்றிவிட்டு இன்னொரு முறை சிண்டிகேட் ஆட்சியை கொண்டுவர வேண்டுமென்று நாங்கள் நினைக்கவில்லை. அதனால் இந்த சர்க்காரை கவிழ்க்கவேண்டும் என்பது எங்கள் எண்ணமல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பணக்காரர்களுக்கு விரோதி அல்ல கம்யூனிஸ்டு கட்சி என்று சொன்னார்கள். விவசாயப் பிரச்சனையில் கம்யூனிஸ்டு கட்சியின் நிலையை விளக்கியுள்ளார்கள். அதற்காக நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்; நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் நண்பர் அழகர்சாமி அவர்கள் மிராசுதார்கள், நில உடைமையாளர்கள் கிணறு வெட்டுவதற்காகும் செலவு பற்றியும், மற்ற செலவுகளைப் பற்றியும் சொன்னார்கள்; அவை பற்றிய கணக்கினைக் கொடுத்தார்கள். இந்தமாதிரி கணக்கை ஆலை அதிபர்களிடமும் கம்யூனிஸ்டு கட்சியினர் காட்டுவார்களா ? தஞ்சை விவசாயிகள் கூலி உயர்வு கேட்கும்போது தஞ்சை மிராஸ்தார்கள் சொல்லும் கணக்கையும் ஏற்றுக்கொள்வார்களா? அவர்கள் கொடுக்கும் கூலி உயர்வு போதும் என்று ஒப்புக்கொள்வார்களா? போதுமென ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை. விவசாயிகளுக்கு சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று சொல்லும்போது வசதி படைத்த பெரிய விவசாயிகளுக்கும் அதேமாதிரியான சலுகையினை அளிக்கவேண்டுமென்று வாதிடுவது சரியல்ல. நாம் அனைவரும் சேர்ந்து ஒரு சுமுகமான நிலையை உருவாக்க வேண்டும்; அந்தவகையிலேயேதான் முயற்சி செய்துவருகிறோம். சிறிய விவசாயிகளுக்கு நிறைய சலுகைகளை இந்த அரசு செய்திருக்கிறது. மீண்டும் மீண்டும் எந்த அளவுக்கு சிறிய விவசாயிகளுக்கு சலுகை அளிக்க முடியுமோ அதை இந்த அரசு செய்யும். ஆகவே, அவர்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்வதும், பெரிய விவசாயிகளுக்காக வாதிடுவதும் நல்லதல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : பணக்கார விவசாயிகளுக்கும், நிலப்பிரபுக்களுக்குமுள்ள வித்தியாசத்தை விளக்கலாம் என்று நினைக்கிறேன். நிலப்பிரபுத்துவம் என்று சொல்கிறபோது நேரிடையாக நிலத்தை வைத்துக்கொண்டு தானே உழுது சாகுபடி செய்யாமல், எல்லைக்கு அப்பால் இருந்துகொண்டு மற்றவர்களின் உழைப்பை எடுத்துக்கொண்டு வருகிற தன்மையைத்தான் சொல்கிறோம். அதை எதிர்க்கிறோம். பணக்கார விவசாயி என்கிறபோது இன்றைய தினம் நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வந்துவிட்டோம்; அந்த உச்சவரம்புச் சட்டத்திற்கு உட்பட்டு சொந்தமாக நிலத்தை வைத்துக்கொண்டே தானே உழுது பயிரிட்டு வருகிற விவசாயிகளைத்தான் கருதுகிறோம். ஆக கம்யூனிஸ்டுக் கட்சி நிலபிரபுத்துவத்தை எதிர்க்கிறதே தவிர பணக்கார விவசாயிகளை எதிர்க்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பணக்கார விவசாயிகள் பற்றி தனியாக ஒருமுறை தங்கமணியிடத்தில் கேட்டு விவரம் அறிந்துகொள் கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : முதலமைச்சர் அவர்கள் சொல்லும் போது பணக்காரர்களுக்கு வாம்பாடக்கூடாது என்று நான் சொல்வது போலச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. விவசாயிகளுக்கு நியாயமான கூலி கொடுக்கப்பட வேண்டும் என்பதை சபையில் பலமுறை யிலும் சொல்லியிருக்கிறேன். வருமானம் உள்ளவர்களுக்கு வரி போடு வதைப்பற்றியும் நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஸ்டாண்டர்ட் ஏக்கர் எவ்வளவு என்று கணிப்பதில் உள்ள குறைபாடுகள் காரணமாக வரு மானமே இல்லாத விவசாயிகளும் கூட வருமான வரி கட்டக்கூடிய நிலைதான் இப்போது வருகிறது. இவர்கள் கூட 400, 500 கட்டவேண்டும் என்பது அநியாயமானது என்பதைத்தான் கண்டித்தேன். தமிழகம் பூரா வுக்கும் நிலம், அதன் விளைவு, கிடைக்கக்கூடிய வருமானம் ஆகியவற்றை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு விவசாயக் கூலிகளுக்கு நியாயமான ஊதியம் நிர்ணயிப்பதை நான் இன்றைக்கும் ஆதரிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பயிர்வாரி அமைப்பில் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரை வரிச் சலுகை கொடுத்திருக்கிறோம். பதினைந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் உள்ளவரை சாதாரண விவசாயி என்று கூறுகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : ஸ்டாண்டர்ட் ஏக்கர் கணக்கிடும்போது பத்து ஏக்கரா கூட 20 ஸ்டாண்டர் ஏக்கர் என்கிற அளவில் வந்துவிடுகிறது. அதைச் சொன்னேனே தவிர வருமானம் வரக்கூடியவர்களுக்கு வரி போடக்கூடாது என்று சொல்லவில்லை. தொழிற்சாலை முதலாளிகளைப் பற்றிச் சொன்னார்கள். வருமானம் பெருகப்பெருக அவர்கள் ஸ்லாப் முறையில் வரி கட்டுவதைப்போலக்கூட வருமானம் உள்ளவர்களுக்கு வரி போடுவதைப்பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : முதலாளிகள் உற்பத்தி செய்கிற பொருளை அரசாங்கம் வாங்கிக்கொள்வதில்லை. ஆனால் விவசாயிகள் உற் பத்தி செய்கிற பொருளை அரசாங்கம் வாங்கிக்கொள்ளவேண்டும் என் கிறீர்கள். பத்து ஸ்டாண்டர்ட் எக்கரா உள்ளவருக்கு விலக்கு அளித் திருக்கிறோம். ஐயாயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு வரி விலக்கு அளித்திருக்கிறோம். அப்படி இருக்கிறபோது எப்படி இந்தச் சட்டத்தை குறை சொல்ல முடியும்? பத்து ஸ்டாண்டர்ட் எக்கரா வரை வரி விலக்கு என்றால் 15 ஸ்டாண்டர்ட் எக்கரா வரை அளிக்கவேண்டும் என்பது, ஐயாயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு வரி கிடையாது என்றால் 10 ஆயிரம் என்று அந்த வரம்பை வைக்கவேண்டும் என்று சொல்வது—அரசியல் நோக்கத்திற்காகச் சொல்லப்படுவதைத் தவிர நியாய அடிப்படையில் இல்லை. மற்ற மாநிலங்களோடும் நமது இந்தச் சட்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாம். மைசூரில் எந்தவிதமான விலக்கும் அளிக்கப்





படாது, இந்த விவசாய வருமான வரி விதிக்கப்படுகிறது. மைசூரில் ஐயாயிரத்திற்குக் குறைவாக வருமானம் உள்ளவர்கள்கூட ரூ. 105 வரி கட்ட வேண்டும். அங்கே திருமதி அம்மையாருடைய புதுக் கட்சிதான் இருக்கிறது. ஐயாயிரத்திற்கு உட்பட்ட வருமானம் உடையவர்களுக்கு தமிழ் நாட்டில் வரி கிடையாது. கேரளாவில் இல்லை. 7,500 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு மைசூரில் ரூ. 250, கேரளாவில் ரூ. 175, தமிழகத்தில் ரூ. 125. இது அதிகமா? பத்தாயிரம் ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு மைசூரில் ரூ. 405, கேரளாவில் ரூ. 400, தமிழகத்தில் ரூ. 300. இது அதிகமா? பதினைந்தாயிரம் ரூபாய் வரு மானம், உள்ளவர்களுக்கு மைசூரில் ரூ. 855, கேரளாவில் ரூ. 1,565, தமிழகத்தில் ரூ. 825. இது அதிகமா? ரூபாய் இருபதனாயிரம் வரை வருமானம் உள்ளவர்களுக்கு மைசூரில் ரூ. 1,455, கேரளாவில் ரூ. 3,090, தமிழகத்தில் ரூ. 1,525. கேரளாவில் ரூ. 3,090 வரி போடு கிறார்கள், அங்கே கசக்கவில்லை, தமிழகத்தில் ரூ. 1,525 தான் போடப்படு கிறது என்கிறபோதுதான் இது கசக்கிறதா?

திரு. கே.டி. கே. தங்கமணி : அதிக வருமானம் உள்ளவர்களிடத்தில் அதிகமாக வரி வாங்குகிறார்கள். இதில் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால் திரு. தங்கமணி அவர்கள் அதுபோல வருமானம் அதிகமாக அதிகமாக வரி விதிப்பையும் அதிகப்படுத்தும் வகையில் ஒரு திருத்தம் கொண்டுவருவார்களானால் அதை நிறைவேற்றக்கூட நாங்கள் தயாராக இருக்கிறோம்.

திரு கே. டி. கே. தங்கமணி : நான் பேசுகிறபோது வருமான அடிப்படையில் ஸ்லாப் முறையில் வரி விகிதத்தை அமைக்கலாம் என்பதா கப் பேசியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : முப்பதாயிரத்திற்கு வருமானம் உள்ளவர்களுக்கு மைசூரில் ரூ. 3,125 வரி. கேரளாவில் ரூ. 5,690. தமிழகத்தில் ரூ. 3,025 தான். மத்திய அரசாங்கமோ தங்களது ஒவ் வொரு தாக்கீதிலும் வருமான அடிப்படையில் விவசாயத்திற்கு வரி விதிக்கவேண்டும் என்பதை வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இங்கே பேசுகிறவர்கள் மட்டும்—இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்திருக்கிற காரணத்தினாலே எதிர்க் கிறார்கள். இப்படி அரசியல் நோக்கில் பெரிய விவசாயிகளைப் பாதுகாக்க எந்த அரசியல் கட்சியும்—சோஷலிசம் பேசுகின்ற கட்சியும் போய்விடுவது நியாயமல்ல.

விவசாயிகளுக்கு வருமானம் என்ன வருகிறது என்பதைப்பற்றி நான் கணக்கைச் சேகரித்தேன். ஒரு கணக்கு ரெவின்யூ இலாக்கா கொடுத்தது. இன்னொன்று விவசாய இலாக்காவே கொடுத்தது. மற்றொன்று விவ சாயத்தில் ஈடுபட்டு வருகிற திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார் கொடுத்தது. இப்படி மூன்றுவகையில் புள்ளி விவரங்கள் சேகரித்துப்பார்த்தேன். எல்லாப் புள்ளி விவரங்களும் செலவினங்கள், வருமானம் உட்பட இருக்

[திரு. ப. உ. சண்முகம்]



இறது. நேரம் இல்லாத காரணத்தினால் ஒவ்வொன்றையும் படிக்காது மொத்தத்தை மட்டும் சொல்கிறேன். ஒரு ஏக்கரா கரும்பு பயிரிடுவதற்கு விவசாய இலாக்கா கொடுத்திருக்கிற கணக்குப்படி மொத்தம் ஆகிற செலவு ரூ. 1,500 ஆகும். இன்னொரு கணக்குப்படி ரூ. 1,050 ஆகும். திரு. சுப்பையா முதலியார் கணக்குப்படி ரூ. 2,568 ஆகிறது. ரூ. 1,000 போட்டிருக்கிறோம், ரூ. 2,568 போட்டிருக்கிறார். அவ்வளவு விட்டு எவ்வளவு லாபம் வரும் என்று கேட்டதற்கு—இந்த பொம்பளையும் அதிகம், வரி—அவர் கொடுத்திருக்கிற கணக்குப்படி ஒரு ஏக்கர் கரும்புக்கு ரூ. 695 என்று போட்டிருக்கிறார். 6 சாதாரண ஏக்கர் வருமானம் பயிரிடுகிறவர்களுக்கு வரி கிடையாது. இது 9 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலத்தில் கரும்பு ஆகிறது, வரி இல்லை. ரூ. 3,000 ரூ. 4,000 வருமானம் வருகிறது. இல்லை. ஆனால், 7 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஆகும் பொழுது தான் கட்டவேண்டிய வரி ரூ. 12·50 காசுகள். இது விவசாயிகளைக் கசக்குவது என்றால் இது எந்த வகையிலே நியாயம்? அவர்கள் முடிந்த அளவு பாதுகாப்பையும் அளிக்கிறோம். அவர்களுக்கு நம்மால் சொல்கிறார்களா, அல்லது கொண்டு வந்திருக்கிற சட்டத்தைப் புரியாமல் சொல்கிறார்களா, அல்லது அரசாங்கம் அவர்களுக்குப் புரிய வைக்கத் தவறிவிட்டதா என்று தெரியவில்லை.

Dr. H. V. HANDE : Sir, according to the statistics furnished by the Hon. Minister, for the sum of Rs. 2,000 spent on one acre a person gets Rs. 600. But nowhere in the history of any industry, for an investment of Rs. 2,000 there is a return of Rs. 600. Also for Rs. 2,000 how much interest the poor agriculturist has to pay? What is his position? Please think of all these things. Though on paper it looks grand, it is a serious matter.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது முதலாளித்துவம் ஆர்கியுமெண்டு போலாகும். அதை கம்யூனிஸ்ட் கட்சி ஒத்துக்கொள்கிறதோ இல்லையோ, நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. நானும் விவசாயி தான். கரும்பு விவசாயத்தைப் பற்றி எனக்கும் தெரியும். ஒரு வியாபாரிக்கு எந்த வகையிலே இந்த அளவுக்கு சேவை கிடையாது. வடஆர்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே. . . . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : சுப்பையா முதலியார் அவர்களுடைய வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ரூ. 2,000 ஆகிறதா, ரூ. 1,300 ஆகிறதா என்பதல்ல. போட்ட கணக்கு. அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். அதிலே தகராறு கிடையாது. எதற்கு இந்த வாதம் ?

திரு. எ. ஆர். சுப்பையா : டாக்டர் ஹாண்டேவுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். அதாவது, விவசாயி நிற்பதற்கு முதல் செலவு போட்டிருக்கிறேன். ரூ. 600 வருகிறது. அதை ஏன் மறைக்க வேண்டும் ?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் சொல்வதை நண்பர் கிருஷ்ணமூர்த்திக்குச் சொல்வதாக நினைக்கவேண்டாம். எதிர்க்கட்சி நண்பர்கள் தவறுதலாக எடுத்துக்கொண்டு நாம் விவசாயிகளைக் கசக்குவதாகச் சொல்கிறார்களே, அது எந்த வகையிலே நியாயம்? இது சிறு விவசாயிகளுக்கு நியாயமான சட்டம், பாதுகாப்பளிக்கக்கூடிய சட்டம். இதைவிட அதிகமாக பாதுகாப்பு கொடுப்பதற்கு எப்படி இயலும் என்பதை யோசித்துப் பார்த்து, ரூ. 5,000-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் வரி விதிக்கிறோம். ஆகவே, நான், தந்திருக்கிற விளக்கத்திற்குப் பிறகு, இந்தச் சட்டத்தைப் பேரவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் பேசுகின்ற சமயத்திலே சொன்னேன். கரும்பு, வாழை இவைகளுக்கு 12 மாதம், 13 மாதம்—சில சமயம், ஆலைக்காரர்கள் வெட்ட உத்தரவிடவில்லையென்றால்—14 மாதம் கூட ஆகிறது. இப்பொழுது 2 அசெஸ்மெண்டு போடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ரூல் 27 பிரகாரம், 2 அசெஸ்மெண்டு போடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது, அரசாங்கம் உத்தரவு போட்டு அதை நிறுத்திவிட்டார்கள். ஆகவே, சட்டத்திலே வழிவகை செய்தால்—இப்பொழுது 12 மாதத்திலே அறுவடை செய்யப்படுகிறது. 13 மாதத்திலே அறுவடை செய்யப்படுகிறது, சில சமயம் 9 மாதத்திலே கூட அறுவடை செய்யப்படுகிறது—ஒரு அசெஸ்மெண்டுதான் என்ற உறுதிமொழிக்கு வகைசெய்தால் நலமாக இருக்கும். ஆகவே, அதற்கு வகை செய்வார்களா என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கெனவே இருக்கிற பிரின்சிபல் ஆக்டிலே தெளிவாக இருக்கிறது. எந்த வருஷத்தில் கிராப் வருகிறதோ அந்த வருஷத்தில்தான் அசெஸ்மெண்டு. 14 மாதங்கள் வைத்திருந்தால் 2 வருஷத்திற்கு போடக்கூடாது என்று அரசாங்க எக்ஸிக்யூடிவ் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மூலம் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தெளிவாக சொல்லியிருக்கிறோம். எந்த ஆண்டு அறுவடைக்கு வருகிறதோ அந்த அறுவடை ஆண்டிற்கு மட்டும்தான் அசெஸ்மெண்டு எடுக்கப்பட வேண்டும். மற்ற ஆண்டிற்கு எடுக்கக் கூடாது என்று தெளிவாக இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எ. ஆர். சுப்பையா : இது சம்பந்தமாக ஒரு உறுதிமொழியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Thirumathi T. N. ANANDANAYAKI : What is the authority to decide whether it has been fully irrigated by the Government source or partly irrigated by the Government source?

ஒருவனுக்குக் கிணறு இருக்கலாம், அதில் கணக்கு வைப்பது சம்பந்தமாக கர்ணத்திற்கும் அவனுக்கும் சண்டை வரலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அரசாங்க கணக்கில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, அதற்கு அரசாங்கத் தண்ணீர் தீர்வை வருகிற இடத்திற்கு மட்டும்தான் இந்த பிரச்னை வரும். அப்படி வருகிற இடத்திற்குக் கூட, தண்ணீர், கண்மாய் இருக்கிறதா என்று அரசாங்கத் திடமே கணக்கு இருக்கிறது. எத்தனை மாதத்திற்கு அந்த தண்ணீர் வரும், தண்ணீர் வந்திருக்கிறது என்று அரசாங்கத்திடமே கணக்கு இருக்கிறது. அதையெல்லாம் பார்த்துத்தான், கணக்கைப் பார்த்துத்தான் முடிவு செய்யப்படும். தாலுகா ஆபீஸில், ஆர்.டி.ஓ. ஆபீஸில் எல்லா இடத்திலும் கணக்கு வைத்திருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அவ்வளவு கடுமையாக இருக்கும் என்று நினைக்கவேண்டாம்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் விவசாயி களுக்கு வரியே போட வேண்டாமென்று வாதாடுவதாகவும் சொன்னார் கள். அப்படி வரி போட வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. இந்த ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயம் செய்கிற நேரத்திலே, சில இடங் களிலே உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. சில இடங்களிலே உற்பத்தி செலவு குறைவாக இருக்கிறது. அதிலே இருக்கிற கோளாறு களைச் சரி செய்யவேண்டுமென்று சொன்னார்களே தவிர, விவசாயிகளுக்கு வரியே போட வேண்டாமென்று சொல்லவில்லை.

இரண்டாவதாக, முதலமைச்சர் அவர்கள், தொழிற்சாலை பூமியை வைத்திருக்கிற டைரக்டர்களுக்கு, எந்த ஒரு ஆலையிலே டைரக்டராக இருந்தாலும் கூட, அவர்களுக்கு பூமி இருந்தால், அவர்களுக்கு சட்டத் திலே விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது, தொழிற்சாலைகளிலே டைரக்டர்களாக இருக்கிறவர்களுக்குப் பூமி இருக்கும் பட்சத்தில், அந்த பூமிக்கு சாதாரண விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல் விதிவிலக்குக் கொடுக் கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நிலம் வைத்திருப்பவர்கள் எந்தமாதிரி நிலம் வைத்திருக்கிறார்கள்? யாருக்கு விதிவிலக்கு என்று கேட்கிறார்கள்? ஏற்கெனவே ஒரு சட்டம் போட்டிருக் கிறோம். தொழிற்சாலைக்கு என்று எழுதி நிலம் வாங்கிவிட்டு, விவசாயத் திற்கு பயன்படுத்தக் கூடாது. அதை எப்படி பயன்படுத்த வேண்டுமென்பது ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலே தெளிவாக இருக்கிறது. அந்தக் கணக்கு அங்கு வருகிற நேரத்தில், அங்கு அவர்களுக்கு வரி போடுகிறார்கள். இங்கு வருகிற நேரத்தில் இந்த லாபத்தில் இங்கு இவர்களுக்கு வரி போடு கிறார்கள். அவர்கள் வருமான வரி போடுகிறார்கள். ஆகவே, அதிகமாக வரி போடவேண்டுமென்று சொல்வது தவறு. விவசாய வருமானம் ரூ. 5,000 இருந்தால் வரி இல்லையென்று இருக்கிறது. அதற்கு மேல் வரி உண்டு. 10 ஸ்டாண்டர்டு ஏக்கரா இருந்தால் வரி கிடையாது. அதற்கு மேல் இருந்தால் வரி போட்டிருக்கிறோம் என்று தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் குமாரசாமி அவர்களும் மற்றவர்களும், கம்யூனிஸ்டு கட்சி சார்பிலே பேசியவர்களும் இங்கே பேசிய நேரத்தில் விவசாய வருமான வரியை தாங்கள் எதிர்க்கவில்லையென்று குறிப்பிட்டார்கள். இறுதியாகவும் மாண்புமிகு உறுப்பினர் குமாரசாமி அவர்கள் அதையே வலியுறுத்திச் சொன்னார்கள். ஆமாம், என்பதைப் போல் அழகர்சாமி அவர்களும் தலையசைக்கிறார்கள் வேகமாக. ஆனால், விவசாயிகளுடைய மாநிலம் தழுவிய போராட்டத்தில் வைக்கப்பட்ட 12 அம்ச கோரிக்கைகளில் மிக முக்கியமான கோரிக்கையாக இருந்ததும், பேசப்பட்டதும், விவசாய வருமான வரியைப் பற்றி என்பதை யாரும் மறந்திடவில்லை.

பெத்துநாய்க்கன்பாளையம் போன்ற இடங்களிலே ஏற்பட்ட கலவரங் களுக்கு அந்தப் பகுதியிலே இருந்த பெரிய பாக்குத் தோட்டச் சொந்தக் காரர்கள் காரணமாக இருந்தார்கள் என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள். ஆகவே, பெரிய விவசாயிகள் இதிலே பாதிக்கப்பட்டிருக் கிறார்கள் என்றெல்லாம் பலபேர் வக்காலத்து வாங்குவது, சோஷலிச சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று, இங்கு அல்ல டெல்லி போன்ற மேலிடத்தில் காங்கிரஸ் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும், முன்னேற்றக் கழகத்திற்கும் வேறுபாடு இல்லாமல் இருக்கும்பொழுது, தமிழ் நாட்டிலே மட்டும் மாறுபாடான, வேறுபாடான, சொல்லப்போனால், முரண்பாடான கருத்துக்கள் இருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும்.

விவசாயப் போராட்டக் குழு கோரிக்கையினை விளக்கிய நேரத்தில், அரசாங்கத்தோடு பேசிய நேரத்திலே கூட, அவர்களுடைய முக்கியமான கோரிக்கை, பணப் பயிர் அடிப்படையிலே போடப்பட்ட விவசாய வருமான வரி ரத்து செய்யப்பட வேண்டுமென்பதுதான். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. பணப் பயிர் அடிப்படையிலே போடப்பட்ட விவசாய வருமான வரியை நாங்கள் ரத்து செய்ய இயலாது. அது சோஷலிசக் கொள்கை அல்ல, அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள இயலாது என்று சொன்னபிறகு, கடைசியாக, சாதாரண விவசாயிகளுக்கு இருக்கிற சங்கடங் களைத் தீர்க்க நாங்கள் முயற்சி எடுக்கிறோம். ஏற்கெனவே கணக்கு வைப்பதில் கஷ்டங்கள் அனுபவிக்கிறவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கும் நாங்கள் சொன்னவை மாநில போராட்டக் குழுவால் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, வரி போட வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லையென்று நீங்கள் கூறுவது தவறு. பணப் பயிர் அடிப்படை யிலே வரி போடக் கூடாது என்று 12 அம்ச கோரிக்கைகளிலே எடுத்துச் சொன்னார்கள் என்று திட்டவட்டமாக எடுத்துச் சொன்னேன்.

இவ்வளவுக்கும் பிறகு, மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் இவர்கள் எல்லாம் பேசியதற்குப் பிறகு, அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்ததற்குப் பிறகும் நான் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவையிலே தெரிவிக்க விரும்புகிறேன். இப்பொழுது ஏற்கெனவே 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு படி சென்று, சிறிய விவசாயிகளுக்கு அனுகூலம் செய்கின்ற வகையில் ஐந்து ஏக்கர் வரையில் எந்தப் பயிர் செய்தாலும் விவசாய வருமான வரி கிடையாது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

பிற்
12-

திரு. சோ. அழகர்சாமி: விவசாயப் போராட்ட நேரத்திலே கோரிக்கை வைத்ததுபற்றிச் சொன்னார்கள். நெல்லையிலே மாநாடு நடைபெற்ற நேரத்தில் விவசாய வருமான வரிபற்றி கோரிக்கை வைக்கப்படவில்லை........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நெல்லையிலே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி வேறு, தஞ்சையிலே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி வேறு, சென்னையிலே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி வேறு? நான் சொன்னது மாநிலம் தழுவிய அந்தப் போராட்டக் குழுவில் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள், அவர்கள் என்னிடத்திலே விவாதிக்கின்றபொழுது நான் சொல்லியதைத்தான் கூறினேன்.

திரு. சோ. அழகர்சாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களுடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி, "தமிழ்நாடு, 1972-ஆம் ஆண்டு, விவசாய வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

*Clause 2.*

Mr. SPEAKER: The question is:
'That Clause 2 do stand part of the Bill'.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I move the following amendment:—

In Clause 2 (i) for the proposed clause (j) *substitute* the following clause, namely:—

(*j*) "exempted extent of land" means the extent of land exempted under sub-section (1) of section 10.

MR. SPEAKER: You have given another amendment also. You move that amendment.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: That has been circulated yesterday itself.



THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Hon. Minister simply moves the amendments suddenly to clauses. He does not explain the reasons for amendments.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: I think amendments have been circulated.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: What I say is the nature of amendments should be explained by the Hon. Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இரண்டு பேருமே பேசிக் கொண்டு இருந்தீர்கள். அவரும் அமெண்ட்மெண்டை மூவ் பண்ணவில்லை. நீங்களும் பேசிக் கொண்டிருந்தீர்கள். இரண்டு பேர்களும் அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தீர்கள். அமெண்ட்மெண்டை மூவ் பண்ணவில்லை.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Sir, I move the following amendment:—

In Clause 2—

(1) in sub-clause (iii) (*a*) in proposed clause (vv) (iii)—

(*a*) *omit* the letter and brackets "(a)";

(*b*) omit sub-clause (*b*).

(2) in sub-clause (iii) (*c*) after Explanation I-B, *add* the following Explanation, namely:—

"*Explanation I-C.*—For the purposes of clause (vv), a land used for growing any crop and irrigated from a Government source of irrigation shall be deemed to be so irrigated, if such crop is grown wholly with the water from such Government source."

திருமதி த. ந. அனந்தநாயகி: ஐந்து ஏக்கர்களுக்கு என்ன பயிர் செய்தாலும் விவசாய வருமான வரி இடையாது என்ற திருத்தம் கொண்டு வந்திருப்பது பாராட்டுக்குரியது.

Either irrigated by Government source or private source.

என்ற வகையிலே ஐந்து ஏக்கர் வரையில் வரியில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள். அதை பற்றிய முதலமைச்சர் அவர்கள் விளக்கம் என்ன என்பதை பற்றியெல்லாம் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள். ஐந்து எக்கர் வரையில் எந்தத் தண்ணீராக இருந்தாலும், அது அரசாங்கத் தண்ணீரைப் பயன்படுத்தினாலும், தனியார் தண்ணீராக இருந்தாலும், விவசாயம் செய்கிறவர்களுக்கு விலக்குத்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிளாஸ் 2-இல் திரு. ஜேம்ஸ் அவர்கள் அவர்களுடைய அமெண்ட்மெண்ட்டை மூவ் பண்ணலாம்.

THIRU J. JAMES: Sir, before I move my amendment, I would like to know from the Hon. Minister whether the suggestion made by the Hon. Chief Minister is exemption of 5 ordinary acres or 5 standard acres of any crop.

THE HON. THIRU P. U. SHANMUGHAM: Five ordinary acres of any crop.

THIRU J. JAMES: Then I do not move the first part of m amendment regarding arecanut in view of the Hon. Minister's suggesti

MR. SPEAKER: What about amendment relating to 'rubb How can you split it?

THIRU J. JAMES: Sir, I move the following amendment:—

In clause (vv) of Section 2 of the Principal Act, for items (i) a (iv) the following items shall be substituted, namely:—

(iv) one acre of land used for growing "rubber."

The amendment was duly seconded.

THIRU K. T. K. THANGAMANI: Sir, I move the following amen ment:—

For item (iv-a) (2) of sub-clause (b) in the proposed clause (vv) (i substitute the following namely, "one acre of land used for growi sugarcane and not falling under category (1), or".

The amendment was duly seconded.

THIRU K. T. K. THANGAMANI: In the present clause it is a follows:—

"one-half an acre of land used for growing sugarcane and irrigate from a Government source of irrigation or two-thirds of an acre of land used for growing sugarcane and not falling under category (1)." In its place, I have moved the present amendment. What will happen to that sugarcane which is grown by lift irrigation and other irrigation



sources. One acre will be treated as ½ standard acre. That is why in order to correct it, I have moved my amendment. I hope it will be accepted.

I also want to know whether the assurance given by the Hon. Chief Minister exempting upto 5 acres will come in the form of an amendment

THE HON. THIRU P. U. SHANMUGHAM: It has been done already.

THIRU K. T. K. THANGAMANI: Then all right.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, எனது திருத்தம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது இருக்கின்ற மசோதாவிலே ஒரு எக்கர் ரப்பர் 40 செண்ட் ஸ்டாண்டர்டு எக்கருக்குச் சமம் என்று போட்டிருக்கிறார்கள். ஒரு எக்கர் ரப்பர் என்பது ஸ்டாண்டர்டு எக்கர் ஒரு எக்கருக்கு இருக்க வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருந்தேன். ஒரிஜினல் ஆக்டிலே ஒரு எக்கர் ரப்பர் என்பது அதாவது ஒரு ஸ்டாண்டர்டு எக்கர் என்பது 20 செண்ட் ஆக இருக்கும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பொழுது அதை 40 செண்ட் ஆக ஆக்கியிருக்கிறார்கள். 40 செண்ட் ஒரு ஸ்டாண்டர்ட் எக்கர் என்று கூறும்பொழுது 4 எக்கர் வைத்திருப்பவர்களும் இந்த விவசாய வரியைக் கட்டுகின்ற நிர்ப்பந்தமான நிலை ஏற்படுகிறது. என்னுடைய வாதம் என்னவென்றால் ஒரு வேளை இந்த 4 எக்கர் மலைத் தோட்டப் பகுதிகளில் ரப்பர் வைத்திருப்பவர்களுக்குக் கட்டுப்படியாக இருந்தாலும், கிராமங்களில் ரப்பர் தோட்டம் வைத்திருக்கும் ஏழை விவசாயிகளுக்கு இது கட்டுப்படியாகாது. அவர்களை இந்தச் சட்டமானது அதிகம் பாதிக்கும். ஆகவே, ஒரு ஸ்டாண்டர்ட் எக்கருக்கு 40 செண்ட் என்று இருப்பதை ஒரு எக்கராவாக மாற்ற ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே முதலமைச்சரவர்கள் கொடுத்த அந்த உறுதிமொழி இந்த ரப்பர் தோட்டத்தைப் பொறுத்த வரையில் அனுகூலமாக இல்லை. ஆகவே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் சொன்னது 5 எக்கராவில் என்ன பயிர் வைத்தாலும் அவர்களுக்கு விலக்கு, அது பாக்கு, ரப்பர் எதை வைத்தாலும் விலக்கு. வரி கிடையாது. இதைத் தெளிவாக்குகிறேன். 5 எக்கரில் என்ன பயிர் வைத்தாலும் விலக்கிருக்கிறது. அதில் சந்தேகம் தேவையில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் திருத்தத்தைக் கொடுத்து வரிபோட வைத்துவிட வேண்டாம். விலக்கு கொடுத்திருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். ஒரு எக்கர் ஒரு ஸ்டாண்டர்ட் எக்கராவாகக் கருதப்பட வேண்டுமென்ற கருத்தைக் கூறுகிறார்கள். அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஏனென்றால், நெக்

லைப் பொறுத்த வரையில் கொஞ்சம் குறையலாம். ஆனால் நெல்லுக்கும் கரும்புக்கும் ஒரே வருமானம் என்று வைக்க முடியாது. கரும்புக்கு அதிகமாக வருமானம் வைக்க முடியும். ஆகவேதான் 1½ ஸ்டாண்டர்ட் எக்கர் என்று வைத்திருக்கிறது. 1 எக்கர் கரும்பு 1½ ஸ்டாண்டர்ட் எக்கராவாகக் கருதப்பட வேண்டும். நெல்லும், கரும்பும் ஒன்றல்ல. நெல்லுக்கு 1 எக்கரா 1 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று வைத்திருக்கிறோம். கரும்புக்கு 1½ ஸ்டாண்டர்ட் எக்கர் என்று வைக்க வேண்டும். கரும்பு கொஞ்சம் கூடுதல் வருமானம் வரக்கூடியது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கணக்குப் போட்டுப் பார்த்தால் என்ன லாபம் வரும் என்பது சந்தேகமாகயிருக்கிறது. 10 எக்கர் வரையில் என்ன போட்டாலும் வரி இல்லை என்று இருப்பதாகக் கருதுகிறேன். அதைத்தானே சொல்லியிருக்கிறார்கள். புதிதாக ஒன்றும் சொன்ன மாதிரி தெரியவில்லையே.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அரிக்கா நட், ரப்பர் என்று எடுத்துக்கொண்டால் ரப்பர் என்றால் 30 ஸ்டாண்டர்ட் எக்கர் வரும். சலுகை இல்லை என்று கருத வேண்டாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, எதிர்பார்த்த அளவிற்கு நன்மைகள் இல்லை என்றாலும் கூட அமைச்சரவர்கள் ஓரளவிற்கு நன்மை செய்திருப்பதால் நான் வலியுறுத்தவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களின் திருத்தம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் திருத்தம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

The Government amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried.

Clause 3 was put and carried.

*Clause 4.*

MR. SPEAKER : The question is—

"That Clause 4 do stand part of the Bill".

THE HON. THIRU P. U. SHANMUGRAM : Sir, I move—

For clause 4, Substitute the following clause, namely—

"4 *Amendment of section* 10, *Tamil Nadu Act V of* 1955 : For sub-section (1) of section 10 of the principal Act, the following sub-section shall be substituted, namely—



"(1) Nothing contained in this Act shall apply to a person who holds land not exceeding ten standard acres or five ordinary acres whichever extent is greater in terms of standard acres."

Thiru K. T. K. THANGAMANI : Sir, I would like to know what the amendment is, and what the spirit of it is. We are now in clause 4. In sub-section (1) of section 10, for 7½ standard acres, 10 standard acres shall be substituted. Now, are we clubbing this 10 standard acres with the 5 ordinary acres. If that be so, it must be clarified. It will impinge on other clauses also. In the matter of cultivation, irrespective of crops, there will be no income tax if it is 5 acres. That has to be mentioned specifically. Now ordinary acres and standard acres are clubbed together.

THE HON. THIRU P. U. SHANMUGAM : It should be noted that 'whichever extent is greater in terms of standard acre'.

THIRU K. T. K. THANGAMANI : Then five acres must come first and the standard acres next. It should be five ordinary acres or 10 standard acres.

MR. SPEAKER : But according to this even 5 ordinary acres may be more than 10 standard acres according to the crop grown. They have said 'whichever is higher'. I think it is all right.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பத்து ஸ்டாண்டர்ட் எக்கர் வரையில் இப்பொழுது வரியில்லை என்று போட்டோம். இப்பொழுது போட்டு இருப்பது 5 சாதாரண எக்கரில் என்ன பயிர் வைத்தாலும் வரி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சவரவர்கள் சொல்லுகிற திருத்தத்தில் 5 எக்கருக்கு குறைவானது கூட 10 ஸ்டாண்டர்ட் எக்கருக்குக் குறைவாக ஆகிவிடலாம். அந்தந்த நிலங்களில் உள்ள பயிரைப் பொறுத்துத்தான் ஆகிறது. சரியான அமெண்ட்மெண்டாக இருப்பதாகத் தான் தெரிகிறது.

திரு கே. டி. கே. தங்கமணி : காப்பி ஆஃப் தி அமெண்ட்மெண்ட் கையில் இருந்தால் சங்கடமில்லாமல் இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அமெண்ட்மெண்டைப் பொறுத்தவரையில் 10 ஸ்டாண்டர்ட் எக்கரா அல்லது 5 ஆர்டினரி எக்கரா, இதில் எது அதிகமாக இருக்கிறது என்பதற்காக 5 என்பது ஒரு வரையறைதானே தவிர் 3½ எக்கரா கூட இருக்கலாம். அப்பொழுது 10 ஸ்டாண்டர்ட் எக்கரா வந்துவிடலாம் என்று கருதுகிறேன்.

[1972 ஆகஸ்ட் 25

திரு. எ. கி. நரசிம்மன் : தலைவரவர்களே இப்பொழுது எனக்கு 10 எக்கரா இருக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம்.. 5 எக்கராவில் கிராப்பும், மற்றதில் கரும்பும் வளர்ப்பதாக வைத்துக் கொள்வோம். கிராப் போட்ட 5 எக்கரும் 15 ஆகிறது. கரும்பு போட்டால் 7½ எக்கராக ஆகிறது. எந்த 5 எக்கருக்கு முதலில் எக்ஸெம்ஷன் கொடுக்கப் போகிறார்கள் ? கிராப்புக்குக் கொடுப்பார்களா ? அல்லது கரும்புக்குக் கொடுப்பார்களா ? எதற்கு முதலில் கொடுப்பார்கள் ?

திரு. எ. ஆர். சுப்பையா : ரொம்ப கிளியராகச் சொல்லியிருக்கிறார்கள். ஐந்து எக்கரில் அரிக்கானட் போட்டால் அது முப்பது எக்கராகிவிடும். கிரேப்ஸ் போட்டால் 20 எக்கராகிவிடும். இரண்டுக்கும் சலுகை கொடுத்திருக்கிறார்கள். இது வரவேற்கக்கூடியதுதானே.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, the first five acres' whatever one may grow, the Government are exempting. But choice must be given to the agriculturist to have any crop he wishes to raise. The Act must be amended to that extent. It is better to bring in a completely new section giving effect to my above suggestion.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது ஐந்து ஸ்டாண்டர்டு எக்கரில் சாதாரணப் பயிர்களைச் செய்கிறவர்களுக்குத்தான் விதிவிலக்கே தவிர, கிரேப்ஸ் சாகுபடி செய்து லட்சக்கணக்காக வருவாய் பெறக்கூடியவர்களுக்கல்ல. அவர்களுக்கு ஏன் எக்ஸம்ப்ஷன் கொடுக்க வேண்டும் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது எல்லாப் பயிர்களுக்கும். அதற்கு, இதற்கு என்று சொல்லவில்லை.

It has been clearly stated so and it is in the proceedings of the House.

The Government amendment was put and carried.

Clause 4, as amended, was put and carried.

*Clause* 5.

MR. SPEAKER : The question is. "That clause 5 do stand part of the Bill."

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir I move—

" Renumber clauses 5 to 8 as clauses 6 to 9 respectively and after clause 4, insert the following clause, namely—

"5. *Insertion of new section* 10-A *ix Tamil Nadu Act V of* 1955.—After section 10 of the principal Act, the following section shall qe in-serted, namely—

' 10-A ***Exemption for bananas in hill areas*** : Notwithstanding atynhing contained in this Act, no agricultural income-tax shall be payable under this Act on the Agricultural income derived from banana grown in any hill area ".



1972 ஆகஸ்ட் 25] [Thiru P. U. Shanmugam]

The Government amendment was put and carried.

The new clause 5 was put and carried.

Clause 5, re-numbered as clause 6 was put and carried.

*Clause* 6 *re-numbered as* 7.

MR. SPEAKER : The question is—

" That clause 6, re-numbered as 7 do stand part of the Bill. "

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

" In clause 7 as re-numbered, in sub-clause (*b*) in proposed Part II, after the expression ' on the first 10 standard acres ', add the following expression, namely, ' or five ordinary acres whichever extent is greater in terms of standard acres'."

THIRU K. T. K. THANGAMANI : Sir, I move—

" In the proposed Part II, in clause 6, for serial number (2) substitute the following, namely—

" (2) On the next 5 standard acres—Rs. 15.00 "

இந்தத் திருத்தத்தை நான் கொடுத்ததன் நோக்கம் ஏற்கனவே வந்த திருத்த மசோதாவில் பர்ஸ்ட் ஸ்லாபுக்கு 15 ரூபாய் என்று வைத் திருந்ததை இப்போது 25 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். ஆகவே, பழைய முறைப்படி 25 ரூபாய் என்பதை 15 ரூபாயாகக் குறைக்க வேண்டு மென்று கூறுகிறேனே தவிர வேறல்ல.

The amendment was duly seconded.

THIRU R. PONNAPPA NADAR : I support this. This is a very good amendment and Government can accept this in the light of the changed circumstances that have been brought forward, during discussion of this Bill. I once again request the Hon. Minister to fix the minimum of Rs. 15 rather than Rs. 25 and I think the revenue may not be affected. So I recommend that this amendment be accepted by the Government.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 15
ரூபாயாகக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பத்து ஸ்டாண்
டர்ட் எக்கருக்கு மேல் போகிற ஒவ்வொரு ஸ்டாண்டர்ட் எக்கருக்கும்
25 ரூபாய் என்று போட்டிருக்கிறோம். அதை 15 ரூபாயாகக் குறைக்க
வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல. 11 ஸ்டாண்டர்ட் எக்கரில் ஒருவர்

கரும்பு போட்டால் அவர்கள் கட்ட வேண்டிய வரி 25 ரூபாய்தான். அதை பத்து ரூபாய் சலுகை காட்ட வேண்டுமென்று சொல்லுவது நியாயமல்ல. முறையல்ல. 25 ரூபாய் என்று கணக்குப் போட்டால் கூட கேரளாவில் வசூலிப்பதை விடக் குறைவாகத்தான் வசூலிக்கிறோம். கேரளாவைவிடப் புரட்சிகரமாக நாம் வசூலிக்க வேண்டும். நாம் குறைவாகத்தான் வசூலிக்கிறோம். ஆகவே, இதை மேலும் குறைக்க வேண்டுமென்று சொல்லுவது சரியான வாதமாகாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தங்கமணி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

The Government amendment was put and carried.

Clause 6, re-numbered as 7, as amended, was put and carried.

Clauses 7 and 8, renumbered as clauses 8 and 9 were put and carried.

Clause 1, the Preamble, and the Long Title were put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move—

"That the Tamil Nadu Agricultural Income Tax (Amendment) Bill 1972, as amended be passed."

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மசோதாவைப் பொறுத்த வரை சட்டமாக நிறைவேறுமுன் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். நான் ஆரம்பத்திலேயே இதில் ஏற்பட்டிருக்கக்கூடிய பல சிக்கல்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் இதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்றும், மக்கள் கருத்தறிய சர்குலேஷனுக்கு அனுப்ப வேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கிறோம். இந்த நிலைமையில் முதலமைச்சர் அவர்கள் ஐந்து எக்கருக்கு எந்தப் பயிர் போட்டாலும் அதற்கு வருமானவரி இல்லையென்று சொன்னார்கள். இது எந்த அளவுக்கு முரணானது என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு இடத்தில் ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் உள்ளவர்களுக்கு வருமானவரி என்று இருக்கிறது. அதே நேரத்தில் ஐந்து எக்கரில் பாக்கு போன்றவைகளைப் போட்டு ஐந்து லட்சம் ரூபாய் வருமானம் வந்தாலும் வேறு கிரேப்ஸ் போன்று ஏதாவது ஐந்து எக்கரில் போட்டு ஒரு லட்சம் வருமானம் வந்தாலும் அதற்கு விதிவிலக்கு என்று இருக்கிறது. இப்படி இது முன்னுக்குப் பின் முரணான சட்டமாக இருக்கிறது. இதிலே நிச்சயமாக சிக்கல் ஏற்படும். பத்து ஸ்டாண்டர்ட் எக்கருக்கு விதிவிலக்கு என்று சொல்லும்போது எந்தெந்தப் பொருள்கள் பயிரிட்டால் விதிவிலக்கு என்று தெளிவாக இல்லை.

**This is going to impinge on each and every other clause of this Bill.**



இதை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் பல சிக்கல்கள் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I once again reiterate on behalf of my party that this Bill will produce a lot of confusion and this has been brought forward in a haphazard and hasty manner. This will produce discontentment among a large section of farmers. A number of amendments have been brought forward by Government suddenly and quickly. It is better that *Suo motu* Government brought forward an amendment to refer this Bill to a Select Committee so that the problem would be eased, and the farmers benefited.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தச் சலுகையைத் தெரிவித்த போது சலுகை மாதிரி தோன்றியது. உட்கார்ந்து யோசித்தால் சரியாக விளங்கவில்லை. ஐந்து எக்கருக்கு என்ன விவசாயம் செய்தாலும் விதிவிலக்கு என்று சொல்லிவிட்டார்கள். வெறும் ஐந்து எக்கருக்கு மட்டும் விதிவிலக்கா ? எட்டு எக்கர்களில் வாழை அல்லது கரும்பு வைத்திருந்தால் 16 ஸ்டாண்டர்ட் எக்கருக்கு வந்துவிடும். That will exceed 10 standard acres. சலுகை வெறும் ஐந்து எக்கர்காரர்களுக்குத்தானா ? நான் எட்டு எக்கர் வாழை வைத்திருந்தால் ஐந்து எக்கர் விதிவிலக்கு போக மூன்று எக்கர்ஸ் என்றால் ஆறு ஸ்டாண்டர்ட் எக்கரா ஆகிவிடும். ஆகவே எந்த அளவிற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது? இப்படி சில இருப்பதால் இத்திருத்த மசோதாவை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு யோசித்து எல்லாவற்றையும் செய்வது நல்லது.

The expression 'whichever exceeds' will definitely lead to confusion. So, it is better to discuss it in the Select Committee and then think of giving exemptions.

THIRU R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, I also endorse the sentiments that have been expressed so far as this Bill is concerned. An harmonious interpretation could not be had in view of the new amendment that has been sought to be introduced. I once again point out that these amendments are hustled through and there may be legal difficulties and deadlock in the matter of the resolution of the disputes that are likely to arise. Whether the income should be taken as the basis or the area should be taken as the basis is a matter which will have to be considered. Supposing in case it may exceed Rs. 5,000 and whether exemption should be given to it has to be examined. So I think there would be some lacunae and nebulous state of affairs. It is better that we sit and consider the Bill in the Select Committee.

பிற்பகல் 1—00

திரு. கே. என். குமாரசாமி : முதல் அமைச்சர் அவர்கள் ஐந்து ஏக்கர் வரை எந்தப் பயிருக்கும் விதிவிலக்கு கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். பாக்கு, வாழை, இவற்றை எடுத்துக்கொண்டால், ஒரு ஏக்கரில் பாக்குக்கு ரூபாய், ஒரு லட்சம் வருகிறது. அவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். ஆகவே அவர்களுக்கு சலுகை கொடுப்பதுபற்றி அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிர்ணயிப்பதில் வருமானத்தில் ஏகப்பட்ட குழப்பங்கள் இருக்கின்றன. ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் அறிவித்த சலுகையையொட்டி இங்கு எழுப்பப்பட்டுள்ள பிரச்னைகள் எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய பிரச்னைகளாகும். ஏனெனில் ஆரம்பத்தில் எந்தப் பாக்கு தோட்டக்காரர்களுக்காக, திராட்சை தோட்டக்காரர்களுக்காக இந்தப்போராட்டம் உருவாயிற்றோ அது இப்போது இல்லை என்கிற அளவிற்கு அப்போது சார்ந்து நின்றவர்கள் கூட அதை எதிர்த்துப் பேசுகிற ஒரு நிலைமை உருவானதற்கு மகிழ்ச்சியடைகிறேன். நான் சலுகை அறிவித்து அது பற்றி எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் உண்மையில் எந்த சோஷலிஸம் நம் நாட்டுக்கு வரவேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகிற வகையில் அமைந்தது. ஆகவே அறிவித்துள்ள சலுகைகள் அடிப்படையிலும் இதுவரை விவாதித்துள்ள பல்வேறு விஷயங்களின் அடிப்படையிலும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலும் இந்த மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு விடுவதற்கு நான் என் சம்மதத்தை இந்த அவை சார்பில் அளிக்கிறேன். (ஆரவாரம்.)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் நாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எங்களுடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்.)

THIRU K.T.K. THANGAMANI : Sir, I welcome it.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் ஏற்கனவே நன்றி தெரிவித்து விட்டேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பொறுக்குக் குழுவிற்கு விடுவதில் முதல் அமைச்சர் அவர்கள் சலுகைகளை வித்ட்ரா செய்யக்கூடாது. அதற்கு மேல் இம்ப்ரூவ் செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் கொடுத்த சலுகை சோஷலிஸத்திற்கு விரோதமாக பணக்காரர்களுக்குப் பயன்படுவதாக அமைந்து விடுமானால் எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் கூட எங்களை அனுமதிக்க மாட்டார்கள். சோஷலிஸத்திற்கு விரோதமாக ஏன்



செய்தீர்கள் என்று கேட்பார்கள். ஆளும் கட்சியில் தீவிரமான சோஷலிஸ வாதிகள் இருக்கிறார்கள். கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச் சலுகையோடு பொறுக்குக் குழுவிற்குச் செல்லும். அப்படிச் சென்று வருவதை இந்தச் சபையில் வைத்து விவாதித்து நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். பொறுக்குக் குழு உறுப்பினர்களின் பெயர்கள் தொடர்ந்து சட்டமன்றம் நடைபெறும் நேரத்தில் அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எனக்கு ஒரு சங்கடமான நிலை. ஏற்கனவே நாம் ஒவ்வொரு க்ளாஸாக நிறைவேற்றி விட்டோம். சட்ட முன் வடிவு நிறைவேற்றப்படாத நிலையில் இருக்கிறது. 'ரெஸிண்ட்' செய்கிற ஒரு தீர்மானத்தை அவை முன் கொண்டு வரவேண்டும். பிறகு உயிரூட்டி இந்த மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு ரெஃபர் செய்யவேண்டும். அதுதான் விதிமுறைப்படி சரியான முறை. வேறு ஏதாவது யோசனைகள் இருந்தால் சொல்லலாம்.

Though the Bill has not been passed, the clauses have been passed..

THIRU K.T.K. THANGAMANI : Sir, the Bill has not been passed and the third reading of the Bill has not been gone through. Let the proceedings remain as it is. Another motion can be moved for referring the Bill to a Select Committee.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உயிரூட்டும் நிலையில் "ரெஸிண்ட்" பண்ணினோம் என்ற முறையில் ஒரு தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த மசோதாவில் ஒன்றிரண்டு சட்டங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டிருந்தாலும் நான் அளித்த சலுகை அந்தச் ...த்து ஏற்பட்ட குழப்பத்தைத் தவிர்ப்பதற்காகவும் ஒரு வேளை அந்தச் சலுகை நாம் எண்ணியதற்கு மாறாக பணக்கார விவசாயிகளுக்குப் பயன்பட்டுவிடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டதன் காரணமாகவும் அதை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் எதிலும் பிடிவாதமாக இருக்காது என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில் இதை பொறுக்குக் குழுவிற்கு விடுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆகவே தங்கள் ஆணைப்படி அவை முன்னவர் அவர்கள் இங்கு அத்தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : Mr. Speaker, Sir, I move—

"That the decisions of the House on clauses 1 to 7 and the main motion 'that the Bill be taken into consideration' be rescinded."

The motion was put and carried.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I move that the Tamil Nadu Agricultural Income Tax (Amendment) Bill, 1972 be referred to a Select Committee consisting of the following Members of the House:—

Thiru A. R. Subbiah
Thiru Kovai Chezhiyan
Thiru S. Arumugam
Thiru N. Veeraswamy
Thiru M. V. Karivengadam
Thiru T. V. Sampath
Thiru A. Paranthaman
Thiru N. Muthuvel
Thiru K. Kamatchi
Thiru S. Kader Batcha alias Vellaichamy
Thiru K. H. Bomman
Thiru V. M. Abdul Jabbar
Thiru A. R. Marimuthu
Thiru Sowdi S. Sundara Bharathi
Thiru S. Alagarswamy and
Thiru R. Ponnappa Nadar

The motion was put and carried.

MR. SPEAKER : Under Rule 97 (1) of the Assembly Rules the Hon. Minister for Food and Revenue shall be a member of the Committee.

Under Rule 99 (1) of the Assembly Rules I nominate the Hon. Minister for Food and Revenue as Chairman of the Select Committee.

(ஆ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 36/72).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட முன் வடிவு *(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டு மென்று முன்மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள டிரைவர்களுக்கு கழிந்த 3 ஆண்டுகள் ஆகியும் பிராவிடண்ட் பண்ட் ஆரம்பிக்கப்படவில்லை.

*17-8-72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



THE HON. THIRU S. RAMACHANDRAN : What the hon. Member is speaking is not relevant to this Bill. He is speaking on Tamil Nadu State Transport Department.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

" தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 36/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

Clauses 2 to 4 were put and carried.

Clause 1, the Preamble and the Long Title were put and carried.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move—

" That the Bill be passed."

The motion was put and carried and the Bill was passed into law.

8. அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/72).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை சட்டப் பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/72).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு

எண் 24/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

இம்மாநிலத்தில் தனியார் பள்ளிகளை நிறுவுவது, நிர்வகிப்பது ஆகியவற்றை முறைப்படுத்தவும், அப்பள்ளிகளில் ஆசிரியர்களும், ஆசிரியரல்லாத ஏனைய பணியாளர்களும், மன நிறைவுடன் பணியாற்றுவதை உறுதி செய்யவும் சட்டம் எதும் தற்போது இல்லை என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். அரசு பிறப்பிக்கும் நிர்வாக ஆணைகளின்படியும் சட்டப்படிக்கல்லாத விதிகளின்படியும் இப்பள்ளிகளின் நிர்வாகம் நடைபெறுகிறது. தற்போதைய வடிவில், இந்த விதிகள், காலத்திற்கு ஒவ்வாதவையாக இருப்பதோடு, பள்ளி நிர்வாகத்தினருக்கோ ஆசிரியர்களுக்கோ பயனளிப்பனவாக இல்லை. இந்த விதிகள் தெளிவானதாக இல்லாததாலும், சட்ட அடிப்படையில் அமையாதிருப்பதாலும், தனியார் பள்ளி நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த விதிகளைப் பொருந்துமாறு செய்வதிலும், தனது கட்டளைகளைச் செயல்படுத்துவதிலும் கல்வித் துறைக்கு மிகவும் இடர்பாடாக உள்ளது. துறையின் முடிவுகள் செல்லாது என தனியார் பள்ளி நிர்வாகத்தினர் அடிக்கடி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். துறையின் முடிவுகள் சட்டப்படிக்கான அடிப்படையில் அமையவில்லையென்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்ததால், பல வழக்குகளில் துறை வெற்றி காண முடியவில்லை. இவ்வற்றையும் ஏனைய குறைகளையும் போக்குவது குறித்து ஆய்வதற்காக அரசு, 15 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை நியமித்தது. குழுவும், இவற்றைத் தெளிவுபடுத்தும் வகையில் சட்டம் இயற்றப்பட்ட வேண்டும் என்று பரிவுரை செய்துள்ளது. அதற்கிணங்க, ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகளை நிறுவுவது குறித்தும் நடத்துவது குறித்தும் சட்டம் இயற்றி முறைப்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில், அரசு உள்ளாட்சி மன்றங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவை நடத்திவரும் பள்ளிகள் நீங்கலாக ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் அனைத்திற்கும் இச்சட்டவரைவு பொருந்தும். முற்றிலும் சமயப் பயிற்சி அளிக்கும் பள்ளிகளுக்கு இச்சட்டம் பொருந்தாது. இம்மாநிலத்திலே உள்ள 35,000 பள்ளிகளில், சுமார் 8,300 பள்ளிகள் அல்லது 24 சதவீதம் தனியார் பள்ளிகளாகும். இவையனைத்தும் இச்சட்ட வரைவின் வரம்பிற்குள் வரும்.

தனியார் பள்ளிகளை நிறுவுவது, நிர்வகிப்பது, கட்டுப்படுத்துவது ஆகியவற்றை முறைப்படுத்தவும் தனியார் பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் மற்றும் ஏனையோரின் பணி நிபந்தனைகளை முறைப்படுத்துவதற்கு வகை செய்யவும் இச்சட்டவரைவு முற்படுகிறது. பொருத்தமான அதிகார மன்றத்தின் அனுமதியுடனும் அந்த அனுமதியில் குறிப்பிட்டுள்ள வரையறைகள், நிபந்தனைகள் ஆகியவற்றின்படியே பள்ளிகள் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும் என்று இச்சட்டவரைவில் வகை

* 10-8-72-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்திய அரசியலமைப்பின் 30 (1) பிரிவின்படி பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவது குறித்த விதித்துறைகள், சமய நிறுவனங்களால் அல்லது சிறுபான்மை மொழியினரால் நடத்தப்பட்டு வரும் பள்ளிகளுக்குப் பொருந்தாது. ஆயினும், இச்சட்டவரைவில் உள்ள ஏனைய விதித் துறைகள், சிறுபான்மையினர் நடத்திவரும் பள்ளிகளுக்கும் பொருந்தும். இச்சட்டவரைவின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு :—

(a) பள்ளியை நிர்வகிக்கப் பரந்த அடிப்படையிலான நிர்வாகக் குழுவினரை நியமித்தல்.

(b) தனியார் பள்ளி ஒன்றை அல்லது அப்பள்ளியில் ஒரு வகுப்பை மூடி விடுவது பற்றி பொருத்தமான அதிகார மன்றத்திற்கு எழுத்து மூலமான அறிவிப்புக் கொடுக்காமலும், அந்தத் தனியார் பள்ளி அல்லது அப்பள்ளியிலுள்ள வகுப்பு மாணவர்களுக்குத் தொடர்ந்து கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று பொருத்தமான அதிகார மன்றத்திற்கு மன நிறைவளிக்காமலும் அந்தத் தனியார் பள்ளி அல்லது அப்பள்ளியில் உள்ள ஒரு வகுப்பு மூடப்படுவதைத் தடை செய்தல்.

(c) தனியார் பள்ளிகளின் சொத்துக்கள் பற்றிய பட்டியல் ஒன்றை பொருத்தமான அதிகார மன்றத்திற்கு ஆண்டுதோறும் கொடுக்குமாறு நிர்வாகத்தினரைக் கேட்கவும் தனியார் பள்ளிகளின் சொத்துக்கள் மாற்றப்படுவதைத் தடை செய்யவும் வகை செய்தல்.

(d) முறையாக நிர்வகிக்கப்படாத தனியார் பள்ளிகளை ஓராண்டு முதல் ஐந்தாண்டுகள் வரை பொருத்தமான அதிகார மன்றம் மேற்கொள்ள வகை செய்தல்.

(e) தனியார் பள்ளிகளில் வேலைக்கமர்ந்துள்ள ஆசிரியர்களையும் பிறரையும் பொறுத்தமட்டில் நியமனம், ஒழுங்கு நடவடிக்கை உட்பட அவர்களின் பணி நிபந்தனைகளை முறைப்படுத்துதல்.

(f) தனியார் பள்ளியில் வேலைக்கமர்ந்துள்ள ஓர் ஆசிரியர் அல்லது வேறு ஒருவர் ஓய்வு பெறும் வயதை அடைந்திருந்தாலன்றி மற்றப்படி, அவரது பதவித்தரம் குறைக்கப்பட்டிருந்தாலும் அல்லது அவரது நியமனம் முடிக்கப்பட்டிருந்தாலும், அவர் தற்போதுள்ள அமைப்பில் உள்ளதுபோல், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். அத்தகைய மேல் முறையீடு குறித்துப் பிறப்பிக்கப்பட்ட ஆணை மூலம் பாதிக்கப்பட்டால், அந்த ஆசிரியர் அல்லது வேறு பணியாளர் அல்லது நிர்வாகக்குழு மாவட்ட நீதிபதிக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம்; அல்லது இது காரியத்திற்காகவென்றே மாவட்ட நீதிபதி பதவித்தரத்தில் நீதித்துறை அதிகாரி ஒருவரைக் கொண்டு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள நடுவர் மன்றத்திற்கு முறையீடு செய்து கொள்ள வேண்டுமென்று அரசு கட்டளையிட்டால், அவ்வாறே அந்த நடுவர் மன்றத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

(g) கணக்குகள் தணிக்கை செய்தலுக்கும், தனியார் பள்ளிகளை ஆய்வு செய்தலுக்கும், ஆய்வு முடிவுகளைச் செயற்படுத்த உத்தரவுகள் பிறப்பிப்பதற்கும், தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிப்பதற்கும் உரிய ஏற்பாடுகள் செய்தல்.

அரசியலமைப்பின் 30 ஆவது பிரிவின் (1) பகுதியிற் கூறப்பட்டுள்ள தற்கிணங்க, சிறுபான்மையர் பள்ளிகளுக்கென சிறப்பு ஏற்பாடு 9-வது பகுதியில் செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை மொத்தம் 8,300. இவற்றில் ஏறத்தாழ 3,200 பள்ளிகள், அதாவது, 39 சதவீதப் பள்ளிகள் கிறித்தவமிஷன் பள்ளிகளும், சிறுபான்மையரால் நடத்தப்படும் பள்ளிகளும் ஆகும். அனுமதி பெறுவது குறித்து இச்சட்டவரைவில் உள்ள விதித்துறைகள், சிறுபான்மையர் பள்ளிகட்குப் பொருந்தா. ஏனெனில், அவை அரசியலமைப்பின் 30 (1) ஆவது பிரிவிற்கு முரணாகிவிடும். இச்சட்டவரைவைத் தயாரிக்கையில் இந்தக் கூறு பற்றி முற்றிலும் ஆராயப்பட்டது. எனவே, சிறுபான்மையர் பள்ளிகள் செயற்படுவதை முறைப்படுத்துவதற்காக இச்சட்டவரைவின் 9-வது பகுதியில் சில சிறப்பு விதித்துறைகள் சேர்க்கப்பட்டுள்ளன ; அவை, சிறுபான்மையர் பள்ளிகள் சுற்றுப்புறச் சுகாதாரம் நன்கமைந்த இடங்களிலும், கல்வித் தகுதிகளும் தேர்ச்சியும் பெற்ற ஆசிரியர்களைக் கொண்டும் நடத்தப்படுகின்றனவாவென்றும், கல்வியின் தரமும், கல்வி கற்பிக்கும் தரமும் பேணப்படுகின்றனவாவென்றும் உறுதி செய்ய இச்சட்டத்தின் கீழ் விதிகளை வகுக்க வகை செய்கின்றன.

தனியார் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், ஆசிரியர்களல்லாத பிற பணியாளர்களும் இத்தகைய சட்டமொன்று இயற்றப்படுவதை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் அரசிடம் கொடுத்துள்ள பற்பல முறையீடுகளில், உத்தேசச் சட்டத்தை வரவேற்றுள்ளனர். அச்சட்டத்தை விரைந்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பேரவை இதனை ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER :** The hon. Lady Member Thirumathi Alda M. Fowler has given an amendment that the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both Houses consisting of 24 members to consider the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972 and that the following members be requested to serve on such a Joint Select Committee (names to be furnished later). Thiru K. M. Subramaniam, Dr. H. V. Hande, Thiru J. James, Thiru N. K. Palanisami and Thirumathi T. N. Anandanayaki have also given similar identical amendments. Under Rule 77, I can take up only one amendment and the other amendments are out of order.

**DR. H. V. HANDE :** My amendment is different.



**MR. SPEAKER :** Your amendment is that the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972 be circulated for eliciting public opinion thereon. You want that to be taken separately and put to vote.

**DR. H. V. HANDE :** Let my amendment be moved. If Government accepts the amendment of Thirumathi Alda M. Fowler to refer this Bill to a Joint Select Committee, the Government can furnish the names of members later.

Sir, let me move my amendment. I shall withdraw it afterwards, if necessary. Let it be on record. If the other amendment to refer it to Select Committee is accepted, I can withdraw my amendment.

**MR. SPEAKER :** I exclude Dr. Hande's amendment from this group. All the other identical amendments are out of order. I would like to know the views of the Hon. Minister.

**THIRU R. PONNAPPA NADAR :** Sir, the amendments may be moved. We may be asked to speak on them.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI :** All of us have given amendments and also the member of the Ruling Party has given a similar amendment to refer the Bill to a Select Committee.

**Mr. SPEAKER :** I request Mrs. Fowler to move her amendment. The Hon. Minister may furnish the names of members of the Committee.

**THIRUMATHI ALDA M. FOWLER :** Sir, I move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of ......Members (......Members from the Assembly and .... Members from the Council) to consider the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972 (L. A. Bill. No. 24 of 1972) and that the following members of this House be selected to serve on the Joint Select Committee." (Names of members will be furnished later.)

**THIRUMATHI T. N. ANANDANAYAKI :** Sir, I second it.

**THIRU R. PONNAPPA NADAR :** Government can accept the amendment.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதா கொண்டு
வரப்படுவதன் முக்கிய நோக்கத்தை நான் என்னுடைய முன்னுரை
யிலே தெளிவாக படித்துக் காட்டினேன். இது நீண்டகாலமாக கொண்டு
வரப்பட வேண்டிய ஒரு மசோதாவாக இருந்தாலும், இதற்காக ஒரு
குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு இதை ஆராய்ந்து, ஒரு அறிக்கை
யைக் கொடுத்தது. இருந்தாலும் கூட, சென்ற ஓராண்டுக்கு மேலாக
நீதித் துறையிலும், கல்வித் துறையிலும் பல்வேறு வகைகளில் இதைப்
பரிசீலிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிறகு இந்திய அரசுக்கு
அனுப்பி, அவர்களுடைய ஒப்புதல் பெற்று, இந்த மசோதாவைக்கொண்டு
வரவேண்டிய நிலை ஏற்பட்டது. விரைவாகக் கொண்டு வரவேண்டும்
என்று ஆசிரியப் பெருமக்கள் வற்புறுத்தி வந்தார்கள். எந்த அள
வுக்கு விரைவாகக் கொண்டு வரமுடியுமோ அந்த அளவுக்கு விரை
வாகக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டது. இருந்
தாலும் பல்வேறு கட்டத்தில் அதைப் பரிசீலிக்க வேண்டிய அவசியம்
ஏற்பட்ட காரணத்தினால் ஓராண்டு காலமாக பல்வேறு வகைகளில் இது
பரிசீலிக்கப்பட்டு, இப்பொழுது இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.
இதை அரசு விரைவில் நிறைவேற்றவேண்டுமென்ற ஆவலோடுதான்
இருக்கிறது. இருந்தாலும் கூட, இது சம்பந்தமாக மறுபடியும் பல்
வேறு தன்மைகளில் இதை ஆராயவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது
என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் கருதுவதன் காரணத்
தினாலும், அவர்கள் அதற்காக கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு
இந்த மசோதாவை விடவேண்டும் என்று திருத்தத் தீர்மானங்கள் கொடுத்
திருக்கின்ற காரணத்தினாலும், அப்படி விடுவதைப் பற்றி
அரசுக்கு ஆட்சேபனை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
இன்னும் கொஞ்சம் காலம் ஆகும். அடுத்த தொடர் கூட்டத்தில்
தான் இந்த மசோதாவை நிறைவேற்றவேண்டிய அவசியம் ஏற்படும்.
அடுத்த தொடர் கூட்டத்திற்குள்ளாவது இந்த ஆய்வுக் குழு கூடி இதைப்
பரிசீலனை செய்து முடிவு எடுப்பதற்கு உதவி செய்வார்கள். எனவே
அடுத்த தொடர் கூட்டத்தில் இந்த மசோதாவைக் கொண்டுவந்துவிட
லாம் என்ற வகையிலே, ஆய்வுக்குழுவிற்கு இந்த மசோதாவை விட
வேண்டும் என்ற திருத்தத் தீர்மானத்தை நான் அரசின் சார்பாக
ஏற்றுக்கொள்கிறேன். அந்த ஆய்வுக் குழுவிற்கு கீழ்க்கண்டவர்களின்
பெயர்கள் இருக்கலாம் என்று நான் முன்மொழிகிறேன்:—

(1) மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழில் அமைச்சர்.

(2) திரு. கோ. இளங்கோவன்.

(3) திரு. செ. கந்தப்பன்.

(4) புலவர் சி. பழனிசாமி.

(5) திரு. அ. இராசமாணிக்கம்.



(6) திருமதி ஆல்டா எம். ஃபௌலர்.

(7) திரு. என். கணபதி

(8) திரு. ஆலடி அருணா.

(9) திரு. ஜே. எஸ். இராசு.

(10) திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.

(11) திரு. இ. எஸ். தியாகராசன்.

(12) திருமதி த. ந. அனந்தநாயகி.

(13) திரு. எம். எ. லத்தீப்.

(14) டாக்டர் எச். வி. ஹாண்டே.

(15) திரு. எ. சுவாமிதாஸ்.

(16) திரு. க. சுப்பு.

THIRU R. PONNAPPA NADAR: Sir I would like to offer a few remarks so far as this Bill is concerned. This is a welcome move......

MR. SPEAKER: Dr. Hande also can move his amendment,

Dr. H. V. HANDÉ: Sir, I move—

"That the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972 (L.A. Bill No. 24 of 1972) be circulated for eliciting public opinion thereon".

The amendment was duly seconded.

THIRU R. PONNAPPA NADAR: Sir, it is not with the intention of postponing issue we are asking the Government to refer the Bill to a Joint Select Committee. There are certain matters which will have to be gone into and evidence, if necessary, will have to be recorded. Article 30 of the Constitution has also says that there should be guarantee for the rights of minorities and that cannot be overlooked. There are other schools run by linguistic minorities and that will have to be gone into. That can be done only if the Bill is sent to the Select Committee.

I shall not go into the details of the Bill. But to me it appears that the protection afforded to teachers is not sufficient and I think that the Bill should be given retrospective effect so that it will be more helpful. It should come into force from the day on which Dr. Paul's report was accepted and that is one of my points. The Select Committee may consider another point also. So far as the managements are concerned, they are even now armed with wide powers with which they can use it as a sword against the employees, the poor teachers cannot stand against them. It is therefore necessary to guarantee more concessions to teachers.

[Thiru R. Ponnappa Nadar] [1972 ஆகஸ்ட் 25

There is an Education Act in Kerala which was enacted in 1959 and there are drastic provisions also in it. It affords greater protection to the teachers and Rules also have been framed. These Rules and the Act could be useful to the Select Committee if the Bill is referred to it. In this connection I would also bring to the notice of the House an instance which happened in a private school. That was discussed during the discussion on the no-confidence motion by Thiru Duraisami. The District Educational Officer, Coimbatore without intimation to the management is alleged to have removed records and things belonging to the private management and no notice had been given to the manager who happens to be an M.L.C. Because he led the agitation of graduate teachers and that he participated in the farmers agitation, he has been victimised. He has absolutely no objection to Government running departmentally. He may not be victimised simply because he belongs to the opposition and that he belongs to our party. That is the only point I want to raise.

I make a personal request to the Education Minister that there should not be any personal vendatta and victimisation. Government may take action if he has erred and if not, such action should be avoided. That is the only point I want to stress.

Then there is also another point which I want to bring to the notice of the Education Minister. There has been inordinate delay in the posting of B.T. Assistants in Chingleput district. The reasons for the same will have to be gone into and the Government should take prompt action in the matter.

பிற்பகல் 1-30. Another point that has been raised is with regard to the preference given to those who have already rendered service in the Chingelput district and that is also a matter to be considered.

Sir, I will finish my speech in one minute. Then I come to B.T. teachers who have undergone training in Tamil. We want to encourage Tamil and so those teachers should be given encouragement and preference. With these words, I conclude my speech.

MR. SPEAKER: Now the hon. Member, Dr. Hande can speak.

DR. H. V. HANDE: I am not speaking now as I am a Member of the Select Committee. Also I am not pressing my amendment.

**The amendment of Dr. H. V. Hande, was by leave, withdrawn.**



1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறிய கருத்துக்கள் கவனத்திலே கொள்ளப்பட்டு இதை பொறுக்குக் குழு ஆராயும்பொழுது, அதிலே எதை எதை விதித் துறை களிலே கொண்டு வர இயலுமோ அதைச் செய்ய முயற்சி செய்யும். இதை விரிவாக ஆராய்வதற்கு வாய்ப்புகள் இருப்பதால் அவைகளை எல்லாம் மீண்டும் ஆராய்ந்து இந்தச் சட்டம் உருவாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குழுவிலே நியமிக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்கள் அப்படி நல்லதொரு சட்டம் வர உறுதுணையாக இருப்பார்கள் என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது திருமதி ஆல்டா பௌலர் அவர்களுடைய திருத்தம் மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த உறுப்பினர்கள் பட்டியலுடன் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. பேரவை முன்னுள்ள கேள்வி :

**"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 Members (16 Members from the Assembly and 8 Members from the Council) to consider the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972 (L. A. Bill No. 24 of 1972) and that the following members of this House be selected to serve on the Joint Select Committee."**

1. The Hon. Thiru S. Madhavan, Minister for Industries
2. Thiru G. Ilangovan.
3. Thiru S. Kandappan.
4. Pulavar C. Palaniswamy.
5. Thiru A. Rajamanickam.
6. Thirumathi Alda M. Fowler.
7. Thiru N. Ganapathy.
8. Thiru V. Aladi Aruna.
9. Thiru J. S. Raju.
10. Thiru Sowdi Sundara Bharathi.
11. Thiru E. S. Thyagarajan.
12. Thirumathi T. N. Anandanayaki.
13. Thiru M. A. Latheef.
14. Dr. H. V. Hande.

15. Thiru A. Swamidhas.

16. Thiru K. Suppu.

The motion was put and carried.

MR. SPEAKER : Under Rule 139(1) of the Assembly Rules I nominate the Hon. Minister for Education as a Member of the Committee.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் இந்த சபையின் அலுவல்கள் முடிவுற்று, மீண்டும் . . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு அரை மணி நேரம் இந்த அவையை நீடிப்பதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் ஒதுக்கினால், எல்லாவற்றையும் முடித்துவிடலாம் என கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அரசினர் தனித் தீர்மானம்.

## 9. அரசினர் தனித்தீர்மானங்கள்.

### (அ) பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட 1972-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (28-வது) திருத்த சட்ட முன் வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களை உறுதிப்படுத்துதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு 1972-ம் ஆண்டு அரசியல் அமைப்புச் (28-வது திருத்த) சட்ட முன் வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது."

நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டுள்ள 1972-ம் ஆண்டு அரசியலமைப்புச் (28-வது திருத்த) சட்ட வரைவு, 314-வது பிரிவை விட்டுவிடவும், 312-ஏ என்ற புதிய பிரிவைச் சேர்க்கவும் வகைசெய்கிறது. இத்திருத்தச் சட்ட வரைவு, அரசியலமைப்புச் சட்டத்தின் 368-வது பிரிவின் (2) பகுதியைச் சேர்ந்த வரம்பு நிபந்தனையின்கீழ் ஒப்புதலுக்காக மாநிலச் சட்ட மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இங்கிலாந்து அமைச்சரவையில் இருந்த இந்திய விவகார அமைச்சரால் அல்லது இங்கிலாந்து அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட, அரசியலமைப்புச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பிறகு இந்திய அரசின்கீழ் அல்லது மாநில அரசின்கீழ் தொடர்ந்து இந்திய சிவில் பணியில் இருந்து வந்த அதிகாரிகளுக்கு அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு முன்னர் ஊதியம், விடுப்பு, ஓய்வு கால ஊதியம், ஆகியவைகுறித்து அவர்களுக்கிருந்த பணி நிபந்தனைகள், ஒழுங்கு நடவடிக்கைகள் சம்பந்தமான



உரிமைகள், மாறிய சூழ்நிலைக்கேற்ப அவர்களுக்குப் பொருந்துமென அரசியலமைப்புச் சட்டத்தின் 314-வது பிரிவு உத்திரவாதம் அளிக்கின்றது.

பொதுவாக அரசு ஊழியர்களின் பணி நிலைமைகளில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்கள் 314-வது பிரிவின் விதித்துறைகளின் காரணமாக, இங்கிலாந்து அமைச்சரவையின் இந்திய விவகார அமைச்சரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் பொருந்தும்படிச் செய்ய இயலவில்லை. மாற்ற முடியாத பணி நிபந்தனைகள் கொண்ட அதிகாரிகள் தொகுப்பு என்கிற கொள்கையானது மாறிவரும் சமுதாய அமைப்பில் ஒவ்வாத ஒரு முரண்பாடாகும். எனவே, 314-வது பிரிவை நீக்கவும், மேற்குறிப்பிட்ட அதிகாரிகளின் பணி நிபந்தனைகளைச் சட்டத்தினால் மாற்றவோ, அல்லது ரத்து செய்யவோ நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கவும், தொடர்பான, இடை நிகழ்வான விதித்துறைகளைக் கொண்ட 312-ஏ என்ற புதிய பிரிவைச் சேர்க்கவும் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது.

இந்தத் தீர்மானத்திற்கு இப்பேரவை ஒப்புதல் அளிக்குமாறு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, I support the Resolution moved by the Hon. the Leader of the House. While supporting the Resolution, I would like to say a few words. I.C.S. Officers were considered to be the relic of the British imperialism and most of them were dubbed as reactionaries but there were very eminent People and some patriotic persons. I do not want to mention eminent historians, economists and learned men who had adorned various offices. The amendment now proposed cancels all the special privileges and rights conferred under Article 314 of the Constitution and Article 312(A) is sought to be introduced. Various learned arguments had been advanced in both Houses of the Parliament and I do not want to reiterate what has transpired in the Parliament.

So far as the I.C.S. Officers are concerned, they have done very good service and they have given a good administration. At the time of Independence Sardar Vallabhai Patel wanted to see that sufficient protection had been given to these I.C.S. Officers. These I.C.S. officers held offices during the pleasure of the Crown and they were appointed by the Secretary of State in England. After the passing of the Independence Act in 1947, they were asked to opt but the conditions remained the same and pensionary and retirement benefits were retaind. I think most of the I.C.S. officers would retire very soon. It is only just and proper that when we are abolishing the privileges of the Princes, the privileges of the I.C.S. officers also should be terminated.

Sir, so far as I.A.S. Officers are concerned, they are not inferior to the I.C.S. officers. But there is a feeling that the I.C.S. officers are mentally more alert and better equipped and that seems to be the ego that is prevalent with them. I do not want to cast a slur on those officers but there were eminent judges and civilians who had adorned high offices. I think most of the officers have taken leave. They have some privileges.

Such rights and privileges should terminate. Even in the matter of getting pension, they are entitled to get it in sterling. That is one of the conditions. Government had decided to abolish those privileges. I think this constitutional amendment brought forward by Central Government is a welcome measure and this should be accepted by the House. With these words, I conclude.

Thiru M. A. LATHEEF : Mr. Speaker, Sir, I welcome the constitutional amendment which provides for abolition of Article 314 and for inclusion of a new article 312 (A). This has been considered as an anachronism, the various privileges and immunities enjoyed by these special classes of people, the I.C.S. It has been rightly considered as an anachronism. I wonder whether any useful purpose would be served by this constitutional amendment which has been brought in after such a long time. In one year we find that a number of officers of I.C.S. will be out. In two or three years, almost all of them would have retired. In our State there is one I.C.S. officer occupying the highest post, namely the High Court Judgeship. He will also retire in a year or so. So there is no useful purpose served.

But there is one thing which I welcome by this amendment. That is about the people in service to-day. It is good that special privileges enjoyed by a particular set of officers are abolished. The idea behind this Bill is that for the officers in service to-day, they should change their mental attitude towards the people. The people are the masters to-day and when we have removed the privileges of I.C.S. officers, the I.A.S. and other officers should develop the mental attitude that they are servants of the people. They are servants of Government, elected democratically by the people of this country. It is with the idea of abolishing special privileges to any particular class of officers that this Bill has been brought forward. But we find that there are still some officers in I.A.S. who are accusing the Government, which has been democratically elected. For example, some officers in the State service have the temerity of going to some people who are in the highest authority



and trying to collude with them and conspire against the Government and the people, who are democratically elected and who are ruling the State. This sort of thing should be removed. I particularly warn on behalf of this House that in this country, the only voice which decides the policies is the voice of the democratically elected government. These people, I mean the services, are the persons appointed by truly elected democratic government. The officers should realise that they are servants of the people, servants of the democratically elected government run by Ministers. Viewed from that light, this constitutional amendment doing away with special class of privileges to I.C.S. people is welcome. I congratulate the Government of India. By this it is a reminder to those in service that they should behave properly.

Thiru R. PONNAPPA NADAR : Is the hon. Member preaching that I.A.S. officers should be impeached ?

Thiru M. A. LATHEEF : I am only furthering the cause that has been upheld already by Parliament. If there are I.A.S. officers who have to be impeached, that impeachment will be done by Parliament. By means of this constitutional amendment the Parliament of India has upheld that officers should always follow the policies of democratically elected government. They had abolished the special privileges of I.C.S. That anachronism had been removed. Even at the time of framing the Constitution it was felt in the Constituent Assembly that this protection to I.C.S. people in the form of Article 314 should not be there. But because of the towering personality of the then Home Minister, Sardar Vallabhai Patel this was made part and parcel of the Indian Constitution. Now that is being removed. The lethargy and complacency and the feeling of higher complex in the minds of officers have to undergo a change hereafter. They should not feel above the democratically elected government. The supremacy of democratically elected government should be upheld and no officer, whatever may be his position, should try to oppose the authority of democratically elected government. (Mr. Speaker sounded the gong.) I am finishing in a few minutes. In the speech made by the hon. Mr. Mirdha, the Minister in-charge of Home Affairs, he has pointed out in Parliament that the commitment made to the people of this country is being honoured by means of this constitutional amendment. I would like to know what are the commitments. You are just saying that you will fulfil those commitments. What is the necessity for this constitutional amendment which has been brought forward after such a long time.

Thiru R. PONNAPPA NADAR : He is travelling outside the resolution.

THIRU M. A. LATHEEF: I am also a lawyer and I know the scope or otherwise of the provision.

THIRU R. PONNAPPA NADAR: But the arguments being advanced by the lawyer is lacking in material particulars.

THIRU M. A. LATHEEF: My difficulty is that the leader of the Congress Party is lacking in understanding me.

THIRU R. PONNAPPA NADAR: My faculties are definitely less and my understanding is less.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It is nearly 2 o'clock. We feel awfully hungry. Nothing gets into our head now.

THIRU M. A. LATHEEF: In the field of law, I am not as high as my senior.

What I was saying was that the commitment made to the people of India, commitment made to the people of this country, should be honoured. Every State has got its personal status and individuality. Therefore commitment made to State, to individual State, has to be fulfilled and it is the duty of Central Government to see that it is fulfilled.

Thank you.

திரு. மணலி சி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்த அரசியல் அமைப்பு 28-வது திருத்தத்தை எதிர்ப்பதற்கு ஒன்றும் இல்லை என்று தெரியும். அபிப்பிராயங்களைச் சொல்ல வேண்டுமென்ற விஷயத்தில் 22 வருஷங்களுக்கு முன்னரேயே கைகழுவி விட்டிருக்க வேண்டிய ஒன்று 25 வருஷங்களுக்குப் பிறகு இப்போது வந்திருக்கிறது. ஐ.சி.எஸ். காரர்கள் புத்திசாலிகளாக இருக்கலாம். இன்றைக்கு புத்தி சாலிகள் என்று பார்த்தால் உலகத்தில் பலபேர் இருக்கிறார்கள். புத்தி சாலிகளாக மட்டும் இருந்து என்ன பயன்? சோஷலிசக் கொள் கைக்கு விரோதமாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், அமைச்சரவை ஆகியவற்றின் கருத்துக்கு விரோதமாக நடந்துகொள் கிற புத்திசாலி அதிகாரிகளால் இன்றைக்கு நமக்குப் பயன் ஒன்று மில்லை. நாட்டுக்கும் இல்லை. ஐ.சி.எஸ். அதிகாரிகள் ஏகாதிபத்ய தாசர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். கங்காணிகளாக நாட்டு மக்களை அடக்குவதில்தான் முன்னணியில் இருந்திருக்கிறார்கள். அது உண்மை. அப்படிப்பட்ட அமைப்பு முறை தகர்க்கப்படவேண்டும் என்ப தில் கருத்து வேற்றுமை இல்லை. பெரும்பாலானவர்கள் ஓய்வு பெற்றுப் போய்விட்டார்கள். பாக்கி 51 பேர்கள் இருக்கலாம். அவர்களும்



78-க்குள் ஓய்வுபெற்றுவிடுவார்கள். எனினும் இதுபோன்ற ஒரு மசோ தாவைக் கொண்டு வந்திருப்பதுதான் நம்முடைய களங்கத்தை அகற்றக் கூடியதாக இருக்கிறது. இது பற்றி பெரும் அளவில் மகிழ்ச்சி அடைய வேண்டியதில்லை.

திரு வைத்திய கூறியது போல இது ஐ.சி.எஸ். அதிகாரிகளுடைய சாயல். போக்கு, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடத்தில் வந்துவிடாதிருக்க வேண்டும், சட்டசபை, அமைச்சரவை ஆகியவற்றுக்குப் புறம்பாக அதிகாரம் செலுத்து கிற பியூராக்ரஸி மனப்பான்மை ஏற்படாதிருக்கவேண்டும். அவர்கள் அறி வாளிகளாக மட்டும் இருந்து பயன் இல்லை. நாட்டு மக்களுடைய லட்சியத்தை நிறைவேற்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஏற்றுக்கொண்டிருக்கிற பணியை பொறுப்புணர்ச்சியோடு நிறைவேற்றித் தருகிற புத்திசாலிகளாக இருக்கவேண்டும். அதற்கு இந்த மசோதா ஒரு எடுத்துக்காட்டு என்பதைத் தவிர—இது எவ்வளவோ சொந்த குழிக்கு பால் ஊற்றுவதுபோலத்தான் இருக்கிறது என்று சொல்லி இந்த மசோதாவை ஆதரித்து என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவை தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட வரைவினை வரவேற்று எல்லோரும் பேசியிருப்பதற்கு என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்பு மிகு உறுப்பினர் கூறியதுபோல் இது பல ஆண்டுகளுக்கு முன்பாகவே வந்திருக்க வேண்டிய சட்டம். இன்றைக்கு சர்வீசில் இருக்கக்கூடிய ஐ.சி.எஸ். அதிகாரிகள் 48 பேர்கள்தான் இருப்பார்கள். அவர்களும் தானே போய்விடப்போகிறார்கள். என்றாலும் இது போன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வராதிருந்தால் எதிர்கால வரலாறு நம்மைப் பழிக்கும். நமக்கு ஒரு களங்கம் ஏற்படாதிருக்கவேண்டுமென்றால் இதுபோன்ற ஒரு சட்டத்தை இப்போதாவது நிறைவேற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத் ததே என்கிற மகிழ்ச்சியைத்தான் நாம் எல்லோரும் அடையவேண்டும். எப்படி மன்னர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகள் எடுக்கப்பட்டு விட்டனவோ அதுபோல இந்த மசோதாவின் மூலம் ஐ.சி.எஸ். அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகைகள் எடுக்கப்படுகின்றன. இந்த மசோதா எல்லோருடைய பாராட்டுதலையும், ஒப்புதலையும் பெற்றிருக்கிற காரணத்தினால் இதை இந்த அவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டு பத்திரங்களுக்கு அரசு அளிக்கும் உயரளவு உத்திரவாதத் தொகை உயர்த்தப்படுவது குறித்து.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பேரவைத் தலைவர் அவர் களே, "தமிழ்நாடு 1934-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் சட்டத் தின் (தமிழ்நாடு சட்டம் 10/1934) 6-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்

பிரிவின்படி, தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் குறித்து இவ்வரசு அளிக்கும் உயரளவு உத்திரவாதத் தொகையை அதன் மொத்த மதிப்பு ரூ. 175 கோடி (ரூபாய் நூற்று எழுபத்தைந்து கோடி மட்டும்) வரை உயர்த்தலாமென்று இப்பேரவை அரசிற்குப் பரிவுரை செய்கிறது. கூட்டுறவு நிலவள வங்கி அவ்வப்போது மீட்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்களின் மதிப்பு மேற்சொன்ன உத்திரவாதத் தொகையில் அடங்காது. இத்தகைய பத்திரங்களின் செல்திறன் கால அளவு அவை வெளியிடப்படும் தேதியிலிருந்து எந்த ஒரு நேர்விலும் 25 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது. இக் கடனீட்டுப் பத்திரத் தொடர் ஒவ்வொன்றுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளிக்கும் வட்டி வீதத்திற்கு மேற்படாத வட்டி வீதம் கிடைக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இதுபற்றிய விளக்கக் குறிப்பு ஒன்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை அவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

8 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72).

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை *(சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/72) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையில்

* 22—8—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



இசைவைப் பெறுவதுடன் கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்:—

1. திரு. கா. வேழவேந்தன்
2. திரு. என். கணபதி
3. திரு. எம். கந்தசாமி
4. திரு. எம். வி. கரிவேங்கடம்.
5. திரு. எம். தேவராஜன்
6. திரு. கே. திருப்பதி
7. திரு. கே. பி. கந்தசாமி
8. திரு. துரைமுருகன்
9. திரு. ஜி. இராஜாராம்
10. திரு. குழ. செல்லையா
11. திரு. கே. டி. கே. தங்கமணி
12. திருமதி த. ந. அனந்தநாயகி
13. திருமதி ஜோதி வெங்கடாசலம்
14. திரு. கே. ஏ. வகாப்
15. திரு. த. கந்தசாமி
16 திரு. பி. வெங்கடசாமி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

MR. SPEAKER: Under Rule 139(1) of the Legislative Assembly Rules, I nominate the Hon. Minister for Backward Classes, to be a member of the Joint Select Cor

பிரிவின்படி, தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்கள் குறித்து இவ்வரசு அளிக்கும் உயரளவு உத்திரவாதத் தொகையை அதன் மொத்த மதிப்பு ரூ. 175 கோடி (ரூபாய் நூற்று எழுபத்தைந்து கோடி மட்டும்) வரை உயர்த்தலாமென்று இப்பேரவை அரசிற்குப் பரிவுரை செய்கிறது கூட்டுறவு நிலவள வங்கி அவ்வப்போது மீட்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்களின் மதிப்பு மேற்சொன்ன உத்திரவாதத் தொகையில் அடங்காது. இத்தகைய பத்திரங்களின் செல்திறன் கால அளவு அவை வெளியிடப்படும் தேதியிலிருந்து எந்த ஒரு நேர்விலும் 25 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது. இக் கடனீட்டுப் பத்திரத் தொடர் ஒவ்வொன்றுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி ஏற்பளிக்கும் வட்டி வீதத்திற்கு மேற்படாத வட்டி வீதம் கிடைக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இதுபற்றிய விளக்கக் குறிப்பு ஒன்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை அவை நிறைவேற்றித் தருப்படியாக கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## 8 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகை கட்டுப்பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## (7) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/72).

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவை *(சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/72) ஆய்வு செய்வதற்காக 24 உறுப்பினர்கள் அடங்கிய (16 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 8 சட்ட மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையில்

* 22—8—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





இசைவைப் பெறுவதுடன் கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தெரிந்தெடுக்கப்படுகிறார்கள்:—

1. திரு. கா. வேழவேந்தன்
2. திரு. என. கணபதி
3. திரு. எம். கந்தசாமி
4. திரு. எம். வி. கரிவேங்கடம்.
5. திரு. எம். தேவராஜன்
6. திரு. கே. திருப்பதி
7. திரு. கே. பி. கந்தசாமி
8. திரு. துரைமுருகன்
9. திரு. ஜி. இராஜாராம்
10. திரு. குழ. செல்லையா
11. திரு. கே. டி. கே. தங்கமணி
12. திருமதி த. ந. அனந்தநாயகி
13. திருமதி ஜோதி வெங்கடாசலம்
14. திரு. கே. ஏ. வகாப்
15. திரு. செ. கந்தசாமி
16. திரு. பி. வெங்கடசாமி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

MR. SPEAKER: Under Rule 139(1) of the Legislative Assembly Rules, I nominate the Hon. Minister for Backward Classes, to be a member of the Joint Select Committee.

(உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) ஐந்தாவது திருத்த சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 40/72)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) ஐந்தாவது திருத்த சட்ட முன்வடிவு *(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/72) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

பிறபகல் 2 00 தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்ட எண் 58/1961) 73 (vii) பிரிவின்படி, பழத் தோட்டங்களாக அல்லது தோப்புகளாக அல்லது பாக்குத் தோட்டங்களாக 1959 ஜூலை 1 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பு மாற்றப்பட்ட நிலங்கள் தொடர்ந்து அவ்வாறு இருக்கும் வரையில், உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்படுகின்றன. வாழை மரம் மேற்சொன்ன சட்டத்தின் 3(47) பிரிவில் "தோப்பு" என்னும் சொற்றொடரின் பொருள் விளக்கத்தின் கீழ் வருகிற பழமரம் என்பதால், 1959 ஜூலை 1-ஆம் நாளன்று வாழை மரங்கள் வளரும் நிலங்கள் உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விதிவிலக்கு பெறுதற்குரியவையாகலாம் என்று தமிழ்நாடு அரசுக்கும் நாடிக்கார வன்னியருக்கும் நடைபெற்ற (சிவில் மனுவிசாரணை மனு எண் 859/67) வழக்கில் உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. எனவே, வாழை மரங்கள் வளரும் நிலங்களை உச்சவரம்புச் சட்டத்திற்குள் கொண்டு வரும் வகையில், "பழத் தோட்டங்களும் தோப்புகளும்" என்னும் சொற்றொடர்களின் பொருள் விளக்கத்திலிருந்து வாழையை நீக்கிவிடுவதென்று அரசு முடிவு செய்துள்ளது.

அரசால் ஏற்பளிக்கப்பட்ட (தமிழ்நாடு 1932 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் அல்லது திருவாங்கூர்—கொச்சி 1951 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படுகிற சங்கங்கள் நீங்கலாக ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமாகவுள்ள ஒரு நிலத்திற்கு மேற்சொன்ன சட்டத்தின் 73 (iii) பிரிவின்படி உச்ச வரம்புச் சட்டத்தின் விதித்துறைகளினின்றும் விலக்களிக்கப்படுகிறது. இவ் விலக்கு, ஒரு நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசால் ஒப்படை செய்யப்பட்டு, அந்த நிலக்குடியேற்ற கூட்டுறவுச் சங்கம் வைத்துள்ள ஒரு நிலத்திற்கு மட்டுமே பொருந்தும் வகையில், மேற்சொன்ன விதித்துறை திருத்தப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு 58 ஆம் சட்டத்தின் 73 (vi) பிரிவின்படி இச்சட்டத்தின் தொடக்க நாளன்று இருந்த எல்லா மலைத் தோட்டங்களும், உச்சவரம்புச் சட்டத்தினின்றும் விலக்களிக்கப்படுகின்றன. இதைப் போலவே, 73 (viii) பிரிவின்படி, இச்சட்டத்தின் தொடக்க நாளன்று

* 22-8-72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



